# அகலாதே உன் நினைவு.

பகுதி – 1.

கிரிக்கெட் மட்டையை கையில் அழுத்தமாக பற்றிக்கொண்டு, தன் நண்பன் வீசப்போகும் பந்துக்காக காத்திருந்தான் தீனா. அந்த சாலையில் நடந்து செல்லும் மக்கள் அனைவருமே ஒரு நொடியாவது அவனை வியப்பாக பார்க்காமல் நகர்ந்து செல்லவில்லை. அவர்களின் பார்வைகள் தன்மேல் நிலைப்பதை உணர்ந்தாலும் அதைப் பற்றியெல்லாம் அவன் சிறிதும் கவலைப்படவில்லை.

அவர்கள் அவ்வாறு பார்த்து செல்வதற்கும் காரணம் இருந்தது. காலையில் பத்துமணி அலுவலகத்துக்கு செல்ல வேண்டி கிளம்பியவன், ஒன்பது முப்பது மணிக்கு, கையில் மட்டையோடு, முழு ஃபார்மல் உடையில், கழுத்தில் டை, காலில் ஆஃபீஸ் பிளாக் ஷூ அணிந்து தெருவில் விளையாடினால் மற்றவர்களின் பார்வை அவன்மேல் பதியாதா என்ன?

“என்ன தீனா விளையாட்டு இது?” எதிர்வீட்டு மங்களம் மாமி வீட்டுக்குள் இருந்து வெளியே வந்தவர், அவனை அங்கே பார்த்துவிட்டு கேலியாக கேட்டார்.

“கிரிக்கெட் மாமி... உங்களுக்கு தெரியாது...?” மட்டையைப் பிடித்தவாறே சற்று குனிந்து நின்றவன், கண்களைக் கூட அவர் பக்கம் திருப்பாமல் பதில் கொடுக்க,

“எப்போபார் விளையாட்டுதான்... அதுக்கேண்டா உன் தோப்பனாரை புடிச்சு வச்சுண்டு பாடாப் படுத்தற? பாவம் வயசானவர்...” அவனுக்கு எதிர் கிரீசில் நின்றிருந்த தீனாவின் தந்தையைப் பரிதாபமாக ஒரு பார்வை பார்த்து வைத்தார்.

“மாமி என்ன சைட்டா...” இப்பொழுது தலையச் சரித்து அவரைப் பார்த்தவன், கண்களைச் சிமிட்டி புன்னகைக்க,

“பெருமாளே… என்னடா பேச்சு இது? வயசானவர்ன்னு ஒரு அக்கறையில் சொன்னால்…” அவர் இழுக்க, இப்பொழுது இன்னும் வாய்விட்டே சிரித்தான்.

“யாரைப் பாத்து என்ன வார்த்தை சொல்லிட்டீங்க? யாருக்கு வயசாச்சு? அவருக்கா? அவர் வயசான தோனி… சும்மா ரன்னிங்கிலேயே ஸ்கோரை ஏத்துறார் தெரியுமா?” அவன் சீரியசாக உரைக்க, மாமி தன் மோவாயிலேயே கை வைத்துக் கொண்டார்.

“பாவண்டா மனுஷன் உட்டுடு…” அவர் மூச்சுவாங்குவதைப் பார்த்தால் நிஜமாகவே பாவமாக இருந்தது.

“மாமி, அப்படி ஒதுங்கி நின்னு ஆட்டத்தை மட்டும் பாருங்க. எப்படி கலக்கறோம்னு…” இப்பொழுது அவன் கவனம் ஆட்டத்தின் பக்கம் திரும்பியது.

“என்னவோடா… பாத்து பண்ணு… எனக்கு ஆத்துக்குள்ளே வேலையிருக்கு நான் பாக்கறேன்…” அவர் தன் வீட்டுக்குள் நுழைந்து கொண்டார்.

“ஆத்துக்குள்ளே வேலையை வச்சுண்டு வெளியே வந்து, அப்படி என் தோப்பனாரை சைட் அடிக்கணுமா? இருங்க மாமாகிட்டே சொல்றேன்” அவன் விடாமல் கலாய்க்க அவன் குறும்பில் சிரித்தார்.

“நல்லா சொல்லுடா… அப்போவாச்சும் என்னை மனுஷர் கண்டுக்கறாரா பார்ப்போம்”.

“கண்டுக்காமலா மாமி பையன் அமெரிக்காவிலேயும், பொண்ணு ஆஸ்த்திரேலியாவிலும் இருக்கா? கண்டுக்காமலே இப்படின்னா…” அவன் இழுக்க, இப்பொழுது அவன் கையில் இருந்த மட்டையை பிடுங்கி அவன் தலையிலேயே போட முயல அதை லாவகமாக தன் முதுகின் பின்னால் மறைத்துக் கொண்டார்.

“தீனா, சின்னப் பையனாட்டம் மாமிகிட்டே என்ன விளையாட்டு?” அவனது தாய் குரல் கொடுக்க,

“என்னைய கவனிச்சுட்டே புருஷனை கோட்டை விட்டுடுங்க…” அவன் தாய்க்கு கேட்டுவிடாமல், மாமிக்குமட்டும் கேட்கும் விதத்தில் முனக, மாமி பெரும் கலவரத்துக்கு உள்ளானார்.

“அடக் கடன்காரா… வாயை மூடுடா… நான் போறேன்” அங்கிருந்து அகல முயன்றார்.

“மாமி, நான் ஃப்ரீ தான்…” அவனது குரல் தன் முதுகில் அறைய, அவனைப் பார்த்து போலியாக முறைத்தவர்,

“சாயங்காலம் மாலினிக்கு ஒரு கொரியர் அனுப்பணும், மறக்காம வந்துடு” சொல்லிவிட்டு சென்று மறைய, புன்னகை முகமாக ஆட்டத்தின் பக்கம் திரும்பினான்.

“இந்த புள்ளைக்கு இன்னும் விளையாட்டு புத்தி போகலை…” புலம்பியவாறு செல்லும் மனைவியைப் பார்த்த மணிமாமா பேப்பரில் இருந்து சில நொடிகள் கவனம் கலைத்தவர், மீண்டும் செய்தித்தாளில் புதைந்து போனார்.

அது பள்ளி விடுமுறை காலம் என்பதால், அந்த நான்கு நண்பர்களின் ஆட்டத்தைக் காண அந்த தெருவாசிகளின் குழந்தைகள் குழுமியிருக்க, “அங்கிள் நோ சிங்கிள்ஸ்… வீ வான்ட் சிக்ஸர்… வீ வான்ட் சிக்ஸர்… வீ வான்ட் சிக்சர்…” ஒரு சிறுவன் துவங்கிவைத்தது, இப்பொழுது மொத்த சிறுவர்களின் கூக்குரலானது.

“ஆமாடா மகனே… சிக்சரே போடு…” தீனமான ஒரு குரலும் அவர்களின் குரலுக்கு இடையில் பலகீனமாக ஒலிக்க, பளிச்சென புன்னகைத்தவன், தலையை ஸ்லோமோஷனில் அசைத்துக் கொண்டான்.

அவனது தலையசைப்பே அவன் அடுத்து செய்யப் போவதை அவருக்கு உணர்த்த, எதிர் பக்கம் ஓடுவதற்கு தயாரானார். தன் மகன் தன்னை இப்படி படுத்தி வைத்தாலும், அவன்மேல் அவருக்கு கொஞ்சம் கூட கோபம் எழவில்லை, மாறாக தனக்காக, தன் உடல்நிலைக்காக இவ்வளவு மெனக்கெடும் மகன்மேல் பாசமே மிஞ்சியது.

தீனாவின் தந்தை சிவநாதனுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் திடுமென எழுந்த மூட்டுவலியின் காரணமாக இடதுகால் பலகீனமாக, மருத்துவரைச் சென்று பார்த்தார்கள். அதற்கு அவரோ, காலுக்கு போதிய பயிற்சி அளிக்க வேண்டும், நடைப்பயிற்சி, மெல்லிய வேகமான அசைவுகளை அதற்கு கொடுத்துக்கொண்டே இருந்தால் நாளடைவில் சரியாகிவிடும் என சொல்லவே அன்றுமுதல் தந்தையை பிடிவாதமாக விளையாட்டில் சேர்த்துக் கொண்டான்.

இரவில் எவ்வளவு நேரமானாலும் அவருடன் சேர்ந்து ஒரு அரைமணி நேரமாவது நடை பயிலாமல் உறங்கச் செல்வதில்லை. காலையில் இந்த கிரிக்கெட்.

“டேய் மச்சான்… பந்தை வீசுடா…” தீனா குரல் கொடுக்கவே, பந்தை வீசினான் காதர்.

அந்த பந்தை சிக்சருக்கு தூக்கியடிக்கும் வாய்ப்பு இருந்தாலும் அதை தடுத்தாடியவன், “சிவநாதா சீக்கிரம் ஓடிவா…” குரல்கொடுக்கவே மறுக்காமல் சிறு ஓட்டமும் நடையுமாக எதிர்பக்கம் வந்தார். அவர் தன்பக்கம் வரவே, “ரெண்டு ரன் ஓடவேண்டிய இடத்தில், இப்படி ஒரு ரன் ஓடினால் எப்படி நம்ம டீம் ஜெயிக்கும்?” அவன் கேட்க, பரிதாபமாக அவனை ஏறிட்டார்.

“மகனே… இன்னைக்கு இவ்வளவு போதும். இதுக்குமேலே என்னால் ஓட முடியாது. இதுக்குமேலே என்னை ஃபோர்ஸ் பண்ணா, நான் தவழ்ந்துதான் அந்தப் பக்கம் போக வேண்டி இருக்கும்” மூச்சிரைக்க அவர் பதில் கொடுக்கவே, அவரை கோபமாக முறைத்தான்.

“நேற்றை விட இன்னைக்கு பத்து ரன் கம்மி…” ‘பேட்’டை தூக்கி தோள்மேல் வைத்தவன் முகத்தை சுழித்துக் கொண்டான். ஆனாலும் தன் தகப்பனின் முகத்தில் நிஜமான களைப்பைக் காணவே தன் ஆட்டத்தை முடித்துக் கொள்ள முடிவெடுத்தான்.

“சரி ஓகே… பசங்களா… இனிமேல் நீங்க விளையாடுங்க” குழந்தைகளிடம் பேட்டை கொடுத்தவன், “டேய் எல்லாரும் வாங்கடா… ஜூஸ் குடிச்சுட்டு கிளம்பலாம்” நண்பர்களை அழைக்கவே அவர்களும் வந்தார்கள்.

அவனது தாய் ஜூசை தயாராக வைத்திருக்கவே ஆளுக்கொரு கப்பை எடுத்துக் கொண்டார்கள். ஜூசை அருந்திக் கொண்டிருக்கையிலேயே, “சிவநாதா, எதிர்வீட்டு மாமி கூட உனக்கு ரொம்ப பழக்கமோ?” அவன் திடுமென கேட்க, குடித்துக் கொண்டிருந்த ஜூஸ் அவருக்கு புரைக்கேற ‘லொக்... லொக்கென’ இருமத் துவங்கினார்.

“மகனே... ஏண்டா திடீர்ன்னு?” அவர் மனைவியை ஓரவிழியில் கவனித்தவாறே கேட்க, இதழ்க்கடையில் சிரித்துக் கொண்டான்.

“தாயே... இந்த சிவநாதனை கொஞ்சம் என்னன்னு கவனிங்க... நான் ஆபீஸ் போயிட்டு வந்து விஷயத்தை சொல்றேன். என்ஜாய் சிவநாதா...” தன் லேப்ட்டாப் பேகை கையில் எடுத்துக் கொண்டவன், நண்பர்கள் சூழ வீட்டுக்கு வெளியே நடந்தான்.

“புள்ளை கவனிக்கிற அளவுக்கு மாமிகிட்டே வழிஞ்சீங்களா?” தாயின் கோபமும், “அவன் சொல்றதை எல்லாம் நீ நம்பாதே... அவன் சும்மா சொல்றான்” என்ற தந்தையின் கெஞ்சலும் அவனைத் தொடர, சட்டென தந்தையைத் திரும்பிப் பார்த்தவன் கண்ணடிக்க சிவநாதன் திகைத்துப் போனார்.

‘அடப்பாவி, வேணும்னுதான் செஞ்சியா? அங்கே ஓடாமல் விட்ட பத்து ரவுண்டை வீட்டுக்குள் ஓட வைக்க பிளான் பண்ணிட்டான் போலயே’ மனதுக்குள் அலறியவர், “அகிலாண்டம்... அவன் கண்ணடிச்சுட்டு போறாண்டி...” சிவநாதன் சொன்னதை அவர் மனைவி கண்டுகொள்ளவே இல்லை.

நண்பர்கள் அனைவரும் அவர்களைப் பார்த்து வியந்தவாறே தீனாவின் பெற்றவர்களிடம் விடை பெற்று கிளம்பினார்கள். “தீனா... என்னடா இது, நீ உங்க அம்மா அப்பாவை பேர்சொல்லி கூப்பிடுற?” சுதிர் கேட்க அசால்ட்டாக தோளைக் குலுக்கினான்.

கூடவே, “பேர் சொல்லத்தானேடா புள்ளை... இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கு? நீங்களும் ட்ரை பண்ணுங்க...” அவன் சொல்ல, நண்பர்கள் மூவரும் ஒருவர் மற்றவரைப் பார்த்துக் கொண்டார்கள்.

“எதுக்கு... எங்களை செருப்பால் அடிக்கவா?” என ஒருவனும்,

“எதுக்குடா…? எங்களை வீட்டை விட்டு துரத்துறதுக்கா?” என காதரும் நக்கலாக வினவ, பளிச்சென சிரித்தவன் அவர்கள் தோளில் கை போட்டுக் கொண்டான்.

“இந்த மாதிரி அம்மா அப்பா கிடைக்க எல்லாம் புண்ணியம் பண்ணியிருக்கனும்டா… எங்களுக்கு அந்த அதிஷ்டம் இல்லை, விடு” குண்டன் சபரி பொறாமையாக உரைக்க தன்னைப் பெற்றவர்களை எண்ணி பூரித்துப் போனான்.

கூடவே சட்டென ஒரு வேண்டாத உணர்வு மனதைத் தாக்க, அதை முயன்று அகற்றியவன், “பொறாமைப் படாதீங்கடா… உங்களை எல்லாம் இன்னைக்கு வீட்டுக்கு கூப்பிட்டதே தப்பா போச்சு போல, சரி… நீங்க குடிச்ச ஜூஸ் எப்படி இருந்தது?” அவன் திடுமென கேட்க, நண்பர்கள் அனைவரும் திகைத்தார்கள்.

“இப்போ எதுக்குடா திடீர்னு கேக்கற?” சுதிர் சந்தேகமாகக் கேட்டான். நண்பன் ஒன்றைப் பற்றி கேட்கிறான் என்றால், நிச்சயம் அதில் ஏதாவது விவகாரம் இல்லாமல் இருக்காது என்பது அவனுக்குத் தெரியுமே.

“இல்ல… போனவாரம் வீட்டுக்கு கெஸ்ட் வர்றாங்கன்னு போட்டு வச்சிருந்தது. அவங்க வராமல் போயிட்டாங்களா… அம்மாவுக்கு ஜூஸ் வேஸ்ட்டா போகுதேன்னு கவலை, அதான் இன்னைக்கு உங்களை வீட்டுக்கு வர வச்சு…” அவன் இழுக்க,

“அட கொலைகாரப் பாவி…” மற்ற மூவரும் அவன்மேல் பாய, அவர்களது கரத்தில் சிக்காமல் லாவகமாக பாய்ந்து ஓடினான் தீனா.

தீனா இருபத்தேழு வயது இளைஞன். வாழ்க்கையில் எதையுமே அவனுக்கு சீரியசாக எடுக்கத் தெரியாது. அனைத்து விஷயத்திலுமே ஒரு விளையாட்டுத்தனம் வெளிப்படும். எவ்வளவு விளையாட்டுத்-தனமானவனோ அதே அளவு மற்றவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமானவன்.

நட்புக்கென உயிரையும் கொடுப்பவன். அவனை நம்பி ரகசியத்தை சொன்னால், சுவிஸ் பேன்க் லாக்கரை விட பாதுகாப்பாக இருக்கும் என

அவனுடன் வேலை செய்யும் பெண்கள் அனைவருக்குமே அவ்வளவு உறுதியாகத் தெரியும்.

தீனா- கிட்டத்தட்ட ஆறடி உயரம். மாநிறம், உடல்மேல் அக்கறை உள்ளவன் என அவனைப் பார்த்தாலே தெரியும். குறும்பு கூத்தாடும் கண்கள், கூர்மையான நாசி, கச்சிதமான மீசை… ட்ரிம் செய்த தாடை அந்த மெல்லிய ரோமக்காடு கூட அவனுக்கு ஒரு வசீகரத்தை அளித்தது.

எந்தவிதமான கெட்டபழக்கமும் அற்றவன். மாதத்தில் ஒரு நாள், டிஸ்கோ அங்கே இரண்டு பாட்டில் பீர் குடிப்பான்… அது மட்டுமே அவனது வீக்னஸ். மற்றபடி குற்றம் குறை சொல்ல முடியாத அளவுக்கு அக்மார்க் நல்லவன்.

தீனா அவ்வளவு வேகமாக ஓடி வந்தாலும், தங்களது அலுவலக பேருந்து நிற்கும் இடத்துக்கு முன்னால் வந்தவன் தன் ஓட்டத்தை நிறுத்திக் கொண்டான். நண்பர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு கொடுத்த மெல்லிய அடிகளை எல்லாம் சிரித்த முகமாகவே பெற்றுக் கொண்டான்.

“மனுஷனாடா நீயி…”.

“நீ பாசமா வீட்டுக்கு கூப்பிடும்போதே நாங்க சுதாரிச்சிருக்கணும்டா…”.

மவனே எங்க வயித்துக்கு மட்டும் ஏதாச்சும் ஆகட்டும்…” அவர்கள் அனைவரும் ஒவ்வொன்றாக சொல்லி அடித்தார்கள்.

“வயிறு கிளீன் ஆகும்டா…” தீனா உரைக்க,

“இவன் வாய் மேலேயே போடுங்கடா…” அவர்கள் அனைவரும் இப்பொழுது நான்கு, ஐந்து வயது சிறுவர்களாகவே மாறிப் போனார்கள்.

சற்று தூரத்தில் இருந்த பேருந்து நிறுத்தத்தில் இருந்த பெரியவர்கள், பெண்கள், குழந்தைகள் என அனைவருமே, அவர்கள் நால்வரும் சிறுவர்கள் போல அடித்துக் கொண்டதைப் பார்த்தது சிரித்துக் கொண்டார்கள்.

அவர்கள் அடித்துக் கொண்டதைப் பார்த்தாலே, அவர்கள் விளையாட்டுக்குத்தான் அடித்துக் கொள்கிறார்கள் என அவர்களுக்குப் புரியாதா என்ன?

“டேய் தடியன்களா போதுண்டா… டேய் குண்டா நீ சும்மா தொட்டாலே வலிக்கும், சுதிர்… உன் எலும்பே குத்துதுடா…” ஒவ்வொருவரையும் அப்பொழுதும் கேலி செய்வதை அவன் நிறுத்தவில்லை.

“இனாஃப்… இதுக்குமேலே ஒரு அடி விழுந்தாலும் தீனா செத்துடுவான்…” அவன் வடிவேல் குரலில் உரைக்க, அதற்குமேலே அவனை அடிக்காமல் விட்டு விலகிய அதே நேரம், அவர்கள் செல்ல வேண்டிய பேருந்து அவர்கள் முன்னால் வந்து நின்றது.

“ஹப்பா போதும்டா ஏறுங்க…” ஒருவித விடுதலை உணர்வில் உரைக்க, ஒவ்வொருவராக பேருந்தில் ஏறினார்கள். பேருந்தின் குளுமை சட்டென அவர்களைத் தாக்க, “சுகம்… பரம சுகம்…” தன் டையை சற்று தளர்த்திக் கொண்டான் தீனா.

சுதிர், சபரி, காதர், தீனா அனைவரும் ஏற, பேருந்துக்குள் இருந்தவர்கள் அனைவரும் அவர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு மீண்டுமாக இயல்பானார்கள். தீனாவின் பார்வை மட்டும் ஒரு இருக்கையை சில நொடிகள் அதிகமாக கவனித்தவன், அது வெறுமையாக இருக்கவே புருவம் நெரித்தான்.

‘எங்கே போனா? லீவே எடுக்க மாட்டாளே…’ எண்ணியவன் அந்த இருக்கைக்கு பக்கத்தில் இருந்த ஜெனிட்டாவின் பக்கம் பார்வையை திருப்பினான்.

“ஹாய் ஜெனிட்டா… என்ன பக்கத்து சீட் காலியா இருக்கு” அவளுக்கு நேர் அருகே வலப்பக்கம் காலியாக இருந்த இருக்கையில் அமர்ந்தான். அவன் அங்கே அமரவே, ஒரு நொடி அவளது புருவம் இடுங்கியது.

“ஜனனியை இன்னைக்கு பொண்ணு பாக்க வர்றாங்களாம். நமக்கு கூடிய சீக்கிரம் ஒரு கல்யாண சாப்பாடு கிடைக்கும்” அவள் சொல்ல, புருவம் உயர்த்தியவன் மனதில் ஓரம் மெல்லிய அதிர்வை உள்வாங்கினாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

“உனக்கு சாப்பாடு போட அவ கல்யாணம் பண்ணிக்கணுமா? இரு அவ வரட்டும் சொல்றேன்” அவன் மிரட்ட அதை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

“சொல்லிக்கோ சொல்லிக்கோ…” அசால்ட்டாக உரைக்க,

“அசிங்கப்பட்டியே டா தீனா…” சன்னமாக தனக்குத் தானே சொல்லிக் கொள்ள, வாய்விட்டே சிரித்தாள்.

அவள் சிரிப்பில் தானும் கலந்து கொண்டாலும், ‘ஜனனி, ஜனனி’ என அவன் மனம் புலம்பிக் கொண்டே இருந்தது அங்கே இருந்த யாருக்கும் தெரியவே இல்லை, அதை அவன் வெளிப்படுத்தவும் இல்லை.

“ஜெனிட்டா, உன் பின்னாடியே ஒருத்தன் சுத்திட்டு இருந்தானே அவனை கொஞ்ச நாளா ஆளையே காணோம்?” அவள் பக்கம் சரிந்து ரகசியமாக கேட்டான்.

“ஹேய்… உனக்கெப்படிப்பா தெரியும்? இங்கே யாருக்குமே தெரியாதுன்னு நினைச்சுட்டு இருந்தேன்” ஆச்சரியமானாள்.

“அதுவா… நம்ம கூட்டத்தில் நீ இருந்தால் மட்டும் அடிக்கடி அந்த முகத்தை ரோட்சைட் ரோமியோ மாதிரி அங்கங்கே பாக்க முடியும்… அதில் கெஸ் பண்ணதுதான். நீ என்ன அவனுக்கு பச்சைக் கொடி காட்டிட்டியா? பய பறந்துட்டான்?” இமைகளைச் சிமிட்ட, போலியாக அவனை முறைத்தாள்.

“தீனா…” கண்டிக்கும் குரலில் அழைத்தவள், “அப்போ பொண்ணுங்க எல்லாம் மடங்குற வரைக்கும்தான் சுத்துவீங்களா?”.

“பின்ன… மடங்குற வரைக்கும்தானே த்ரில்… மடங்கிட்டா சுவாரசியம் போய்டுமே. அதுக்கப்புறம் நீங்க மெயின்டெயின் பண்ண பசங்க பின்னாடி சுத்த ஆரம்பிச்சுடுவீங்கல்ல? ரெண்டுபேரில் ஒரு ஆள் சுத்தினா போதாது?” அவன் சீரியசாக கேட்க, ‘அடப்பாவி…’ எனப் பார்த்திருந்தாள்.

“சரி சொல்லு… அவனுக்கு ஓகே சொல்லிட்டியா?” அவன் அதிலேயே நிற்க புதிதாக அவனைப் பார்த்தாள்.

“என்னப்பா திடீர்ன்னு? நீ இப்படி கிடையாதே?” தன் சந்தேகத்தை வெளிப்படுத்தவும் செய்தாள்.

“அட, நான் கேட்டதுக்கு மட்டும் பதில் சொல்ல மாட்டேங்குற பாத்தியா? அப்படி அவனுக்கு ஓகே சொல்ற மாதிரி ஏதாவது ஐடியா இருந்தால் அதை அப்படியே ட்ராப் பண்ணிடு வேண்டாம்” அவன் முகம் அவ்வளவு சீரியசாக இருந்து அவள் பார்த்ததே இல்லை.

“ஏதாவது பிரச்சனையா தீனா?” சொல்லப்போனால் தன் பின்னால் சுற்றும் அவனுக்கு ஓகே சொல்லிவிடும் முடிவில்தான் அவள் இருந்தாள். கிட்டத்தட்ட ஆறு மாதமாக விடாமல் அவள் பின்னால் சுற்றுகிறான்... எந்தவிதமான தொல்லையும் கொடுப்பது இல்லை.

ஜஸ்ட், நான் உன்னைத் தொடர்கிறேன்... என் இருப்பை நான் உனக்கு உணர்த்துகிறேன் என்ற மட்டிலேயே அவனது நடவடிக்கைகள் இருக்கும். அவனது அந்த அணுகுமுறையே ஜெனிட்டாவின் இதயத்தின் உறுதியை அசைத்துப் பார்த்தது எனலாம்.

முதலில் தனது மதம், ஜாதி என எண்ணி உறுதியாக இருந்தவள்தான். ஆனால் போகப்போக தன்னை மீறி அவள் மனம் அவன் பின்னால் ஈர்க்கப்படுவதை உணர்ந்து கொண்டாள். இந்த காலத்தில் இவ்வளவு உறுதியாக, நிதானமாக ஒருவனால் இருக்க முடிகிறதே என வியந்தும் போனாள்.

அதுவும் விடாமல் ஆறு மாதங்கள் அவளது கடைக்கண் பார்வைக்காக ஒருவன் காத்திருக்கிறான் என்றால், நல்லவனாக இல்லாமல் இருப்பானா? என்ற எண்ணம்.

“சொல்றேன்...” உரைத்தவன், தங்களைச் சுற்றிலும் ஒரு நிமிடம் பார்வையை சுழற்றினான். நிச்சயம் அவளது விஷயத்தைப் பற்றி பேச இது சரியான இடம் இல்லை என்றே அவனுக்குத் தோன்றியது. அதே நேரம் தான் சொல்வதை இவள் எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்வாள் என்று வேறு இருந்தது.

“ஜெனிட்டா, நான் சொல்லப்போற விஷயம் ரொம்பவே சீரியசானது. என்னோட கருத்தை நீ ஏத்துக்கணும்னு அவசியமே கிடையாது. ஆனா

கொஞ்சம் கன்சிடர் பண்ணணும்னு எதிர்பாக்கறேன். இல்ல, உன்னோட விஷயத்தில் நான் தலையிடக் கூடாது என்றால் செய்யலை” முடிவு உன்னுடையதுதான் என்பதுபோல் அவளது பதிலுக்காக காத்திருந்தான்.

“தீனா, நீ இப்படி பேசுறதுதான் புதுசா இருக்கு. என்னன்னு சொல்லு” அவள் இதயம் விஷயம் கொஞ்சம் சீரியஸ் என உணரவே அதன் உச்ச வேகத்தை எட்டத் துவங்கியது.

“நீ மொத்தமா அவனை அவாய்ட் பண்ட்றன்னுதான் இத்தனை நாள் பேசாமல் இருந்தேன். இப்போ ரெண்டு நாளா சடனா உன்கிட்டே ஒரு சேன்ஜ்... அதனால்தான் பேச வேண்டியதா போச்சு...” அவள் பிபியை ஏற்றிக் கொண்டிருந்தான்.

“தீனா... சத்தியமா இது பஸ்சுன்னு கூட பாக்கமாட்டேன். முதல்ல விஷயத்தைச் சொல்லு” டென்ஷன் ஆனாள்.

“உனக்கு ஆதாரத்தோட நிரூபிக்க வேண்டாமா? சோ... நம்ம கம்பெனிக்கு இந்த பஸ் போற வரைக்கும் வெயிட் பண்ணு” அவளிடம் சொல்லிவிட்டு அவன் எழுந்து முன்னால் செல்ல, தன்னிடம் பேசுவதற்காகவே அவன் இங்கே வந்து அமர்ந்ததை அப்பொழுதுதான் உணர்ந்து கொண்டாள்.

மனதுக்குள், ‘அவன் என்ன சொல்லப் போகிறான்?’ என ஓடிக் கொண்டே இருந்தது. ‘கண்டிப்பாக அது நல்ல விஷயமாகவும் இருக்கப்போவதில்லை’ என்பதும் சேர்த்தே புரிந்தது.

## பகுதி – 2.

தன் அறைக்குள் மிகுந்த டென்ஷனோடு இங்கும் அங்கும் நடை பயின்று கொண்டிருந்தாள் ஜனனி. அவளால் இன்னுமே நடக்கப் போகும் நிகழ்வை ஜீரணிக்க முடியவில்லை. அதே நேரம், எந்த நம்பிக்கையின் பெயரின் இந்த நிகழ்வுகளை தவிர்த்துக் கொண்டு வருகிறாய்?’ என மனசாட்சி கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லவும் முடியவில்லை.

கடந்த ஒரு வருடமாக அவளது பெற்றோர் அவளிடம் திருமணத்துக்கு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு வருடமாகவே ஏதோ ஒரு சாக்கு சொல்லி தட்டிக் கிழித்துக்கொண்டு வருகிறாள்.

ஆனால் இன்று… 'இன்று உன்னை பெண் பார்க்க வருகிறார்கள். தயாராக இரு' என்ற அறிவிப்பு மட்டுமே அவளுக்கு வழங்கப்பட அதில் இருந்து தப்பிக்கும் மார்கம் தெரியவில்லை. தெரியவில்லை என்பதை விட, அதைச் செய்யும் தைரியம் இல்லை என்றே சொல்லலாம்.

அவள் தனது எதிர்ப்பை தெரிவிக்கையில், அவர்கள் கேட்டுவிடும் அந்த ஒற்றை கேள்விக்கான பதிலை அவளால் சொல்லிவிட முடிவதில்லையே. மூளையே மரத்துப்போன, செயல்பட முடியாத ஒரு நிலையில் நின்று கொண்டிருந்தாள்.

இதை செய்யட்டுமா? என கேட்பவர்களிடம் மறுப்போ விளக்கமோ கொடுக்கலாம். ஆனால் செய்தே ஆகவேண்டும் என பிடிவாதமாக இருக்கையில் என்ன செய்ய என்று புரியவே இல்லை. ஆனால் இப்படி ஒரு மணப்பெண் வேஷம் கட்டி இன்னொருவன் முன்னால் நிற்கவே முடியாது என்று மட்டும் தோன்றியது.

அவள் தனது யோசனையிலேயே இருக்க, அறைக்கதவு மெல்லியதாக தட்டப்பட, 'இந்த இங்கிதத்துக்கு மட்டும் குறைச்சலே இல்லை' மனம் கசப்பாக எண்ணிக் கொண்டது.

'வாங்கம்மா…' வாய் திறந்து அழைக்க நினைத்தாலும், அந்த நேர மனதின் கசப்பு அதைச் செய்ய விடாமல் தடுத்தது.

ஆனால் அதற்கு அவசியமே இல்லை என்பதுபோல் அறைக்கதவு திறக்கப்பட்டு, அவளது தாய் கலாவதி அறைக்குள் நுழைந்தார். "ஜனனி, இன்னும் எவ்வளவு நேரம் நீ இப்படியே இருக்கப் போற? நாங்க அவங்களை வரச் சொல்லிட்டோம். எங்களோட கௌரவத்தை காப்பாற்ற வேண்டியாவது நீ கிளம்பி கீழே வந்தே ஆகணும்" தாயின் குரல் பிடிவாதமாக ஒலித்தது.

"மாம் பிளீஸ்… இன்னும் ஒரு சிக்ஸ் மந்த் எனக்கு டைம் கொடுங்க. இன்னைக்கு இது வேண்டாம்…" படுக்கையில் அமர்ந்திருந்தவள் தாயைக் கெஞ்சலாகப் பார்த்தாள்.

"உனக்கு கல்யாணம் பண்ணிப் பாக்கணும்னு ஆசைப் படுவது அவ்வளவு பெரிய குத்தமா?" அவர் ஆதங்கமாகக் கேட்க அவளோ தன் பார்வையை

மாற்றிக் கொள்ளவே இல்லை. அடக்குமுறை செய்பவர்களிடம் எகிறலாம், இப்படி ஆதங்கப்படுபவரிடம் என்ன செய்ய?

“என்னால் இப்படி ஒரு வேஷம் கட்டிட்டு மத்தவங்க முன்னால் வர முடியாதும்மா” தாய் தன்னை புரிந்துகொள்ள வேண்டுமே என்று இருந்தது.

“சரி... நான் உன் பேச்சுக்கே வர்றேன். இங்கே வீட்டில் வைத்து வேண்டாம், ஏதாவது ஹோட்டல், கோயில் இப்படி போகலாமா? அங்கே வைத்து அவங்களைப் பார்த்து பேசலாம். நீயும் அந்த பையன் கிட்டே மனசு விட்டு பேசலாம், என்ன சொல்ற?” அவரது முகத்தில் எதிர்பார்ப்பு அதிகரித்தது.

மகள் தனது இந்த கோரிக்கைக்காவது சம்மதம் சொல்லிவிட மாட்டாளா என்று இருந்தது. அதை அவளாலும் புரிந்துகொள்ள முடிந்தது. “ஹையோ மாம்...” ‘என்னால் வேறு ஒருத்தனின் முன்பாக சென்று நிற்க முடியாது என்று சொல்கிறேன். நீங்க என்னன்னா...’ மனதுக்குள் புலம்ப முடிந்ததை வாய்விட்டு சொல்ல முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

ஜனனி எதுவும் சொல்லாமல் கண்ணீர் வடிக்க, “எனக்குத் தெரியும், நீ நான் பாக்குற பையனை கட்டிக்க மாட்டன்னு எனக்கு நல்லாவே தெரியும். என்னதான் இருந்தாலும் நான் உன்னை பெத்தவள் இல்லை தானே... அதான் நீ இப்படி பேசுற” அவர் அவள் அருகில் அமர்ந்து கண்ணீர் வடிக்கத் துவங்கவே, அவள் எந்த கேள்விக்கு பயந்தாளோ, அதே கேள்வி வேறு ரூபத்தில் தன்னைத் தாக்க நிலை குலைந்து போனாள்.

“மாம்... அழாதீங்க பிளீஸ்... நான் என்னைக்காவது அப்படி உங்ககிட்டே நடந்திருக்கேனா? உங்களோட பயத்தை நீங்க இப்படி காட்டுறீங்க. ஆனால் என்னைப் பொறுத்த வரைக்கும் நீங்க என் மாம் தான்” அவள் அழுத்தி சொல்ல, அப்பொழுதுதான் கொஞ்சம் தெளிந்தார்.

அதென்னவோ அவள் வாயால் இந்த வார்த்தைகளை கேட்பதற்காகவே அவர் அடிக்கடி இதைச் சொல்வதாகத் தோன்றும். அது தெரிந்தாலும் அவளால் கோபம் கொள்ள முடியாது. ஏனென்றால் அதற்கும் இதே வார்த்தைகளை உபயோகிப்பார்.

வரவர தாய் செய்வதைப் பார்த்தால், எங்கே அவரை வெறுத்து விடுவோமோ என பயப்படவே துவங்கி விட்டாள். “நீ சும்மா வாய் வார்த்தையாத்தான் சொல்ற... நிஜமாகவே என்னை அம்மாவா நினைக்கிறதா இருந்தால் நான் சொல்வதை கேப்ப தானே?” அவர் எதிர் கேள்வி கேட்க, அவளுக்கு நெஞ்சை அடைத்தது.

ஒருத்தி இத்தனை மறுக்கிறேன்... அப்படி இருக்கும்பொழுதும் எதனால் மறுக்கிறாய்? உன் மனதில் என்ன இருக்கிறது? யாரையாவது நினைக்கிறாயா? எனக் கேட்காமல், தனது தாய் என்னும் உரிமையை நிலைநாட்டிக் கொள்ளத் தவிக்கும் அவரை என்ன செய்ய?

‘எனக்கு நீங்க வேண்டாம்... என்னை ஏன் இப்படி டார்ச்சர் பண்றீங்க? நான் என் அம்மாவிடம் போகிறேன்’ என கத்திவிட்டு அங்கிருந்து சென்றுவிட அவளுக்கு ஒரு நிமிடம் கூட ஆகாது. ஆனால், அப்படி அவள் வெளியே சென்றால் முதலாவது அவளைப் பெற்றெடுத்த தாயே அதை விரும்ப மாட்டார்.

தனது அண்ணனும் அதை வரவேற்க மாட்டான். தனது வளர்ப்புத் தாயான இவர், தான் இல்லாமல் ஒரு வாய் உணவு கூட உண்ணாமல் தன் உடல்நிலையை கெடுத்துக் கொள்வார். அப்பொழுதும் உன்னை இப்படி பாசம் காட்டி வளர்த்தாலும், உன் பெற்றவள் உசத்தியாகிப் போனாளே என்ற பேச்சுதான் வரும்.

ஜனனிக்கு சலிப்பாக இருந்தது. கிட்டத்தட்ட பதினெட்டு வருடங்களாக இதே போராட்டம்தான். ஜனனியைப் பெற்றெடுத்த தாய் பிரபாவதியும் – கலாவதியும் உடன்பிறந்த அக்கா தங்கைகள். இருவருமே இரட்டைப் பிள்ளைகள் என்பதால் ஒரே நாள் ஒரே மேடையில் இருவருக்கும் திருமணம் நடந்தது.

அடுத்த வருடமே பிரபாவதி கர்ப்பமாக ‘அபய்’யைப் பெற்றெடுத்தாள். கலாவதியும் முதலில் கோயில் குளம் என அலைந்து, பிறகு மருத்துவமனைக்கு திரிந்தும் எந்த பலனும் இருக்கவில்லை. வருடங்கள் உருண்டோட, அபய்க்கு நான்கு வயது இருக்கும்பொழுது ஜனனி பிறந்தாள்.

பிரபாவதியின் வீட்டில் சந்தோசம் கரை புரண்டது என்றால், கலாவதியின் வீட்டிலோ எப்பொழுதும் ஒரே சோகம். கலாவதிக்கு இதற்குமேல் குழந்தை பிறக்க வாய்ப்பே இல்லை என மருத்துவர்கள் கை விரிக்கையில் ஜனனிக்கு ஐந்து வயது, அபய்க்கு ஒன்பது வயது.

கலாவதியின் கணவன் ஒரு குழந்தையை தத்தெடுத்துக் கொள்ளலாம் என உரைக்க, கலாவதிக்கு அதில் சிறிதும் விருப்பம் இருக்கவில்லை. அந்த குழந்தை யாரோ எவரோ? எப்படிப் பிறந்ததோ? என்ன ஜாதியோ? குலமோ? என அசுயையபட, அந்த வழியும் அடைபட்டுப் போனது.

கலாவதியின் கணவன் கண்ணபிரான் சொந்தமாக கார்மெண்ட்ஸ் வைத்திருக்கவே வசதிக்கு அவர்களுக்கு ஒரு குறையும் இல்லாமல் இருந்தது. பிள்ளைச் செல்வம் இல்லை என்ற ஒரு பெரும் குறையே அந்த வீட்டின் நிம்மதியையும், சந்தோஷத்தையும் துண்டாடிக் கொண்டிருந்தது.

ஆனால் பிரபாவதியின் கணவர் ஒரு தனியார் அலுவலகத்தில் கணக்கராக இருக்க, மாத பட்ஜெட்டில் துண்டு விழும் நிலையில்தான் அவர்கள் ஜீவனம் ஓடியது. ஆனாலும் அதையெல்லாம் ஒரு பொருட்டாக அவர்கள் கருதியது இல்லை.

அந்த நிலையிலும், பிரபாவதி விரும்பினார் என்பதற்காக அவரை ஸ்பெஷல் குழந்தைகளை கவனித்துக் கொள்ளும் படிப்பு படிக்க வைத்தார். பின்னாளில் நடக்கப் போவதை, முன்னரே கணித்து வைத்தாற்போல் இருந்தது அவரது செய்கை.

ஜனனிக்கு ஆறு வயது இருக்கையில், அலுவலகத்தில் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு சரிந்தவர் பின்னர் வீட்டுக்கு திரும்பவே இல்லை. ஏற்கனவே கஷ்ட ஜீவிதம், இதில் சம்பாதிக்கும் ஒரே ஆளும் மறைந்துவிட, பிரபாவதியின் வீடு கஷ்டத்தில் தத்தளித்தது.

அக்காவின் நிலையைப் பார்த்து கலாவதி பொருளுதவி செய்ய முன்வந்தாலும் அதை அவர் ஏற்கவே இல்லை. ஆனால் தனது குழந்தைகளுக்குச் செய்வதை அவர் மறுக்கவோ, தடுக்கவோ இல்லை. அதற்கு காரணம் குழந்தைகளாவது நன்றாக இருக்கட்டுமே என்ற எண்ணம் இல்லை.

மாறாக, குழந்தை இல்லாத தங்கை, தன் குழந்தைகளுக்குச் செய்வதை நிர்தாட்சண்யமாக மறுக்கும் தைரியம் அவருக்கு இல்லை. கூடவே ஸ்பெஷல் குழந்தைகளின் மனநிலையைப் பற்றி படித்த அவருக்கு, தங்கையின் மனதைப் படிப்பது ஒன்றும் அவ்வளவு கடினம் இல்லையே.

அபய்க்கு ஓரளவுக்கு கொஞ்சம் விவரம் தெரியும் என்பதால், சித்தியிடம் ஒட்டிக் கொண்டாலும், தாயிடம் இன்னும் அதிகமாக ஒட்டுதல் காட்டினான். ஆனால் ஜனனி குழந்தை என்பதால், தான் என்ன கேட்டாலும் வாங்கித் தரும் சித்தியின்மேல் அதீத பாசம் கொண்டாள்.

அது எதுவரை நீடித்தது என்றால், வருடத்தில் பாதி நாட்கள் சித்தியுடனே கழிக்கும் அளவுக்கு தொடர்ந்தது. பாதிநாள் அம்மாவிடமும், மீதி பாதி நாள் சித்தியிடமும் என இருந்த வரைக்கும் அவளுக்கு பெரிதாக எதுவும் தெரியவில்லை.

ஆனால் கலாவதிக்கு ஜனனி வீட்டில் இல்லாத நாட்கள் நரகமாக, தன் அக்காவிடம் துணிந்து ஜனனியை தனக்கே தரும்படி கேட்டுவிட்டாள். இந்த கேள்விக்கு பல மாதங்கள் பிரபாவதி பதிலே கொடுக்கவில்லை. ஆனால் கலாவதி அவ்வளவு சுலபத்தில் விட்டுவிடவில்லை.

அழுது அடம் பிடித்து, உண்ணாவிரதம் இருந்து, ஜனனிக்கு கிடைக்கப் போகும் வளமான வாழ்க்கை, கல்வி, வசதி, தனது ஏக்கம் பாசம் என அனைத்தையும் காட்டி, இறுதியாக சட்டப்பூர்வமாக அவளை தத்தெடுத்துக் கொள்ளும் வரைக்கும் ஓயவே இல்லை.

சட்டப்பூர்வமாக ஜனனியை தத்தெடுத்த பிறகு, அவளது பள்ளி முதல், தன் இருப்பிடம் வரை அனைத்தையுமே கலாவதி மாற்றிக் கொள்ள, குழந்தை பெற்றவளைக் காணாமல் தவித்துப் போனாள். அவள் அப்படி தாய்க்காக அழுவதை கலாவதியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

'நான்தான் இனிமேல் உன் அம்மா' எனச் சொல்லி, அவளிடமும் தன் கண்ணீரைக் காட்ட, குழந்தை அந்த வயதில் பயந்து போனாள். கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்தாலும் உனக்கு பெற்றவளா வேண்டும்? அப்போ நான் யார்?' அவரது அந்த கேள்விக்கு ஆறுவயது குழந்தை என்ன பதில் சொல்வாள்?

ஜனனி இல்லாமல் பிரபாவதியும், அபய்யும் கூட பெரும் துன்பப் பட்டார்கள். அதுவும் அபய்க்கு தன் தாய்மீது இன்று வரைக்கும் தீராத கோபம் உண்டு. ஆனால், தன் சித்தியை நினைக்கையில் உருவாகும் பரிதாபம் அந்த உணர்வை கொஞ்சம் கட்டுப்படுத்தும்.

ஒரு கட்டத்துக்கு மேலே, தான் என்னதான் அழுதாலும், புரண்டாலும் கலாவதி தன்னை தாய் வீட்டுக்கு அனுப்ப மாட்டார் என்பது புரிய, தன் அழுகையை நிறுத்திக் கொண்டாள். தன்மேல் கொள்ளை பாசம் காட்டும் சித்தியின் நேசத்தில் கொஞ்சம் கொஞ்சமாக தேறினாள்.

தாய் தகப்பன் இல்லாத குழந்தையாக இருந்திருந்தால் கலாவதி காட்டிய பாசத்துக்கு அவர்களின் உயிராகவே மாறியிருப்பாள். ஆனால் பெற்றவளின் தாய்ப்பால் குடித்து வளர்ந்து, அவள் வாசனை உணர்ந்து, அண்ணனின் கைபிடித்து நடை பழகி, அவன் முதுகில் சவாரி செய்து, தந்தையின் அணைப்பில் உறங்கி வளர்ந்த அவளுக்கு இங்கே ஒட்டமுடியவில்லை என்பதே உண்மை.

இது எதார்த்தமும் கூட... இதை யாராலும் குறை சொல்லவே முடியாது. பெற்றவளை குழந்தை மறக்குமா என்ன? ஆறு வயது வரைக்கும் உடனிருந்த தாய், அண்ணனை எந்த குழந்தையால் மறக்க முடியும்? அவர்களது முகங்கள் அவள் மனதில் பதியும் முன்பாக சித்தியுடன் வந்திருந்தால் அவளுக்கு எதுவும் தெரிந்திருக்காது.

ஆயிரம்தான் அவர்கள் வீட்டில் இருந்தாலும், இது தன்னைப் பெற்றவள் இல்லை என்பது அவள் அடிமனதில் உறைந்து போக, கலாவதி தன்னை அம்மா என அழைக்கச் சொன்னபொழுது அது அவளால் முடியவே இல்லை.

அம்மா என அழைக்காமல் போகவே, கலாவதியின் அழுகை வெளிப்பட, ‘மம்மி, மாம்...’ என அழைக்கத் துவங்கினாள். இன்று வரைக்கும் அவரை அம்மா என வாய் நிறைய அழைத்தது இல்லை. ஒரு விதத்தில் கலாவதி செய்தது பெரும் தவறு, அதை அவளது கணவன் கண்ணபிரான் சுட்டிக் காட்டியபொழுது அதை அவள் ஏற்றுக் கொள்ளவே இல்லை.

‘அவ என்னோட பொண்ணு… அவளுக்கு நான் அம்மா, நீங்க அப்பா… அவ்வளவுதான். வேற யாரும் அவளுக்கு கிடையாது’ கணவனிடமே இப்படி சொல்லும் அவர், ஜனனியிடம் மட்டும் மாறிவிடுவாரா என்ன? அவளிடம் வலுக்கட்டாயமாக தன்னைத் திணிக்க முயன்றார்.

ஒரு கட்டத்தில் ஜனனி படும் துன்பத்தை, சொல்ல முடியாத தவிப்பைப் பார்த்தவர், அவளிடம் அமர்ந்து பேசினார். கலாவதிக்கு அவள்மேல் இருக்கும் பாசம், பொசசிவ் குணம்… அவளது பயம்… எனச் சொல்லி, ஜனனியை கலாவதியை புரிந்துகொள்ள செய்தார்.

கலாவதி ஜனனியை ஒரேயடியாக பெற்றவர்களிடம் இருந்து பிரித்தது அவள் மனதில் வடுவாக தேங்கியதைப் பார்த்தவர், கலாவதி அறியாமல் ஜனனியை பிரபாவதியிடம் அழைத்துச் சென்றார். பிரபாவதியிடம் வீட்டு சூழலை உரைக்க, அவர் மட்டும் தன் தங்கையை விட்டுக் கொடுப்பாரா என்ன?

அவளைப் பார்க்கும் பொழுதெல்லாம் கலாவதியின் பாசத்தை மட்டுமே அவளிடம் எடுத்துச் சொல்வார். மகளை கட்டித் தழுவி, உச்சி முகர்ந்து சீராட்ட அடிமனம் வரைக்கும் தவித்தாலும், மகளிடமிருந்து சற்று விலகியே நிற்பார்.

கலாவதியை புரிந்துகொள்ள முயலும் ஜனனிக்கு, தன்னைப் பெற்றவளின் மனம் மட்டும் புரியாமல் போகுமா என்ன? ‘அம்மா…’ என வாய் நிறைய அழைத்து, கட்டிக்கொண்டு முத்தமிட்டு, மடியில் படுத்து தூங்கி, அவரைச் சந்திக்கவிருந்த அந்த இடைப்பட்ட காலத்தில் நடந்தவை அனைத்தையும் ஒன்று விடாமல் ஒப்பித்து விடுவாள்.

தன் மகள் தன்னிடம் சீராடுகையில் பெற்றவள் உதறித் தள்ளவா செய்வாள்? தன் மகளின் ஆசைகளை, ஏக்கங்களை தீர்க்காமல் தீர்த்து வைப்பார். அதே நேரம், அவளது வீடு கலாவதியின் வீடுதான் என்பதை அழுத்தமாக புரிய வைத்தே அனுப்புவார்.

ஒவ்வொருமுறை அவள் வந்துவிட்டு செல்லும் பொழுதும் அடுத்த இரண்டு நாட்கள் பிரபாவதி தானாக இருக்கவே மாட்டார். தன்னை மீறி கண்களில்

வழியும் கண்ணீர்... அவள் உடுத்தி போட்டுவிட்டுச் செல்லும் உடைகளை வருடியவாறு அமர்ந்திருக்கையில் எல்லாம் அபய் கொதித்துப் போவான்.

“அவளை ஏன் இப்படி கொடுக்கணும்? ஏன் இப்படி கஷ்டப்படணும்? உங்களுக்கு உங்க தங்கச்சி உசத்தின்னா, எனக்கு என் தங்கச்சி உசத்தி இல்லையா?” பத்தாம்வகுப்பு படிக்கும் அபய் கொந்தளிக்கையில் அவனையும் சமாதானம் மட்டுமே செய்வார்.

கிட்டத்தட்ட ஐந்து வருடங்களாக அவர்களை பிரித்து வைத்திருந்த கலாவதி, இறுதியாக ஜனனி பெரியவள் ஆன பொழுது, முதல் முறையாக அவரை தன் வீட்டுக்கு அழைத்தார். அப்பொழுதும் கண்ணபிரானின் பிடிவாதத்துக்கு வேண்டியே செய்தார்.

அப்பொழுதும் மனதின் ஓரம் தவிப்புதான். “உன் அம்மாவைப் பார்த்தவுடன் என்னை விட்டு போய்ட மாட்டியே... அப்படிச் செய்தால் நான் செத்துப் போவேன்... நீதான் என் உயிர்...” அப்பப்பா... ஜனனி அந்த நேரம் ஒரு வழியாகிப் போனாள்.

அந்த நேரம் கண்ணபிரான்தான் உதவிக்கு வந்தார். மனைவி இல்லாத நேரம் மகளிடம் பேசியவர், “உன் அம்மாவை நீ அம்மான்னு கூப்பிட்டால் கூட இனிமேல் அவளை பாக்கவே விட மாட்டா. அதனால் புத்திசாலித்தனமா நடந்துக்கோ.

“அவங்களை புடிக்காத மாதிரி நடந்துகிட்டன்னா, பழைய மாதிரி நாம நம்ம வீட்டுக்கே போய்டலாம். உன் அண்ணா கூடவே நீ ஸ்கூல் படிக்கலாம்” என சொல்லிக் கொடுக்க, நிஜமாகவே அது சரியாக வேலை செய்தது.

தாயும் மகளும் சரியாக பேசிக் கொள்ளாமல், அனைத்துக்கும் தன்னை மட்டுமே ஜனனி நாட, கலாவதிக்கு அப்படி ஒரு சந்தோசம். அந்த சந்தோஷத்திலேயே மகளுக்கு ஒரு வைர நெக்லஸ் வாங்கிக் கொடுத்து கொண்டாடினார்.

தாயின் சந்தோஷத்தைப் பார்த்த ஜனனி, தந்தை கண் காட்டவே, “மாம், நாம நம்ம பழைய வீட்டுக்குப் போகலாமா? எனக்கு நம்ம வீடுதான்

பிடிச்சிருக்கு. இங்கே பிடிக்கவே இல்லை நீங்க என்ன சொல்றீங்க?” அவள் கேட்க, கலாவதி மறுப்பு சொல்லவே இல்லை.

ஜனனி ஏழாவது படிக்கையில் தன் அண்ணன் அபய்படித்த அதே பள்ளிக்கு மீண்டும் படிக்க வர, அண்ணனுக்கும் தங்கைக்கும் அப்படி ஒரு சந்தோசம். அபய் அப்பொழுது பதினொன்றாம் வகுப்பில் இருந்தான். அந்த பள்ளிக்கு அப்பொழுது புதிதாக வந்திருந்தவன்தான் தீனா.

தீனாவும் அபய்யும் ஒரே வகுப்பு... அவர்கள் இருவருக்கும் நடுவில், ஒரு மாதத்துக்குள்ளாகவே நல்ல நட்பு உருவாகி இருந்தது. தனது தங்கை இந்த பள்ளிக்கே வரப் போவதாக தீனாவிடம் அவன் சொல்லியிருந்தான்.

ஆனால் முதல்நாள் ஜனனி பள்ளிக்கு வந்த நாள் அபய்யால் பள்ளிக்கு வர முடியவில்லை. கிட்டதட்ட ஒரு வாரம் அவன் வராமல் போக, அதற்குள் என்னென்னவோ நடந்து முடிந்திருந்தது.

ஜனனி ஏழாம் வகுப்புதான் படித்தாள் என்றாலும், அவளது உடல் வளர்ச்சி அதிகமிருக்க, அவளை பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவி என தீனா நினைத்துவிட்டதில் வியப்பேதும் இல்லையே.

பள்ளிக்கு வந்த முதல் நாளே, தன் அண்ணனைப் பார்க்கும் ஆசையில் அவள் அவனது வகுப்புக்குச் செல்ல, அவளது தேடல் சுமந்த விழிகளைப் பார்த்து தீனா சொக்கிப் போனான். அதுவும் அவள் புருவம் நெரித்து, பற்களுக்கு நடுவில் இதழோரம் நுனி நாக்கை கடித்தவாறே அவள் மெதுவாக நடக்க, திறந்தவாய் மூடாமல் பார்த்திருந்தான்.

‘ஹையோ... செமையா இருக்காளே. இதுக்கு முன்னாடி இவளை இந்த ஸ்கூல்ல பாத்த மாதிரியே இல்லையே. புது அட்மிஷனா? எந்த குரூப்ன்னு தெரியலையே’ அவளையும் பதினொன்றாம் வகுப்பு மாணவி என்றே கருதினான்.

அவளது உடல் வளர்ச்சி அப்படி இருந்தாலும், அந்த குழந்தை முகத்தை கணிக்கும் அளவுக்கு அவன் பெரியவன் இல்லையே. ஜனனி அவர்களது வகுப்பறையை பார்த்தவாறே இரண்டு மூன்றுமுறை நடந்துவிட, ‘ஆஹா... யாரையோ தேடுறா போலையே. மத்தவன் எவனாவது முந்திக்க

முன்னாடி, நாமளே கர்ச்சீப்பை போட்டு அவ மனசில் இடம் பிடிப்போம்' எண்ணியவன் வேகமாக அவள் முன்னால் வந்து நின்றான்.

சட்டென தன் முன்னால், அரும்பு மீசையும் குறும்பு பார்வையுமாக உதயமானவனைப் பார்த்து சற்று மருண்டு விழித்தாள். அதைக் கண்டுகொள்ளாமல், "நான் இங்கேதான் இருக்கேன்" அவன் சொல்ல, புரியாமல் குழம்பிப் போனாள்.

அதைப் பார்த்தவன், "நீ என்னைத்தானே தேடிட்டு இருந்த? அதான் நான் இங்கேதான் இருக்கேன்னு சொன்னேன்" அவன் ஒரு மாடல்போல் கையை விரித்து, அவள் முன்னால் ஒரு வட்டமடித்து தன்னைச் சுட்டிக் காட்ட, அவன் செய்கையில் பக்கென சிரித்துவிட்டாள்.

"உன்ன எங்கேயோ பாத்த மாதிரி இருக்கே?" அவளுக்கும், அபய்க்குமான உருவ ஒற்றுமை அவன் கண்ணை உறுத்தினாலும், அது மூளையில் பதிவாகாமல் போகவே அவனால் அதை உணர்ந்துகொள்ள முடியவில்லை. அப்படி உணர்ந்திருந்தால் அவளிடம் அப்படியெல்லாம் உளறியிருக்கவே மாட்டான்.

"நான் ஒண்ணும் உங்களைத் தேடி வரலை" அவனது உள்குத்து பேச்சை புரிந்துகொள்ளும் அளவுக்கு அவளுக்கு விவரமில்லை.

"இன்னைக்கு தேடி வரலை... ஆனா நாளைக்குத் தேடி வரணும் சரியா? இப்போ வந்ததுக்கு வேண்டி ஒரு ஒன் போர் த்ரீ சொல்லிட்டு போ" அவன் சொல்ல அவள் விழித்தாள்.

"என்ன முழிக்கற? முன்னாடி படிச்ச ஸ்கூல்ல இதெல்லாம் சொல்லிக் கொடுக்கலையா? என்ன ஸ்கூல் அது? மானங்கெட்ட ஸ்கூல்?" அவன் கேட்க, முகத்தை தூக்கி வைத்துக் கொண்டாள்.

பெண்ணின் நுண்ணுணர்வுகள் மிகவும் கூர்மையானது ஒரு அந்நியன் தன்னிடம் முறையாகப் பேசுகிறானா? முறையற்று பேசுகிறானா? தவறாக பார்க்கிறானா? சரியாக பார்க்கிறானா? அவன் நல்லவனா? கெட்டவனா? என சிலபல நொடிகளிலேயே பெண்ணுக்கு உணர்த்திவிடும்.

தீனா கடந்த பத்து நிமிடங்களாக அவளிடம் பேசுகிறான். ஆனால் அவனிடமிருந்து எந்தவிதமான எதிர்மறை அலைவரிசைகளையும் அவள் உணராமல் போகவே, அவனைப் பார்த்து அவள் பயப்படவில்லை. அதே நேரம், அவனது வகுப்புக்குள் இருந்து வேறு சில மாணவர்கள் வெளியே வரவே சட்டென சுதாரித்தான்.

“நீ இப்போ போ... நாளைக்கு வந்து நான் கேட்டதைச் சொல்” அவன் அவளை அவசரப்படுத்த, ஏனென்று புரியவில்லை என்றாலும் அவனிடம் மறுத்து பேசாமல் அங்கிருந்து சென்றாள். அதே நேரம் அவன் சொன்ன அந்த ஒன் போர் த்ரீ என்றால் என்ன என்று யோசிக்கவும் மறக்கவில்லை.

வீட்டுக்கு வந்து அதைப்பற்றி அவள் மறந்துவிட்டாள் என்றாலும், தன் அண்ணனைக் காண முடியாதது அவளுக்கு சிறு ஏமாற்றமாக இருந்தது. மறுநாளும் அவள் தன் அண்ணாவை தேடிச் சென்று, தீனாவின் பார்வையில் சிக்கிக் கொண்டாள்.

“ஹாய்... குட் மார்னிங்...” அவள் முன்னால் சென்று நின்றான். அவன் வகுப்பு மாணவிகளும் சரி, மற்ற வகுப்பு மாணவிகளும் சரி, மாணவர்கள் அவர்களிடம் பேச முயன்றால் அலட்சியப்படுத்துவதும், கண்டுகொள்ளாமல் செல்வதுமாக இருக்க, மீண்டுமாக தேடிவந்த ஜனனி அவனுக்குப் புதிதாக தெரிந்தாள்.

“குட் மார்னிங்...” அவனுக்கு பதில் கொடுத்தவள், “அபய்...” அவள் துவங்கிய நேரம் பெல் அடிக்கவே அவளை அவள் வகுப்புக்கு விரட்டினான். மதிய இடைவேளையில் அவள் மீண்டும் வரவே, “நீ என்ன என்னைவிட ஸ்பீடா இருக்க?” அவளிடம் கேட்க விழித்தாள்.

“என்ன புரியலையா? ‘ஐ லவ் யூ...’” அவள் காதுக்குள் மெதுவாக முனக, அப்படியே திக்கென அதிர்ந்து போனாள்.

“கெட்ட பையன் நீங்க... தப்பா பேசுறீங்க” படபடத்தவள் அங்கிருந்து ஓடியே போனாள். அவளுக்கு அந்த படபடப்பு அடங்க சிறிது நேரமானது.

‘ஒரு வேளை சும்மா சொல்லியிருப்பாங்களோ? ஆமா அப்படித்தான் இருக்கும்’ அவனும் அவ்வளவு சீரியசாகச் சொல்லவில்லையே எனவே அது விளையாட்டாகத்தான் இருக்கும் என்ற முடிவுக்கு வந்தாள்.

ஆனால் அடுத்த மூன்று நாட்களுமே அவளைக் காணும் பொழுதெல்லாம், அவள் அபய்யைக் காண வகுப்புக்குச் செல்லவில்லை என்றாலும், (அபய்க்கு உடல்நிலை சரியில்லை என்று தெரிந்து கொண்டாளே) காரிடார், கிரவுண்ட் என பார்க்கும் இடங்களில் எல்லாம், ஒரு வார்த்தை கூட பேசாமல், ஒரு மாதிரி பளிச்சென புன்னகைத்துச் செல்கையில் தடுமாறிப் போனாள்.

அந்த வாரம் முடிந்து, சனி ஞாயிறும் வர அடுத்த திங்களன்று அபய் பள்ளிக்கு வந்தவன், முதல் வேலையாக தன் நண்பன் தீனாவையும் அழைத்துக்கொண்டு ஜனனியைப் பார்க்கப் போனான்.

தீனாவுமே நண்பனின் தங்கையைப் பார்க்க அவ்வளவு ஆர்வமாகச் சென்றான். அங்கே அவன் ஜனனியை தனது தங்கை என அறிமுகப்படுத்துவான் என கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கவில்லை. அதிலும் ஜனனி ஒரு ஏழாம் வகுப்பு படிக்கும் சிறுமி என்பதை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

'ஐயோ... சின்னப் பொண்ணுகிட்டே போய் என்னவெல்லாம் உளறி வச்சிருக்கடா மடையா? அதுவும் அபய்யோட தங்கச்சிகிட்டே போய் லவ்வை சொல்லி...' அவனுக்கு தன் முகத்தைக் கொண்டு எங்கே வைத்துக் கொள்வது என்றே தெரியவில்லை.

"தீனா... இது ஜனனி என் தங்கை... ஜனனி... இது தீனா என் ப்ரண்டு..." இருவருக்கும் அறிமுகப்படுத்த, "ஹல்லோ... எனக்கு இவங்களைத் தெரியும். உங்களைத் தேடி கிளாஸ்க்கு வந்தப்போ பேசியிருக்கேன்" அவள் சொல்ல, தீனா உள்ளுக்குள் வியர்த்துப் போனான்.

அபய்யின் முதுகில் பின்னால் மறைந்தவன், 'ஸ்... ஸ்... நோ...' உதட்டின்மேலே விரல் வைத்து எதுவும் சொல்லிவிடாதே என ஜாடை காட்ட, அவன் சேட்டையைப் பார்த்து அப்பொழுதும் சிரித்துவிட்டாள்.

அதைப் பார்த்த அபய், "என் முதுகுக்கு பின்னாடி குரங்கு சேட்டை பண்றியா? முன்னாடி வாடா" தன் அருகே இழுத்துக் கொண்டான்.

தீனாவால் ஜனனியின் முகத்தை முழுதாக ஏறிட்டு பார்க்கவே முடியவில்லை. முதலாவது அவள் சின்னப் பெண், இரண்டாவது

நண்பனின் தங்கை... என எல்லாமாக சேர்ந்து அவனை ஒருவிதமான சங்கடத்தில் ஆழ்த்தி இருந்தது.

இத்தனை நாட்களாக தன்னைப் பார்த்தவுடன் கலகலவென உரையாடி, சிரித்து விளையாடும் தீனா சட்டென அமைதியாகிவிட அதுதான் ஜனனியை அதிகம் பாதித்தது. தன் அண்ணனிடம் பேசினாலும், அடிக்கடி அவள் பார்வை தீனாவையே தழுவியது.

அதன் பிறகு அவன் பன்னிரண்டாம் வகுப்பு முடிக்கும் வரைக்குமே ஜனனியிடம் நேருக்கு நேராக, கண்ணோடு கண்ணோக்கி அவன் பேசியது இல்லை. சட்டென ஒதுங்கிக் கொண்டான். அவன் அவ்வாறு செய்யாமல், வழக்கம்போல் இருந்திருந்தால் ஜனனி அவன் காதல் சொன்னதை பெரிதாகவே எடுத்திருக்க மாட்டாள்.

ஆனால் அவன் சங்கடத்தில் விலகி நிற்க, அதுவே அவளை கவனிக்கச் செய்தது. அண்ணனும் அவனும் ஒன்றாக கல்லூரி சென்ற பிறகும், வாரம் ஒருமுறை அவளை வந்து பார்த்து பேசிவிட்டே செல்வார்கள். தீனாவின் அரும்பு மீசை கட்டான மீசையான மாற்றம் துவங்கி, அவனது படிப்படியான மாற்றங்களை தன்னை மீறி ஜனனி கவனித்து வந்தாள்.

அவள் கல்லூரிக்குச் சென்ற பொழுது தீனா அவள் மனதுக்குள் முழுதாக இறங்கியிருந்தான். அதுவும் அபய்யும் அவனும் ஒன்றாக வேலைக்கு சேர்ந்து, முதல் மாத சம்பளத்தில் அவளுக்கென ஒரு பிக் டெய்ரிமில்க் சாக்கலேட்டை அவன் கொடுத்தபொழுது நீண்ட நெடிய வருடங்களுக்குப் பிறகு அவள் கண்களை நேருக்குநேர் ஆழமாக சந்தித்தான்.

அந்த பார்வை... அதை அவளால் கொஞ்சம் கூட மறக்கவே முடியவில்லை. முதல்முறை அவன் விளையாட்டாக காதலைச் சொன்ன பிறகு அவளிடம் சீரியசாக அவன் காதலைச் சொல்லவில்லை. ஆனால் அவள் தன்னை மீறி அவன்மேல் நேசத்தை வளர்த்துக் கொண்டாள்.

அவள் படிப்பை முடித்து கடந்த ஒரு வருடமாக அவர்கள் அலுவலகத்திலேயே வேலைக்குச் சேர்ந்து விட்டாள். ஒவ்வொரு நாளும் அவன் தன்னிடம் காதலைச் சொல்ல வேண்டும் என ஏங்கிக் கொண்டிருக்கிறாள்.

ஆனால் அது நடக்கவே இல்லை. அவன்மேல் அவள் கொண்ட காதலை அவளால் மறக்கவே முடியவில்லை. எனவேதான் தாய் திருமணப் பேச்சை எடுத்தது முதல் நிம்மதியாக இருக்கவே முடியவில்லை.

அவனுக்கு தன்மேல் இப்பொழுது காதல் இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ளவும் முடியாமல், அவனிடம் தானாகவே காதலைச் சொல்லவும் முடியாமல், தாயின் பிடிவாதத்துக்காக திருமணத்துக்கு சம்மதிக்கவும் முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறாள் ஜனனி.

## பகுதி – 3.

பேருந்து, 'கேட் ஆட்டோமொபைல்ஸ் அண்ட் இன்போ சொல்யூஷன்ஸ்' என பெயரிடப்பட்ட அந்த அலுவலக கட்டிடத்துக்குள் நுழையவே ஊழியர்கள் அனைவரும் தங்களது உடமைகளை சேகரித்துக் கொண்டு ஒவ்வொருவராக பேருந்தில் இருந்து இறங்க துவங்கினார்கள்.

அது ஒரு மிகப்பெரும் ஆட்டோமொபைல் மற்றும் கணினி நிறுவனம். கிட்டத்தட்ட இரண்டாயிரம் பணியாளர்களுக்கு மேல் அங்கே வேலை செய்கிறார்கள். ஏழுமாடி அலுவலக கட்டிடத்தோடு, அதற்குப் பின்னால் ஒர்க்கிங் ஏரியா என பல ஆயிரம் சதுரஅடிகளைக் கொண்டு பரந்து விரிந்து கிடந்தது அந்த நிறுவனம்.

தீனாவின் நண்பர்கள் அனைவரும் தங்களது அலுவலகம் இருந்த மூன்றாவது மாடியை நோக்கி நடக்க, ஜெனிட்டா பேருந்தில் இருந்து இறங்கி, தங்கள் அலுவலக கட்டிடத்துக்கு எதிரில் இருந்த அந்த மரத்தடியை தேடிச் சென்று, தீனாவுக்காக காத்திருந்தாள்.

அதே நேரம், தீனாவின் நண்பர்கள் அவன் தங்கள் பின்னால் வராமல் போகவே, "தீனா... வா..." சபரி குரல் கொடுத்தார்கள்.

"நீங்க போயிட்டே இருங்கடா இப்போ வர்றேன்" அவர்களுக்கு பதில் கொடுத்தவன் ஜெனிட்டாவை தேடிச் சென்றான்.

"தீனா... எதுவா இருந்தாலும் பட்டுன்னு சொல்லிடு. என்னால் இந்த பத்து நிமிஷ டென்ஷனையே தாங்கிக்க முடியலை" தன்னை நெருங்கி வந்தவனைப் பார்த்து படபடத்தாள்.

“அட… விஷயத்தை உன்கிட்டே சொல்லத்தானே போறேன், அதுக்குள்ளே என்ன அவசரம்?” கேட்டவன் தன் பேண்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து தனது அலைபேசியை எடுத்துவிட்டு, அதை அன்லாக் செய்தவன் எதையோ தேடத் துவங்கினான்.

அதைப் பார்த்தவள், “ம்ச்… நான் என்ன கேட்டுகிட்டு இருக்கேன், நீ என்ன செய்யிற? இப்போ எதுக்கு மொபைலை நோண்டிகிட்டு இருக்க?” பொறுமையற்று குரல் கொடுத்தாள்.

“அட ஆண்டவா… இந்த பொண்ணுங்களுக்கு பொறுமை ரொம்ப கம்மி. கொஞ்சம் இரேன்… உன் விஷயமாத்தான் தேடறேன்” சொன்னவன், தான் தேடியது கிடைக்கவே, அந்த வீடியோவை ஆன் செய்தவன் அவளது முகத்துக்கு முன்பாக நீட்டினான்.

அதை அவள் பார்க்கும் முன்பாகவே, கையை சட்டென பின்னுக்கு இழுத்துக் கொண்டவன், “ஜஸ்ட் ஒரு வீடியோன்னு பார்க்காமல், விஷயம் என்னன்னு உள்வாங்கிப் பாரு… ஆடியோ கொஞ்சம் கம்மியாத்தான் இருக்கும், சோ… ஹெட்போன் யூஸ் பண்ணிக்கோ” அவன் சொல்லவே, தன் அலைபேசியில் இருந்த ஹெட்போனை எடுத்தவள் அவனது அலைபேசியில் அதை இணைத்துக் கொண்டாள்.

தீனா சொன்னது போலவே பார்வையை கூர்மையாக்கி அதில் செலுத்த, தன் பின்னால் சுற்றிய அவன் அந்த பப்பில் நான்கு ஐந்து நபர்கள் சூழ அமர்ந்திருப்பதைப் பார்த்தாள். பின்னணி இசையாக அந்த டிஸ்கோ அரங்கின் இசை முழங்கிக் கொண்டிருக்க, அவன் எதுவோ பேசுவது மெல்லியதாகக் கேட்டது.

தீனா முன்பே சொல்லியிருந்ததால், செவிகளை கூர்மையாக்கினாள். “ஏண்டா, நான் என்ன அவ பின்னாடி சும்மா சுத்துறேன்னு நினைக்கறீங்களா? அவ பொன்முட்டை போடுற வாத்துடா… எனக்கு டிகிரி கூட சரியா கிடையாது, பிறகு எப்படி வேலை கிடைக்கும்?

“அதுவே இவளை மடக்கிட்டேன்னு வை… மாசம் சொளையா அரை லச்சத்துக்கு மேலே சம்பளம், ஆன்சைட் போனான்னு வை… அப்படியே லைப்ல செட்டில் ஆயிடுவேன். அவளுக்கு புல் சப்போட் பண்ணா

போதும். எல்லாம் பக்காவா பிளான் போட்டுதாண்டா செய்யறேன். சும்மா அவ பின்னாடி சுத்த நான் என்ன லூசா?” அவன் தெளிவாக பேசிக் கொண்டிருக்க, அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஜெனிட்டாவுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

“நீயே வெட்டிப் பய, உன்கிட்டே அவ மயங்குவாளா?” கூட்டத்தில் ஒருவன் கேட்க, அடக்கமாக சிரித்துக் கொண்டான்.

“பட்சி மடங்கிடுச்சுடா... என்ன அவளே அதை எக்ஸ்பிரஸ் பண்ணட்டும்னு தான் பொறுமையா இருக்கேன். அதோட வீக்னஸ் தெரிஞ்சு தானே நிதானமா ஸ்கெட்ச் போட்டேன். அவளை பெத்தவங்க, என்னைப் பெத்தவங்க யார் சம்மதம் இல்லை என்றாலும் சரி, இந்த கல்யாணத்தை நடத்தி முடிக்கும் முடிவில்தான் இருக்கேன்.

“மிஞ்சிப்போனால் இன்னும் ஒரே மாசம்... இதே டேபிள்ள நாங்க ரெண்டுபேரும் ஜோடியா உங்களுக்கு ட்ரீட் கொடுக்கறேன்...” அவன் சொல்லிக் கொண்டே போக, பட்டென அலைபேசியை முடக்கிவிட்டு அதை அவன் கரத்தில் கொடுத்தாள்.

“இதெப்படி உனக்கு...” அவளது தேகம் மெல்லியதாக நடுங்கி, மோவாயில் வியர்வை அரும்பியது. அதை கர்ச்சீப்பால் நாசூக்காக ஒற்றிக் கொண்டாள். ஒரு மாதிரி அவஸ்தையான உணர்வு எழுந்து தொண்டையை அழுத்தியது.

அவனிடம் காதலை வெளிப்படையாக சொல்லியிருக்கவில்லை என்றாலும், மனதுக்குள் முகிழ்ந்த அந்த மெல்லிய உணர்வு கருகும் வலி அவளை சற்று தாக்கவே செய்தது.

“அவனை முதல்நாள் பாத்தப்போவே எனக்கு சரியாப் படலை... அது எப்படின்னு எல்லாம் கேக்காதே, அது பசங்க சைக்காலஜி. ஆயிரம்தான் இருந்தாலும் என்னோட கொலீக் நீ... சந்தேகப்பட்டு அவனைப் பத்தி லேசா விசாரிக்கும்போதே எனக்கு அவனைப் பத்தி தெரிஞ்சிடுச்சு. அப்போவே உன்கிட்டே சொல்லலாம்னா, நீ நம்பணுமே என்ற கவலை வேற.

“அத்தோட நீயும் அவன்மேலே அவ்வளவா இன்ட்ரெஸ்ட் காட்டலையா... சோ கொஞ்சம் விட்டுப் பிடித்தால், லாஸ்ட் வீக் எண்டே இது என் கண்ணில் பட்டுச்சு. உன் பேர் அடிபடவே நைசா எல்லாம் கேப்சர் பண்ணிட்டேன்.

“அப்போவே உன்கிட்டே காட்டலாம்னு நினைத்தேன், ஆனா நீ அவன்கிட்டே எதுவும் பேசாமல் போகவே இதுக்கு அவசியம் இல்லைன்னு நினைத்தேன். பாத்தா, அவனை ரெண்டு நாளா காணோம்னு சொன்ன உடனே, அவனை உன் கண் தேட ஆரம்பிச்சுட்டு.

“இதுக்குமேலே லேட் பண்ண மனசு வரலை. எல்லாத்தையும் சொல்லிட்டேன். இதுக்குமேலே உன் வாழ்க்கையில் முடிவெடுக்க வேண்டியது நீதான்...” அவளையே முடிவெடுக்கச் சொல்ல, அவள் முகத்தில் அப்படி ஒரு கோபம்.

“இதில் நான் முடிவெடுக்க என்ன இருக்கு? இனிமேல் அவன் என் கண்ணு முன்னாடி வரட்டும் அவனுக்கு இருக்கு” அவள் பல்லைக் கடிக்க, மறுப்பாக தலை அசைத்தான்.

“ஹையோ ஜெனிட்டா... நீ இந்த அளவுக்கு வெயிட் கொடுக்கும் அளவுக்கு அவன் ஒர்த் இல்லை. பழைய மாதிரியே அவனை கண்டுக்காமல் விடு, அவனே விலகிடுவான்” அவன் சொல்ல மறுப்பாக தலை அசைத்தாள்.

“இவ்வளவு பிளான் போட்டவன், நான் அவாய்ட் பண்ணா மட்டும் விலகிடுவானா?” அவள் கேட்பது யோசிக்க வேண்டிய விஷயம் எனத் தோன்றவே தன் மெல்லிய ரோமம் படர்ந்த தாடையை தேய்த்தான்.

“அதுவும் சரிதான்... எனக்கு ஒரு ஐடியா தோணுது. அது என்னன்னா, பேசாமல் உன் வீட்டில் நீயே உனக்கு மாப்பிள்ளை பாக்கச் சொல்லிடு” அவன் சொல்ல, இப்பொழுது அவனை முறைத்தாள்.

“அட, இந்த யோசனை பிடிக்கலன்னா விடு, வேற ஐடியா சொல்றேன், இப்படி முறைத்தால்” அவன் கேட்க, அவள் இதழ்களில் மெல்லிய புன்னகை.

“அதெல்லாம் ப்ராசஸ்ல தான் இருக்கு”.

“அட அப்போ ப்ராப்ளம் சால்வ்ட்... உங்க அப்பா எந்த பையனை கூட்டி வந்து இவன்தான் மாப்பிள்ளைன்னு சொன்னாலும் சரி, கண்ணை மூடிட்டு சட்டுன்னு ஓகே சொல்லிடு, விஷயம் ஓவர்” அவன் அசால்ட்டாக உரைக்க, அவள் அவனை வித்தியாசமாகப் பார்த்தாள்.

“எந்த பையனை கூட்டி வந்தாலுமா? அவன்மட்டும் நல்லவனா இருப்பான்னு எப்படி சொல்ற?” அவனை வம்புக்கு இழுத்தாள். அவனைப் பற்றி தெரியும் என்பதால் அவள் தயங்கவெல்லாம் இல்லை.

“அட, உனக்குத் தெரியாதது இல்லை, இந்த அப்பனுங்க எல்லாம் எமகாதகனுக” அவன் சொல்லவே, அவள் கண்களில் கோபத்தைப் பார்த்தவன், “ஏன் அப்படிச் சொல்றேன்னா, அவ்வளவு சீக்கிரம் கண்டவனுங்க எல்லாம் தன் பொண்ணை வந்து பாக்க அலவ் பண்ண மாட்டாங்க.

“முதல்ல போட்டோவைப் பாத்து, பிறகு ஜாதகம் பாத்து, அது ஒத்துவந்த பிறகு, அவன் குடும்பம், குணம், வேலை, சம்பளம் செட்டில்டா இல்லையா, தன் பொண்ணை கண் கலங்காம பாத்துப்பானா? பொறுப்பா இருப்பானா? இப்படி ஆயிரம் ‘ஆ’னாவுக்கு பிறகுதான் பொண்ணை கண்ணிலேயே காட்டுவாங்க.

“அப்போகூட, உனக்கு புடிச்சிருந்தாதான்ம்மா கல்யாணம்னு ஒரு ‘க்’கை வேற வச்சு அந்த அப்பாவி பையனை சோதிப்பாங்க. இது தெரியாத பச்சை புள்ளையா இருக்குறியே, அதான் சொன்னேன்” அவன் விளக்க வாய் பிளந்தாள்.

“அடப்பாவி, என்ன இது இப்படி புட்டு புட்டு வைக்கிற? என்ன அடி பலமோ?” அவள் கேலியாக வினவ இப்பொழுது அவளை முறைப்பது அவன் முறையானது.

“உனக்கு உதவி செய்ய வந்தேன் பாத்தியா? எனக்கு இது தேவைதான்” அவன் முறுக்கிக் கொள்ள,

“ஓகே ஓகே, கோச்சுக்காத. நான் கல்யாணம் பண்ணிகிட்டா மட்டும் அவன் விட்டுடுவானா? அவன் முகமூடியை நான் கிழிக்காமல் விட மாட்டேன்” தன்னை ஒருவன் திட்டமிட்டு வீழ்த்த முயன்றதை அவளால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

“ஜெனிட்டா, ஒருத்தன் படபடன்னு பேசி, பட்டுன்னு முன்னால் வந்து நின்னு காதலை சொன்னால் கூட நம்பிடலாம். ஆனா இப்படி பிளான் போட்டு வர்றவன், எந்த எல்லைக்கு வேண்ணாலும் போவான். நீ அவன்கிட்டே சும்மா பேசப் போனாலே அதுக்கு ஒரு கட்டம் கட்டி ரூட்டு போடுவான்.

“சோ... அவனை அப்படியே தொங்கல்ல விடுறதுதான் பெஸ்ட். மீறி உன்கிட்டே வர நினைத்தால், மிச்சத்தை நான் பாத்துக்கறேன். இல்லையா, உன் அப்பாகிட்டே பக்குவமா விஷயத்தை சொல்லி அதை டீல் பண்ணப் பார். தேவையில்லாமல் நீயா எதையாவது செய்து வைக்காதே, அவன் எவ்வளவு ஆபத்தானவன்னு நமக்குத் தெரியாது. சோ...” அவன் சொல்ல அவளும் அதை ஏற்றுக் கொண்டாள்.

“ச்சே... ஒருத்தன் பின்னாடி சுத்தின உடனே விழுந்துடற அளவுக்கு ரொம்ப ஏமாளியா இருந்திருக்கேன் பாரேன். எனக்கே என்னை நினைத்தால் ரொம்ப கேவலமா இருக்கு”.

“ஏன் அப்படி நினைக்கற? கிட்டத்தட்ட ஆறுமாசம் அவன் உன் பின்னால் சுத்தியிருக்கான், அப்படி இருக்கும்போது, நீ இப்போதான் கொஞ்சம் தடுமாறி இருக்க. அதைப் பாக்கும்போது, நீ ரொம்ப ஸ்ட்ராங்ன்னு தான் சொல்வேன்.

“அவன் அவ்வளவு பெர்ஃபெக்ட்டா நடிக்கும்போது தடுமாறுவது இயற்கை தான்...” அவன் சொல்ல அவளால் அதை அவ்வளவு சுலபமாக ஏற்க முடியவில்லை. என்னவோ தவறு செய்துவிட்ட உணர்வு. மனதுக்குள் முதல்முதலாக நுழைந்த மெல்லிய நேசம் சட்டென கருகிய வலி அவளை கொஞ்சம் தாக்கவே செய்தது.

இத்தனைக்கும் அவனிடம் நேரடியாக ஒரு வார்த்தை கூட பேசியது இல்லை. நேருக்கு நேராக பார்த்தது இல்லை, அவன் பெயர் கூட

தெரியாது. ஆனால் அவன் தன்னைப் பார்க்கும் அந்த அசையாத பார்வை, தன் அடிமனதை உலுக்கும், உருக வைக்கும் அந்த பார்வை, அதன் பின்னால் இருந்த கயமைத்தனத்தை அறிந்து சற்று நடுங்கிப் போனாள்.

“இப்படியுமா மனுஷங்க இருப்பாங்க? ஒரு பொண்ணோட மனசும், உணர்வுகளும் இந்த ஆம்பளைங்களுக்கு இவ்வளவு விளையாட்டா போச்சா?” அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை.

“எல்லா ஆம்பளைங்களையும் அப்படிச் சொல்லிட முடியாது ஜெனிட்டா. உண்மையா நேசிக்கும் மனிதர்களும் இங்கே இருக்கவே செய்யறாங்க. சிங்கம் இருக்கும் அதே காட்டுக்குள்தான் முயலும் மானும் இருக்கு. அதே மாதிரிதான் ஆண்களும்…

“இதையெல்லாம் மனசுக்குள் போட்டு குழப்பிக்கவே செய்யாதே. ஜஸ்ட் இதெல்லாம் ஒண்ணுமே இல்லைன்னு நினைச்சுக்கோ. அப்படியெல்லாம் உன்னை விட்டுடுவோமா? போ…” அவன் ஆதரவாக உரைக்க, அவன்மட்டும் இதையெல்லாம் தெரிவிக்காமல் இருந்திருந்தால் தன் நிலை என்னவாக ஆகியிருக்கும் என்பதை அவளால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

அதையே அவனிடம் தெரிவிக்க, “ஜெனிட்டா, நான் விஷயத்தை இப்போவே சொல்லப்போய் இந்த விஷயத்தின் இன்னொரு பரிமாணம் உனக்குத் தெரிந்தது. இதுவே ஆயிரத்தில் ஒன்றாக, எனக்குத் தெரியாமல் நீ அவனை நேசிக்க ஆரம்பித்திருந்தால், காதல் போதையில் அவனோட இந்த பிளானிங் எல்லாம் உனக்கு பெருசாவே இருந்திருக்காது.

“சொல்லப்போனால், எனக்காக அவர் குடும்பத்தை எல்லாம் விட்டு, என் கெரியருக்காக எனக்கு ஃபுல் சப்போட் பண்ணி, என்னைப் பெத்தவங்க இல்லாத குறையே தெரியாமல் என்னை பாத்துக்கறார். ஆன்சைட் போகறதுக்கு எல்லாம் தடையே சொல்லலை, இப்படி ஒரு மனசு யாருக்கு வரும்னு என்கிட்டேயே டயலாக் சொல்லியிருப்ப” அவன் சொல்ல அவனை முறைத்தாள்.

“ஆயிரம்தான் இருந்தாலும், புருஷன் சம்பாதித்து தன்னை முழுசா பாத்துக்கணும்னு ஒவ்வொரு பொண்ணும் ஆசைப்படுவா. அதுக்கு நானும் விதிவிலக்கில்லை” அவள் சொல்ல,

“சொல்லப்போனால் இது... இதுக்காக மட்டும்தான் நான் உண்மையைச் சொன்னேன்...” அவன் புன்னகைக்க, அவள் முகத்திலும் மெல்லிய புன்னகை.

“நாம இங்கே வந்து ரொம்ப நேரமாச்சு, பசங்க தேடி வந்துடப் போறாங்க, வா போகலாம்...” அவன் முன்னால் நடந்தான்.

“தீனா, இந்த விஷயம் வேற யாருக்கும்...” அவள் வேண்ட, பட்டென நின்றவன், திரும்பிப் பார்த்து அவளை முறைத்தான்.

“சாரி... உன்னைப்பற்றி தெரிந்தும், நான் கேட்டது தப்புதான்...” அவள் வேகமாக உரைக்க, அவளை மிதப்பாக ஒரு பார்வை பார்த்தான்.

கூடவே, “உன் கண்ணு முன்னாடியே இப்படி ஒரு நல்ல பையன் இருக்கேன், அதெல்லாம் உனக்கு கண்ணுக்கு தெரியவே இல்லையா?” அவன் கேட்க அவனைப் போலியாக முறைத்தாள்.

“நல்ல பையனா அது யாரு?” அவனது முதுகின் பின்னால் தேடுவதுபோல் பாவனை காட்டியவள், “உனக்கு எதில் விளையாடுறதுன்னு இல்லையா? ச்சீ போ...” அவன் தோளில் மெல்லியதாக அடித்தாள்.

அதே நேரம், ஜெனிட்டா, ஜனனியின் தோழி நுஹா தனது இருசக்கர வாகனத்தில் உள்ளே நுழைந்தவள், ஜெனிட்டா தீனாவின் தோளில் அடிப்பதையும், அவன் சிரித்தவாறே அதை அனுமதிப்பதையும் பார்த்தவாறே வந்தாள்.

‘என்ன இது?’ அவளுக்கு சற்று ஆச்சரியமாக இருந்தது. கூடவே அவர்களது செய்கை அவளுக்கு சிறு கோபத்தையும் கொடுத்தது. ஜனனியின் நேசம் தெரிந்த ஒரே ஆள் நுஹாதான்... எனவே சிறு கோபமும் கொண்டாள்.

இந்த விஷயத்தை உடனடியாக ஜனனியிடம் தெரிவிக்க வேண்டும் என முடிவெடுத்தாள்.

****ஜனனியோ தன் தாயிடம் இவ்வளவு சொல்லியும் பிடிவாதமாக அந்த பெண் பார்க்கும் படலத்துக்கு ஏற்பாடு செய்யும் தாயை என்ன செய்வது எனத் தெரியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அதே நேரம், தன் மனதுக்குள் இருக்கும் நேசத்தை பட்டென சொல்லிவிடவும் அவளால் முடியவில்லை.

எங்கே அதற்கும் ஏதாவது சொல்லிவிடுவாரோ என்ற பயம் அவளைப் பிடித்து ஆட்டியது. அவள் அமைதியாக இருக்கவே, “நீ ரெடியாகு… நான் இப்போ வர்றேன்” சொன்னவர் அங்கிருந்து செல்ல, தன் அறைக்கதவை தாழிட்டவள் பிரபாவதிக்கு அழைத்தாள்.

நிச்சயமாக தனக்கு உதவி செய்யமாட்டார் என்றாலும், உறுதியாக ஆலோசனை செய்வார் என்பதால் தைரியமாகவே அழைத்தாள். அவள் அழைக்கையில் அவரது சொந்த பள்ளியில் அவர் இருந்தார். வேலைக்கு நடுவிலும் அழைப்பது யார் எனப் பார்த்தவர் அது ஜனனி என்பதால் அழைப்பை உடனே ஏற்றார்.

தான் பள்ளியில் இருக்கும் வேளைகளில் அழைக்கவே மாட்டாள் என்பதால், நிச்சயம் எதுவோ அவசரத் தேவை என்பதை உணர்ந்து கொண்டார்.

“ஜனனி… என்ன இந்த நேரத்தில் கூப்ட்டிருக்க? ஆபீஸ் போகல? அம்மாகிட்டே ஏதாவது சொல்லணுமா?” நிச்சயம் அப்படித்தான் உறுதியுடனே கேட்டார்.

“அம்மா… இங்கே எனக்கு மாப்பிள்ளை பாக்கறாங்க…” எவ்வளவுதான் மறைக்க முயன்றாலும் அவள் குரலில் கண்ணீரை உணர்ந்தவரது புருவம் முடிச்சிட்டது.

“ஒரு நிமிஷம் இரு” உரைத்தவர், அங்கே பணிபுரியும் மற்ற ஆசிரியரை அழைத்து அந்த இரு குழந்தைகளையும் கவனிக்கச் சொன்னவர், அந்த பள்ளிக் கட்டிடத்தை விட்டு வெளியேறி தன் வீட்டுக்குச் சென்றார். அங்கே அபய் அலுவலகம் செல்ல கிளம்பிக் கொண்டிருக்க, அவனை போகவேண்டாம் என தடுத்தவர், செய்கையில் அலைபேசியை சுட்டிக் காட்டினார்.

தாய் சொல்ல வருவதை புரிந்து கொண்டவன், “யார்... ஜனனியா?” இதழசைவில் கேட்க, ஆம்’ என தலை அசைத்தவர், “இப்போ சொல்லு...” சோபாவில் அமர்ந்து கொண்டார்.

“அதாம்மா... மம்மி எனக்கு மாப்பிள்ளை பாக்கறாங்க. எனக்கு என்ன செய்யிறதுன்னே தெரியலை” அவள் சொல்ல, இப்பொழுது அலைபேசியை ஸ்பீக்கரில் போட்டார். நிச்சயம் ஜனனி சொல்லும் விஷயத்தை தன் மகனிடம் அவர் சொல்லாமல் இருக்கப் போவதில்லை எனவே அவ்வாறு செய்தார்.

“சரி... இது நல்ல விஷயம் தானே... உன்னை காட்டிக்கொடுக்காமல் வீட்டிலேயே வச்சிருக்க முடியுமா என்ன? இது உனக்கு சரியான வயசுதான்” அபய் மறுப்பாக எதையோ சொல்லத் துவங்க, பட்டென கை நீட்டி அவனைத் தடுத்தவர், தான் கேட்க வந்ததை முழுதாக கேட்டு முடித்தார்.

“அம்மா, எனக்கு இப்போ இந்த கல்யாணம் வேண்டாம்மா...”. அவளது குரல் கெஞ்சிற்று.

“இதை நீ கலாவதி கிட்டே சொல்ல வேண்டியது தானே” தங்கையிடம் சொல்லாமல் இருக்க மாட்டாள் என அவருக்கு புரிந்தே இருந்தது. ஆனாலும் தன் மகள் வாயாலேயே அதை உறுதி செய்துகொள்ள விரும்பினார்.

“நான் சொன்னேன் அவங்க கேக்க மாட்டேங்கறாங்க. எனக்கு என்ன செய்யன்னு தெரியலை” மெல்லியதாக விசும்பினாள்.

மகளது கண்ணீர் நெஞ்சை சுட்டாலும், அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், “ஒரு பொண்ணுக்கு கல்யாணம்னு சொன்ன உடனே, ஒண்ணு வெக்கப்படுவா, இல்லையா பயப்படுவா, அதுவும் இல்லையா... தடுமாறுவா... ஆனா அவ அழறான்னா அதுக்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும்...” அவர் நிறுத்த அபய் வாய் பிளந்தால், ஜனனியின் அழுகை பட்டென நின்று போனது.

“சொல்லு யார் அவன்...?” இருவரின் அதிர்ச்சியை கண்டுகொள்ளாமல் நேரடியாகவே கேட்டார்.

“அம்மா...” அவள் இழுக்க,

“நான் கேட்ட கேள்விக்கு பதில்” கலாவதி கேட்க வேண்டும் என அவள் ஆசைப்பட்ட அந்த வினாவை அவளைப் பெற்றவள் கேட்க, பட்டென அவளால் பதில் கொடுக்க முடியவில்லை.

தங்கையின் மௌனத்தை உணர்ந்த அபய், “சொல்லு ஜனனி... இப்போ நீ சொல்லலன்னா எப்பவுமே சொல்ல முடியாது” அவன் குரல்கொடுக்க,

“அபய், அப்பபோ உனக்குத் தெரியும் அப்படித்தானே?” மகனிடம் கேட்டார்.

“ஆமாம்மா தெரியும்... ஆனா அதை அவ வாயாலேயே எனக்கு உறுதி படுத்திக்கணும்” தன் அண்ணனும் அங்கே இருப்பதை அறிந்தவளுக்கு இதயம் பலமாக அடித்துக் கொண்டது. அவனுக்கு ஏற்கனவே சந்தேகம் இருப்பது அவளுக்குத் தெரியும்.

“யாருன்னு சொல்லு ஜனனி...” பிரபாவதி கேட்க, அதற்குமேலே அவளால் மறைக்க முடியவில்லை.

“தீனாம்மா...” அவள் உரைக்க, சில நொடிகள் மௌனத்தில் கரைந்தது.

“தீனா நல்ல பையன் தான்... நீயே கலாகிட்டே சொல்ல வேண்டியது தானே” யாரோ எவரோ என ஒரு நொடி அவரும் யோசனை செய்தார்தானே. ஆனால் தீனாவின் பெயரைக் கேட்ட பிறகு சற்று நிம்மதியாகவே உணர்ந்தார்.

“என்னால் அவங்ககிட்டே சொல்லவே முடியலை... நான் ஏதாவது பேச முன்னாடி, நான் பெத்த பொண்ணா இருந்தா இப்படி மறுப்பாளா? என்பேச்சை கேக்காமல் இருப்பாளான்னு புலம்பறாங்க, என்னால் முடியலம்மா” மகள் தங்கள் இருவருக்கும் நடுவில் போராடுவது அவருக்கு வேதனையாக இருந்தது.

பட்டென தாயின் கரத்தில் இருந்து அலைபேசியை வாங்கிய அபய், “ஏன் அவங்களுக்கு மட்டும்தான் அப்படி கேக்கத் தெரியுமா? நீயும் திருப்பிக் கேள், என்னைப் பெத்த அம்மாவா இருந்தால், என் விருப்பத்தைக் கேக்காமல் இப்படி செய்வாங்களான்னு கேள்...” அவன் கோபமாக கத்த,

“அபய்...” அவனை கண்டிக்கும் குரலில் அழைத்தார்.

“அம்மா... நீங்க சும்மா இருங்க, நான் என் தங்கச்சி கிட்டே பேசிட்டு இருக்கேன். நான் இப்படித்தான் சொல்லிக் கொடுப்பேன். ஏய்... நீ போய் இப்படியே கேள்... அப்போதான் இந்த வார்த்தை எவ்வளவு வலிக்கும்னு அவங்களுக்குத் தெரியும்.

“நீ இதை ஒரு முறையாவது அவங்ககிட்டே கேட்டாகணும். இப்போ நீ கேக்கலைன்ன, அதை எப்பவுமே கேக்க முடியாது. அத்தோட நீ தீனாவை முழுசா மறந்துட வேண்டி இருக்கும். அப்படி உன்னால் முடியும்னா தாராளமா வாயை மூடிகிட்டு இரு.

“சாயங்காலம் நான் போன் பண்ணுவேன்... அப்போ எனக்கு நல்ல பதிலா சொல்ற, இல்ல... நான் அங்கே வந்து நிப்பேன். அது மட்டும் இல்ல, நீ என் தங்கச்சியா நம்ம வீட்டில் இருப்ப. யார் தடுத்தாலும் கேக்க மாட்டேன். இதுக்கு குறுக்கே யார் வந்தாலும் நான் நிக்க மாட்டேன்” தாயை முறைத்தவாறே பதில் கொடுக்க, பிரபாவதி தலையிலேயே கை வைத்துக் கொண்டார்.

“டேய்... கலா பாவம்டா...” அவனைத் தடுக்க முயல,

“அந்த பாவத்தாலதான் என் தங்கச்சி அழறாம்மா. இதுக்கு மட்டும் அவங்க சரின்னு சொல்லல... நீங்க யாரும் வேண்டாம்னு நானே இவளுக்கும் அவனுக்கும் கல்யாணம் பண்ணி வைப்பேன்...” தாயிடம் கத்தியவன்,

“ஜாசு... இப்படி கண்ணைக் கசக்குறதை விட்டு, முதல்ல அவங்ககிட்டே போய் பேசு. நான் போனை வைக்கறேன்” பட்டென அலைபேசியை வைத்திருந்தான்.

“பெரிய நொம்மான்னு மட்டும் சொல்லிக்க வேண்டியது... ஆனா அவளை என்னவோ அடிமை மாதிரி நடத்துறது. இன்னைக்கு இதுக்கு ஒரு முடிவு தெரிஞ்சாகணும். நான் அந்த பய எங்கேன்னு போய் பாக்கறேன். நீங்க போனைப் போட்டு இவளை ஏதாவது குழப்புனீங்கன்னு எனக்குத் தெரிஞ்சது... அடுத்த நிமிஷமே ஜனனி நம்ம கூட, நம்ம வீட்டில் இருப்பா” அவ்வளவு கோபமாக கத்திவிட்டு அங்கிருந்து அகன்றான்.

தன் பைக்கை கிளப்பியவன், 'ரெண்டு லூசும் சேந்து ஏன்தான் என் உசுரை வாங்குதுகளோ? லவ்வு மட்டும் நல்லா பண்ணுங்களாம், ஆனா சொல்லிக்க மட்டும் செய்யாதுகளாம்' மனதுக்குள்ளேயே பொரிந்தான்.

அதேநேரம் அவனது அலைபேசி இசைக்க, "ஜனனி லூசாத்தான் இருக்கும்" சன்னமாக முனகியவாறே அலைபேசியை எடுத்தவன், "இப்போ என்ன…? அவங்க கிட்டே பேச தைரியம் இல்லைன்னு புலம்ப போன் பண்ணியா? நான் வரவா?" தனது செல்ல தங்கை இப்படி கஷ்டப்படுவதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை அது அவனை கோபப்படுத்தியது.

"அண்ணே… அது இல்ல… அவர்… அவர்…" அவள் தடுமாற,

"அந்த சுவத்துக்கு என்னன்னு சொல்லு…" கடுப்பானான்.

"அவர் என்கிட்டே இது வரைக்கும் வெளிப்படையா எதுவும் சொல்லவே இல்லை…" அவள் சொல்ல,

"ஓ… அவன் சொல்லலைன்னா உங்களுக்கு தெரியவே செய்யாதோ? அதெல்லாம் சொல்வான் சொல்வான்… நீ உன் மம்மியை சரி பண்ணு, அந்த எருமையைப் போய் பாக்கறேன். இப்போ நீ பேசல… ஒரே மாசத்துல இன்னொருத்தன் பொண்டாட்டியாத்தான் இருப்ப சொல்லிட்டேன்.

"நீயே முடிவு பண்ணிக்கோ… தீனாவா, இல்ல…" "இல்ல… அவரைத் தவிர வேறு யாரையும் என்னால் நினைச்சு கூட பாக்க முடியாதுண்ணா" அவள் பட்டென இடையிட, அவளுக்கு மேலும் தைரியம் சொல்லிவிட்டு, அலைபேசியை வைத்துவிட்டு அலுவலகம் கிளம்பினான்.

தன் அண்ணன் சொன்னதை மனதில் வைத்துக் கொண்டு, தன் தாயைத் தேடிச் சென்றாள். அவள் கீழே இறங்கி வருவதைப் பார்த்த கலாவதி, "பாத்தீங்களா, நான் இவ்வளவு சொன்ன பிறகும், கிளம்பாமலே இருக்கான்னா என்ன அர்த்தம்?" அவர் மேலும் எதையோ சொல்லப் போகவே, வேகமாக வந்தவள் தாயின் அருகே அமர்ந்து கொண்டு அவர் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

அவள் அவ்வாறு செய்யவே, ஒரு தாயாக அவரது மனச் சுணக்கம் சட்டென மறைய, அவள் முகத்தை ஏறிட்டார்.

“இந்த விஷயத்தில் நீ என்ன சொன்னாலும் அதை நான் கேக்கப் போவதில்லை ஜனனி” ஆனாலும் தன் பக்கத்தை கொஞ்சம் கூட அவர் விட்டுக் கொடுப்பதாகவே இல்லை.

அதை உணர்ந்த கண்ணபிரான், “கலா, முதல்ல குழந்தை என்ன சொல்ல வர்றான்னு கொஞ்சம் பொறுமையா கேள்... பிறகு முடிவு எடுக்கலாம்...” மகள் தங்களிடம் பேச வந்திருப்பது அவருக்குப் புரிந்தது.

“ஏன் மம்மி... நீங்க பாக்குற மாப்பிள்ளையை மட்டுமே நான் கட்டிக்கணும்னு நினைக்கறீங்களே... எனக்கு என்ன வேணும், எனக்கு என்ன பிடிச்சிருக்கு, யாரைப் பிடிச்சிருக்கு, என் மனசுக்குள்ளே யாராவது இருக்காங்களான்னு ஏன் நீங்க கேக்கவே இல்லை?” அவள் கேட்க, கலாவதியின் முகத்தில் அப்பட்டமாக ஒரு அதிர்ச்சி உதயமானது.

“ஜனனி... நீ... உன் மனசுக்குள்ளே... என்னங்க... என்ன இவ, என்னென்னவோ பேசுறா?” தன் கணவனை துணைக்கு அழைத்தார்.

“பொறு... அவ பேசி முடிக்கட்டும்” மனைவியை அடக்கினார்.

“ஆமாம்மா... நான் ஒருத்தரை விரும்பறேன்... என்னால் அவரைத் தவிர வேற யாரையும் கட்டிக்க முடியாது... அதனால்தான் இந்த சம்பந்தம் வேண்டாம்னு சொன்னேன்... தப்புன்னா என்னை மன்னிச்சிடுங்க. ஆனா பிளீஸ்... என்னைப் புரிஞ்சுக்கோங்க” அவள் கெஞ்ச, அவளை தன்னை விட்டு விலக்கியவர் அவள் முகம் பார்த்தார்.

“மம்மி, நான் பெத்த பொண்ணா இருந்தால் என் பேச்சை கேக்காமல் இருப்பாளான்னு வார்த்தைக்கு வார்த்தை சொல்றீங்களே, என்னைப் பெத்த...” அந்த வார்த்தைகளை அவளால் சொல்ல முடியாமல் அவரை இறுக கட்டிக் கொண்டு அழ,

“ஜனனி... அம்மாடி... வேண்டாம்... அந்த வார்த்தையை சொல்லிடாதே நான் தாங்க மாட்டேன்” அவரும் அழ, கண்ணபிரானுக்கும் கண்கள் பனித்தது. மகள் தன்னை விட்டு போய்விடக் கூடாது என்பதற்காக

மட்டுமே அந்த வார்த்தைகளை அவர் பயன்படுத்துவாரே தவிர, அவள்மேல் அவருக்கு அளவுகடந்த பாசம்.

அவளுக்கு தான் மட்டுமே அனைத்தும் செய்து பார்க்க வேண்டும் என்ற கொள்ளை பாசம் அவருடையது. தனது அக்கா அவளுக்கு மாப்பிள்ளை பார்த்துவிடக் கூடாது என்பதற்காகவும், அந்த வரனுக்கு மகள் சம்மதம் சொல்லிவிடக் கூடாது என்பதற்காகவும் மட்டுமே ஜனனிக்கு அவசரம் அவசரமாக மாப்பிள்ளை பார்த்தார்.

ஆயிரத்தில் ஒன்றாக கூட மகளது மனதுக்குள் ஒருவன்மேல் நேசம் இருக்கும் என அவர் எண்ணவே இல்லையே. அவருக்கு தன் மகளது சந்தோசம் மட்டுமே முக்கியம். அதை அழிக்க அவர் நினைப்பாரா என்ன?

“அவ ஒரு பேச்சுக்கு கூட சொல்ல தயங்கற வார்த்தைகளைத்தான், நீ ரொம்ப அசால்ட்டா சொல்லி அவ மனசை நோகடிச்சுட்டு இருந்த கலா. அது இப்போவாவது உனக்குப் புரியுதா?” அவர் கேட்க, கலாவின் தேகம் நடுங்கியது.

“நான் ரொம்ப பெரிய தப்பு பண்ணிட்டேன். இப்போ சொல்றேன்… உன் மனசுக்குப் பிடிச்சவன்தான் இந்த வீட்டு மாப்பிள்ளை. என்னங்க… அந்த மாப்பிள்ளை வீட்டுக்குப் போனைப் போட்டு, அவங்களை வர வேண்டாம்னு சொல்லிடுங்க” வேகமாக உரைத்தார்.

“இதை நீ முதல்லையே சொல்லியிருக்கலாமே…” கேட்டவர் அவள் முகம் பார்க்க, தாயை சங்கடமாக ஏறிட்டாள்.

அவளது மனதை அறிய அவர் முயலவே இல்லை என்பதை எப்படி அவளால் வெளிப்படையாக சொல்ல முடியும்? அதை தானும் உணர்ந்தவர், “நான் எங்கே சொல்ல விட்டேன் இல்ல… சரி, நீ நாளைக்கே அவரை வரச் சொல்லு நான் பேசணும்” அவர் சொல்ல அதிர்ந்து போனாள்.

## பகுதி – 4.

தாயின் சம்மதம் இத்தனை சுலபமாக கிடைக்கும் என அவள் எதிர்பார்த்திருக்கவே இல்லை. அப்படி ஒரு சந்தோசம் மனதைக் கவ்வ,

வார்த்தைகள் வெளிவர தடுமாறியது. தான் உண்மையைச் சொல்லும் வேளையில் ஒரு பிரளயத்தையே எதிர்பார்த்திருக்க அவரது உடனடி மாற்றம் அவளுக்கு வியப்பாய் இருந்தது.

“மம்மி, நீங்க நிஜமாத்தான் சொல்றீங்களா?” நம்ப முடியாத வியப்பில் கேட்டாள்.

“இந்த அம்மா உன்கிட்டே என்னைக்காவது பொய் சொல்லியிருக்கேனா? அதே மாதிரி நீ கேட்டு எதையாவது இல்லைன்னு சொல்லியிருக்கேனா?” அவளிடமே அவர் திருப்பிக் கேட்க, அவளது தலை மறுப்பாக ஆடியது.

கலாவதி அப்படித்தானே, ஜனனி இது வேண்டும் என பெயருக்கு சொன்னால் கூட அதை அப்படியே அவளுக்கு வாங்கி கொடுத்துவிட்டுதான் மறு வேலை பார்ப்பார். அது அவளுக்கு அவசியமா, அத்தியாவசியமா, ஆடம்பரமா எதையும் பார்க்கவே மாட்டார்.

தன் மகள் விருப்பம் மட்டுமே அவரது முதன்மையாக இருக்கும். கூடவே தன்னை அவள் உயர்வாக எண்ண வேண்டும், அவளது தாயின் நினைப்பே அவளுக்கு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற வேகம் அதைவிட அதிகம் இருக்கும்.

“எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை மம்மி. தேங்க்யூ தேங்க்யூ வெரி மச்” அவரது கழுத்தை இறுக கட்டிக் கொண்டாள். கூடவே கண்ணபிரானையும் கட்டிக் கொள்ள பெரியவர்களுக்கு அப்படி ஒரு நிம்மதியும் சந்தோஷமும் நிறைந்தது.

“யாரும்மா அது? என்ன பண்றான்?” கண்ணபிரான் கேட்க,

“அவர் பேர் தீனாப்பா, என்னோட வேலை பாக்கறாங்க” அதைச் சொல்கையிலே அவள் முகம் மெல்லியதாக வெட்கத்தில் சிவக்க, கூடவே பயத்தில் சற்று வெளிறியது. அவர்களது அடுத்த கேள்வியும் கோரிக்கையும் என்னவாக இருக்கும் என்று அவளுக்குத் தெரியுமே, அதனால் எழுந்த பதட்டமே அது.

“தீனாவா? நான் பாத்திருக்கேனாம்மா?” அந்த பெயரையும் நபரையும் எங்கேயோ சந்தித்திருக்கிறோம் என அவருக்குத் தோன்றியது.

அவர் அவ்வாறு கேட்கவே கலவரமாகிப் போனாள். தனது அப்பா நிச்சயம் தீனாவை சந்தித்திருப்பார் என அவளுக்குத் தெரியும். அது தன்னுடன் என்பதை விட, அவளது அண்ணன் அபயுடன் என்பதுதான் அவளை அதிகம் பதட்டமாக்கியது.

இந்த நேரம் அபயின் பெயர் வெளியே வருவதை அவள் விரும்பவில்லை. தீனா, அபயின் நண்பன் எனத் தெரியவந்தாலே கலாவதி எப்படி நிறம் மாறுவாறோ என நினைக்கையிலேயே அவளது அடிவயிறு கலங்கியது.

தன் பதட்டத்தை மறைத்துக் கொண்டவள், “அவர் என்னோடதான் வேலை பாக்கறார்ன்னு சொன்னேனேப்பா. அப்போ கண்டிப்பா நீங்க பாத்திருப்பீங்க” அவள் சொல்ல மறுப்பாக ஆடத் துவங்கிய அவரது தலை, மகளின் கண்களில் வழிந்த எச்சரிக்கையில் அப்படியே நின்று போனது.

அவள் அவ்வாறு செய்யவே, தீனாவை எங்கே, யாருடன் பார்த்தோம் என்பதும் சட்டென நினைவுக்கு வந்தது. ஒரு மாதத்துக்கு முன்னர், அவர் தனது தொழில் விஷயமாக ஒருவரை ஹோட்டலில் வைத்து சந்திக்கச் சென்றிருந்த பொழுது அங்கே வைத்து அபயைப் பார்த்தார்.

அவனைப் பார்த்தவர் அவன் அருகே செல்லவே, “சித்தப்பா…” என ஆச்சரியமானவன் இருக்கையில் இருந்து எழுந்தான். அவனது ஆச்சரியத்துக்கு காரணம் இருந்தது, பொதுவாகவே அவர் ஹோட்டல் உணவுகளை பெருமளவில் விரும்புவது கிடையாது. அப்படிப்பட்டவர் ஹோட்டலுக்கு வந்ததால் எழுந்த ஆச்சரியமே அது.

“என்ன சித்தப்பா இந்தப் பக்கம்? பொதுவா நீங்க இந்த இடத்துக்கெல்லாம் வர மாட்டீங்களே” தன் வியப்பை மறைக்காமல் அவரிடம் கேட்டான்.

“இங்கே ஒருத்தரைப் பாக்க வந்தேன். நீயென்ன இந்த நேரம் இங்கே இருக்க?” அது அவனது அலுவலக நேரம் என்பதால் கேட்டார்.

“இதோ இருக்கானே… இவனுக்கு இன்னைக்கு பிறந்தநாள். அதுக்குதான் வந்தோம். இவன் பேர் தீனா, நம்ம ஜனனி கூடத்தான் வேலை பாக்கறான்” அவருக்கு அறிமுகப் படுத்தியவன், “டேய் தீனா, இது ஜனனியோட அப்பா” அபய்கண்களால் ஜாடை காட்டவே, அவ்வளவு

நேரமாக சற்று அசட்டையாக அமர்ந்திருந்த தீனா, பெரும் மரியாதையோடு எழுந்து நின்றான்.

“ஹல்லோ அங்கிள், நல்லா இருக்கீங்களா? ஆண்ட்டி நல்லா இருக்காங்களா? நீங்களும் எங்களோட லஞ்ச்க்கு ஜாயிண்ட் பண்ணிக்கலாமே” அவன் மரியாதையுடனும், அதே நேரம் சிறு படபடப்புடனும் பேச அவனை சற்று அதிகம் கவனித்தார்.

அதைவிட அபய் கண்களால் ஜாடை காட்டியதை வேறு கவனித்திருந்ததால், தானும் சற்று அதிகமாகவே அவனைக் கவனித்தார். கிட்டத்தட்ட அபய்யின் உயரம், அவனது நிறம்தான் இருப்பான். அபய்சற்று சீரியசானவன் என முகத்திலேயே தெரிந்தால், ‘நான் குறும்புக் காரனாக்கும்’ என முகத்தில் எழுதி ஒட்டாத குறையாக நின்றிருந்தான் மற்றவன்.

அபய் தனது மற்ற நண்பர்களையும் அவருக்கு அறிமுகம் செய்திருக்கிறான் தான், ஆனால் தீனாவை அறிமுகப்படுத்தியதில் சிறு வித்தியாசம் இருந்ததுபோல் இருந்தது.

அதென்னவோ தீனாவைப் பார்த்தவுடனேயே அவருக்கு அவன்மேல் ஒரு நல்ல அபிப்பிராயம் விழுந்திருந்தது. அடுத்து வந்த நாட்களில் அபயிடமிருந்து ஏதோ ஒரு சேதியை மனம் அதிகம் எதிர்பார்த்திருக்க, அது நடக்காது போன பிறகு, தீனா என்பவன் அவரது நினைவுகளில் இருந்து சற்று அழிந்து போயிருந்தான்.

இன்று மீண்டுமாக மகளது வாயிலிருந்து அவனது பெயரைக் கேட்கவே, அவரது நினைவுகள் தூசி தட்டப்பட்டு, அன்றைய நாட்களின் தனது தேடலுக்கான விடையும் இன்று கிடைக்கப் பெற்றார்.

தீனா நினைவுக்கு வந்த பிறகும் அவரும் அந்த நிகழ்வை அவளிடம் சொல்லத் தயங்கினார். கட்டிய மனைவியைப் பற்றி அவருக்குத் தெரியாதா என்ன?

“உன்னோட வேலை பாக்கறான்னா… அப்போ அபய்க்கு அவனைத் தெரியுமா?” கலாவதி பட்டென கேட்க, ஜனனிக்கு மூச்சுக்காற்று தாளம் தப்பியது.

இப்பொழுது ‘ஆம்’ எனச் சொன்னாலே அதற்கு பல வர்ணங்கள் பூசி அவரது அழுகையைத் துவங்கிவிடுவார் என்ற எண்ணம் தோன்றவே, என்ன சொல்லி சம்மாளிப்பது என அவளுக்குத் தெரியவில்லை. சாதாரணமாகத் தெரியும் என்றாலே அவ்வளவு பேசும் அபாயம் இருக்கையில், இருவரும் நண்பர்கள் எனத் தெரிந்தால்?

வேறு வினையே வேண்டாம்!!! அவளது காதல் கல்யாணக் கனவை அவள் அப்பொழுதே மூட்டை கட்டி வைக்க வேண்டி இருக்கும். அவள் அதை நினைத்து கலங்க, “கலா, என்ன கேள்வி இது? ஒரே இடத்தில் வேலை பாக்குறவங்களுக்கு ஒருத்தரை ஒருத்தர் தெரியாமல் போகுமா?” கண்ணபிரான் எதிர் கேள்வி கேட்க, கலாவதியின் முகம் சற்று கறுத்துப் போனது.

“அப்போ, உன் காதல் விவகாரம் அவனுக்கும் தெரியுமா?” சற்று நேரத்துக்கு முன்னர் தன்னிடம் பேசிய தாய் இவரா? என்பதுபோல் இருந்தது அவரது குரல்.

“ஆமா... தங்கச்சி காதலிக்கிறதை எந்த அண்ணன் ஒத்துப்பான்? அதுவும் அபயைப் பற்றி உனக்குத் தெரியாதா? இவ விவகாரம் தெரிந்திருந்தால், முதல்ல இவளை வேலையை விட்டு நிறுத்த சொல்லியிருப்பான். அவனைப் பற்றி தெரிந்தும் இப்படி கேக்கறியே” கண்ணபிரான் அடித்துப் பேச அப்படியே குளிர்ந்து போனார்.

“ஆமா ஆமா, அந்த முரட்டுப் பய என் பொண்ணை அடிக்க வேண்ணாலும் செய்திருப்பான். நீ அவனைப்பற்றியெல்லாம் கவலைப் படாதே. உனக்கு அம்மா நான் இருக்கேன். நீ உடனே அவரை குடும்பத்தோட வந்து என்னைப் பாக்கச் சொல், அடுத்த முகூர்த்தத்திலேயே உங்கள் கல்யாணம்” அவரது வேகம் கண்டு மிரண்டு போனாள்.

தங்கள் காதலை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளாத இந்த நேரத்தில், அவளால் எப்படி அவனை அவனது பெற்றவர்களோடு இங்கே வரச் சொல்ல முடியும்? இந்த உண்மையை இவரிடம் சொல்லவும் முடியாது.

இன்பா அலோசியஸ்

ஒருதலைக் காதலுக்கா நீ இப்படி போராடுகிறாய் எனக் கேட்டு, மாலையில் வரவேண்டாம் எனச் சொல்லியிருந்த மாப்பிள்ளை வீட்டாரையும் உடனே வர சொல்லிவிடுவார். என்ன செய்யலாம் என அவளது மூளை வேகமாக சிந்திக்கத் துவங்கியது.

“அவங்க அம்மா அப்பா என்ன பண்றாங்க? அவர் கூடப் பிறந்தவங்க எத்தனைபேர்?” தாய் விசாரணையைத் துவங்கவே, தனக்கு சிந்திக்க சற்று அவகாசம் கிடைத்த சந்தோஷத்தில் சுமுகமாக மூச்சுவிட்டாள்.

“டெக்ஸ்லா பெயிண்ட்டோட ஆல் ஓவர் தமிழ்நாடு டிஸ்ட்ரிபியூஷன் சென்டரை அவங்க அப்பாதான் பாத்துக்கறார். சென்னையில் மட்டும் பத்து கடை அவங்களோடதே இருக்கு. அவங்களுக்கு அவர் ஒரே பையன்” அவள் சொல்ல கலாவதியின் முகத்தில் அப்படி ஒரு சந்தோசம்.

“பரவாயில்லையே நம்மளை விட பெரிய இடம்தான். போற இடத்திலும் நீ கஷ்டப்படாம இருப்ப. எங்களோடது எல்லாமே உன்னோடதுதான் என்றாலும், வரப்போற மாப்பிள்ளைக்குன்னு ஒரு தகுதி இருக்கணும்னு நாங்க எதிர்பார்ப்போம் தானே” தன் பேச்சுக்கான விளக்கத்தை அவர் சொல்ல மௌனமாக கேட்டுக் கொண்டாள்.

“சரி, எப்போ அவங்களை வரச் சொல்ற?”.

“மம்மி, அது வந்து... ஹாங்... இன்னும் ஒரு ரெண்டு மாசத்தில் அவங்களுக்கு ஆன்சைட் ப்ரோகிராம் ஒண்ணு இருக்கு, அதை முடிச்ச பிறகு உங்ககிட்டே எல்லாம் விஷயத்தை சொல்லலாம் என்றுதான் இருந்தோம். அதுக்குள்ளேதான் இந்த குழப்பமெல்லாம் ஆகிப் போச்சு” அவள் சொல்ல கலாவதியின் முகம் சிந்தனை வயப்பட்டது.

அதைப் பார்த்த கண்ணபிரான், “கலா, இதில் யோசிக்க என்ன இருக்கு, சின்னவங்க அவங்க வாழ்க்கையின் முடிவுகளில் தெளிவாதான் இருக்காங்க. நாமளும் அதைப் புரிஞ்சு அனுசரித்து போனால்தான் நல்லது. இவ்வளவு நாள் பொறுத்தாச்சு, இன்னும் ஒரு ரெண்டு மாசம் பொறுத்துக்க மாட்டோமா?

“அம்மாடி, எங்களுக்கு இதில் பரிபூரண சம்மதம். பையன் வீட்டிலும் சம்மதம் தானே? அதை மட்டும் எங்களுக்கு கேட்டு சொல்லு, என்ன கலா,

நான் சொல்வது சரிதானே?” மனைவியிடம் அவர் கேட்க, இதற்குமேல் அவரால் மறுத்து எதையாவது பேச முடியுமா என்ன?

பெற்றவர்களின் சம்மதம் கிடைக்கவே அவளுக்கு அப்படி ஒரு சந்தோசம். “சரி, இன்னைக்கு இப்படி ஒரு ஏற்பாடு நடப்பது அவருக்குத் தெரியுமா?”.

கலாவதி அவளிடம் கேட்க, மறுப்பாக தலை அசைத்தாள். கூடவே, ‘அவருக்குத் தெரிந்தால் இதை எப்படி எடுத்துக் கொள்வார்?’ என்ற எண்ணம் அவள் மூளைக்குள் சுழன்றது. நிச்சயமாக இதை விளையாட்டாக மட்டும் எடுத்துக் கொள்ள மாட்டான் என்று அவளுக்குப் புரிந்தது.

தனது அண்ணன் அவனிடம் பேசுவதாகச் சொன்னது அப்பொழுதுதான் நினைவுக்கு வர, “மாம், எனக்கு அவசரமா ஒரு போன் பண்ணனும், அப்படியே நீங்க சம்மதிச்சுட்டீங்க என்ற விஷயத்தையும் அவர்கிட்டே சொல்லனும், நான் என் ரூமுக்குப் போறேன்” உரைத்தவள் அவர்கள் பதிலைக் கூட எதிர்பாராமல் தன் அறைக்கு விரைந்தாள்.

‘ஹையோ, அண்ணா அவர்கிட்டே சொல்லியிருக்கக் கூடாது’ மனதுக்குள் வேண்டுதலை வைத்தவளாக தன் அண்ணனுக்கு அழைத்தாள்.

தன் அலுவலகத்துக்குச் சென்றவன் அப்பொழுதுதான் தன் வேலையில் சற்று மூழ்கியிருக்க அலைபேசி இசைத்து அவனைக் கலைத்தது. அழைப்பது யாராக இருக்கும் என அவனுக்குத் தெரியும், அவனது நினைப்பை பொய்யாக்காமல் ஜனனிதான் அழைத்துக் கொண்டிருந்தாள்.

“என்ன ஜனனி உன் நொம்மா கிட்டே பேசிட்டியா? என்ன சொல்றாங்க? பதில் காயா? பழமா?” கணினித் திரையில் இருந்து பார்வையை அகற்றாமல் கேட்டான்.

அவனது நிதானம் அவளை கொஞ்சம் கூட அசைக்காமல், “அண்ணா, நீ அவர்கிட்டே இன்னும் பேசிடல தானே. என்னை இன்னைக்கு பொண்ணு பாக்க வர்றாங்கன்னு எதையாவது அவர்கிட்டே உளறி வச்சுடாதே” படபடத்தாள்.

“நான் கேட்டதுக்கு இது பதில் இல்லையே” அவளது மனநிலை புரிந்தாலும் அவளை வம்புக்கு இழுத்தான். விஷயம் காயாக இருந்திருந்தால் தன் தங்கை இப்படி ஒரு கேள்வியை தன்னிடம் கேட்டிருக்க மாட்டாள் என்பது அவனுக்குத் தெரியும்தானே.

“ஹையோ அண்ணா, உங்க கேள்விக்கு நான் பதில் சொல்றேன். அதுக்கு முன்னாடி நான் கேட்டதுக்கு முதல்ல பதில் சொல்லுங்க”.

“நீ ரொம்ப லேட்டா கேக்கற ஜனனி” அவன் சொல்ல, அவளது இதயம் தாளம் தப்பியது.

“அப்படின்னா?” குரல் காற்றாகி வெளியேற, படுக்கையில் பொத்தென அமர்ந்தாள்.

“நான் சீட்டுக்கு வர முன்னாடியே நம்ம மாப்பிள்ளை கிட்டே இருந்து மெச்செஜ், ‘என்னடா மச்சான், புது மச்சானை பாக்க வேண்டி நீயும் லீவு போட்டியா’ன்னு, இதுக்கு ஒரே ஒரு அர்த்தம்தான் இருக்கும்னு நினைக்கறேன், நீ என்ன நினைக்கற” அவளிடம் கேட்க, அவளுக்கு பூமி தட்டாமாலை சுற்றியது.

“அவருக்கு யார் சொன்னதாம்?”.

“கண்டிப்பா நான் இல்லை, உன் உயிர் தொழிகள்ள யாராவதாத்தான் இருக்கும். ஆனாலும் எனக்கு என்ன டவுட்ன்னா, நீ லவ் பண்ற விஷயத்தை அவங்ககிட்டே கூடவா சொல்லலை? ஏன்னா பசங்க நாங்க எல்லாம், ஒரு பொண்ணு எங்களை திரும்பிப் பாத்தாலே, ‘மச்சான் அந்த பொண்ணு என்னை லவ் பண்றாடா’ன்னு ஊர் முழுக்க சொல்லிட்டு அலைவோம்.

“இங்கே என்னன்னா, ஒருத்தன் பத்து வருஷத்துக்கு முன்னாடியே உன்கிட்டே காதலைச் சொல்லியிருக்கான். மாசம் தவறாமல் உன்னை சைட் அடிக்க வந்திருக்கான். உனக்கு அவன் கம்பெனியிலேயே வேலையும் வாங்கிக் கொடுத்திருக்கான்.

“ஆனா இதையெல்லாம் நீ அவங்ககிட்டே சொல்லாமல் எப்படி உன்னால் இருக்க முடியுது?” அவன் வியக்க, அவளால் அவனுக்கு பதில் சொல்லவே முடியவில்லை.

அவன் கேட்பது நியாயம்தான். இதனால்தானே பெண்களின் மனதை கடலின் ஆழத்துக்கு ஒப்பிடுகிறார்கள். “அண்ணே, ஜெனிட்டாவுக்கு மட்டும்தான் தெரியாது. நுஹாவுக்கும் அண்ணிக்கும் நல்லாவே தெரியும்” அவள் சொல்ல, இப்பொழுது ஜெர்க் ஆவது அவனது முறை ஆனது.

“அண்ணி...” கேள்வியாக இழுத்தவன் ஆர்ப்பாட்டமாக சிரிக்க, அவள் இதழ்களிலும் மெல்லிய புன்னகை எட்டிப் பார்த்தது.

“அண்ணி விஷயத்தை நாம பிறகு பேசலாம். இப்போ உன் விஷயத்துக்கு வருவோம். மதியம் லஞ்ச்க்கு மீட் பண்ணும்போது எப்படியும் என்னை ஒரு வழி பண்ணிடுவான். ஆனா அதை எப்படி சம்மாளிக்கிறதுன்னு எனக்குத் தெரியும். ஆனா, நீ அவனை எப்படி சமாதானப்படுத்தப் போறன்னு யோசிச்சுக்கோ” சொன்னவன் அலைபேசியை வைத்துவிட்டான்.

இன்றைக்கு விடுமுறை எடுக்க வேண்டி இருந்ததால் அவர்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டியதாகப் போயிற்று. அதிலும் நுஹாவிடம் சொல்லிவிட்டு, மற்றவர்களிடம் பொய் உரைப்பது அவளுக்கு சரியாகத் தோன்றாததால் மட்டுமே உண்மையைச் சொன்னாள்.

அது இப்பொழுது தனக்கே எதிராகத் திரும்பியிருக்க, தீனாவை எப்படி சம்மாளிக்கப் போகிறோம் என்பதே அவளுக்குத் தெரியவில்லை. அவன் தன்னிடம் நேரடியாக கேட்க மாட்டான் என்றாலும், அவனிடம் விஷயத்தை சொல்ல தைரியம் இல்லாத காரணத்தால்தான் அதைச் சொல்லாமல் இருந்தாள்.

இப்பொழுது, அவள் மறைக்க நினைத்த விஷயம் அவனுக்கு தெரிய வந்திருக்க, அவன் முகத்தை நேரடியாக பார்க்கும் தைரியம் கூட தனக்கு வரும் என அவளுக்குத் தோன்றவில்லை.

அவன் பெண் பார்க்கப் போவதாகச் சொன்னால் தனக்கு எவ்வளவு வலிக்கும், அதே நிலையில்தானே அவனும் இப்பொழுது இருப்பான் என நினைக்க, நெஞ்சம் வேதனையில் கசங்கியது.

‘அப்போ லவ்வை சொன்னவர், இப்போ மட்டும் ஏன் விலகி நிக்கறாராம்?’ அவனது அமைதியை எண்ணி ஆத்திரமாக வேறு வந்தது.

அவள் அதை சிந்தித்துக் கொண்டிருக்கையிலேயே நுஹா அழைப்பதாக அவளது செல்பேசி உரைக்க, வேகமாக அதை ஆன் செய்து காதில் வைத்தாள். “ஹாய் நுஹா, ஆபிஸ் போயாச்சா? சொல்லுப்பா என்ன விஷயம்?”.

“நான் ஆபீஸ் வர்றது இருக்கட்டும், உன் பெண் பார்க்கும் படலம் எவ்வளவு தூரத்தில் இருக்கு?”.

“அது ட்ராப் ஆகிடுச்சு, நானே எதிர்பாக்கலை” அவ்வளவு உற்சாகமாக குரல் கொடுத்தாள்.

“ஏன் உன்னைப் பாக்குறதுக்குள்ளே மாப்பிள்ளைக்கு ஏதாவது ஆகிடுச்சா என்ன?” நுஹா பரிதாபப்பட, இந்தப்பக்கம் இவள் பல்லைக் கடித்தாள்.

“என்னை இப்படி நெக்கல் பண்ணத்தான் இப்போ போனைப் போட்டியா? உன்கிட்டே போய் சொன்னேன் பார், என் புத்தியை…”.

“வெளியே வாசல்லதான் தான் இருக்கும் எடுத்து அடிச்சுக்கோ” தான் சொல்லாமல் விட்ட பாதியை அவள் சொல்லி முடிக்க, “அடியேய்… உனக்கு ரொம்ப ஏத்தமாகிப் போச்சு. உன்னை நேர்ல வந்து வச்சுக்கறேன், இப்போ எதுக்கு போன் பண்ணன்னு சொல்லு”.

“உன் ஆளும், ஜெனிட்டாவும் இன்னைக்கு ரொம்ப நேரமா மரத்தடியில் பேசிகிட்டாங்க. அதுவும் ஜெனிட்டா அவரை தொட்டு அடிக்கிற அளவுக்கு கூட விளையாண்டுகிட்டாங்க. நீ இப்படியே விலகி இருந்தேன்னு வை, நம்ம ஆபீஸ்லையே எவளாவது ஒருத்தி அவரை கொத்திகிட்டு போகப் போறா” அவள் எச்சரிக்க,

“அவர் அப்படியெல்லாம் போக மாட்டார்” இவள் பட்டென பதில் கொடுத்திருந்தாள்.

“என்னடி இப்படி பொசுக்குன்னு சொல்லிட்ட?” அவள் ஆச்சரியமாக வினவ,

“ம்ச்... எனக்கு அவரைப்பற்றி தெரியாதா? இதுக்கு பின்னாடி வேற ஏதாவது விஷயம் இருக்கும், நான் பாத்துக்கறேன்” அவள் நம்பிக்கையைக் கண்டு வியந்து போனாள்.

“அதை நீயே பாத்துக்க, எப்படியோ ஒரு பெரிய கண்டத்தில் இருந்து தப்பிச்சிருக்க வாழ்த்துக்கள், நான் போனை வைக்கறேன். அந்த டீன் வேற என்னை ஒரு மாதிரியா பாக்கறான்” சொன்னவள் அலைபேசியை பட்டென வைத்துவிட்டாள்.

ஜனனிக்கு தன்னவனை நாளை எப்படி சம்மாளிக்கப் போகிறோம் என்ற கவலை ஒரு பக்கம் மனதை அழுத்தினால், மற்றவர்கள் கவனிக்கும் அளவுக்கு ஜெனிட்டாவிடம் அவனுக்கு என்ன விளையாட்டு என மறு பக்கம் பொறாமையாக இருந்தது.

அவனது விளையாட்டு குணம் அவளுக்கு தெரியும் என்றாலும், இப்படி ஏதாவது நிகழ்வுகள் நேர்கையில் மனம் சங்கடப் படுவதை தவிர்க்க முடியவில்லை. இப்பொழுதே கிளம்பி அலுவலகம் சென்றுவிடலாம் என நினைத்தாலும், விடுமுறை எடுத்த பிறகு அங்கே சென்று நிற்கவும் மனமில்லை.

மனம் முழுவதும் ஒருவித சங்கடமும் படபடப்பும் நிரம்ப, எப்படியோ பெரும் மலையாக எண்ணிய விஷயம் பனியென கரைந்ததில் மனம் நிம்மதியில் கரைந்தது.

அலுவலகத்தில் மதிய இடைவேளை வரும் வரைக்கும் தீனா தன்னை எப்படி கட்டுப்படுத்திக் கொண்டான் என்றே தெரியவில்லை. தன்னை எந்த விஷயமும் பாதிக்கவில்லை என காட்டிக் கொள்ளவே அதிக பாடுபட்டான்.

ஆனால் உள்ளுக்குள் ஜனனியின் பெண் பார்க்கும் படலம் அதிக சேதாரத்தை ஏற்படுத்தியது. அவள் மற்றவன் முன்னால், அவனது வருங்கால மனைவியாகப் போகிறவள் என்ற உரிமையான இடத்தில் கற்பனையாக நிற்பதை கூட அவனால் சகித்துக்கொள்ள முடியாமல் இருக்கையில், நிஜத்தில் அப்படி ஒரு நிகழ்வு நடக்கப் போகிறது என்பதை அவனால் எப்படி சகிக்க முடியும்?

தன் மனதுக்கு நெருக்கமாக அவள் இருக்கிறாள் என்பதை ஒவ்வொரு விஷயத்திலும் அவன் நிரூபித்துக் கொண்டிருக்கையில், அதை கண்டும் காணாமல் அவளால் எப்படி இருக்க முடிகிறது என்பதே அவனது இத்தனை மாத ஆதங்கமாக இருந்தது.

ஆனால் இன்று, அவள் தனது வாழ்க்கையின் மிகப்பெரிய முடிவெடுக்கும் நிலைக்கே சென்றுவிட்டதை அவனால் சகிக்க முடியவில்லை. குறைந்தபட்சம் அவன்மேல் சிறு விருப்பம் இருந்திருந்தால் கூட, இதை அவள் அனுமதித்திருக்கவே மாட்டாள்.

ஆனால், இங்கே… அந்த நிகழ்வுக்காக விடுமுறை எடுத்து, அதற்கு அவள் தயாராகிவிட்டது சொல்ல முடியாத வேதனையைக் கொடுத்தது. அதே நேரம், மனதின் ஓரம், அவள் தன்னைவிட்டு போய்விட மாட்டாள் என்றும், அவளது அம்மாவின் கட்டாயத்துக்காக இந்த ஏற்பாட்டுக்கு சம்மதிக்க வேண்டிய நிலை வந்திருக்கலாம் என்றும் தோன்றியது.

மதியம் சாப்பாட்டு வேளை நெருங்கவே, கேண்டீனுக்கு சென்றவன் முதலில் தேடியது அபயைத்தான். அவனைப் பார்த்தவுடன் வேகமாக அவன் இருந்த மேஜையை நெருங்கியவன், “பாவி, துரோகி, எனக்கு இப்படி ஒரு துரோகத்தைச் செய்ய உன்னால் எப்படிடா முடிந்தது?

“இங்கே பார், ஏற்கனவே நான் சொல்லியிருக்கேன்… ஜனனி எனக்குத்தான். அதை மீறி யாராவது ஏதாவது செய்ய நினைச்சீங்க, நான் என்ன செய்வேன்னே எனக்குத் தெரியாது” அவன் சொல்லிக்கொண்டே போக, பொங்கிய சிரிப்பை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டான் அபய்.

“டேய் உனக்கு இதெல்லாம் செட்டே ஆகலை, விட்டுடு. அவளை யாரும் பாக்க வரலை போதுமா? அவ அப்படியெல்லாம் விட்டுடுவாளா? சரி, எனக்கு ஒரு விஷயத்தை மட்டும் சொல்லு, நீ ஏன் இன்னும் அவகிட்டே லவ்வை சொல்லாமலே இருக்க?” அவன் கேட்க, நண்பனை விசித்திரமாக ஒரு பார்வை பார்த்தான்.

“நான் அவகிட்டே ப்ரப்போஸ் பண்ணி கொள்ளை வருஷமாச்சு, அவ அதுக்கு பதில் மட்டும்தான் சொல்லணும்… இந்த ரெண்டு வருஷமா நானும் எவ்வளவோ ட்ரை பண்ணி பாத்துட்டேன், எதுக்குமே அசைய

மாட்டேங்குறா, இதுக்கு மேலே நான் என்னடா பண்ணட்டும்?” அவன் கேட்க, அபய் தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

அவள் என்னவென்றால், இவன் தன் காதலை வெளிப்படையாக சொல்லட்டும் என்கிறாள், இவனிடம் கேட்டால், ஏற்கனவே சொல்லிவிட்டேன் என்கிறான், இவர்களுக்கு நடுவில் தான் சிக்கிக் கொண்டு சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறோம் என்பது மட்டும் அவனுக்கு தெளிவாகப் புரிந்தது.

## பகுதி – 5.

மறுநாள் காலையில் வழக்கமான தன் வேலைகளை முடித்த தீனா, தன் தந்தையையும் ஓடவிட்டுவிட்டு அலுவலகத்துக்கு கிளம்ப, அவன் மனம் முழுவதும் ஜனனியைப் பற்றிய நினைப்பே ஓடிக் கொண்டிருந்தது. அவள் தன் திருமணத்துக்கு சம்மதம் சொல்லிவிடுவாள் என்ற பயம் எல்லாம் அவனுக்கு இல்லை.

ஆனால் அப்படி ஒரு நிகழ்வுக்கு சம்மதம் சொல்லிவிட்டாளே என்ற மனத்தாங்கல் அதிகம் இருந்தது. அவளைக் காண மாப்பிள்ளை வீட்டினர் வரவில்லை என அபய் சொன்ன பிறகும் மனம் ஆற மறுத்தது. அதற்காக அவள்மேல் கோபத்தை காட்டும் அளவுக்கு அவனால் செல்லவும் முடியாது.

அதென்னவோ மனதை ஒருவித பாரம் அழுத்தும் உணர்வு. அவன் இப்படி இருந்ததே இல்லை, அவனுக்கு அப்படி இருக்கவும் பிடிக்காது. வாழ்க்கையில் என்ன தொல்லைகள், கஷ்டம் வந்தாலும் எதையும் மனதுக்குள் ஏற்றிக் கொள்ளவே மாட்டான்.

அப்படிப்பட்டவன் கொஞ்சம் சீரியசாக இருக்கும் ஒரே விஷயம் ஜனனியைப் பற்றியது மட்டுமே. அதைத் தவிர அவன் வேறு எதற்கும் கவலைப்படுவதே இல்லை. அவன் தன்னை சாதாரணமாக வைத்துக் கொள்வதாக நினைக்க, அவன் சரியாக இல்லை என்பதை அவனது பெற்றவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

தீனாவால் சில நொடிகள் கூட அமைதியாக இருக்க முடியாது. அப்படி இருக்கையில், அவன் சில நிமிடங்கள் மௌனமாக இருப்பதை அவர்கள் கவனிக்க மாட்டார்களா என்ன?

“தீனா, ஏதாவது பிரச்சனையா? ஏன் ஒரு மாதிரி இருக்க?” அவனது தாய் அவனைக் கலைக்க, அப்பொழுதுதான் தான் உணவு மேஜையின் முன்னால் அமர்ந்திருப்பதையே உணர்ந்தான்.

“ஹாங்... என்னம்மா கேட்டீங்க?” அவன் கேட்க, பெரியவர்கள் இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

அதே நேரம் அவனது தாய் அவன் முன்னால் இருந்த தட்டை தன் கரத்தில் எடுத்துக் கொண்டவர், இட்லியைப் பிட்டு அவன் வாய்க்கருகே கொண்டுசெல்ல, மறுக்காமல் வாங்கிக் கொண்டான். அவனது தந்தை அவன் தோளில் அழுத்தமாக கரத்தைப் போட, அவரைப் பார்த்து மெல்லியதாக புன்னகைத்தான்.

“என்ன சிவநாதா? ரொமான்ஸா லுக்கு விடற? இடத்தை மாத்தி விடறியே, உன் பொண்டாட்டி இங்கே இருக்காங்க” அவர் நாடியைப் பற்றி திருப்பி தாயின் முகம் காண வைத்தான்.

“இருபத்திநாலு இண்ட்டு செவன் அவ முகத்தை பாத்துட்டு தானே இருக்கேன். அது எனக்குத் தெரியாதா? நீ சொல்லு?” அதில் உன்னை எனக்குத் தெரியும் என்ற செய்தி ஒளிந்திருந்தது.

“என்னங்க, இப்படி கேக்காதீங்க. யாருடா அந்த பொண்ணுன்னு கேளுங்க?” கணவனுக்கு விஷயத்தை எடுத்துக் கூறியவராக, மகனுக்கு அடுத்த வாய் இட்லியை ஊட்டினார்.

“அம்மா?” கண்களை அகல விரித்து, வாயைக் கூட மூட மறந்து அதிர்வாக அவரைப் பார்த்தான்.

“முதல்ல சாப்பிடுடா... ஒரு வயசுப் பையன், அதுவும் லொட லொடன்னு பேசிட்டு இருக்குறவன், திடீர்னு சேர்ந்தாப்புல ரெண்டு நிமிஷம் பேசலன்னா என்னவா இருக்கும்னு தெரியாத அளவுக்கு நாங்க என்ன விவரம் இல்லாதவங்களா?” அவர் கேட்க ஆச்சரியமானான்.

“தீனா, நீயும் நானும் அப்பா மகன் மாதிரியா பழகறோம்? ஒரு ப்ரண்ட்ஸ் மாதிரி தானே பழகறோம். என்கிட்டே கூட சொல்லாமல் மறச்சுட்டியேடா” சாமிநாதன் கேட்க,

“அப்பா, அது ஒர்க்கவுட் ஆகியிருந்தால் உங்ககிட்டே சொல்லாமல் இருப்பேனா?” அவன் நியாயம் கேட்க பெரியவர்கள் சிறு கவலை கொண்டார்கள்.

“அது யாருடா என் மகனை வேண்டாம்னு சொன்னது? நீ அவங்க வீட்டு அட்ரஸ் கொடு, உனக்குவேண்டி அந்த பொண்ணுகிட்டே நான் போய் பேசுறேன்” அவர் சொல்ல அகிலாண்டம் தன் தலையிலேயே அடித்துக் கொண்டார்.

“ஒரு அப்பா மாதிரியா பேசுறீங்க?” நொடித்துக் கொள்ள,

“அப்பாங்குறதால மட்டும்தான் வீட்டு விலாசம் கேட்டேன். இல்லன்னா இவனை அழைச்சுட்டு போய், நேரா அந்த பொண்ணு முன்னாடி நின்னு, இவனுக்கு என்ன குறைன்னு கேட்டிருப்பேன்” அவர் அவ்வாறு சொல்லவே, தீனா வேகமாக இருக்கையில் இருந்து எழுந்து அவரை கட்டிக் கொள்ள, அகிலாண்டம் தன் தலையிலேயே நோகாமல் அடித்துக் கொண்டார்.

“நல்ல அப்பா, நல்ல புள்ளை. முதல்ல அந்த பொண்ணு யார், என்னன்னு விசாரிங்க” தன்னை விட, அவனது தந்தையிடம் மனம் விட்டுப் பேசுவான் என்பதால் எப்பொழுதும் அவர்களுக்கு நடுவில் இருந்து விலகியே இருப்பார்.

“சொல்லுடா... அந்த பொண்ணு உன் லவ்வை அக்ஸப்ட் பண்ணிக்கலையா என்ன? ஏனாம்? அவங்க வீட்டை நினைத்து தயங்குறாளா? எதுவா இருந்தாலும் உனக்கு இந்த சாமிநாதன் இருக்காண்டா. நீ தைரியமா சொல்லு” அவர் கொஞ்சம் சீரியஸாக, அவனும் முதல் முறையாக வார்த்தைகளற்று தடுமாறினான்.

அவரிடம் என்னவென்று சொல்வதாம்? தனது பதினாறாம் வயதில் விளையாட்டாக அவளிடம் காதலைச் சொல்லிவிட்டு, அவளது பதிலுக்காக இன்றும் தான் காத்திருப்பதாகச் சொன்னால், அதை எந்த

அளவுக்கு ஏற்றுக் கொள்வார் என அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அந்த வயதுக்கு தனக்கு அந்த முதிர்ச்சி இருந்திருக்காது என்பது அவனுக்கே தெரிகையில், அவனது அப்பாவுக்குத் தெரியாதா என்ன?

“சாமிநாதா, இப்போ என்கிட்டே எதுவும் கேக்காதே. நான் ஒரு பொண்ணை மனசார விரும்பறேன். நேத்து அவளைப் பொண்ணுபாக்க வர்றதா இருந்தது, அதைத் தெரிந்ததில் இருந்து கொஞ்சம் அப்சட்டா இருக்கேன்.

“ஆனா அது நடக்கவே இல்லை என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அதுக்கு அவ எப்படி சம்மதிக்கலாம்ன்னு ஒரு பொசசிவ் எண்ணம். அதான்...” தன் இந்த எண்ணத்தை வேறு யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாது என்பதால் அவர்களிடம் பகிர்ந்தான்.

“நீ இந்த விஷயத்தை எங்ககிட்டே முதல்லையே சொல்லியிருந்தால், இவ்வளவு தூரம் வந்தே இருக்காதே. உன் விருப்பத்துக்கு மாறா நாங்க ஏதாவது செய்வோமா என்ன? அவர் கேட்க, அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

அவனது அமைதியைப் பார்த்தவர், “இதில் நீ சொல்லாமல் விட்ட விஷயம் எதுவோ இருக்கும் போலவே? நீ உன் காதலை அந்த பொண்ணுகிட்டே இன்னும் சொல்லலையா என்ன?” அவனது குணத்துக்கு அவன் அப்படியெல்லாம் தயங்கும் ஆள் இல்லையே என்ற யோசனை அவருக்குள் ஓடி மறைந்தது.

“சாமிநாதா, யாரைப்பாத்து என்ன கேக்குற?”.

“அததானே... எங்கே நீ லவ்வை சொல்லாமலே போயிட்டியோன்னு சந்தேகப் பட்டுட்டேன்” அவர் சொல்ல, அவரைப் போலியாக முறைத்தான்.

அதைக் கண்டுகொள்ளாமல், “இப்போ நிஜமாவே என்ன பிரச்சனைன்னு சொல்லு பாப்போம். நீ இப்படி சுத்தி வளைக்கிற ஆளெல்லாம் இல்லை.

சம்திங் என்னவோ நடந்திருக்கு அதென்ன?” அவர் கேட்க, பதில் சொல்லாமல் எழுந்து கொண்டான்.

கூடவே, “அது என்னன்னு ஆபீஸ் போயிட்டு வந்து சொல்றேன். இப்போ எனக்கு லேட் ஆச்சு கிளம்பறேன்” அவர்களிடம் சிக்கிக் கொள்ளாமல், இருக்கையில் இருந்து எழுந்து கொள்ள,

“டேய், வாயைக் கழுவிட்டு போடா, அவசரத்தில் அப்படியே கிளம்பிப் போய்டாதே. ஸ்கூல் போகும்போது அப்படித்தான் செய்வ” அகிலாண்டம் அவன் முதுகின் பின்னால் குரல் கொடுக்கவே, ஓடிவந்து தாயை இறுக கட்டி விடுவித்தவன், அவர் கன்னத்தில் அழுத்தமாக இதழ் பதித்தான்.

“இத்தனை வயசு வரைக்கும் சாப்பாடு ஊட்டி விடற அம்மா யாருக்கு கிடைக்கும்? லவ் யூ மாம்” அவன் சொல்ல, அவர் கண்களில் மெல்லிய நீர்ப்படலம், அதை அவனுக்குக் காட்டாமல் நாசூக்காக மறைத்துக் கொண்டார்.

அவன் அவர் சொன்னதை செய்துவிட்டு அலுவலகம் கிளம்பிச் செல்ல, அவனைப் பார்த்தவாறே, “என்னதான் நண்பன் மாதிரி நான் பழகினாலும், நீன்னா அவனுக்கு சம்திங் ஸ்பெஷல்தான்” அவர் சொல்ல அமைதியாக கணவனை ஏறிட்டார்.

“என்ன பொறாமையா?” மனைவியின் கேள்விக்கு இருவருமே ஒருவர் மற்றவரைப் பார்த்துக் கொண்டார்கள். இருவரின் கண்களும் பல சேதி சொல்ல, அதை வாய்விட்டு பேசிவிடும் தைரியம் இருவருக்கும் இருக்கவில்லை.

வழக்கமான தனது பேருந்து நிறுத்தத்துக்கு சென்று நின்ற தீனா, அலுவலக வண்டி வரும் திசையைப் பார்க்க, அவனை ஏமாற்றாமல் அடுத்த சில நொடிகளில் பேருந்து அவன் முன்னால் வந்து நின்றது.

“தீனா…” நண்பர்கள் அனைவரும் குரல் கொடுக்கவே, அவர்களைப் பார்த்து கை அசைத்தவாறே பேருந்துக்குள் ஏறியவன் உள்ளே வந்தான்.

“என்னங்கடா வீட்டுக்கு வரவே இல்ல?” அவர்களிடம் கேட்க,

“ஏண்டா… போனவாரத்துக்கு முந்தினவாரம் சுட்ட பஜ்ஜி ஏதாவது ஆண்ட்டி எடுத்து வச்சிருக்காங்களா என்ன?” காதர் நக்கலாக வினவ அவனை முறைத்தவன் அவனுக்கு பக்கத்தில் இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டான்.

பார்வையோ அனிச்சையாக ஜனனி இருக்கும் பக்கம் பாயத் தவிக்க, முயன்று தன்னை கட்டுப்படுத்திக் கொண்டான். பேருந்துக்குள் அமர்ந்திருந்த ஜனனிக்கும், தீனா இருக்கும் இடத்தை பேருந்து நெருங்க, நெருங்க இதயம் பலமாக அடித்துக் கொண்டது.

அவனை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என மனம் தவித்துக் கிடக்க, அதை அதிகரிப்பதுபோல் தன் பக்கம் பார்வையைக் கூட திருப்பாமல் அவன் அமர்ந்துகொள்ள, அவனிடம் என்னவென்று சொல்வது, சமாதானம் செய்வது என்று கூடத் தெரியவில்லை.

அதைவிட அவனிடம் என்னவென்று சமாதானம் செய்வதாம்? ‘இதையெல்லாம் எதற்காக என்னிடம் சொல்கிறாய்?’ எனக் கேட்டால் அதற்கு அவள் என்ன விளக்கம் சொல்வதாம்? அப்படி அவன் கேட்க மாட்டான் என உறுதியாகத் தெரிந்தாலும், சொல்லப்படாத அந்த உரிமை உணர்வு மறைந்து கிடக்கையில், எதையும் உறுதியாகவும் நினைக்க முடியவில்லை.

அலுவலகத்துக்குச் சென்று வேலையில் மூழ்கிய பிறகும், ஒருவர் பார்க்காமல் மற்றவரை கவனித்தவாறே இருந்தார்கள். ஒரே கேபினுக்குள் தீனா, குண்டன் சபரி, மாதும்மை, ஜனனி நால்வரின் இருக்கையும் இருக்க, ஜனனிக்கு அருகே அமரும் மாதும்மை அன்று விடுப்பில் சென்றிருக்கவே தனியாக சென்று அமர்ந்து கொண்டாள்.

அவளது முதுகின் பின்னால் இருந்த இரு இருக்கைகளில் மற்ற இருவரும் அமர்ந்திருக்க, அவர்கள் இருவரும் தங்களுக்குள் பேசி சிரிப்பதை கேளாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

நேரம் பத்து முப்பதை நெருங்கவே, டீ பிரேக்குக்காக வந்த ஜெனிட்டா, “ஜனனி, நேத்து விஷயம் என்ன ஆச்சு? பஸ்ஸில் வச்சு கேக்க மறந்துட்டேன், நீயும் சொல்லவே இல்ல பாத்தியா? என்ன நாங்க எல்லாம்

கல்யாண சாப்பாட்டை எதிர்பாக்கலாமா?” அவள் கேட்க, ஜனனியின் பார்வை அனிச்சையாகவே தீனாவின் பக்கம் பாய்ந்தது.

அவனும் அப்பொழுது அவளைத்தான் பார்த்துக் கொண்டிருக்க, ‘ஹையோ, இவ இதை இப்போ வந்தா கேக்கணும்?’ மனம் அடித்துக் கொண்டது.

“ஜெனிட்டா, என்ன சொல்ற? கல்யாண சாப்பாடா? ஜனனி நிஜமா? கங்கிராட்ஸ். எங்களுக்கும் பார்ட்டி உண்டா?” சபரி பெருவிரலை தண்ணீர் குடிக்கும் விதத்தில் அவன் அசைத்துக் கேட்க, அவளுக்கோ வார்த்தைகள் வர மறுத்தது.

அதுவும் தீனா அவளை இமைக்காமல் பார்க்கையில் அவளால் எப்படி பதில் சொல்ல முடியுமாம்? “ஜனனி, என்ன இது? அவுட்டாப் மயிண்டாவே உக்காந்திருக்க? நாங்க பேசுறது ஏதாவது காதில் விழுதா இல்லையா? ஒரு வேளை நேத்தைக்கு வந்தது ஊத்திகிச்சா என்ன?” ஜெனிட்டா அவள் தோளை உலுக்கினாள்.

இதற்குமேல் பதில் சொல்லாமல் இருந்தால் நன்றாக இருக்காது என்பதால், “ம்… ஆமா, அவங்க யாரும் வரலை” தீனாவைப் பார்க்கத் திணறி பார்வையை திருப்பிக் கொண்டவள் அவளுக்கு பதில் உரைத்தாள்.

“என்ன ஜனனி இதுக்குப்போய் இவ்வளவு ஃபீலிங்? எனக்கெல்லாம், என் முகரையை எல்லாம் பாக்கவே வர முடியாதுன்னு பொண்ணு ரூமுக்குள் உக்காந்துட்டு என் மூஞ்சியில் கரியைப் பூசினா. அவங்க டீசெண்டா வராமல் இருந்திருக்காங்க, அதைப் பாராட்டாமல்…” சபரி இழுக்க,

“ச்சே ச்சே… நான் அதுக்கெல்லாம் ஃபீல் பண்ணலை” அவள் வேகமாக இடையிட்டாள்.

“அதானே, நீங்க எல்லாம் எங்கே ஃபீல் பண்ணப் போறீங்க? எல்லா ஃபீலிங்கும் எங்களுக்குத்தானே, ஹம்…” அவன் பெருமூச்சு விட, தீனா அவன் தோளிலேயே இடித்தான்.

“டேய் குண்டா, நீ எதுக்குடா இம்புட்டு ஃபீல் ஆகுற? உன்னைக் கட்டிக்க நினைக்கிற பொண்ணு பட வேண்டிய விஷயம்டா அது” தீனா சொன்ன

விதத்தில் இரு பெண்களுக்கும் சிரிப்பு பொத்துக்கொண்டு வர, முயன்று தங்களை கட்டுப்படுத்திக் கொண்டார்கள்.

ஆனாலும் அவர்கள் சிரிப்பை கட்டுப்படுத்துவது சபரிக்குத் தெரிந்துவிட, தீனா பக்கம் திரும்பியவன், “ஐ’ம் யுவர் ப்ரண்ட்யா...” அழும் குரலில் சொல்ல, இப்பொழுது அவர்களால் சிரிப்பை கட்டுப்படுத்த முடியாமல் பக்கென சிரித்தே விட்டார்கள்.

அவர்கள் சிரிக்கவே, “இதுக்கு காரணம் நான் இல்லை” தீனா கரங்களை உயர்த்த, “நான்தான்... நான்தான்... நானேதான் போதுமா?” தன் நெஞ்சிலே போலியாக அவன் குத்த, இப்பொழுது தீனாவும் அவர்கள் சிரிப்பில் இணைந்து கொண்டான்.

“ஹேய் கைஸ்... டீன் முறைக்கிறான். வாங்க கேண்டீன் பக்கம் நகர்ந்துடலாம். இல்லன்னா இங்கேயே வந்துடுவான்” ஜெனிட்டா உரைக்கவே, அவர்கள் அனைவரும் இருக்கையில் இருந்து எழுந்து கொண்டார்கள்.

அந்த டீன் ரக்ஷன் அவ்வளவு நல்லவன் கிடையாது என்பதோடு, யாராவது சந்தோஷமாக இருந்தாலும் அவனுக்குப் பிடிக்காது. தேவையில்லாமல் ஏதாவது வேலை கொடுத்து அவர்களைப் படுத்தி வைப்பான். எனவே அவனது கண்ணில் படாமல் நழுவிச்சென்றார்கள்.

கேண்டீனுக்கு அவர்கள் செல்கையில், மற்றவர்களும் அங்கே வந்து குழுமினார்கள். அவரவருக்குத் தேவையானவற்றை அவர்கள் எடுத்துக் கொள்ள, ஜனனி தனக்கென காபி மேக்கரில் இருந்து ஒரு காபியை எடுத்துக் கொண்டு வந்து அமர்ந்துகொள்ள, நுஹா அவள் அருகே வந்து அமர்ந்தாள்.

சுதிர், சபரி, காதர், ஜெனிட்டா, ஜனனி, தீனா என அனைவரும் குழும, பேச்சு பொதுவாக கடந்தது. அந்த நேரம், ஜனனியும், தீனாவும் கூட தங்கள் பிரச்சனைகளை, மன அழுத்தங்களை மறந்திருந்தார்கள்.

“தீனா, சுதிர்க்கு பாஸ்ப்போர்ட் எடுக்க வேண்டி அவன் வீட்டுக்கு பேசப் போகணும்னு சொன்னியே போனியா இல்லையா? அவங்க அப்பா

எதுக்குமே ஒத்துவர மாட்டாரே. எப்படி சம்மாளிச்ச?” அவனிடம் கேட்க, அனைவரும் தீனாவைப் பார்த்தார்கள்.

“டேய், சொல்லிடவா?” சுதிரிடம் கேட்க,

“நான் வேண்டாம்னு சொன்னா மட்டும் கேக்கவா போற? எப்படியும் என்னைக் கதறவிட்டு சொல்லத்தான் போற, அதுக்கு நீயே சொல்லிடு மச்சான்” சரணாகதியானான்.

“ஹையோ… நான் ஒரு தடவைப் போய்ட்டு நொந்து நூலா போயிட்டேன். அவர் பேரைத்தான் கேட்டேன்… அதுக்கு சொன்னாரு பாரு ஒரு பதில்…” காதர் நெஞ்சில் கை வைத்து ஷாக் உணர்வை பிரதிபலிக்க, தீனா ஆர்ப்பாட்டமாக சிரித்தான்.

“உன்கிட்டேயுமா?” தீனா கேட்க, “அப்போ உன்கிட்டேயும் அதே விஷயத்தை சொன்னாரா? அந்த மனுஷன் அதை விடவே மாட்டார் போல?” அவர்கள் இருவரும் தங்களுக்குள் பேச மற்றவர்கள் விழித்தார்கள்.

“என்னப்பா இது? நீங்களே உங்களுக்குள் பேசிகிட்டா எப்படி? எங்களுக்கும் புரியிற மாதிரி சொல்லுங்களேன்” ஜெனிட்டா இடை புகுந்தாள்.

“அதுவா? அது ஒரு பெரிய, சுவாரசியமான கதை. அது என்னன்னா… மாப்ளைக்கு ஆன்சைட் ப்ரோகிராம் போகணும், வெளிநாடெல்லாம் சுத்திப் பாக்கணும்னு ஒரே ஆசை. ஆனா இவனோட அப்பாவுக்கு, பாஸ்போட் எடுத்துட்டா, இவன் அவங்களை எல்லாம் விட்டுட்டு வெளிநாட்டுக்கு ஓடிப் போயிடுவான்னு பயம்.

“சோ… பாஸ்போட் எடுக்கவே விடலை. அந்த எண்ணத்தை போக வைக்க வேண்டி, என்னை வந்து பேசச் சொன்னான், நானும் பேசப் போனேன். எல்லாம் நல்லாத்தான் போயிட்டு இருந்தது. சார் உங்க பேர் என்னன்னு அவர்கிட்டே கேட்டா,

“சரவணர்’ன்னு சொன்னார். என்ன சார் இது, பொதுவா ‘சரவணன்’ன்னு தானே பேர் வைப்பாங்க, உங்களுக்கு என்ன சரவணர்’ன்னு பேர்

வச்சிருக்காங்கன்னு கேட்டா..., 'அது நான் சின்னப் பையனா இருந்த வரைக்கும் சரவணன்தான், இப்போ நான் பெரியவன் ஆகிட்டேன்ல்ல, சோ, சரவணர்'ன்னு சொல்றார்டா...” அவன் சொல்லி முடிக்க, அந்த இடமே சிரிப்பில் அதிர்ந்தது.

“மனுஷன் வாயைத் தொறந்தாலே இந்த காலத்து பசங்க ஏன் இப்படி இருக்கீங்க? நான் எல்லாம் கவர்மென்ட் பரீட்சை எழுதி அரசாங்க உத்தியோகம் பாக்கறேன், இந்த தலைமுறையில் எவன் வேலை பாக்கறான், அப்படி இப்படின்னு கன்னாபின்னான்னு பேசுறார்டா. அவரை எப்படி ஹேண்டில் பண்றதுன்னே தெரியலை.

“ஏதாவது தனித்துவம் இருக்கா? ஐடெண்டிடிட்டி இருக்கா? உங்க வயசில் எல்லாம் மைக்கேல் ஜாக்ஸன் அமெரிக்காவையே அதிர வைச்சான், நீங்களும்தான் இருக்கீங்களே அப்படி இப்படின்னு கடுப்பாக்கிட்டார்” தீனா நிஜமான கடுப்பில் உரைக்க,

“ஏண்டா மச்சான், நீ எல்லாத்தையும் கேட்டுட்டு பேசாமலா இருந்த?” அவனை நம்ப முடியாமல் பார்த்தார்கள்.

“நீங்க சொல்றது சரிதான் அங்கிள், அதுல பாருங்க, உங்க வயசில் ஹிட்லர் சுட்டுகிட்டு செத்துப் போயிட்டார்ன்னு சொன்னேன். மனுஷன் முகத்தில் ஈயாடலை” அவன் உரைத்து முடிக்க, “ஹே... ஹே... அப்படி போட்டுத் தாக்குடா” அவனை அவர்கள் பாராட்ட, சுதிர் கடுப்பாக அமர்ந்திருந்தான்.

“டேய் மாப்ள, உன் பாஸ்போர்ட்க்கு மொத்தமா சங்கு போல” நடுவில் இருக்கும் மூன்று விரல்களை மடக்கி, பெருவிரலை வாயில் வைத்து, குட்டி விரலை நீட்டி, சங்கு ஊதுவதுபோல் அவன் கையை வைத்துக் காட்ட, அவனை முறைத்தான்.

“நம்ம மச்சானை கூட்டி போன விஷயம் ஏதாவது பழம் ஆகாமல் போயிருக்கா?” அவன் திருப்பிக் கேட்க, ஆச்சரியமானார்கள்.

“டேய், நீ இப்படி சொல்லியுமா அவர் நீ கேட்டதுக்கு ஒத்துகிட்டார்?” அவர்கள் ஆச்சரியமாக, தீனா தன் சட்டைக் காலரை தூக்கி விட்டுக் கொண்டான்.

“அந்த ஆச்சரியம் எப்படிடா நடந்துச்சு?” அவர்கள் வியக்க,

“அது ரொம்ப சிம்பிள்டா, எங்க கேங் பத்து பேரில், இவனுக்கு மட்டும்தான் வெளிநாடு போக வாய்ப்பு கிடைச்சிருக்கு, அவன் அங்கேயே தங்கவெல்லாம் முடியாது, ஆறுமாசம் முடிஞ்ச உடனே, அவங்களே கழுத்தைப் புடிச்சு வெளியே தள்ளிடுவாங்கன்னு சொன்னேன், மனுஷன் அப்படியே உருகிப் போய்ட்டார்.

“அவருக்கு தன்னோட மகன் பெரிய ஆளாயிட்டான்னு பெருமை பிடிபடலை. உடனே ஓகே சொல்லிட்டார். ஆனா இவன் அந்த பாஸ்போட்டை ஐடி புரூப்ஃபா மட்டும்தான் யூஸ் பண்ணப் போறான்னு நமக்கு மட்டும்தானே தெரியும்” தீனா சொல்ல, சுதிர் அவனை ஓடவிட்டு உதைக்கத் துவங்கினான்.

அதைப் பார்த்த நண்பர்கள் அனைவரும் வாய்விட்டு சிரிக்கத் துவங்கினார்கள். இந்த கலாட்டாக்கள் எல்லாம் இங்கே சகஜம் என்பதுபோல் சிலரது பார்வை இருக்க, அங்கே கடை வைத்திருந்தவர்கள் அனைவருமே அவர்களை சுவாரசியமாக, மெல்லிய சிரிப்போடு வேடிக்கைப் பார்த்தார்கள்.

அவர்கள் வேடிக்கை பார்ப்பதை எல்லாம் இவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவே இல்லை. ஒரு வழியாக இருவருக்குமே மூச்சு வாங்க, “மாப்ள, இன்னைக்கு இவ்வளவு போதும், மிச்சத்தை நாளைக்கு பாத்துக்கலாம். என்னால் இதுக்கு மேலே ஓட முடியாதுடா” தீனா மூச்சுவாங்க அவனிடம் கெஞ்ச,

“அப்போ நீயா வந்து ரெண்டு அடி வாங்கிக்கோ, உன்னை விட்டுடறேன்” அவன் டீல் பேச, தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

“உனக்கு இந்த புத்தி எப்போதான் போகுமோ? வந்து அடிச்சுத் தொலை” இருக்கையில் தீனா அமர, அவனை அடித்துவிட்டே ஓய்ந்தான் சுதிர்.

“நீங்கல்லாம் நல்லா வருவீங்கடா. சரி சரி, நேரமாச்சு சீக்கிரம்” ஜெனிட்டா அவசரப்படுத்தவே, தன் முன்னால் ஆறிப்போயிருந்த காபியை ஒரே மடக்கில் குடித்து முடித்தவன், “கிளம்பலாமே... நான் முடிச்சுட்டேன்” சுதிர் எழ,

“ஏண்டா, அதென்ன காபியா இல்ல கழனித்தண்ணியா? இப்படி குடிக்கிற? நான் எனக்கு இன்னொரு கப் காபி எடுத்துக்கறேன். அப்படியே கிளம்பலாம்” அனைவரும் எழுந்து கொண்டார்கள்.

தீனாவின் குறும்புகளையும், பேச்சுக்களையும் பாராமல் பார்த்துக் கொண்டாலும், அவன் தன்னை பார்வையால் தீண்டாதது ஜனனிக்கு பெரும் குறையாகவே இருந்தது.

தீனா காபி எடுக்கச் செல்லவே, அவனது நண்பர்கள் தங்கள் இருக்கைக்குச் செல்ல, ஜெனிட்டாவும் நகர்ந்துவிட, ஜனனியிடம் திரும்பிய நுஹா, “ஏய், நேத்து நான் சொன்ன விஷயத்தை உன் ஆளுகிட்டே கேட்டியா இல்லையா? அவங்க விளையாடினது எனக்கு என்னவோ சரியா படலை” அவள் சொல்ல, அதை ஜனனி கண்டுகொள்ளவே இல்லை.

“ம்ச், உனக்கு அவரைப் பற்றி தெரியாதா என்ன? அவகிட்டேயும் ஏதாவது கலாட்டா பண்ணியிருப்பார். நீ வா போகலாம்” தீனாவை ஒரு பார்வை பார்த்தவள் எழுந்து நடந்தாள். நடையில் சிறிதும் வேகம் இருக்கவில்லை. தீனா தங்களுடன் வந்து இணைந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வமிருக்கவே நடை செல்லவில்லை.

தீனாவும் காபியை எடுத்தவன், அவர்களோடு இணைந்துகொள்ள முயல, வேகமாக வந்த ஜெனிட்டா அவனைத் தடுத்து நிறுத்தினாள். அவளது முகத்தில் இருந்த பட்டத்தைப் பார்த்தவன், புருவம் நெரித்தான். அதே நேரம், தன்னுடன் வந்து இணைவான் எனக் காத்திருந்த தீனா வராமல் போகவே ஜனனி திரும்பிப் பார்த்தாள். அவனோ ஜெனிட்டாவுடன் செல்வது தெரிய, அவள் முகத்தில் மெல்லிய தடுமாற்றம் விரவத் துவங்கியது.

## பகுதி – 6.

ஜனனி தன் இருக்கையில் வந்து அமர்ந்து கொண்டாலும், எண்ணங்கள் முழுவதும் தீனாவையே சுற்றி வந்தது. ‘ஜெனிட்டாவுடன் அவருக்கு அப்படி என்ன பேச்சு? அதை மற்றவர்கள் இருக்கும்போது பேசலாமே. தனியாக பேசும் அளவுக்கு என்னவாக இருக்கும்?’ கண்கள்

மடிக்கணினியில் மொய்த்தாலும், சிந்தைகள் முழுவதும் அவன் வசமே இருந்தது.

அதே நேரம் தன் அருகில் யாரோ அமர்வதுபோல் இருக்கவே, தன் சிந்தை கலைந்தவள் திரும்பிப் பார்க்க, அவளுக்கு அருகே அமர்ந்திருந்தான் தீனா. அமைதியாக அவனை ஏறிட்டவள், மீண்டுமாக திரும்பிக் கொள்ள, அதைப் பார்த்தாலும் அவன் எதுவும் சொல்லவில்லை.

இருவருக்கும் பேசிக் கொள்ளவும், கேட்கவும் நூறு விஷயங்கள் இருந்தாலும், நேருக்கு நேராக கேட்டுக் கொள்ள தயக்கம் தடுத்தது. இன்று வரைக்குமே அவர்கள் மனம் விட்டு அதிகமாக பேசிக் கொண்டது இல்லைதான். ஆனால், ஒருவருக்கு மற்றவர் மனதைப் பற்றி நன்கு தெரியும்.

நேற்றைய விஷயத்தை கேள்விப்பட்ட பிறகு, அவன் தன்னிடம் முகம் கொடுக்கவே மாட்டானோ என அவள் பயந்திருக்க, அவனோ எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் தன் அருகே அமர, அவளுக்கு அதுவே பெரும் ஆறுதலாக இருந்தது.

அவனும் அவளிடம் பேச எந்த முயற்சியும் எடுக்கவில்லை. தன் அலைபேசியில் எதையோ நோண்டிக் கொண்டு அமர்ந்திருந்தான். அவள் அருகே அப்படி அமர்ந்திருப்பது மட்டுமே அவனுக்கும் போதுமானதாக இருந்தது.

இருவருக்குமே அந்த அமைதியான அமர்வு மிகவும் பிடிக்கும். வார்த்தைகளாக பேசிக் கொண்டால்தானா? ஒலியற்ற மௌனங்கள் சொல்லாத சேதியை எந்த வார்த்தையாலும் தங்களுக்கு தெரிவிக்க முடியாது என்பது அவர்களது பலமான எண்ணம்.

அவள் கல்லூரியில் படிக்கும்போது கூட, அபய் வராத நாட்களில் அவளைக் காணச் செல்பவன், எதுவும் சொல்லாமல் அவள் அருகில் அமர்ந்திருப்பான். அவ்வளவு ஏன் சாதாரண நலம் விசாரிப்பு கூட இருக்காது. அதை அவளும் எதிர்பார்த்தது இல்லை.

அவளுமே ‘எதற்காக வந்தீங்க? அண்ணா எங்கே? என்ன விஷயம்?’ இப்படி எந்த கேள்விகளையும் அவனிடம் கேட்டது இல்லை. அவனுமே

எந்த விளக்கங்களையும் சொல்லத் தயாராக இருந்தது இல்லை. ஒருவர் மற்றவரது அருகாமையை ரசித்தவாறு காத்துக் கிடப்பார்கள்.

அவளது தோழிகள் கேட்டால், “என் அண்ணாவின் நண்பன்” எனச் சொல்லி அறிமுகம் செய்து வைப்பாள். தோழிகளின் கேலியோ, ஜாடைப் பேச்சுக்களையோ ஆமென ஒத்துக் கொண்டதும் இல்லை, இல்லை என மறுத்ததும் இல்லை.

கல்லூரி நாட்களிலேயே அப்படியென்றால், இப்பொழுது? அவன் அவள் அருகே அமர்ந்திருக்க, அவனது ஒவ்வொரு அசைவுக்கும் அவனது கால் அவள்மேல் உரசிக்கொண்டு இருந்தது. அவளும் விலகிக் கொள்ளவில்லை, அவனும் நகர்ந்து அமரவில்லை.

அவனுக்கான உரிமை என அவள் அமைதி காத்தால், தனக்கானவள் என்ற உரிமையில் அந்த நெருக்கத்தை அனுபவிப்பான் அவன்.

சில நிமிடங்கள் அவ்வாறே கடக்க, அவளுக்கு மனதுக்குள் பெரும் தவிப்பு. தன்னை பெண்பார்க்க வந்தது போல, தீனா பெண் பார்க்கச் சென்றிருந்தால் தன்னால் தாங்கிக் கொண்டிருக்க முடியுமா?’ என்ற கேள்வி மனதுக்குள் பிறக்க, அது கொடுத்த அதிர்வை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

சாதாரண நினைப்புக்கே தனக்கு இப்படி வலிக்கிறது என்றால், அனுபவித்த அவனுக்கு எப்படி இருக்கும் எனத் தோன்ற, பரிதவிப்பாய் அவனை ஏறிட்டாள். அவள் தன்னை நோக்குவது தெரிய, அலைபேசியில் இருந்து பார்வையைத் திருப்பியவன் அவளை ஏறிட்டான்.

அவள் கண்களில் இருந்த அலைப்புறுதல் புரிய, மெல்லியதாக புன்னகைத்து, தனக்கு அவள்மேல் எந்தவிதமான கோபமும் இல்லை என உணர்த்த முயன்றான்.

அவனது அந்த முயற்சி அவளை இன்னும் காயப்படுத்தியது. சொல்லப்போனால் அவனிடம் இதைச் சொல்லும் தைரியமின்றி தானே சொல்லாமல் விட்டிருந்தாள். அது அவனுக்கு தெரிய வராமலே போகட்டும் அவள் நினைக்க, விதி வேறாக இருந்ததை அவள் என்ன செய்ய முடியும்?

“அது… நேத்து…” அவள் சொல்ல முடியாமல் தயங்கி இழுக்க, ‘சொல்ல வேண்டாம்’ என்பதுபோல் தலை அசைத்தவன், டீன் ரக்ஷன் தன் அறையிலிருந்து வெளியே வருவதைப் பார்த்துவிட்டு தன் இருக்கைக்குத் திரும்பினான்.

ரக்ஷன் வருவதைப் பார்த்த அவளும் தன் வேலையைப் பார்க்கத் துவங்கினாள். அவன் தலை மறைந்தவுடன், தன் சுழல் நாற்காலியில் இருந்து திரும்பியவள், “கோபமா?” தனக்கு முதுகு காட்டி அமர்ந்திருந்தவனைப் பார்த்து முனகினாள்.

தானும் தன் இருக்கையில் இருந்து சுழன்று திரும்பியவன், “கோபமா? எதுக்கு?” அவளிடம் திருப்பிக் கேட்க, அவள் என்னவென்று சொல்வதாம்?

‘ஆம், நான் கோபமாக இருக்கிறேன்’ என சொல்லுபவனை சமாதானம் செய்யலாம், கோபமே இல்லையே எனச் சொல்பவனை என்ன செய்ய?

“எனக்கு அதில் விருப்பம் இல்லை…” அவளால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

“வேற எதில் விருப்பமாம்?” கண்களால் அவளை வம்புக்கு இழுக்க, ‘ஆமா, ஒண்ணுமே தெரியாத மாதிரி பேச வேண்டியது. நீங்களா காதலைச் சொல்லாமல் நான் எதுவும் செய்யறதா இல்லை. பார்ப்போம் யார் ஜெயிக்கறாங்கன்னு’ மனதுக்குளேயே அவனிடம் சவால் விட்டாள்.

“ம்… இன்னும் நாலு வருஷமாவது வேலை பார்க்காமல் நான் கல்யாணம் பண்ணிக்கிறதா இல்லை” அவள் சொல்ல,

“அப்போ ஸ்ட்ரெயிட்டா அறுபதாம் கல்யாணம்தான் பண்ணிப்பேன்னு சொல்லிட்டுப் போ, ஏன் சுத்தி வளைக்கிற?” சுதிர் இடைபுக, அவனை முறைத்தாள்.

“ஏண்டா மச்சான், இங்கே யாராவது உன்னைய கூப்ட்டாங்க?” சிரித்த முகமாக தீனா வினவ, அதுவே, தனக்கு இப்பொழுது அடி உறுதி என உரைக்க, சற்று கலவரமானாலும் அதை மறைத்துக் கொண்டான்.

“மே ஐ கம் இன் மச்சான்?” சுதிர் அனுமதி வேண்ட, பொங்கிய சிரிப்பை தனக்குள் மறைக்க மிகுந்த சிரமப் பட்டாள் ஜனனி.

“இல்ல, தேவைப்படும்போது நான் கூப்பிடறேன். இப்போ உனக்கு காது கேக்காது சரியா?” அவன் கேட்க பேசாமல் தன் பக்கம் திரும்பிக் கொண்டான்.

“என்னடா, நான் சொல்லிட்டே இருக்கேன், நீ பேசாமல் இருக்க?”.

“அதான் எனக்கு காது கேக்காதுன்னு சொல்லிட்டல்ல, எனக்கு கேக்கலை அதான்” அவன் சீரியசாக சொல்ல, “நீ அம்புட்டு நல்லவனாடா?” தீனா சந்தேகம் கேட்க, முகத்தை பாவமாக வைத்துக் கொண்டான் மற்றவன். “சரிடா நீ வேலையைப் பார்” தீனாவும் அதே குரலில் உரைக்க, நண்பர்கள் இருவரும் பேசியதைக் கேட்ட ஜனனிக்கு இன்னும் சிரிப்பாக இருந்தது.

“நாலு வருஷம் மட்டும் வேலை பார்த்தால் போதுமா?” தீனா விட்ட இடத்தில் இருந்து துவங்க, இதழ்களில் உறைந்த புன்னகையோடு அவனைப் பார்த்தாள்.

“அதுக்குப் பிறகு, என் புருஷர் வேலை பார்க்கச் சொன்னால் வேலை பார்ப்பேன்”.

“புருஷர்...? வரப்போறவனுக்கு இப்போவே மரியாதையைப் பாத்தியாடா?” சுதிர் அடக்க முடியாமல் வாய் விட, தீனா பார்த்த தீப் பார்வையில், “எனக்கு நானே பேசிகிட்டேன் மச்சான்? உனக்கு ஏதாவது கேட்டுச்சு? உங்களுக்கு நடுவில் எதையும் பேசிடலையே?” கலவரமாக கேட்டான்.

“இல்ல... நீ வேலையைப் பார்” தீனா தாடையைத் தேய்க்க,

“சத்தியமா மச்சான், இனிமேல் வாயே திறக்க மாட்டேன். இப்போ இருந்து நான் ஊமை, கன்ஃபாமா ஊமை” வாயை சிப் போடுவதுபோல் செய்தவன் அங்கே இருந்து எழுந்து ஓடியே போனான்.

அவன் சென்ற வேகத்தைப் பார்த்த ஜனனி, “ம்ச் பாவம் அவர், அவரை ஏன் இப்படி விரட்டி விட்டீங்க?” அவனிடம் குறை பட்டாள்.

“அந்த பாவத்தை பிறகு பாத்துக்கலாம்... நீ சொல்லு” எப்படியாவது அவள் வாயில் இருந்து தனக்கான பதிலை வாங்கிவிட முயன்றான்.

“இதில் நான் என்ன சொல்றது, அவர்தான் சொல்லணும்” அவனையே ஆழ்ந்து பார்த்தவள், தன் இரு புருவம் உயர்த்த, அதில் மொத்தமாக வீழ்ந்துதான் போனான்.

“முதல்ல கேள்வி கேட்டது நான்...” அவன் நினைவூட்ட,

“அது எக்ஸ்பெரி ஆயிடுச்சு” உன் காதலைச் சொல் என அவனை மறைமுகமாகத் தூண்டினாள்.

“ஹனி’க்கு எல்லாம் எக்ஸ்பெரி டேட்டே கிடையாது” அவன் சொல்ல, தன் தோளைக் குலுக்கிக் கொண்டாள். எப்படியும் அவன் தன்னிடம் காதலை சொல்லப் போவதில்லை என அவளுக்குப் புரிந்து போனது. முதலில் காதலைச் சொல்லிவிட்டு பிறகு ஓடி ஒளிந்தது யாராம்?’ அவளுக்குள் செல்ல சிணுங்கல்.

இது இப்படியே தொடருமே தவிர, முடிவு தெரியாது எனப் புரிந்து போக, “சரி, கேண்டீன்ல இருந்து வர ஏன் இவ்வளவு நேரம்?” அவள் பேச்சை மாற்றுவது புரிய, கொஞ்சம் சோர்ந்து போனான்.

“அவளுக்கு ஒரு சின்ன பிரச்சனை, அதான் அவகிட்டே பேசிட்டு இருந்தேன்” அவனாகவே விஷயத்துக்கு வர, கப்பென அதைப் பிடித்துக் கொண்டாள்.

“அவளுக்கு என்னவாம்? நேத்து கூட உங்ககிட்டே ரொம்ப நேரம் பேசிட்டு இருந்தா போல?” அவள் கேட்க, சட்டென அவனிடம் ஒரு அமைதி குடி கொண்டது. அவளிடம் வெளிப்பட்ட அந்த பொறாமை உணர்வில் அவன் மிகவும் கவரப்பட்டான். ஆனால் அவனது அந்த அமைதி அவளை கலவரப்படுத்தியது மட்டும் உண்மை.

“அது அவளோட பெர்சனல் ஜனனி... அதை நீ அவகிட்டேதான் கேக்கணும்” இதைச் சொல்கையில் நிச்சயம் அவனிடம் சிறிதும் கோபம் இருக்கவில்லை.

“ஏன் அதை நீங்க என்கிட்டே சொல்ல மாட்டீங்களா?” அவன் தன்னிடம் அனைத்தையும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என அவள் மனம் முரண்டியது.

“அவளோட விஷயத்தை நான் எப்படி உன்கிட்டே சொல்ல முடியும்? அது அவ்வளவு நல்லா இருக்காது” அதென்னவோ ஜெனிட்டாவின் விஷயத்தை அவளிடம் பகிர்ந்துகொள்ள அவன் மனம் ஒத்துழைக்கவில்லை. அவளது விஷயம் அங்கே யாருக்குமே தெரியாது, அப்படி இருக்கையில் அதை எப்படி அவளிடம் அவன் சொல்வான்?

“என்கிட்டே கூடவா?” நான் உனக்கு ஸ்பெஷல் இல்லையா? என அவள் குரல் அவனிடம் கெஞ்சிற்று.

“ஜானு, கேட்டது நீங்கறதால மட்டும்தான் இதையாவது சொன்னேன்” அவன் குரல் இவ்வளவு சீரியசாக ஒலித்து அவள் கேட்டதே இல்லை. அதுவும் அவனது அந்த ஜானு என்ற அழைப்பு... அவளை சமாதானம் செய்யவே அழைக்கும் அந்த பிரத்தியேக அழைப்பு, உருகிப் போனாள்.

“வேற யாராவது இதைக் கேட்டிருந்தா?” அவளுக்கு அதைத் தெரிந்தே ஆகவேண்டும்.

“கொஞ்சம் கூட யோசிக்காமல், உன் வேலை என்னவோ அதைப் பாருன்னு சொல்லியிருப்பேன்” அவன் அவ்வளவு உறுதியாகச் சொல்ல, நிச்சயம் அவன் அப்படித்தான் சொல்லியிருப்பான் என்பது புரிய அப்படியே வாயடைத்துப் போனாள்.

அதுதான் தீனா, அவனை நம்பி எவ்வளவு பெரிய ரகசியத்தை வேண்டும் என்றாலும் சொல்லலாம் என அந்த அலுவலகத்தில் இருப்பவர்கள் சொல்வது எவ்வளவு உண்மை என்பதை புரிந்து கொண்ட தருணம் அதுவாகத்தான் இருக்கும்.

இல்லையென்றாலும் அவனைப்பற்றி தெரியும் என்றாலும், தன்னிடமும் அதைக் கடை பிடிப்பான் என்பதை உணர்ந்து திகைத்துப் போனாள்.

“ஜனனி, இந்த வீக் எண்டு பப்புக்கு வா...” அவன் அழைக்க, அடுத்த அதிர்வை உள்வாங்கினாள். பொதுவாகவே அவள் பப்புக்கோ, வீக்

எண்டு பார்ட்டிக்கோ செல்வது இல்லை. யார் அழைத்தாலும், இல்லையென்றாலும் பிடிவாதமாக மறுத்து விடுவாள்.

அந்த விஷயம் இவனுக்கும் தெரியும் என்கையில், தன்னையும் இந்த வாரம் பப்புக்கு அழைக்க, நிச்சயம் ஏதாவது காரணம் இருக்கும் என்பதை உணர்ந்து கொண்டாள்.

“பப்புக்கெல்லாம் அம்மா அப்பா அலவ் பண்ண மாட்டாங்க. அது உங்களுக்கே தெரியுமே” வெகுவாக தயக்கம் காட்டினாள்.

“ம்ச், அது எனக்குத் தெரியாதா? நீ அங்கே ரொம்ப நேரமெல்லாம் இருக்கணும்னு அவசியம் இல்லை, ஜஸ்ட் கொஞ்ச நேரம் இருந்தால் போதும்” அவன் பிடிவாதமாக அழைக்க, அரை மனதாக சம்மதித்தாள்.

அடுத்து வந்த இரண்டு நாட்களும் அதே விதத்தில் கடக்க, அந்த வெள்ளிக்கிழமை மாலையை வழக்கம்போல ஆர்ப்பாட்டமாக வரவேற்றார்கள். வாரத்தின் ஐந்து நாட்களும் மூளை வேலை செய்து சூடாகிப் போயிருக்க, அதைத் தணிக்க பப்புக்கு போவது கால்சென்டர் வழக்கம், அதற்கு அவர்களது கம்பெனியும் விதிவிலக்கில்லை.

வெள்ளிக்கிழமையில் மட்டும் ஆண்கள் அனைவரும் தங்களது இரு சக்கர வாகனத்தில் வருவது வழக்கம். அன்றும் அவ்வாறே வந்திருக்க, மாலை நெருங்கவே, அலுவலகமே ஒரு கொண்டாட்ட மனநிலைக்கு உள்ளானது. அங்கே ஜெனிட்டா மட்டும் கொஞ்சம் டென்ஷனோடு அமர்ந்திருக்க, அதைப் பார்த்த தீனா,

“ஜெனிட்டா, இன்னையோட உன் பிரச்சனை எல்லாம் முடியப் போகுது. அதை நினைச்சு சந்தோஷப்படறதை விட்டு, இப்படி டென்ஷனா இருந்தால் எப்படி? நானும் ரெண்டு நாளா சொல்லிட்டுதான் இருக்கேன், இதெல்லாம் சப்பை மேட்டர், நான் கவனிச்சுக்கறேன்னு, நீதான் கேக்கவே மாட்டேங்கற” அவன் வெகு சாதாரணமாக உரைக்க, அவளால் அதை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

“தீனா, நீங்க என்னவோ ஈஸியா சொல்லிடறீங்க, அவன் போன் பண்ணி, இந்த வாரம் பப்புக்கு வந்தே ஆகணும்னு சொன்னதில் இருந்து எனக்கு

உயிர் போய் உயிர் வருது. அங்கே வச்சு என்ன கலாட்டா செய்வானோன்னு அடி வயிறெல்லாம் கலங்குது.

“வர மாட்டேன்னு சொல்லிடறேன்னு சொன்னா, நீங்கதான் கேக்க மாட்டேங்கறீங்க. எனக்கென்னவோ இந்த ஐடியா சரியாப் படலை” கலவரமாகவே பதில் கொடுத்தாள்.

“ஜெனிட்டா, நீ இப்படி பயப்படுவன்னு தெரிஞ்சுதான் நம்ம ஜனனியை கூட வரச் சொல்லியிருக்கேன். நீங்க ரெண்டு பேரும் தனியா முன்னாடி போங்க, நாங்க பின்னாடி வந்து ஜாயிண்ட் பண்ணிக்கறோம். நாங்க இருக்கும்போது நீ ஏன் கவலைப் படற?” அவன் என்னதான் தைரியம் சொன்னாலும் அவளால் தைரியமாக இருக்க முடியவில்லை.

இத்தனை நாளாக கயிறாக தெரிந்தவன், இன்று திடுமென பாம்பாக மாறி கழுத்தை இறுக்கவே மூச்சுவிட முடியாமல் திணறிக் கொண்டிருந்தாள். இரண்டு நாட்களுக்கு முன்னர் அவளது எண்ணுக்கு அழைப்பு விடுத்தவன், அவளை நேரில், அதுவும் தனிமையில் சந்தித்தாலே ஆயிற்று எனச் சொல்ல முதலில் முடியாது என மறுத்துப் பார்த்தாள்.

அவனோ விடாமல் அழைத்து தொல்லை செய்ய, அதையும் அன்றே தீனாவிடமே வந்து சொன்னாள். அவனும் முதலில் கண்டுகொள்ளாமல் விடத்தான் சொன்னான். அவனது அலைபேசி எண்ணை ப்ளாக் செய்ய, அவனோ புதுப்புது எண்களில் இருந்து அழைத்து அவளை தொல்லை செய்யத் துவங்கி இருந்தான்.

அவள் நேரில் வர மறுத்தால், அவளை சந்திக்க அவளது அலுவலகத்துக்கே வந்து நிற்பேன் எனச் சொல்ல பயந்து போனாள். அவன் ஏதும் கிறுக்குத்தனம் செய்து வைக்கும் முன்னர், அவனை ஏதாவது செய்யலாம் என தீனா சொல்லவே அரைகுறை மனதோடு சம்மதித்தாள்.

“தீனா அவன் என்னை எதுக்காக வரச் சொல்லியிருப்பான்னு ஏதாவது ஐடியா இருக்கா?” நகம் கடித்தவாறே அவள் கேட்க, அவளைப் பார்க்கவே அவனுக்கு பரிதாபமாக இருந்தது.

“அவன் லெவலுக்கு…” சற்று இழுத்து யோசித்தவன், “அனேகமா உன் காலிலேயே விழுவான்னு நினைக்கறேன். அதுக்கு மேலே அவன்

எதையாவது செய்யிறதா இருந்தால், அந்த நேரம்தான் யோசிப்பான். ஏன்னா மாப்பிங் செய்யதுக்கு வேண்டியாவது உன் போட்டோ அவனுக்கு வேணுமே” அவன் அசால்ட்டாக சொல்ல பயந்தே போனாள்.

“என்ன தீனா இது? இப்படி பயம் காட்டறீங்களே. சரி, என்னோட வரணும்னு சொன்னதுக்கு ஜனனி எதுவும் சொல்லலையா? அவ பப்புக்கெல்லாம் வர மாட்டாளே” அவனிடமே சந்தேகம் கேட்டாள்.

“உன்கூட அவ வர்றான்னு நான் சொல்லவே இல்லையே. அவளையும் வரச் சொல்லியிருக்கேன் அவ்வளவுதான். அவ உன் ப்ரண்ட் தானே, நீயே அவகிட்டே பேசிக்கோ”.

“அவகிட்டே நான் என்னன்னு சொல்றதாம்?”.

“அது உன் இஷ்டம்... அவகிட்டே நான் எதையும் சொல்லலை. சரி ரொம்ப யோசிச்சு மூளையைப் புண்ணாக்காமல் கிளம்பு, நானும் அங்கே வர்றேன்” அவளிடமிருந்து விலகிச் சென்றான். அவன் செல்லவே, ஜெனிட்டா தோழியைத் தேடிச் சென்றாள்.

பொதுவாகவே இவர்களது கேங், ஜனனி, ஜெனிட்டா, மாதும்மை, நுஹா என யாருமே பப்புக்குச் செல்லும் வழக்கம் இல்லை என்பதால், அவர்கள் யாரும் அதைப்பற்றி பேசுவதே இல்லை. ஜனனியும் பப்புக்கு வருவதாக இருக்கவே, வீட்டுக்குச் செல்லாமல் அங்கேயே இருந்தாள்.

ஜெனிட்டா தன்னைத் தேடி வரவே, “ஜெனி, நீ இன்னுமா வீட்டுக்குப் போகலை?” ஒருவேளை இவளும் பப்புக்கு வருகிறாளோ என்ற சந்தேகம் அவளுக்கு எழுந்தது.

“ஜனனி... தீனா, எனக்கு வேண்டிதான் உன்னையும் இன்னைக்கு பப்புக்கு வரச் சொல்லியிருக்கார். அது ஏன்னா...” இழுத்தவள், தன்னை ஒருவன் பின்தொடர்ந்தது துவங்கி, தீனா உரைத்தவரை அனைத்தையும் சொல்லி, இப்போதைய பிரச்சனையையும் சொல்ல, அமைதியாக கேட்டுக் கொண்டாள்.

“ரியல்லி சாரி... எனக்கு வேண்டி உன்னையும் கஷ்டப்படுத்த வேண்டியதாப் போச்சு” சங்கடமாக உரைத்தாள்.

“ஜெனி, நீ என்கிட்டே உதைதான் வாங்கப் போற. ப்ரண்டுன்னு இருந்துட்டு இதைக் கூடச் செய்யலன்னா எப்படி? அதான் தீனா பாத்துக்கறேன்னு சொல்லியிருக்காரே, அப்போ கவலையே இல்லை விடு” அவளைத் தேற்றினாள். கூடவே, தீனாவின் செய்கையை எண்ணி சிலிர்த்துப் போனாள்.

ஜெனிட்டாவின் விஷயத்தை அவனாகச் சொல்லவும் இல்லை, அதே நேரம் ஜெனிட்டாவின் வாயாலேயே விஷயத்தை தனக்கு தெரியப்படுத்திவிட்டான். இருவரும் அந்த பப்புக்கு உள்ளே செல்கையில் நேரம் ஏழு முப்பதைக் காட்டியது.

“ஜனனி, நாம உள்ளே போகலாமா, இல்லன்னா அவங்க வர்ற வரைக்கும் இங்கேயே வெயிட் பண்ணுவோமா?”.

“நம்மளை முன்னாடி வரச் சொன்னதுக்கு ஏதாவது காரணம் இல்லாமல் இருக்காது ஜெனி, சோ... நாம உள்ளே போகலாம் வா”.

வண்டியை வெளியே  நிறுத்திவிட்டு அவர்கள் அந்த இரவு விடுதிக்குள் நுழைய, வெளியே அமைதியாக இருக்கும் அந்த கட்டிடத்துக்கு எதிர் பதமாக உள்ளே இசை செவிப்பறையைக் கிழித்தது. மங்கலான ஒளியும், பளீர் வெளிச்சமுமாக அந்த இடமே கலந்து கட்ட, அங்கே இருந்த கூட்டத்தைப் பார்த்து திகைத்துப் போனார்கள்.

‘இவ்வளவு பெண்கள் இந்த பப்புக்கு வருவார்களா என்ன?’ஆச்சரியமாக விழி விரித்தனர். அவர்களது உடையும், அங்கே இருந்த மற்ற பெண்களின் உடையும் கொஞ்சம் கூட ஒத்துப் போகாமல் இருந்தது. ஜனனியாவது ஒரு டைட்சும், டிஷார்ட்ட்டுமாக இருக்க, ஜெனிட்டாவோ ஒரு சுடிதாரில், அந்த இடத்துக்கே ஒட்டாமல் தனியாகத் தெரிந்தாள்.

“ஜனனி, நாமதான் முழுசா உடுத்தியிருக்கோம் போல?” அவள் காதுக்குள் கிசுகிசுக்க,

“நாம அவங்களை வித்தியாசமா பாக்குறது போய், அவங்க நம்மளை வித்தியாசமா பாக்கறாங்க. வா உள்ளே போகலாம்” ஜெனிட்டாவை இழுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தாள்.

அப்பொழுது இசை ரொம்பவே மிதமாக இருக்க, ஒரு கும்பல், கூட்டமாக நின்று ஆடிக் கொண்டிருந்தார்கள். ஆண் பெண் பேதமின்றி அனைவரும் ஆட, அந்த கும்பலுக்குள் நுழைந்து, செட்டாக போட்டிருந்த ஒருகுஷன் செட்டை தேடிப்போய் அமர்ந்தார்கள்.

அவர்கள் அமர்ந்த சற்று நேரத்திலேயே, ஜெனிட்டாவைத் தொடரும் அவன், அவள் முன்னால் பிரசன்னமாக, ஜனனி அவனை ஒரு பார்வையும், ஜெனிட்டாவை மற்றொரு பார்வையுமாக பார்த்தாள்.

வந்தவனோ ஜனனியை கண்டுகொள்ளாமல், "ஹாய் ஜெனி, உன்னை இப்படி ஒரு இடத்தில் வைத்து ப்ரப்போஸ் பண்ணுவேன்னு நினைக்கவே இல்லை" சொன்னவன் தன் முதுகின் பின்னால் மறைத்து வைத்திருந்த பூங்கொத்தை எடுத்து நீட்ட, அவளோ அதை வாங்கத் தயாராக இருக்கவில்லை.

"ப்ரப்போஸ் பண்ண நினைக்கிறவன் வரச் சொல்ற இடமா இது?" ஜனனி கோபமாக இரைந்தாள். அங்கே இருக்கும் சத்தத்தில் அவள் இரைந்து கத்தியது கூட மெதுவாகவே கேட்டது.

"நீ கேக்குறது சரிதான்… ஆனா, வேற இடமா இருந்தா சுத்தி இருக்குற எல்லாம் வேடிக்கை பாப்பாங்க, வீணா சீன் கிரியேட் ஆகும். அதுவே இங்கன்னா பார், சுத்தி இத்தனைபேர் இருந்தாலும், ஒருத்தனும் என்னன்னு கேக்க வர மாட்டான்" அவன் சொல்ல, இவன் அவ்வளவு அப்பாவியெல்லாம் இல்லை என ஜெனிட்டா எண்ணிக் கொண்டாள்.

"இங்கே வர மாட்டேன்னு சொல்லியிருந்தால், நேரா ஆபீஸ் வந்து நின்னிருப்பேன். உன்னை என்னால் மிஸ் செய்ய முடியாது ஜெனி. என் காதலைச் சொல்ல, நிரூபிக்க நீ ஒரு வாய்ப்பு கொடுத்துப் பார். உனக்கு வேண்டி என் உயிரையும் கொடுப்பேன்" அவன் பேச, 'இவன் பாம்பா, பழுதா?' என இரு பெண்களுமே ஒன்றுபோல் யோசித்தார்கள்.

'இவன் ஏதாவது வம்பு செய்தால் என்ன செய்வது?' என அவர்கள் யோசிக்க, "இங்கே எவனும் கேக்க மாட்டான்னு நீங்களா எப்படி முடிவு பண்ணீங்க சார்?" அவனது தோளைத் தட்டி தீனா கேட்க, இரு

பெண்களும் நிம்மதியாக மூச்சுவிட்டால், அவனோ திகைத்து திரும்பினான்.

அவனது முதல் திட்டமே, விஷயம் மற்றவர்களுக்கு எல்லாம் வெளியே தெரியும் முன்னர், அவளை தன் வழிக்கு கொண்டு வந்து, ரகசிய திருமணம் முடித்தாக வேண்டும் என்பதுதான், அதுவே இப்பொழுது ஆட்டம் காண, திருதிருத்தான்.

“ஜெனிட்டா, எங்களை எல்லாம் கொஞ்சம் இன்ட்ரோ கொடுக்கறது” அவன் தோளில் அழுத்தமாக கரத்தை போட்டு அவன் கேட்க, “யார்ரா நீ?” பட்டென அவன் கரத்தை தட்டி விட்டான்.

“அட, மாப்பிள்ளைக்கு கோவத்தைப் பாரேன். உங்க ப்ரப்போசலை அவ ஏத்துக்கலை, ஏத்துக்கவும் போறதில்லை, அதுக்கு விடப் போவதும் இல்லை. இப்போ என்ன செய்யிறதா இருக்க?” அவனை வலுக்கட்டாயமாக தோளில் கைபோட்டு இழுத்துக் கொண்டு, அங்கே இருந்த ஒரு மூலையை நோக்கிச் சென்றார்கள்.

அவர்கள் அவ்வாறு செல்கையிலேயே அவனது நண்பர்கள் நால்வரும் அவர்களைச் சூழ, அங்கே பெரும் கைகலப்பே உருவாகும் சூழல் உருவானது.

## பகுதி – 7.

பப்புக்குள் பொதுவாகவே ஆங்காங்கே பாடிகாட்ஸ் இருப்பார்கள். சிறிய பிரச்சனைக்கு எல்லாம் ஒதுங்கியே இருந்தாலும், நிலைமை கைமீறிச் செல்லும் வேளையில் தயங்காமல் தலையிடுவார்கள். எனவேதான் தீனா அவனை ஒரு ஓரமாக இழுத்துச் சென்றான்.

“தீனா, வேண்டாம்... அவனை விடுங்க...” ஜனனிதான் பதறினாள். ஏதாவது கைகலப்பு, அடிதடி என வந்தால், அவனுக்கு ஏதாவது ஆகிவிடக் கூடாதே என்ற கவலை அவளுக்கு, அதை அவனும் நன்கு புரிந்து கொண்டான்.

“ஹேய் கூல், பேசத்தாம்மா போறேன், அடிக்கவெல்லாம் இல்லை” அவன் சொல்ல, மற்றவனது நண்பர்கள் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள்.

மற்றவனை சுவரின் ஓரம் சாய்த்தவன், “இங்கே பாருங்க சார், ஜெனிட்டாவுக்கு வீட்டில் மாப்பிள்ளை பாத்து பிக்ஸ் பண்ணிட்டாங்க. நீங்க வீணா உங்க நேரத்தை செலவு பண்றீங்க. அது மட்டுமில்லாமல், விருப்பமில்லாத பொண்ணை தொல்லை பண்றது ரொம்ப பெரிய தப்பு.

“இப்போ நான் நல்ல விதமா வாயால் சொல்லும்போதே கேட்டீங்கன்னா உங்களுக்கும், உங்கள் உடம்புக்கும் ரொம்ப நல்லது. இல்ல, நான் அவளை விடமாட்டேன், என் காதல் தேங்காய் மட்டை காதல்... அதாவது தெய்வீக காதல், அது புடலங்கா மாதிரின்னு கதை விட்ட...

“சத்தியமா நான் ரொம்ப கடுப்பாயிருவேன். உன்னைப்பத்தி தெரிஞ்ச உடனேயே உன்னைத் தேடி வந்து வெளுத்திருக்கணும், தேவையில்லாமல் அவளோட பேர் அடிபட வேண்டாமேன்னு பொறுமையா இருந்தேன்.

“இல்ல, நீ வேலியில் போற ஓணானை எடுத்து வேட்டிக்குள்ளதான் விட்டுப்பன்னா, என்னால் எதுவும் செய்ய முடியாது...” அவன் சட்டையை நீவியவாறே அவனை நெருங்கி, மிகவும் பொறுமையாக, அதே நேரம் மிகவும் அழுத்தமாக உரைக்க, மற்றவன் எச்சில் விழுங்கிக் கொண்டான்.

இப்படி பெண்ணை திட்டமிட்டு வீழ்த்தும் ஆண்களுக்கு எப்பொழுதும் ஒரு குணம் இருக்கும், அது தங்களது முகம் வெளியே தெரியாத வரைக்கும் மட்டுமே தைரியமாக காட்டிக் கொள்வார்கள். அதுவும் தன் விஷயம் மூன்றாம் மனிதருக்குத் தெரிவதை அவர்கள் விரும்புவதே கிடையாது.

ஆனால் இங்கே ஜெனிட்டா ஒரு கும்பலையே கூட்டி வந்து நிற்க, தனக்கு முன்னால் நின்றவர்களைப் பார்த்து சற்று திணறிப் போனான். ஆனாலும் தன் நண்பர்கள் இருக்கும் தைரியத்தில், “ஹல்லோ, அதைச் சொல்ல நீ யார்? நான் அவகிட்டே நேரா பேசிக்கறேன் நீ விலகு” அவனை விலக்க முயன்றான்.

“மச்சான்ஸ்... இவனுக்கு அகிம்சை முறை ஒத்துவராது போலடா, கொஞ்சம் நம்ம கைவரிசையை காட்டினால்தான் ஆச்சு. ஜெனி, நீ உங்க அப்பாவை வரச் சொல்லு, இங்கேயே நாம முடிச்சுடலாம்” தீனா விலகி

நிற்க, மற்றவனின் நண்பர்கள் மூவரும் அவனுக்கு துணைக்கு வந்து நின்றார்கள்.

“ஹல்லோ, லவ் பண்றது என்ன அவ்வளவு பெரிய தப்பா? ரொம்ப பேசற? வா, ஒத்தைக்கு ஒத்தை மோதிப் பாக்கலாம்” அவர்கள் சவால் விட்டார்கள்.

“சுதிர், சபரி, காதர்... தீனா ஒவ்வொருவராக அழைக்க, “நாங்க இங்கதாண்டா இருக்கோம்” அவர்கள் மொத்தமாக குரல் கொடுத்தார்கள்.

“அதெப்படிடா, நான் கூப்பிட முன்னாடி தயாரா இருக்கீங்க?” தீனா வியந்தான்.

“நாங்க இப்போ வரலன்னா நீ எங்களை அடிப்பியே அதான்” ஒருத்தன் குரல் கொடுக்க,

மற்றவனோ, “எப்படியும் அடி வாங்குறதுன்னு முடிவாகிப் போச்சு, அதான் நாங்களே வந்துட்டோம்” குண்டன் சபரி முனகினான்.

“டேய் குண்டா” தீனா பல்லைக் கடித்தான்.

“அவனுங்களாவது கொஞ்சம் பாவம் பாப்பானுங்க, நீ அதுவும் பாக்க மாட்டியே” காதர் கதறும் குரலில் உரைக்க, “த்தூ... நீங்கல்லாம் ஆம்பளைங்களாடா?” கடுப்பானான்.

“நாங்க எப்போடா அப்படிச் சொன்னோம்?” கொஞ்சம்கூட கூச்சமே படாமல் காதர் இடையிட, அவனை ஆனமட்டும் முறைத்தான்.

“குண்டா... நீ வேகமா மூச்சு விட்டாலே ரெண்டுபேர் பறந்துடுவாங்க, அப்படி இருக்கும்போது, அவனுங்களை இழுத்துப் போட்டு ஏறி மிதிக்க முடியலன்னா கூட, உன் அண்டா வாயைத் தொறந்து வாந்தியாவது எடுடா” இருக்கும் சூழல் அவ்வளவு சாதகமில்லாமல் தோன்றவே காதர் கதறினான்.

“சரக்கே வாங்கிக் கொடுக்காமல் வாந்தி எடுன்னா எப்படிடா எடுக்குறது? முன்னெல்லாம் சரக்கு வாங்கிக் கொடுத்துட்டுதான் அடி வாங்க வைப்பீங்க, இப்போ என்னன்னா ஸ்ட்ரெயிட்டா அடின்னா எப்படிடா? அடி வாங்குனா வலிக்கும்டா” தன் உருவம் மறந்து கெஞ்சினான்.

“அடிவாங்குனா வலிக்கும்னு’ ஒரு மிகப்பெரிய உண்மையை கண்டுபுடிச்சு சொன்னதுக்காகவே உனக்கு ஆஸ்க்கார் அவார்ட் கொடுக்கலாம்டா” காதர் உரைக்க, அனைவருமே அவனைப் பார்த்து முறைத்தார்கள்.

“ஜனனி, ஜெனிட்டா… நீங்க ரெண்டுபேரும் கிளம்புங்க, நாங்க பாத்துக்கறோம்” தீனா அவர்களை அனுப்ப முயன்றான்.

“மச்சான், அவன் ஓட ரெடியாயிட்டான் போலடா, எதுக்கும் கொஞ்சம் சூதானமா இருந்துக்குவோம். இல்லன்னா நம்மளை மட்டும் தனியா அடிவாங்க விட்டுட்டு இவன் எஸ் ஆகிடுவான்” சுதிர், காதரின் காதைக் கடித்தான்.

“ஆமாடா மச்சான், சரியா சொன்ன” அவர்கள் தங்களுக்குள் பேச, அவர்கள் என்ன பேசிக் கொண்டிருப்பார்கள் என்பதை மிகச் சரியாக உணர்ந்து கொண்டான்.

இவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டிருக்கையிலேயே மற்றவனது நண்பர்கள் இவர்கள்மேல் பாய, அடுத்த சில நிமிடங்களில் அது பெரிய கைகலப்பில் கொண்டுபோய் முடிய, பப் பாடிகார்ட்ஸ் அங்கே விரைந்தார்கள்.

இவர்கள் அனைவரையும் தூக்கி வெளியே போடும் நேரம், அங்கே ஒரு போலீஸ் ஜீப் வந்து நிற்க, அதில் இருந்து இறங்கிய இன்ஸ்பெக்டர் அனைவரையும் கொத்தாக பற்றிக் கொண்டார். அனைவருமே ஆளுக்கு ஒன்றை பேச, “ஷ்… ஷட் அப்… எல்லாரும் இப்படி வரிசையா வந்து நில்லுங்க” அவர் குரல் கொடுக்கவே அனைவருமே அடங்கிப் போனார்கள்.

தீனா சொன்னதால் வெளியே வந்துவிட்ட இரு பெண்களும், அங்கே போவதா வேண்டாமா? என ஒரு நொடி சிந்தித்தவர்கள் அடுத்த நிமிடம் அங்கே விரைந்தார்கள்.

“சார், சார், இவங்க மேல எல்லாம் தப்பே இல்லை… இதோ இவங்கதான் எங்ககிட்டே வம்பு பண்ணாங்க… பிளீஸ் இவங்களை எல்லாம் விட்டுடுங்க” ஜனனி அவரிடம் கெஞ்சினாள்.

அந்த இன்ஸ்பெக்ட்டருக்கும் தங்கள் வயதுதான் இருக்கும் என்பது அவனைப் பார்த்தவுடன் அவர்களுக்குத் தெரிந்தது. கூடவே கொஞ்சம் நியாயமாகவும் நடந்துகொள்வான் எனப் பார்க்கும்போதே புரியவே, ஜனனி முன்னால் வந்தாள்.

“உங்களை மாதிரிப் பொண்ணுங்க, பப்புக்கு வர்றதே தப்பு, இதில் இவன் வம்பு பண்ணான், அவன் வம்பு பண்ணான்னு சொல்லிக்கிட்டு இருக்கீங்க?” இன்ஸ்பெக்ட்டர் தன் குளிர் கண்ணாடியை கழட்டி ஜீப்பின் மேலே வைத்தான்.

“சார், நீங்க என்ன அவங்களுக்கு சப்போட் பண்றீங்க?” அவளால் அந்த இன்ஸ்பெக்ட்டர் பேசியதை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

“நான் யாருக்கும் சப்போட் பண்ணலை, எதார்த்தத்தை சொன்னேன். இப்போ நீங்க ரெண்டுபேரும் இங்கே இல்லாமல் போயிருந்தால் இந்த பிரச்சனையே வந்திருக்காது தானே?” அவன் கேட்க, அவளுக்கு சுறுசுறுவென கோபம் ஏறியது.

“சார், நீங்க தேவையில்லாமல் பேசிட்டு இருக்கீங்க” தீனா இடையிட,

“தீனா நீங்க கொஞ்சம் பேசாமல் இருங்க, எல்லாத்தையும் நான் பேசிக்கறேன்” எங்கே அவன் பேசினால் ஏதும் தவறாகப் போய்விடுமோ என அஞ்சினாள்.

“மச்சான்… இவன் நமக்கு மொத்தமா சமாதி கட்டப் பாக்குறான்டா. அந்த பொண்ணு ஏதோ நம்மளை காப்பாத்தப் பாக்குது, இவன் மொத்தமா சங்கு ஊதப் பாக்கறான் பார்” அவனது நண்பர்கள் தங்களுக்குள் பேச, அவர்களை முறைத்தான்.

“சார், நீங்க நினைக்கற மாதிரி இல்லை… இதோ நிக்கறானே இவன் என்னை விடாமல் டார்ச்சர் பண்ணி இங்கே வர வைத்து வம்பு பண்ணப் பாத்தான். என் ப்ரண்ட்ஸ் இதை தட்டிக் கேக்க வந்ததில், இவ்வளவு பெரிய பிரச்சனை ஆயிடுச்சு” ஜெனிட்டா விஷயத்தை போட்டு உடைக்க, மற்றவன் வெலவெலத்துப் போனான்.

“சார், இந்த பொண்ணை யாருன்னே எனக்குத் தெரியாது சார். மாட்டிகிட்டே உடனே சும்மா பொய் சொல்லுது” கத்தினான். பெண் பிரச்சனையில் ஜெயிலுக்குச் செல்ல அவன் தயாராக இருக்கவில்லை. அதைவிட, விஷயம் நாளுக்குநாள் பெரிதாகிக் கொண்டிருப்பதை அவன் விரும்பவில்லை.

“இவன்தான்சார் பொய் சொல்றான்... இங்கே பாருங்க என்னோட போன், அவன் எத்தனை கால் பண்ணியிருக்கான்னு நீங்களே செக் பண்ணுங்க, அவன் போனை வாங்கிப் பாருங்க” அவள் சொல்ல, திருடனுக்கு தேள் கொட்டிய உணர்வில் விழித்தான்.

இன்ஸ்பெக்ட்டர் அவனிடம் அலைபேசியைக் கேட்க, “இல்ல சார், வேண்டாம் சார், என்கிட்டே போன்னே கிடையாது சார்” ஜகா வாங்க முயன்றான். ஆனால், இன்ஸ்பெக்ட்டர் தன் கையில் இருந்த ஜெனிட்டாவின் அலைபேசியில் இருந்து அவனுக்கு அழைக்க, அவனது பேண்ட் பாக்கெட்டில் இருந்த அலைபேசி இசைத்து அவனைக் காட்டிக் கொடுத்தது.

அவன் பிடிபட்ட உணர்வில் விழிக்க, அவனது அலைபேசியை எடுத்துப் பார்த்தால், ப்ரோஜெக்ட் நம்பர் ஒன் என அவனது அலைபேசி ஒளிர, அதை அவனுக்கு முன்பாக காட்டினான் இன்ஸ்பெக்ட்டர். அதைப் பார்த்தவன் வியர்த்து வழிந்தான்.

அடுத்த நிமிடம் இன்ஸ்பெக்ட்டரின் கரம் இடியென அவன் கன்னத்தில் இறங்க, தூரப்போய் விழுந்தான். அவனது நண்பர்களும் வெலவெலத்துப் போய் பார்க்க, “501 இவனுங்க எல்லாத்தையும் ஜீப்புக்குள் ஏத்துங்க. ஸ்டேஷன் கூட்டி போய் லாடம் கட்டுவோம், அப்போதான் சரிப்படுவாங்க” அவன் கத்த, போலீஸ் அவர்களை ஜீப்புக்குள் ஏற்ற முயன்றார்கள்.

“சார், சாரி சார்... இனிமேல் இப்படி பண்ண மாட்டேன் சார், எங்களை விட்டுடுங்க சார்” அவர்கள் கெஞ்ச, அதை இன்ஸ்பெக்ட்டர் கொஞ்சம் கூட கண்டுகொள்ளவே இல்லை.

“ஏட்டையா… நீங்க கிளம்புங்க… நான் பிறகு வர்றேன்” அவர்கள் கெஞ்சியதை எல்லாம் அவன் கண்டுகொள்ளவே இல்லை. ஜீப் கிளம்பி கண்ணை விட்டு மறையும் வரைக்கும் பார்த்துக் கொண்டிருந்தவன், அது சென்று மறையவே,

“டேய் மச்சான்… எப்படி என் பெர்பார்மன்ஸ்?” தீனாவை தாவி அணைத்துக் கொள்ள, மற்றவர்கள் விழித்தார்கள்.

அவர்கள் அனைவரும் விழிப்பதைப் பார்த்த தீனா, “இவன் வேற யாரும் இல்லடா, என்னோட ஸ்கூல் மேட், டிப்பார்ட்மென்ட் எக்ஸாம் எழுதி எஸ்ஐ ஆயிட்டான். நானே இவனை ஒரு வாரத்துக்கு முன்னாடிதான் பாத்தேன்.

“நம்ம ஜெனிட்டாவோட விஷயத்தை சொல்லி ஹெல்ப் கேட்டேன், மச்சான் சொன்ன ஐடியாதான் இதெல்லாம்” தீனா அசால்ட்டாக சொல்ல, நண்பர்கள் அனைவரும் கொலைவெறியில் முறைத்தார்கள். கூடவே மொத்தமாக அவன்மேல் பாய, அவர்களிடமிருந்து தப்பிக்க, ஓடத் துவங்கினான்.

அதைப் பார்த்த ஜெனிட்டாவும், ஜனனியும் கூட அவர்களோடு சேர்ந்து அவனை மொத்த, அந்த இடமே கலாட்டாவால் நிறைந்தது. அவர்களிடமிருந்து அடிகளை பெற்றுக் கொண்டவன், போலியாக அலற, அதையெல்லாம் அவர்கள் கண்டுகொள்ளவே இல்லை.

ஒரு வழியாக அவர்கள் அடித்து ஓய, “எனாஃப், இதுக்கு மேலே ஒரு அடி விழுந்தாலும் தீனா செத்துடுவான்” வடிவேல் குரலில் உரைக்க, அனைவருமே அப்படியே தரையில் அமர்ந்து விட்டார்கள்.

“தீனா, எங்ககிட்டே முதலிலேயே சொல்லியிருக்கலாமே, எவ்வளவு டென்ஷன், பயம், இதெல்லாம் இல்லாமல் இருந்திருக்கும்” ‘உப்…’ என மூச்சு விட்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

“அதனால்தான் சொல்லலை… எல்லாம் இயற்கையா இருக்க வேண்டாமா அதான். ஆனாலும் மச்சான் பெர்பார்மென்ஸ்க்கு முன்னால் நீங்க எல்லாம் கால் தூசிதான்” இன்ஸ்பெக்ட்டர் நண்பனை சுட்டிக் காட்ட, அவன் தம்ப்ஸ் அப் கட்டினான்.

“ஓ காட்... யூ ஆர் எ மாஸ்டர் பீஸ். உன்னால் மட்டும் எப்படி முடியுது? பட்ரியலி தேங்க் யூ...” ஜெனிட்டா உணர்ந்து உரைக்க, அவளைப் பார்த்து மென்மையாக புன்னகைத்தான்.

அவனை நெருங்கி வந்த ஜனனி, அவன் கரத்தை அழுத்தமாக பற்றிக் கொள்ள, வார்த்தைகள் பேசாத பாஷையை, நன்றியை அது சொல்ல, அவளைப் பார்த்து இமை சிமிட்டினான்.

“மச்சான், அவங்களை கொஞ்சம் நல்லபடியா கவனிச்சு, மிரட்டி அனுப்புடா. இனிமேல் அவனுங்க இவ வழிக்கே வரக் கூடாது”.

“இதை நீ எனக்கு சொல்லணுமா என்ன? அதையெல்லாம் நான் சரியா கவனிச்சுக்கறேன். நீ கவலையே படாதே”.

“ஜெனிட்டா நல்லா கேட்டுக்கோ, இனிமேல் அவனோட தொல்லை இல்லாமல் நீ நிம்மதியா இருக்கலாம். சரி இப்போ ரொம்ப நேரமாச்சு, நீங்க கிளம்புங்க, நாங்களும் அப்படியே...” இழுத்தவன் நண்பர்களின் முகம் பார்க்க, அவர்களோ அவன் முகத்தையே பரிதாபமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

“மச்சான், அவனுங்க கிட்டே அடி வாங்கினதுக்காவது ரெண்டு பீர் சாப்ட்டே ஆகணும்டா. ஜெனிட்டா, இன்னைக்கு உன்னோட ட்ரீட் தான். ஒரு அஞ்சாயிரம் ரூபா கொடு” காதர் அவளிடம் கேட்க, அவளும் மறுக்காமல் எடுத்துக் கொடுத்தாள்.

ஜனனி அவனை மறுப்பாக பார்க்க, ‘பிளீஸ்...’ அவனது பார்வை அவளிடம் கெஞ்சிற்று.

‘ஹாட் எல்லாம் அலவ்ட் இல்லை...’ பார்வையால் அவள் மறுக்க, ‘இன்னைக்கு மட்டும்...’ பார்வையால் மீண்டுமாக கெஞ்சியவன், இன்ஸ்பெக்ட்டர் நண்பனை சுட்டிக் காட்டினான்.

‘எப்படியோ போங்க...’ அவள் முகம் திருப்பிக் கொள்ள, அதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

நண்பர்களின் கவனம் ஜெனிட்டாவிடம் பணம் வாங்குவதில் இருக்க, இன்ஸ்பெக்ட்டர் நண்பன் பலராமன் தன் அலைபேசியில் கவனமாக

இருக்கவே, தன் அருகில் இருந்து எழுந்து செல்ல முயன்ற அவளது கரம் பற்றி தடுத்தான்.

நிச்சயம் அவள் இதை எதிர்பார்க்கவே இல்லை. அவன் இதுவரைக்கும் அவளை சில நேரங்களில் தொட்டுப் பேசியிருக்கிறான், இல்லையா தன் அருகே நெருங்கி அமர்ந்து இருக்கிறான் அதற்கு மேலே சென்றதே இல்லை.

அப்படி இருக்கையில் அவன் தன் கரம் பற்றி தடுக்க, கேள்வியாக அவன் முகம் நோக்கினாள். “ஓகே சொல்லிட்டு போ...” பற்றிய அவள் கரத்தை விட மறுத்தான்.

“இப்போ நான் வேண்டாம்னு சொன்னால் குடிக்க மாட்டீங்களா?” சிறு கோபமாக கேட்டாள்.

“நீ வேண்டாம்னு சொன்னால் கண்டிப்பா குடிக்க மாட்டேன்” அவ்வளவு உண்மையாக சீரியசாக சொல்ல, ஒரு நொடி மூச்சு விடவும் மறந்தாள்.

“சொல்லு...” அவள் கரத்தை அழுத்தினான். அவளது பார்வை அவன் பற்றியிருந்த கரத்தின்மீது பாய, அதைப் பார்த்தாலும், ‘நான் தெரிந்தேதான் உன் கரத்தை பற்றியிருக்கிறேன்’ என்பதுபோல் அவள் கரத்தை விட மறுத்தான்.

‘ரொம்ப தைரியம்தான்...’ மனதுக்குள் எண்ணியவள், “இன்னைக்கு ஒரு நாள் ஓகே... போய் என்ஜாய் பண்ணுங்க” அவள் அனுமதி வழங்கவே, “தேங்க்ஸ் ஜானு...” உரைத்தவன், தன்னை மீறி ஒரு நொடி அவளை அழுத்தமாக அணைத்து விடுவித்தான்.

அவன் ஆர்ப்பாட்டமாக நண்பர்களோடு சேர்ந்து இணைந்துகொள்ள, அவன் தன்னை அணைத்த அதிர்வில் இருந்து விடுபட முடியாமல் அவள்தான் திணறி திண்டாடிப்போய் நின்றிருந்தாள். தீனாவை திரும்பிப் பார்க்க, அவன் தன் நண்பர்களோடு ஏதோ வாக்குவாதத்தில் இறங்கியிருப்பதைப் பார்த்தவள்,

‘என்னை அணைத்தது அவருக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லையா?’ விடை தெரியாத வினாவோடு குழம்பிப்போய் நின்றிருந்தாள்.

ஜனனியையும், ஜெனிட்டாவையும் வீட்டுக்கு அனுப்பி வைத்தவர்கள், மீண்டும் பப்புக்குள் செல்ல, அவர்களது புது இன்ஸ்பெக்டர் நண்பனும் அவர்களோடு இணைந்து கொண்டான். ஆண்கள் அனைவருமே நொடியில் நண்பர்களாகி விடும் வித்தை எப்படித்தான் அரங்கேறுமோ?

“டேய் மச்சான்ஸ், இன்னைக்கு விடியிற வரை சரக்கடிக்கிறோம். அவன் நம்மளை வீட்டுக்கு போகச் சொன்னா கூட போகக் கூடாது” தீனா சந்தோஷமாக குரல் கொடுத்தவாறு உள்ளே நடக்க, அவனது நண்பர்கள் அனைவருமே ஷாக்கடித்த உணர்வில் அப்படியே நின்றுவிட்டார்கள்.

“என்னடா இவன் இப்படிச் சொல்றான்? அப்போ நாம இன்னைக்கு தண்ணியடிக்க முடியாதா?” சபரி கவலையாக கேட்க, மற்றவர்களின் முகங்களும் அதையே பிரதிபலித்தது.

அதைப் பார்த்த இன்ஸ்பெக்டர் பலராமன், “என்ன ஆச்சு? ஏன் எல்லாரும் இப்படி ஷாக்காகி நின்னுட்டீங்க?” அவர்களை உலுக்க, அவனை எல்லோரும் வித்தியாசமாகப் பார்த்தார்கள்.

பலராமன் அதற்குள்ளாகவே தன் இன்ஸ்பெக்டர் உடையை மாற்றிவிட்டு, சாதாரண ஒரு பேண்ட் ஷர்ட்டுக்கு மாறியிருந்தான். ஆனாலும் அவனது முடிவெட்டு, அவன் காவல்த்துறையைச் சார்ந்தவன் என்பதை மற்றவர்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டியது.

“என்ன பாஸ் இப்படிக் கேக்கறீங்க? இவன் முழுசா தண்ணியடிக்கிற வரைக்கும் இவனோட நீங்க இருந்தது இல்லையா?”.

“நான் இவனோட ஸ்கூல்ல தான் படித்தேன். பிறகு இவன் இன்ஜினியரின் போய்ட்டான், நான் ஆட்ஸ் காலேஜ் போனேன், அப்பப்போ பாத்துப்போம், பேசிப்போம், மற்றபடி இந்த அளவுக்கெல்லாம் போனதில்லை. ஏன் அப்படிக் கேட்டீங்க?” அவனுக்குப் புரியவே இல்லை.

“இன்னைக்கு தெரிஞ்சுப்பீங்க வாங்க. தயவு செய்து அளவா தண்ணியடிங்க, ஏன்னா நமக்கு இன்னைக்கு அதோ முன்னாடி போறானே, அவனை பாக்குறதுதான் முதல் வேலையே” அவர்கள் சொல்ல, பலராமன் அதையெல்லாம் சீரியசாக எடுக்கவே இல்லை.

அடுத்த அரைமணி நேரத்திலேயே அவர்கள் ஏன் அப்படிச் சொன்னார்கள் என்பதற்கான காரணம் அவனுக்குப் புரிந்து போனது. கொஞ்சம் கூட கேப் விடாமல் எதை எதையோ வாங்கிக் குடிக்க, பார்த்துக் கொண்டிருந்த மற்றவர்களுக்கு அடிவயிறு கலங்கியது.

“டேய், பேசாமல் ஏதாவது டாஸ்மாக் போயிருக்கலாம்... இவனை எப்படி இங்கே இருந்து காலிபண்ணி கூட்டிப் போகப் போறோம்னே தெரியலையே” அவர்கள் அப்பொழுதே புலம்ப ஆரம்பித்து விட்டார்கள்.

தீனா ஒருபக்கம் உற்சாக பானத்தில் மிதக்க, இவர்கள் மிகவும் பாதுகாப்பாக ஆளுக்கொரு பீர் மட்டும் வாங்கிக் கொண்டார்கள். பலராமனும் மீண்டும் ஸ்டேஷன் செல்லவேண்டும் என்பதால், கொஞ்சமாக ஒரு பெக் மட்டும் அடித்தவன், அவர்களோடு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

தீனாவுக்கு எத்தனை ரவுண்ட் போனது என கணக்கு வைக்கும் முன்பே, “டேய் குண்டா, இங்கே ஒருத்தி இருக்கா, அது யாருன்னு தெரியுமாடா?” சபரியை பிடித்து இழுத்து கேட்க, “மச்சான், இவன் ஆரம்பிச்சுட்டான்டா, இன்னைக்கு நிறுத்த மாட்டான், போச்சு...” தன் தலையிலேயே கை வைத்தவன் அவனைத் திரும்பிப் பார்த்தான்.

“மச்சான், இதுக்கு பதில் சொல்லி, நான் உன்கிட்டே அடி வாங்கின வரைக்கும் போதும்டா. அந்த தெய்வம் யாருன்னு நீயே சொல்லிடுடா” அவனைக் கையெடுத்து கும்பிட்டான்.

“இல்ல, நீயே சொல்லு... சரியா சொன்னன்னா உனக்கு ஒரு புல் பீர் நான் வாங்கித் தர்றேன்” தலையை கொஞ்சமாக சாய்த்தவாறு, அரைக்கண் பார்த்தவாறு அவனுக்கு ஆசை காட்ட, ஒரு பீருக்கு ஆசைப்பட்டு, உயிரை விட அவன் தயாராக இல்லை.

ஏற்கனவே கொஞ்ச நேரத்துக்கு முன்னர் நடந்த கலாட்டாவில் ஆங்காங்கே வாங்கிய ஊமைக் குத்தே பலமாக வலித்துக் கொண்டிருந்தது. இதில் புதிதாக அவனிடமும் வாங்கிக் கட்டிக்கொள்ள அவன் தயாராக இருக்கவில்லை.

“என்ன பாஸ் இது? ஏதாவது ஒரு பேரைச் சொல்லுங்க, வந்தா பீர், இல்லன்னா என்ன போச்சு?” பலராமன் அவர்களைத் தூண்டினான்.

“ஹையோ சார், உங்களுக்கு இவனைப்பற்றி தெரியாது, அதனால் இப்படி பேசறீங்க” அவர்கள் மொத்தமாக அலறினார்கள்.

“சரி நீங்க இருங்க, நானே பேசிக்கறேன். “டேய் தீனா, ஜெனிட்டாதான் அந்த பொண்ணா?” அவன் கேட்டு முடிக்க, அருகே இருந்த சபரியை குனிய வைத்து அவன் முதுகிலேயே நங் நங்கென இரண்டு மூன்று இடிகளை இறக்கினான்.

அவன் வலியில் அலற, அதைக் கண்டுகொள்ளாமல், “நீதான் இவனுக்கு தப்பு தப்பா சொல்லிக் கொடுத்ததா? மத்த பொண்ணுங்களைப் பத்தி இப்படி தப்பா சொல்லுவியா? சொல்லுவியா?” அவனை உலுக்க,

“ஏண்டா, இவ்வளவு தண்ணியடிச்சாலும் இன்ஸ்பெக்டர் யாரு, உன் ப்ரண்ட் யாருன்னு உனக்கு சரியா தெரியுது பாரு, தேங்க்ஸ் மச்சான்” அவன் வலியில் தவித்த முதுகை கரங்களால் தடவியவாறே அலற, பலராமன் அவர்களை புரியாமல் ஏறிட்டான்.

அடுத்தடுத்து நடந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் அவர்களில் ஒருவன் படம் பிடிக்க, விடிகாலையில் அவனது வீட்டுக்கு தீனாவை கொண்டு சேர்க்கையில், நான்கு மலைகளை முறித்த உணர்வில் அப்படியே சோர்ந்துபோய் அவனுடனே படுத்துக் கொண்டார்கள்.

## பகுதி – 8.

மறுநாள் காலையில் அவர்கள் கண் விழித்து எழ, அவர்களை பிலுபிலுவென பிடித்துக் கொண்டார் அகிலாண்டம். அவருக்கு தன் மகன் நிதானமாக வீட்டுக்கு வரவில்லையே என்ற கோபம் அதிகமிருக்க, வாய் ஓயாமல் புலம்பிக் கொண்டே இருந்தார்.

“டேய் சுதிர், நம்ம பய ஏன் நம்மளை எல்லாம் பேசவே விடாமல் வச்சு செய்யறான்னு இப்போ எனக்கு புரியுதுடா”.

“இந்தம்மா என்னடா இந்த பேச்சு பேசுது? என்னவோ நாம அவனுக்கு ஊத்திக் கொடுத்த மாதிரி பேசறாங்க?” சபரி புலம்ப,

“நானே நம்ம வீக்கெண்டை அவன் கெடுத்துட்டான்னு செம காண்டுல இருக்கேன், இதில் இவங்க வேற” அவர்கள் ஒருவர் மற்றவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள்.

“என்னங்கடா, நான் ஒருத்தி இங்கே பேசிகிட்டே இருக்கேன், நீங்க எல்லாம் மலைமாடுங்க மாதிரி அசையாமல் நின்னா என்ன அர்த்தம்? ஏதாவது பேசுங்கடா” தான் இவ்வளவு பேசியும் அவர்கள் அனைவரும் பேசாமல் நிற்கவே கோபமானார்.

“நீங்க மலை மாடுங்களை பாத்திருக்கீங்களா ஆண்ட்டி” குண்டன் சபரி பட்டென கேட்க, அகிலாண்டம் அவனை ஒரு மாதிரி அசையாமல் பார்த்தார் என்றால், நண்பர்கள் அனைவரும் அவனை கொலைவெறியில் முறைத்தார்கள்.

“ஏன்டா என்னை இப்படிப் பாக்கறீங்க? அவங்கதானே ஏதாவது சொல்லுங்கன்னு சொன்னாங்க, அதான்…” அவன் இழுக்க, ‘நீ மூடு’ என்பதுபோல் சுதிர் கரத்தைக் காட்ட, கப்பென வாயை மூடிக் கொண்டான்.

“மலை மாடுங்கன்னு சொன்னா மட்டும் கோபம் வருதே, பேசறதைப் பார்” நொடித்துக் கொண்டார்.

“வாயைத் தொறந்து பதில் சொல்லுங்கடா, ஒருத்தனுக்கு நாலுபேர் இருக்கீங்களே, அவனை இந்த அளவுக்கு போக விட்டிருக்கீங்க? குழந்தைக்கு ஏதாவது ஆகட்டும் உங்களை என்ன செய்வேன்னே தெரியாது” கைவேலையாக இருந்தாலும் விடாமல் புலம்பிக் கொண்டே இருந்தார்.

“குழந்தையா?” சபரியால் எவ்வளவு தடுத்தும் முடியாமல் ஜெர்க்காகி வாயை விட,

“ஆமாடா, அவன் எனக்கு குழந்தைதான்... இப்போ என்னாங்குற?” கையில் இருந்த கரண்டியை எடுத்து வந்து அவன் தலையிலேயே நாலு போட, “ஸ்... ஆ...” தலையை பரபரவென தேய்த்துக் கொண்டான்.

அதைப் பார்த்த மற்றவர்கள் வாய்விட்டே சிரிக்க, அவர்களை முறைத்தான். கூடவே, “நாங்க மூணுபேர் தானே இருக்கோம், நீங்க நாலு பேர்ன்னு சொன்னீங்க” அவரிடம் சந்தேகம் கேட்க,

“இப்போ இந்த கணக்குதான் உனக்கு ரொம்ப முக்கியமா?” அவர் முறைக்க, விழித்தான். நண்பர்கள் இருவருக்கும் அவன் படும் பாட்டைப் பார்த்து அப்படி ஒரு சிரிப்பாக இருந்தது.

“அம்மா, நாங்க அவன்கிட்டே சொல்லாமல் இருப்போமா? நாங்க எவ்வளவோ சொல்லிப் பாத்தும் அவன் கேக்கவே இல்லை. நாங்க மூணுபேரும் தெளிவாத்தானே இருக்கோம், உங்களுக்கு இதிலேயே தெரிய வேண்டாமா?” சபரி படும் பாட்டை பார்க்க முடியாமல், காதர் இடை புகுந்தான்.

“அது மட்டும் இல்லை, நம்ம குண்டன் அவனைத் தடுத்தான்னு சொல்லிட்டு அவன் விட்ட குத்தில்தான் இவன் மூக்கே உடைஞ்சு போச்சு. கன்னத்தில் வேற கைத்தடம் பாருங்க. இதுக்கு மேலேயும் நீங்க நம்பலைன்னா, ஒரு நிமிஷம் இருங்க” சொன்னவர் வேகமாக மாடியேறிப் போய், தனது அலைபேசியை எடுத்துக் கொண்டு கீழே வந்தான்.

“இங்கே பாருங்க...” சொன்னவன் அதை இயக்கி காட்ட, அதில் அவன் நேற்று இரவில் பப்பில் செய்த அனைத்து கலாட்டாக்களும் இடம் பெற்றிருந்தது.

அதிலும் தன் மனதுக்குள் ஒருத்தி இருப்பதாகச் சொன்னபொழுது அவன் கண்களில் தெரிந்த அந்த மயக்கம், போதையையும் மீறியது என்பதை புரிந்து கொண்டார்.

“அந்த பொண்ணு யாருன்னு உங்களுக்கு தெரியுமா?” அவர்களிடம் கேட்க, அனைவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

“எங்களுக்கெல்லாம் சந்தேகம் இருக்கும்மா, ஆனா கன்ஃபாமா தெரியாது. அதை அவன்கிட்டே கேக்கவும் முடியாது. அதென்னவோ அவளைப்பற்றி பேசப் போனாலே பயங்கர டென்ஷன் ஆயிடறான். அதனால் நாங்களும் கேக்கறதை விட்டுட்டோம்” காதர் சொல்ல, சில நொடிகள் மௌனமாக இருந்தார்.

“அவளோட போட்டோ ஏதாவது உங்ககிட்டே இருக்கா?” அவளைப் பார்க்கும் ஆர்வம் அவர் கண்களில் பளிச்சிட்டது.

“எனது போட்டோவா? அப்படி மட்டும் ஏதாவது செஞ்சோம், தீனா எங்களை உயிரோட சமாதி கட்டிட்டுத்தான் மறு வேலை பாப்பான். அவன் அதில் எல்லாம் ரொம்ப ஸ்ட்ரிக்ட்ம்மா, உங்களுக்கே தெரியுமே” அவர்கள் கேட்க, ‘ஆம்’ என தலை அசைத்தார்.

“அவளை எப்படியாவது எங்க வீட்டுக்கு கூட்டி வாங்கடா. எனக்கு அவளைப் பாக்கணும்னு ஆசையா இருக்கு” ஏக்கமாகவே கேட்டார்.

“சான்சே இல்லம்மா… தீனாவே இதுக்கு ஒத்துக்க மாட்டான். அது மட்டும் இல்லை, அவ அப்படியெல்லாம் எங்கேயும் வர்ற பொண்ணு கிடையாது”.

“எனக்கு அதெல்லாம் தெரியாது, எப்படியாவது அவளை வீட்டுக்கு அழைச்சுட்டு வர்றது உங்க பொறுப்பு”.

“அம்மா அவனுக்குத் தெரிஞ்சா எங்களை கொன்னே போட்டுடுவான்”.

“அவனுக்குத் தெரியாமல் நான் பாத்துக்கறேன்” அவர் உறுதியளிக்க, எப்படியாவது அவளை அழைத்து வருவது என முடிவெடுத்தார்கள்.

நேரம் பத்துமணியைக் கடந்த பிறகும் தீனா எழாமல் போகவே மிகுந்த கவலை கொண்டார். சுதிர், காதர், சபரி மூவருக்குமே காலை உணவை கொடுத்த பிறகுதான் அவர்களுக்கான சுப்ரபாதத்தையே ஆரம்பித்தார். அப்படி இருக்கையில், தன் மகன் பட்டினியாக இருப்பதை அவரால் தாங்க முடியுமா என்ன?

“பசங்களா… என்ன செய்வீங்களோ தெரியாது, அவன் இப்போ உடனே எழுந்து வந்து சாப்பிட்டாகணும், போங்க, போய் கூட்டி வாங்க” அவர் சொல்ல, சற்று கலவரமாகவே அவனது அறைக்குச் சென்றாகள்.

அவர்கள் சென்றவுடன், மாடியில் அவனது அறையில் பொருத்தப்பட்டிருந்த அழைப்புமணியை அழுத்த, நண்பர்கள் அனைவரும் அந்த சத்தத்துக்கு அவன் விழிப்பானா என காத்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்களது நினைப்பை பொய்யாக்காமல் கொஞ்சமாக அசைந்தவன், கண்களை திறக்காமல், கைகளை துழாவி தன் அலைபேசி எங்கே எனத் தேடியவன் அது கைக்கு கிடைக்கவே அதை ஆன் செய்து காதில் வைத்துக் கொண்டான்.

“ஹல்லோ, யார் பேசுறது? யாரா இருந்தாலும் பிறகு போன் பண்ணுங்க” சொல்லிவிட்டு அலைபேசியை தூக்கிப் போட்டுவிட்டு தன் தூக்கத்தை தொடர்ந்தான்.

நண்பர்கள் அனைவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். “என்னடா இது? காலிங்பெல் சத்தத்துக்கு, போனை எடுத்து பேசிட்டு மறுபடியும் தூங்கறான்?” அவர்களுக்கு சிரிப்பாக வந்தது. அவன் அலைபேசியில் பேசிய நேரத்துக்கு காலிங்பெல் சத்தம் நின்று போயிருந்ததால், அது போன் என்றே எண்ணிக் கொண்டான்.

“காதர், நீ போய் மறுபடியும் பெல் அடி, இங்கே என்ன நடக்குதுன்னு பார்ப்போம்” சுதிர் சொல்லவே, வேகமாக கீழே இறங்கிப் போனான்.

அடுத்ததாக மீண்டும் காலிங்பெல் இசைக்க, அதேபோல் தன் அலைபேசியை எடுத்தவன், “ஹல்லோ…” தூக்கக் கலக்கத்திலேயே கேட்க, அந்தப் பக்கம் யாரும் பேசாமல் போகவே சற்று எரிச்சல் ஆனான்.

“ஹல்லோ, போன் பண்ணா பேச மாட்டீங்களா?” கேட்டவன் மீண்டும் விட்ட தூக்கத்தை தொடர முயன்றான்.

“சுதிர், ஏதாவது ரியாக்ஷன் இருக்கா?” கீழே இருந்தே கத்தினான்.

“பாதி கிணறு தாண்டியாச்சுடா, நீ விடாமல் அடி, என்ன ஆகுதுன்னு பார்ப்போம்”.

அவன் குரல் கொடுக்கவே, “வீட்டு ‘சுச்’சை உடச்சுடாதீங்கடா” அகிலாண்டம் நடுவில் குரல் கொடுக்க, காதர் தன் தலையிலேயே அடித்துக் கொள்ள, மேலே நண்பர்கள் சத்தம் வராமல் சிரித்தார்கள்.

காதர் மீண்டும் விடாமல் பெல்லை அடிக்கவே, உறக்கம் முற்றிலும் கலைந்து எழுந்த தீனா, தன் அலைபேசியை எடுத்து ஆன் செய்தவன், பயங்கர கோபத்தில் கத்த, நண்பர்கள் மூவரும் விடாமல் வாய்விட்டே சிரிக்கத் துவங்கினார்கள்.

தீனா பேசிக் கொண்டிருக்கையிலேயே சுதிர் விடாமல் அழைப்புமணியை அழுத்த, "டேய், எவனா இருந்தாலும் இப்போ பேசுங்கடா, பேசுடா" அவன் அமர்ந்து கத்திக் கொண்டிருக்கையிலேயே காதர் பெல்லை அடித்துக் கொண்டே இருக்க, அப்பொழுதும் இசைப்பது எதுவென அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அலைபேசியை தன் முகத்துக்கு நேராக பிடித்தவன், அப்பொழுதும் இசைத்துக் கொண்டிருந்த காலிங்பெல்லையும் ஒரு பார்வை பார்த்தவன், "எவனா இருந்தாலும் போன்ல வந்து பேசுங்கடா. அவ்வளவு தூரம் எல்லாம் என்னால் ஏற முடியாது" சுவரைப் பார்த்து கத்த, நண்பர்களின் சிரிப்பு சத்தம் அந்த வீட்டையே அதிர வைத்தது.

அப்பொழுதுதான் நடப்பது என்னவென்று தீனாவுக்குப் புரிய, "அடச்சே... எவன்டா அவன், அவனை மேலே வரச் சொல்லுங்கடா. செம தலை வலி" தலையை அழுத்தமாக பற்றிக் கொண்டவன், பொத்தென படுக்கையில் படுத்துக் கொண்டார்.

"சுதிர் ஆப்பரேஷன் சக்சஸ், நீ மேலே வா" அவர்கள் அழைக்கவே மேலே சென்றவன், "மாப்ள, என்ன ஹேங்ஓவரா? என்கிட்டே ஒரு சூப்பர் மெடிசின் இருக்கு" சொன்னவன் நண்பர்களை கண் காட்ட, அனைவரும் அவன்மேல் பாய்ந்தார்கள்.

தீனா என்னவென்று உணரும் முன்பே, தான் கையில் வைத்திருந்த பாட்டிலைத் திறந்து, அதில் இருந்த புல் பாட்டில் மோரையும் அவன் வாயில் சரிக்க, அனைவரின் அழுத்தத்தால் தீனாவால் கொஞ்சம் கூட அசையவே முடியவில்லை.

"இதை நேத்தே செஞ்சிருக்கணும், உன்னோட அடிக்கு பயந்து சும்மா இருந்தோம், இப்போ சிக்குனியா" கேட்டவர்கள் அந்த ஒரு லிட்டர் பாட்டிலையும் அவன் வயிற்றில் இறக்கிய பிறகே ஓய்ந்தார்கள்.

மூச்சுத் திணற அவர்களிடம் இருந்து விலகியவன், “போங்கடா செனப் பன்னிங்களா, இப்படியாடா செய்வீங்க? ஹப்பா, என் எலும்பெல்லாம் மொத்தமா உடஞ்சே போச்சு” படுக்கையில் இருந்து எழுந்து சாய்ந்து அமர்ந்து கொண்டான்.

“உங்க குடும்பத்துக்கே எங்களைப் பாத்தா மனுஷங்களாவே தெரியாதாடா? ரொம்ப சந்தோசம்டா… சரி எழுந்து ப்ரெஷ் பண்ணிட்டு டிபன் சாப்ட்டுட்டு படுத்துக்கோ. நாங்க கிளம்பறோம். உன்னை எழுப்ப வேண்டிதான் இங்கே இவ்வளவு நேரம் வெயிட் பண்ணிட்டு இருந்தோம்” அவர்கள் கிளம்ப ஆயத்தமானார்கள்.

“எங்கடா கிளம்பறீங்க? உங்களுக்கு வேண்டி சாமிநாதன் காலையிலேயே மீன் வாங்க கிளம்பிப் போயிருப்பாரே, பிறகு அதையெல்லாம் யார் காலி பண்றது? இருந்து சாப்ட்டுட்டு போங்கடா. இல்லன்னா சாப்பாட்டை வேஸ்ட் பண்ணக் கூடாதுன்னு, அந்த மீன் பல ரூபத்தில் என்னை வந்து தாக்கும்” அவன் சொல்ல நண்பர்கள் அனைவரும் அங்கேயே இருந்து கொண்டார்கள்.

பொதுவாகவே இந்த வீக் எண்டு கொண்டாட்டங்கள் யாராவது ஒருவரின் வீட்டில் தொடரும் என்பதால், தங்கள் வீடுகளுக்குச் செல்ல அவசரப் படவும் இல்லை. வீடியோ கேம், மூவி எனத் தொடர ஆட்டம் களை கட்டியது.

தீனா கீழே காலை உணவு உண்ணச் சென்றிருக்க, அவனது அலைபேசி இசைக்கவே, ‘ஜனனி’என அது ஒளிர, நண்பர்கள் மூவரும் ஆர்வமானார்கள்.

“மச்சான், ஜனனிடா…” மாடியில் இருந்தே அலைபேசியைக் காட்ட, “தூக்கிப் போடுடா. டேய்… என்கிட்டே தூக்கிப் போடுடா, வேற எங்கேயாவது போட்டுடப் போற” சுதாரித்து உரைக்க, நண்பர்கள் சிரித்துக் கொண்டார்கள்.

“மச்சான், ஆல் தி பெஸ்ட்…” காதர் சொன்ன விதமே, எதுவோ சரியில்லை என்பதை அவனுக்கு உணர்த்த, அதை கண்டுகொள்ளாமல் அலைபேசியை ஆன் செய்து பேசத் துவங்கினான்.

“என்ன தூங்கி எழுந்துட்டீங்களா? புல்லா தண்ணியடிச்சுட்டு இப்படித்தான் செய்வாங்களா? என்ன பழக்கம் இது? இனிமேல் இப்படி தண்ணியடிச்சீங்கன்னு எனக்குத் தெரிஞ்சது, நான் என்ன செய்வேன்னே தெரியாது” படபடவென பொரிந்தவள் அலைபேசியை வைத்து விட்டாள்.

“ஜானு, ஜானு, இங்கே பார்...” அவன் சமாதானப்படுத்த முயன்றதை எல்லாம் அவள் கண்டுகொள்ளவே இல்லை.

“தடித்தாண்டவராயங்களா அப்படி என்னதாண்டா பண்ணித் தொலைச்சீங்க?” ஜனனி இவ்வளவு கோபப்படுகிறாள் என்றால், நிச்சயம் விஷயம் எதுவும் இல்லாமல் இருக்காது என்பதாலேயே கேட்டான்.

“மச்சான், நீ வாட்ஸ்ஆப் பாக்கலையா? சோ சேட்... த்..த்...” அவர்கள் உச்சுகொட்ட, தன் சாப்பாட்டையும் மறந்து வேகமாக வாட்ஸ்ஆப்பை ஓப்பன் செய்தான்.

“தீனா, சாப்ட்டுட்டு என்ன வேண்ணா செய்” அகிலாண்டம் குரல் கொடுத்ததை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

அதில் ஒரு பத்து நிமிடங்கள் ஓடக்கூடிய வீடியோவை காதர் அப்லோட் செய்திருக்க, வேகமாக அதை ஓப்பன் செய்தான். “என்னடா சொன்ன? பப்புக்கு வர்ற பொண்ணுங்க எல்லாம், யார் படுக்க கூப்பிட்டாலும் வருவாங்களா? உனக்கு யாருடா சொன்னா?” இதைக் கேட்டுக் கொண்டிருந்தவன் தான் என்பது புரிய, தன் கண்களை கசக்கி விட்டுக் கொண்டான்.

“டேய், இது நானா?” சந்தேகமாக கேட்டான்.

“இல்ல, உன்னோட ஆவி. நாங்க வேண்டாம் , வேண்டாம்னு சொல்லச் சொல்ல கேக்காமல் அவனைப் போட்டு அடிச்சு, அந்த பொரட்டு புரட்டுற? நீயே பார்... ஆனாலும் உனக்கு இந்த அளவுக்கு கராத்தே தெரியும்னே எங்களுக்கு நேத்து தான்டா தெரியும்” அவர்கள் ஒருவர் மற்றவரைப் பார்த்துக் கொண்டார்கள்.

“இவளுங்க பப்புக்கு வர்றதே நாம தட**** என்பதுக்கு வேண்டித்தானே. வேற எதுக்காம்? இதில் கை வச்சா பெருசா பத்தினி மாதிரி சீனைப்

போடுறா? கூட்டத்தில் அங்கங்கே கை படத்தான் செய்யும்” ஒருவன் தெனாவெட்டாக பேச, கேட்டுக் கொண்டிருந்த தீனாவுக்கு ரத்தம் கொதித்தது.

“நீ சொல்றது ரொம்பத் தப்பு... அவ கிட்டே சாரி சொல்” தீனா பிடிவாதமாக இருக்க, நண்பர்கள் அனைவரும் பிரச்சனை வேண்டாம் என சொல்வதும் கூட அந்த சத்தத்தில் பதிவாகி இருந்தது.

“அதெல்லாம் சொல்ல முடியாது...” அவன் சொன்ன அடுத்த நிமிடம், யாரும் எதிர்பாராத விதமாக, தீனா அவன்மேல் பாய்ந்து அவனை அடிக்கத் துவங்கி இருந்தான்.

கூடவே, “ஒரு பொண்ணு பப்புக்கு வந்தா, அவளும் ரிலாக்ஸ் பண்ண வரலாம், இல்லையா அவளோட பாய் ப்ரண்ட் கூட வந்திருக்கலாம், அவன் என்ன செஞ்சாலும் என்கரேஜ் பண்ணலாம், அதெல்லாம் அவளோட சொந்த விருப்பம்.

“நீ தெரு நாய் மாதிரி மேயப் பாத்துட்டு பொண்ணுங்களை குறை சொல்றியா? இதுவே கோயிலா இருந்தா நீ பொண்ணுங்க கால்ல விழுந்து கும்பிடுவியோ? தெருப்பொறுக்கி நாயே...” கேட்டவன் விடாமல் அடித்து துவம்சம் செய்ய, தீனாவிடமிருந்து அவனைக் காப்பாற்றுவதே பெரும் பாடாகப் போயிற்று.

எப்படியோ ஒரு வழியாக அங்கிருந்து கிளம்பி வெளியே வந்தால், அவன்தான் பைக்கை ஓட்டுவேன் என அடம் பிடிக்க, அதைத் தடுக்கவே அவர்கள் தலையால் தண்ணி குடிக்க வேண்டி வந்தது.

“தீனா, வழியில் கண்டிப்பா போலீஸ் நிப்பான்டா. நீ ஓட்டினால் நாம மாட்டிப்போம். நாங்க எல்லாம் தெளிவா இருக்கோம், நீ நிதானத்திலேயே இல்லை” கெஞ்சி கூத்தாடி அவனை பின்னால் அமர வைத்து, அவனுக்கு பின்னாக சுதிர் ஏறி அமர்ந்து அவனைப் பிடித்துக் கொண்டான்.

அவர்கள் எதிர்பார்த்தது போலவே சற்று தொலைவில் போலீஸ் நிற்க, “காதர், நீயும் தீனாவும் இறங்கி நடந்து போங்க. நான் பைக்கை ஓட்டிட்டு வர்றேன். நான் நிறைய சாப்பிடாததால் வாசனை எல்லாம் வராது. மெஷினும் அவ்வளவா கண்டு பிடிக்காது, அப்படியே மெஷின்

கத்தினாலும் அளவும் கம்மியா இருப்பதால் விட்டுடுவாங்க" அவன் சொல்ல, தீனா இறங்கவே மாட்டேன் என அடம் பிடித்தான்.

இவனை வண்டியில் ஏற வைப்பது ஒரு கஷ்டம் என்றால், இறங்க வைப்பது அதைவிட கஷ்டமாக இருந்தது. அவர்கள் அனைவரும் அதிகமாக கெஞ்சவே வாயில் விரல் வைத்தவாறு இறங்கிக் கொண்டான்.

"மச்சான், நீ எதுவும் பேசாமல் சும்மா நடந்து போய்ட்டால் போதும்டா. அதுவும் ரோட்டில் இருந்து ஏறி, அந்த நடை பாதையில் போ, கண்டிப்பா உன்னை கூப்பிட மாட்டாங்க" அவர்கள் அவ்வளவு கெஞ்சவே நல்லபிள்ளையாக காதருடன் நடந்தான்.

சபரி தனியாக ஒரு பைக்கில் சென்றதால் எப்படியோ தப்பிச் சென்றுவிட்டான். சற்று தூரம் சென்று இவர்களுக்காக காத்திருந்தான். சுதிரும் போலீஸ் செக்கிங் கடந்து, அலுவலகம் சென்றுவிட்டு வருவதாகச் சொல்லி, தன் அடையாள அட்டையைக் காட்ட, அவர்களும் அனுப்பிவிடும் நிலையில் இருந்தார்கள்.

ஆனாலும் யூஷுவல் செக்கப் எனச் சொல்லி, அவனை அந்த மெஷினில் ஊதச் சொல்ல, அவ்வளவு நேரமாக நல்லபிள்ளையென நடந்து கொண்டிருந்த தீனா, வேகமாக அவர்களை நெருங்கினான். காதர் சுதாரித்து தடுக்கும் முன்பாகவே அவர்கள் அருகே சென்றுவிட்டான்.

"நீங்கல்லாம் யார்?" அந்த போலீஸ் அவனிடம் கேட்க,

'நீ வாயைத் திறக்காதே' என அவர்கள் செய்த ஜாடையை எல்லாம் அவன் கவனிக்கவே இல்லை.

அதற்குள்ளாக மற்ற போலீஸ், ஆல்க்கஹால் டிட்டெக்டர் கருவியைக் கொண்டு வர, "சார், இவனுக்கு பதிலா நான் வேண்ணா ஊதவா?" தீனா இடை புகுந்து கேட்க, அந்த போலீசின் கரத்தில் இருந்த மெஷின் பீப்' ஒலியை வெளியிட்டது.

அதைப் பார்த்த அந்த போலீஸ், மற்ற போலீசிடம், "தம்பி கொஞ்சம் கூட குடிக்கவே இல்லை. நல்ல வேளை மெஷினை தள்ளி வச்சிருந்தேன்,

இல்ல, இந்நேரம் வெடிச்சிருக்கும்” அவர் சொல்ல இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

“டேய், சும்மா இருடா... வாயை மூடுடா” நண்பர்கள் தடுத்ததை கண்டுகொள்ளாமல், “நான் ஊதவா?” மீண்டும் அவரிடம் கேட்க, “இல்ல வேண்டாம், எனக்கு நீ சுத்தமா குடிக்கவே இல்லைன்னு தெரிஞ்சு போச்சு. அப்படிப் போய் ஓரமா நில்லு” அவர் சொல்ல,

“சார், சார், அவன் வண்டி ஓட்டவே இல்லை, நான்தான் ஓட்டி வந்தேன்” அவன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே அந்த வீடியோ நிறைவு பெற்றிருந்தது.

“பிறகு என்னடா ஆச்சு? என்னடா இது இப்படி பண்ணி வச்சிருக்கேன்” தன் தலையை அழுத்தமாக கோதிக் கொண்டான்.

“ஒவ்வொரு முறையும் புல்லா தண்ணியடிச்சா இப்படித்தான் கலாட்டா பண்றன்னு சொன்னா நீ நம்பவே மாட்ட தானே, அதான் இந்த முறை வீடியோ எடுத்தே ஆகணும்னு எடுத்தேன்”.

“அதை எதுக்குடா குரூப்பில் போட்டு விட்டீங்க? எருமைங்களா?” அவர்களை அடிக்க விரட்ட, அவனது கைக்கு சிக்காமல் போக்கு காட்டினார்கள். சபரி மட்டும் அவன் கரத்தில் சீக்கிரம் சிக்க, அவனை போலியாக குத்தி கலாட்டா செய்து ஒரு வழியாக்கினான்.

அவர்கள் அனைவரும் மதிய உணவை முடித்தவுடன் ஒரு குட்டி தூக்கம் போட்டு எழ, அனைவரும் பீச் போவது என முடிவெடுத்தார்கள். அதை ஜனனியிடம் சொல்ல வேண்டி அவளுக்கு அழைத்தால், அவளோ அவனது அலைபேசியை எடுக்கவே இல்லை.

அவள் தனது அழைப்பை எடுக்கவில்லை என்றவுடன், அவளது அலைபேசிக்கு குறுந்தகவலை அனுப்ப, அதைப் பார்த்தாலும் அவனுக்கு பதில் அனுப்பவே இல்லை. அது அவனுக்கு பெரும் வருத்தத்தை அளித்தது.

“ரியலி சாரி ஜானு” அவளை சமாதானப்படுத்தும் விதமாக அனுப்ப, “நீங்க எதுக்கு என்கிட்டே சாரி சொல்றீங்க? எனக்கு எதுவும் வேண்டாம்” அதற்கு மட்டும் கோபமாக பதில் அனுப்பினாள்.

“பீச் வாயேன்…” அவன் இதை அனுப்ப, இதை நேரில் கேட்டிருந்தால் அவனது முகபாவம் எப்படி இருக்கும் என எண்ணி அவள் முகத்தில் மெல்லிய புன்னகை அரும்பியது.

“நோ…” அந்த ஒற்றை பதிலுக்குப் பிறகு அவளை அவன் தொல்லை செய்யவில்லை. அப்படி தொல்லை செய்யும் வழக்கமும் அவனுக்கு இல்லை என்பதால் அப்படியே விட்டுவிட்டான். ஆனாலும் மனதுக்குள் ஒரு மாதிரி தொல்லையாக உணர்ந்தான்.

பொதுவாகவே அவன் அப்படி மனநிலையில் இருக்க விரும்புவது இல்லை என்பதால், உடனடியாக அவளை நேரில் சந்தித்து பேச விரும்பினான். அவனைப் பொறுத்த வரைக்கும், அந்த பிரச்னையை உனடியாக பேசித் தீர்க்க வேண்டும் என்பது மட்டுமே எண்ணமாக இருந்தது.

மாலையில் பீச் செல்லும் மனநிலையே சுத்தமாக இல்லை என்றாலும், நண்பர்களுக்கு எந்தவிதமான விளக்கமும் சொல்ல முடியாது என்பதால் அவர்களோடு கிளம்பிவிட்டான். அவர்கள் அங்கே இருந்தே அவரவர் வீட்டுக்கு கிளம்பிச் செல்ல, அவன் தன் பைக்கை எடுத்துக் கொண்டு நேராக அவள் வீட்டுக்குச் சென்றான்.

அவள் வீட்டுக்குச் சென்றவன், அழைப்பு மணியை அழுத்த, வந்து கதவைத் திறந்த ஜனனி சத்தியமாக அவனை அங்கே எதிர்பார்க்கவே இல்லை.

## பகுதி – 9.

தீனாவை அவள் அந்த நேரம் கனவில் கூட எதிர் பார்த்திருக்கவில்லை. சொல்லப் போனால், அவன் தன் வீட்டுக்கு வரும் அளவுக்கு யோசிப்பான் என்று கூட நினைக்கவில்லை. அப்படி இருக்கையில், அவன் இப்படி நேரில் வந்து நின்றால் அதிராமல் என்ன செய்வாள்?

“தீனா, நீங்க... உள்ளே வாங்க” கதவை நன்கு திறந்தவள், அவனுக்கு விலகி வழி விட்டாள்.

“சாரி, இந்த நேரத்தில் வந்தது தப்புன்னு எனக்குத் தெரியும். பட், இந்த டென்ஷனை என்னால் தாங்கிக்க முடியலை அதான்...” வீட்டுக்குள் வந்தவன் பார்வையை சுழற்றினான். வீட்டுக்குள் யாரும் இருக்கும் அறிகுறியே இருக்கவில்லை.

அவள், அவன் சொன்னதுக்கு பதில் சொல்லாமல் அமைதியாக இருக்கவே, “என்ன வீட்டில் யாரையுமே காணோம்?”.

“அம்மாவும் அப்பாவும் ஒரு பிறந்தநாள் பங்க்ஷன் வீட்டுக்குப் போயிருக்காங்க, இப்போ வர்ற நேரம்தான்” கடிகாரத்தைப் பார்த்தவாறே பதில் கொடுத்தவள், அவனுக்கு சோபாவை கை காட்டினாள்.

இதயம் திடுமென தாறுமாறாக துடிக்கும் உணர்வு. அது துடிப்பதை புதிதாக உணர்வதுபோல் இருந்தது. யாருமற்ற தனிமை, அருகில் மனதுக்கு மிகவும் பிடித்தவன், நெருக்கமானவன், எங்கே தன் பார்வைகள் அவனைத் தீண்டிவிடுமோ, தூண்டி விடுமோ என மனதுக்குள் பெரும் கலவரம்.

“ஒரு நிமிஷம் இருங்க...” அவள் உள்ளே சென்று அவனுக்கு குடிக்க ஏதாவது கொண்டுவர முயல,

“ஜானு, இப்போ எனக்கு எதுவும் வேண்டாம். வீட்டில் பெரியவங்க வேற இல்லை, நான் இங்கே இருப்பது அவ்வளவு நல்லது இல்லை. நான் கிளம்பறேன்” அவள் காட்டிய சோபாவில் அமராமலே அங்கிருந்து கிளம்ப முயன்றான்.

அவனது அந்த கண்ணியம் அவளுக்கு அவ்வளவு பிடித்தது. அவனது குரலில் சும்மா போக்கு காட்டும் விதமெல்லாம் எதுவும் இல்லை, மாறாக சென்றாக வேண்டும் என்ற உறுதி இருப்பதை நன்கு உணர்ந்தாள்.

“முதல் முறையா வீட்டுக்கு வந்திருக்கீங்க, ஜஸ்ட் தண்ணியாவது குடிச்சுட்டுப் போங்க” தன் வீடு தேடி வந்தவனை அப்படியே அனுப்ப அவளால் முடியவில்லை.

“முறையா வந்து குடித்தால்தான் எதுவும் நல்லது ஜானு. நோ பார்மாலிட்டீஸ், உன்கிட்டே பேச முடியலையேன்னுதான் வருத்தமா இருக்கு, மற்றபடி ஐ’ம் ஓகே...” அங்கே நில்லாமல் நடந்துவிட்டான்.

அவன் திரும்பி நடக்கவே அவன் வார்த்தைகள் கொடுத்த அதிர்வில் இருந்து மீளவே அவளுக்கு சில நொடிகள் தேவைப் பட்டது. அதுவும் எதையும் முறையாக செய்ய வேண்டும் என அவன் சொன்னது அவள் மனதை அசைத்துப் போட்டது. அவள் சிந்தைக்கு சிறகு முளைக்கும் உணர்வு.

அவள் சிந்தையில் மூழ்கி இருக்கையிலேயே, போர்டிகோவுக்கு வந்து தன் பைக்கில் அவன் ஏறியிருக்க, வேகமாக வெளியே ஓடி வந்தாள். அவன் பேச வந்த விஷயம் நிறைவேறாமல் போனதில் அவன் முகத்தில் மெல்லிய ஏமாற்றம் பரவியிருக்க, அதை அவளால் தாங்க முடியவில்லை.

அவனை எப்பொழுதுமே கலகலப்பாக, கேலியும் கிண்டலுமாகப் பார்த்துவிட்டு, அவனை சீரியசாகப் பார்க்கவே முடியவில்லை. அவனோ, தன் பைக்கை உதைத்து ஸ்டார்ட் செய்தவன், “ஜானு, கோபமா இருந்தா திட்டிடு, வேண்ணா கூப்ட்டு வச்சு அடிக்க கூட செய், ஆனா பேசாமல் மட்டும் இருக்காதே, நீ பேசலன்னா என்னால் நார்மலாவே இருக்க முடியலை” தன் மனநிலையை அப்படியே அவன் கொட்டிவிட, விக்கித்துப் போனாள்.

தனது அமைதி அவனைப் பாதிக்கிறது என்பதில் ஒருபக்கம் சந்தோசம் என்றாலும், அவனது வருத்தத்தை அறவே வெறுத்தாள்.

அவள் கிளம்பிச் செல்ல முயல, “ம்ச், நிதானம் தவறும் அளவுக்கு அப்படி என்ன குடிக்க வேண்டி இருக்கு? நீங்க குடிக்கிறது எனக்குப் பிடிக்கலை, ஏதாவது அசம்பாவிதமா போச்சுன்னா... என்னைப் பத்தி...” வார்த்தைகள் அதன்போக்கில் வந்து விழ, சட்டென சுதாரித்துக் கொண்டாள்.

அவளது பேச்சைக் கேட்டவனின் முகத்தில் மத்தாப்பூவின் ஒளி. “உனக்குப் பிடிக்கலன்னா இனிமேல் நான் குடிக்கலை போதுமா?” அவன் பட்டென இறங்கி வர, விழி விரித்தாள். தன் பேச்சை மறுக்க மாட்டான் என்று அவளுக்குத் தெரியும். ஆனாலும் சாதாரணமாக அவள் சொல்லும்

விஷயத்துக்கே அவன் இவ்வளவு மதிப்புக் கொடுக்க, அவன் அன்பின் அளவில் சுகமாய் நனைந்தாள்.

“சும்மா பேச்சுக்கெல்லாம் சொல்லாதீங்க?”.

“உன் விஷயத்தில் எப்பவுமே நான் சீரியஸ் தான். நீ இது வரைக்கும் என்கிட்டே குடிக்காதன்னு சொன்னதே இல்லையே” அவன் திருப்பிக் கேட்க, அசந்து நின்றுவிட்டாள்.

“அப்படின்னா இனிமேல் பப்புக்கு போக மாட்டீங்களா?” அவள் குரலில் மெல்லிய கேலி இழையோடியது.

“பப்புக்கு போக மாட்டேன்னு எப்போ சொன்னேன்? ஆனா குடிக்க மாட்டேன். இப்போ சொல்லு, என்மேல் கோபம் போயிடுச்சா? நீ பதில் சொல்லலன்னா என்னால் இன்னைக்கு தூங்கவே முடியாது. என்மேல் கொஞ்சம் கருணை காட்டிடேன்” அப்பட்டமாக கெஞ்ச, அப்படியே அவனை கட்டிக் கொண்டு அவன் நெஞ்சில் சாய்ந்து கொள்ளத் தோன்றியது.

“சரி... கோபமெல்லாம் எதுவும் இல்லை போதுமா?” அவன் அருகே நெருங்கி, வண்டியின் ஹேண்டில்பாரை பற்றிக் கொண்டாள். தன் அருகே நின்றவளை விழி உயர்த்திப் பார்த்தவனுக்கு தன்னை கட்டுப்படுத்திக் கொள்வது பெரும் சோதனையாக இருந்தது.

அவள் முகத்தையே ஊடுருவும் பார்வை பார்க்க, அவன் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே அவளால் முடியவில்லை. அடிவயிற்றில் அவஸ்தையாய் நெளியும் அந்த உணர்வு, அது பிடிக்கவும் செய்தது, அதே நேரம் பெரும் தவிப்பாகவும் இருந்தது.

அப்படியிருந்தாலும் அவனை விட்டு விலகி நிற்கவெல்லாம் அவள் முயலவே இல்லை. எந்த சூழ்நிலையிலும் தன்னிடம் வரம்பு மீறி நடந்துகொள்ள மாட்டான் என்ற அசைக்க முடியாத ஒரு நம்பிக்கை. அப்படி ஏதும் நினைப்பிருப்பவன், பெரியவர்கள் இல்லை என்றதும் கிளம்பியிருக்க மாட்டானே.

இவ்வளவு தெளிவாக இருப்பவன் எப்படி பதினாறு வயதில், பன்னிரண்டு வயதான தன்னிடம் காதலைச் சொன்னான் என்பது அவளுக்குப் புரியவே இல்லை. ஒருவித வேகத்தில் சொல்லிவிட்டான் என்றாலும், அபய்யின் தங்கை தான் எனத் தெரிந்த பிறகு விலகி நின்ற அவனது செய்கை, அதையும் எண்ணிக் கொண்டாள்.

அவள் முகத்தில் நர்த்தனமாடும் விதவிதமான உணர்வுகளில் கவனமாக இருந்தவன், “ஜானு, இப்போ இந்த நிமிஷம்… அப்படியே உன்னை கட்டிக்கணும் போல இருக்கு… இதுக்கு மேலே நான் இங்கே இருந்தா சரி வராது, நான் கிளம்பறேன்” பார்வையால் தன் உணர்வுகளை அவளுக்கு கடத்திவிட்டு அவன் விருட்டென சென்று மறைய, கால்கள் பலமிழக்க அப்படியே படியில் தொப்பென அமர்ந்துவிட்டாள்.

அவனது காதல் கரையுடைக்க துவங்கிவிட்டதை சரியாக உணர்ந்து கொண்டாள். அவனுக்குமே இதற்குமேல் தாமதிக்க மனமில்லை. தன் மனதை வெளியிட்டால்தான், அவளும் இறங்கி வருவாள் என்பது புரிய, தன் மனதை கொஞ்சம் கொட்டிவிட்டான்.

அவளது பெற்றவர்கள் வந்து, அவளை உலுக்கும் வரைக்குமே நினைவு தப்பிய நிலையில் அங்கேயே அமர்ந்திருந்தாள்.

“என்னம்மா இங்கே உக்காந்திருக்க? ரொம்ப போர் அடிச்சதா? அதான் வெளியே வந்து உக்காந்து இருக்கியா? இதுக்குத்தான் உன்னையும் வான்னு சொன்னோம் நீதான் கேக்கலை. சரி சாப்ட்டியா இல்லையா? நேரமாகுது பார், உள்ளே வா”.

கலா அவளை உள்ளே அழைத்துச் செல்ல, அவர்கள் கேட்டதற்கு என்ன பதில் சொன்னாள், என்ன செய்தாள் எதுவும் நினைவில்லை, தனக்கு தூக்கம் வருகிறது எனச் சொல்லிவிட்டு தன் அறைக்குள் சென்று புகுந்து கொண்டாள்.

அவன் வீசிச் சென்ற வார்த்தைகளின் தாக்கத்தில் இருந்து அவளால் வெளியே வரவே முடியவில்லை. அந்த நொடி அவன் கண்களில் வழிந்த அந்த உணர்வு, அதை நினைக்கையிலேயே தேகம் மொத்தமும் சிரித்துப்

போனது. படுக்கையில் புரண்டு படுத்தாலும் தூக்கம் வருவேனா என கண்ணாமூச்சி ஆடியது.

வேகமாக தன் அலைபேசியை எடுத்தவள், "ஏன் அப்படிச் சொன்னீங்க?" டைப் செய்து அவனுக்கு அனுப்பினாள். நேரம் நள்ளிரவை நெருங்கப் போவது தெரிந்தாலும், அவனது பதிலுக்காக காத்திருந்தாள்.

"உன்னால் தோன்றும் உணர்வுகளை, உன்னிடம் தானே வெளிப்படுத்த முடியும்?" அவளை அதிக நேரம் சோதிக்காமல், பட்டென அவனிடமிருந்து பதில் வந்தது. இதற்கு என்ன பதில் அனுப்புவது என்று சத்தியமாக அவளுக்குத் தெரியவில்லை.

அலைபேசியை தூக்கிப் போட்டுவிட்டு அழுத்தமாக இமைகளை மூடிக் கொண்டாள். அவனது இந்த அவதாரம், வெளிப்படுத்துதல், அவள் மனதை நடுங்கச் செய்தது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை என்பதால், நிதானமாகத் தூங்கி, நிதானமாக எழுந்து தன் அலைபேசியை ஆயிரம் முறை சோதித்து என அவளது நாள் பரபரப்பின்றியே போனது.

திங்கட்கிழமை காலையில் அவனை எப்படி எதிர்கொள்வது என்ற தயக்கம் மலையளவு இருக்க, அதை தனக்குள் மறைத்துக் கொண்டாள். அவன் தன் காதலை தன்னிடம் சொல்லிவிடும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்றே தோன்றியது.

வழக்கமான அலுவலக கலாட்டா, வேலை, நண்பர்களுடன் அவுட்டிங் என நாட்கள் அதன்போக்கில் கடக்க, அகிலாண்டம் காதருக்கு அழைத்தார். அவரது அழைப்பு என்றவுடனேயே, அருகில் இருந்த சபரியிடம் அலைபேசியை திருப்பிக் காட்ட, அவனும் கண்களில் கலவரத்தைக் காட்டினான்.

"எடுத்துப் பேசிடுடா, இல்லன்னா அம்மா அதுக்கும் டின்னு கட்டிடுவாங்க" அவன் சொல்லவே வேறு வழியின்றி அழைப்பை ஏற்றான்.

"இந்த காதலிக்கிறவங்க சகவாசமே வச்சுக்க கூடாது மாப்ள..." புலம்பித் தள்ளியவாறே அழைப்பை ஏற்றான்.

“என்னங்கடா... எல்லாரும் நல்லா இருக்கீங்களா? சரி நான் கேட்ட விஷயம் என்ன ஆச்சு?” அவர் நேரடியாக விஷயத்துக்கே வந்துவிட, அவனுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை.

“அம்மா, அது வந்து...” அவன் இழுக்க,

“நீங்க எல்லாம் நிஜமாவே ப்ரண்டுங்கதானா? என்னால் நம்பவே முடியலை” அவர் அலுத்துக்கொள்ள, அவனுக்குதான் கிலி மூண்டது.

தீனாவின் விஷயத்தில், அதுவும் அவனது தனிப்பட்ட விஷயங்களில் கொஞ்சம் கூட எல்லை மீறுவது அவனுக்கு அறவே பிடிக்காது. அதுவும் பெண்கள் விஷயத்தில் நெருப்பு போன்றவன். அப்படி இருக்கையில் அவனது காதலி விஷயத்தில் அவர்கள் ரிஸ்க் எடுக்க முடியுமா என்ன?

இத்தனைக்கும் இன்று வரைக்கும் ஜனனியை நேசிப்பதை அவனாக அவர்களிடம் வெளிப்படுத்தியதே இல்லை. அவனது செய்கைகள், பார்வைகள், அவள்மேல் காட்டும் பரிவு இவையெல்லாம் வைத்துதான் அவள்மேல் அவன் கொண்டிருக்கும் நேசத்தை அவர்களாகவே கண்டிருந்தார்கள்.

அதையும் அவனிடம் வாய் வார்த்தையாக கேட்டுவிட முடியாது. அப்படி கேட்டால் என்ன செய்வான் என்றே தெரியாது. அப்படி இருக்கையில், ஜனனியை அவனது வீட்டுக்கே அழைத்துச் செல்லச் சொன்னால் அதை அவர்களால் எப்படி முடியும்?

முதலில் இதை எப்படி ஜனனியிடம் சொல்ல, கேட்க முடியுமாம்? “அம்மா... அது வந்து... என்னன்னா...” அவன் தயங்க, அவனது தயக்கம் அவரைக் கொஞ்சம் கூட அசைக்கவில்லை.

“டேய், இப்போ உலகக்கோப்பை கிரிக்கெட் மேட்ச் நடக்குதுல்ல, எப்படியும் இந்தியா பாகிஸ்த்தான் விளையாடுற அன்னைக்கு, அவன் மொபைலை ஆஃப் பண்ணிட்டு புல்லா மேட்ச் பாப்பான், அன்னைக்கு அவளை ஏதாவது சொல்லி வீட்டுக்கு கூட்டி வாங்க, மிச்சத்தை நான் பாத்துக்கறேன்” அவர் ஐடியா கொடுக்க, அதை கேட்டுக் கொள்வதைத் தவிர அவனுக்கு வேறு வழி இருக்கவில்லை.

“அவனை சம்மாளிக்க வழி சொல்லிட்டீங்க. அப்போ ஜனனி?” அவரிடமே கேட்டான்.

“ஏண்டா, எல்லாத்தையும் நானே சொல்லித் தரணுமா? நீங்க எதையும் யோசிக்கவே மாட்டீங்களா?” கேட்டவர் அலைபேசியை வைத்து விட்டார்.

“சரிம்மா, அப்படியே பண்றோம்” இது எப்படி சாத்தியம் என மனம் அடித்துக் கொண்டாலும், முயன்று பார்க்க முடிவு செய்தார்கள்.

அன்று அவர்கள் அனைவரும் எதிர்பார்த்தது போலவே, தீனா விடுப்பு எடுக்க, மாலையில் வேலை முடிந்து அனைவரும் கிளம்புகையில், பரபரப்பாக ஓடி வந்த சுதிர், மிகுந்த பரபரப்புடன் காணப்பட்டான்.

வந்த வேகத்தில், “டேய் மச்சான், நம்ம தீனாவுக்கு பைக் ஆக்சிடென்ட் ஆகிடுச்சாம், கால்ல சின்ன அடிபோல எதையும் தெளிவா சொல்ல மாட்டேங்கறான். ஹாஸ்பிட்டல்ல இருந்து வீட்டுக்கு வந்துட்டானாம், நாம அவனைப் போய் பாத்துட்டு வீட்டுக்குப் போகலாம்” அவர்கள் பேச, அங்கே தீனாவின் பெயரைக் கேட்ட உடனேயே அப்படியே நின்றுவிட்டாள்.

வேகமாக தன் அலைபேசியை எடுத்து அவனுக்கு அழைக்க, அதுவோ அணைத்து வைக்கப் பட்டிருப்பதாகச் சொல்லவே, அவளால் தாங்க முடியவில்லை. ஏற்கனவே நுஹாவும், ஜெனிட்டாவும் முதலில் கிளம்பிய பேருந்தில் சென்று விட்டிருக்க, அவள் மட்டும் தனித்து நின்றிருந்தாள்.

“தீனாவுக்கு என்ன ஆச்சு? யார் சொன்னாங்க?” கலவரமானாள்.

“ஜனனி, பயப்படுற மாதிரி எதுவும் இல்லை” அவளை சமாதானப் படுத்தினர்.

அவர்களிடம் தானும் வருவதாக எப்படிச் சொல்வது என அவள் யோசிக்க, “ஜனனி, நாங்க தீனா வீட்டுக்குப் போறோம், நீ வர்றியா? ஜஸ்ட் பத்து நிமிஷம்தான் ஆகும்” சுதிர் கேட்க உடனே சம்மதித்தாள். இருந்த பதட்டத்தில் தன் அண்ணனுக்கு அழைத்து விஷயத்தை சொல்லவேண்டும் என்று கூட அவளுக்குத் தோன்றவில்லை.

அவர்கள் அனைவரும் கால்டேக்சி வரவழைத்து அதில் செல்ல, அவளது உயிரே அவள்வசம் இல்லை. அவளது பெரும் பதட்டத்தைப் பார்த்த காதர், “ஜனனி, கூல்… அவனுக்கு எதுவும் இல்லை” அவர்கள் சொன்ன வார்த்தைகள் எதுவுமே அவன் காதுக்குள் ஏறவே இல்லை.

அவன் வீட்டு வாசலில் கார் சென்று நிற்க, முதல் ஆளாக அதில் இருந்து வெளியேறி, வீட்டுக்கு விரைந்தாள். வாசல் வரைக்கும் வந்த பிறகுதான், எப்படி உள்ளே செல்வது என்ற தயக்கம் அவளைக் கட்டிப் போட்டது. அவள் தயங்கி நின்றது ஒரு நொடிதான்.

அதற்குள்ளாகவே வீட்டை விட்டு வெளியே வந்த அகிலாண்டம், “வலது காலை எடுத்து வச்சு உள்ளே வாம்மா” அவளை அழைக்க, திடுக்கிட்டு நிமிர்ந்தவள், அவர் கண்களில் தெரிந்த முடிவில், பெரும் சங்கடமும், தடுமாற்றமும் கொண்டாள்.

‘என்கிட்டே சொல்ல முன்னாடி ஊருக்கே சொல்லிட்டார் போல’ மனதுக்குள் அவனை செல்லமாக திட்டிக் கொண்டாள்.

“உள்ளே வாம்மா, ஏன் வாசலிலேயே நின்னுட்ட?” சாமிநாதனும் அவளை அழைக்கவே, வலது காலை உள்ளே வைத்து வீட்டுக்குள் சென்றாள்.

‘அவரை எங்கே?’ அவளது பார்வை பரிதவிப்பாய் அலைபாய, அதைப் பார்த்தவர் மனதுக்குள் சிரித்துக் கொண்டார்.

‘இம்புட்டு ஆசையை மனசுக்குள் வச்சுகிட்டு அதை சொன்னாத்தான் என்னவாம்?’ எண்ணியவர், “வாங்கடா… டீ ரெடியா இருக்கு, குடிச்சுட்டு கிளம்புங்க” அவர் சொல்ல, டீயுடன் வடையும் இருக்கவே அனைவரும் ரிலாக்ஸாக அமர்ந்து உண்டார்கள்.

தீனாவின் நண்பர்களின் செய்கையைப் பார்த்த அவளுக்கு பெரும் குழப்பமாக இருந்தது. அவளால் டீயையும் குடிக்க முடியவில்லை. ‘எனக்கு அவரைப் பாக்கணும்’ நுனிநாக்குவரை வந்த வார்த்தைகளை அடக்கி வைப்பது பெரும் பாடாக இருந்தது.

“அம்மா நாங்க கிளம்பறோம், இதுக்கு மேலே நீங்களாச்சு இவங்களாச்சு. ஜனனி, நாங்கதான் உன்னை கூட்டி வந்தோம்ன்னு அவன்கிட்டே தப்பித்

தவறி கூட சொல்லிடாதம்மா. எங்களுக்கு பாடை கட்டிடுவான்" அவர்கள் கிளம்பிவிட விழித்தாள்.

"காதர், சபரி..." அவர்களைத் தடுக்க முயல,

"அம்மாடி, நான்தான் உன்னைப் பாக்கணும்னு சொல்லி, அவங்க கிட்டே உன்னை அழைச்சுட்டு வரச் சொன்னேன். என் மகனோட மனசுக்குள்ளே இருக்கும் பொண்ணை நேரில் பாக்கணும்னு எங்களுக்கு ஒரே ஆசை அதான்" அவர் சொல்ல, இதற்கு எப்படி ரியாக்ட் செய்வது என்றே தெரியாமல் விழித்தாள்.

"அவர்..." தீனாவின் தாய் இவ்வளவு வெளிப்படையாக பேசிய பிறகு, அதற்குமேல் பொறுக்க அவளால் முடியவில்லை.

"அவனுக்கு எதுவும் இல்லை, ரூமை பூட்டிப் போட்டுட்டு உக்காந்து மேட்ச் பாத்துட்டு இருக்கான். அது மட்டும் இல்லை, போனைக் கூட அணைச்சுப் போட்டுட்டான். அதான் தைரியமா உன்னை கூட்டி வரச் சொன்னேன்" அவள் அருகே அமர்ந்து அவள் கரத்தை பற்றிக் கொள்ள அவளுக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை.

"உன் வீட்டில் உனக்கு மாப்பிள்ளை பாக்க ஆரம்பிச்சுட்டாங்கன்னு தீனா சொன்னான். ரெண்டு நாளா குழந்தை சரியா கூட சாப்பிடலை, எனக்கு ஒரே வருத்தமா போச்சு. அவனுக்கும் வயசு ஏறிட்டே போகுது, இந்த வருஷம் முடிச்சுடலாம்னு பாக்கறோம்.

"எனக்கு உன் வாயால் கேட்டால் நிம்மதியா இருக்கும், அதான் வரச் சொன்னேன், சொல்லும்மா... அவனை உனக்குப் பிடிக்குமா? நாங்க உன்னை பெண் கேட்டு உங்க வீட்டுக்கு வரட்டுமா?" அவளிடமே நேரடியாக கேட்டுவிட இதற்கு அவளால் பதில் சொல்லாமல் இருக்க முடியாதே.

"எனக்கு அவரை மட்டும்தான் பிடிக்கும்... ஆனா அவரா உங்களைக் கூட்டி வந்தால் நீங்க வாங்க" அதென்னவோ தன் காதலுக்கான அங்கீகாரத்தை அவன் அளிக்க வேண்டும் என மனம் விரும்பியது. அதை சரியாக அவர்களும் புரிந்து கொண்டார்கள்.

“எதையுமே இவ்வளவு நிதானமா அவன் செய்து நான் பார்த்ததே இல்லை, உன் விஷயத்தில் மட்டும்தான் இப்படி இருக்கான். ஆனா ரொம்பநாள் தள்ளிப் போட மாட்டான்னு நினைக்கறேன். எனக்கு உன்னை ரொம்ப புடிச்சிருக்கும்மா, அவனுக்கு ஏத்த ஜோடி நீ...” அவள் கன்னம் வழிக்க அவள் கன்னங்களில் மெல்லிய சிவப்பு எட்டிப் பார்த்தது.

“ஒரு நிமிஷம் இரு அவனை வரச் சொல்றேன். அவன்கிட்டே சொல்லிட்டு கிளம்பு...” அவர் சொல்ல, அவரைத் தடுக்க முயன்றாள். அவனிடம் என்னவென்று சொல்வதாம்? அவள் இதயம் படபடத்தது. அதே நேரம், அவனை கண்களால் காணாமல் சென்றுவிட்டால், தன்னால் நிம்மதியாக இருக்க முடியாது என்று தோன்றியது.

அவர், அவன் அறையில் இருந்த அழைப்பு மணியை அழுத்தவே, “என்னம்மா இது? மேச் பாக்கும்போது தொல்லை பண்ணிக்கிட்டு?” சலிப்பாக எட்டிப் பார்த்தவன், கீழே இருந்த ஜனனியைப் பார்த்துவிட்டு, கண்களை கசக்கி விட்டுக் கொண்டான்.

“ஜானு... நீ... நான் கனவு ஏதாவது காண்கிறேனா? அம்மா, உங்க பக்கத்தில் ஒரு அழகான பொண்ணு நிக்கறது உங்க கண்ணுக்குத் தெரியுதா?” அவன் சந்தேகம் கேட்க, அவளுக்கு வெட்கமாகப் போயிற்று.

“அதெல்லாம் எங்க கண்ணுக்குத் தெரியறா, நீ முதல்ல கீழே இறங்கி வா. இவ உன்கிட்டே என்னவோ பேசணுமாம்?” அவர் சொல்ல, விழித்தாள்.

அவனோ படிகளில் இறங்காமல், அந்த கைப்பிடி சுவரில் சறுக்கி வர, “தீனா பாத்து...” அவன் கீழே வருகையில், பதறிபோய் தன்னை மீறி, அவன் விழுந்துவிடாதவாறு தடுக்க முயல, அவனாகவே இறங்கி நின்றான்.

“அவனுக்கு இப்படித்தான் வரத் தெரியும்மா... நான் சொன்னா எங்கே கேக்கறான்? இனிமேல் நீ சொன்னாலாவது கேக்கறானான்னு பார்ப்போம்” அவர் சொல்ல, அவள் இமைகளை ஒரு மாதிரி அவஸ்தையாக மூடிக்கொண்டாள்.

அவனோ, “என்னம்மா இது? பொசுக்குன்னு என்னைத் தூக்கி அவகிட்டே கொடுத்துட்டீங்க? இருந்தாலும் உங்களுக்கு ரொம்பப் பெரிய மனசும்மா.

அப்படியே என்னை கண்கலங்காம பாத்துக்கணும்னும் சொல்லிடுங்க” அவன் வியக்க, அவன் அருகே வந்தவர், போலியாக அவன் காதை முறுக்கினார்.

ஆனால் அவனோ தாயை இறுக்கமாக அணைத்துக் கொண்டவன், தந்தையை பார்க்க, அவர் இமையை அழுத்தமாக மூடித் திறக்க, ‘இந்த அதிசயம் எப்படி?’ என அசந்து போனான். பெண் இவள்தான் என அவன் அவர்களிடம் சொல்லவில்லை, அப்படியிருந்தும்... வியந்து போனான்.

“சாமிநாதா... எப்படி இப்படியெல்லாம்?” அவன் தந்தையை பெயர் சொல்லி அழைக்க அதிர்ந்து பார்த்தாள்.

சட்டென இந்த சூழலை அவளால் கையாள முடியவில்லை. ‘இதென்னா எல்லாத்தையும் இப்படி ஈசியா எடுத்துக்கறாங்க?’ அவள் எண்ண, தான் சிக்கிக் கொண்டிருக்கும் அந்த சூழல் படபடப்பாக உணர்ந்தாள். அங்கிருந்து அப்படியே தப்பிச் சென்றால் நன்றாக இருக்கும் என எண்ணினாள்.

“ஜானு, நீயென்ன இங்கே? ஏதாவது விஷயமா என்னைப் பாக்க வந்தியா?” மற்ற எதற்காகவும் அவள் வந்திருக்க மாட்டாள் என்று தோன்றியது.

“அது... அது வந்து... அண்ணா விஷயமா உங்ககிட்டே கொஞ்சம் பேசணும் அதான்... ஆபீஸ்ல வச்சு இதைப் பேச முடியாது” இதைப்பற்றி அவள் ஏற்கனவே அவனிடம் பேச வேண்டும் என முடிவெடுத்து வைத்திருந்ததை அப்பொழுது பயன்படுத்திக் கொண்டாள்.

“தீனா, நீ இவளை உன் ரூமுக்கு அழைச்சுட்டுப் போய் பேசு, போ...” தாய் சொல்ல, அவரை நம்ப முடியாமல் பார்த்தான்.

இதுவே ஜனனியின் இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தால் தாய் நிச்சயம் இப்படி ஒரு வார்த்தையை தன்னிடம் சொல்லியிருக்க மாட்டார் என்பது அவனுக்கு உறுதி. தாய்க்கு தன் நேசம் முழுதாக தெரிந்திருக்கிறது என்பதை அது உணர்த்த, ‘ஆர் யூ ஷ்யூர்?’ என்பதுபோல் அவரைப் பார்த்தான்.

“இல்ல ஆண்ட்டி… நாங்க இப்படியே… இங்கேயே…” நிச்சயம் அவளால் அவன் அறைக்குத் தனியாகச் செல்லும் தைரியம் எல்லாம் இருக்கவில்லை.

“ஜானு வா… மாடிக்குப் போய்டலாம்…” அவளது சங்கடம் அவனுக்குப் புரிய அவளை அழைத்துக்கொண்டு மாடியேறினான்.

பெரியவர்களிடம் பார்வையால் அனுமதி வேண்ட, ‘போ’ என்பதுபோல் அவர்கள் தலை அசைத்தார்கள்.

மாடிக்கு வந்தவள் அந்த மெல்லிய இருள் கவிழும் அழகை ரசிக்க, அவளை ரசித்தவாறே அமைதியாக நின்றிருந்தான். அவளது பலாசோவும், அதற்கு ஏற்ற குர்த்தாவும், கொஞ்சமான ஹீல்ஸ் சப்பலும் என அவன் ஒவ்வொன்றையும் ரசிக்க, அவன் தன்னைப் பார்ப்பதை அவனைப் பார்க்காமலேயே உணர்ந்து கொண்டாள்.

தன் மனதுக்கு இனியவள், தன் வீட்டில், தன் அருகாமையில், அந்த உணர்வை வர்ணிக்க அவனிடம் வார்த்தைகளே இல்லை. பேசவேண்டியதை பேசி முடித்துவிட்டால், இங்கே இருந்து கிளம்பி விடுவாளே என்று இருக்க, அமைதியாக அவள் அருகில் நின்றிருந்தான்.

ஆனால் அவளால் அதிக நேரம் அவன் அருகில், அந்த உணர்வை தாங்கிக் கொண்டு இருக்க முடியும் என்றே தோன்றவில்லை.

“அண்ணா பத்தி உங்ககிட்டே பேசணும்…” பேச்சை அவன் துவங்குவானா எனக் காத்திருக்க அவன் அதைத் துவங்கும் வழியைக் காணோம் எனவும் தானாகவே பேச்சைத் துவங்கினாள்.

“அதான் கீழேயே சொல்லிட்டியே, என்னன்னு சொல்லு…” அவள் முகத்தையே அசையாமல் பார்த்தான்.

“மாதும்மை விஷயமா அண்ணா ஏதாவது சொன்னாங்களா?” அவனிடம் கேட்க, புருவம் நெரித்தான்.

“மாதும்மை அவ்வளவு பிடிவாதமா இருக்கும்போது நாம என்ன செய்ய முடியும்?” அவளிடம் கேட்க,

“அம்மா அவனை மேரேஜ்க்கு ஃபோர்ஸ் பண்றாங்க, ஆனா இவன் இன்னும் பிடி கொடுக்காமல் இருக்கான். நான் எதையாவது கேட்டாலும் பதில் சொல்றது இல்லை. மாதும்மை கிட்டே பேசலாம்னா அவ முகம் கொடுக்கவே மாட்டேங்கறா… இதுக்கு என்னதான் தீர்வு?” அண்ணனின் விஷயம் அவளுக்கு கவலையை அளித்தது.

“அதெல்லாம் அவன் பாத்துப்பான். உனக்கு இன்னும் விஷயம் தெரியாதுன்னு நினைக்கறேன், மாதும்மை ஒரு நாலு நாளா ஆபீஸ் வராததன் காரணமே, இவன் அவங்க வீட்டுக்குப் போய் பெண் கேட்டதுதான். எல்லாம் கிட்டத்தட்ட முடிவாயிட்ட மாதிரிதான்னு கேள்விப் பட்டேன்” அவன் சொல்ல, நொடிகளுக்குள் அவள் முகத்தில் அப்படி ஒரு சந்தோசம்.

“நிஜமாவா சொல்றீங்க? காட்… அண்ணாவோ, அம்மாவோ என்கிட்டே சொல்லவே இல்லையே. எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?” தன்னை மீறி அவள் சந்தோஷத்தில் துள்ளிக் குதிக்க, அவளை அப்படியே இழுத்து கட்டிக்கொள்ள அவன் கைகள் பரபரத்தது.

“அவங்க ரெண்டுபேரும் இதை என்கிட்டே சொல்லவே இல்லை பாத்தீங்களா?” அவள் குறைபட,

“அபய் அப்படி தவிர்ப்பான்னு நினைக்கறியா? எல்லாம் உன் அம்மா செய்யிறதுதான். இதைக் கேள்விப்பட்டா, நீ எல்லாத்தையும் முன்னால் நின்னு செய்யணும்னு எதிர்பாப்ப, அது உன்னோட கலா அம்மாவுக்குப் பிடிக்காது. அங்கே போக முடியலன்னு நீயும் வருத்தப்படுவ, சோ… எல்லாத்தையும் கணக்குப் போட்டு அவங்க இதை சொல்லலை” அவன் தங்கள் குடும்ப விஷயத்தை அப்படியே புட்டு புட்டு வைக்க, சில நொடி மௌனம் காத்தாள்.

அவளது அமைதியைப் பார்த்தவன், அவளை மாற்ற வேண்டி, “இவ்வளவு சந்தோஷமான விஷயத்தை சொல்லியிருக்கேன், எனக்கு எதுவும் ட்ரீட் இல்லையா?” அவன் கண்கள் விஷமத்தில் ஒளிர்ந்தது.

அதை அவளும் சரியாக புரிந்துகொள்ள, “என்ன வேணும் சொல்லுங்க? ஹாட்டா கோல்டா?” கையை பாட்டிலை குறிக்கும் செய்கையில் வைத்துக்

காட்டினாள். அவன் எதைக் கேட்பான் என அவளுக்குத் தெரியாதா என்ன?

“ஏய், நீ தண்ணியடிக்கலாம் ஆரம்பிச்சுட்டியா?” அவளைக் கலாய்க்க, அவனை முறைத்தாள்.

“எனக்கு அதெல்லாம் வேண்டாம்... ஒரே ஒரு கிஸ் கொடு போதும்” அவன் நிதானமாக கேட்க, அவன் எதையோ கேட்கப் போகிறான் என எதிர்பார்த்திருந்தவள் திகைத்தாள்.

“என்ன? என்ன கேட்டீங்க?” அவளால் அவன் கேட்டதை நம்பவே முடியவில்லை. சொல்லப்போனால் தீனா இப்படியெல்லாம் பேசும் ஆளே கிடையாது என்பது அவளுக்குத் தெளிவாகத் தெரியும். அப்படி இருக்கையில்...

“அட, அதுக்கு ஏன் இவ்வளவு ஷாக் ஆகற? கடனாவே கொடு, வேண்ணா நான் திருப்பிக் கொடுத்துடறேன்” அவன் அசராமல் உரைக்க, சற்று திடுக்கிட்டு போனாள்.

“தீனா...” கண்டிப்பா, சிணுங்கலா எனத் தெரியாத குரலில் அழைக்க, இமைக்க கூட மறுத்து அவளைப் பார்த்தான்.

அவனைத் தொடர்ந்து பார்க்க முடியாமல் அவள் பார்வையைத் திருப்பிக் கொள்ள, அவனுக்குள் பிரளயம் வெடிக்கக் காத்துக் கொண்டிருந்தது. ஆனாலும் அவளை நெருங்கவோ, தொடவோ முயற்சி செய்யவே இல்லை.

அவளை இறுகத் தழுவி, அவள் இதழ்களுக்குள் புதைந்து, அவள் நெஞ்சுக்குழியில் தொலைந்து போக அவன் உணர்வுகள் தவித்துக் கொண்டிருந்தது. அவன் இவ்வளவு பேசிய பிறகும், ‘எந்த உரிமையில் என்னிடம் இப்படிப் பேசுகிறாய்?’ என அவளும் கேட்கவில்லை, அவனும் சொல்லவில்லை.

“தீனா, நாம போகலாம்...” உரைத்தாலும் அவனைத் தாண்டி செல்லும் தைரியம் மட்டும் சுத்தமாக வரவில்லை.

“ஜானு, அன்னைக்காவது கட்டிப் புடிக்கணும்னு மட்டும்தான் தோணிச்சு, ஆனா இன்னைக்கு… ஐ ஃபீல் லைக் கிஸ் யூ…” ஆழ்ந்த குரலில் உரைக்க, உள்ளுக்குள் சிதறிக் கொண்டிருந்தாள். வேகமாக அவனுக்கு முதுகு காட்டி திரும்பிக் கொள்ள,

“உன்னை ரொம்ப பயப்பட வைக்கறேனா? என்னைப் பார்த்தால் பயமா இருக்கா?” கேட்டவன் அவன் நின்ற இடத்தில் இருந்து கொஞ்சம் கூட அசையவே இல்லை. அவனைப் பார்த்து பட்டென அவனைப் பார்த்து திரும்பியவள், மறுப்பாக தலை அசைத்தாள்.

நிச்சயம் அவன் தன்னை நெருங்கி முத்தமிட்டால் தடுக்கும் நிலையில் எல்லாம் அவள் இல்லை. ஆனால், இருக்கும் இடமும் சூழலும் அவளை சங்கடம் கொள்ளச் செய்ய, “இப்படிப் பேசாதீங்க” முனகினாள்.

“பேசக் கூட கூடாதா? அப்போ இதையெல்லாம் நான் யார்கிட்டே சொல்றதாம்?” அவளிடம் நியாயம் கேட்க, சத்தியமாக அவளால் முடியவே இல்லை. அந்த இடமே நொடிகளுக்குள் வெம்மையாகிப் போன உணர்வு. இருவரும் அசையாமல் அப்படியே நின்றிருந்தார்கள்.

“உனக்கு நிஜமாவே புரியவே இல்லையா?” அவன் கேட்க, பதில் சொல்லும் நிலையில் எல்லாம் அவள் இல்லை.

“கேள்வி கேட்காமல் பதில் சொல்லுங்க தீனா…” உரைத்தவள், அவன் கரத்தை ஒரு நொடி அழுத்தமாக பற்றி விடுவித்துவிட்டு, வேகமாக படிகளில் இறங்கி கீழே சென்றுவிட, அவள் அணைத்து விடுவித்த கரத்தில் அழுத்தமாக தன் இதழைப் பதித்துவிட்டு, அவளை வீட்டில் டிராப் பண்ண வேண்டி அவனும் கீழே சென்றான்.

## பகுதி – 10.

அன்று நுஹாவுக்கு பிறந்தநாள். பொதுவாகவே அவர்களது அலுவலகத்தில் யாருக்காவது பிறந்தநாள் என்றால் அறிவிப்பு பலகையில் வெளியிட்டு, கூடவே ஒரு கேக்கும் வெட்ட வைப்பார்கள். காலையில் நுஹா அலுவலகத்துக்குள் நுழைந்த உடனேயே அனைவரும் ஒன்று கூடி வாழ்த்த, மெல்லிய புன்னகையில் அதை ஏற்றுக் கொண்டாள்.

ஜனனி அவளை அணைத்து, அவள் கன்னத்தில் மெல்லியதாக இதழ் பதிக்க, “லவ் யூ டி...” அவளும் அணைத்துக் கொண்டாள். அனைவரும் கைதட்டி ஆரவாரிக்க, தீனா ஒரு அழுத்தமான பார்வையோடு நின்றிருந்தான்.

“ஓகே கைய்ஸ்... கோ டு யுவர் சீட்ஸ்... கேக் கட்டிங் அப்போ மீட் பண்ணிக்கலாம்” டீன் ரக்ஷன் குரல் கொடுக்கவே, அனைவரும் அவர்களது இருக்கைக்குத் திரும்பினார்கள்.

அதே நேரம் தீனாவைக் கவனித்துவிட்ட ஜனனி, அவனது பார்வைக்கான பொருள் புரியாமல் ஒரு நொடி குழம்ப, “என்னடி... உன் ஆளுக்கு கொடுக்க வேண்டியதை, எனக்கு கொடுத்துட்டன்னு சார் ரொம்ப கோபத்தில் நிக்கறார் போல?” அவள் காதுக்குள் முனக, அப்பொழுதுதான் அவளுக்கே புரிந்தது.

“நுஹா... பேசாமல் போ...” பிறந்தநாளும் அதுவுமாக அவளைத் திட்ட முடியாமல், சிறு கண்டிப்பாய் உரைக்க, அவள் விலகி நடந்தாள்.

அவள் செல்லவே, தீனாவைத் தாண்டிச் செல்ல முயல, “அவங்க எல்லாம் கேக்காமலே கிடைக்குது, நான் கேட்டும் எனக்குக் கிடைக்கலை” அவன் சொல்ல, சில பல நொடிகள் செயல்பட முடியாமல் அப்படியே நின்றுவிட்டாள்.

அவன் முகம் பார்க்கவும் நாணம் தடுக்க, “இப்படியெல்லாம் பேசாதீங்க” மெதுவாக முனகினாள்.

“பேசக் கூட கூடாதா?” அவன் பெருமூச்சை வெளியிட, பட்டென அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனது கண்கள் இரண்டும் அவளை முழுதாக கொள்ளையிட்டுக் கொண்டிருக்க, வேகமாக அங்கிருந்து அகன்றாள். அவளது இதயம் பலமாக அடித்துக் கொண்டது.

‘ஹையோ ஆண்டவா... வர வர ரொம்ப பண்றார்... என்னால் தாங்கிக்கவே முடியலை’ மனதுக்குள் மட்டுமே அவளால் புலம்ப முடிந்தது. மறுத்து பேசவும் முடியவில்லை, அவனுக்கு சம்மதம் கொடுக்கவும் முடியவில்லை. ஒரு மாதிரி அவஸ்தையாக உணர்ந்தாள்.

அவள் நிலை உணர்ந்தோ என்னவோ, அதன் பிறகு அவளை தொல்லை செய்யவே இல்லை. அமைதியாக அவள் அருகில் சென்று அமர்ந்தவன், சாதாரணமாக உரையாடிய பிறகே அவளால் இயல்பாக இருக்க முடிந்தது. அவனது இந்த அனுசரணையும் அதிகம் பிடித்துத் தொலைத்தது என்பதே உண்மை.

காலை காபி இடைவேளையின் பொழுது கேக் கட்டிங் இருக்க, தனது தோழமைகள் அனைவருக்கும் கேக் கொடுத்தவள், ஜெனிட்டாவுக்கும் ஜனனிக்கும் கேக் ஊட்ட, "பார்ட்டி எப்போ?" அனைவரின் கேள்வியும் அதுவாகத்தான் இருந்தது.

"இன்னைக்கு கண்டிப்பா முடியாது. இந்த வீக் எண்டு பார்ட்டி என்னோடது. ஆனால் நோ பப்... ஒன்லி ஹோட்டல்..." அவள் சொல்ல, அனைவருமே ஒத்துக் கொண்டார்கள். பொதுவாகவே அங்கே கொண்டாட்டங்கள் அத்தனையையும் வார இறுதிக்கு ஒத்தி வைப்பார்கள் என்பது எழுதப்படாத விதி.

அன்று அவர்களது டீமுக்கு புது ட்ரெயினி வருவதாகச் சொல்லவே, அது யாராக இருக்கும் என அனைவருமே சற்று ஆவலாக எதிர்பார்த்தார்கள். தங்கள் டீமுக்குள் ஒத்துப்போகும் ஆளாக இருந்தால் நன்றாக இருக்குமே என்பது அனைவரின் எண்ணமாக இருந்தது.

இத்தனை மாதங்களில் அவர்களது டீம் மெம்பர்களுக்கு இடையில் சிறு பிணக்குகள் கூட வந்தது கிடையாது. அப்படியே சிறு வாக்குவாதம் வந்தாலும் அதை பெரிதாக அவர்கள் வளரவிட்டது இல்லை, எனவேதான் அவ்வாறு எண்ணினார்கள்.

"மச்சான், வர்ற பொண்ணாவது எனக்கு செட்டானால் நல்லா இருக்கும்டா" சபரி, சுதிரிடம் உரைக்க, அவனோ வேகமாக தன் அருகே தீனா இருக்கிறானா என திரும்பிப் பார்த்தான். அப்படி இல்லை எனத் தெரிந்த பிறகுதான் நிம்மதியாயான்.

"அவன் இல்லைன்னு தெரிஞ்ச பிறகுதான் தைரியமா சொன்னேன்" சபரி கெத்தாக உரைக்க, அவனை முறைத்தான்.

“டேய் செனப்பண்ணி, உன்னை திருத்தவே முடியாது. நீ சொன்னது மட்டும் தீனா காதில் விழுந்திருக்கணும், உன்னை கொன்னிருப்பான். பொண்ணு செட்டாகுறது எல்லாம் ஒரு மேட்டராடா? அதெல்லாம் தானா அமையணும். இப்படி அதுக்குன்னே அலையக் கூடாது புரியுதா?

“இங்கே அவன் அவனுக்கு ஆயிரம் பிரச்சனை என்றால், இவனுக்கு ஒரு பிரச்சனை. போய் வேலையைப் பாருடா” நிஜமாகவே கடிந்து கொண்டான். சபரிக்கு காதல் திருமணம் முடிக்க வேண்டும் என்று கொள்ளை ஆசை, ஆனால் அவனது உருவம் கண்டு பெண்கள் யாரும் அவனை நெருங்குவதே இல்லை.

அப்படி இருக்கையில், அவனது காதல் ஆசை நிறைவேறாத கனவாகவே இன்றளவும் இருக்கிறது. எனவேதான் புதிதாக வரும் பெண்ணாவது தனக்கு ஏற்றவளாக இருப்பாளா என அவனது மனம் வெகுவாக ஆசைப் பட்டது.

“டேய் மச்சான் வர்றது ஒரு பொண்ணுன்னு டீன் சொல்லிட்டான், அவ பேர் என்னவா இருக்கும்?” சபரி விடுவதாக இல்லை.

“ஆண்டவா... இவன் அவகிட்டே செருப்படி வாங்காமல் இருக்க மாட்டான் போலவே. உனக்கு ஏண்டா இந்த வேண்டாத வேலை? குண்டா உன்னை கொன்னுடுவேன்... பேசாமல் இருடா. உன்னால் தீனாகிட்டே மிதி வாங்க எனக்கு ஆவி இல்லை. விடு...” சற்று கோபமாகவே சுதிர் சொல்ல, அதன் பிறகுதான் அமைதியானான்.

ஆனாலும்... “இல்ல... இல்ல... எனக்கு இல்லை...” திருவிளையாடல் தருமிபோல் அவன் புலம்பிக் கொள்ள, அந்த நிலையிலும் அவனுக்கு சிரிப்பு வந்தது.

மறுநாள் காலையில் பேருந்திலும் அந்த பேச்சு இடம்பெற, “இந்த ஆம்பளைங்களுக்கு ஒரு பொண்ணு டீமுக்குள் வர்றான்னு தெரிஞ்சா போதும், உடனே அவளைப்பற்றியே பேச வேண்டியது. இன்னும் ஒரு மாசத்துக்கு எல்லாரும் அவ பின்னாடியே சுத்துவாங்க பாரேன்” ஜெனிட்டா ஜனனியிடம் உரைக்க, அவளது பார்வை தன்னவனை தொட்டு மீண்டது.

“எல்லாரையும் அப்படிச் சொல்லிட முடியாது” அவள் சொல்ல,

“ஏய்... மெயினா உன் ஆளை முதல்ல பொத்தி வை. அவர் யார் பின்னாடியும் போறாரோ இல்லையோ, நம்ம கம்பெனியில் இருக்க முக்கால்வாசி பொண்ணுங்க அவரை ட்ரை பண்ணிட்டுதான் இருக்காங்க. அவர்தான் சிக்காமல் இருக்கார்.

“அவங்க எல்லாம் வேற டீம் என்பதால் பரவாயில்லை, இதுவோ நம்ம டீமுக்குள்ளேயே வர்றா பாத்து” அவளை எச்சரித்தாள்.

“ஜெனிட்டா, இதென்ன இப்படி பேசுற? ஒரு பொண்ணான நீயே இன்னொரு பொண்ணைப் பற்றி இப்படி பேசலாமா? அதுவும், இது வரைக்கும் நாம பாக்காத பொண்ணைப் பற்றி நாமளே இப்படி தப்பா பேசலாமா? இப்போ நீ இருக்க, நுஹா இருக்கா நீங்க எல்லாம் அப்படியா இருக்கீங்க?” அவள் பட்டென கேட்டாள்.

“அடிப்பாவி, நான் ஏதோ எதார்த்தமா சொன்னால், நீ என் அடிமடியிலேயே கை வைக்கறியா? நான் எதுவுமே சொல்லலம்மா, என்னை ஆளை விடு. அவங்க எல்லாம் ஓவரா ஜொள்ளு விடவே, நான் கொஞ்சம் எதார்த்தமா பேசிட்டேன்” வேகமாக பின் வாங்கினாள்.

கூடவே, “வர்றது ஒரு பொண்ணுங்கறதால தப்பிச்சோம், இதுவே ஒரு ஆம்பளையா இருந்திருந்தால், அவன் எப்படி இருப்பானோ? ஜொள்ளு விடுவானோ? வழிவானோ? குடைச்சல் கொடுப்பானோன்னு கவலைப் பட்டுகிட்டு இருந்திருப்போம்.

“இப்போ அந்த தொல்லை இல்லை. ஏற்கனவே ‘டீன்’னு ஒருத்தன் கொடுக்குற குடைச்சலையே சம்மாளிக்க முடியலை, இதில் இன்னொருத்தன்னா தாங்கியிருக்கவே முடியாது” அவள் நிஜமான விடுதலை உணர்வில் உரைக்க, அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டி இருந்தது.

அலுவலகம் வந்து சேர்ந்தவர்களை அதிகம் சோதிக்காமல் பதினோரு மணியளவில் ரக்ஷன் தன் அலுவலக அறையில் வைத்து அவளை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

“ஹேய் கைஸ்... ஷி இஸ் யுவர் நியூ டீம் மெம்பர், ட்ரெயினி மிஸ் நிவேதா. நிவேதா, இவங்கதான் நீ வேலை பார்க்கப் போகும் டீம் மேட்ஸ், சபரி, காதர், சுதிர், தீனா, ஜெனிட்டா, மாதும்மை, ஜனனி. ஆனா உங்களை ட்ரெயின் பண்ணப் போறது தீனாதான்.

“தீனா, இப்போதைக்கு இவங்களை உங்க ட்ரெயினியா சேர்த்துக்கோங்க. இப்போ போயிட்டிருக்க ப்ராஜெக்ட் பத்தி சொல்லிக் கொடுங்க. இப்போதைக்கு தனியா எதுவும் கொடுக்க வேண்டாம். ஆறு மாசம் போன பிறகு, அவங்க பெர்பார்மென்ஸ் பாத்துட்டு முடிவு பண்ணிக்கலாம்” அவன் சொல்ல அமைதியாக ஏற்றான்.

நிவேதா... ஒரு குட்டிப் புயலென இருந்தாள். அவளது மெலிந்த தேகமும், அவள் அணிந்திருந்த டைட் ஜீன்சும் டாப்பும்... அவளது பளீர் முகமும், எடுப்பான உதட்டுச் சாயமும் அங்கே இருந்த ஆண்கள் அனைவரையுமே ஒரு நொடி மூச்சடைக்கச் செய்தது.

ஹை ஹீல்ஸ் அணிந்து, தலையை ஸ்ட்ரெயிட்டனிங் செய்து, அவள் நின்ற கோலம்... அதுவும் அவள் ஆடைக்குள் விம்மிய அழகைப் பார்க்கவே அனைவரின் கண்களும் போட்டி போட்டாலும், நாகரீகம் கருதி தங்களை அடக்கிக் கொண்டார்கள்.

ஆண்களின் நிலை இப்படி இருந்தது என்றால், பெண்களின் நிலையை கேட்கவும் வேண்டுமா? அவளது அழகைக் கண்டு மனதுக்குள் சிறு பொறாமை எழுந்த அதே நேரம், அவள் உடையை எண்ணி சிறு ஒவ்வாமை உணர்வும் தோன்றாமல் இல்லை.

ஆனால், உடை என்பது அவரவர் விருப்பம் என்பதால், அதில் தலையிடுவது அநாகரீகம் என்றே எண்ணினார்கள். ஆனாலும், முதல்நாள் அலுவலகம் வருகையில் அணியும் உடை இதுவல்ல என்ற எண்ணம் அனைவரின் மனதிலும் எழாமல் இல்லை.

“காதர், உங்க இடத்தில் இனிமேல் நிவேதா இருக்கட்டும், நீங்க பக்கத்து கேபின் போய்டுங்க. ஏன்னா தீனாதான் அவங்களுக்கு ட்ரெயினிங் கொடுப்பதால் அதுதான் வசதியா இருக்கும்” ரக்ஷன் அலுக்காமல்

குண்டை தூக்கிப் போட, ஜனனிக்கு அதைத் தாங்கவே சற்று நேரம் பிடித்தது.

அவளுக்கு தீனாவின்மேல் சந்தேகம், நம்பிக்கையின்மை என்பதெல்லாம் இல்லை, ஆனால்... தன்னை மீறி மனதுக்குள் சிறு குடைச்சல் எழுமே, அப்படி ஒரு நிலையில் இருந்தாள். அவள் தீனாவின் முகம் பார்க்க, அங்கே பெரிதாக எந்த மாற்றமும் அவளுக்குத் தெரியவில்லை.

“யூ மே கோ...” ரக்ஷன் உரைக்க, அனைவரும் அங்கே இருந்து கலைந்தார்கள். அறிமுகப் படலம் முடியவே, அனைவரும் தங்கள் இடத்துக்குத் திரும்ப, நிவேதாவும் அவர்களோடு வெளியேறினாள்.

“ஹாய் கைஸ்...” அவள் உற்சாகமாக குரல் கொடுக்கவே, அனைவருமே அவளைப் பார்த்து மெல்லியதாக புன்னகைத்தார்கள்.

“என்னப்பா எல்லாரும் மிரண்டு போய் பாக்கறீங்க? நான் கொஞ்சம் நல்லவதான். நீங்க சொல்லிக் கொடுக்குற வேலையை சும்மா கற்பூரம் மாதிரி கத்துப்பேன். நான் டிஸ்டிங்கஷன் பாஸ்அவுட் ஸ்டூடண்ட்பா... என்னையும் உங்களோட சேர்த்துக்கோங்க” அவள் சொல்ல, முதல் நாளே கொஞ்சம் கூட பயப்படாமல், பதட்டப் படாமல் பட்டாசாக பேசும் அவளை அனைவருக்குமே கொஞ்சம் பிடித்தது.

“ஹல்லோ பாஸ்... நீங்க கொஞ்சம் சொல்லுங்க” அவள் தீனாவின் பக்கம் நகர்ந்து நிற்க, ஜனனிக்குள் மெல்லிய பூகம்பம்.

“பாஸா? ஜஸ்ட் தீனா அவ்வளவுதான். இங்கே எல்லாரையுமே பேர் சொல்லித்தான் கூப்பிடணும், அது இங்கே எழுதப்படாத விதி” அவன் சொல்ல,

“ஹப்பா பேசிட்டீங்களா? உங்களை பேச வைக்க நான் இவ்வளவு பேச வேண்டி இருக்கு. ஓகே தீனா... நான் நிவேதா... ப்ரண்ட்ஸ்...” தன் கையை அவன் பக்கம் நீட்ட, தயங்காமல் அதைப் பற்றி குலுக்கினான்.

“ப்ரண்ட்ஸ்... இவங்களை எல்லாம் ரக்சனே இன்றோ கொடுத்துட்டார். மிச்சத்தை நிதானமா பாத்துக்கலாம், இப்போ சீட்டுக்கு போகலாம். காதர்,

உன் திங்க்சை எல்லாம் முதல்ல எடு, இவங்களுக்கு பிளேசை ஒதுக்கி விடு” அவன் சொல்லவே, வேலைகள் படபடவென நடந்தேறியது.

நிவேதாவுக்கான தனி லேப்டாப் வர, அதில் இருந்த கடவுச்சொல்லை மாற்றி, அவளது தனிப்பட்ட கடவுச்சொல்லை புகுத்தி செயல்பட வைத்தவன், “எங்கேயும் போக முன்னாடி லேப்டாப்பை லாக் பண்ணாமல் போகக் கூடாது, அதுதான் முதல் ரூல்…” அவன் அவளுக்கு சொல்லிக் கொடுக்க, ஜனனியால் அவர்கள் பேசிக் கொள்வதை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

ஒரு மாதிரி ஒவ்வாமை உணர்வு எழுந்து தேகம் முழுவதும் பரவும் உணர்வு. அவன் அப்படி ஒன்றும் தனிப்பட்ட விஷயங்களோ, சாதாரண விசாரிப்புக்களோ கூட எதுவும் செய்யவில்லை. வழக்கமான நடைமுறைகளை மட்டுமே அவன் சொல்லிக் கொடுத்தான்.

அப்படி இருக்கையில், தான் கோபப்படுவதில் கொஞ்சம் கூட நியாயம் இல்லை என அவளுக்கே தெரிகிறது. ஆனாலும், பாழாய் போன மனம் அதை ஏற்க மறுக்கிறதே. கணினியில் எழுத்துக்கள் எல்லாம் நாட்டியமாடும் உணர்வு.

உள்ளுக்குள் இருக்கும் பொசசிவ் குணம் தலைதூக்கி அவளை ஆட்டுவித்துக் கொண்டிருந்தது. தனக்கு சொந்தமான ஒன்றை அவள் தட்டிப்பறிப்பது போன்ற ஒரு உணர்வு. ஒரு வேளை நிவேதாவைப் பற்றித் தெரிந்திருந்தால் அப்படி எண்ணியிருக்க மாட்டாளோ என்னவோ?

ஒரு மனிதரைப் பற்றி பழகிப் பார்த்த பிறகுதானே தெரியும், அவர்கள் பழகுவதற்கு இனிமையானவர்களா? இல்லையென்றால் முள்ளைப் போன்றவர்களா என்று. எனவே மனம் தடுமாறிப்போய் அமர்ந்திருந்தாள்.

டைப்படிக்கும் எதுவும் அவள் கவனத்திலேயே பதியவில்லை. கடந்த சில நிமிடங்களாக அவளைக் கவனித்த மாதும்மை, கொஞ்ச நேரம் அமைதியாக இருந்துவிட்டு, அதற்குமேல் முடியாமல் ஜனனியைக் கலைந்தாள்.

அவளது மனநிலை புரிந்தவள் போல், அவள் அருகே இருந்த மாதும்மை அவள் கரத்தை அழுத்த, பட்டென அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

தன்னிடம் எப்பொழுதுமே சிறு விலகலை வெளிப்படுத்தும் அவளது செய்கையில் சட்டென தெளிந்தாள்.

“ஜனனி, என்ன இது? என்னென்னவோ டைப் பண்ணிட்டு இருக்க? இவ்வளவுதான் உன் காதலா?” அவள் வெகு கூர்மையாக கேட்க, அந்த வார்த்தைகள் கூர்மையான கத்தியென அவள் இதயத்துக்குள் இறங்கியது.

“அண்ணி...” அவள் கண்கள் கலங்க அழைக்க, வழக்கமாக அவள் அண்ணி என அழைத்தால் கோபம் கொள்ளும் மாதும்மை, அன்று அவளை எதுவும் சொல்லாமல் திரும்பிக் கொண்டாள்.

அதன் பிறகு தெளிந்த ஜனனி, தன் நினைப்பை எண்ணி தானே வெட்கப் பட்டாள். தனக்குள் எழுந்தது பயம் என்பதை விட, ஒருவித பொசசிவ் குணம் என்பதை தெளிவாக உணர்ந்து கொண்டாள். அதை வளர விடுவது தனக்கும், தன் காதலுக்கும் நல்லதில்லை என்பதும் தெளிவாகப் புரிந்தது.

“அப்போ என் அண்ணனை நீங்க நம்பறீங்களா அண்ணி?” அவள் கேட்க, அவளை நிமிர்ந்து பார்த்தவள், அவளது கேள்விக்கு பதில் சொல்லும் நிலையில் எல்லாம் இல்லை.

“நாம இதைப்பற்றி பேச வேண்டாம் ஜனனி” அவளது குரல் பிடிவாதமாக ஒலிக்க, ஜனனிக்கு பெரும் கவலை எழுந்தது.

“அப்போ அண்ணாவைப் பிடிக்காமத்தான் கல்யாணம் பண்ணிக்க ஒத்துகிட்டீங்களா?” அவள் கேட்க, ‘இதற்கான பதில் உனக்கே தெரியும், என்பதுபோல் பார்த்திருந்தாள்.

ஜனனியோ அதைக் கண்டுகொள்ளாமல், “பதில் சொல்லுங்க அண்ணி... நான் என்னென்னவோ சந்தோஷ விஷயம் எல்லாம் கேள்விப்பட்டேன். நீங்க என்னன்னா இன்னுமே இப்படிப் பேசறீங்க?” கவலையானாள்.

“ஜனனி, நான் இப்பவும் சொல்றேன், உங்க அண்ணாவை விலகிக்கச் சொல், அப்படி விலகிக் கொண்டால், முதலில் சந்தோஷப்படும் ஆள் நானாகத்தான் இருப்பேன். ஆனா உங்க அண்ணா கேக்க மாட்டாங்க, எனக்குத் தெரியும்” உரைத்தவள் பட்டென அங்கிருந்து எழுந்து செல்ல,

விக்கித்துப் போனாள். மாதும்மையின் செய்கை அவளுக்கு பெரும் கவலையை அளித்தது.

ஜனனியால் கவலைப்பட மட்டுமே முடியும், மாறாக எந்தவொரு முடிவையோ, தீர்மானத்தையோ அவளால் எடுக்கவே முடியாது. அப்படி இருக்கையில், தன் அண்ணனின் மணவாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என மனதுக்குள்ளேயே வேண்டுதல் வைப்பதைத் தவிர அவளால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

மாதும்மையின் பிடிவாதம் கண்டு அபயிடமே பேசிவிட்டாள். ஆனால் மாதும்மையை திருமணம் செய்வதில் அவன் அவ்வளவு பிடிவாதமாக தீர்மானமாக இருந்தான். அதே நேரம், மாதும்மையிடம் பேசலாம் என முயன்றாலே, 'அவரை விலகிக் கொள்ளச் சொல்' என்ற ஒற்றை வாக்கியத்தோடு விலகி நடக்கிறாள்.

ஆகமொத்தம், அவர்கள் வாழ்க்கை என்னவாகப் போகிறது என்று கவலைப்படுவதால் எந்த பயனும் இல்லை என்றே அவளுக்குத் தோன்றியது. எப்படியோ ஒரு வழியாக அவள் எதை எதையோ எண்ணி முடிக்கையில், தீனா நிவேதாவுக்கு வேலை விஷயமாக எதையோ சொல்லிக் கொடுப்பதை உணர்ந்து கொண்டாள்.

தேவையில்லாமல் அங்கே அமர்ந்து மனதை புண்ணாக்கிக் கொள்ள விரும்பாமல், கேண்டீனுக்கு எழுந்து சென்றாள். அவள் அங்கே சென்ற ஐந்தாவது நிமிடம் தீனாவும் அங்கே வர, அவ்வளவு நேரமாக சோர்ந்திருந்த அவள் மனதுக்குள் பெரும் உற்சாக ஊற்று.

அவன் தனக்கென பிளாக் காபியை எடுத்துக் கொண்டு வந்து தன் அருகே அமர, அவனையே இமைக்காமல் பார்த்திருந்தாள்.

"என்ன திடீர்னு இப்படி ஒரு பார்வை?" அவளைத் திரும்பிப் பார்க்காமலேயே அவள் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து கொண்டவன் அவளிடம் கேட்க, அவள் என்ன பதில் சொல்வதாம்? வேகமாக தன் பார்வையை திருப்பிக் கொண்டாள்.

அதென்னவோ எப்பொழுதுமே தன் பார்வையிலும், செயல்களிலும் அவ்வளவு கவனமெடுப்பான் அவன். அவர்களுக்கான நொடிநேர தனிமை

என்றாலும், அதை முழுதாக தன்வசம் ஆக்கிக் கொள்ளவும் அவன் மறப்பதில்லை.

‘சும்மாவே என்னை விட மாட்டார், இப்போ இப்படி பாத்து வேற தொலைச்சா?’ தன்னைத் தானே கடிந்து கொண்டாள்.

“இல்ல சும்மாதான்…” அவள் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, “தீனா, கேண்டீன் வர்றேன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டு வர மாட்டீங்களா? நானே இந்த இடத்தை கண்டுபிடிச்சு வர வேண்டியதா போச்சு. ஒரு சின்னப் பிள்ளைக்கு முதல்லையே எல்லாத்தையும் சொல்லிக் கொடுங்கப்பா” ஜனனியிடம் சிநேகமாக ஒரு புன்னகையை சிந்தியவள், அவன் எதிரில் அமர்ந்தாள்.

அவனது காபிக் கப்பை எட்டிப் பார்த்தவள், “என்ன இது பிளாக் காபியா? ஹையோ கசக்கும். இங்கே பில்ட்டர் காபி கிடைக்காதா?” அவள் கேட்க, அங்கே இருந்த காபி மேக்கரை சுட்டிக் காட்டினான்.

அதைப் பார்த்தவள், “ஐய… அதில் மெஷின் கழுவுற தண்ணி தானே வரும்” அவள் சொல்ல, அங்கே அமர்ந்து காபி அருந்திக் கொண்டிருந்தவர்கள் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

“ம்ச்… என்ன பேச்சு இது? இங்கே எத்தனைபேர் அந்த காபியை குடிக்கறாங்கன்னு தெரியுதா? இப்படி எதையாவது பேச முன்னாடி கொஞ்சம் அக்கம் பக்கம் பாத்துட்டு பேசினால் நல்லது” கண்டிப்பும் இல்லாமல், அறிவுரையும் இல்லாத ஒரு குரலில் அவன் சொல்லி முடிக்க, வாய்விட்டே சிரிக்கத் துவங்கி இருந்தாள்.

“ஹப்பா… சரியான ஆளுப்பா நீங்க. எப்படி பேசறீங்க” அவள் சொல்ல, இதில் எதிலுமே ஜனனி கலந்துகொள்ளவில்லை.

ஜனனி கடித்துவிட்டு மிச்சம் வைத்திருந்த சமோசாவை சுவாதீனமாக எடுத்தவன், மொத்தத்தையும் வாய்க்குள் திணித்துக் கொள்ள, ‘ஐயோ, அது நான் சாப்ட்டு மிச்சம் வச்ச எச்சில்…’ சொல்ல வந்த வார்த்தைகள் அனைத்தும் அப்படியே தொண்டைக்குள் சிக்கிக் கொண்டது.

‘ஆரம்பிச்சுட்டார்…’ மனம் சிணுங்கலாக, பரவசமாக எண்ணிக் கொண்டது. அப்படியே அவன் தோளில் அழுத்தமாக சாய்ந்துகொள்ள மனம் பரபரக்க, அந்த உணர்வை அவளால் தடுக்கவே முடியவில்லை.

“சரி நான் கிளம்பறேன்…” இரு பெண்களுக்கும் பொதுவாக உரைத்தவன், நிவேதா அறியாதவாறு, ஜனனியின் கரத்தை அழுத்தமாக பற்றி விடுவித்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தான். அப்படியே பிரமித்துபோய் அமர்ந்துவிட்டாள் ஜனனி.

பொதுவாகவே அவளிடத்தில் விலகி நிற்பவன், மற்றவர் முன்னால் அவ்வளவு கவனமெடுப்பவன், இன்று இப்படி தன் கையை தொட்டு விட்டுச் செல்கிறான் என்றால்… அப்படியே ஒரு மாதிரி சில்லிட்டுப் போனாள்.

“நைஸ் கை இல்ல…” நிவேதா அவளைக் கலைக்க, கண்களில் கனவு பொங்க, மையமாக தலை அசைத்தாள்.

நான் என்னதான் பேசினாலும் அளந்துதான் பேசறார். நிஜமாவே அவரோட குணம் இதுதானா? இல்ல…” நிவேதா இழுத்து நிறுத்த, ஜனனி அவளை அழுத்தமாக ஏறிட்டாள்.

அதில், ‘எனக்கு மட்டுமே உரிமை உடையவன், நீ விலகி நில்’ என்ற பொருள் தொங்கி நிற்க, அதை அவள் கொஞ்சம் கூட கண்டுகொள்ளவே இல்லை.

“என்னங்க இது… இங்கே யாருமே பேசவே மாட்டீங்களா? இப்படியே போனால் நான் பேச்சையே மறந்துடுவேன் போல, சரி இருங்க, நானும் ஒரு கப் காபி எடுத்துட்டு வர்றேன்” அவள் செல்ல, இவளை எப்படி எடுத்துக்கொள்ள? என்ற யோசனையில் அவளைப் பார்த்திருந்தாள்.

அதே நேரம், நிவேதாவின் மனதுக்குள், தீனாவிடம் விளையாடிப் பார்க்கவேண்டும் என்ற ஆசை முளைவிட்டது.

பகுதி – 11.

நிவேதா, அலுவலகம் வரத் துவங்கிய இந்த இரண்டே நாட்களில் அங்கே இருந்தவர்களைப் பற்றிய ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். அதில் தீனாவின் கோஷ்டியைப் பற்றி எண்ணுகையிலேயே அவள் இதழ்களில் ஒரு புன்னகை வந்து ஒட்டிக் கொண்டது.

அதில் எப்பொழுதும் பெண்களிடமிருந்து விலகி நிற்கும் காதர், யாராக இருந்தாலும் அந்த பெண்ணிடம் சற்று வழியும் சபரி, பெற்றவர்களுக்கு இன்னும் பயப்படும் சுதிர் என ஒவ்வொருவரையுமே ஆழ்ந்து கவனித்தாள். பொதுவாகவே தங்களுடன் வேலை செய்யும் ஆண்களை சரியாக கணித்து வைப்பது பெண்களின் குணம் ஆயிற்றே.

இதில் எல்லாம் அவளால் தெளிவாக கணிக்க முடியாதது தீனாவைத்தான். உதவி எனக் கேட்டால் அது என்னவாக இருந்தாலும் செய்து கொடுக்காமல் அவன் விடவே இல்லை. ஒரு வேளை தன்னால் முடியாத ஒன்றாக இருந்தால் கூட, மற்றவர்களிடம் கேட்டாவது அதைச் செய்து கொடுத்தான்.

அவன் இருக்கும் இடமே கலகலப்புக்கு பஞ்சம் இன்றி இருந்தது. அனைத்து பெண்களிடமும் அவ்வளவு கண்ணியமாக பழகினான். அவர்களது கண்ணைத் தாண்டி அவனது பார்வை வேறு எங்கும் பயணித்ததாக அவளுக்கு நினைவே இல்லை.

சொல்லப்போனால் அவள் அணிந்துவரும் டைட் ஷேர்ட்டில் திமிரும் அவளது அழகை அங்கே இருக்கும் ஆண்களின் கண்கள் ஒரு நொடியாவது தீண்டி விலகுவதைக் கண்டிருக்கிறாள். ஆனால், அவன் அருகிலேயே இருந்தாலும் சரி, விலகிச் செல்கையிலும் சரி அவன் பார்வை அவளை அந்த விதத்தில் அணுகாதது பெரும் ஆச்சரியமே.

‘ஒரு வேளை நடிக்கறாரோ?’ அவளது எண்ணம் அதுவாகத்தான் இருந்தது.

அவர்களது டீன் ரக்ஷன் தினமும் ஏதாவது சாக்கிட்டு அவளை தன் அறைக்கு அழைத்து பேசும் நேரங்களில் எல்லாம் நெருப்பின்மேல் நிற்கும் அவஸ்தையை உணர்ந்திருக்கிறாள். இத்தனைக்கும் அவன் அவளை அழைத்து பேசும் அவசியமே இருக்காது, ஆனாலும் அதைச் செய்தான்.

எங்கே வேலைக்குச் சென்றாலும் இப்படியான ஆண்களை கடந்து செல்லவேண்டி இருக்கும் என்பதால், அதை அவள் பெரிதாக எடுத்துக் கொள்வதும் இல்லை. ஆனால் தீனா அவளுக்கு புதுமையாக தெரிந்தான். ஒரு ஆண்மகனால் தடுமாறாமல் இருக்கவே முடியாது என்ற அவளது எண்ணத்தை உடைத்துப் போட்டான்.

‘சந்தர்ப்பம் கிடைக்கும் வரை மட்டுமே ஆண்கள் ராமர்கள்’ என்ற அசைக்க முடியாத எண்ணம் கொண்டவள் அவள். அப்படி இருக்கையில், இவ்வளவு இயல்பாக பழகும் ஒருவன், அவ்வளவு நல்லவனாக இருக்க முடியாது என்பது அவளது எண்ணம்.

தீனாவும், ஜனனியும் ஒருவருக்கு ஒருவர் நேசிக்கிறார்கள் என்ற உண்மை அங்கே அனைவருக்கும் தெரிந்தாலும், அதை வாய் வார்த்தையாக யாரும் சொல்வது கிடையாது. அப்படி சொல்ல தீனா அனுமதிக்க மாட்டான் என்பதுதான் உண்மை.

அப்படி இருக்கையில், தீனாவின் உள்ளத்து நேசம் எப்படி நிவேதாவுக்குத் தெரியும்? எனவே அவனை, அவனது முகமூடியை கலைக்க வேண்டும் என்ற ஒரு வேகம் அவளுக்குள் கொழுந்துவிட்டு எரியத் துவங்கியது. விலகிச் செல்பவனை சீண்டிப் பார்ப்பதும், சீண்டிப் பார்ப்பவனை குறை சொல்வதும்தானே, பெண்ணின் குணம்.

இதற்கு நிவேதா மட்டும் விதிவிலக்கா என்ன? அதிலும் குண்டன் சபரியின் கோமாளித்தனங்களைப் பார்த்து அவள் சிரிக்காத நாளே இல்லை எனலாம். அவள் வந்த அன்று முதலே அவளிடம் பேச முயல்வதும், தயங்குவதுமாக அவனது செய்கைகளை கவனிக்கவே செய்தாள்.

அவள் மிகவும் கலகலப்பான பெண் என்பதால் அவனிடம் அவளாகவே பேச, அன்று முழுவதுமே அவன் கனவில் நடப்பது போலவே அலைந்து கொண்டிருந்தான். பாய்ஸ் நகுல் போன்ற அவனது தோற்றமும், அதற்கு மாறாக அவனது சிறுபிள்ளை நடத்தையும் அவளை மனதுக்குள்ளேயே சிரிக்கச் செய்தது.

அவள் வேலைக்கு வந்த இரண்டாம் நாள், அவளது மேஜைமேல் ஒரு சிவப்பு ரோஜா இருக்க, அதைக் கையில் எடுத்தவள், தன் இருக்கைக்கு அருகில் இருந்த தீனாவை ஒரு பார்வை பார்த்தாள்.

“தீனா, இதை நீங்களா இங்கே வச்சீங்க?” அவள் கேட்க, இவள் எதைக் கேட்கிறாள் எனத் திரும்பிப் பார்த்த ஜனனி மனதுக்குள் பல்லைக் கடித்தாள்.

‘இவளுக்கு எவ்வளவு கொழுப்பு பாரேன்?’ அவளிடம் கோபமாக எதையோ சொல்லத் துவங்கும் முன்னர், தீனாவின் குரல் இடையிட்டு அவளைத் தடுத்தது.

“நான் பூ கொடுக்கணும்னு முடிவு பண்ணா இப்படி டேபிள் மேலே எல்லாம் வைக்க மாட்டேன். நேரடியா உன் கையிலேயே கொடுத்திருப்பேன்” அவன் சொல்ல, அவனது அதிரடியில் திகைத்தாள்.

“ஏய்...” அந்த பூவால் அவன் தோளில் அடிக்க, அதை தடுக்க கூடச் செய்யாமல் அவளைப் பார்த்திருந்தவன், “இந்த பூ வைக்கிற வேலை எல்லாம் நம்ம குண்டன்தான் செய்வான். குறும்புக்காரன்தான் மத்தபடி சீரியஸா எல்லாம் செய்ய மாட்டான் விடு...” உரைத்தவன் தன் வேலையைப் பார்க்க துவங்கினான்.

நிவேதாவால் அதை சுலபமாகத் தள்ளிவிட முடியாமல், “ஹல்லோ, சபரி சார்... இது உங்க வேலையா?” தன் இடத்தில் இருந்தே கத்தி, அந்த பூவை ஆட்டிக் கேட்க, அங்கே இருந்த அனைவருமே பட்டென சிரித்து விட்டார்கள். ஏனென்றால் அவள் கேட்ட தோரணை அப்படி இருந்தது.

அவள் இப்படி அனைவரின் முன்னாலும் கேட்பாள் என்பதை எதிர்பாராத அவன் தடுமாற, தீனா அவனைப் பார்த்த பார்வையில் வெலவெலத்துப் போனான். எதையுமே தைரியமாக, முகத்துக்கு நேராக செய்ய வேண்டும் என நினைப்பவன் அவன்.

அதையே தன் நண்பர்களிடமும் எதிர்பார்ப்பவன். அப்படி இருக்கையில் அவனது செய்கை தீனாவை கோபப்படுத்தியது மட்டும் உண்மை. இதுவே அவன் நேரடியாக நிவேதாவிடம் பேசியிருந்தால் நிச்சயம் அதைத் தடுத்திருக்க மாட்டான்.

அவனது குணம் தெரிந்தே, எத்தனையோ முறை அவன் காதல் என உளறுகையில் எல்லாம் பொறுமையாக சொல்லி புரிய வைத்திருக்கிறான். அப்படி இருக்கையில், நிவேதா வந்த இரண்டே நாட்களில் அவன் இப்படிச் செய்வான் என்பதை தீனா சுத்தமாக எதிர்பார்த்திருக்கவில்லை.

நிவேதா தன் பதிலுக்காக காத்திருப்பது புரிய, "நான்தான் வைத்தேன்..." உண்மையை ஒத்துக்கொண்டான்.

"பூவுக்கு தேங்க்ஸ்..." உரைத்தவள் இருக்கையில் அமர்ந்துகொள்ள, அவள் செய்கையில் அவன்தான் திருதிருத்தான்.

'இவ புடிச்சிருக்குன்னு சொல்றாளா? இல்லன்னா புடிக்கலைன்னு சொல்றாளா?' குழம்பிப் போனான். ஆனால் அதை அவளிடம் நேரடியாக விளக்கம் கேட்கும் தைரியம் இன்றி அமைதியானான். அதற்கான சந்தர்ப்பமும் அந்த வார இறுதியிலேயே அவனுக்கு வாய்த்தது.

அந்த வெள்ளிக்கிழமை மாலையில் நுஹா அனைவருக்கும் பிறந்தநாள் பார்ட்டி தருவதாகச் சொல்லியிருக்கவே, அனைவரும் கேளப்சிக்குச் சென்றார்கள். பொதுவாகவே அனைவரும் கம்பெனி பேருந்தில் மட்டுமே செல்வதால், இன்று கால்டேக்சி பிடித்தார்கள்.

நுஹா தனது டூவீலரில் முன்னே செல்ல, இவர்கள் பின்னால் சென்றார்கள். சரியாக ஒரு திருப்பத்தில் ஒரு வயதான குடிமகன் தள்ளாடி அவளது வண்டியின் மீதே விழ, நிலைதடுமாறி விழப் போனவள், இறுதி நிமிடம் சுதாரித்துக்கொண்டு நின்றுவிட்டாள்.

ஆனால் அந்த குடிகாரக் குடிமகனால் நிலையாக நிற்க முடியாமல் தடுமாறி கீழே விழுந்துவிட, வேகமாக தன் வண்டியை நிறுத்தியவள் அவர் அருகே ஓடினாள். அவளது வண்டிக்குப் பின்னால் சென்று கொண்டிருந்தவர்களும், வண்டியை விட்டு இறங்கி அங்கே விரைந்தார்கள்.

அதற்குள்ளாகவே அங்கே ஒரு சிறு கூட்டம் கூடிவிட, ஒரு சாரார் நுஹாவையும், ஒரு பக்கம் அந்த குடிமகனையும் வசைபாடத் துவங்கி இருந்தனர். கூட்டத்துக்குள் முதல் ஆளாகப் பாய்ந்த தீனா, "உனக்கு ஒண்ணும் இல்லையே?" அவன் கேட்க, மறுப்பாக தலை அசைத்தாள்.

“காதர், இவளை இங்கே இருந்து கூட்டி போ, குண்டா, வண்டியைத் தூக்கி ஓரமா நிறுத்து…” படபடவென நொடிகளில் செயல்பட்டவன், அந்த வயதானவரை தூக்கி நிறுத்த முயன்றான்.

“ஆ… கால் வரலையே… வலிக்குதே…”.

“நான் மெதுவாத்தான் வந்தேன். அவர்தான் என் வண்டியில் வந்து விழுந்தார்” நுஹா உரைக்க,

“நுஹா, நீ எதுவும் பேசாதே, தீனா பாத்துப்பான். ஜனனி, இவளை காருக்கு கூட்டி போ…” லோக்கல் ஆட்கள் கூடவே, அவளைப் பாதுகாப்பதே முக்கியமாக இருந்தது.

அதற்குள் கூட்டத்தில் பலரும் பேசத் துவங்கினர். “இப்போ இருக்க பொண்ணுங்க எல்லாம் வண்டியா ஓட்டுதுக? ஏரோப்ளேன் இல்ல ஓட்டுதுக”.

“போனைப் பேசிகிட்டே போனால்…”.

“வயசானவரை இடிச்சு தள்ளிடுச்சே…” விதம் விதமான பேச்சுக்கள்.

“என்ன பெருசு குடிஷ்டு அந்த பொண்ணு வண்டி மேலேயே விழுந்துட்ட? குடிச்சா ஓரமா போய் படுக்க மாட்டியா?” காட்சியை நேரில் கண்ட ஒருத்தன் கேட்க, மற்றவர்கள் அதன் பிறகே தங்கள் பேச்சை கொஞ்சம் நிறுத்தினார்கள்.

“வயசான காலத்தில் இப்படி குடிக்கணுமா?”.

“என்ன கிழவா, உனக்கு தினமும் இதே வேலையாப் போச்சு. ஒரு நாள் லாரியை விட்டு தூக்கச் சொல்றேன் இரு” முதலில் பேசியவன் மீண்டும் பேசினான்.

“சார், அந்த கிழவனை அப்படியே ஓரமா தூக்கிப் போட்டுட்டு போய்ட்டே இருங்க. தினமும் அவனுக்கு இதே வேலைதான்… வேணும்னே குடிக்க காசு பாக்க வேண்டி, பொண்ணுங்க வண்டியா பாத்து விழறதுதான் இவன் வேலை” அவன் சொல்ல, இப்படியுமா இருப்பார்கள் என அதிசயித்தனர்.

“அட, அதான் இவன் சீனைப் போடுறான்னு சொல்லிட்டேனே, இன்னும் இங்கே என்ன வேடிக்கை? முதல்ல எல்லாம் கிளம்புங்கப்பா. கிழவா நடிக்காம தூரப்போ. சார் அவனை விடுங்க சார்…” அசால்ட்டாக பேசும் அவனைப் பார்த்து அந்த கிழவனுக்கு அவ்வளவு ஆத்திரம்.

தனக்கு வரவேண்டிய ஐம்பது நூறையும் கெடுக்கிறானே என்ற கோபம் தலைதூக்க, “டேய், என்னை கிழவன்னு சொல்றதுக்கு நீ எவன்டா? உன்னை யாராச்சும் இங்கே கூப்ட்டாங்களா? உன் வேலையைப் பாத்துட்டு போடா” அவ்வளவு நேரமாக வலிக்கிறது என ஊளையிட்டுக் கொண்டிருந்த கிழவன் தீனாவின் பிடியில் இருந்து திமிறி விடுபட்டு மற்றவனிடம் சண்டைக்குப் போனான்.

“பாத்தியா சார்… கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தெவங்கிகிட்டு கிடந்ததென்ன? இப்போ எப்படி துள்ளிக்கிட்டு வர்றான் பாத்தியா? கிழட்டுப் பய” தன் எதிரில் வந்தவனை ஒரே பிடியில் ஒதுக்கித் தள்ளினான்.

“என்னை கிழவன்னு சொல்லாதடா?” அவனை மீண்டும் அடிக்கப் பாய,

“சரிடா சின்னப்பையா, கொஞ்சம் ஓரமா போ… சார் நீங்க கிளம்புங்க” அந்த பிரச்னையை அவனே முடித்து வைக்க, அவன் பேசிய தினுசில் நண்பர்கள் அனைவருமே சிரித்துவிட்டார்கள்.

எப்படியோ ஒரு வழியாக அனைத்தையும் முடித்துவிட்டு, கேஎப்சி உணவகத்துக்குள் நுழைந்தார்கள். மெல்லிய மஞ்சள் ஒளியில், பின்னணியில் இசைத்த மெல்லிசையில் அந்த இடமே ரம்யமாக இருக்க, அனைவரின் மனதுக்குள்ளும் ஒரு இதம் பரவியது.

நேராக உள்ளே சென்ற தீனா, முதல் வேலையாக அனைவருக்கும் குளிர்பானம் வாங்கி வந்து கரத்தில் கொடுக்க, அது அந்த நேரம் அனைவருக்குமே தேவையாக இருந்தது. அனைவரும் ஒரே மூச்சில் அதை பருகி முடித்த பிறகே ரிலாக்ஸ் ஆனார்கள்.

ஆனால் தீனா தனக்கென ஒரு பாட்டிலை எடுத்துக் கொள்ளாததைப் பார்த்த ஜனனி, தன்னிடம் இருந்த பாட்டிலில் பாதி ஜூசைக் குடித்தவள், மிச்சத்தை அங்கே இருந்த மேஜைமேல் வைத்தாள். கூடவே அவன் பக்கம்

ஒரு பார்வையை செலுத்தியவள், ஜூஸைக் காட்ட, கொஞ்சம் கூட தயங்காமல் அதை எடுத்து குடித்தான்.

அது வெகு இயல்பான ஒரு செய்கையாக இருக்கவே, அவனையே கவனித்துக் கொண்டிருந்த நிவேதாவுக்கு அது வித்தியாசமாகத் தெரியவில்லை.

அவனது அனைத்து பரிமாணங்களையும் நிவேதா ஆச்சரியமாக பார்த்துக் கொண்டிருந்தாள். அவ்வளவு கூட்டத்திலும் நுஹாவை முதலில் அப்புறப்படுத்தியது துவங்கி, இங்கே வந்தவுடன் அனைவரது முதல் தேவை என்னவாக இருக்கும் என சிந்தித்தது வரைக்கும் அவளுக்கு அவ்வளவு பிடித்தது.

அவனது நடிக்கும் குணத்தை, (அவள் அவனை அப்படித்தான் எண்ணிக் கொண்டிருந்தாள்) வெளிக்கொண்டுவர வேண்டும் என அவள் எண்ணிக் கொண்டிருக்கவே, அவனை கவனிக்கத் துவங்கி இருந்தாள். ஆனாலும் இந்த சமயோசித குணத்தை அவளால் மெச்சாமல் இருக்க முடியவில்லை.

“ஹப்பா... எங்கே பிரச்சனை பெருசாகுமோன்னு பயந்துட்டேன்” நுஹா உரைக்க,

“நுஹா, சில்... இப்போதைக்கு நாம அதைப்பற்றியே பேச வேண்டாம். நாம எதுக்கு வந்தோமோ அதைப் பார்க்கலாம்” அங்கே இருக்கும் சூழலை மாற்ற விரும்பினான். அதன்பிறகு அதைப்பற்றி யாரும் விவாதிக்கவில்லை.

அனைவரின் மனநிலையையும் பார்ட்டி மோடுக்கு அவனே மாற்றினான். இரண்டு டேபிளை ஒன்றாகப் போட்டு அனைவரும் அமர்ந்து கொள்ள, அவரவருக்குத் தேவையானது, மற்றும் மொத்தமாக பக்கெட் சிக்கென் என வகை வகையாக வாங்கினார்கள்.

அனைவரும் ஒன்றாக அமர்ந்து உண்ண, சற்று நேரத்தில் அந்த இடமே கலகலப்பாக மாறியது. தீனா இப்பொழுது நண்பர்களுக்கு அருகில் அமர்ந்திருக்க, அவன் பார்வையோ அவ்வப்பொழுது ஜனனியை தொட்டு மீண்டது.

அதே நேரம், நிவேதா தன்னையே கவனிப்பதைப் பார்த்தவன், அவளை நேர் பார்வை பார்க்க, அவன் அப்படி கவனிப்பான் என்பதை எதிர்பாராத அவள் சற்று தடுமாறிப் போனாள். அவன் புருவம் சற்று நேரிய யோசித்தவன், பின்னர் தோளைக் குலுக்கிக் கொண்டான்.

ஒரு வழியாக அனைவரும் உண்டு முடிக்கவே, சற்று நேரம் அனைவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். நிவேதா அங்கே இருக்கும் கை கழுவும் அறைக்குச் செல்ல, அவள் பின்னாலேயே சபரி எழுந்து சென்றான்.

அதை மற்றவர்கள் பார்த்தாலும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. அவன் என்ன சொல்லப் போகிறான் என அவர்களுக்குத் தெரியாதா என்ன? “தீனா, குண்டன் பல்ப் வாங்கப் போறான்டா” காதர் உரைக்க, அவனை முறைத்தான்.

மற்றவர்கள் அனைவரும் சிரிக்கவே, “டேய், அது தெரிஞ்ச விஷயம் தானே, விடு… அவனுக்கு ஏதோ ஒரு பதில் தெரிஞ்சா விட்டுடுவான் அவ்வளவுதான்” அவனைப் பற்றி நன்றாகத் தெரியும் என்பதால் உறுதியாக உரைத்தான்.

அவர்களது எதிர்பார்ப்பை பொய்யாக்காமல், சபரி நிவேதாவிடம் தன் காதலைச் சொல்ல, “உங்க தைரியத்தை நான் பாராட்டறேன். ஆனா பாத்த ரெண்டே நாளில் காதல் எல்லாம்… ஒரு பெருமூச்சை வெளியிட்டவள், “இப்போ பாய்ஸ் நகுல் மாதிரி இருக்கற நீங்க, காதலில் விழுந்தேன் நகுல் மாதிரி மாறினீங்கன்னா கொஞ்சமாவது யோசிக்கலாம். இப்போ… சாரி…” தோளைக் குலுக்கியவள் அங்கிருந்து வெளியேறினாள்.

உணவகத்தை மூடப் போவதாக அவர்கள் அறிவிக்கும் வரைக்கும் அங்கே இருந்தவர்கள், பெண்கள் அனைவரையும் முதலில் பாதுகாப்பாக காதருடன் அனுப்பி வைத்தார்கள். நுஹாவின் வண்டியை சபரி வீட்டில் கொண்டுவந்து தருவதாகச் சொல்லவே அவளும் டேக்ஸியில் சென்றாள்.

அவர்கள் அனைவரும் சென்ற சற்று நேரத்தில் நண்பர்கள் மூவரும் தனித்து விடப் பட்டனர். “டேய் குண்டா, லவ்வை சொன்னியே, பதில் காயா பழமா?” சுதிர் கேட்க, சபரி தன் தாடையை தேய்த்துக் கொண்டான்.

நிவேதா சொன்னதை அவன் நண்பர்களிடம் சொல்லவே, “இதுக்கு அவ முடியாதுன்னு நேரடியாவே சொல்லியிருக்கலாம்” சுதிர் சொல்ல, அனைவரும் கொல்லென சிரித்தார்கள்.

“ஏண்டா அப்படிச் சொல்ற?” அவன் அப்பாவியாகக் கேட்க,

“இதெல்லாம் நடக்கற காரியமா? நாங்களும் எத்தனை வருஷமா ட்ரை பண்ணிக்கிட்டு இருக்கோம், ஒரு... ஒரு கிலோவாவது குறைக்க முடிந்ததா?” எத்தனையோ முறை அவனது உடல் எடையைக் குறைக்க நண்பர்கள் அனைவருமே முயன்று விட்டார்கள்.

ஆனால், பலன் என்னவோ பூஜ்யம்தான். இரண்டு நாட்கள் டயட், ஜாகிங், வாக்கிங், ஜிம் என செல்லும் அவன், மூன்றாவது நாள் அனைத்தையும் காற்றில் பறக்க விட்டு விடுவான்.

அப்படி இருக்கையில், அவன் மாறிவிடுவான் என அவர்களால் நினைக்க முடியவில்லை. “அப்போ எனக்கு அவ கிடைக்க மாட்டாளா?” அவன் கவலையானான்.

“டேய் குண்டா, நீ ஃபீல் பண்ணா கூட ஃபன்னியா இருக்குடா” அதற்கும் அவர்கள் கேலி செய்ய, அவர்களை அடிக்கத் துவங்கினான்.

“சபரி, அவ கிடைக்க ஒரே ஒரு வாய்ப்பு இருக்குடா” தீனா உரைக்க, அதைக் கேட்க, அனைவருமே ஆர்வமானார்கள்.

“எப்படிடா முடியும்?” அப்படி ஒரு வாய்ப்பே இல்லையே என்ற எண்ணத்தில் சுதிர் கேட்டான். இதென்ன ஜீபூம்பா மந்திரத்தில் நடக்கும் விஷயமா? அதற்கென எவ்வளவு டயட், பயிற்சி என எடுக்க வேண்டி இருக்கும்.

“அதாவது இவனைத்தானே நம்மளால் ஒல்லியாக்க முடியலை, பேசாமல் அவளை குண்டாக்கிட்டா?” தீனா கேட்க, அந்த ஏகாந்த இரவை கிழித்துக் கொண்டு அவர்களது சிரிப்பு சத்தம் பேரோசையாக ஒலிக்க, தெருநாய்கள் அனைத்தும் அலறிக்கொண்டு எழுந்து ஓடின.

“போங்கடா டேய்... நான் கிளம்பறேன்” நுஹாவின் ஸ்கூட்டியை அவன் கிளப்ப,

“சுதிர், இவனோட போ... பிறகு ரெண்டு பேரும் வீட்டுக்குப் போங்க” சொன்னவன் தன் வீட்டுக்குச் செல்ல ஏதாவது ஆட்டோ கிடைக்குமா எனப் பார்த்தான். அங்கே ஸ்டேண்டில் நின்ற ஆட்டோவை அழைக்க, அவரும் வருவதாகச் சொல்லவே ஆட்டோவில் கிளம்பினான்.

அவன் கிளம்பிய பத்தாவது நிமிடம், சுதிரிடமிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது. “என்னடா, அதுக்குள்ளே போய்ட்டீங்களா?” ஆச்சரியமானான்.

“மாப்ள, டேங்கர் லாரியிலேயே வண்டியைக் கொண்டுபோய் விட்டுட்டாண்டா. மண்டை பொளந்து ரத்தமா கொட்டுது. முதல்ல நீ இங்கே வாடா, எனக்கு ரொம்ப பயமா இருக்கு. நான் உனக்கு லொக்கேஷன் ஷேர் பண்றேன்” உரைத்தவன் அலைபேசியை வைத்துவிட்டான்.

“என்னடா சொல்ற?” தீனா கத்தியதைக் கூட கேட்க அவன் அங்கே இருக்கவில்லை.

“அண்ணே, முதல்ல ஆட்டோவைத் திருப்புங்க... ஸ்ட்ரெயிட்டா போங்க” உரைத்தவன், மீண்டுமாக சுதிருக்கு அழைக்க, அவன் எடுக்கவே, “ஆம்புலன்ஸ்க்கு சொல்லிட்டியாடா? இல்ல நான் சொல்லவா?” படபடத்தான்.

“மச்சான், இந்த லாரிக் காரங்களே ஏத்திகிட்டாங்கடா, நான் இப்போ பக்கத்தில் இருக்கும் ஹாஸ்பிடல்க்கு தான் போய்க்கிட்டு இருக்கோம். நீ வந்துகிட்டே இரு...” சொன்னவன் அலைபேசியை வைத்துவிட்டான்.

அடுத்த பத்து நிமிடங்களில் சபரியை மருத்துவமனையில் சேர்த்து, அவன் அவசர சிகிச்சைப் பிரிவுக்குள் செல்ல, கூரான கொண்டி அவனது தலையில் ஓங்கி இடித்ததால், மண்டை பிளந்து ரத்தம் ஊத்திக் கொண்டிருந்தது.

“அவரோட ப்ளட் குரூப் என்னன்னு தெரியுமா?” அவசர சிகிச்சைப் பிரிவுக்குள் இருந்து வெளியே வந்த செவிலி கேட்க, சுதிர் மறுப்பாக தலை அசைத்தான்.

“சிஸ்டர் அவனுக்கு...” அவன் படபடக்க,

“வெயிட் பண்ணுங்க, டாக்டர் இப்போ வந்து சொல்வாங்க. ப்ளட் தான் உடனே தேவைப்படும்” அவனுக்கு பதில் உரைத்தவாறே ஓடினாள்.

“லூசுப்பய, பின்னாடியே பாத்து பேசிட்டே போய் இப்போ…” வாய்விட்டே புலம்பியவனுக்கு என்ன செய்வதென தெரியவில்லை.

தீனா அவனுக்கு மீண்டுமாக அழைக்க, மருத்துவமனையின் பெயரைச் சொன்ன மறு நிமிடம், அவன் அங்கே இருந்தான். “என்னடா ஆச்சு? எப்படி ஆச்சு? உனக்கு ஏதும் அடி பட்டிருக்கா?” வேகமாக அவனை ஆராய்ந்தான்.

“நின்னுட்டு இருந்த லாரிடா… இவன் பாக்காமல் போய்…” தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

“அவ்வளவு ரத்தம்டா… இவங்க வேற ரத்தம் வேணும்னு கேக்கறாங்க… எனக்கு என்ன செய்யன்னு தெரியலை” அவன் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, ஜனனியும், நுஹாவும், காதரும் அங்கே வர, ‘இவர்களுக்கு எப்படித் தெரியும்?’ எனப் பார்த்திருந்தான்.

“சபரிக்கு என்ன ஆச்சு? எப்படி இருக்கான்?” அனைவரும் படபடக்க,

“உங்களுக்கு யார் சொன்னா?” தீனா சற்று கவலையானான்.

“டேய், நான்தான்டா… காதர் அப்போ சரியா போன் பண்ணானா…” சுதிர் இழுக்க,

“இவங்களை எல்லாம் வீட்டில் தேடுவாங்கடா… அவங்களுக்கு என்ன பதில் சொல்ல முடியும்? முட்டாப்…” வார்த்தைகளை முயன்று நிறுத்திக் கொண்டான்.

“நாங்க வீட்டுக்கு தகவல் சொல்லிட்டோம்…” பெண்கள் இருவரும் கோரசாக உரைக்க, சற்று அமைதியானான்.

“சரி, எப்படி டக்குன்னு வந்தீங்க?” எவ்வளவு வேகமாக வந்திருந்தாலும், இவ்வளவு சீக்கிரமாக வந்திருக்க முடியாதே என்று எண்ணினான்.

“இன்னைக்கு நமக்கெல்லாம் நேரமே சரியில்லடா… நாங்க போன கார் கொஞ்ச தூரத்திலேயே பஞ்சர், டிரைவர் ஸ்டெப்பினியை எடுத்து

மாட்டிகிட்டு இருந்தார், அதைச் சொல்ல போன் பண்ணா, இவன் விஷயத்தைச் சொல்றான்.

“நிவேதா கார் ரிப்பேரான உடனேயே வேற வண்டி வர வச்சு போய்ட்டா, இவங்க அதைச் செய்யலை, சோ... இவங்களையும் கூட்டிட்டு வர வேண்டியதா போச்சு” அவர்கள் பேசிக் கொண்டிருக்கையிலேயே அதே செவிலி மீண்டும் வந்தாள்.

“உடனே பி நெகட்டிவ் ப்ளட் ஒரு பாட்டில் வேணும், இங்கே அந்த குரூப் ஸ்டாக் இல்லை, நீங்க ஏற்பாடு பண்ணுங்க. அது கொஞ்சம் ரேர் குரூப், எவ்வளவு சீக்கிரம் கிடைக்குதோ நல்லது” சொல்லிவிட்டு வந்த வேலை முடிந்தது என கிளம்பிவிட்டாள்.

“பி நெகட்டிவ்வா... எனக்கு அந்த குரூப் தான்...” தீனா சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுதே மருத்துவர் வெளியே வர, அனைவரும் அவர் அருகே ஓடினார்கள்.

“டாக்டர் அவனுக்கு...”.

“உயிருக்கு ஆபத்து எதுவும் இல்லை, ஆனா ப்ளட் வர்றது அரஸ்ட் ஆக மாட்டேங்குது. அதுக்கு இன்ஜெக்ஷன் போட்டிருக்கோம். ஆனா, உடனே ப்ளட் ஏத்தினால் நல்லது” அவர் சொல்லவே, தீனா வேகமாக அவர்முன் வந்தான்.

“டாக்டர், என்னோடது பி நெகட்டிவ் குரூப் தான்...” அவன் சொல்ல,

“அப்போ ரொம்ப நல்லதா போச்சு, சிஸ்டர்... இவரைக் கூட்டி போய் ப்ளட் எடுங்க...” முதலில் வந்த செவிலியை அழைத்து அவளுடன் அனுப்பினார்.

அவர்கள் எழுதிக் கொடுத்த மருந்துகளை வாங்க காதர் செல்ல, பெண்களுக்கு துணையாக சுதிர் அவர்களோடு இருந்தான். அங்கே கிடந்த இருக்கையில் அவர்கள் அனைவரும் அமர, ஏனோ ஜனனியால் அங்கே அமர முடியவில்லை.

“நான் தீனா கூட இருக்கறேன்...” சொன்னவள், அவர்கள் பதிலை எதிர்பாராமல் கிளம்பிவிட்டாள். ஆயிரம் இருந்தாலும், தன் காதலன் தன்

ரத்தத்தை கொடுக்கப் போகையில், அவளால் அங்கே அமைதியாக அமர்ந்திருக்க முடியுமா என்ன?

ஜனனி அவர்கள் பின்னால் விரைய, ரத்தம் கொடுக்கும் அறைக்கு வெளியே ஒரு நொடி தேங்கிய தீனா, ஆழமாக மூச்செடுத்துக் கொண்டிருந்தான். கூடவே, அவனது இடக்கரம் தன் பின்னந்தலையை அழுத்தமாக பற்றிக் கொள்ள, அவனது உடல்மொழியே அவ்வளவு சரியாக இல்லை.

அதை ஒரு நொடியில் கண்டுகொண்ட ஜனனி அவன் அருகே சென்றாள். “என்ன தீனா? என்ன ஆச்சு?” அவள் குரல் முதுகின் பின்னால் கேட்க, பட்டென அவள் பக்கம் திரும்பினான். அவன் நெற்றியில் மெல்லிய வியர்வை முத்துக்கள்.

அவனை இன்று வரைக்கும் இப்படி ஒரு நிலையில் பார்த்ததே இல்லை என்பதால் சற்று திடுக்கிட்டுப் போனாள். “சார், உள்ளே வாங்க” செவிலி குரல் கொடுக்கவே, “ஒரு நிமிஷம்…” சொன்னவன் ஜனனியை ஏறிட்டான்.

“தீனா, என்ன செய்யுது? ஏன் இப்படி என்னவோ மாதிரி இருக்கீங்க?” அவன் கரத்தை மெல்லியதாக பற்றிக் கொண்டாள்.

“ஜானு… எனக்கு… எனக்கு… இந்த ஊசின்னா ரொம்ப பயம், ஒரு மாதிரி போபியான்னே சொல்லலாம். என் அம்மா, அப்பா ஆக்சிடெண்டை பாத்த பிறகு… இப்படி ஒரு சூழல் என்றாலே என்னால் கட்டுப்படுத்திக்க முடியாது…” நிஜமாகவே அவனது கரம் அப்பொழுது மெல்லியதாக நடுங்கிக் கொண்டிருந்தது.

“அப்படின்னா நீங்க ரத்தம் கொடுக்க வேண்டாம்… நாம வேற ட்ரை பண்ணலாம்” அவனை இந்த அளவுக்கு கஷ்டப்படுத்தி ஒன்றை செய்ய வைக்க அவள் விரும்பவில்லை.

“இல்ல… இது ரொம்ப ரேர் ப்ளட் குரூப்… இந்த நேரத்தில் வேற யாரையும் நாம தேடித் போக முடியாது” வேகமாக மறுத்தான்.

“சார், நேரமாகுது… கொஞ்சம் சீக்கிரம் வாங்க…” செவிலியின் குரல் சற்று பொறுமையற்று ஒலிக்க, வேகமாக உள்ளே சென்றான்.

ஜனனியும் உடன் செல்லவே, “மேம், நீங்க கொஞ்சம் வெளியே இருங்க” அவள் சொல்ல,

“பிளீஸ் சிஸ்டர், அவ இங்கேயே இருக்கட்டும்...” அவன் குரலில் இருந்த படபடப்பும், அவன் முகத்தில் இருந்த கலவரத்தையும் பார்த்தவள், அதற்குமேல் எதுவும் சொல்லவில்லை.

“இந்த பெட்டில் படுங்க...” அவள் சொல்ல, வேகமாக மறுப்பாக தலை அசைத்தான்.

“இல்ல, நான் உக்காந்துக்கறேன்... நீங்க எடுங்க...”.

“சார், என்ன விளையாடறீங்களா? ப்ளட் எடுக்கும்போது டயடாயிடுவீங்க, தலை சுத்தும், பேசாமல் படுங்க” அவளுக்கு தாமதமாகிறதே என்ற எரிச்சல்.

“சிஸ்டர், முதல்ல ஊசியை அவர் கையில் மாட்டிடுங்க, பிறகு அவரை படுக்க வச்சுக்கலாம். அவர் கொஞ்சம் பயப்படறார்” அவனது வலக்கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

“என்ன லவ்வர்சா...? ஓகே ஓகே... முதல்ல உக்காருங்க சார்...” அவள் படுக்கையை காட்ட, அதன் நுனியில் அமர்ந்து கொண்டான்.

“கொஞ்சம் நல்லா உக்காருங்க சார்... ஒரு சின்ன ஊசி, இதுக்குப்போய் குழந்தை மாதிரி பயப்படறீங்க” கேட்டவள், ஊசியை அவன் இடக்கரத்தின் அருகே கொண்டு வர, பட்டென கையை உருவி தன் வயிற்றில் கட்டிக் கொண்டான்.

“ஹையோடா... சார்...” செவிலி சிரிக்க, தீனாவால் தனது அந்த பய உணர்வை உதறிவிட்டு வெளியே வரவே முடியவில்லை. அவள் கரத்தில் இருந்த ஊசியை பயப் பார்வை பார்க்க, “தீனா, நீங்க அவங்களைப் பாக்காதீங்க, என்னைப் பாருங்க...” அவன் வலக்கரத்தை ஒரு கையால் பற்றிக் கொண்டு, அவன் இடக்கன்னத்தில் மறு கை வைத்து திருப்பி தன் முகம் காணச் செய்தாள்.

அவனும் தன் பயத்தில் இருந்து வெளிவர போராடிக் கொண்டுதான் இருந்தான். தன் நண்பனுக்காக இதைச் செய்தே ஆகவேண்டும் என அவன் மனம் தவித்துக் கொண்டிருந்தது.

ஜனனியின் முகம் பார்த்தவனது கண்களில் அப்படி ஒரு கலவரம்... “தீனா, அது ஒண்ணுமே இல்லை, சும்மா எறும்பு கடிக்கும் அளவுக்குத்தான் வலி இருக்கும்” அவள் சொன்னவாறே, செவிலியை வேலையை செய்யச் சொல்லி கண் காட்டினாள்.

“வலிக்கு நான் பயப்படலை ஜானு...” செவிலி அவனது இடக்கரத்தை பிரிக்கையில் அவன் விரல்களை மொத்தமாக அழுத்த மூடிக் கொண்டான்.

“வேற எதுக்கு பயப்படறீங்க? அதான் நான் கூடவே இருக்கேனே... எதுவும் ஆகாது...” செவிலி பஞ்சில் மருந்த நனைத்து அவன் இடக்கரத்தில், ரத்தம் எடுக்க வேண்டிய இடத்தில் தடவ, அவன் முகம் திருப்பி கரத்தைப் பார்க்க முயல, அவனது வலக்கரத்தை தன் இடையில் கட்டிக்கொள்ள செய்தவள், இப்பொழுது தன் இரு கரங்களால் அவன் முகத்தை அழுத்தமாக பற்றிக் கொண்டாள்.

“தீனா, என்னை மட்டும் பாருங்க”.

“ஜானு...” அவன் சற்று நடுக்கமாக அழைக்க, அவனது முகத்தை தன் நெஞ்சோடு அழுத்தமாக புதைத்திருந்தாள்.

கூடவே தன் வலக்கரத்தை நீட்டி, அவன் இடக்கரத்தை உருவிக் கொள்ளாதவாறு அழுத்தமாக பற்றிக் கொண்டவள், தன் இடக் கரத்தால் அவன் பின்னந்தலையை தாங்கிக் கொண்டாள்.

## பகுதி – 12.

தீனாவின் பயத்தை போகச் செய்ய வேண்டி, அவனது கவனத்தை தன்பக்கம் திருப்ப வேண்டி செய்த அந்த செய்கை, அங்கே இருவருக்குமே அதன் தாக்கம் சிறிதும் இருக்கவில்லை. அவளுக்கோ, அவனது நடுக்கத்தை போக்க வேண்டுமே என்ற கவலை.

கூடவே, அவனது கவனம் முழுவதும் தன்பக்கம் மட்டுமே இருக்க வேண்டும் என்று தோன்றியது. அவனை சுற்றுப்புறத்தை மறக்க வைக்கச் செய்வது ஒன்று மட்டுமே குறிக்கோளாக இருந்தது. அவனுக்கோ, அவளது செய்கை புரியவே இல்லை.

அவனது முழு கவனமுமே செவிலி செய்யும் செயலிலேயே உறைந்திருக்க, அவனை மீறி அவன் தேகம் மொத்தமாக நடுங்கியது என்றே சொல்லலாம். தேகம் மொத்தமும் சட்டென, குப்பென வியர்த்துப் போனது.

அவனது ரத்த அழுத்தம் அந்த நேரம் உச்சத்துக்கு சென்றிருக்கும் என்றே சொல்லலாம். சொல்லப்போனால், தன்னை மீறி மயக்க நிலைக்கு செல்லும் நிலையில் இருந்தான். அப்படி அவன் மயக்கமாகிவிட்டால், நிலைமை இன்னும் சிக்கலாகிப் போகுமே என கவலையானாள்.

“சார், ஒத்த ஊசிக்கு இந்த பாடா?” செவிலி கேலி செய்ய, அதையெல்லாம் உணரும் நிலையில் அவன் இல்லை.

“தீனா, அவ்வளவுதான் முடிஞ்சது, ரிலாக்ஸ்… ரிலாக்ஸ்… இங்கே பாருங்க” அவன் முகத்தை நிமிர்த்தி, தன் கைக்குட்டையால் அவன் முகத்தை துடைத்து விட்டாள்.

“சார், அப்படியே படுத்துக்கோங்க, இந்த பாலை(ball) கையில் வைத்து ப்ரெஸ் பண்ணிட்டே இருங்க, அப்போதான் ரத்தம் சரியா பம்ப் ஆகும்” அவனது இடக்கரத்தில் பந்தைக் கொடுக்க, அந்த ஸ்பாஞ்பந்தை கெட்டியாக பற்றிக் கொண்டான்.

ஜனனி அவனை தோள் சாய்த்து படுக்கையில் விட்டவள், “சிஸ்டர், நான் இப்படி இவர் பக்கத்திலேயே உக்காந்துக்கவா?” அவளது முகமும், குரலும் அவளிடம் கெஞ்ச, அந்த செவிலியால் மறுக்க முடியவில்லை.

“சரி உக்காந்துக்கோங்க… நான் இப்போ வர்றேன்” அவளது வேலையைப் பார்க்கச் சென்றாள்.

“ஹையோ… இவரை இப்படியே விட்டுட்டுப் போறீங்களே” படபடத்தாள்.

“மேம்... இது முடிய எப்படியும் அரைமணி நேரமாகும், நான் அதுக்குள்ளே வந்துடுவேன். ஒரு பேஷண்டுக்கு இன்ஜெக்ஷன் போட்டாகணும், அதான்... அப்படியே இவருக்கு கொடுக்க ஜூஸ் வாங்கிட்டு வர்றேன்” விலகி நடந்தாள்.

செவிலி அங்கிருந்து வெளியேறவே, “ஜானு, இப்படி என் கிட்டவே உக்காரேன்” இமைகளை இன்னுமே திறக்காமல், அழுத்தமாக மூடிக்கொண்டு அவன் அழைக்க, அவளுக்கு அப்படியே உருகிப் போனது.

“தீனா, நான் உங்க பக்கத்திலேயே தான் இருக்கறேன்...” அவனது கால் பக்கம் அமர்ந்தவள், அவன் வலக்கரத்தை பற்றிக் கொண்டாள்.

“இங்கே பாருங்க... உங்க பயம் இப்போ ஒண்ணுமே இல்லாமல் போய்டுச்சு தானே, கொஞ்சம் கண்ணைத் திறந்து பாருங்க...” அவன் கரத்தை மெதுவாக வருடினாள்.

அவன் அருகே தானாக அமரவோ, அவனைத் தொட்டுப் பேசவோ அவ்வளவு தயங்கும் அவள், அந்த நொடி அனைத்தையும் தானாகவே செய்தாள். அதில் அவளுக்கு கொஞ்சமும் தயக்கம் இருக்கவில்லை. அவனது பயத்தில் இருந்து அவனை வெளியே கொண்டுவருவது மட்டுமே முக்கியமாக இருந்தது.

“இல்ல... எனக்கு அவ்வளவு தைரியம் இல்லை...” இத்தனை வருட பயத்தை நொடியில் அவனால் உதறித் தள்ள முடியுமா என்ன?

“என்மேல் உங்களுக்கு நம்பிக்கை இருக்கா இல்லையா?” அவள் கேட்க பட்டென இமை திறந்தான்.

“எனக்கு நிஜமாவே ஊசின்னா ரொம்ப பயம் ஜானு. அதுவும் இந்த வெயின்இன்ஜெக்ஷன் என்றால் உயிர் பயம்...”.

அவன் சொல்ல, வேகமாக அவன் கரத்தை தன் வாயால் மூடியவள், “அந்த பயம் இன்னும் அப்படியே இருக்கா?” அவள் குரலில் டன் கணக்கில் கவலை அப்பிக் கிடந்தது.

“தெரியலை... ஆனா நீ கிட்டே இருக்கும்போது அதோட நினைப்பு பெருசா தெரியலை” அவளைப் பார்த்து மெல்லியதாக புன்னகைக்க,

அவனது வலக்கரத்தை இரு கரங்களால் பொதிந்து கொண்டவள், தன் நெஞ்சுக்குள் புதைத்துக் கொண்டாள்.

“சாரி, ரொம்ப கலவரப்படுத்திட்டேனா?” அவளது முகத்தில் அப்பிக் கிடந்த கவலையில் அவன் இன்னும் கவலையானான்.

“என்ன பேசறீங்க நீங்க? உங்க கூட இருக்கறது எனக்கு சந்தோஷம்தான். ஆனா, உங்களை நான் இப்படிப் பாத்ததே இல்லையா... ரொம்ப கஷ்டமா போச்சு” அவள் கண்கள் கலங்கியது.

“இல்ல... இப்போ அவ்வளவு பயமா எல்லாம் இல்லை” அவளை சமாதானப்படுத்த முயன்றான்.

அவனது முயற்சி புரிய, தன் முகத்தை இயல்பாக்கியவள், “இனிமேல் ஊசி போடாமல் நான் பாத்துக்கறேன்” அவள் சீரியசாக சொல்ல, பக்கென சிரித்துவிட்டான். அவனது சிரிப்பு அவளையும் தொற்றிக் கொள்ள, கொஞ்சமாக ரிலாக்ஸ் ஆனார்கள்.

கையில் ஜூஸுடன் செவிலி அங்கே வர, வேகமாக படுக்கையில் இருந்து எழுந்து நின்றாள். “என்ன சார், இப்போ பயம் எல்லாம் போயிடுச்சா?” கேட்டவள், ஜூஸை மேஜைமேல் வைத்துவிட்டு, அவனது கையில் இருந்து வெயின்பிளாண்டை ரிமூவ் செய்தாள்.

அங்கே வந்த மற்றொரு செவிலியிடம் ரத்தத்தைக் கொடுத்து அனுப்பியவள், அவன் கரத்தில் ஜூஸை கொடுத்துவிட்டு, “சார், ஜூஸைக் குடிச்சுட்டு ஒரு பத்து நிமிஷம் கழிச்சு எழுந்து வாங்க” சொல்லிச் சென்றாள்.

பாதி ஜூஸைக் குடித்தவன், மீதியை ஜனனியின் பக்கம் நீட்ட, “ரத்தம் கொடுத்தது நீங்கதான், நீங்களே குடிங்க” தன்மையாக மறுத்தாள்.

அவளது மறுப்பைக் கண்டுகொள்ளாமல், கிளாசை அவள் இதழில் வைத்து அழுத்தி, ஜூஸை வாயில் சரிக்க, வேறு வழியின்றி குடித்து முடித்தாள்.

“தீனா, என்ன இது?” கையை புறங்கையால் துடைத்தவாறு முனக,

“என்னைவிட நீதான் ரொம்ப டயடா தெரியற. சரி, இப்போ டைம் என்ன?” அவன் கேட்க, புறங்கையில் கட்டியிருந்த வாட்ச்சில் நேரம் பார்த்தவள் சிறு அதிர்வுக்கு உள்ளானாள்.

நேரம் காலை ஐந்து மணியைக் காட்ட, ‘இவ்வளவு நேரமா ஆயிடுச்சு? வீட்டில் மம்மி என்ன சொல்வாங்கன்னே தெரியலையே’ பெரும் அதிர்வுக்கு உள்ளானாள்.

அவளது அதிர்ச்சியை உள்வாங்கியவன், தானும் நேரம் பார்த்துவிட்டு, “ஓ காட், விடிஞ்சுடுச்சு... உங்க அம்மாவுக்கு உடனே கால் பண்ணி பேசு. இல்லன்னா ரொம்ப கவலைப் படுவாங்க. நீ வா... அங்கே என்ன நிலைமைன்னு போய் பாக்கலாம்” வேகமாக அங்கிருந்து வந்தார்கள்.

நுஹாவும், காதரும் அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தவாறு உறங்கிக் கொண்டிருக்க, அங்கே சென்றவர்கள் அவர்களை எழுப்பினார்கள்.

“காதர், இவங்களுக்கு ஒரு கால்டேக்சி ஏற்பாடு பண்ணு, இவங்க கிளம்பட்டும்”.

“இல்ல தீனா வேண்டாம், அதான் அஞ்சு மணி ஆயிடுச்சே, நாங்களே கிளம்பறோம்...” அதையே ஜனனியும் சொல்ல, இருவரையும் ஆயிரம் பத்திரம் சொல்லி பேருந்தில் பத்திரமாக அனுப்பிவிட்டே மருத்துவமனைக்குத் திரும்பினான்.

அவனுக்கு மயக்கம் வரும், சோர்வாக இருப்பான் என ஜனனி மறுத்த எதையும் அவன் கேட்டுக் கொள்ளவே இல்லை.

வீட்டுக்குத் திரும்பிய ஜனனிக்கு மனதுக்குள் பெரும் உதறலாகவே இருந்தது. பொதுவாக இரவு சற்று தாமதமானாலே கலாவதி அவளை வெகுவாக கடிந்து கொள்வார். இன்று அவள் பார்ட்டி என சொன்னபொழுது சீக்கிரம் வர வேண்டும் என சொல்லி அனுப்பினார்.

எதிர்பாராத விதமாக மருத்துவமனைக்குச் செல்வதாக சொன்னபொழுது, அவள் மருத்துவமனைக்குப் சென்றே ஆக வேண்டுமா? எனக் கேட்டிருந்தார். இப்பொழுது ஒரு இரவு முழுவதுமே அவள் வெளியே

இருந்திருக்கிறாள் என்பதை எப்படி எடுத்துக் கொள்வார் என்றே அவளுக்குத் தெரியவில்லை.

அவள் அழைப்புமணியை அடித்த மறு நிமிடம் கலாவதி கதவைத் திறக்க, அவர் சரியாக உறங்காததை அவரது கண்களே காட்டிக் கொடுத்தது.

“மம்மி... அது...” அவள் கையைப் பிசைய,

“அம்மாடி, நீ எதையும் சொல்ல வேண்டாம், கலா, அவளுக்கு பாலை சூடுபண்ணிக் கொடு, கொஞ்சநேரம் அவ தூங்கி எழட்டும்” தண்டாயுதபாணி அழுத்தமாக குரல் கொடுக்கவே கலாவதியால் மகளை எதுவும் சொல்ல முடியவில்லை.

“எல்லாம் நீங்க கொடுக்கற இடம், அதான் ஒரு நைட் முழுக்க...”

“கலா, உன்னை போன்னு சொன்னேன்” அவர் இன்னும் குரல் உயர்த்த, அவர் அடங்கிப் போனார்.

தாய் உள்ளே செல்லவே, “அப்பா, நான்தான் தகவல் கொடுத்தேனே, பிறகும் அவங்க இப்படிப் பண்ணாங்கன்னா எப்படி?” கவலையானாள்.

“அம்மாடி, உங்க அம்மாவைப் பத்தி உனக்கு தெரியாதா? விடு... முதல்ல போய் ரெஸ்ட் எடு” கலாவதி பாலைக் கொண்டுவரவே அதை அவளிடம் கொடுத்து, அவளை குடிக்க வைத்துவிட்டு அறைக்கு அனுப்பி வைத்தார்.

“என்னங்க நீங்க, அவ சொல்ற கதையெல்லாம் நம்பிட்டு இருக்கீங்களா?”.

“கலா, அவ லவ் பண்றேன்னு சொன்னதால தானே நீ இப்போ இப்படி கோபப்படற? இதுவே சாதாரணமான நேரமா இருந்திருந்தால் இவ்வளவு ரியாக்ட் பண்ணியிருக்க மாட்ட தானே. அவ ஒண்ணும் சொல்லாமல் போகலையே, சொல்லிட்டு தானே போனா.

“தப்பு பண்ணனும்னு நினைக்கற யாரும் அதை சொல்லிட்டு செய்ய மாட்டாங்க. உண்மையா நேர்மையா இருக்குற அவளை கள்ளத்தனம் செய்ய வச்சுடாதே. நம்ம பொண்ணு மேலே நீயே நம்பிக்கை வைக்கலன்னா எப்படி?” அவர் கேட்க அமைதியானார்.

“உன் வார்த்தையை மீறி அவ காதலிக்கறேன்னு சொன்னதே உனக்கு பெரிய ஏமாற்றம் தான், எனக்கு அது நல்லாவே புரியுது. அதுக்காக எல்லா விஷயத்திலும் அவளை சந்தேகப் பட்டா, நம்ம எல்லார் நிம்மதியும்தான் பறி போகும்.

“அவ காதலை ஒத்துகிட்ட பிறகு, அவ செய்யும் ஒவ்வொரு விஷயத்தையும் அதோட கனெக்ட் பண்ணி பாக்குறதை முதல்ல நிறுத்து. உன் பொண்ணு இன்னும் சின்னப் பிள்ளையில்லை, அவ இப்போ மேஜர். உன்னை விட்டு அவளோட பெத்தவகிட்டே போகணும்னு அவ முடிவெடுத்தா, அதை அந்த சட்டத்தால் கூட தடுக்க முடியாது” மனைவியிடம் எதைச் சொன்னால் அமைதியாவார் என அவருக்குத் தெரியாதா என்ன?

“என்னங்க சொல்றீங்க? எனக்கு அவளைக் கண்டிக்க கூட உரிமை இல்லையா? ஒரு வயசுப் பொண்ணு, ராத்திரி முழுக்க வீட்டுக்கு வரலை, நைட் முழுக்க எனக்கு பொட்டு தூக்கம் இல்லை, அது உங்களுக்கு தெரியுமா? எங்கே, கும்பகர்ணன் மாதிரி குரட்டை விட்டுத் தூங்கின உங்ககிட்டே போய் சொல்றேன் பாருங்க” அலுத்துக் கொண்டார்.

“அவ சொல்லாமல் போயிருந்தால் நீ இவ்வளவு புலம்புறதில் ஏதாவது அர்த்தம் இருக்கு. தேவையில்லாத உன் கவலையை என்ன செய்யன்னு தெரியலை. சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிட்டேன், இதுக்கு மேலே என்ன செய்யணுமோ நீயே முடிவு பண்ணிக்க” எழுந்து செல்ல முயன்றார்.

“என்னங்க, அவ கல்யாணத்தைப் பத்தி என்ன சொல்றா? அந்த தம்பி தீனாவை நாமளாவது போய்ப் பாக்கலாமா?”.

“அதான் ரெண்டு மாசம் டைம் கேட்டிருக்காளே, அதுக்குள்ளே ஏன் அவசரப்படுற? எல்லாம் தானாவே நடக்கும், சரி, உன்கிட்டே ஒரு விஷயத்தை நான் முன்னவே கேக்கணும்னு நினைத்தேன், ஜனனிக்கு வரன் பார்ப்பதை உங்க அக்காகிட்டே சொல்ல வேண்டாமா?” அவர் கேட்க விழித்தார்.

“அவகிட்டே எதுக்கு சொல்லணும்? ஜானு என் பொண்ணு” ஒரு மாதிரி முறுக்கிக் கொண்டார்.

“உன் பொண்ணுதான், அதை நான் இல்லைன்னு சொல்லவே இல்லை, ஆனா... உங்க அக்கா அவளைப் பெத்தவ. அது உனக்கு ஞாபகம் இருக்கா? இல்லன்னா அதையும் மறந்துட்டியா? நீ உன் பொண்ணுக்கு செய்யிறது எல்லாம் சரிதான், ஆனா அவ தனி மனுஷி இல்லை.

“அவளுக்குன்னு ஒரு பெத்தவ, கூடப்பொறந்த அண்ணன் எல்லாம் இருக்காங்க. அவளுக்கு ஒரு கல்யாணம், காட்சி, நல்லது எல்லாம் செஞ்சு பாக்கணும்னு அவங்களுக்கும் ஆசை, கனவு எல்லாம் இருக்கும் தானே. வளத்த உனக்கே அது இருக்கும்போது, பெத்த உங்க அக்காவை நீ ஏன் நினைக்கவே மாட்டேங்கற?”.

“இதையெல்லாம் விட இன்னொரு பெரிய விஷயம்... உன் பொண்ணு அவங்களை எல்லாம் எதிர்பார்ப்பான்னு நீ யோசிக்கவே இல்லையா? அவளுக்கு ஒரு நல்லது நடக்கும்போது, அவங்க எல்லாம் கிட்டே இல்லன்னா, அவ மனசு என்ன பாடுபடும்?

“அந்த சந்தோஷத்தை அவளால் நிம்மதியா அனுபவிக்க முடியுமா? அவங்க எல்லாம் கிட்டே இல்லாததுக்கு காரணம் நீ தான்னு அவ உன்னை வெறுத்துட்டா?” அவர் கேட்க, கலாவதியின் முகத்தில் அவ்வளவு கலவரம்.

“என் பொண்ணு என்னை வெறுக்க மாட்டா. அவளுக்கு என்னைப் பற்றி தெரியும்” உறுதியாக சொன்னார்.

“இப்படி ஒரு பொண்ணுக்கு நீ என்ன செய்யப் போற? கல்யாணத்துக்குப் பிறகு அவ நம்மளோடவே இருக்கப் போவதில்லை, அவ புருஷன் வீட்டுக்குத்தான் போகப் போறா. அப்படி புருஷன் வீட்டுக்குப் போகும் அவளை எல்லாருமா சேர்ந்து சந்தோஷமா வழியனுப்பி வைக்கலாமே.

“இதை நான் அப்போவே சொல்லியிருப்பேன், ஆனா நீ கொஞ்சம் கூட, கேக்கற மனநிலையில் இல்லை. ஆனா இப்போ அப்படி இல்லைன்னு நம்பறேன். கல்யாணம் முடிஞ்ச பிறகு, புருஷன் வீட்டில் இருந்து அவ அம்மா வீட்டு உறவு மட்டும் போதும்னு அவ நினைத்தால் நீ என்ன செய்வ?”.

“அவ வாழ்க்கையில் நடக்கப்போகும் மிகப்பெரிய சந்தோசம், அதுக்கு நீயே உன் அக்கா, அபய் எல்லாரையும் வரச் சொன்னால், உன்மேல் உன் மகளுக்கு அன்பு அதிகரிக்கவே செய்யும். அதை நீ முழுசா அனுபவிக்கணும்னு நினைச்சன்னா நான் சொன்னதை யோசி.

“இதுக்கு மேலே நான் சொல்ல எதுவும் இல்லை, நீ போய் வேலையைப் பார்” அவரை அனுப்பினார். சமையல் செய்கையில் எல்லாம் கணவன் சொன்னதே அவர் மூளைக்குள் ஓடிக் கொண்டிருந்தது. கணவன் சொல்வதில் இருந்த நியாயம் புரிய, ஒரு முடிவுக்கு வந்தார்.

இதைப்பற்றி அபய்யிடம் பேச வேண்டும் என முடிவெடுத்துக் கொண்டார். வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டதாக தீனாவுக்கு செய்தி அனுப்பியவள், போனை அணைத்து வைத்துவிட்டு படுக்கையில் விழுந்தாள்.

மாலையில் அண்ணாவையும், அம்மாவையும் சென்று பார்க்க வேண்டும் என முடிவெடுத்துக் கொண்டாள். மாதும்மையின் பேச்சைக் கேட்ட பிறகு, தன் அண்ணனின் திருமணம் எந்த அளவுக்கு எப்படி சாத்தியம் என அவளுக்குத் தெரிந்துகொள்ள வேண்டி இருந்தது.

அதையே எண்ணியவாறு அப்படியே தூங்கிப் போனாள். கிட்டத்தட்ட மாலை மூன்று மணிக்கு கண் விழித்தவள், முகம் கழுவி கீழே வர, அவளுக்கு உணவைத் தயாராக மேஜைமேல் எடுத்து வைத்தார் கலா.

அவள் உணவை உண்டு முடிக்கும் வரைக்கும் அமைதியாக இருந்தவர், “ஜனனி, சாயங்காலம் கோவிலுக்குப் போயிட்டு, உன் கல்யாண விஷயத்தைப் பற்றி அக்காகிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டு வந்துடலாம்னு நினைக்கறேன், நீ என்ன சொல்ற?” அவளிடம் கேட்க, அப்படியே ஆச்சரியமானாள்.

‘கலாவதி தனது திருமண விஷயத்தைப் பற்றி தன் தாயிடம் பேசுவதா? தான் கேட்பது உண்மை தானா?’ அவளால் நம்பவே முடியவில்லை.

கலாவதி தனக்கு ஒன்றைச் செய்வதாக இருந்தால், அதை செய்து முடித்த பிறகுதான் தன்னைப் பெற்ற தாய்க்கு சொல்வாரே தவிர, செய்யும் முன்னர் சொல்லவே மாட்டார். அப்படி இருக்கையில் தன் திருமண

விஷயம் இன்னும் பேச்சுவார்த்தை லெவலுக்கு கூட வரவில்லை, அதற்குள் சொல்வதென்றால்?

சென்ற அவளது பெண் பார்க்கும் படலத்துக்கு கூட தன்னைப் பெற்ற தாய்க்கு ஒரு அறிவிப்பு கூட கொடுக்கவில்லை. அது அப்பொழுது அவளுக்கும் பெரிதாகத் தோன்றவில்லை. சொல்லப்போனால், அந்த திருமணத்தில் அவளுக்கே விருப்பமில்லை என்னும்பொழுது அதை அவள் கவனத்தில் கொள்ளவும் இல்லை.

ஆனால் இப்பொழுது... தீனா தன் வாழ்க்கைக்குள் வருகையில் அவளைப் பெற்றவரும், உடன் பிறந்தவனும் தன் அருகில் வேண்டுமென அவள் மனம் உள்ளுக்குள் தவித்தது அவளுக்கு மட்டும்தானே தெரியும். ஆனாலும் இரண்டு மாதங்கள் இடைவெளி இருந்ததால், அதற்குள் ஏதாவது செய்யலாம் என எண்ணியிருந்தாள்.

ஆனால், இப்பொழுது அவளது எண்ணம் புரிந்தது போல், அவளுக்கு கொஞ்சம் கூட வேலை வைக்காமல், வெகு சுலபமாக அவரே சொல்லிவிட அவள் முகத்தில் அப்படி ஒரு சந்தோசம். அது அப்படியே அவள் முகம் முழுக்க விரவ, கொஞ்சம் கூட தயங்காமல் கலாவதியின் கழுத்தை கட்டிக் கொண்டவள், அப்படியே அவர் கன்னத்தில் அழுத்தமாக முத்தம் பதித்தாள்.

“லவ் யூ மாம்... லவ் யூ சோ மச்” அவள் சொல்ல, தன் கணவனின் வார்த்தையில் எவ்வளவு உண்மை இருந்தது என அந்த நொடி அவர் புரிந்து கொண்டார்.

“இது என் கடமை ஜானும்மா...” அவர் சொல்ல,

“இருக்கலாம் மாம்... பட் எனக்காகத் தானே இதைச் செய்யறீங்க? சோ...” தன் அன்பை மீண்டுமாக வெளிப்படுத்த, கலாவதிக்கு தன் மகள் இந்த ஒரு சிறு விஷயத்துக்காக இவ்வளவு சந்தோஷப்படுவாள் என்பதை எதிர்பாராமல் திகைத்துப் போனார்.

கூடவே இது நிச்சயமாக அவளது தந்தையின் வேலையாகத்தான் இருக்கும் என்பது புரிய, ஓடிபோய் தன் தந்தையையும் கட்டிக்கொள்ள,

“அம்மாடி, என்ன?” திடுமென அவளது செய்கைக்கான அர்த்தம் அவருக்குப் புரியவே இல்லை.

“தேங்க்ஸ்ப்பா, கண்டிப்பா இதுக்குப் பின்னாடி நீங்கதான் இருக்கீங்கன்னு, எனக்குத் தெரியும். அம்மா நான் குளிச்சுட்டு கிளம்பறேன், நீங்களும் ரெடி ஆகுங்க…” சந்தோஷத் துள்ளலாக ஓடியே போனாள்.

அவளது சந்தோஷத்தைப் பார்த்தவாறே அங்கே வந்த கண்ணபிரான், “நான் சொன்னப்போ நீ நம்பலல்ல, இப்போ உன் பொண்ணோட சந்தோஷத்தைப் பாத்தியா?” அவர் கேட்க,

“என் பொண்ணு என்னை விட்டு போய்ட மாட்டா தானேங்க?” அவரது அடிமனதில் இன்னும் அந்த பயம் இருந்தது.

“பைத்தியம் மாதிரி பேசாத கலா, இத்தனை வருஷமா போகாதவ, இனிமேலா போகப்போறா? அவளுக்கு கல்யாணம் பண்ணிக் கொடுத்து பேரன், பேத்தி எடுக்கற வயசாச்சு, இனிமேலாவது கொஞ்சம் முதிர்ச்சியா யோசி.

“இவளே போனா கூட, உங்க அக்கா இவளை சேர்த்துப்பாங்கன்னு நினைக்கறியா? அப்படின்னா நீ இன்னுமே இவங்க யாரையுமே புரிஞ்சுக்கலன்னுதான் சொல்வேன்” வருத்தமாக உரைத்தார். தான் இவ்வளவு சொன்ன பிறகும், இன்னும் அவர் புரிந்துகொள்ளவில்லையே என்று இருந்தது.

“இல்லங்க… நான் புரிஞ்சுகிட்டேன். இனிமேல் நீங்க எல்லாம் ஒரு புது கலாவைப் பாப்பீங்க” உறுதியளிக்க, அது நடைமுறைக்கு வந்தால் நன்றாக இருக்கும் என எண்ணிக் கொண்டார்.

அவர்கள் திட்டமிட்டது போலவே மாலையில் கோவிலுக்கு கிளம்பிச் சென்றவர்கள், சாமி கும்பிட்டுவிட்டு, அபயின் வீட்டுக்குச் செல்ல, அவர்களை எதிர்பாராத இருவருமே திகைத்தார்கள்.

மகளைப் பார்த்து ஒரு நொடி நெகிழ்ந்த பிரபாவதி, அதை மறைத்துக் கொண்டு, “கலா… உள்ளே வா… நானே உன் வீட்டுக்கு வரணும்னு

நினைத்தேன், நீயே வந்துட்ட. என்ன கோவிலுக்குப் போயிட்டு வர்றீங்களா? உள்ளே வாங்க…” தங்கையிடம் பேசியவர், கண்ணபிரானையும் அழைத்தார்.

“வீட்டுக்கு வரணும்னு நினைச்சவ வர வேண்டியது தானே… உன்னை யார் வர வேண்டாம்னு சொன்னாங்க?”.

“வந்தா மட்டும் அப்படியே சந்தோஷமா வரவேற்று விடுவீங்களா?” அவர்கள் பேசியதைக் கேட்டவாறே வந்த அபய் வாய்க்குள் முனகிக் கொண்டான். எங்கே அவன் பேசுவது கலாவுக்கு கேட்டுவிடப் போகிறதோ என்று பிரபாவதிதான் தவித்துப் போனார்.

“ஏய் வாலு, என்ன இது புடவை எல்லாம் கட்டிக்கிட்டு? பெரிய பொண்ணாயிட்ட” தன் தங்கையின் அருகில் சென்று நின்றவன், அவளைத் தன் தோளோடு அணைத்துக் கொண்டான். உடன்பிறந்தவர்களாக இருந்த பொழுதும், உறவுக் காரர்களாக பார்த்துக் கொள்ளும் நிலை, இருவரின் மனதுக்குள்ளும் சிறு பாரம்.

“நீங்க எல்லாம் இருங்க, நான் காபி போட்டுட்டு வர்றேன்” பிரபாவதி எழுந்து செல்ல முயல,

“அம்மா, நீங்க பேசிட்டு இருங்க, நான் போட்டுட்டு வர்றேன். ஜனனி, நீயும் வா” தங்கையையும் தன்னோடு அழைத்துக் கொண்டான்.

கிச்சனுக்குச் சென்றவன், “என்ன இது? சென்னையே வெள்ளத்தில் மூழ்கப் போகுது, உன்னோட நொம்மா உன்னை கூட்டி வந்து எங்க கண்ணில் காட்டிட்டாங்க” கேலியாக கேட்க, தன் அண்ணனின் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டு, அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

“இப்படியெல்லாம் பேசாதண்ணே, நாம என்ன பேசினாலும் சில விஷயங்களில் அவங்களை மாற்ற முடியாது. ஆனாலும், நீ கூட என்னை ஒதுக்கி வச்சுட்ட பாத்தியா?” மெல்லியதாக விசும்பினாள்.

“நீ இல்லாமல் இந்த அண்ணன் ஒன்றைச் செய்வது, உன் அண்ணனுக்கு மட்டும் சந்தோஷத்தைக் கொடுக்கும்னு நினைக்கறியா?” அவளிடம் திருப்பிக் கேட்க, அதையெல்லாம் அவள் ஏற்றுக் கொள்ளவே இல்லை.

“ஏய், ஜனனி... அழறியா? என்ன இது? ம்ச்... உன்னை நாங்க ஒதுக்கி வைக்கிறதா? எங்கே, இந்த அண்ணன் அதை செய்வானா?” அவளிடம் நியாயம் கேட்டான்.

“பிறகு எப்படி அண்ணியைப் போய் பொண்ணு பாத்து முடிவு பண்ணிட்டு வந்தீங்களாம்? கூடப்பிறந்த தங்கச்சி நான் இல்லாமல் எல்லாமே பண்ணிட்டீங்கல்ல? என்னை முழுசா அவங்களுக்கு விட்டுக் கொடுத்துட்டீங்க தானே...” அவளது விசும்பல் இப்பொழுது அழுகையாக மாறியது.

“அப்படியெல்லலாம் இல்லம்மா...” அவளை சமாதானம் செய்ய முயன்றான். ஆனால் அது அவனால் முடியவில்லை. அதே நேரம் தன் தங்கை அழுவதை வேடிக்கை பார்க்கவும் முடியவில்லை. பெரியவர்களின் முடிவால் அதிகம் பாதிக்கப் பட்டது தாங்களாகவே அவனுக்குத் தோன்றியது.

அவளை அவன் சமாதானப்படுத்திக் கொண்டு இருக்க, ஹாலில்... “என்னக்கா, என்னவோ என்னை வந்து பாக்கணும்னு சொன்ன... என்ன விஷயம்? ஏதாச்சும் உதவி வேணுமா?” அப்படி இருக்காது என்று தெரிந்தாலும் அவருக்கு வேறு எதையும் யோசிக்க முடியவில்லை.

“கலா, என்ன பேச்சு இது?” கண்ணபிரானுக்கு மனைவியின் குணத்தை மாற்றுவது பெரும் கடினமென்றே தோன்றியது.

“என்னை மன்னிச்சிடுக்கா, ஏதோ வாய் தவறி வந்துடுச்சு...” வாழ்நாளிலேயே முதல் முறையாக தன் தமக்கையிடம் மன்னிப்பை வேண்டினார்.

“அதை விடு கலா, நீ எங்களுக்கு எவ்வளவோ செஞ்சிருக்க. இது...” கொஞ்சம் தயங்கியவர், தங்கை தான் சொல்வதை எப்படி எடுத்துக் கொள்வாரோ என்று தயக்கமாக இருந்தது.

அபய்க்கு வேண்டி, மாதும்மையை பார்க்கப் போகையில், தன் தங்கையையும், மகளையும் உடன் அழைத்துக் கொள்ள அவருக்கும் அவ்வளவு ஆசையாக இருந்தது. ஆனால், அபய் அதற்கு அனுமதிக்கவே இல்லை.

சொல்லப்போனால் அவன் குழப்பிவிட்டதாலேயே தன் தங்கையை அவர் அழைக்கவே இல்லை. அவர் போனை எடுத்து தங்கையை அழைக்கப் போகையில், “அம்மா, உங்க தங்கச்சியை கூப்பிடுறது இருக்கட்டும், என் தங்கச்சியையும் கூட்டிட்டு வர்றதா இருந்தா மட்டும் அவங்களை வரச் சொல்லுங்க.

“அப்படி இல்லாமல், அவங்க மட்டும் தனியா வந்து நின்னா, கொஞ்சம் கூட யோசிக்காமல் அவங்களை அப்படியே திருப்பி அனுப்பிடுவேன். இதுக்கு ஓகேன்னா மட்டும் அவங்களை கூப்பிடுங்க” அவன் சொல்ல, அதற்குமேல் அவரால் கலாவதியை அழைக்க முடியவில்லை.

தன் மகளை வைத்துக்கொண்டு தன் வீட்டில் ஒரு விசேஷம் என்றால், கலாவதி நிச்சயம் அதற்கு அனுமதிக்க மாட்டாள் என்று அவருக்கு நன்றாகவே தெரியும். ஒரு விசேஷம் நல்லநாள், கோலும் கிருஷ்ண ஜெயேந்தி என்ற கொண்டாட்டங்களுக்கு கூட மகளை தங்கள் வீட்டுக்கு அனுப்பாதவர்.

தாங்கள் வாங்கிக் கொடுக்கும் எதையுமே அவள் ஆசையாக உபயோகிப்பதை சகிக்க முடியாதவள், இதற்கு மட்டும் சம்மதிப்பாள் என்று தோன்றவில்லை. எனவே அந்த முடிவை அப்படியே விட்டுவிட்டார்.

அனைத்தையும் அன்று யோசிக்கையில் சரியாக இருப்பது போலவே இருந்தது. ஆனால், இன்று யோசிக்கையில் சரியில்லாததுபோல் தோன்ற தங்கையிடம் விஷயத்தைச் சொல்ல சற்று தயங்கினார்.

“என்னன்னு சொல்லுக்கா...” கலாவதி அவரின் யோசனையைக் கலைத்தார்.

“அது அபய்க்கு கல்யாணம் பண்ணலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்”.

“அதைச் சொல்ல எதுக்குக்கா இவ்வளவு யோசிக்கற? தாராளமா பாத்துடுவோம். அவனுக்கும் வயசாகிட்டே போகுதா இல்லையா?” கலாவதி சந்தோஷமாக உரைக்க, அந்த சந்தோஷத்தில் அவரால் கலந்துகொள்ள முடியவில்லை.

“கலா, கொஞ்சம் பொறுமையா இரு, அவங்க என்ன சொல்ல வர்றாங்கன்னு கேளு” கண்ணபிரான் மனைவியைத் தடுக்க, சட்டென அமைதியானார்.

“அபய் ஒரு பொண்ணை விரும்பறான். சோ... அவங்களுக்கு வர்ற மாசமே கல்யாணம் வைக்கலாம்னு எல்லாம் பேசி முடிவு பண்ணியிருக்கேன். அதைச் சொல்லத்தான்... அங்கே வரணும்னு இருந்தேன்” பிரபாவதி சொல்ல, அங்கே சில நிமிடங்கள் பெரும் அமைதி நிலவியது.

“என்னக்கா சொல்ற? கல்யாணம்... முடிவே பண்ணிட்டியா? எங்ககிட்டே எல்லாம் ஒரு வார்த்தை உனக்கு சொல்லணும்னு உனக்குத் தோணவே இல்லையா?” அங்கலாய்ப்பாக கேட்டார். ஆயிரம் இருந்தாலும் தன் அக்காவின் வீட்டில் ஒரு விசேஷம் என்கையில் தான் அங்கே இருக்க வேண்டும் என்ற ஆசை எதிர்பார்ப்பு அவருக்கு இருக்காதா என்ன?

“உங்களை எல்லாம் வீணா ஏன் தொல்லை செய்ய வேண்டும் என்றுதான்” மென்று முழுங்கினார். உன்னிடம் கேட்க தயங்கியே அவ்வாறு செய்தேன் என அவளது முகத்துக்கு நேராக சொல்ல முடியுமா என்ன?

“இதெல்லாம் எங்களுக்கு தொல்லையா? எங்களோட கடமைக்கா” ஆயிரம் இருந்தாலும் கலாவதியால் அதை ஏற்க முடியவில்லை. தானும் இதையேதான் அவர்களுக்குச் செய்ய இருந்தோம் என்பது அந்த நிமிடம் அவருக்கு நினைவுக்கு வரவே இல்லை.

ஆனால், அப்படியே நினைவுக்கு வராமல் போய்விடுமா என்ன? தன்னை அவள் அழைக்கவில்லை என இப்பொழுது கோபம் கொள்ளும் தன் மனது, சில நாட்களுக்கு முன்னர், அவள் பெற்ற மகளுக்கு தான் மாப்பிள்ளை பார்க்கையில் எங்கே போயிருந்தது?’ என அவரது மனசாட்சி கேள்வி கேட்க, அந்த கேள்விக்கு அவரால் பதில் சொல்லவே முடியவில்லை.

அதற்குமேல் அவனால் பொறுமையாக இருக்க முடியவில்லை. அவளது கரம் பிடித்து இழுத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தான். “இப்போ உங்களுக்கெல்லாம் சந்தோஷமா? இதுக்குத்தானே, இவளை அழ வச்சுப் பாக்கத் தானே இதையெல்லாம் பண்றீங்க?” அவன் கத்த, அங்கே இருந்த அனைவருமே ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டனர்.

பகுதி – 13.

பிரபாவதி தன் தங்கையை எப்படி சமாதானம் செய்வதென்று தெரியாமல் விழி பிதுங்கிக் கொண்டிருக்க, திடுமென அபய் அங்கே வந்து இப்படி பேசுவான் என்பதை அவர் எதிர்பார்க்கவே இல்லை. சில உணர்வுகளை பொதுவில் வெளிக்காட்டிவிட முடியாதே…

“வாடா பெரிய மனுஷா… இதெல்லாம் உன் வேலை தானா?” நிச்சயம் அப்படித்தான் இருக்கும் என கலாவதி எண்ணினார். மற்றபடி தன் அக்கா இப்படி செய்யவே மாட்டார் என்பது அவருக்குத் தெரியும்.

தான் தன் அக்காவை ஒதுக்கி வைத்த பொழுதும், தங்கை என்ற பாசம் சிறிதும் மாறாமல் தன்னை அரவணைத்துச் செல்லும் பிரபாவதி, அபயின் வாழ்வில் நடந்த பெரும் நிகழ்வுக்கு தன்னை அழைக்கவில்லை, அவ்வளவு ஏன் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லை என்பதை அவர் எப்படி நம்பவாம்?

“ஆமா, உங்களை அழைக்காததற்கு நான்தான் காரணம். ஆனா இதை செய்ய வைத்தது நீங்க…” ஆத்திரம் கொஞ்சமும் குறையாமல் முழங்கினான்.

“அபய் கொஞ்சம் பொறுமையா இரு” பிரபாவதிதான் குரல் கொடுத்தார்.

“இதுக்குமேலே என்னால் பொறுமையா இருக்க முடியாதும்மா. உங்க பேச்சைக் கேட்டு, நான் பொறுமையா இருந்த வரைக்கும் போதும். இன்னைக்கு நான் பேசலைன்னா, இனிமேல் என்னைக்குமே பேச முடியாது.

“நான் உங்க பொண்ணுக்காக பேசலை, என் தங்கச்சிக்கு வேண்டி பேசறேன். சோ… நீங்க கொஞ்சம் விலகியே இருங்க” அவன் ஒரு முடிவோடு பேச, ஒரு அளவுக்குமேல் அவராலும் அவனைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

அவன் பேசப் பேச கலாவதியின் முகம் இருந்துகொண்டே செல்ல, “அண்ணா, வேண்டாம்… அவங்களை எல்லாம் கஷ்டப்படுத்திட்டு எனக்கு

எதுவுமே வேண்டாம்” இதுதான் ஜனனி, அவளால் யாரையுமே கஷ்டப்படுத்த முடியாது.

சற்று நேரத்தில் அபய்யின் பேச்சால் இருண்ட கலாவதியின் முகம், ஜனனியின் செய்கையால் தெளிய, அதை பெரும் வேதனையாகப் பார்த்திருந்தான். தன் தங்கையின் மனப் போராட்டம் அவனுக்குத் தெரியாதா என்ன? அவனும் அதே நிலையில் நிற்பவன் தானே.

“பாத்தீங்களா... இப்போ கூட நீங்க கஷ்டப்படக் கூடாதுன்னு அவளோட ஆசையை எல்லாம் அடகு வச்சுட்டு எப்படி பேசறா பாருங்க” தங்கையின் கரத்தை அப்பொழுதும் விடாமல் இறுக பற்றிக் கொண்டான்.

“என்னப்பா இதெல்லாம்... ஏன் இப்படி பேசற? அவளை நான் கஷ்டப் படுத்துறதா? அவதான்டா என் உலகமே, அது உனக்குத் தெரியுமா?” கலாவதியால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

“அபய், இந்தப் பேச்சு வேண்டாம் விட்டுடு...” பேச்சு அபாயகரமான திசையில் செல்வது அவருக்கு பெரும் பயத்தைக் கொடுத்தது. இப்பொழுதாவது தன் மகளைக் கண்ணில் காட்டும் கலாவதி, இதற்குப் பிறகு தன் மகளை தன் கண்ணில் கூட காட்டாமல் போய்விடுவாரோ என அஞ்சினார்.

“என்னம்மா, உங்க பொண்ணை கண்ணில் கூட காட்டாமல் இருந்துடுவாங்கன்னு பயப்படறீங்களா?” அவன் நெற்றிப்பொட்டில் அறைந்தாற்போல் கேட்க, விக்கித்துப் போனார்.

கலாவதியால் அவன் தன் மனதை படம்பிடித்தாற்போல் புட்டு புட்டு வைப்பதை சகிக்க முடியவில்லை. அவள் குழந்தையாக இருந்த பொழுது அதைத்தானே செய்தார். ஆனால், இப்பொழுது தன் மகள் தன் கட்டுக்குள் இருப்பாள் என்பதை அவரால் நம்ப முடியவில்லையே.

தான் மாறியே ஆகவேண்டிய கட்டாயம் அவருக்கு பொட்டில் அறைந்தாற்போல் புரிந்தது. தன் கணவனும் காலையில் அதைத்தானே சொல்லியிருந்தார். அவருக்கு நெஞ்சுக்கூடு அதிர்ந்து அடங்கியது.

தன் அருகில் இருக்கும் மகள் தன்னை விட்டுக் கொடுத்துவிட மாட்டாள் என்ற நம்பிக்கை இருந்த பொழுதும், தன்னை மீறி சற்று பயந்து போனார். அவர் தன் கணவனைப் பார்க்க, 'பொறுமையாக இரு' என்பதுபோல் அவர் இமை மூடி திறக்க, அமைதியானார்.

"அண்ணே... நாம எதுவுமே பேச வேண்டாம். எனக்கு நீங்களும் வேணும், மம்மியும் வேணும். என்னால் நீங்க எல்லாரும் சண்டை போட்டுக்க வேண்டாம்" அவன் கரத்தை விலக்கிவிட்டு, கலாவதியின் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள்.

கலாவதியின் அருகே அமர்ந்தாலும், விம்மி, விம்மி அவள் அழ, அவளது அழுகையை யாரால் தாங்கிக் கொள்ள முடியுமாம்?

"உங்களுக்கு தெரியவே இல்லைன்னு சொல்ற விஷயம், சித்தப்பாவுக்கு தெரியுமா இல்லையான்னு கேளுங்க சித்தி..." வெகு வருடங்களுக்குப் பிறகு தன்னை முறை சொல்லி அழைத்த மகனை சிறு அதிர்வாக ஏறிட்டார். ஏனென்றால் அவன் சொன்ன விஷயம் அத்தகையது ஆயிற்றே.

"அபய், இப்போ எதையும் பேச வேண்டாம்..." பிரபாவதி, அதட்டினார்.

கலாவதி தன் கணவனைத் திரும்பிப் பார்க்க, தனக்குத் தெரியும் என்பதாக தலை அசைத்தார். பிரபாவதிக்குமே இந்த செய்தி புதியதாயிற்றே, அவரும் தன் மகனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார்.

இப்பொழுது அனைவரின் பார்வையும் அவனை ஏறிட, "எனக்கு அப்பா ஸ்தானத்தில் இருக்கும் சித்தப்பாகிட்டே சொல்லாமல் என்னால் எப்படிம்மா இருக்க முடியும்?" தாயிடம் நியாயம் கேட்க, அவர் கண்களிலும் மெல்லிய நீர்ப்படலம்.

"ப்ளீஸ்ம்மா... இன்னைக்கு ஒரு நாள் மட்டும் நான் பேசிடறேன். சித்தியை மரியாதைக் குறைவா ஒரு வார்த்தையும் பேசிட மாட்டேன் போதுமா?" கேட்டவன் தன் சித்தியின் அருகே சென்று அவர் காலுக்கருகில் மண்டியிட்டு அமர்ந்தான்.

அவரிடம் கோபம் கொண்டு பேசி தன் தங்கையை முழுதாக இழக்கும் தைரியம் அவனுக்கு இல்லை. அவளுக்காக போராடி, தன் தங்கையை தங்களுடனே அழைத்து வரும் தைரியம் அவனிடம் இருக்கிறதுதான். ஆனால், தங்களுடனே வந்துவிட தங்கையே முழுதாக விரும்பாதபொழுது அவன் யாருக்காக போராட?

எனவே தன் கோபத்தை ஒற்றிவைத்துவிட்டு நிதானமாக செயல்பட முடிவெடுத்தான். “இங்கே என் பக்கத்தில் உக்காரு…” கலாவதி வேண்ட மறுப்பாக தலை அசைத்தான்.

“நான் இப்படியே இருக்கறேன் சித்தி…” உரைத்தவன் அவரது இடக்கரத்தை ஒரு கரத்திலும், தன் தங்கையின் வலக்கரத்தை ஒரு கரத்திலுமாக பற்றிக் கொண்டான்.

“நான் உனக்கு யாரு சித்தி?” அவரிடம் கேட்க,

“இதென்னடா கேள்வி?”.

“சொல்லுங்க…” அவன் அதிலேயே நின்றான்.

“என் புள்ளடா…”.

“அப்போ இவ எனக்கு யார் சித்தி?”.

அவனை புருவம் நெரிய பார்த்தவர், “உன் தங்கச்சிப்பா…” அதைச் சொல்கையிலே அவரது குரல் கொஞ்சமாக நடுங்கியது. எங்கே என் தங்கையை என்னிடமே கொடுத்துவிடு எனச் சொல்வானோ என மனம் நடுங்கிப் போனார்.

“இவ உங்க வயித்தில் பிறந்த பொண்ணாகவே நான் நினைச்சுக்கறேன். அது அப்படியே இருக்கட்டும்… என் சித்தி பொண்ணாகவே அவ இருந்துட்டு போகட்டும் சரியா. இவளை எங்களுக்கே கொடுத்துடுங்கன்னு நான் கேக்கவே போறதில்லை சித்தி, நீங்க பயப்படாதீங்க” தன் கரத்தில் இருந்த அவரது கரம் அவ்வளவு நடுங்க, அதைப் பார்க்கவே அவனுக்கு பரிதாபமாக இருந்தது.

“அபய்...” அவர் நா தழுதழுக்க, “அண்ணே...” ஜனனி நெகிழ்ந்து போனாள்.

“ரெண்டுபேரும், ரெண்டு வீட்டு பிள்ளைங்களாகவே இருந்துக்கறோம். இப்போ நான் கேக்குறதுக்கு மட்டும் பதில் சொல்லுங்க, அம்மா எனக்கு கல்யாணம்னு சொன்ன உடனே உங்க மனசுக்குள்ளே முதல்ல தோன்றிய விஷயம் என்ன?” அவன் கேட்க, அவனைப் பரிதாபமாக ஏறிட்டார்.

எப்படி இதற்கு பதில் சொல்வது என்ற பட்டிமன்றம் அவர் மனதுக்குள் நடந்தேற, அதைக் கண் கொட்டாமல் பார்த்தவாறே அனைவரும் அமைதியாக இருந்தார்கள்.

“தங்கச்சி இருக்கும்போது, அண்ணன் கல்யாணம் பண்ணிக்கப் போறானேன்னு ஒரு நிமிஷம், ஒரு நொடியாவது யோசிச்சீங்களா இல்லையா?” அவனே கேட்க, தன் மனதைப் படிக்கும் அவனை அதிர்வாய் ஏறிட்டார்.

“எங்கே அவளை விட்டுக்கொடுக்க வேண்டி இருக்குமோ என நினைக்கும் நீங்களே இப்படி யோசிக்கும்போது, என் இடத்தில் இருந்து நீங்க யோசிச்சுப் பாருங்க...” அவன் நிறுத்த, அந்த நினைப்பே பயங்கரமாக இருந்தது.

“சரி, அதையெல்லாம் விடுங்க... இப்போ உங்க அக்கா பையனுக்கு கல்யாணம், உங்க சொந்த பொண்ணு அவன் கல்யாணத்தில் எப்படி இருக்கணும், என்னவெல்லாம் செய்யணும்னு உங்களுக்கு ஆசையே இல்லையா? இப்போ சொல்லுங்க, அவளை நீங்க உங்க சொந்த பொண்ணா நினைக்கறீங்களா இல்ல...” அடுத்த நிமிடம் அவன் வாயை பட்டென மூடியிருந்தார்.

“நான் உங்க புள்ளை இல்லையா சித்தி? என் தங்கச்சியை சேத்துக்கறீங்க, என்னை ஏன் தள்ளி வைக்கறீங்க?” அவன் கண் கலங்க கேட்க, அங்கே இருந்த அனைவரின் கண்களிலும் கண்ணீர் நிறைந்தது.

“அபய்... நீயும் என் புள்ளை தான்டா. இப்போ சொல்றேன்டா... உன் கல்யாணத்தில் நாத்தனார் செய்முறை எல்லாம் என் பொண்ணுதான் முன்ன நின்னு செய்வா. நாத்தனார் முடிச்சையும் அவதான் போடுவா.

அதே மாதிரி, அவ கல்யாணத்தில் அண்ணன் முறை எல்லாம் நீதான் செய்யணும்” அவனை இறுக அணைத்துக் கொண்டார்.

எப்படியோ முடியப் போகிறது என எதிர்பார்த்த விவாதம் நல்ல முறையில் முடிய, அனைவருக்குமே அவ்வளவு நிம்மதி. “சித்தி, இன்னைக்கு ஹோட்டல் போகலாமா? எல்லாரும் சேர்ந்து வெளியே போய் ரொம்ப நாளாச்சு” அவன் கேட்க அனைவருமே சம்மதித்தார்கள்.

அனைவரும் ஒன்றாக ஒரே காரில் கிளம்பி செல்ல, அபய் காரை செலுத்த, அவன் அருகில் ஜனனி அமர்ந்திருந்தாள். “தேங்க்ஸ்ண்ணா...” அவனிடம் உரைக்க, அவனோ அவளைப் போலியாக முறைத்தான்.

“இதுக்கு எதுக்கு தேங்க்ஸ் எல்லாம்... நான் உனக்காக செய்யலை, நமக்காகத்தான் செய்தேன். ஆனாலும் இதை முன்னாடியே செய்திருக்கலாம்னு தோணுது” தன் பார்வையை பின்னால் செலுத்தியவாறே சொன்னான்.

“இன்னைக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்ண்ணா...” உணர்ந்து உரைத்தாள். தங்கையைப் பார்த்து புன்னகைத்தவன், அவளது கரத்தை அழுத்தி விடுவித்தான்.

கலாவதியும் தன் அக்காவிடம் அதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தார். “ஜனனியை என் பொண்ணா உரிமை கொண்டாடிய நான், அபய்யை அப்படியே விட்டிருக்க கூடாதுக்கா. நான் ஜனனியை மொத்தமாக பிரிக்கணும் என நினைத்ததுதான் பெரிய தப்பே.

“பெறாத எனக்கே அவளை விட்டுக் கொடுப்பது இவ்வளவு கஷ்டமா இருந்தால், பெற்ற உனக்கு எப்படி இருந்திருக்கும்? என்னை மன்னிச்சுடுக்கா” உளமாற மன்னிப்பை வேண்டினார்.

“அதையெல்லாம் விடு கலா... அதான் இப்போ உனக்கு ஒரு மகனும் கிடைத்திருக்கிறானே, அதை நினைத்து சந்தோஷப்படு” அவரும் உணர்ந்தே உரைத்தார்.

ஹோட்டலுக்கு முன்பாக காரை நிறுத்த, பெண்கள் அனைவரும் உள்ளே செல்லவே, ஆண்கள் இருவரும் பார்க்கிங்கில் காரை நிறுத்த சென்றார்கள்.

அங்கே காரை நிறுத்தி இறங்கியவன், தன் சித்தப்பாவை இறுக அணைத்துக் கொண்டான்.

“ரொம்ப தேங்க்ஸ் சித்தப்பா... நீங்க மட்டும் இன்னைக்கு போன் பண்ணி சொல்லியிருக்கவில்லை என்றால், இதெல்லாம் நடந்தே இருக்காது. இதை நான் மறக்கவே மாட்டேன்” நெகிழ்வாக உரைக்க, அவன் தோளை தட்டிக் கொடுத்தார்.

“உன் சித்தி ஒண்ணும் கெட்டவ கிடையாதுப்பா. எங்கே ஜனனி பெத்தவ கூடவே போய்டுவாளோ என்ற பயம்தான் அவளை இப்படியெல்லாம் நடக்க வைத்தது. அது அப்படி இல்லைன்னு அவளுக்கு புரிய வர கொஞ்ச காலம் ஆயிடுச்சு அவ்வளவுதான்” அவனிடம் உரைத்தார்.

“சித்தி கெட்டவங்கன்னு நான் எப்போ சொன்னேன்? ரொம்ப பொசசிவ் அவ்வளவுதான்” அவனும் சற்று இலகுவாக இருவருமாக ஹோட்டலுக்குள் சென்றார்கள்.

மூன்று மூன்று பேராக அமரக்கூடிய அந்த இருக்கைகளில் மூன்று பெண்களும் ஜனனியை நடுவில் இருத்தி ஆளுக்கொரு பக்கமாக அமர்ந்திருக்க, அதைப் பார்த்தவாறே இவர்கள் இருவரும் அவர்களுக்கு எதிரில் இருந்த இருக்கைகளில் அமர்ந்தார்கள்.

“சித்தி ஆர்டர் பண்ணிட்டீங்களா?” அபய் கலாவதியிடம் கேட்க, அவர் சற்று தடுமாறிப் போனார். சிறு வயது முதலே அபய்க்கு கலாவதி என்றாலே ஆகவே செய்யாது.

முதலிலேயே தன் தங்கையைப் பிரித்தவர் என்ற கோபம் இருக்க, அவளை தங்கள் வீட்டுக்கு கூட அனுப்பாமல் இருக்கவே, பெரும் வெறுப்பையே வளர்த்துக் கொண்டான். அவரை சித்தி என அழைப்பதை அப்பொழுதே நிறுத்தியிருந்தான்.

மொட்டையாக பேசுவதோ, இல்லையென்றால் ஒதுங்கிச் செல்வது மட்டுமே வேலையாகக் கொண்டிருந்தான். அவரிடம் நேரடிப் பேச்சுவார்த்தையை நிறுத்தியே பல வருடங்கள் கடந்துவிட்டன. அப்படி இருக்கையில் அவன் திடுமென தன்னிடம் உரையாடுவது அவருக்கு திகைப்பாக இருந்தது.

அபய்யும் அவருடன் உரையாடுவதை ஒரே நாளில் செய்துவிடவில்லை. இதற்கான ஒத்திகையை அவன் பலநாள் பார்த்துக் கொண்டிருக்கிறான். என்று அவனது சித்தப்பாவிடம் பேசினானோ, என்று அவர் அறிவுரை சொன்னாரோ, அன்று முதலே அதை யோசித்து விட்டான்.

எனவே அவனால் சற்று இலகுவாக அவனால் உரையாட முடிந்தது. அவன் சித்தியிடம் பேசுவதைப் பார்த்த ஜனனி அவனிடம் புருவம் உயர்த்திக் காட்ட, மற்றவர்கள் அறியாதவாறு இமை சிமிட்டி சிரித்தான். அவளும் அவனோடு சேர்ந்து சிரித்துக் கொண்டாள்.

அதன் பிறகு அனைவருமே அவர்களுக்குத் தேவையானதை ஆர்டர் செய்து காத்திருக்க, “அக்கா, நம்ம ஜனனிக்கும் கல்யாண வயசு வந்துடுச்சு. அவளுக்கும் மாப்பிள்ளை பாக்கணும்…” அவளுக்கு ஏற்கனவே மாப்பிள்ளை பார்த்தேன் என அவரால் சொல்ல முடியவில்லை.

“அதுக்கென்ன தாராளமா பாக்கலாமே…”.

“அம்மா, முதல்ல அவளுக்கு யாரையாவது பிடிச்சிருக்கான்னு கேளுங்க, பிறகு மீதியைப் பேசலாம்” அபய் இடையிட, ஜனனி அவனை முறைத்தாள்.

திருமணம் என்ற பேச்சு எடுத்த உடனேயே, ஜனனியின் மனதுக்குள் யாராவது இருக்கிறார்களா என்று அபய் கேட்க, இந்த எண்ணம் தனக்கு மட்டும் ஏன் வரவில்லை என வெட்கினார்.

ஜனனியோ அந்த பேச்சு அப்பொழுது எழும் என்பதை எதிர்பாராமல் பரிதவித்துப் போனாள். அவளது திருமணப் பேச்சை இரண்டு மாதங்களுக்கு அவள் கடினப்பட்டு தள்ளி வைத்திருக்க, அது இப்பொழுது பேசுபொருள் ஆகவே அவளுக்குள் கலவரம் மூண்டது. அனைவருமாக முடிவெடுத்து, உடனடியாக தீனாவிடம் பேசவேண்டும் என முடிவெடுத்தால் என்ன செய்ய முடியும்?

“அக்கா, ஜனனி அவளோட வேலை பாக்குற தீனா என்ற பையனை விரும்பறதா சொல்றா” இது ஏற்கனவே அவர்களுக்குத் தெரிந்த விஷயம்தான் என்றாலும், அதை அப்பொழுதுதான் கேட்பதுபோல் கேட்டுக் கொண்டார்கள்.

“யார்… உன் டீமில் இருக்கானே அந்த தீனாவா?” அபய் சற்று குரல் உயர்த்திக் கேட்க, அவள் விழித்தாள்.

“அபய், காதலிக்கிறது என்ன அவ்வளவு பெரிய குத்தமா? உனக்கு ஒரு நியாயம், அவளுக்கு ஒரு நியாயமா? அவளோட விருப்பத்தை நம்மகிட்டே சொல்லாமல், யார் கிட்டே சொல்வா?” வேகமாக மகளுக்கு வக்காலத்து வாங்கினார்.

‘அம்மாடியோ… உலகமகா நடிப்புடா சாமி’ என்ற பாவனையில் கண்ணபிரானும், ஜனனியும் அவனைப் பார்க்க, தனக்குள் பொங்கிய சிரிப்பை அப்படியே அடக்கிக் கொண்டான்.

“நான் கேட்டதுக்கு பதில் சொல்லு” அவன் அதிலேயே இருக்க, அவள் அவனை முறைத்தவாறே மையமாக தலை அசைத்தாள்.

“ம்… அவனை எனக்குத் தெரியும்… கொஞ்சம் நல்ல பையன்தான். வீடும் நல்ல வசதிதான்” அவன் சொல்ல, கலாவதியின் முகத்தில் சிறு நிம்மதி விரவியது. ஜனனியோ தன் முறைப்பை நிறுத்தவே இல்லை.

“அப்படின்னா ஜனனிக்கும் பேசி முடிச்சுட்டு, ரெண்டு கல்யாணத்தையும் ஒரே மேடையில் வச்சுடலாமே” பிரபாவதி ஆர்வமாக, ஜனனி தன் அண்ணனை கொலைவெறியில் முறைத்தாள்.

அதைப் பார்த்தவாறே, “அம்மா… ரெண்டு கல்யாணத்திலும் நாங்க முழுசா இருக்கணும்னு விரும்பறேன், சோ… முதல்ல பேசியபடி என் கல்யாணம் முடியட்டும், பிறகு அவங்க கல்யாணத்தைப் பேசி முடிக்கலாம். என் தங்கச்சிக்கு எல்லாத்தையும் நானே முன்ன நின்னு செய்யணும்” அவன் சொல்லவே, அதை அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள்.

அதன் பிறகுதான் ஜனனி நிம்மதியாக மூச்சு விட்டாள். அன்று இரவு அவர்கள் அனைவருமே அபய்யின் வீட்டில் தங்கிக் கொள்ள, அனைவரும் ஒன்றாக ஹாலில் படுத்துக் கொண்டார்கள். பெரியவர்கள் ஒரு பக்கம் பேசியவாறே படுத்திருக்க, அண்ணனும் தங்கையும் பல வருட கனவு நனவானதில் திளைத்திருந்தனர்.

மறுநாள் காலையில் இருவரும் ஒன்றாக வேலைக்குக் கிளம்ப, “இன்னைக்கு நானே உன்னை கூட்டி போய் விடறேன். அந்த தடியன் கிட்டே சொல்லிடு, இல்லன்னா உன்னை பஸ்ஸில் காணலைன்ன உடனே எனக்கு போனைப் போட்டு மாட்டி விட்டுடுவான்” அவன் சொல்ல, வேகமாக அதைச் செய்தாள்.

“என்னது அபய் கூட வர்றியா? இந்த அதிசயம் எப்படி நடந்தது?” ஆச்சரியமானான்.

“எல்லாத்தையும் வந்து சொல்றேன். இங்கே வைத்து பேச முடியாது” சொன்னவள் அலைபேசியை வைத்துவிட்டாள்.

அவள் அலுவலகம் சென்ற பொழுது அவளுக்காக ஒரு சர்ப்ரைஸ் காத்துக் கொண்டிருந்தது. அவர்கள் புதிதாக செய்து கொண்டிருந்த ப்ராஜெக்ட் சக்சஸ் ஆகியிருக்க, அவர்களுக்கு அந்த வேலையைக் கொடுத்த கம்பெனி, டீம் மெம்பர்கள் அனைவருக்கும் ஒரு டூர் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பொதுவாகவே அவர்களது கம்பெனியில் இருந்து சுற்றுலா சென்றால் ஜனனி செல்வதே கிடையாது. கலாவதி அவளை எங்கேயும் அனுப்ப மாட்டார். அப்படி இருக்கையில் அவளால் சந்தோஷப்படவும் முடியவில்லை.

அவள் முகத்தில் இருந்த பாவனையை வைத்தே அவள் இப்பொழுதும் வரப் போவதில்லை என்பதை உணர்ந்த தீனாவுக்கு அப்படி ஒரு கோபம் வந்தது.

“என்ன, இந்த முறையும் வரப் போவது இல்லையா?” அவளிடம் கேட்க, பரிதவிப்பாய் அவனைப் பார்த்தாள்.

“மம்மி அலவ் பண்ண மாட்டாங்க தீனா. அது உங்களுக்கே தெரியுமே” அவன் புரிந்துகொள்ள மறுக்கிறானே என்று இருந்தது.

“அதெல்லாம் எனக்குத் தெரியாது, இந்த முறை நீ வர்ற. மூணு நாள் ட்ரிப், எல்லாரும் ஊட்டி போறோம். நீ வீட்டில் கேக்கலை என்றால், நான் வந்து கேப்பேன். நான் மட்டும் இல்லை, நம்ம டீமே உன் வீட்டுக்கு வரும்” இதுதான் என் முடிவு என சொல்லிவிட்டு சென்றுவிட்டான்.

நாளுக்கு நாள் அவனது அடாவடி அதிகரிப்பதைப் பார்த்து திணறிப் போனாள். ஊட்டிக்குச் சென்றால் என்ன ஆகும்? இந்த நினைப்பே அவள் உள்ளுக்குள் வியர்க்க வைத்தது. வரம்பு மீறிவிடுவான் என்றெல்லாம் அவள் பயப்படவில்லை.

ஆனால் அதே நேரம் வரம்புக்குள் நிற்பான் என்றும் அவளால் நம்ப முடியவில்லை. இதயம் படபடக்க, முதலில் அவள் அழைத்தது தன் தந்தைக்குத்தான்.

அலுவலகத்துக்குச் சென்ற பிறகு, ஏதும் அவசர விஷயம் இல்லையென்றால் தவிர மற்ற எதற்காகவும் தனக்கு அழைக்க மாட்டாள் என்பதால் வேகமாக அழைப்பை ஏற்றார்.

“அப்பா, வீட்டில் இருக்கறீங்களா? இல்ல கடைக்கு கிளம்பிட்டீங்களா?” அவள் கேட்க, அவள் குரலில் இருந்த பரபரப்பில் புருவம் நெரித்தார்.

“இன்னும் வீட்டில் தாம்மா இருக்கேன். என்னன்னு சொல்லு”.

“அப்பா, ஆபீசில் இந்த வீக் எண்டு ஊட்டிக்கு டூர் ஏற்பாடு பண்ணியிருக்காங்க. இந்த முறையாவது நான் போகணும்ப்பா. மம்மிகிட்டே கொஞ்சம் பேசறீங்களா? என்னால் அவங்க கிட்டே கேக்க முடியாது, பிளீஸ்…” தீனா இந்த அளவுக்கு பிடிவாதமாக சொன்ன பிறகு, அவளால் எப்படி செல்லாமல் இருக்க முடியுமாம்?

“சரிம்மா, நான் அவகிட்டே பேசிப் பாக்கறேன். நீ நிம்மதியா உன் வேலையைப் பார்” சொன்னவர் அழைப்பை வைத்துவிட்டார்.

தந்தை பேசுகிறேன் எனச் சொல்லிவிட்டாலே நிச்சயம் அது சக்சஸ் ஆகும் என்பதால், நிம்மதியாக தன் வேலையைப் பார்க்கத் துவங்கினாள். ஆனாலும் தீனாவிடம் வருவதாக சொல்லிவிடவில்லை. அவனிடம் இப்பொழுதே வருவதாகச் சொல்லிவிட்டு, பிறகு செல்ல முடியாமல் போனால் அது பெரும் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் அவனிடம் சொல்லவில்லை.

அதே நேரம், அவன் அவ்வளவு இறுக்கமாக இருப்பதையும் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அந்த நேரம் நிவேதா ஏதோ வேலையாக

டீனின் அறைக்கு எழுந்து செல்லவே, வேகமாக அவளது இருக்கையில் வந்து அமர்ந்தாள்.

அவள் அருகே அமர்ந்ததைப் பார்த்து மனம் சற்று இளகினாலும், அதை அவளிடம் காட்டாமல் முகத்தை இறுக்கமாகவே வைத்துக் கொண்டான். இதுவரைக்கும் அவனாக இதைச் செய்திருக்கிறானே தவிர அவளாக தன் நேசத்தை அங்கீகரிப்பதுபோன்ற எதையும் செய்தது இல்லை என்பதால் அப்படியே குளிர்ந்து போனான்.

தன் நேசத்துக்கான பதிலை அவள் சொல்லிவிடும் காலம் வெகு தூரத்தில் இல்லை என எண்ணிக் கொண்டான். அவளோ, 'ஆமா, இதையெல்லாம் நல்லா செய்யத் தெரியுது, அடுத்து என்ன செய்யணும்னு மட்டும் இவருக்கு தெரியாதாக்கும்?' மனதுக்குள்ளேயே நொடித்துக் கொண்டாள்.

நிவேதா டீனின் அறையிலிருந்து வெளியேற, ஜனனியும் தன் இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டாள். டீனின் அறையிலிருந்து வெளியே வந்த நிவேதாவின் முகம் முதல்முறையாக சிரிப்பைத் தொலைத்திருக்க, அதை சிறு யோசனையாகப் பார்த்தாலும் எதையும் கேட்கவில்லை.

ரக்ஷன் பெண்களிடம் எதையாவது சொல்லாமல் இருந்தால்தான் ஆச்சரியம் என எண்ணிக் கொண்டான். அவனைப் பற்றி தெரிந்ததாலோ என்னவோ அதை அவன் பெரிதாக எடுக்கவும் இல்லை. ஆனால் என்றைக்காவது ஒருநாள் ரக்ஷன் தன்னிடம் வாங்கிக் கட்டிகொள்ளப் போகிறான் என்பது மட்டும் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

அடுத்து வந்த நாட்கள் மௌனப் போராட்டத்தில் கடக்க, கலாவதி இன்னுமே தன் சம்மதத்தை தெரிவிக்காமல் இருக்கவே, ஜனனியால் அவனை சமாதானம் செய்யவும் முடியவில்லை.

ஒரு வழியாக அவளை முழுதாக சோதித்துவிட்டு, கலாவதி அனுமதி வழங்கவே, அதை அவனிடம் நேரில் தெரிவிக்க வேண்டி காத்திருந்தாள். டீ பிரேக்கில் அவன் அவளிடம் கேட்க, தான் ஊட்டிக்கு வருவதாகச் சொல்லவே அவனது முகம் அப்படியே மலர்ந்து போனது.

முகம் மலர்ந்து, இதழ் விரிந்து, கண்கள் அகன்று, அவளை விழுங்கிவிடும் பார்வை பார்க்க, அவ்வளவு நேரமாக அவனையே பார்த்தவாறு இருந்தவள், அவன் பார்வையின் வீச்சு அதிகரிக்கவே, வேகமாக தன் பார்வையை திருப்பிக் கொண்டாள்.

“தீனா, நாம கேண்டீன்ல இருக்கறோம்” மெதுவாக முனகி அவனைக் கலைக்க முயன்றாள்.

“வேன்’ல நீ என் கிட்டேதான் உக்காரணும்...” அவன் ஆழ்ந்த குரலில் உரைக்க, அவனது குரல் அடிமனதில் மெல்லிய குளிரைப் பரப்ப, மறுப்பாக தலை அசைத்தாள்.

அவள் மறுக்கவே, “ஏன்?” சற்று பரிதாபமாக கேட்டான்.

“இப்போல்லாம் நீங்க சரியே இல்லை. இதில்...” மேலே சொல்ல முடியாமல் கீழுதட்டை பற்களால் அழுத்தமாக கடித்துக் கொள்ள, அவனது மூச்சுக்காற்று வெம்மையானது.

“ம்ஹூம்... காட்...” அவஸ்தையாக முனகியவன், “நான் கிளம்பறேன், இல்லன்னா இது ஒரு பொதுவிடம் என்பதைக் கூட நான் மறந்துடுவேன்” அவள் இதழ்களையே அசையாமல் பார்த்து முனகியவன் வேகமாக விலகிச் செல்ல, படபடத்துப் போனாள்.

அன்று மாலையில் அவர்கள் அனைவரும் ஊட்டிக்கு கிளம்பிச் செல்ல வேண்டி வந்திருக்க, அவளை அபய் விட்டுச் செல்ல வந்திருந்தான். அவனைப் பார்த்தவுடன் தீனா அருகே வர, “பத்திரமா பாத்துக்கோடா...” அவனிடம் சொல்ல, நண்பனின் வயிற்றிலேயே குத்தினான்.

“அதெல்லாம் நாங்க பாத்துக்கறோம், நீ கிளம்பு...” பேருந்து கிளம்பும் முன்பே அவனை அனுப்பினான்.

“ஏன் அண்ணா கொஞ்ச நேரம் இருந்தால் என்னவாம்?” அவள் குறைபட,

“என்னை கண்காணிச்சுகிட்டே நிப்பான், அவன் முன்னாடியே அவன் தங்கச்சியை எப்படி சைட் அடிக்கிறதாம்?” அவளிடம் நியாயம் கேட்க, திடுக்கிட்டுப் போனாள்.

‘யாராவது தங்கள் பேச்சைக் கேட்டால் என்னவாகும்?’ என அவள் பதட்டமாக, அவன் சாதாரணமாக தோளைக் குலுக்கிக் கொண்டான்.

“உனக்குப் பக்கத்தில் நான்தான் உக்காருவேன்” அவளிடம் அழுத்திச் சொல்லிவிட்டு தன் நண்பர்களோடு இணைந்து கொண்டான்.

பேருந்து வரவே அனைவரும் ஏறி அமர, அனைவரும் ஏறிவிட்டதை உறுதி செய்துவிட்டு இறுதியாக பேருந்தில் ஏறினான் தீனா. பேருந்து சிட்டி லிமிட்டை விட்டு வெளியே வரும் வரைக்கும் வாசல் பக்கத்திலேயே நின்றவன், அனைவரது வசதியைப் பார்த்துவிட்டு மெதுவாக முன்னேறினான்.

அவனது பார்வை பெரும் ஆர்வமாக தன்னவளைப் பார்க்க, அவளுக்குப் பக்கத்தில் இருந்த காலி இருக்கை அவனை வரவேற்கக் காத்திருந்தது. அவன் ஒவ்வொரு அடியாக முன்னெடுத்து வைக்க, இதயம் படபடக்க ஜன்னலுக்கு வெளியிலேயே தன் பார்வையை அழுத்தமாக பதித்திருந்தாள் ஜனனி.

## பகுதி – 14.

ஜனனியின் மனம் வெகு வேகமாக அடித்துக் கொண்டது. கடந்த சில நாட்களாக தீனா அவளிடம் காட்டும் நெருக்கமும், பேச்சும், பார்வையும், இந்த பயணமும், அவளுக்கு உள்ளுக்குள் பெரும் உதறலைக் கொடுத்தது. அதை அவளால் தடுக்கவே முடியவில்லை.

அவன் தன்னிடம் உரிமை எடுத்துக் கொண்டால் அதைத் தடுக்கும் நிலையிலோ, தவிர்க்கும் நிலையிலோ தன் மனம் வலுவாக இல்லை என்னும் எண்ணமே அவளை அதிகம் பயம் கொள்ளச் செய்தது.

அவன் அப்படியெல்லாம் வரம்பு மீறிவிட மாட்டான் என்ற நம்பிக்கை மலையளவு இருந்தாலும், திடுமென தோன்றும் இந்த எண்ணத்தை அவள் என்ன செய்யவாம்? ஒரு வேளை அவளது இந்த திடீர் நினைப்புக்கு அவளது தாயும் கூட ஒரு காரணமாக இருக்கலாம்.

ஒரு வேளை கலாவதி சொன்ன அறிவுரைகளால் கூட இப்படி நடந்து கொள்கிறாளோ? “மாப்பிள்ளை ஊட்டிக்கு வர்றாரா?” அவர் கேட்ட

கேள்விக்கான காரணமே முதலில் அவளுக்குப் புரியவில்லை. ஒரு தாய்க்கு தன் மகளின் பாதுகாப்பு மட்டும்தானே முதல் கவனமாக இருக்கும்.

“ஆமாம்மா… எல்லாரும் சேர்ந்துதான் போகிறோம்” அவள் சொல்ல சில நிமிடங்கள் அவர் அமைதியாக இருந்தார். அவர் மனதுக்குள் என்ன ஓடுகிறது என்று அவளால் கணிக்கவே முடியவில்லை.

அவள் தன் தந்தையைப் பார்க்க, ‘பொறுமையாக இரு’ என செய்கையில் காட்ட சற்று அமைதி காத்தாள். ‘உங்க அம்மாவுக்கு நீ ஒரே செல்ல பெண் என்பதால், உன்னை கண்ணுக்குள்ளேயே வைத்து பாத்துக்க ஆசைப்படுறா. மற்றபடி உன் தோழிகள் பார்த்த அனைத்து இடங்களுக்கும் நீ கேட்காமலேயே உன்னை அழைத்துச் சென்று காட்டியிருக்கிறாள் தானே’ கண்ணபிரான் தன் மகளிடம் கேட்டிருக்க அதையும் அவள் ஏற்றுத்தான் ஆகவேண்டி இருந்தது.

“நான் சின்னப் பிள்ளையாக இருந்த வரைக்கும் நீங்க சொன்னது பரவாயில்லை, இப்போ நான் வளர்ந்துவிட்டேன். என்னைப் பார்த்துக்கொள்ள எனக்குத் தெரியாதா?” அவரிடம் வாதாடினாள்.

“இப்போ நீ பெரியபொண்ணா ஆயிட்டதுதான் பிரச்சனையே. அதுவும் மாப்பிள்ளையும் உன்னோட வர்றார்ன்னு தெரிந்த உடனே, அவளோட கவலை வேற விதத்தில் உரு மாறிடுச்சு” அவர் சொல்ல, அவர் சொல்ல வருவது புரியாத அளவுக்கு முட்டாள் இல்லையே.

“இதென்ன திடீர் பழக்கமெல்லாம்? இதற்கு முன்னாடி நீ இப்படி போனதில்லையே” கணவன் ஆயிரம் முறை சமாதானம் சொல்லியிருந்தாலும், அதையெல்லாம் அவரால் ஏற்க முடியவில்லை.

“மாம்… நான் இப்படியெல்லாம் ஒரு முறை கூட வெளியே போனதே இல்லையே. இந்த ஒரு முறை மட்டுமாவது போய்ட்டு வரலாமேன்னு கேட்டால், உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால் நான் போகலை” அவளும் எவ்வளவுதான் போராட முடியும்?

‘என்ன இது?’ என்பதுபோல் கண்ணபிரான் மனைவியைப் பார்க்க, கொஞ்சமாக அசைந்தார்.

ஆனால் அதன் பிறகு, எங்கே தங்குகிறார்கள்? எத்தனைபேர் ஒரு அறையில் தங்குவீர்கள், யார் யாருடன் தங்க வேண்டும் என சொல்லிவிட்டார்களா?" என அவரது கேள்விகள் தொடர அனைத்திற்கும் பொறுமையாகவே விளக்கம் அளித்தாள்.

"கலா, அவளைக் கொஞ்சம் ப்ரீயாத்தான் விடேன், அவ என்ன சின்னக் குழந்தையா? எதைச் செய்யணும், எதைச் செய்யக் கூடாதுன்னு அவளுக்குத் தெளிவா தெரியும்" மகளுக்காக பேசினார்.

"உங்களுக்கு ஒண்ணும் தெரியாது... நீங்க பேசாமல் இருங்க, பஞ்சையும் நெருப்பையும் பக்கத்தில் பக்கத்தில் வச்சாலும் பத்திக்காதுன்னு சொல்றீங்க, அதை உங்களால் நம்ப முடியுதா?" அவர் கேட்க, தாயின் கேள்விகளுக்கான காரணம் சரியாகப் புரிந்தது.

"அம்மா... என்னம்மா பேசறீங்க? இதுக்கு நீங்க என்னை அனுப்பாமலே இருக்கலாம்" வேதனையாக உரைத்தவள், விருட்டென தன் அறைக்குச் சென்றுவிட்டாள்.

அவள் பின்னாலேயே சென்ற கலாவதி, "ஒரு அம்மாவா என் இடத்தில் இருந்து நீ யோசி ஜனனி. உன்னை அவரோட சேர்த்து அனுப்பிட்டு, ஒவ்வொரு நிமிஷமும் நான் தவிச்சுட்டு இருக்கணும். இதுவே உங்களுக்கு கல்யாணம் முடிந்திருந்தால் நான் கவலையே பட்டிருக்க மாட்டேன்.

"எதற்குமே சந்தர்ப்பம் என ஒன்று அமையாத வரைக்கும் தான் எல்லா ஆம்பளைங்களும் நல்லவங்களாகவும், பொறுமை சாலிகளாகவும் இருப்பாங்க. இவ தன்னோட உரிமைப் பட்டவன்னு தெரிந்த பிறகு எந்த ஆம்பளையாலும் பொறுமையா இருக்க முடியாது" அவர் சொல்ல பட்டென அமைதியானாள்.

"நீங்க அவரை நம்ப வேண்டாம்... ஆனா உங்க பொண்ணை நம்பலாமேம்மா" அவள் வருத்தமாக உரைக்க இப்பொழுது அமைதியாவது அவரது முறையானது.

"சரி, என் பொண்ணை நான் நம்பறேன், பாத்து போயிட்டு பத்திரமா வா" அவர் அரை மனதாக வழியனுப்பி வைத்திருக்க, அதுவும் அவளது இந்த தடுமாற்றத்துக்கு ஒரு காரணமாக அமைந்தது.

‘என் அருகில்தான் அமர்வேன் என்று சொன்னாரே, ஏதாவது சில்மிஷம் செய்வாரோ? இல்லையென்றால் முத்தமிட்டு விடுவாரோ? அன்று நுஹாவின் பிறந்தநாளின் பொழுது கேட்டாரே’ அவனது காந்த பார்வைகள் கொடுக்கும் அதிர்வுகள் அவள் அடிமனதில் அதிர்வலைகளை ஏற்படுத்திக் கொண்டே இருக்க, அவளால் தெளிந்த மனநிலையோடு இருக்க முடியவில்லை.

அவள் ஒன்றை மறந்துவிட்டாள், தீனாவிடம் ஒரு வார்த்தை சொன்னாலே போதும், அவன் அவளை மறந்தும் சீண்ட நினைக்க மாட்டான் என்பதை முற்றாக மறந்து போனது விதியின் சதியன்றி வேறென்ன?

தீனாவுக்கோ இந்த அலுவலகத்துக்கு அவள் வந்த பிறகு எத்தனையோ பயணங்கள், அவுட்டிங் சென்றிருக்கிறார்கள். அதில் எதிலுமே ஜனனி கலந்து கொண்டதே இல்லை. ஆனால் இந்த பயணத்துக்கு அவள் வந்திருக்கவே, அவளுடன் இனிமையாக பொழுதைக் கழிக்க விரும்பினான்.

சொல்லப்போனால் இந்த பயணத்தில் அவளிடம் தன் காதலுக்கான பதிலைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது மட்டுமே எண்ணமாக இருந்தது. மாறாக காதலனுக்கான சீண்டல்களை, தீண்டல்களை அவன் எதிர்பார்க்கவே இல்லை.

இதுவரைக்கும் வராதவள் வந்திருக்கிறாள், இந்த பயணத்துக்கு ஏன் வந்தோம் என அவள் எண்ணிவிடக் கூடாது என்பதில் அவன் மிகத் தெளிவாக இருந்தான் என்றே சொல்ல வேண்டும். அதை அவளிடம் சொல்லிவிட வேண்டும் என்றெல்லாம் அவன் நினைக்கவே இல்லை.

பொதுவாகவே அவன் மற்றவர்கள் முன்னால் முழுதாக கவனமெடுப்பவன், அப்படி இருக்கையில் தன்னைப் பார்த்து அவள் பயம் கொள்வாள் என்றெல்லாம் அவன் நினைத்தே பார்க்கவில்லை. அதிலும் அவள் தன் நண்பனின் தங்கை என்பதில் அவன் மிகத் தெளிவாக இருக்கிறானே.

தன் நண்பனின் தங்கைக்கு தன்னால் ஒரு கலக்கம், களங்கம் வருவதை அவன் எப்படி விரும்புவான்? அனுமதிப்பான்? மூன்றாவது

பெண்களிடமே கண்ணியம் காத்து விலகி நிற்பவன், தன் நண்பனின் தங்கையிடம் அதை எந்த அளவுக்கு கடை பிடிப்பான்.

சில நாட்களாக அவளைச் சீண்டுவது கூட, மீண்டுமாக ஒருத்தன் முன்னால் அவள் மணப்பெண் வேடம் போட்டுவிடக் கூடாது என்பதற்காகத் தானே தவிர, தன் காதலியான அவளை உரிமை கொண்டாடிவிடும் எண்ணம் அவனிடம் எப்பொழுதுமே கிடையாது.

அதிலும் தன் மனதுக்குள் அவள் இருக்கிறாள் என அவளுக்கு உணர்த்திவிடும் முகமாகத்தானே தவிர வேறு ஒன்றும் அவன் நினைப்பில் இருந்ததில்லை. அதிலும் அவளைச் சீண்டுகையில் அவளிடம் ஏற்படும் அந்த தடுமாற்றத்தையும், மெல்லிய படபடப்பையும் காணவே அவ்வாறு செய்திருக்கிறான்.

அதற்குமேல் அவளிடம் எதையும் செய்துவிடும் எண்ணம் அவனிடம் இருந்ததே இல்லை.

சொல்லப்போனால் அவளை தொட்டு பேசிவிடும் நிலைக்கு கூட அவன் இன்றுவரை இறங்கியது இல்லை. தங்களது தனிமையான நேரங்களில், தன் பார்வைகள் அவளை தீண்ட அனுமதிப்பானே தவிர, கரங்கள் அந்த வேலையைச் செய்ய அவன் அனுமதிப்பதில்லை.

அதிகபட்சமாக உரிமையாக அவள் அருகில் அமர்ந்திருக்கிறான். அப்பொழுதும் கூட பார்வையால் அவளைத் தொல்லை செய்யக் கூட அவன் முயன்றது இல்லை. கிணற்றுத் தண்ணியை ஆற்று வெள்ளம் கொண்டு போகாது என அவனுக்கு நன்றாகவே தெரியும்.

தீனா வெகு சுவாதீனமாக அவள் அருகே வந்து அமர, அவள் மனம் வெகுவாக நடுங்கிப் போனது. அவளது அந்த நடுக்கம் அவள் தேகத்திலும் வெளிப்பட மனதுக்குள் துடித்துப் போனான். அவளது அந்த பயம் அவனை புருவம் நெரியச் செய்தது.

‘எதற்காக இந்த நடுக்கம்?’ அவனுக்கு புரியவே இல்லை. அவளிடம் மெல்லிய புன்னகையையும், சிறு ஆர்வத்தையும் எதிர்பார்த்து வந்தவனுக்கு, அவளது நடுக்கம் சிறு சிரிப்பை வரவழைத்தது.

‘இன்னாவாம்…?’ மனதுக்குள் கேலியாக கூட எண்ணிக் கொண்டான். அவள் சீரியசாக மனதுக்குள் எதையோ எண்ணிக் கொண்டுள்ளாள் என்றெல்லாம் அவன் நினைக்கவே இல்லை.

அவளது அந்த நடுக்கம் சிரிப்பாக கூட இருந்தது. அதை மறைத்துக் கொண்டவன், “ஹேய் ஜானு…” அவன் மெதுவாக அழைக்க, சட்டென பேருந்தின் ஜன்னலோடு ஒட்டிக் கொண்டாள்.

அவளது அந்த செய்கை அவனை வெகுவாக காயப்படுத்தியது. ‘திடீரென என்ன இது?’ அவனுக்குப் புரியவே இல்லை.

‘உன்னை நான் அப்படி என்ன செய்து விடுவேனாம்?’ மானசீகமாக அவளிடம் கேள்வி கேட்டான்.

அவளிடம் பார்வையில் கூட கண்ணியம் காக்க நினைக்கும் தன்னிடம் அவள் கொள்ளும் பயம் அவனை கொன்று கூறு போட்டது. அதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. தன் முகம் பார்க்க கூட அஞ்சும் அவளைத் தேற்ற, தெளிய வைக்க வேண்டி பேசுவதற்கு கூட அவன் பயந்தான்.

கைகளை தன் நெஞ்சுக்கு குறுக்காக கட்டிக் கொண்டவன், அமைதியாக சீட்டின் பின்னால் சாய்ந்து கொண்டான். மனமோ உலைகளமாக கொதித்துக் கொண்டிருந்தது. இத்தனை வருடங்களாக என்னைப் பார்க்கிறாள், பிறகும்… மனம் ஆற மறுத்தது.

உடனே அங்கிருந்து விலகிச் செல் என மனம் கூச்சலிட, அனைவரும் ஒவ்வொரு இருக்கையில் அமர்ந்திருக்கையில் யாரையும் எழுப்பி இங்கே வரச் சொல்ல மனமின்றி அமர்ந்திருந்தான். என்னவென்று யாராவது கேட்டால் என்ன பதில் சொல்வதாம்?

ஆனால் நெஞ்சுக்கூடு தீயாய் தகித்தது. அதன் வெம்மையை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. டூர் செல்ல எவ்வளவு ஆர்வமாக இருந்தானோ, அத்தனையும் மொத்தமாக வடிந்து போனது. தன்னை ஒரு காமுகன் போல் அவள் எண்ணிக் கொண்டிருப்பதை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

‘அந்த அளவுக்கு அவளிடம் எப்பொழுது நான் நடந்து கொண்டேன்?’ மனம் வேதனையில் தவித்தது.

இத்தனை வருடங்கள் இல்லாமல், திடுமென அவளது இந்த மாற்றம்... தன் வலியை வேதனையை உள்ளுக்குள் விழுங்கிக் கொண்டான். அதே நேரம் அந்த பேருந்துக்குள் இருந்த நிவேதா ஒருவித அவஸ்தையில் உழன்று கொண்டிருந்தாள்.

அவளுக்கு அருகில் அமர்ந்திருந்த டீன் ரக்ஷன் அவளிடம் வரம்பு மீறி பேசிக் கொண்டிருந்தான். ஊட்டியில் அவளை தன்னுடைய அறையில் வந்து கம்பெனி கொடுக்குமாறு அழைப்பு விடுக்க பெரும் தலைவலியாக உணர்ந்தாள்.

தனக்கு விருப்பமில்லை என அவள் உரைக்க, அவளுக்கு ஆன்சைட் போக வழிவகை செய்வதாக ஆசை காட்ட, அவளால் அவனுக்கு அருகில் இருக்கவே முடியவில்லை. முறைத்துப் பார்த்துவிட்டாள், முடியாது என முயன்றும் பார்த்துவிட்டாள், ஆனால் எதற்குமே அவன் அசைந்து கொடுக்கவில்லை.

“இல்ல, உன் எதிர்கால நன்மைக்காகத்தான் சொல்கிறேன்... நல்லா யோசிச்சுக்கோ” அவன் விடுவதாக இல்லை. அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அவனது தொல்லையையும் சகிக்க முடியவில்லை. அவனைப் பற்றி புகார் தெரிவிக்கலாம் என்றால், ஆதாரம் இல்லாமல் எதையும் அவளால் செய்ய முடியாது.

அதைவிட அவன்தான் டீன் என்கையில் அவனை மீறி உயர் அதிகாரிகளிடம் அவளால் செல்லவும் முடியவில்லை. தன்னுடன் இருக்கும் மெம்பர்களிடம் சொல்லலாம் என்றால், புதிதாக வந்த தான் சொல்வதை எந்த அளவுக்கு நம்புவார்கள் என்றும் அவளால் கணிக்க முடியவில்லை.

அதென்னவோ பேச்சில் தொல்லை செய்தவன், கை வைக்காதது மட்டுமே சற்று ஆறுதல் அளித்தது. ஆனாலும் அதையும் எப்பொழுது செய்வானோ என பயந்தவாறே இருக்க முடியாது என்பதால், இதற்கு மேலே அவன் அருகே அமர முடியாமல் பட்டென அங்கிருந்து எழுந்தாள்.

அதே நேரம் பேருந்து இரவு உணவுக்காக ஒரு ஹோட்டலின் முன்னால் நிறுத்தப்பட, அனைவரும் இறங்கத் தயார் ஆனார்கள். அதில் தீனா முதலாவதாக இறங்கிக் கொள்ள, ஜனனி தன் தலையிலேயே கை வைத்தவாறு அமர்ந்துவிட்டாள்.

சற்று நேரத்துக்கு முன்னர் தான் நடந்துகொண்ட விதமும், அதற்கு தீனாவின் எதிர்வினையையும் எண்ணிப் பார்த்தவளுக்கு தான் எப்படி உணர்கிறோம் என்றே தெரியவில்லை. ஜன்னலின் ஓரம் ஒடுங்கியவள், சில நிமிடங்களாக தீனாவின் குரல் கேட்காமல் போகவே மெதுவாக விழி திறந்து பார்த்தாள்.

கைகளை கட்டிக் கொண்டு, இமை மூடி அவன் சீட்டின் பின்னால் சாய்ந்திருந்த விதமும், அவன் தொண்டைக்குழி ஏறி இறங்கிய வேகமும் அவனது அலைப்புறுதலை அவளுக்கு தெளிவாக எடுத்துக் காட்டியது. ஆனாலும் அவனைக் கலைக்கும் தைரியம் மட்டும் வரவே இல்லை.

பேருந்தில் அனைவரும் இறங்கிவிட்டது புரிய, தானும் இறங்கிக் கொண்டாள். அவளது விழிகளோ அவளை மீறி தீனாவைத் தேடிச் சுழன்றது. அவனோ தன் நண்பர்களோடு இணைந்திருக்க, அனைவரும் எதையோ பேசி சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

“ஹேய் என்னப்பா… எதையோ சொல்லி சிரிச்சுட்டு இருக்கீங்க, எங்களுக்கும் சொல்லுங்க” வழக்கம்போல் ஜெனிட்டா அங்கே ஆஜராக, நண்பர்கள் அனைவரும் சிரிப்பு மாறாமல் அவளை ஏறிட்டார்கள்.

“ஏய் ஜெனிட்டா, லாஸ்ட் டைம் நாம ட்ரிப் போகும்போது, நம்ம பஸ் ப்ரேக்டவுன் ஆகி நின்ன உடனே, நாம எல்லாம் அந்த கவர்மெண்ட் பஸ்ஸில் ஏறிப் போனோமே அப்போ நடந்ததைச் சொல்லி சிரிக்கறாங்க” தீனா சொல்ல, ஜெனிட்டாவும் தன்னை மீறி சிரிக்கத் துவங்கினாள்.

“தீனா, நிஜமாவே நீ அப்படிச் சொல்வன்னு அந்த ஆள் எதிர்பார்த்திருக்கவே மாட்டான். அவன் முகம் போன போக்கை பாக்கணுமே…” சொல்லிவிட்டு அவளும் சிரிக்க, ஜனனியும், நுஹாவும் அங்கே வந்தார்கள்.

“என்ன ஜெனி, என்ன விஷயம்?” ஜனனி கேட்க,

“அதை நான் சொன்னா நல்லா இருக்காது, காதர் சொல்வான் கேளு… காதர், இவங்க எல்லாம் அப்போ வரலையே, அதை நீயே சொல்லு” அவனிடம் உரைத்தவள், தீனாவின் தோளில் தன் கையை ஊன்றிக் கொண்டாள். அதை வெகு இயல்பாக ஏற்றவன், விஷயத்தை சொல்லத் துவங்கிய காதரை கவனிக்கத் துவங்கினான்.

மறந்தும் அவனது பார்வை ஜனனியைத் தீண்டவில்லை. வெகு கவனமாக பார்வை அவள் பக்கம் செல்வதைத் தவிர்த்தான். அது ஒன்றும் அவனுக்கு அத்தனை கடினமாக இருக்கவில்லை. பொதுவாகவே கூட்டத்தில் அவன் அப்படித்தானே இருப்பான்.

ஆனால் ஜனனி அவன் முகத்தையே அடிக்கடி பார்த்திருந்தாள். அவன் முகத்தில் மாறாத புன்னகை இருந்தாலும், அது அவன் கண்களை எட்டாதது போன்று ஒரு எண்ணம், அவள் மனதைப் பிசைந்தது.

“லாஸ்ட் டைம் நாங்க ட்ரிப் போனப்போ பஸ் ஒரு காட்டுக்குள் பிரேக்டவுன் ஆயிடுச்சு. இவங்களை எல்லாம் வச்சுட்டு அங்கே நிக்கிறது ஸேப் இல்லைன்னு தெரியவே, ஏதாவது பஸ் வந்தால் தொத்திகிட்டு பக்கத்து டவுன்க்கு போய்டலாம்னு வெயிட் பண்ணிட்டு இருந்தோம்.

“அப்போ சரியா அங்கே ஒரு கவர்மென்ட் பஸ் வர, அவங்க கிட்டே கேட்டு பஸ்ஸில் ஏறிட்டோம். அன்னைக்கு சில சீட் காலியாக இருந்தது எங்க பாக்கியம். ஆனாலும் எல்லாருக்கும் கிடைக்கலையா, வாசல்லேயே உக்காந்துட்டோம்.

“பஸ் ஒரு டோல்கேட் கிட்டே போயிட்டு வெயிட் பண்ணிட்டே இருக்கு. அங்கே ஒருத்தன் கொஞ்ச நேரமா பஸ்ஸையே குறுகுறுன்னு பாத்துட்டு இருந்தான். அப்போவே நான் சொன்னேன், மச்சான் இவன் பஸ்சுக்குதான் வெயிட் பண்றான், ஆனா ஏன் இப்படி நிக்கான்னு தெரியலை, நிச்சயம் ஏதாவது கோமாளித்தனம் செய்வான்னு நான் சொல்லிகிட்டே இருக்கும்போது பஸ் மூவ் ஆகிடுச்சு.

“இவனுங்க எல்லாம், அவன் சும்மா நிக்கறான்னு சாதிக்கறாங்க. சரியா பஸ் அந்த டோல்கேட்டை தாண்டப் போகையில், ஓடி வந்து கை காட்றான். உடனே நம்ம தீனா, ‘சார், நீங்க இங்கேயே வெயிட்

பண்ணுங்க, நாளைக்கு வந்து உங்களை பிக்கப் பண்ணிக்கறோம்'ன்னு சொன்னான் பாரு...

"அந்த ஆள் முகத்தைப் பாக்கணுமே... பஸ்ஸில் இருந்த மொத்த கூட்டமும் சிரிச்சிடுச்சு. அதைச் சொல்லித்தான் சிரிச்சுகிட்டு இருக்கோம். நம்ம மாப்ள டைமிங் காமெடி பண்றதில் கில்லாடி ஆச்சே..." அவன் சொல்ல, ஜெனிட்டாவும் அவனும் ஹை-ஃபை கொடுத்துக் கொண்டார்கள்.

அதேபோல் ஜெனிட்டா தீனாவிடமும் செய்ய, அவனும் சிரிப்போடு அவளுக்கு கை அடிக்க, அந்த சூழலே அவ்வளவு ரம்யமாக இருந்தது. "கைஸ் சீக்கிரம்... இங்கேயே டைம் ஆக்கிட்டா ஊட்டி போக லேட் ஆயிடும்" ரக்ஷன் குரல் கொடுக்கவே அனைவரும் அந்த உணவகத்துக்குள் நுழைந்தார்கள்.

"நாம என்ன சுத்திப் பாக்கவா போறோம்? நாம எல்லாம் ஒண்ணா இருக்கணும், அதுக்குத் தானே போறோம்" ஜெனிட்டா உரைக்க, அது ஜனனியை அதிகம் பாதித்தது.

'அவரும் என்னுடன் இருக்க வேண்டும் என்று தானே விரும்பினார். நான்தான் தேவையில்லாமல் அனைத்தையும் நினைத்து குழம்பிக் கொண்டேனா?' தன்னையே கேட்டுக் கொண்டாள்.

பெண்கள் அனைவரும் ஒரு மேஜையிலும், ஆண்கள் அனைவரும் அவரவருக்கு விருப்பமான கூட்டத்தோடு இணைந்து கொண்டார்கள். வழக்கமாக இவ்வளவு நேரத்துக்குள் தீனாவின் பார்வை தன்னை பலமுறை தீண்டி விலகியிருக்கும், ஆனால் இன்று அவள் பக்கமே அவன் பார்க்காமல் இருக்க சோர்ந்து போனாள்.

'இதுக்குத்தானே ஆசைப் பட்ட, பிறகு ஏன்?' அவளது மனசாட்சி கேள்வி கேட்க, அதற்கு அவளால் பதில் சொல்லவே முடியவில்லை.

ஆனால் தீனாவின் பேச்சில், சிரிப்பில் எந்த மாற்றமும் இருக்கவில்லை. தான் கொஞ்சம் சோர்ந்து போனாலும், தன் நண்பர்கள் மொத்தமும் சோர்ந்து போவார்கள் என்பதால், தன் உள்மன காயத்தை அவர்களுக்கு காட்டாமல் மறைத்து வைத்தான்.

இல்லையென்றாலும் தன் தனிப்பட்ட உணர்வுகளை அபய்யைத் தவிர மற்ற யாருடனும் அவன் பகிர்ந்து கொள்ள மாட்டான். நமக்கு ஆயிரம் நண்பர்கள் இருந்தாலும், நம் ரகசியங்களை பாதுகாப்பான் என நம்பிக்கை உள்ள ஒருத்தனிடம் மட்டும்தானே நாம் நம் உணர்வுகளை பகிர்ந்து கொள்வோம்.

தீனா உணவருந்திவிட்டு கை கழுவச் செல்ல, அவன் பின்னால் வேகமாக சென்றாள் நிவேதா. தீனா கை கழுவிவிட்டு நகர, “தீனா, என் சீட்டுக்கு கொஞ்சம் சேன்ஜ் ஆகிக்கறீங்களா?” அவன் சரி எனச் சொல்ல வேண்டுமே என படபடப்பாக உணர்ந்தாள்.

ஒரு நொடி யோசித்தவன், “அதுக்கென்ன தாராளமா மாறிக்கறேன்” சொல்லிவிட்டு செல்ல அவ்வளவு நிம்மதியாக உணர்ந்தாள்.

மீண்டுமாக பேருந்து கிளம்ப, தன் அருகில் அமர்ந்த நிவேதாவை குழப்பமாகப் பார்த்தாள். ‘இவளை இங்கே உக்காரச் சொல்லிவிட்டாரா என்ன?’ அவனது விலகலை அவளால் ஏற்க முடியவில்லை.

“என்ன ஆச்சு? இங்கே வந்துட்ட?” அவளிடம் கேட்கக் கூடாது என நினைத்தாலும், தன்னை மீறி அவளது வாய் அவளிடம் கேட்டிருந்தது.

“அந்த டீன் ரொம்ப மோசமா பிகேவ் பண்றான், அதான்... தீனா கிட்டே கேட்டேன், அவர் சீட் சேன்ஜ் பண்ணிகிட்டார்” அவள் சொல்ல, அதற்குமேலே அவளிடம் எதையும் கேட்கவில்லை.

அமைதியாக விழி மூடி உறங்க முயன்றாள். அதில் ஓரளவுக்கு வெற்றியும் பெற்றாள். காலையில் ஊட்டிக்குள் நுழைந்து விட்டதாக யாரோ உரைக்க, லேசாக உறக்கம் கலைந்தாள். தன் இடதுபக்க தோளுக்கும், ஜன்னல் கம்பிக்கும் நடுவில் ஒரு குட்டி தலையணை இருப்பதைப் பார்த்தவள், சட்டென உறக்கம் தெளிந்தாள்.

‘இது... இதெப்படி என்கிட்டே.... ஒரு வேளை இவள் வைத்திருப்பாளோ?’ எண்ணியவாறு நிவேதாவைப் பார்க்க, அவளே தன் தோளில் சாய்ந்து உறங்குவதைப் பார்த்தவள், நிச்சயம் இது தீனாவின் செய்கியாகத்தான் இருக்கும் என எண்ணிக் கொண்டாள்.

அது மட்டுமா... அவளது மேனியைச் சுற்றி குளிர் தெரியாமல் இருக்க போர்வையால் மூடியிருக்க, கண்கள் கலங்கிப் போனது. அவனது இந்த தூய்மையான அன்பை, அனுசரணையை அருகில் இருந்து அனுபவிக்க முடியாமல் செய்து கொண்டேனே என தன்மீதே வெறுப்பாக வந்தது.

அவளும் ஸ்வெட்டர் போர்வை என அனைத்தும் கொண்டு வந்திருக்கிறாள் தான், ஆனால்... அதையெல்லாம் எடுத்து தன்னுடன் வைத்துக் கொள்ளவேண்டும் என்று கூட அவள் யோசிக்கவில்லை. ஆனால் அவன்... அவன் தோள் சாய்ந்துகொள்ள மனம் தவித்தது.

ஜெனிட்டா ஒரு நூறு முறையாவது தன்னிடம் சொல்லியிருக்கிறாள், ‘நம்ம ஆபீஸ்ல இருக்கற ஆம்பளைங்க எல்லாமே நாம கொஞ்சம் சிரிச்சு பேசினாலே அவ்வளவு அட்வான்டேஜ் எடுத்துக்கப் பாப்பாங்க, ஆனா தீனா மட்டும், நாமளே அட்வான்டேஜ் எடுத்துகிட்டா கூட விலகியே நிப்பான்’ன்னு அதை எண்ணியவள் கலங்கிய தன் கண்களை அழுத்தமாக துடைத்துக் கொண்டாள்.

தீனா தன் அருகில் இருந்திருந்தால் இந்த தலையணையாக அவன் மாறியிருப்பான் என்பதை அவள் மனம் தவிப்பாய் எண்ணிக் கொண்டது. ‘நான் அதை மிஸ் பண்ணிட்டேன்’ மனதுக்குள் விடாமல் புலம்பித் தவித்தாள்.

ஊட்டி மலை ஏறுகையிலேயே குளிர் அனைவரையும் ஊசியாய் துளைக்க, பனிபடர்ந்த சாலையை கிழித்துக்கொண்டு அவர்களது பேருந்து முன்னேறிக் கொண்டிருந்தது. ஜனனி கண் விழித்துவிட்டாள் என்பதை உணர்ந்த தீனா, அவளைத் திரும்பிப் பார்க்கத் துடித்த உணர்வை முயன்று அடக்கினான்.

நேற்றைய இரவில் அவன் சுத்தமாக தூங்கியிருக்கவில்லை. அதென்னவோ ரக்ஷன் அவர்களோடு வருகையில் எல்லாம் அவனால் ஆழ்ந்து உறங்க முடிவதில்லை. இன்றும் அது முடிந்திருக்கவில்லை.

ஒரு வழியாக ஊட்டி வந்து சேர்ந்து அவர்களுக்கான அறையைப் பார்க்க, நான்கு அறைகள் ஒரு பிளாக்கிலும், ஒரே ஒரு அறை மட்டும் மற்றொரு பிளாக்கிலும் இருக்க, முதல் ஆளாக தீனா அந்த ஒற்றை அறைக்குச்

செல்வதாகச் சொல்லவே, அவனது நண்பர்கள் மூவரும் அவனுடன் அந்த ஒற்றை அறையைப் பகிர்ந்து கொள்வதாகச் சொல்லி விட்டனர்.

“தீனா, நீங்க நாலு பேரும் ஒரே ரூமில் இருக்கறதா இருந்தா, எதுக்காக அங்கே போகணும்? இங்கேயே ஒரு ரூமில் தங்கிக்கலாமே” நுஹா கேட்க மறுப்பாக தலை அசைத்தான்.

“இல்ல, அங்கேதான் வியூ நல்லா இருக்கு, நான் அங்கேயே இருந்துக்கறேன். நீங்க எல்லாம் ப்ரெஷ் ஆகிட்டு வாங்க, டிபன் சாப்பிடப் போகலாம்” பெண்கள் இருவர் இருவராக ஒரு அறையை பகிர்ந்து கொள்வதாக முடிவாக, ரக்ஷன் ஒரு அறையை எடுத்துக் கொண்டான்.

ரக்ஷன் முதலில் தன் அறைக்குச் செல்ல, பெண்கள் சற்று தயங்கி நின்றார்கள். “தீனா, அந்த டீன் கிட்டே எங்களை விட்டுட்டு போறேங்கறியே” நுஹா குறைபட, தன் நெற்றியை அழுத்தமாக தேய்த்துக் கொண்டான்.

தீனா தன்னைத் தவிர்ப்பதற்காக மட்டுமே அங்கே தாங்காமல், அடுத்த ப்ளாக் செல்கிறான் என்று ஜனனிக்கு தெளிவாகப் புரிந்து போனது. அவன் தன் முகம் பார்த்தால் அவனிடம் போகவேண்டாம் என சொல்லி மறுக்கலாம், ஆனால் அவன் அவள் முகத்தையே ஏறிட மறுக்கையில் அவள் என்ன செய்ய?

ஆனாலும் அமைதியாக இருக்க முடியாமல், “தீனா, இங்கேயே இருங்களேன்” அவள் சொல்ல, அவன் பார்த்த பார்வையில் என்ன இருந்தது என அவளுக்கு சத்தியமாகப் புரியவில்லை. அவர்கள் சொல்வதுபோல், ரக்ஷனை நம்பி பெண்களை விட்டுச் செல்ல முடியாது என்பது புரிந்தது.

“தீனா, இவங்க சொல்றதும் சரிதான்டா... கொஞ்சம் யோசி...” காதர் அவனைத் தடுத்தான்.

“இல்லடா... என் முடிவில் எந்த மாற்றமும் இல்லை. ஆனா நீயும், சுதிரும் அந்த ரூமை எடுத்துக்கோங்க. நானும் சபரியும் அங்கே கிளம்பறோம்” என் முடிவுதான் இறுதியானது என கிளம்பிவிட்டான்.

மற்றவர்கள் முன்னால் அவனே தன்னிடம் முழுதாக பேசத் தயங்குகையில், அவனைத் தடுத்து நிறுத்தி அவனிடம் பேசிவிடும் தைரியம் வரவில்லை. ஆனால் அவனிடம் அப்படி அவளாகப் பேசினால் அவனோ மற்றவர்களோ தவறாக எண்ணப் போவதும் இல்லை. ஆனால் அவளால் முடியவில்லை என்பது மட்டுமே உண்மை.

நிவேதாவும், ஜெனிட்டாவும் ஒரு அறைக்குச் சென்றுவிட, வரவேற்பிலேயே அசையாமல் நின்ற அவளை உலுக்கினாள் நுஹா.

“ஜனனி... உங்களுக்குள் ஏதாவது பிரச்சனையா? தீனா இப்படி இருந்து நான் பார்த்ததே இல்லையே...” அவள் கேட்க, சட்டென அவளது கண்கள் கலங்கி விட்டது.

அவள் அழத் துவங்கவே, அவள் கரத்தை பிடித்து இழுத்துக் கொண்டு தங்களுக்கு ஒதுக்கியிருந்த அறைக்குச் சென்றாள். அறைக்குச் சென்றவுடன், அவளைக் கட்டிக்கொண்டு ஜனனி அழ, சற்று நேரம் அமைதியாக நின்றிருந்தாள்.

“ஜனனி, எதுக்கு இப்போ இப்படி அழற? இங்கே சந்தோஷமா இருக்க வந்திருக்கியா, இல்ல இப்படி அழறதுக்கு வந்திருக்கியா? முதல்ல இந்த அழுகையை நிப்பாட்டு” அவளைக் கடிந்து கொண்டவள், அவள் கண்ணீரைத் துடைத்தாள்.

அவளை, அங்கே இருந்த படுக்கையில் அமர வைத்தவள், “என்ன ஆச்சு ஜனனி? என்னன்னு சொல்லு... அப்போதான் என்னால் ஏதாவது செய்ய முடியுமான்னு பார்க்க முடியும். இப்படி அழுதுட்டே இருந்தால் எதுவும் வேலைக்கு ஆகாது” அவளைத் தேற்ற முயன்றாள்.

சின்ன குரலில் தன் பயத்தையும் செய்கையையும் அவளிடம் உரைத்தவள், தீனாவின் விலகலையும் உரைக்க நுஹாவுக்கு ஐயோ என்று இருந்தது.

“தீனாவைப் பற்றி தெரிந்துமா நீ அப்படி நடந்துகிட்ட? உன்னை லவ் பண்ற உரிமையில் ஏதாவது கொஞ்சம் பேசுவாரே தவிர, மற்றபடி உன்னை என்ன செய்து விடுவாராம்? இன்னைக்கு வரைக்கும் நீங்க லவ் பண்றீங்கன்னு நீங்களா சொன்னால் தவிர இங்கே யாருக்காவது தெரியுமா?

"அவ்வளவு ஏன்... இப்போ வந்திருக்காளே நிவேதா அவளுக்கு இப்போ வரைக்கும் தெரியாது. அப்படி இருக்கும்போது..." நுஹா சொல்லிக் கொண்டே இருக்க, ஜனனி மீண்டும் அழவே துவங்கி விட்டாள்.

"யா அல்லா... ஜனனி அழுதது போதும். நீ போய் குளிச்சுட்டு வா... தீனா உன்னை புரிஞ்சுப்பார்..." அவள் சொல்ல, மறுப்பாக தலை அசைத்தாள்.

"இல்ல, அவர் கோவமா இருக்கார்".

"நீ செஞ்ச வேலைக்கு எனக்கே கோபம் வரும்போது, அவன் என்ன கொஞ்சவா செய்வான்? நீ போயிட்டு வா நான் சொல்றேன்" அவளை பிடிவாதமாக அனுப்பியவள், அவள் குளிப்பதை உறுதி செய்துவிட்டு தீனாவுக்கு அழைத்தாள்.

அவள் அழைக்கவே உடனே அழைப்பை ஏற்றவன், "என்ன நுஹா, ஏதாவது வேணுமா? ரக்ஷன் வந்தானா என்ன?" அவர்களிடம் செல்ல வாய்ப்பில்லையே என்ற எண்ணம் அவனுக்குள் ஓடுவதை உணர்ந்து கொண்டாள்.

"ஜனனி ஒரே அழுகை... என்ன செய்யணுமோ செய்" சொல்லிவிட்டு அழைப்பை துண்டித்து விட்டாள்.

'அவ ஏன் அழணும்? நான்தான் அழணும்...' கோபமாக எண்ணிக் கொண்டாலும், அந்த கோபத்தை பிடித்து வைக்க முடியவில்லை.

'ஹையோ அழறாளாமே...' மனம் தவியாய் தவித்தது.

அவர்கள் குழுவில் சாதாரணமாக யாருக்காவது பிரச்சனை என்றாலே முன்னின்று அதை தீர்த்து வைப்பவன், தன் காதலி அழுகிறாள் என்றால் நிச்சயம் அமைதியாக இருப்பான் என எண்ணவில்லை. எனவேதான் அவனுக்கு விஷயத்தை சொல்லிவிட்டு அலைபேசியை வைத்துவிட்டாள்.

இனிமேல் அவன் பார்த்துக் கொள்வான் என்பது அவளுக்குத் தெரியும். நுஹாவும் குளித்து உடை மாற்றி, உணவருந்த இருவருமாக செல்ல, அங்கே அவர்களுக்கு முன்பாகவே அனைவரும் இருந்தார்கள்.

“ஏன்ப்பா இவ்வளவு நேரம்? எல்லாரும் உங்களுக்காகத்தான் காத்திருக்கோம்” அவரவருக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டு இருக்கையில் அமர்ந்தார்கள்.

ஜனனி ஒரேஒரு இட்லியை எடுத்தவள், அங்கே இருந்த இருக்கையில் தனியாகச் சென்று அமர்ந்து கொண்டாள். நுஹா அவளைக் கவனித்தாலும், அவளுடன் சென்று அமரவில்லை. அந்த ஒற்றை இட்லியைக் கூட அவளால் உண்ண முடியவில்லை.

தீனாவின் பேச்சும், சிரிப்பும் அவளைத் தீண்டினாலும் அவளால் இயல்பாக இருக்க முடியவில்லை. சாதாரணமாகவே அவளைக் கவனிப்பவன், இப்பொழுது அழுகிறாள் எனத் தெரிந்த பிறகு அமைதியாக இருப்பானா என்ன?

ஒரு தட்டை எடுத்து அதில் ஒரு இட்லி, ஒரு மெதுவடை, ஒரு பூரி, ஒரு தோசை என அனைத்தையும் எடுத்தவன், கிண்ணத்தில் சாம்பார், குருமா எடுத்துக் கொண்டு அவளை நெருங்கினான். அவளது அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்தவன், “ஒரு இட்லி பொறந்த குழந்தை சாப்பிடும். இதெல்லாம் ஒரு சாப்பாடா?

“இது மொத்தத்தையும் காலி பண்ணனும். உனக்கு காபி எடுத்துட்டு வர்றேன்” உரைத்தவன் அவள் முன்னால் இருந்த தட்டை தன் கையில் எடுத்துக் கொண்டான். அவன் தன்னிடம் பேசிவிட்டதே அவ்வளவு சந்தோஷத்தை அளிக்க, நீர் நிறைந்த விழிகளோடு அவனை ஏறிட்டாள்.

அவன் அங்கிருந்து நகர முயல, சட்டென அவன் கரத்தைப் பிடித்து தடுத்தாள். அவள் எதையோ சொல்ல முயல, “இந்த மூணு நாளும் சந்தோஷமா இருக்கணும் புரியுதா? வேற எதையும் யோசிக்காதே” அவள் பிசைந்து வைத்திருந்த இட்லியை ஒரே வாயில் அவன் போட்டுக் கொள்ள, அவனை தடுக்கப் போனவள் அப்படியே விட்டுவிட்டாள்.

தனக்கான உணவையும் எடுத்து வந்தவன் அவளுடனே அமர்ந்து உண்ண, தன் நண்பர்களையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். அதன் பிறகு அவள் முகத்தில் புன்னகை மட்டுமே இருந்தது. அதை வாடாமல் பார்த்துக் கொண்டான்.

போட்டிங் போகையில் நால்வர் அமர்ந்து பெடல் செய்யும் ‘போட்’டை எடுத்தவன், நுஹா, ஜெனிட்டா, ஜனனி அவன் என அவர்கள் அமர்ந்து கொள்ள, ஒரு மணிநேர போட்டிங் சொர்க்கமாகவே இருந்தது. அவர்கள் மூவருடனும் சாதாரணமாக உரையாடினானே தவிர, ஜனனியை நேருக்கு நேராக பார்ப்பதை அப்பொழுதும் தவிர்க்கவே செய்தான்.

ஆனால் அது அவளுக்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டான். அவர்கள் போட்டிங்கை முடிக்கையில், நிவேதா இருவர் அமரும் போட்டை எடுத்து வந்தவள், தீனாவை அழைக்க, மறுக்காமல் அவளுடன் சென்றான். அவர்கள் இருவர் மட்டும் தனியாகச் செல்ல, ஜனனிக்கு சிறு கோபம் எழுந்தது.

பொட்டானிக்கல் கார்டன், ரோஸ் கார்டன் அனைத்தையும் சுற்றிப் பார்க்கையில் ஜனனியுடன் அவன் சேர்ந்து அமைதியாக நடக்க, நிவேதாவோ அவனது இடக்கரத்தை முழுதாக கோர்த்துக் கொண்டாள்.

ஜனனி சட்டென நின்றுவிட, “நிவேதா, நீ முன்னாடி போ…” அவள் கரத்தை விலக்கியவன் பொறுமையாகவே உரைத்தான். ஜனனியிடம் தன் பார்வையை கொஞ்சமாக செலுத்தியவன் எதுவும் அவளிடம் சொல்லவில்லை.

“என்ன தீனா இது? மூணு நாள் கம்பெனி கொடுக்கலாமேன்னு பாத்தா ரொம்ப முறுக்கிக்கறீங்க?” அவள் சிணுங்க, வாயைக் குவித்து காற்றை வேகமாக ஊதியவன், ஒரு முடிவுக்கு வந்திருந்தான்.

“நிவேதா, நான் ஜனனியை விரும்பறேன், எனக்கு அவ கம்பெனி போதும், நீ போ…” அவளிடம் உண்மையைச் சொல்லவில்லை என்றால், பின்னாளில் காதல் கீதல் என்று ஏதாவது உளறும் வாய்ப்பு இருப்பதாக அவனுக்குத் தெரியவே அழுத்தமாகவே உரைத்தான்.

“வாட்… நீங்க ரெண்டு பெரும்… லவ்… காட்… சும்மா விளையாடுறீங்க தானே” அவளுக்கு அப்படித்தான் தோன்றியது.

அவள் அப்படிச் சொல்லவே, தீனாவின் தோள் தொட்டு, வலக்கரத்தை முழுதாக பற்றிக் கொண்ட ஜனனி, அவன்மேல் முழுதாக ஒட்டிக் கொள்ள,

நிவேதா, அவனை விட்டு வேகமாக விலகி நின்றாள். தீனாவும் இடக்கரத்தால் ஜனனியை தோளோடு கை கோர்த்துக் கொண்டான்.

“இப்போ நீ நம்பறியா? போ…” உரைத்தவன் அவள் விலகிச் செல்லவே, ஜனனியின்மேல் இருந்த கரத்தை விலக்கிக் கொண்டவன், மெதுவாக நடக்கத் துவங்கினான். அவனது அந்த செய்கை அவளை சோர்ந்து போகச் செய்தது.

“தீனா…” அவள் அழைக்க, “எல்லாரும் தேடுவாங்க, வா…” அவளை மேலே பேச அனுமதிக்காமல் நடந்துவிட்டான். ஏனோ அவனைக் கோர்த்த கரத்தை விடுவிக்க அவளுக்கு மனமே வரவில்லை. அவனுக்கு தன்மேல் இருந்த கோபம் குறையவில்லை என்பதை தெளிவாக புரிந்து கொண்டாள்.

“என்மேல் கோபமா தீனா?” அவன் கரத்தை அழுத்தமாக பற்றி நிறுத்த,

அவளைப் பார்த்து திரும்பியவன், “என்னை நீ நம்பலல்ல…?” அவன் அழுத்தமாக கேட்க அவளுக்கு உள்ளுக்கும் அனைத்தும் தடம் புரண்டது. அவன் வார்த்தைகளில் கோபத்தைவிட அதிகம் தெரிந்த அந்த வலி… அதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

“என்னைக்காவது நீ சங்கடப் படற மாதிரி ஏதாவது செய்திருக்கேனா? உன்னோடவே இந்த மூணு நாளும் இருக்கணும்னு நினைத்தது அவ்வளவு பெரிய தப்பா? அதைப் புரிஞ்சுக்காமல்…

“ஜானுன்னு கூப்பிடறேன்… அப்படியே நடுங்கிபோய் ஜன்னலோட ஒதுங்கின பார்… சத்தியமா செத்துட்டேன்” அவள் கரத்தை விலக்கி விட்டவனது கண்களில் இருந்து சிதறிய ஒற்றைத் துளி நீர் அவள் புறங்கையில் பட்டுத் தெறிக்க, நொறுங்கிப் போனாள்.

## பகுதி – 15.

தீனாவின் கண்ணீர் அவளை சில்லு சில்லாய் நொறுங்கச் செய்தது. அவனது எத்தனையோ முகங்களைக் கண்டவளுக்கு அவனது இந்த கண்ணீருக்கு முழு முதல் காரணமும் தான் மட்டுமே என்பது புரிய அவனைத் தேற்றும் வழி தெரியாமல் தடுமாறிப் போனாள்.

தன் பலவீனத்தை அவளுக்கு காட்ட மனமின்றி சட்டென அவன் அங்கிருந்து விலகிச் செல்ல, அவனைத் தடுக்க கூட முடியாமல் தடுமாறி நின்றிருந்தாள். அவனுடன் ஓடிபோய் சேர்ந்துகொள்ள, அவனது முகம் இப்பொழுது உணர்வுகளைத் தொலைத்து இறுகி இருந்தது.

“தீனா… நான்…” அவனுக்கு தன்னிலை விளக்கம் கொடுக்க முயல, மறுப்பாக தலை அசைத்தான்.

அந்த அழுத்தமான தலையசைப்பை மீறி அவளால் ஒரு வார்த்தை கூட பேச முடியவில்லை. அவனது இப்படியான முகத்தை, நேற்றுவரை மற்றவரிடம் மட்டுமே அவன் வெளிப்படுத்தி பார்த்திருக்கிறாள். முதல் முறையாக அவனது அந்த முகத்தை அவளிடம் காட்ட பரிதவித்தாள்.

“நம்மளால் மத்தவங்க மூட் ஸ்பாயில் ஆகக் கூடாது. கொஞ்சம் கவனமா நடந்துக்கோ” அதே அழுத்தமான குரலிலேயே உரைத்தவன், அதன் பிறகும் அவளை விட்டு நீங்கி எல்லாம் செல்லவில்லை. அதே நேரம், அவள் அருகில் குழைந்திருக்கும் அவனது உடல்மொழி மட்டும் இறுகியே கிடந்தது.

ஒவ்வொரு இடங்களுக்கு சுற்றிப் பார்க்க பேருந்தில் செல்கையில் அவனது அட்டகாசமும், பாட்டும் பார்க்கவே அவ்வளவு தித்திப்பாக இருந்தது. பேருந்தில் இருந்த அனைவரையுமே தன்னுடன் சேர்த்துக் கொண்டு அதகளம் செய்துவிட்டான்.

தன் மனதின் காயத்தை ஒரு சதவீதம் கூட மற்றவரிடம் அவன் வெளிப்படுத்தவே இல்லை. அந்த அவனது குணம் அவளுக்கு வியப்பாக கூட இருந்தது. இமைகளை வேறு பக்கம் திருப்பாமல் அவன்மீதே வைத்திருந்தாள்.

ஒரு கட்டத்தில் அவளையுமே அவன் தன்னுடன் ஆட அழைக்க, மறுக்காமல் எழுந்து கொண்டாள். அவள் அவனுடன் ஆட, நண்பர்கள் குழாமின் ஆர்ப்பரிப்பும், விசிலும் காதைக் கிழித்தது. பொதுவாகவே ஓடும் பேருந்தில் கைபிடிப்பு இல்லாமல் நிற்பதே சிரமம்.

அப்படி இருக்கையில் டேன்ஸ் ஆடுவதற்கு எல்லாம் தனி திறமையே வேண்டும். தீனா அதை அசால்ட்டாக செய்ய, பலமுறை தடுமாறியே

அவனுடன் நின்றிருந்தாள். “நீ என்பதே நாந்தானடி... நான் என்பதே நீ தானடி...” திடுமென வண்டிக்குள் பாடல் மாற, அந்த பயணத்தில் முதல் முறையாக தீனாவின் பார்வையில் காதல் வழிந்தது.

“ஓ காட்...” அவன் சன்னமாக முனகி, பின்னந்தலையை அழுத்தமாக கோதிக் கொள்ள, அவனது தடுமாற்றத்தை கொஞ்சம் கூட தயங்காமல் பார்த்திருந்தாள்.

அதே நேரம், பட்டென பேருந்தின் ப்ரேக் போடப்பட, கண்ணிமைக்கும் நேரத்தில் தெளிந்த தீனா இரண்டுபக்கமும் இருந்த சீட் கம்பிகளை கைகொன்றாக பற்றிக் கொண்டு பின்னால் சாய, அந்த நேரம் அப்படி பிரேக் போடுவான் என்பதை எதிர்பாராத ஜனனி, மொத்தமாக அவன்மேல் விழுந்திருந்தாள்.

“ஜனனி... ஜானு பாத்து...” மொத்த பேரின் குரல் பதைபதைப்பாக வெளியேற, சில நொடிகளுக்கு அவளுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. அவன்மேல் மொத்தமாக விழுந்து விட்டவளுக்கு, சட்டென எழவும் முடியவில்லை.

எதிர்பாராமல் விழுந்ததால் நெற்றி வேறு அருகே இருந்த சீட் கம்பியில் இடித்திருக்க, ஒரு நொடி பொறி கலங்கிப் போனாள். “ஜானு... அடி பட்டுடுச்சா?” அவளை தன் மேனியில் தாங்கியவாறே, கைகளை விட்டுவிடாமல், கால்களை அழுந்த ஊன்றி, அவளோடு சேர்ந்து எழுந்து நின்றான்.

“அண்ணே, பாத்து போக மாட்டீங்களா? எதற்கு இந்த வேகம்? கொஞ்சம் பாத்து மெதுவாவே போங்க” டிரைவரிடம் கத்தியவன்,

“டேய் குண்டா கொஞ்சம் விலகு...” அவனை எழுந்து போகச் சொன்னவன், “முதல்ல நீ உக்கார், டேய் தண்ணி பாட்டில் கொடுங்கடா” அவளாகவே தன்னிடமிருந்து விலகி அமரச் செய்தவன் தண்ணீர் பாட்டிலை அவள் கரத்தில் கொடுத்தான்.

அவ்வளவு செய்தும், அவளை தன் கைகளால் தொட்டுவிடக் கூட அவன் முயலவில்லை. அது மற்றவர்களுக்குத் தெரியவில்லை என்றாலும், அவளுக்குத் தெரியும் தானே.

இதுவே மற்ற நேரமாக இருந்திருந்தால், அவன் நடந்துகொள்ளும் முறையே வேறாக இருந்திருக்கும். நிச்சயம் அதில் தவறாக எதையுமே செய்திருக்க மாட்டான் என்பதும் உறுதியாக அவள் மனதுக்குத் தோன்ற, தேவையில்லாமல் அவனை விலக்கிவிட்டது புரிய, கண்கள் கலங்கிப் போனது.

அவளது கண்கள் கலங்கிவிட, துடித்துப் போனான். “ஜானு, என்னடா... ரொம்ப வலிக்குதா?” அவளுக்கு தண்ணீரை தன் கையாலேயே புகட்டியவன், அவள் நெற்றியில் லேசாக வீங்கியிருப்பதைப் பார்த்துவிட்டு, தானே சென்று முதலுதவி பெட்டியை எடுத்து வந்தான்.

“நுஹா... அவ நெற்றியைக் கொஞ்சம் தேய்த்து விடு” ஜனனியின் அருகே வந்து நின்ற நுஹாவிடம் அவன் உரைக்க, மறுக்காமல் அதைச் செய்தாள்.

“ஸ்... ஆ...” அவள் சன்னமாக வலியில் முனக, “நுஹா, கொஞ்சம் மெதுவா. இந்த மருந்தையும் போட்டு விடு. வலி தெரியாமல் இருக்க டேப்லெட் ஏதாவது போட்டுக்கறியா ஜானு” அவனுக்கு, எப்படியாவது அவளது வலியை போக வைக்க வேண்டும் என்பது மட்டுமே பிரதானமாக இருந்தது.

“இது சின்ன வீக்கம்தான். ஆயின்மென்ட் மட்டும் போட்டால் போதும் தீனா” நுஹா சொல்ல, அமைதியாக ஜனனியின் முகம் பார்த்திருந்தான்.

அவளும் அவன் முகத்தைத்தான் பார்த்திருந்தாள். அவன் கண்களில் இருந்த தவிப்பு, நுஹாவின் செய்கையை தன்னால் செய்ய முடியவில்லையே என்ற அவனது மெல்லிய கோபம், தடுமாற்றம், “நான் ஓகேதான்... வலியெல்லாம் இல்லை” அவன் கரத்தை பற்றிக்கொள்ள எழுந்த ஆர்வத்தை அடக்கினாள்.

“உங்க ஜோடிப்பொருத்தமும், கெமேஸ்ட்ரியும் பாத்து எல்லோரும் கண்ணு வச்சுட்டோம் போல. கொள்ளை அழகா இருந்தீங்க. தீனா கண்ணில் காதல் வழியுது” நுஹா அவள் காதுக்குள் முனக, அழகாய் வெட்கப்பட்டாள்.

சற்று நேரத்தில் உணவருந்த அவர்களது பேருந்து நிற்கவே, அவள் முன்னால் வந்து நின்றவன், அவள் அவனைக் கவனிக்காமல் தாண்டிச் செல்ல முயல, “ஜானு…” அவளைத் தேக்கினான்.

அவள் நிமிர்ந்து பார்க்கவே, “இப்போ வீக்கம் கொஞ்சம் குறைஞ்சிருக்கு. வலி எல்லாம் இல்லையே…” அவன் குரலில் அக்கறை வழிந்தது.

“இல்ல… வலிக்கலை…” அவள் சொல்லிக் கொண்டிருக்க, “ஹப்பா… ஓவர் லவ்வா இருக்கே. இத்தனை நாள் இதையெல்லாம் எங்கே பாஸ் ஒளிச்சு வச்சிருந்தீங்க?” நிவேதா அவர்களைக் கலைக்க, தீனாவின் கண்களில் சிறு கோபமும், ஜனனியின் கண்களில் வெட்கமும் உதயமானது.

“நிவேதா பிளீஸ்…” அவள் செல்லுமாறு கையைக் காட்ட, அவள் சற்று கோபமாக முறுக்கிக் கொண்டு சென்றாள்.

“ம்கும்… இந்த உலகத்தில் யாருமே லவ் பண்ணாத மாதிரிதான். லவ் பண்ணிகிட்டே, சைட்ல நாலுபேரை மெயின்டெயின் பண்ற எத்தனை பேரை நான் பாத்திருப்பேன். நாலு நாள் ட்ரை பண்ணா, அஞ்சாவது நாள் வழிவாங்க, இந்த ஆம்பலைன்களைப் பத்தி நமக்கு தெரியாது” மெல்லியதாக முனகிக் கொண்டாள்.

அதே நேரம், அவனை வீழ்த்திக் காட்ட வேண்டும் என்ற வேகமும் சேர்ந்தே பிறந்தது. அதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமலா போய்விடும் என எண்ணிக் கொண்டாள்.

“சாரி தீனா…” ஜனனி, அவனிடம் மன்னிப்பை வேண்ட,

“நீ என்கிட்டே இந்த வார்த்தையை யூஸ் பண்ணவே கூடாதுன்னு நினைக்கறேன் ஜானு. நமக்குள் அது வேண்டாம்” கரத்தை தன் பேன்ட் பாக்கெட்டுக்குள் திணித்துக் கொண்டான்.

“அது… என்னை மீறி, என்னை அறியாமல் நடந்த நிகழ்வு தீனா” அவன் இன்னுமே மனதளவில் தன்னை விட்டு விலகி நிற்பது புரிய, அவன் எப்படியாவது தன்னை புரிந்துகொள்ள மாட்டானா என மனம் தவித்துப் போனது.

“இது முழு பொய் என்பது உன் மனசாட்சிக்கே தெரியும்னு நினைக்கறேன் ஜானு. தேவையில்லாமல் அந்த பொய்யை நாம வளர்க்க வேண்டாம். ஏன்னா... என் ஜானுவை எனக்கு பன்னிரண்டு வருஷமா தெரியும். ஸ்கூல் படிக்கும்போதும் சரி, காலேஜில் உன்னை தனியா சந்திக்க வந்தப்போ கூட, உன் கண்களில் அதை நான் பார்த்ததில்லை.

“ஆனா இப்போ... நான் என்னென்னவோ நினைத்து, சொல்லணும்னு யோசித்து வைத்திருந்தது எல்லாம் தொண்டைக்குழியில் சிக்கிட்டு...” அதற்கு மேலே அங்கே நிற்க முடியாமல் அகன்றுவிட்டான். அப்படியே விக்கித்து நின்றுவிட்டாள் ஜனனி.

அவன் சொன்னதில் இருந்த மறைபொருள் புரியவர, அவன் காதலைச் சொல்ல வந்ததை தான் முழுதாக கெடுத்து வைத்திருக்கிறோம் என்பதும் சேர்த்து புரிய, வாய்விட்டே அழவேண்டும்போல் இருந்தது. ஆனால் அவளை அப்படியெல்லாம் அழவிட்டு பார்த்திருப்பானா என்ன?

அவளை உண்ண வைத்து, அவளுடனே இருந்து அவளைக் கவலைகள் விழுங்காமல் பார்த்துக் கொண்டான்.

அன்று இரவில் கேம்ப்ஃபயர் ஏற்பாடு செய்திருக்க, ஒரே ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என களை கட்டியது. அதிலும் அங்கே ஒவ்வொரு கேமிலும் இருந்த விளையாட்டுத்தனம் அனைவரையும் ரசிக்க, கொண்டாட வைத்தது.

ஆனால் தீனா எதிலும் கலந்துகொள்ளவில்லை. அனைத்தையும் ஒழுங்குபடுத்தும் சாக்கில் ஒதுங்கிக் கொண்டான். அவன் ஒதுங்கியதை யாருக்கும் தெரியாமல் பார்த்துக் கொண்டான். அது எப்படி என்றால், அங்கே கொடுக்கப்பட்ட தண்டனைகள் முழுவதையும் அவ்வப்பொழுது எழுதி கொடுத்தவன் அவனே.

மற்றவர்கள் முகம் சுழிக்காத அளவுக்கு, மற்றவர்களுக்கு குடுமி போடுவது, ஆண்களுக்கு பொட்டு வைப்பது, ஒற்றைக்கால் செருப்பில் நடப்பது, தவழ்ந்து செல்வது என கேமில் தோற்பவர்களுக்கு தண்டனை வழங்கப்பட, அங்கே கலாட்டாவுக்குப் பஞ்சமே இருக்கவில்லை.

அனைத்தையும் தீனா ஆர்கனைஸ் செய்ய, நேரம் நள்ளிரவைக் கடந்தது. அதற்குமேலே கண்விழிக்கவேண்டாம் என பிடிவாதமாக கேமை முடிவுக்கு கொண்டு வந்தார்கள். அனைவரும் அங்கிருந்து கலைந்து செல்ல, ஜனனி மட்டும் அங்கேயே காத்திருந்தாள்.

“ஜானு, ரூமுக்கு வரல?” நுஹா அவளை அழைக்க,

“நீ போ… நான் கொஞ்ச நேரம் கழித்து வர்றேன்” அவளை அனுப்பினாள். ஜனனியின் பார்வை தீனாவின் மீதே இருக்க, காதலர்களுக்கு நடுவில் இடைஞ்சலாக இருக்க மனமின்றி கிளம்பிவிட்டாள்.

“ரொம்ப நேரம் எடுத்துக்காதே… அது ஆபத்தாகவும் முடியலாம்” தோழியாக அவளை எச்சரித்துவிட்டுச் செல்லவும் மறக்கவில்லை.

“நான் பாத்துக்கறேன்” புன்னகை முகமாகவே உரைத்தாள்.

“நீ பாத்துக்கறியோ இல்லையோ, தீனாவைப் பற்றி என்னைவிட உனக்கு தானே தெரியும்” அவள் இமை சிமிட்ட, “கடவுளே… நீ முதல்ல போ” அவள் முதுகைப் பிடித்து தள்ளி விட்டாள்.

தீனா நண்பர்களோடு இருந்தவன், நுஹா அறைக்குச் சென்ற பிறகும் ஜனனி அறைக்குச் செல்லாததைப் பார்த்தவன், நண்பர்களிடம் சொல்லிவிட்டு வேகமாக அவள் அருகே வந்தான்.

“ஜானு, இன்னும் ஏன், நீ இங்கே இருக்கற? முதல்ல ரூமுக்குப் போ, குளிர் ரொம்ப ஜாஸ்தியா இருக்கு. எதைப் பற்றியும் யோசிக்காமல் நிம்மதியா போய் தூங்கு. பசங்க எல்லாம் ஏதோ பார்ட்டின்னு சொல்லிட்டு இருக்காங்க, நீ இங்கே நிக்க வேண்டாம்…” அவள் தன்னிடம் பேச விரும்புவது புரிந்தாலும் அதைத் தவிர்க்க விரும்பினான்.

தன்மேல் எவ்வளவு கோபம், வருத்தம் இருந்தாலும், தனது பாதுகாப்பிலோ, தன்னைக் கவனிக்கும் அக்கறையிலோ அவன் சிறு குறையும் வைக்காமல் போக, இந்த அன்புக்காகவேனும் எதையும் செய்யலாம் என்று அவளுக்குத் தோன்றியது.

கடந்த இரண்டு மூன்று முறை பேசிய பொழுதும், அவளது மனதுக்குப் பிடிக்காத விஷயங்களையே தான் பேசுவது புரிய, அவளை அதற்கு

மேலே கஷ்டப் படுத்த விரும்பவில்லை. அவளைக் கஷ்டப்படுத்திவிட்டு, அவன் மட்டும் நிம்மதியாக இருந்து விட்டானா என்ன?

“நீங்க ட்ரிங் பண்ணப் போறீங்களா?” சிறு தவிப்பாய் கேட்டாள்.

“ம்ச்... என்ன ஜானு இது?” அவனுக்கு சலிப்பாக இருந்தது.

“இல்ல, நீங்க ட்ரிங் பண்ண மாட்டேன்னு சொல்லியிருக்கீங்க, அது எனக்குத் தெரியும். இது... நாம கொஞ்ச நேரம் பேசலாமேன்னு கேட்டேன்” அவளைத் தவிர்க்க விரும்பி அவன் நிற்க, அவள் இப்படி நேரடியாக கேட்பாள் என்பதை எதிர்பாராமல் திகைத்துப் போனான்.

“ஜானு, அங்கே எல்லோரும் எனக்காக வெயிட் பண்ணிட்டு இருக்காங்க. இப்போ...” அவன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே சுதிர் அவனை அழைப்பது கேட்டது.

“யா... கம்மிங்...” அவர்களுக்கு பதில் குரல் கொடுத்தவன், “நாம இன்னொரு நாள் பேசலாம் ஜானு. காலையில் இருந்து அலைந்ததில் நீ ரொம்ப டயடா தெரியற. போய் ரெஸ்ட் எடு... ரூமுக்குப் போய்டுவியா? இல்லன்னா நான் கூட்டி போய் விடவா?” அவளிடம் கேட்க, அவனது மறுப்பு அவளுக்கு பெரும் கவலையையும், கலக்கத்தையும் அளித்தது.

“நானே போய்க்கறேன்... நீங்க போங்க...” அந்த புல்வெளியைத் தாண்டி, தங்கள் அறை இருக்கும் பக்கம் அவள் நடக்கத் துவங்க, அந்த புதிய இடத்தில் அவளைத் தனியாக அனுப்ப மனமின்றி அவள் பின்னால் விரைந்தான்.

“ஜானு...” அவன் குரல் கொடுக்கையில், காதர் ஒரு சாக்குப் பையோடு அங்கே வந்தான்.

அதைப் பார்த்தவன், “என்னடா இது?” அவனிடம் கேட்க,

“சரக்குடா மச்சான்...”.

“அதை ஏன்டா இப்படி எடுத்துட்டுப் போற? அதையென்ன பழுக்கவா வைக்கப் போற?” அவனிடம் கேட்க, அந்த நேரத்திலும் ஜனனியின் இதழ்களில் ஒரு மெல்லிய புன்னகை வந்து ஒட்டிக் கொண்டது.

“டேய், மத்தவங்களுக்கு தெரியக் கூடாதேன்னு இந்த சாக்குப்பையில் போட்டு எடுத்துட்டு வர்றேன். நீ சீக்கிரம் வா...” அவனது கேலியைக் கண்டுகொள்ளாமல் விரைந்துவிட்டான்.

“நீ தனியா போக வேண்டாம்... நானே உன்னை கூட்டி போய் விடறேன்” பத்தடி தூரத்தில் இருக்கும் ஒரு கட்டிடத்துக்கு அவளைத் தனியாக அனுப்ப அவனுக்கு மனமில்லை. அப்படிச் சொல்வதை விட, அவளுடனான தனிமையை விரும்பினான் என்று சொல்ல வேண்டுமோ?

அவளுடன் சேர்ந்து நடக்க, அந்த ஏகாந்த இரவும், தனிமையும், குளுமையும் இருவருக்கும் நடுவில் இனிமையாக கடந்து தழுவிக் கொண்டது. தன் கோபம் மீறி, அவளை மெல்லியதாக அணைத்துக் கொள்ள அவனது மனமும், கரமும் பரிதவித்தது.

எங்கே அதைச் செய்து அவளை மேலும் கலவரப்படுத்திவிடுவோமோ என்று இருக்க, தன் விரல்களை மொத்தமாக அழுந்த மூடிக் கொண்டான். அவளுக்கும் அப்படித்தான் இருந்திருக்குமோ என்னவோ? மூடியிருந்த அவன் விரல்களை மெதுவாக பிரித்தவள், தன் விரல்களை கோர்த்து அழுத்தமாக பற்றிக் கொண்டாள்.

ஒரு நொடி தன் நடையை நிறுத்தி அவளைப் பார்க்க, அவளோ அவன் தோளில் சாய்ந்து கொண்டு இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டாள். அவளை ஆதுரமாக, கொஞ்சமாக அணைக்கத் துடித்த கரங்களை அடக்குவது அவனுக்கு பெரும் சவாலாகவே இருந்தது.

அவளது அறைக்குச் செல்ல வேண்டிய படிகளில் ஏற, அந்த படிக்கட்டில் ஒளிர்ந்த விளக்குகளில் ஒன்று அணைந்திருக்க, அந்த இடத்தில் கவிழ்ந்திருந்த மெல்லிய இருள், இருவரின் மனதுக்குள்ளும் ஒரு குட்டி சூறாவளியை கிளப்பியது.

அவளை அப்படியே அந்த சுவரில் சாய்த்து, அவள்மேல் அழுத்தமாக சாய்ந்து கொண்டு, அவளது மெல்லிய இதழ்களை கவ்விக்கொள்ள எழுந்த ஆவலை அடக்கவே மிகுந்த சிரமப் பட்டான். தன் மன உணர்வுகளை அவளிடம் வெளிப்படையாக சொல்லிப் பழகியவன்தான், ஆனால் இப்பொழுது அதை அவனால் செய்ய முடியவில்லை.

“ஃபீல் லைக் கிஸ் யூ தீனா...” அவனைப் பற்றியிருந்த கரம் மெல்லியதாக நடுங்க, தன் நடையை நிறுத்தியவள், அவனைப் பார்த்து திரும்பி நின்று, அந்த இருள் கொடுத்த தைரியத்தில் தயங்காமல் சொல்லிவிட்டாள். சும்மாவே தனக்குள் போராடிக் கொண்டிருந்தவனுக்கு, அவள் இப்படிச் சொன்னால் எப்படி இருக்குமாம்?

அதிலும் அவளைப் பற்றி அவனுக்கு நன்றாகவே தெரியும் அப்படி இருக்கையில், அவள் வார்த்தைகளை விளையாட்டு எனக் கடந்துவிட முடியவில்லை. அவனது கோபத்தைக் களைய அவள் எந்த எல்லைக்கும் செல்லத் தயாராகிவிட்டாள் என்பதை அவளது வார்த்தைகள் உணர்த்த உறைந்து போனான்.

அவளது கரத்தை பட்டென உதறிவிட எழுந்த உந்துதலை தடுத்தவன், “இதுக்கு மேலே நீ ரூமுக்கு போய்டுவ தானே, போ...” அவனே கொதி நிலையில் இருக்கையில், அதை அதிகரிப்பது போன்ற அவளது பேச்சு... நிஜமாகவே அவனால் தாங்க முடியவில்லை. அதை மறைத்தவாறே ஒரு வழியாக சொல்லி முடித்துவிட்டான்.

அவளது கரத்தையும் மெதுவாக விடுவிக்க முயல, தானே அவனது கரத்தை விடுவித்தவள், அவனது இரு கரங்களுக்குள் தன் கரத்தை நுழைத்து, அவன் முதுகில் கரத்தை அழுத்தமாகப் பதித்து, அவனோடு முற்றாக ஒட்டிக் கொண்டாள்.

முகத்தை அவன் நெஞ்சில் வைத்து அழுத்தியவள், அவனை இறுக தழுவிக் கொண்டாள். “ஜானு, என்ன இது?” தனது அழுத்தமான பார்வைக்கே தாளமுடியாமல் சிவந்துபோகும் அவளது இந்த செய்கை, அவனை வியக்க வைத்தது.

“சாரி சொல்லக் கூடாதுன்னு சொல்லிட்டீங்க. ஆனா... இங்கே வர முன்னாடி பெரியவங்க சொன்னதைக் கேட்டு நான் ரொம்ப குழம்பிப் போயிட்டேன், அதான் அப்படி நடந்துகிட்டேன். மற்றபடி என் தீனாவைப் பற்றி எனக்குத் தெரியாதா?” அவன் நெஞ்சுக்குள் புதைந்தவாறே, மெதுவாக முனக, அவளது கண்ணீர் அவன் நெஞ்சை நனைத்தது.

அவனால் எதை வேண்டுமானாலும் தாங்கிக் கொள்ள முடியும், ஆனால் அவளது கண்ணீர்... அதை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. “சரி... நான் ஒத்துக்கறேன். நீ அழாதே... எனக்கு கோபமெல்லாம் எதுவும் இல்லை” அவளை நிமிர்த்த அவன் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தது.

சில நிமிடங்கள் தாமதித்தவன், அவளது அழுகை குறையாமல் போகவே, அவள் கரத்தை விலக்கி, முயன்று அவள் முகத்தை நிமிர்த்தினான். அந்த மெல்லிய இருளுக்குள் அவளது கண்ணீர்த்துளிகள் வைரமாய் ஜொலிக்க, கரங்களால் துடைத்தால் கூட அவளுக்கு வலிக்குமோ என்று, தன் இதழ்களால் ஒற்றி எடுத்தான்.

இமை மூடி அவனது செய்கையை ரசித்தவளின் இதழ்களோ மெல்லியதாக துடித்து, அவனது இதழ் வெம்மைக்காக ஏங்கியது. அவனது மூச்சுக்காற்று மெல்லிய புகையாக வெளியேறி அவள் தேகத்தை சூடாக்க, அவன் இதழ்களோ அவளைக் கொள்ளையிட தவித்துக் கொண்டிருந்தது.

ஆனால் அந்த நேரம், தன்னிடம் அடைக்கலமாகியிருக்கும் அவளைத் தீண்டிவிடும் தைரியம் அவனுக்கு வரவில்லை. தன் காதலியே என்றாலும், அவளைத் தொட்டு தீண்டிவிட என்றுமே அவன் முயன்றது இல்லை. அவனது உரிமைகள் எல்லாம் பார்வை அளவிலேயே வைத்திருந்தவன் அவன்.

அவளது அணைப்பே அவனைப் பொறுத்த அளவுக்கு மிகப்பெரும் செய்கைதான். “மாம் இங்கே அனுப்பவே மாட்டேன்னு ரொம்ப ஸ்ட்ரிக்ட் பண்ணாங்களா... கூடவே...” மேலே சொல்லப் போனவளது இதழ்களில் விரல் வைத்து அவள் பேசுவதைத் தடுத்தான்.

“பெரியவங்களுக்கு அந்த கவலைகள் இல்லாமல் போனால்தான் ஆச்சரியம்” அவன் சொல்ல, அதிலோ, ‘நீ என்னை நம்பியிருக்க வேண்டும்’ என்ற எண்ணம் தொங்கி நின்றது.

அவன் விரலை தன் இதழ்களில் இருந்து விலக்கியவள், “தீனா, என்னை உங்க ரூமுக்கு கூட்டி போய்டுங்க...” அவள் சொல்ல, அப்படியே திகைத்துப் போனான். அவள் சொன்ன வார்த்தைகளின் கனம்

உணர்ந்துதான் சொன்னாளா? என உறைந்து போனான். ஒரு பேச்சுக்காக என்று வைத்துக் கொண்டால் கூட, அதை சாதாரணமாக சொல்லிவிடக் கூட அவள் எவ்வளவு யோசித்திருப்பாள் என அவனால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

“ஜானு… என்ன பேசறோம்னு புரிந்துதான் பேசறியா?” அவன் குரலில் மிஞ்சி நின்றது கோபம் மட்டுமே. அவளை விட்டு முற்றாக விலகி நின்றிருந்தான்.

“இதுக்கு மேலே என்னால் என்னை ப்ரூவ் பண்ண முடியாது தீனா. இப்போ நான் உங்க ரூமுக்கு வந்தால் கூட, உங்க மூச்சுக் காற்று கூட என்மேல் விழாதுன்னு எனக்கு நல்லாவே தெரியும்” முகத்தை மூடி அழுதவள், அப்படியே அந்த படிகளில் அமர்ந்து விட்டாள்.

அவள் அருகே தானும் மண்டியிட்டு அமர்ந்தவன், “ஒருத்தரோட அன்பை ப்ரூவ் பண்ணிதான் நிரூபிக்க வேண்டும் என்பது கிடையாது ஜானு. அப்படி செய்தால் அது அன்பே கிடையாது. உன்னை இப்படி ஒரு வார்த்தையை சொல்ல வைத்ததுக்கு வேண்டியே நான் ரொம்ப வெக்கப்படறேன்” அவன் சொல்ல, விருட்டென நிமிர்ந்து பார்த்தாள்.

“உங்களை அவ்வளவு ஹெர்ட் பண்ணதுக்கு… நான் இதைச் செய்யாமல் போனால், என்னையே என்னால் மன்னிக்க முடியாது தீனா” அவள் உருகி நிற்க, அதை அவனால் ஏற்க முடியவில்லை. தன்மீதே அவ்வளவு ஆத்திரமாக வந்தது. தனது கோபம், அவளை எப்படி ஒரு நிலைக்கு கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறது என்பது புரிய, உடைந்து போனான்.

அவன் கண்கள் மெல்லிய ஈரத்தால் நிறையத் துவங்க, அதை அவள் எப்படி பார்த்துக் கொண்டிருப்பாளாம்? “தீனா, நீங்க…” அவள் அவனைத் தொட முயல, அவள் கரத்தைப் பற்றி, தன் கன்னத்தில் அழுத்திக் கொண்டான். அவனது கோபங்கள் எல்லாம் அப்படியே வடிந்து போனது.

“ஜானு, முதல்ல எந்திரி… நம்ம பிரச்சனை, கோபம் எல்லாம் இந்த நிமிஷத்தோட முடிஞ்சு போச்சு சரியா” அவளை கை பிடித்து எழுப்பியவன், பிடிவாதமாக அவளது அறைக்கு அனுப்பி வைத்தான்.

அறைக்குள் நுழைந்தவள் சில நொடிகள் அவனையே பார்த்திருக்க, அவனும் அசையாமல் நின்றிருந்தான்.

“டோரை லாக் பண்ணிக்கோ… இல்லன்னா நான் உள்ளே வந்துடுவேன்” அவள் அருகே நெருங்கி கிசுகிசுப்பாக உரைக்க, அவன் நெஞ்சில் கைவைத்து வெளியே தள்ளியவள், கதவடைத்துக் கொண்டாள். இருவரின் இதழ்களிலும் ஒரு மெல்லிய புன்னகை உறைந்திருந்தது.

இன்று உறங்கவே போவதில்லை, உறக்கமே வரப்போவதில்லை என்ற அவளது எண்ணம் ஒரு நாள் மாலைக்குள்ளாகவே உதிர்ந்திருக்க, படுக்கையில் விழுந்தவளின் இதழ்களில் அந்த புன்னகை வாடவே இல்லை.

“என்ன அம்மையார் முகத்தில் பல்ப் பிரகாசமா எரியுது?” நுஹா சிறு சிரிப்பாய் வினவ, தன் தோழியை இறுக கட்டிக்கொண்டு அவள் கன்னத்தில் அழுத்தமாக இதழ் பதித்தாள்.

“ஏய்… என்னடி… தீனாவுக்கு கொடுக்கறதா நினைச்சு எனக்கு கொடுக்கறியா? நான் தீனா இல்லை” அவள் நிஜமாகவே அலற, அவள் முதுகிலேயே நாலு போட்டாள்.

“போடி பண்ணி… இது வேற…” தங்களுக்கு நடுவில் இருந்த சிறு மனஸ்தாபம் மறைந்துவிட்டதை அவளிடம் உரைக்க, நுஹாவுக்கும் அவ்வளவு சந்தோசம்.

“சரி, சரி, இனிமேலாவது இந்த ட்ரிப்பை என்ஜாய் பண்ணு. இப்போ தூங்கு. செம்ம குளிர் முடியலை…” புறங்கையின் மறைவில் ஒரு கொட்டாவியை வெளியேற்றியவள் போர்வைக்குள் பதுங்கிக் கொண்டாள்.

ஆனால் ஜனனிக்கு கொஞ்சம் கூட குளிர் தாக்கவே இல்லை. மனதுக்குள் மெல்லியதாக பரவியிருந்த அந்த கதகதப்பு, அவள் தேகத்தையும் சற்று வெம்மையாக்கியதோ? தீனாவை எண்ணியவாறே இமைகளை மூடிக் கொள்ள, சுகமான கனவோடு உறக்கம் அவளைத் தழுவிக் கொண்டது.

தீனாவுமே நண்பர்களோடு அந்த கேம்ப்ஃபயர் அருகே அமர்ந்திருந்தாலும், நினைவுகள் முழுவதும் ஜனனியையே சுற்றி வந்தது. அவளது ‘கிஸ் யூ’வும், தன் அறைக்கே வருகிறேன் என்ற வார்த்தைகளும், அவனுக்குள் இறங்கி அவனை சுழற்றி அடித்துக் கொண்டிருந்தது.

அவனது உணர்வுகள் உருவம் கொண்டெழுந்து பேயாட்டம் போட, அதை அடக்குவதே அவனுக்கு பெரும் பாடாக இருந்தது. ‘சும்மா இருந்தவனை சீண்டி விடுறதே இவ வேலையா போச்சு. இப்போ அவ நிம்மதியா தூங்கறா, நான்...’ அந்த புல்வெளியில் அப்படியே கவிழ்ந்து படுத்துக் கொண்டான்.

அவனது செய்கையைப் பார்த்த சபரி, “டேய் தீனா, புல்லெல்லாம் ஐஸ் கட்டி மாதிரி இருக்குது, இங்கேயே படுத்துட்ட? தூக்கம் வந்தா ரூமுக்கு போடா” அவன் தோளைத் தொட்டு உலுக்கினான்.

“ம்ச்...” அவன் கரத்தை விலக்கியவன், மீண்டுமாக கவிழ்ந்து படுத்து, புல்லை பற்களால் கடித்து இழுக்க, அவன் தோளைத் தொட்ட சபரியின் கரங்கள் மெல்லிய வெம்மையை உணர்ந்தது.

“டேய் என்னடா இப்படி சுடுது... ஜுரம் அடிக்குதா?” அவன் கழுத்தடியிலும், நெற்றியிலும் கை வைத்து அவனைப் பரிசோதித்தான்.

“சும்மா இரேன்டா... நான் ரூமுக்குப் போறேன்” புல்வெளியில் இருந்து எழுந்து கொண்டான்.

“என்னடா இவன் இப்படி இருக்கான்...” நண்பர்கள் புலம்ப, அதையெல்லாம் அவன் கணக்கில் கொள்ளவே இல்லை.

தன் அறைக்குத் திரும்பியவன் படுக்கையில் புரள, உறக்கம் என்பது மருந்துக்கும் அவனை நெருங்கவில்லை. தன் அலைபேசியை எடுத்தவன், “சென்ட் மீ தி கிஸ்... ஐ வான்ட் இட் நவ்...” என அனுப்பியவன், அந்த செய்தி அவளுக்கு டெலிவரி மட்டுமே ஆகியிருக்க, அதை அவள் இன்னும் பார்க்கவில்லை என்பதை புரிந்து கொண்டான்.

அலைபேசியில் தனக்கான பதிலை எதிர்பார்த்தவாறே அப்படியே கண்ணயர்ந்தான். காலையில் எழுந்தவுடன் முதன் முதலில் அவனது

குறுந்தகவலில் கண் விழித்த ஜனனிக்கு, குப்பென தேகம் மொத்தமும் நொடியில் வியர்த்துப் போனது.

அவனிடம் சொன்னபொழுது அதன் தாக்கம் அவளிடம் பெரிதாக இருக்கவில்லை. ஆனால், இப்பொழுது அவனது செய்தி வார்த்தையாக கேட்கையில், தேகம் மொத்தமும் நடுங்கியது.

'இதையெல்லாம் எந்த நம்பிக்கையில் செய்கிறோம் என்பதோ, கேட்கிறோம் என்பதைப் பற்றியோ அவள் சிறிதும் கவலைப்படவில்லை. அவன் வாய் வார்த்தையாக காதலை எதிர்பார்த்து நிற்கிறாள் தான்... ஆனாலும் அதை அவன் சொல்லவில்லை என இப்பொழுது அவள் வருந்தவில்லை.

குளித்து கிளம்பி வெளியே வந்தவளுக்கு, அவன் முகத்தை எப்படி ஏறிடப் போகிறோம் எனப் பெரும் தயக்கமாக இருந்தது. அவளது தயக்கத்தை அதிகரிப்பது போன்றே, அவனும் விழுங்கும் பார்வையால் அவளை வரவேற்க, அவன் நெஞ்சில் சாய்ந்து தன் தவிப்பை அடக்கிக்கொள்ள அவள் மனம் தவியாய் தவித்தது.

அவள் தனது காலை உணவை தட்டில் எடுத்து வைக்க, அவள் அருகே வந்தவன், "நைட் மெச்செஜ்க்கு பதிலை எதிர்பார்த்தே, ஏமாந்துபோய் தூங்கிட்டேன்" மெல்லிய குரலில், நிஜமான ஏமாற்றம் தொனிக்க அவன் உரைக்க, அவள் பிளேட்டை பற்றியிருந்த அவளது கரம் நடுங்கியது.

"வெயிட் பண்ணிட்டே இருக்கேன், பதில் சொல்லு... இப்போ இல்லன்னா, பிறகு கூட சொல்லலாம் தப்பில்லை..." அவள் தேகத்தில் மெல்லியதாக உரசியவாறு அவன் விலகிச் செல்ல, அவள்தான் தவித்துப் போனாள்.

"மேம்... எனிதிங் எல்ஸ் யூ வான்ட்..." அவள் அங்கேயே அசையாமல் நிற்பதைப் பார்த்த சிப்பந்தி அவளை நெருங்கி வந்து வினவ, "நோ தேங்க்ஸ்..." உரைத்தவள் வேகமாக விலகிச் சென்றாள்.

அன்று முழுவதுமே தீனாவின் பழைய குறும்பும், சேட்டையும் தொடர, சில நேரங்களில் தவித்துப் போனாலும் உள்ளுக்குள் ரசிக்கத் துவங்கி இருந்தாள்.

மறுநாள் மாலையில் அவர்கள் சென்னைக்குத் திரும்ப, ஜனனியின் அருகே அமர வந்த நிவேதா, “லவ்வர்சை பிரிச்ச பாவம் எனக்கு வேண்டாம், தீனா நீங்க இவங்க பக்கத்திலேயே உக்காந்துக்கோங்க… நான் சபரி பக்கத்தில் உக்காந்துக்கறேன்” அவள் இமை சிமிட்ட,

“குண்டா, உனக்கு வாழ்வுடா…” தீனா திடுமென உரைக்க, அவன் எதற்குச் சொல்கிறான் என புரியாமல் அவன் குழம்பிப் போனான். ஆனால், அடுத்த நிமிடம் நிவேதா அவன் அருகே வந்து அமரவே, அவன் முகத்தில் அப்படி ஒரு அதிர்வும், புன்னகையும் போட்டி போட்டது.

அவன் புன்னகையைப் பார்த்தவன், ‘த்து…’ என வாயசைவில் காற்றில் துப்ப, அதையெல்லாம் அவன் கண்டுகொள்ளவே இல்லை. தீனாவும் புன்னகை முகமாகவே அங்கிருந்து அகன்றான்.

தீனா, ஜனனியின் அருகே அமர, இப்பொழுது கொஞ்சம் கூட தயங்காமல் அவனது இடக்கரத்தை கோர்த்துக் கொண்டவள், பார்வையை வெளியே திருப்பிக் கொண்டாள். அவளைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தவன், மெல்லியதாக சிரித்துக் கொண்டு, அவளது விரல்களை அழுத்தினான்.

நேரம் செல்லச் செல்ல கூட அவளது கரத்தை அவள் விலக்கிக் கொள்ளவில்லை. இரவு உணவை முடித்துவிட்டு வந்து அமர்ந்த அனைவரும் உறக்கத்துக்குச் செல்ல, அவளோ அவன் தோளில் சாய்ந்து உறங்கிப் போனாள்.

அவள் உறங்கிவிட்டதை உறுதி செய்த தீனா, தன் பேன்ட் பக்கெட்டில் இருந்த அந்த மோதிரத்தை அவளது இடக்கை மோதிர விரலில் அணிவித்தான். அவள் நெற்றியில் அழுத்தமாக முத்தமிட்டவன், “ஐ லவ் யூ ஜனனி” உணர்ந்து, ஆழ்ந்து உரைக்க, அந்த வார்த்தைகளை அவன் வாயால் கேட்க விரும்பியவளோ அதை உணராமலே போனாள்.

## பகுதி – 16.

பேருந்து சென்னைக்குள் நுழையவே, அவரவர்க்கு இறங்க வேண்டிய இடங்களில் ஒவ்வொருவரும் இறங்கிக் கொள்ள, ஜனனி இறங்க

வேண்டிய இடமும் நெருங்கியது. தீனாவை விட்டு இறங்க வேண்டும் என நினைக்கையிலேயே ஏதோ ஒன்றை இழந்தாற்போல் உணர்ந்தாள்.

தன் லக்கேஜை சேகரித்துக் கொண்டவள், இருக்கையில் இருந்து எழுந்து கொண்டாள். அவனும் அவளுடனே வர, அவளது கரத்தில் இருந்து பெட்டியை வாங்கிக் கொண்டான். பேருந்தின் படிக்கட்டின் அருகே வந்து நின்று கொண்டார்கள். அவன் தன்னிடம் சொல்லவந்த விஷயத்தை சொல்லாமலே செல்கிறானே என்பதில் அவளுக்கு ஏக வருத்தம்.

‘கடைசி வரைக்கும் சொல்லவே இல்லல்ல?’ பார்வையாலேயே அவனிடம் கேள்வி கேட்டாள். வாயைத் திறந்து அவனிடம் கேட்டுவிடும் தைரியம் மட்டும் அவளுக்கு வரவே இல்லை.

அவளது பார்வையில் இருந்தே அதைப் புரிந்து கொண்டவன், அவள் இறங்கும் வரைக்குமே அமைதியாகவே நின்றிருந்தான்.

அவள் இறங்கவே, லக்கேஜை அவளது கரத்தில் கொடுத்தவன், “உனக்கு ஒரு சர்ப்ரைஸ் கொடுத்தேன்... பட் நீ தூங்கிட்ட” அவள் என்னவென கேட்கும் முன்பாகவே பேருந்து நகர்ந்துவிட, அவளால் என்னவென்று தெரிந்துகொள்ள முடியவில்லை.

வேகமாக தன் அலைபேசியை எடுத்தவள் அவனுக்கு அழைக்க, அவளது அழைப்பை ஏற்றவன், “அது உன்கிட்டதான் இருக்கு ஜானு, கண்டுபிடி” அலைபேசி வழியாக ஒரு முத்த சத்தத்தை அவளுக்கு பரிசாக்கியவன், அவள் அதை உணரும் முன்பே அலைபேசியை வைத்திருந்தான்.

‘ஹையோ... அது என்னன்னு சொல்லாமலே போறாரே...” அந்த சர்ப்ரைஸ் தன்னிடம் எங்கே இருக்கிறது என தெரிந்துகொள்ள அவள் மனம் படபடத்தது.

ஆனால், வீட்டுக்குச் சென்று தாய் தந்தையிடம் பேசி, அவர்களுக்கென வாங்கி வந்ததை அவர்களிடம் கொடுத்துவிட்டு, பழங்களையும் ஒப்படைத்துவிட்டு, ஓய்வெடுக்கச் செல்வதாகச் சொல்லிவிட்டு தன் அறைக்குள் வந்து புகுந்து கொண்டாள்.

தன் பெட்டி, கைப்பை என அனைத்தையும் முழுதாக பரிசோதித்த பிறகும், அவளால் எதையும் கண்டுகொள்ள முடியவில்லை. ‘ஒரு வேளை சும்மா சொல்லியிருப்பாரோ?’ எண்ணியவள், அவன் எதையுமே வாய் வார்த்தையாக சொல்ல மாட்டான் என்பது புரிய, அப்படியே படுத்திருந்தாள்.

அவளுக்கென பாலை எடுத்து வந்த கலாவதி, “என்னம்மா, குளிக்காமல் அப்படியே படுத்துட்ட. முதல்ல எழுந்துபோய் குளிச்சுட்டு, இந்த பாலைக் குடிச்சுட்டு வந்து படு போ...” மகள் சந்தோஷத்தில் துள்ளி குதித்து தன்னிடம் உரையாடி மகிழ்ந்தது அவருக்கு பெரும் ஆறுதலாக இருந்தது.

“ஓகே மாம்... நீங்க இங்கேயே இருங்க. நான் இப்போ வந்துடறேன்” அதென்னவோ தாய் எப்பொழுதும் தன்னுடனே இருக்க விரும்புவது புரிய அவரிடம் உரைத்தாள்.

அவள் எழுந்து செல்லப் போகையில், அவளது விரலில் இருந்த புதிய மோதிரத்தைப் பார்த்தவர், “என்னம்மா... புதுசா மோதிரம் எல்லாம் வாங்கியிருக்க. டிசைன் ரொம்ப சிம்பிளா அழகா இருக்கே. இப்படி சிம்பிளா கேட்டுதான், நான் காட்டிய மோதிரத்தை எல்லாம் வேண்டாம்னு சொன்னியா?” அந்த ஒற்றை வெள்ளைக்கல் மோதிரத்தை அவர் திருப்பி திருப்பி பார்க்க, அவள் உள்ளுக்குள் வியர்த்தாள்.

‘நான் இவ்வளவு நேரம் கவனிக்கவே இல்லை. இந்த அம்மா மட்டும் ஒற்றை பார்வையிலேயே எப்படி கண்டு புடிக்கறாங்களோ?’ மனதுக்குள்ளேயே எண்ணிக் கொண்டாள். ஒரு தாய் தன் மகளை ஒற்றை பார்வையில் ஸ்கேன் செய்துவிடுவார் என்பதை அவள் உணர்ந்த தருணம் அதுவாகத்தான் இருக்கும்.

“ரெண்டு கிராம்தான் இல்ல... இந்த கல் வைரமா இருந்திருந்தால் இன்னும் நல்லா இருந்திருக்கும்” அவர் சொல்லிக்கொண்டே போக அவளால் பதில் சொல்லவே முடியவில்லை.

‘இதை எப்போ எப்படி போட்டிருப்பார்?’ எண்ணியவளுக்கு அதை யூகித்துக் கொள்ள பிரம்மாதமான மூளை எதுவும் வேண்டியிருக்கவில்லை.

‘இதைப் போடும்போது என்ன சொல்லியிருப்பார்? ச்சே... அதைக் கேட்காமல் போய்விட்டேனே. என்னை எழுப்பி இருக்கலாம் தானே. அவர் மோதிரம் போட்டது, பேசியது கூட தெரியாமல் அப்படியா தூங்கிவிட்டேன்’ தன்னைத் தானே திட்டிக் கொண்டாள்.

‘நான் தூங்கிட்டு இருக்கும்போதுதான் அவர் இதைச் செய்திருக்கணுமா?’ செல்லமாக திட்டிக் கொண்டாள்.

“இந்த மாதிரிதான் வேணும்னா, அம்மாகிட்டே முன்னாடியே சொல்லியிருக்கலாமே ஜனனி” கலாவதி அவளைக் கலைக்க, அப்பொழுதுதான் தன் நினைவுகளில் இருந்து கலைந்தாள்.

“அது... நீங்க எப்பவுமே பெருசா செய்யணும்னு எதிர்பார்ப்பீங்களா அதான்...” தடுமாறி உரைத்தவள், தன் தாயின் கரத்தில் இருந்து தன் கரத்தை உருவிக் கொண்டாள். மெதுவாக அந்த மோதிரத்தை வருடியவள், தாய் அறியாதவாறு, தன் இதழ்களை அந்த மோதிரத்தில் பதித்தாள்.

“சரிம்மா, போய் குளிச்சுட்டு வா...” அவளை அனுப்பியவர், அவள் குளித்துவிட்டு திரும்பி வந்து, பாலைக் குடித்துவிட்டு உறங்கும் வரைக்கும் அவளுடனே அமர்ந்திருந்தார். அவள் உறங்கிவிட்ட பிறகு அவர் கீழே செல்ல, அவர் சென்றவுடன் கண் விழித்த ஜனனி, தன் கைவிரல் மோதிரத்தை புகைப்படம் எடுத்தவள், அதை அவனுக்கு அனுப்பி வைத்துவிட்டு உறங்கிப் போனாள்.

மறுநாள் அவள் அலுவலகம் செல்ல, பேருந்தில் அவளைப் பார்த்தவன், இமை சிமிட்டிவிட்டு, தன் நண்பர்களோடு இணைந்துகொள்ள, அவளது நாள் அழகாகிப் போனது. இருக்கையில் வந்து அமர்ந்து, அவரவர் வேலையில் மூழ்க, தீனா சில நிமிடங்கள் அவளையே கவனித்திருந்தான்.

அன்று அவள் ஜீன்ஸும் டாப்பும் அணிந்து, ஒரு ஷாலை கழுத்தை சுற்றி போட்டிருக்க, அவள் அருகே வந்த தீனா, அவள் எதிர்பாராத நேரம், அவளது ஷாலை உருவிக் கொண்டு சென்றுவிட்டான். எதிர்பாராத அவனது அந்த செய்கையில் திகைத்துப் போனாள்.

அவன் பின்னாலேயே ஓடி வந்தவள், அவன் ஓய்வறையின் பக்கம் செல்லவே, அவனைப் பின்தொடர்ந்தாள்.

“தீனா, என்ன விளையாட்டு இது? என் ஷாலைக் கொடுங்க” தன் கையை அவன் பக்கம் நீட்டினாள். கொஞ்சம் கூட மறுக்காமல் அதை அவளது கரத்தில் கொடுத்தவன், அதை அவள் மீண்டுமாக போட்டுக்கொள்ள முயல, அவளைத் தடுத்தான்.

‘ஏன்...’ அவள் அதை பார்வையால் வினவ,

“இந்த ஷாலை நீ இப்போ போட்டன்னா... மத்தவங்களோட பார்வை எல்லாம் இது எப்போ விலகும்னு காத்திருக்கச் சொல்லும். அதுவே இது இல்லைன்னா, எந்த வித்தியாசமும் தெரியாது. நீ நீயாவே இரேன், தேவையில்லாமல் ஏன் மத்தவங்க பார்வைக்காக யோசிக்கற?

“இப்போ இந்த ஷாலை நீ போடப் போறதால் எதுவும் மாறிவிடப் போவதில்லை. சொல்லப்போனால் நிறைய பேரோட டெம்ப்டேஷனை குறைக்கலாம்” அவன் வெகு சாதாரணமாக சொல்லிவிட, அவளால் அவன் சொன்னதை ஏற்கவே முடியவில்லை.

ஒரு மாதிரி அவஸ்தையான உணர்வு தொண்டைக்குள் உருள, ‘அப்போ நீங்களும் அப்படித்தான் நினைப்பீங்களா? பாப்பீங்களா’ அவளுக்குள் எண்ணம் சுழன்றது.

அவளது எண்ணம் புரிந்தவன் போல, “நான் பார்த்து ரசிக்காமல்...” அவன் மேலே சொல்லும் முன்னர், பட்டென அவன் வாயை தன் கரத்தால் மூடினாள்.

“ஹையோ போதும்... நான் இந்த ஷாலையே போடலை...” அவள் சொல்ல, அவன் பார்வை அவள் மேனியில் மெல்லியதாய் நழுவிச் செல்ல, அவள் இமைகளும் இதயமும் படபடத்தது.

“நீங்க ரொம்ப மோசம்...” மெதுவாக முனகியவள், அவன் பார்வை வீச்சை தாங்க முடியாமல் பார்வையை அவன்மீதிருந்து திருப்பிக் கொண்டாள்.

“ஓ... அதையே இப்போதான் கண்டு பிடிக்கறியா?” அவளைச் சீண்ட, அவனைத் தள்ளிவிட்டு சென்றுவிட்டாள்.

“மோதிரம் பிடிச்சிருக்கா இல்லையான்னு நீ சொல்லவே இல்லையே” அவனது குரல் அவளைத் துரத்த, அவனைப் பார்த்து திரும்பியவள்,

அவனைப் பார்த்தவாறே மோதிரத்தில் இதழ் பதிக்க, அவன் கண்களில் ஏறிய போதையை அளவிட முடியவில்லை.

அன்றைய நாள் அவ்வாறே கடக்க, அன்று நிவேதா அலுவலகம் வந்திருக்கவில்லை. மறுநாள் வந்திருந்தவளுக்கு தொண்டை கட்டிக் கொள்ள, அவளால் சரியாக பேச முடியவில்லை.

காலையில் கேண்டீன் சென்றவர்கள் அவளை விடாமல் கேலி செய்து கொண்டிருக்க, அவளால் முறைக்க மட்டுமே முடிந்தது. “டூர்ல என்ன ஆட்டம்... இப்போ பாத்தியா... கடவுள் ஆப்பை எப்படி வச்சான்னு... நாலு நாள் உன் தொல்லையே இல்லாமல் இருக்கும்...” சுதிர்தான் அவளை அதிகம் கலாய்த்துக் கொண்டிருந்தான்.

“என்னால் பேச முடியலை, எல்லாரும் கிண்டல் பண்றீங்க பாத்தீங்களா?” பாதி குரலும், மீதி செய்கையுமாக அவள் சொல்லி முடிக்க, நண்பர்கள் அனைவரையும் முறைத்தான் தீனா.

“டேய்... எல்லாரும் சும்மா இருங்கடா... பாவம் சின்னப் பிள்ளை...” அவன் சப்போட்டுக்கு வர, அவள் முகத்தில் அப்படி ஒரு பெருமிதம்.

தீனாவின் குரலில் இருந்தே, அவன் அவளை ஏதோ உச்சமாக கலாய்க்கப் போகிறான் என்பது புரிய அதை அறிய அனைவரும் காத்திருந்தார்கள். இத்தனை வருடம் அவனோடு பழகும் அவர்களுக்கு அவனைப் பற்றி தெரியாதா என்ன?

“தேன்க் யூ தீனா...” அவள் சொல்ல, அவளுக்கு எதிரில் இருந்த இருக்கையில் வந்து அமர்ந்தான்.

அவன் அமரும்பொழுதே, ‘வேண்டாம்...’ என ஜனனி கண்களால் மிரட்ட, அதை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

“உனக்கு பேச்சு வரலையா... இப்போ சரி பண்றேன் பாரு... எங்கே சொல்லு... அ..ம்..மா... அ..ம்...மா... அ...ப்...பா...” அவன் சீரியஸாக சொல்லிக் கொண்டிருக்க, அவனும் எதையோ செய்யப் போகிறான், சொல்லப் போகிறான் என தீவிரமாக காத்திருந்த நிவேதாவின் முகம் அப்படியே திகைத்துப் போனது.

அதைப் பார்த்த நண்பர்களின் கூட்டம் அப்படியே கொல்லென சிரித்து வைக்க, “தீனா...” முயன்று கத்தியவள், அவனை சரமாரியாக அடித்துவிட்டு எழுந்து செல்ல, அனைவரின் சிரிப்பு சத்தமும் அவளைப் பின்தொடர்ந்தது.

அவள் தனியாக தன் இருக்கைக்குத் திரும்பியதை பார்த்துக் கொண்டிருந்த ரக்ஷனுக்கு அவளை ஏதாவது செய்தே ஆகவேண்டும் என ஆத்திரமாக வந்தது. அவர்கள் டூர் சென்றிருந்த நேரத்தில், அவளை தனக்கு கம்பெனி கொடுக்கச் சொல்லிக் கேட்க, அவள் மறுத்தது கூட அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை.

ஆனால் அதை தீனாவிடம் சென்று சொல்லி, அவனை மிரட்டியதைத்தான் அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. தனக்கு இவ்வளவு செய்தவளை ஏதாவது ஒரு விதத்திலாவது தனக்கு அடிபணிய வைத்துவிட வேண்டும் என்ற வேகம் கொழுந்துவிட்டு எரிந்தது.

அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருக்கத் துவங்கினான். அந்த வாய்ப்பும் இரண்டே நாட்களில் அவனுக்கு கிடைத்தது. புது ப்ராஜெக்ட்டை அவர்களுக்கென ஒதுக்கியவன், நிவேதாவுக்கும் அதில் முக்கிய பொறுப்பைக் கொடுத்தான்.

நிவேதாவே வேலைக்கும் அந்த சூழலுக்கும் புதியவள், அப்படி இருக்கையில், திடுமென அவளுக்கு தனிப் பொறுப்பை கொடுத்தால் அவளும் என்னதான் செய்வாள்? அதைப் புரிந்து கொள்ளவே திணறிப் போனாள்.

நிவேதா தனது பகுதியை முடித்துக் கொடுத்தால்தான், மற்றவர்கள் அதை டெவலப் செய்ய முடியும் என்ற சூழலில் அவளை சிக்க வைக்க, அதிர்ந்து, திகைத்துப் போனாள். அந்த வேலையை அவள் முடிக்க வேண்டுமானால், இரவுபகல் பாராமல் வேலை பார்த்தாக வேண்டும்.

அவளுக்கு உதவும் சூழல் கூட மற்றவர்களுக்கு இருக்கவில்லை. அவள் வேலையை முடித்துக் கொடுக்கும் வரைக்கும், இடையில் மற்றவர்களுக்கு சிறு ப்ராஜெக்ட் ஒன்று கொடுக்கப்பட, அவர்கள் அனைவரும் அதில் பிஸி ஆனார்கள்.

ரக்ஷன் தன்னைப் பழிவாங்கத்தான் இப்படியெல்லாம் செயல்படுகிறான் என்பது அவளுக்குப் புரியவே செய்தது. ஆனால், அதிலிருந்து எப்படி விடுபடுவது என்றுதான் தெரியவில்லை. அவளது பிரச்னையை நம்பிக்கையான ஒருவரிடம் சொல்லியே ஆகவேண்டிய சூழலுக்கு அவள் தள்ளப்பட்டாள்.

அவளுக்கு முதலில் நினைவுக்கு வந்தவன் தீனாதான். அன்று லஞ்ச் இடைவேளையின் பொழுது தீனாவிடம் பேச முடிவெடுத்தாள். அவன் தனித்திருந்த நேரம் அவன் அருகே சென்றவள், “தீனா, இந்த ரக்ஷன் என்னையே டார்கெட் பண்றான்.

“முதல்ல ஒரு வாரம் டைம் கொடுத்திருந்தவன், இப்போ என்னன்னா, நாளைக்கு காலையில் நான் ப்ராஜெக்ட்டை சப்மிட் பண்ணியாகனும்னு மிரட்டறான். நைட் முழுக்க வொர்க் பண்ணு, நான் வேண்ணா உனக்கு துணைக்கு இருக்கறேன்னு சொல்றான்.

“எனக்கு ரொம்ப பயமா இருக்கு தீனா. அவன் என்னவோ பெருசா ப்ளான் பண்றான். ஏதாவது ஹெல்ப் பண்ணுங்களேன்” அவனிடம் சொல்கையிலே கண்ணீர் அவள் கன்னத்தில் வழிந்து விட்டது.

சில நொடிகள் யோசித்தவன், “நிவேதா, ஹையர் அத்தாரிட்டிக்கு முதல்ல இவன்மேலே ஒரு கம்ப்ளெயின்ட் ரெயிஸ் பண்ணு. இன்னைக்கு நைட் உன்னை தனியா வொர்க் பண்ணச் சொல்றான்னு மென்ஷன் பண்ணு. நானும் பெர்சனலா அவர்கிட்டே பேசறேன்.

“நீ எதையுமே காட்டிக்காதே. எப்பவும் போல இரு. இன்னையோட இதுக்கு ஒரு முடிவு கட்றோம். நம்ம டீம் மேட் யாருக்கும் இது தெரிய வேண்டாம்” சொன்னவன் செய்ய வேண்டிய அனைத்தையும் திட்டமிட்டுக் கொண்டான்.

அன்று மாலையில் வேலை முடிந்து ஒவ்வொருவராக கிளம்ப, தீனாவுமே கிளம்பிவிட்டான். ஆனால் செல்லும் முன்பு கட்டைவிரலை உயர்த்தி அவளுக்கு தைரியம் சொல்லிச் செல்ல மறக்கவில்லை. கிட்டத்தட்ட அலுவலகம் மொத்தமுமே காலியாகிப் போனது.

அவ்வளவு நேரமும் தைரியமாக காட்டிக் கொண்டவளின் மொத்த தைரியமும் காணாமல் போன உணர்வு. உள்ளங்கை வியர்த்து வழிய பிசுபிசுத்துப் போனது. தைரியமாக இருப்பதாக காட்டிக்கொள்ள முயன்றாலும் அது அவளால் முடியவில்லை.

அலுவலகத்தில் ரக்ஷனும் அவளும் மட்டுமே தனித்திருக்க, எந்த நேரம் அவன் வந்து என்ன செய்வானோ, சொல்வானோ என்ற படபடப்பிலேயே அமர்ந்திருந்தாள். கடிகாரத்தின் ஓசை மட்டுமே அந்த இடத்தில் நிறைந்திருக்க, கூடவே அவளது லேப்டாப்பின் சுவிட்ச் ஓசையும் அதோடு இணைந்திருந்தது.

நேரம் அதன் போக்கில் கடந்து கொண்டிருக்க, சற்று நேரத்தில் அவளைத் தேடி வந்தான் ரக்ஷன். “என்ன ரொம்ப நேரமா டைப் பண்ணி களைச்சுட்ட போல. உனக்கு ஏதாவது உதவி வேணுமா?” மெதுவாக அவள் பின்னால் வந்து நின்றான்.

அவள் வேகமாக எழ முயல, அவள் தோளைப் பற்றி அழுத்தி அமர வைத்தவனது கரம் அங்கிருந்து விலகவே இல்லை. அவள் பெரும் பயத்தில் படபடத்துப் போயிருந்தாள்.

‘இந்த தீனாவை எங்கே? அவரை மட்டுமே நம்பியிருக்கக் கூடாதோ?’ மனம் தாறுமாறாக சிந்தித்தது.

“ஒரு நாள் கம்பெனி கொடுக்கச் சொன்னதுக்கு அவ்வளவு முறுக்கிகிட்ட. இப்போ பாத்தியா என்ன ஆச்சுன்னு? இப்போ என்கிட்டே இருந்து எப்படி தப்பிப்பியாம்? உன்னை யார் காப்பாத்துவாங்க? தீனா என்ன எனக்கு சம்பளம் கொடுக்கும் முதலாளியா?

“அவனே எனக்கு கீழே வேலை பார்க்கும் ஒரு எம்ப்ளாயி, அவன்கிட்டே சொன்னால் நான் பயந்துடுவேனா? ஹா…ஹா…” அவன் வில்லத்தனமாக சிரிக்க, அவள் நடுங்கிப் போனாள்.

“சார்… இதெல்லாம் ரொம்ப தப்பு…” அவனது கரத்தை விலக்க முயன்றவாறே நெளிந்தாள்.

“இன்னைக்கு என்னோட டேட்டிங் வர்றேன்னு சொல்லு, உன்னை விட்டுடறேன். பட்... ஒரு நாள் எனக்கு நீ வேணும்...” அவனது கரம் அபாயகரமாக இறங்க முயல, அவனை உதறிவிட்டு பட்டென எழுந்து நின்றாள்.

“ஏய்... என்கிட்டே தனியா மாட்டியிருக்கும்போதே உனக்கு இவ்வளவு திமிரா? உன்னை என்ன செய்யறேன் பார்...” அவளை எட்டிப் பிடிக்க முயல, அந்த நேரம் அங்கே வந்தான் தீனா.

அவனைப் பார்த்தவுடன் யானை பலம் கொண்டவளாக, “தீனா...” எனக் கதறியவாறு அவன் முதுகின் பின்னால் சென்று ஒளிந்து கொண்டாள்.

தன் முதுகில் பின்னால் ஒடுங்கியவளின் தேகம் நடுங்கிக் கொண்டிருந்ததை அவனால் நன்கு உணர முடிந்தது. ‘ச்சே... நான் லேட்டா வந்திருக்க கூடாது...’ தன்னையே நொந்து கொண்டான்.

“நிவேதா, பயப்படாதே... அதான் நான் வந்துட்டேனே...” அவளுக்கு தைரியம் சொன்னான்.

“என்னடா... நீ வந்தால்... உன்னைப் பார்த்து நான் பயந்துடுவேனா? உன்னோட சீட்டையே ஒரு நிமிஷத்தில் என்னால் கிழிக்க முடியும், அது தெரியும் தானே.. ஒழுங்கு மரியாதையா அவளை என்கிட்டே விட்டுட்டு, நீ உன் வேலையைப் பாத்துட்டு போயிட்டே இரு” அவனைத் தாண்டி நிவேதாவை பிடிக்க முயன்றான்.

அவனது கரத்தை கெட்டியாக பற்றி தடுத்தவன், “விருப்பமில்லாத பொண்ணை தொல்லை செய்வது தப்பு ரக்ஷன். உன் நல்லதுக்குத்தான் சொல்றேன், இங்கே இருந்து போய்டு” அவன் சொல்வதை கொஞ்சம் கூட கண்டுகொள்ளவே இல்லை.

“அவளுக்கு விருப்பமில்லைன்னு உன்கிட்டே சொன்னாளா? உன்னைப் பாத்த உடனே, பத்தினின்னு சீன் போடுறா. இவ்வளவு நேரமும் நல்லாத்தான் இருந்தா” அவனைப் பார்த்தவுடன் கதை புனைந்தான்.

“சரி விடு, நான் சொன்னால் நீ கேக்க மாட்ட. அவகிட்டேயே கேட்டுடலாம். நிவேதா, நீ அவனோட டேட்டிங் போறியா? இல்லன்னா என்னோட வர்றியா?” அவளிடம் திரும்பிக் கேட்க,

“நான் உங்களோட வர்றேன்... அவன் சொல்றதை எல்லாம் நம்பாதீங்க. என்கிட்டே தப்பா நடந்துக்கப் பாக்கறான்” நடுங்கியவாறே உரைத்தாள்.

“ஏய்... நீ என்னதான் கெஞ்சினாலும் உன்னை இன்னைக்கு நான் விடறதா இல்லை. இவன் எல்லாம் எனக்கு ஒரு ஆளே கிடையாது” உரைத்தவன், தீனா எதிர்பாராத நேரம், அவன் மூக்கிலேயே ஓங்கி ஒரு குத்து விட்டான்.

தீனாவின் மூக்கில் இருந்து குபுகுபுவென சூடான ரத்தம் பாய, தன் இடக்கரத்தால் மூக்கை பொத்தி பிடித்துக் கொண்டான். பேசிக் கொண்டிருக்கையிலேயே ரக்ஷன் கை நீட்டுவான் என அவன் எதிர்பார்த்திருக்கவில்லை.

“ஐயோ தீனா ரத்தம்...” நிவேதா பதற, அடுத்த நொடி, தீனா ரக்ஷனை எட்டி உதைத்த மிதியில், தரையில் தூரப்போய் விழுந்தான்.

“டேய், என்னையா அடிக்கற?” அவன் கோபம் கொண்டு எழுந்து வர,

“சார்... எல்லாரும் வாங்க” தீனாவின் அழைப்பில், அவனது மேலதிகாரிகள் மூவர் அங்கே பிரசன்னமானார்கள். அவர்களோடு ரக்ஷனின் மனைவியும் இருக்க, அவ்வளவு நேரமாக கொந்தளித்த ரக்ஷன் அப்படியே ஆடிப் போனான்.

அவன் எதை எதிர்பார்த்திருந்தாலும் இப்படி ஒரு முடிவை எதிர்பார்த்திருக்கவில்லை.

“திவ்யா... நீ நினைக்கற மாதிரி எதுவும் இல்லை...” தன் வேலையை விட, வாழ்க்கைதான் அவனுக்கு பிரதானமாக இருந்தது.

எனவே அதை முதலில் காப்பாற்றிக் கொள்ள முயன்றான். “ச்சே... நீங்க இப்படிப் பட்டவரா? ஒரு நிமிஷம் என்னையும், நம்ம குழந்தையையும் நினைத்துப் பார்த்திருந்தால் நீங்க இப்படி செய்திருப்பீங்களா? உங்களுக்கு நான் எதில் குறை வைத்தேன்?

“இனிமேல் நம்ம குழந்தைக்கு நீங்க அப்பா மட்டும்தான். எனக்கு புருஷனா இருக்குற தகுதியை நீங்க இழந்து ரொம்ப நேரமாச்சு. இனிமேல் என் முகத்திலேயே முழிக்காதீங்க” அவனிடம் உரைத்தவள், வேகமாக அங்கிருந்து அகன்றாள்.

“திவ்யா... திவ்யா...” மனைவியின் பின்னால் செல்ல முயன்றான்.

“சார்... அது...” அவனது எந்த பேச்சுக்களையும் அவர்கள் காதுகொடுத்து கேட்கத் தயாராக இருக்கவில்லை.

“மிஸ்டர் ரக்ஷன்... நீங்க சொல்லும் எந்த கதையையும் நாங்க கேட்கத் தயாரா இல்லை. எல்லாவற்றையும் நாங்க எங்க கண்ணால் பார்த்து, காதால் கேட்டாச்சு. இதற்கு மேலே உங்க வாயால் தெரிய வேண்டிய விஷயம் எதுவும் இல்லை.

“இதற்கு முன்பே உங்களைப் பற்றி சில கம்ப்ளெயின்ட் வந்தது, அதற்கான சரியான விளக்கங்களை நீங்க கொடுத்ததால் நாங்க உன்னை சும்மா விட்டோம். ஆனால் அப்படி செய்திருக்கக் கூடாதுன்னு நீ எங்களுக்கு புரிய வச்சுட்ட.

“இனிமேல் நீ பேசவே வேண்டாம், உடனடியா உன் ராஜினாமா கடிதத்தை எழுதிக் கொடுத்துட்டு நீ இங்கே இருந்து போகலாம். இனிமேல் வேற எந்த கம்பெனியிலும் நீ வேலை செய்ய முடியாத மாதிரி எங்களால் செய்ய முடியும்.

“ஆனா, அப்படியான நடவடிக்கை வேண்டாம் என்று தீனா கேட்டுகிட்டதால் மட்டும் உன்னை இத்தோட விடறோம். முதல்ல டைப் பண்ணு” அவனை கடிதம் எழுத வைத்து, உயரதிகாரிகளின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைத்த பிறகே அவனை விட்டார்கள்.

பெண்ணாசைக்கு மயங்கி, தன் வாழ்க்கையையே அழித்துக் கொண்டோமே என மிகவும் வருந்தினான். சிறியதாக இருந்த பொழுதே தன் தவறை திருத்தாமல் போனது தன் தவறுதான் என காலம் கடந்து புரிந்தது.

இனிமேல் திவ்யா தன்னை ஏற்றுக் கொள்வாளா? தனக்கான வாழ்க்கை இனிமேல் கிடைக்குமா என மனம் கலங்கிப் போனான். சற்று நேரத்துக்கு முன்னர் நிவேதா கலங்கி நின்ற பொழுது கல் நெஞ்சக் காரனாக நின்றுவிட்டு, இப்பொழுது அவனுக்கு ஒரு பிரச்சனை என்றவுடன் மனம் தவித்தான்.

தன் மனைவியின் காலில் விழுந்தாவது தன் வாழ்க்கையை மீட்டுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு அங்கிருந்து விரைந்தான். அவனுக்காக வெளியே, அவனது வீட்டில் என்ன காத்திருக்கிறது என்று அவனுக்குத் தெரியவில்லை.

தன் அலுவலகத்தை திரும்பிக் கூட பார்க்காமல் வெளியேறினான். அதே நேரம், நிவேதாவோ தீனாவின் மூக்கில் கர்ச்சீப்பை வைத்து அழுத்தியவள், குளிர் சாதனப் பெட்டியில் இருந்து ஐஸ் கியூபை எடுத்து வந்து அவன் மூக்கில் வழிந்த ரத்தத்தை நிறுத்த போராடினாள்.

“ரொம்ப சாரி தீனா, எல்லாம் என்னால்தான்... எவ்வளவு ரத்தம்... கர்ச்சீப்பே நனஞ்சுடுச்சு” தன்னால்தான் அவனுக்கு இப்படி ஆனது என மாய்ந்து போனாள்.

“அவன் செய்ததுக்கு நீ எப்படி பொறுப்பாக முடியும்? நான் கொஞ்சம் அசால்ட்டா நின்னுட்டேன் அதான்... அவனோட மனைவி இருந்ததால்தான் அவனை இத்தோட விட்டேன். இல்லன்னா இந்த தீனா யார்ன்னு அவன் முழுசா தெரிஞ்சுகிட்டு இருந்திருப்பான்” ஓரளவுக்கு ரத்தம் வடிவது நின்றுவிட, தான் அமர்ந்திருந்த இருக்கையில் இருந்து எழுந்தான்.

அவர்கள் நடந்து வந்து அமர்ந்த பாதை முழுவதும் சொட்டு சொட்டாக ரத்தம் சிதறியிருப்பதைக் கண்டாள். “தீனா, பேசாமல் ஹாஸ்பிடல் போய்டலாமா?” அவளுக்கு அவ்வளவு பயமாக இருந்தது. தனது பயமெல்லாம் எப்பொழுதோ அவளை விட்டுச் சென்றிருந்தது.

“இது அவ்வளவுதான்... இதற்கு மேலே வராது...” அவன் கர்ச்சீப்பை விலக்க, மூக்கு குடமிளகாய் போன்று வீங்கிப் போயிருந்தது.

அப்பொழுது அங்கே வந்த அதிகாரிகள், “எங்க ப்ரோசீஜர் எல்லாம் முடிந்தது தீனா. அவனை முழுதாக எங்களுக்கு அடையாளம் காட்டியதில் எங்களுக்கு ரொம்ப திருப்தி. ஆனா, நீங்க முன்னாடியே அவனைப் பற்றி சொல்லும்போதே நாங்க நடவடிக்கை எடுத்து இருக்கணும்.

“அப்படி நாங்க செய்திருந்தால், இன்றைக்கு இவ்வளவு தூரம் வந்திருக்காது. ஆனாலும், இதுவும் தாமதமாகலைன்னுதான் சொல்லணும், நாங்க கிளம்பறோம். உங்களோட ஒத்துழைப்புக்கு நன்றி” அவர்கள் அத்தோடு விடை பெற்றுக் கொண்டார்கள்.

அவளை அழைத்துக் கொண்டு வெளியே வந்தவன், “நான் போய் பைக் எடுத்துட்டு வந்துடறேன். உன்னை வீட்டில் ட்ராப் பண்ணிட்டு நான் போறேன்” அவளது பதிலை எதிர்பாராமல் சென்றான்.

அவன் பைக்கோடு வரவே, “கால் டேக்ஸி வர வைத்து நானே போய்டுவேன் தீனா. முதல்ல நீங்க வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுங்க” அவனது முகமே இப்பொழுது வீங்கிவிட்டதுபோல் இருந்தது.

“எனக்கு ஏற்கனவே வலி உயிர் போகுது, இதில் நீ வேற படுத்தாதே. கால்டேக்சி புக் பண்ணி, அது வந்து… நீ வீட்டுக்கு பத்திரமா போய்ட்டியான்னு நூறு முறை நான் போன் செய்து கேப்பதுக்கு இதுவே பரவாயில்லை.

“”அந்த ரக்ஷனோட பொண்டாட்டியை கூட்டி வரத்தான் கொஞ்சம் லேட் ஆயிடுச்சு, இல்லன்னா இதெல்லாம் இவ்வளவு தூரம் வந்தே இருக்காது” அவன் வலியில் முகம் சுழிக்க அதற்குமேலே அவனிடம் வாதாடாமல் ஏறிக் கொண்டாள்.

வீட்டுக்குச் செல்லும் வழியில், அங்கே திறந்திருந்த இருபத்து நான்கு மணிநேர மெடிக்கல் ஷாப்பில் வண்டியை நிறுத்த சொல்லி, ஒரு வலி நிவாரணி மாத்திரையை வாங்கிக் கொடுத்து, அவனை விழுங்க வைத்த பிறகே அவள் கொஞ்சம் நிம்மதியாக உணர்ந்தாள்.

அவளது தவித்த முகத்தைப் பார்த்தே, அவளது அந்த செய்கையை அவனும் மறுக்காமல் ஏற்றுக் கொண்டான். அவளை வீட்டுக்கு அருகே

விட, வண்டியில் இருந்து இறங்கியவள், அவனுக்கு ஆயிரம் நன்றி உரைத்துவிட்டு விடை பெற்றாள்.

“நிவேதா, எதையும் நினைக்காமல், ஏதாவது பிடிச்ச பாட்டைக் கேட்டுட்டே நிம்மதியா தூங்கு. இனிமேல் அவனை நீ பேஸ் பண்ண வேண்டிய அவசியம் கூட இல்லை, சோ... பி பிரேவ்...” அவளை இறக்கி விட்டவுடன் தன் வேலை முடிந்தது என எண்ணாமல், அவளுக்கு தைரியம் சொல்லிவிட்டே சென்றான்.

வீட்டுப் படி ஏறியவள், செல்லும் அவனையே இமைக்காமல் பார்த்திருந்தாள்.

## பகுதி – 17.

நிவேதாவை வீட்டில் விட்டுவிட்டு, தாமதமாக தன் வீட்டுக்கு வந்த தீனாவை வாசலிலேயே பிடித்துக் கொண்டார் அகிலாண்டம். தனக்கு மூக்கில் அடிபட்டது, தன் தாய்க்கு தெரியக் கூடாது என்பதால்,முகத்தில் கர்ச்சீப்பால் மறைத்திருந்தவன் அதைக் கழட்டவே இல்லை.

“என்னடா பழக்கம் இது? முன்னெல்லாம் வாரக் கடைசியில்தான் லேட்டா வந்துட்டு இருந்த, இப்போ தினமும் லேட்டா வர ஆரம்பிச்சுட்ட? இதென்ன வீடா, இல்லன்னா லாட்ஜா? பொறுப்பான பையன்னு கொஞ்சம் அமைதியா இருந்தால் உன் இஷ்டத்துக்கு நடந்துப்பியா?

“வேளா வேளைக்கு சரியா சாப்பிடாமல், உடம்பை பாத்துக்காமல் அப்படியென்ன வெளியே சுத்த வேண்டிக் கிடக்கு. வீட்டில் இருக்கும் எங்களுக்கு வயசு ஏறுதா இல்லை இறங்குதா? நாங்களாவது வேளைக்குத் தூங்கணும் என்ற அக்கறை இருந்தால் நீ இப்படி இருப்பியா?

“சரி அதுதான் போகட்டும்னா, ஒரு கல்யாணத்தை பண்ணிக்கோன்னு எத்தனை வருஷமா சொல்லிக்கிட்டு இருக்கேன். உன் வயசு பசங்களுக்கு எல்லாம் கல்யாணம் ஆயிடுச்சு. நீதான் இன்னும் இப்படி சுத்திகிட்டு இருக்க” அவர் தன் போக்கில் புலம்பிக் கொண்டிருக்க, தன் தந்தையின் அருகில் சென்று அமர்ந்தான்.

“என்ன சாமிநாதா… இன்னைக்கு புலம்பல் ஜாஸ்த்தியா இருக்கு. வழக்கமா அம்மா இப்படி கிடையாதே” தந்தையின் காதைக் கடித்தான்.

“உன் ப்ரண்ட் அபய் வந்து கல்யாணப் பத்திரிகை வச்சுட்டு போனான். அவனோட தங்கச்சியைத் தான் நீ விரும்பறன்னு கொஞ்சம் எதார்த்தமா சொல்லிட்டேன். அப்போ ஆரம்பிச்சவதான் இன்னும் நிறுத்தலை” அவர் தன் கவலையைச் சொல்ல, அவரைப் பரிதாபமாக ஏறிட்டான்.

“இதை ஆரம்பிச்சு வச்ச துரோகி அவன் தானா? இங்கே வர்றேன்னு ஒரு வார்த்தை என்கிட்டே சொல்லவே இல்லையே…” யோசித்தவன் வேகமாக தன் அலைபேசியை எடுத்துப் பார்த்தான். அதில் அபயிடமிருந்து வந்திருந்த மூன்று அழைப்புக்களைப் பார்த்தவன் தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

“என்னடா ஆச்சு?”.

“சாயங்காலம் எனக்கு அவன் போன் பண்ணியிருக்கான். எனக்கு இருந்த வேலையில் அதை நான் கவனிக்கவே இல்லை” புலம்பினான்.

“இங்கே நான் புலம்பிகிட்டே இருக்கேன், அங்கே அப்பாவும் புள்ளையும் என்ன காதைக் கடிச்சுகிட்டு இருக்கீங்க?”.

“இல்லம்மா… சும்மாதான்… நீங்க கண்டினியூ பண்ணுங்க”.

“அது வந்துடா…” சாமிநாதன் துவங்க,

“சாமிநாதா, இந்த கண்டினியூ அவங்களுக்கு… உங்களுக்கு இல்லை. அம்மா யூ கண்டினியூ” அவர் சொல்வதை வெகு ஆர்வமாக கவனிக்கும் முனைப்புக்கு அவன் செல்ல, இரு பெரியவர்களும் அவனை வித்தியாசமாகப் பார்த்தார்கள்.

“டேய், நான் என்ன கதையா சொல்லிக்கிட்டு இருக்கேன்? தெருவில் பாக்குறவங்க முதக்கொண்டு, சொந்தக்காரன் வரைக்கும் யாருக்கும் பதில் கொடுக்க முடியலை. இதில் நாக்குமேலே பல்லைப் போட்டு என்னவெல்லாம் கேக்கறாக. பெத்த புள்ளையா இருந்தால் இப்படித்தான் இருப்பியான்னு கேக்கும்போது…” அவர் மூக்கை உறிஞ்ச,

“என்னது…? யார் எங்க அம்மாகிட்டே இப்படிக் கேட்டது? நீங்க யாருன்னு மட்டும் சொல்லுங்க, அவங்களை உண்டு இல்லைன்னு பண்ணிடறேன். நான் ஒத்தையா நின்னப்போ எவனாவது ஒரு வாய் சோறு போட்டிருப்பானா?

“அந்த சொந்தங்களுக்கு என்மேல் இப்போ மட்டும் என்ன அக்கறையாம்? என் புள்ளைக்கு எதை எப்போ செய்யணும்னு எனக்குத் தெரியும், நீ மூடிகிட்டு போ’ன்னு அவங்ககிட்டே சொன்னீங்களா இல்லையா?” ஆவேசத்தில் முகத்தில் இருந்த கர்ச்சீப்பை உருவியிருக்க, இருவருமே பதறிப் போனார்கள்.

“தீனா, மூக்கு என்னப்பா இப்படி வீங்கியிருக்கு… என்ன ஆச்சு? யார்கிட்டே சண்டைக்குப் போன?” சாமிநாதன் அதிகமாக பதற, அவர்கள் கலங்குவதில் வருத்தம் கொண்டாலும், தன் திருமணப் பேச்சு மாறிப் போனதில் பெரும் ஆசுவாசமாக உணர்ந்தான்.

“சண்டைக்கெல்லாம் போகலை சாமிநாதா. ஆபீஸில் ஒரு சின்ன பிரச்சனை, அதை தீர்க்கப்போய் தெரியாமல் அடி பட்டுடுச்சு” அவர்களை சமாதானம் செய்ய முயன்றான்.

“உங்க ஆபீசில் அத்தனைபேர் இருக்கும்போது, நீதான் அதைத் தீர்த்து வைக்கப் போகணுமா? எப்படி வீங்கி இருக்கு பார். அகிலாண்டம்… உப்பு போட்டு கொஞ்சம் சுடுதண்ணி வை போ…” கணவன் சொல்லும் முன்பே அவர் வெந்நீர் வைக்கச் சென்றிருந்தார்.

“அம்மா, அதெல்லாம் எதுவும் வேண்டாம்… ஏற்கனவே ஐஸ் கட்டி வச்சுட்டேன்” அவனது மறுப்பை எல்லாம் அவர் கண்டுகொள்ளவே இல்லை.

அவர் வெந்நீர் கொண்டு வந்து வைக்க, சாமிநாதன் ஒரு கர்ச்சீப்பில் ஒற்றி அவனது மூக்கில், மெல்லிய வீக்கம் படர்ந்திருந்த முகத்தில் வைத்து விட்டார். அந்த அன்பை மறுக்கும் தைரியம் அவனுக்கு வரவில்லை.

அகிலாண்டாமோ ஒரு படி மேலே போய், கண்களில் நீரோடு அவனுக்கு இரவு உணவை தானே ஊட்டி விட, “அம்மா, இப்போ எதுக்கு

கண்ணெல்லாம் கலங்கிட்டு? இதெல்லாம் ஒண்ணுமே இல்லை” அவரது இடக்கரத்தைப் பற்றிக் கொண்டான்.

“என்ன நடந்தது? எப்படி ஆச்சு?” மகன் எந்த சிக்கலிலும் சிக்கிவிடக் கூடாதே என்ற பரிதவிப்பு மட்டுமே அவரிடம் இருந்தது.

அவரிடம் சொல்லவில்லை என்றால் இன்னும் அதிகம் கவலைப்படுவார் என்பதால், நிவேதாவுக்கு தான் உதவியதைச் சொல்ல, அவன் சொல்லி முடிக்கவே, அவன் நெற்றி முடியை ஒதுக்கி, அவன் நெற்றியில் அழுத்தமாக ஒரு முத்தம் வைத்தார்.

அதில் தன் மகனை ஒரு நல்லவனாக வளர்த்திருக்கிறோம் என்ற சந்தோசம் தொனிக்க, அவர் மடியிலேயே படுத்துக் கொண்டான்.

“இன்னும் ஒரு இட்லி சாப்பிடுப்பா” ஆதூரமாக உரைக்க, தந்தையின் மடியில் காலை நீட்டிக் கொண்டவன், இன்னும் வசதியாகப் படுத்துக் கொண்டான்.

“எனக்குப் போதும்மா...” உரைத்தவன் விழி மூட, சில நிமிடங்கள் அப்படியே படுத்திருந்தவன் நேரமாவதை உணர்ந்து எழுந்து தன் அறைக்குச் சென்றான். பெரியவர்களும் அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு தங்கள் அறைக்குச் சென்றார்கள்.

தன் அறைக்கு வந்தவன், அபய்க்கு வாட்ஸ்ஆப் செய்துவிட்டு, தன்னை ஒரு செல்பி எடுத்தவன், ஜனனிக்கு அதை அனுப்பிவிட்டு, காலையில் பேசுவதாகச் சொல்லிவிட்டு அலைபேசியை அணைத்து விட்டு, அப்படியே உறங்கிப் போனான்.

காலையில் எழுகையில் முகத்தின் வீக்கம் நன்றாகவே குறைந்திருக்க, வலியும் கொஞ்சமாகத்தான் தெரிந்தது. தாமதமாக எழுந்ததால், முதலில் குளித்து கிளம்பியவன், அதன் பிறகே அலைபேசியை ஆன் செய்தான். ஆன் செய்தவுடனேயே ஜனனியிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும் குறுந்தகவல் வந்திருக்க, அதையெல்லாம் பார்க்க நேரமின்றி கிளம்பினான்.

நிச்சயம் பேருந்து அவனை விட்டுவிட்டு சென்றிருக்கும் என்பதால், அன்று அவனது பைக்கையே எடுத்துச் சென்றான். ஜனனி தனக்காக காத்திருப்பாள், தனக்கு என்ன நேர்ந்தது எனத் தெரியாமல் பரிதவித்து போயிருப்பாள் என மனம் உரைத்தாலும், நேரமின்மை அவனை எதையும் செய்ய அனுமதிக்கவில்லை.

வேகமாக அலுவலகத்துக்குள் நுழைந்தவன், தன் இருக்கையில் அமர, அவனிடம் என்ன நடந்தது எனக் கேட்க வேண்டி, ஜனனி தன் சுழல் நாற்காலியில் அப்படியே திரும்ப, அவன் இருக்கையில் அமர்ந்த அடுத்த நொடி, அவன் அருகே அமர்ந்திருந்த நிவேதா அவனை தாவி அணைத்திருந்தாள்.

ஒரு சதவீதம் கூட அவள் இப்படிச் செய்வாள் என்பதை எதிர்பாராத தீனா திகைக்க, அந்த காட்சியைப் பார்த்த ஜனனி அதிர்ந்து போனாள்.

“நிவேதா… கண்ட்ரோல் யுவர் செல்ஃப்…” அடிக்குரலில் உறுமியவன், பட்டென அவள் கரத்தை விலக்கி விட்டான். அவன் அமர்ந்த பிறகு அவள் அணைத்ததால், அவளது செய்கை அங்கே இருந்த மற்றவர்களுக்குத் தெரியாமல் போனது.

அவனோ அடுத்த நொடியே தன் இருக்கையில் இருந்து எழுந்து, ஜனனிக்கு பக்கத்தில் காலியாக இருந்த மாதும்மையின் இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டான். தன் காதலியின் முன்னால், அவளது இந்த செய்கை, ஜனனியை எவ்வளவு காயப்படுத்தும் என்று அவனுக்குத் தெரியாதா என்ன?

ஜனனியே இதுவரை இவ்வளவு உரிமையாக அணைத்தது இல்லை என்கையில், அவளால் இதை தாங்கிக் கொள்ளவே முடியாது என்பதாலேயே அவள் அருகில் சென்று அமர்ந்து கொண்டான்.

“ரியலி தேங்க்ஸ் எ லாட்… நேற்றே இதை நான் சொல்லியிருக்கணும், ஆனா இருந்த பதட்டத்தில் சொல்ல மறந்துட்டேன். அதான் இப்போ சொன்னேன்” அவள் குரலில் உண்மையான நன்றி நிரம்பி வழிந்தது.

“நடந்ததை நேற்றைக்கே மறந்துடுன்னு சொன்னேன்... என் இடத்தில் யாராக இருந்திருந்தாலும் அதைச் செய்திருப்பாங்க. சோ... இதை பெரிசாக்க வேண்டாம்” அடக்கமாகவே உரைத்தான்.

“கண்டிப்பா ஹெல்ப் பண்ணியிருப்பாங்க, ஆனால் நீங்க செய்த அளவுக்கு செய்திருக்க மாட்டாங்க”.

“இங்கே என்ன நடக்குதுன்னு கொஞ்சம் எனக்கும் சொல்றீங்களா?” எவ்வளவு மறைத்தாலும் ஜனனியின் குரலில் சிறு கோபமும், ஆற்றாமையும் நிரம்பி வழிந்தது.

“என்ன தீனா... நீங்க இன்னும் இவங்ககிட்டே சொல்லவே இல்லையா?” நிவேதா வியந்து போனாள்.

சட்டென அவளது குறும்பு தலை தூக்க, “நேற்று ரக்ஷனுக்கும், தீனாவுக்கும் பயங்கர போட்டி...” ஒரு மாதிரி இழுத்து நிறுத்தியவள், ஜனனியைப் பார்க்க, அவள் முகத்தில் குழப்பத்தின் ரேகைகள் உற்பத்தியானது.

“ஜானு, அவ சும்மா விளையாடறா, நம்பாதே...”

“என்ன நம்பாதே... ரக்ஷன் என்னை டேட்டிங் கூப்பிட்டப்போ, நீங்க அங்கே வந்து அவனோட போறியா? இல்லன்னா என்னோட வர்றியான்னு கேட்டீங்களா இல்லையா? நான் உங்களோட வர்றேன்னு சொல்லிட்டு, உங்களோட தானே வந்தேன்... ஆமாவா இல்லையான்னு அவர்கிட்டேயே கேளுங்க” ‘சிக்கினாயா...’ என அவனிடம் நாக்கு துருத்தி அழகு காட்டியவள், ஜனனி தன்னைப் பார்க்கையில் முகத்தை அப்பாவியாக வைத்துக் கொண்டாள்.

நிவேதாவின் கண்களில் வழிந்த குறும்பை சரியாகவே கண்டுகொண்டாள் ஜனனி. இல்லையென்றாலும் தீனாவைப் பற்றி அவளுக்கு முழுதாகவே தெரியும் என்பதால், அவனைப்பற்றி தவறாகவெல்லாம் என்ன முடியவில்லை.

“தீனா, ரக்ஷன் வேலையை ரிஸைன் பண்ணிட்டான்னு ஆபீஸில சொல்றாங்க. இவ சொல்றதுக்கும், அதுக்கும் ஏதோ சம்பந்தம்

இருக்குன்னு புரியுது, ஆனா என்னன்னு தெரியலை, நீங்களே சொல்லுங்க” அவன் பக்கம் திரும்பி அமர்ந்தாள்.

“என்னங்க இது... இப்படி புஸ்ஸுன்னு ஆக்கிட்டீங்களே. நீங்க தீனாகிட்டே சண்டை போடுவீங்கன்னு எதிர்பார்த்தேன், எல்லாம் போச்சா...” புலம்பியவள் தன் வேலையைப் பார்க்க திரும்பிக் கொண்டாள்.

அவள் அவ்வாறு செய்யவே, ஜனனியின் பக்கம் திரும்பியவன், நடந்தவற்றை அவளிடம் உரைக்க, அவன் மூக்கையே பார்த்திருந்தாள்.

“ரொம்ப வலிக்குதா?” அவனிடம் கேட்க, அவள் கண்களில் இருந்த பரிதவிப்பில் குளிர்காய அவனது காதல் கொண்ட மனம் விரும்பியது.

“ஆமா, ரொம்ப வலிக்குது...” அப்பாவியாக முகத்தை வைத்துக்கொண்டு அவன் உரைக்க, அவளால் தாங்க முடியவில்லை.

அவன் முகத்தைப் பற்றி அருகே இழுத்தவள், என்னவோ அவனுக்கு அப்பொழுதுதான் அடி பட்டாற்போல், உதடு குவித்து அவனது மூக்கில் ஊத, தனக்கு வெகு அருகில் குவிந்திருந்த இதழ்களையே பார்த்திருந்தான்.

‘இப்படி ஊதினால் வலி போகும்னு இவளுக்கு யார் சொல்லிக் கொடுத்திருப்பா?’ அவனது மனம் தீவிரமாக எண்ணிக் கொண்டது.

“இப்படி ஊதுறதுக்குப் பதிலா, அந்த உதட்டால் ஒற்றி எடுத்தாலாவது வலி போகும்...” தன் இதழ்களை அவள் இதழ்களுக்கு அருகாக நகர்த்தியவன், அவன் செய்கையை உணர்ந்து அவள் பட்டென விலகிக் கொள்ள முயல, அவள் முகத்தை இப்பொழுது அவன் விலகாமல் பற்றிக் கொண்டான்.

“தீனா, ஆபீஸ்ல வச்சு என்ன விளையாட்டு இது?” அவளது மூச்சுக்காற்று தாளம் தப்ப, அவளால் அந்த உணர்வை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

“இன்னும் வலிக்குது...” நிவேதாவுக்கு கேட்டுவிடாமல் இருக்க வேண்டி குரலை இன்னும் தாழ்த்த,

“இந்த சென்சார் எல்லாம் ஆபீஸ்க்கு கிடையாதா? நானும் எவ்வளவு நேரம்தான் வேலையைப் பாக்கற மாதிரியே நடிக்கறது?” நிவேதா வேகமாகத் திரும்பி கேட்க, தீ சுட்டாற்போல் இருவரும் விலகினார்கள்.

‘ஏன் இப்படி?’ அவன் சலிப்பாய் பார்க்க, ஜனனி தன் லேப்ட்டாப் பக்கம் திரும்பியவள், இவள் பக்கம் பார்க்கவே இல்லை.

“ஏதோ என்னால் முடிந்தது” நிவேதா சொல்லிவிட்டு சிரிக்க,

“உனக்கு உதவி பண்ணதுக்கு, உன்னால் என்ன முடியுமோ அதை ரொம்ப சிறப்பா பண்ணிட்டம்மா ஒத்த ரோசா…” அவன் சொல்ல, இரு பெண்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

அவளோ விடாமல்… “என்னோட எஸ் இன்னும் எஸ் தான்…” அவள் அதை சீரியசாகச் சொல்ல, அதையும் அவர்கள் விளையாட்டாகவே எடுத்துக் கொண்டார்கள். ஆனால் அது அப்படி இல்லை என்பதை இரண்டே நாட்களில் நிரூபித்தாள்.

அந்த டீமில் மட்டுமல்லாமல், தீனா அங்கே இருந்த மொத்த அலுவலகத்துக்குமே ஒரு ஹீரோ போன்று இருக்க, ஒரு ஆண்மகனால் நிச்சயம் அப்படி இருக்கவே முடியாது என்று சத்தியம் செய்யாத குறையாக நம்பினாள் நிவேதா.

தனக்கு நல்லவனாக, நேர்மையாளனாக இருக்க விரும்பும் எவனும் மற்றவரிடம் நடிக்கத் தேவையே இருக்காது என்பது அவளுக்குத் தெரியவில்லை. தீனாவின் கொள்கை அதுதான், எந்த சூழ்நிலையிலும் தனக்கு தான் நல்லவனாக இருக்கவே அவன் விரும்புவான்.

நிவேதா தன் எண்ணத்தை ஜெனிட்டாவிடம் உரைக்க, “நீ தீனாவைப் பற்றி புரிஞ்சுகிட்டது அவ்வளவுதான். தேவையில்லாமல் நீ எதுவும் வம்பில் சிக்கிக்காதே அவ்வளவுதான் சொல்வேன்” அவள் சொல்ல, அவளை அசால்ட்டாக நோக்கினாள்.

“இந்த ஆம்பளைங்க எல்லாமே சந்தர்ப்பம் கிடைக்குற வரைக்கும்தான் நல்லவங்க, இதுக்கு அந்த தீனாவும் விதி விலக்கில்லை என்பதை உங்களுக்கு நான் நாளைக்கே ப்ரூவ் பண்றேன். நான் செஞ்சதை நடத்திக்

காட்டிட்டேன்னா, எனக்கு அடுத்து வர்ற ப்ராஜெக்டையும் நீங்களே செஞ்சுத் தரணும். டீல் ஓகேயா?” அவள் சவால்விட, கொஞ்சம் கூட யோசிக்காமல் அதை ஏற்றுக் கொண்டாள்.

நிவேதாவின் செய்கையை நுஹாவிடமும், ஜனனியிடமும் அவள் சொல்லவும் மறக்கவில்லை. ஜனனிக்கு நிவேதாவின் செய்கையை எண்ணி கோபம் எழுந்தாலும் அதை அவளிடம் வெளிப்படுத்தவில்லை. தனக்கு இதில் விருப்பமில்லை என்பதையும், தீனா அவளிடம் நிச்சயம் தோற்கப் போவதில்லை என்பதையும் ஆணித்தனமாக உரைக்க, இதற்காகவே அவனை வீழ்த்தும் வேகம் பிறந்தது.

அவளது திட்டத்துக்கு, அவளது வீட்டு ஆட்கள் பெங்களூருக்கு ஒரு திருமணத்துக்குச் சென்ற சூழ்நிலையை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டாள்.

தீனா தனக்கு உதவி செய்ததற்கு நன்றிக் கடனாக, அவனுக்கு விருந்து கொடுக்க விரும்புவதாகச் சொல்லவே, முதலில் அவன் அதை மறுக்கவே செய்தான். ஆனால், அவள் விடாமல் அழைக்கவே அதற்கு ஒத்துக் கொண்டான்.

“என்னோட நன்றிக்கடனை தெரிவிக்க நான் விரும்பறேன், இதை நீங்க ஏத்துக்கலைன்னா எனக்கு ரொம்ப மனசுக்கு கஷ்டமா இருக்கும். நீங்களும் நானும் மட்டும் தான்... எங்க வீட்டில் கூட எல்லாரும் ஊருக்குப் போயிருக்காங்க” அவளது வார்த்தைகளில் அவனைத் தூண்டிலில் சிக்க வைக்கும் வசீகரம் இருக்க, அதற்குமேலே அவன் மறுக்கவில்லை.

அவன் அவளது வீட்டுக்கு வருவதாக ஒத்துக்கொண்ட உடனேயே மற்றவர்களுக்கு அழைத்து விஷயத்தைச் சொல்லிவிட்டாள். அதுவும், தான் தனது வீட்டில் யாருமில்லை, அவனும் அவளும் மட்டுமே எனச் சொன்ன பிறகே சம்மதம் சொன்னான் எனத் தெரிவிக்க, குழம்பிப் போனார்கள்.

நுஹா, ஜெனிட்டா கூட அவனை தங்கள் வீட்டுக்கு அழைத்த பொழுது வெகுவாக தயங்கிய பிறகே அவர்கள் வீட்டுக்கு வர ஒத்துக் கொண்டான். அதுவும் அவர்களது பெற்றவர்கள் அழைத்த பிறகே வந்தான். அப்படிப்

பட்டவன், அவளது வீட்டுக்குச் செல்கிறான் என்றால்... மறுநாளுக்காக அனைவருமே காத்திருந்தார்கள்.

மாலை நெருங்க நெருங்க அனைவருக்குமே சிறு டென்ஷன் உதயமானது. அவன் கிளம்பிவிட்டேன் எனச் சொன்ன உடனேயே மற்றவர்களுக்கு வீடியோ கால் செய்தவள், மற்றவர்கள் அனைவரும் பார்க்குமாறு வாசலுக்கு நேராக அதை செட் செய்தாள்.

“ஏய், தேவையில்லாமல் இந்த விளையாட்டெல்லாம் வேண்டாம்...” மற்றவர்கள் சொன்னதை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

“அதான் நீங்க எல்லாம் அவருக்கு தானே சப்போர்ட் பண்றீங்க, நொஸ்க்கட் வாங்கினால் நான்தானே வாங்குவேன், பிறகு என்ன? எங்கே அவரோட சாயம் வெளுத்துடுமோன்னு உங்களுக்கெல்லாம் பயம்” அவர்களது வாயை அடைத்தாள்.

சற்று நேரத்தில் அவளது வாசலில் அழைப்புமணி ஒலிக்கப்பட, வேகமாக சென்று கதவைத் திறந்தவள் அப்படியே அதிர்ந்து நின்றுவிட்டாள். கூடவே வீடியோ அழைப்பின் மூலமாக அதைப் பார்த்துக் கொண்டிருந்த மற்றவர்களுக்கு அப்படி ஒரு சிரிப்பும், நிம்மதியும் ஒருங்கே எழுந்தது.

அனைவருமே அந்த வீடியோ அழைப்பை துண்டித்திருந்தார்கள்.

## பகுதி – 18.

தனக்கு முன்னால் கும்பலாக நின்ற, தீனா, சுதிர், காதர், சபரியை சத்தியமாக நிவேதா அங்கே எதிர்பார்த்திருக்கவில்லை. கண்டிப்பாக தீனா மட்டுமே தனித்து வருவான் என அவள் எதிர்பார்த்திருக்க, அவன் இப்படி வந்து நிற்பதை அவளால் நம்பவே முடியவில்லை.

இவர்கள் அனைவரும் ஒன்றாக வந்ததைப் பார்த்துவிட்டுத்தான் நுஹா, ஜெனிட்டா இருவரும் தங்களது அழைப்பை துண்டித்திருந்தார்கள். சொல்லப்போனால் அவ்வளவு சிரிப்பாக கூட இருந்தது. அப்படியென்ன அவளுக்கு பிடிவாதம் என்று எண்ணிக் கொண்டார்கள்.

“என்ன நிவேதா, வா... வான்னு கூப்பிட்டுட்டு இப்போ வாசலோட நிக்க வச்சு பாத்துட்டு இருக்க?” அவன் கேட்க, வேறு வழியின்றி அவர்களை வரவேற்றாள்.

அவள் வாங்கி வைத்திருந்த இரண்டு பிசாக்களை அனைவருமாக சேர்ந்து உண்டவர்கள், “என்னம்மா இதுதான் உன் ட்ரீட்டா? இவனும் ட்ரீட்ன்னு சொன்ன உடனே ஆர்வமா வந்தா, இப்படி பண்ணி வச்சிருக்கியே” அவர்கள் கேட்க, இவள் என்ன சொல்வதாம்?

“அட விடுங்கடா... நான்தானே உங்களை கூட்டி வந்தேன், போற வழியில் உங்களுக்கு என்ன வேணுமோ வாங்கித் தர்றேன், இப்போ கிளம்பலாம். போய் வண்டியை ஸ்டார்ட் பண்ணுங்க” அவர்களை அனுப்பியவன் நிவேதாவின் பக்கம் திரும்பினான்.

அவனது பார்வையில் இருந்த கோபத்தில் அப்படியே நடுங்கிப் போனாள். அவனிடம் இப்படி ஒரு கோபத்தை அவள் நிச்சயம் எதிர்பார்க்கவே இல்லை.

“வந்த அன்னைக்கே நீ ஒரு விளையாட்டுப் பிள்ளைன்னு நான் முடிவு பண்ணிட்டேன். ஆனா அந்த விளையாட்டுத்தனைத்தை விஷப்பரீட்சையா கூட செஞ்சு பார்ப்பன்னு எதிர்பார்க்கலை. நீ என்னதான் முயற்சி செய்தாலும், நான் நானாகத்தான் இருப்பேன்.

“இதையே நீ இன்னொருத்தன்கிட்டே செஞ்சிருந்தா என்ன நடந்திருக்கும் என ஒரு நிமிஷம் யோசிச்சுப் பார், நீ செய்ததின் விளைவுகள் உனக்கே தெரியவரும்.

“இதுக்கு மேலே நீ எதையாவது செய்ய முயற்சி பண்ண... அன்னைக்குதான் நீ எங்க டீமில் இருக்கும் கடைசி நாளாக இருக்கும், புரிஞ்சதா? நான் சும்மா வாய் வார்த்தையா மட்டும் செய்ய மாட்டேன், செஞ்சும் காட்டுவேன்...” வெகு அழுத்தமாக கேட்க, அந்த குரலை மீறும் தைரியம் அவளுக்கு இந்த ஜென்மத்தில் வரவே செய்யாது.

மறுநாள் அலுவலகத்தில் அவர்கள் டீம் மெம்பர்கள் அனைவருமே அவளை ஓட்டித் தள்ள, அவர்களது முகம் பார்க்கவே அவளால்

முடியவில்லை. அதன் பிறகு, இப்படியான முட்டாள் தனங்களில் ஈடுபடக் கூடாது என முடிவெடுத்துக் கொண்டாள்.

அதற்குமேலே அவர்களையெல்லாம் கவனிக்க நேரமின்றி, அபய்யின் திருமண வேலைகளில் ஈடுபடத் துவங்கினான். கூடவே அபயின் கோபத்தையும் சேர்த்தே சந்தித்தான் என்றே சொல்லலாம்.

தங்கையை வைத்துக் கொண்டு அண்ணன் திருமணம் செய்வதில் அவனுக்கு அவ்வளவு வருத்தம் இருந்தது. "நீயெல்லாம் லவ் பண்றேன்னு வெளியே சொல்லிடாதடா. உன்னையெல்லாம் நம்பி... ச்சே போடா, ஒரு அண்ணனா என்னோட நிலை உனக்கு புரியவே போவதில்லை" அவ்வளவு வருத்தம் கொண்டான்.

"உன் தங்கச்சி தான்டா இன்னும் பதில் சொல்லவே இல்லை" அவன் உரைக்க,

"போடாங்... நான் ஏதாவது சொல்லிடப் போறேன். நிஜமாவே நீ என் தங்கச்சியை கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைக்கறியா இல்லையா?" அவன் கேட்க, அப்படியே அதிர்ந்து போனான்.

இதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என தனக்குள் சொல்லிக் கொண்டான். நாட்கள் அதன் போக்கில் நகர, அபயின் திருமண நாளும் நெருங்கியது.

அபய்க்கும் மாதும்மைக்கும் அன்று திருமண வரவேற்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. எத்தனையோ விதமான போராட்டங்களுக்குப் பிறகு, மாதும்மையோடு அவள் குடும்பமும், அவனுமே போராடி அந்த திருமண ஏற்பாட்டை செய்திருந்தார்கள்.

அவையெல்லாம் ஜனனிக்கும் தெரிந்திருந்தாலும், தன் அண்ணனுக்கு திருமணம் என்பதில் அவளுக்கு அவ்வளவு சந்தோசம். சொல்லப்போனால் அவளது திருமணம் முடிந்த பிறகுதான் திருமணமே செய்து கொள்வேன் என்று இருந்தவனை, மாதும்மையின் மனது மாறுவதற்கு முன்னர் திருமணம் செய்துகொள்ளச் சொல்லி பிடிவாதமாக நின்றவள் ஜனனிதான்.

பிரபாவதிக்கும், கலாவதிக்கும் கூட இதில் சம்மதம் இல்லை என்ற பொழுதும், சூழ்நிலை இவ்வாறாக அமையவே அவர்களும் சம்மதம் சொல்லியிருந்தார்கள். அதன் பிறகே இந்த திருமணத்தை நடத்துவது என முடிவெடுத்தார்கள்.

நண்பனின் திருமண வரவேற்புக்கு வந்த தீனாவின் கண்கள் அவசரமாக இங்கும் அங்கும் சுழன்று அவளைத் தேடியது. வழக்கமான தேடல்தான்… தான் எங்கே இருந்தாலும் அவள் அங்கே இருக்க வேண்டும் என மனம் எதிர்பார்க்குமே… அப்படியான தேடல்.

பேருந்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, தான் இருக்கும் இடத்தில், தன் கண் பார்வையில் எப்பொழுதும் அவளை வைத்திருக்கவே விரும்புவான். அதேபோல் இங்கேயும் அவளை கண்கள் எதிர்பார்த்து ஏங்கியது. அவள் கண்களுக்கு சிக்காமல் போக்கு காட்ட, கொஞ்சம் சோர்ந்து போனான்.

நண்பர்கள் கூட்டம் அவனை அழைப்பதையோ… தங்களுடன் இருக்குமாறு பணிப்பதையோ சட்டை செய்யும் நிலையில் அவன் இல்லை. உடனடியாக அவள் தன் கண் பார்வையில் விழ வேண்டும் என்பது மட்டுமே நினைவில் இருந்தது.

இன்று என்ன உடையில் இருப்பாள் மனம் கேள்வி கேட்க, மடையா இன்று அவள் அண்ணனின் திருமண வரவேற்பு… அப்படி இருக்கையில் வழக்கமான உடையிலா இருப்பாள்? மனம் எதிர் கேள்வி கேட்க தேடலை தொடர்ந்தான்.

விதம் விதமான மாடல் உடைகளில் அவளைப் பார்த்திருக்கிறான். இன்றுவரை புடவையில் அவளை அவன் பார்த்ததே இல்லை. எனவே எதிர்பார்ப்பு அதிகளிருந்தது. அவனை அதிக நேரம் சோதிக்காமல், அவள் தரிசனம் கொடுத்தாள். கண்களை அந்த கூட்டத்தில் அலைய விட்டிருந்தவன்… படிகளில் இறங்கி வந்தவளைப் பார்த்து இமைக்கவும் மறந்தான்.

கண்ணன் ஊதா வர்ண சில்க் காட்டன் புடவை மேனியை தழுவியிருக்க… அதில் ஆங்காங்கே பதித்திருந்த கற்கள் இரவு விளக்கின் ஒளியில்

டாலடிக்க... வந்தவளைப் பார்த்து சுவாசிக்க கூட மறந்து அவளையே பார்த்திருந்தான்.

அவளோ அவனை கவனிக்காமல்... சற்று பரபரப்பாக இருந்தாள். அவளைப் பார்த்த நொடியே அவளது பரபரப்பை உணர்ந்து கொண்டான்.

அவளோ, "ச்சே... இந்த அம்மா செய்யிறது கொஞ்சம் கூட சரியே கிடையாது. வேணும்னே..." அதற்கு மேல் எண்ணவும் பிடிக்காமல் தலையை உதறிக் கொண்டவள்... சற்று புருவம் நெரிய யாரையோ தேடினாள்.

முன்னர் இருந்த தாயாக இருந்திருந்தால், நிச்சயம் உறுதியாக அதை எண்ணியிருப்பாள். ஆனால் இப்பொழுது இருப்பது தன்னை கொஞ்சம் விட்டுக் கொடுக்க தயாராக இருக்கும் தாய் என்பதால் அதை அழுத்தமாக பற்றிக் கொள்ளவும் முடியவில்லை.

தீனாவோ, தன்னைச் சுற்றிலும் இருக்கும் ஆட்களின் நினைவு கொஞ்சம் கூட இல்லாமல் அவள்மீது வைத்திருந்த பார்வையே கொஞ்சம் கூட மாற்றிக்கொள்ள முடியாம் நின்றிருந்தான்.

எப்போதும் அவளை கவனிப்பான்தான்... ஆனால் அப்பொழுதெல்லாம் மற்றவர் கவனம் தங்கள் மீது விழுந்துவிடக் கூடாது என மிகுந்த கவனமாய் இருப்பான்.

சொல்லப் போனால் அவன் பார்ப்பது அவளுக்கு கூட தெரிந்துவிடக் கூடாது என கவனமெடுப்பான். இன்று இந்த நொடி அனைத்தும் தகர்ந்து போயிருந்தது.

நண்பர்களை விட்டு தனியாக தூரமாக வந்துவிட்டதால் அவனை கவனிப்பார் இங்கே யாரும் இல்லை. அது அவனுக்கு வசதியாகப் போயிற்று.

அவளது மையிட்ட விழிகள் எப்போதும் அவனை வசீகரிக்கும். ஆனால் இன்று அவள் விழிகளில் வீழ்ந்து மூழ்கிவிட தவித்தது அவன் உள்ளம்.

ப்ளோட்டிங்கில் அவள் புடவையை விட்டிருக்க புடவையின் வேலைப்பாடுகள் அனைத்தும் அவனை அடித்து வீழ்த்தியது. இதழில்

தீட்டியிருந்த உதட்டுச் சாயமும்... தீவிரமாக சிந்திக்கையில் அவள் வழக்கமாகச் செய்யும் மேனரிசம் வேறு அவனை பாடாய் படுத்தியது.

‘என்னதான் பண்ணாலும் இந்த பழக்கத்தை மட்டும் விடவே மாட்டேங்கறா. மனுஷனை உசுரோட புதைக்கணும்னே இப்படி செய்வா போல’ அவனிடம் ஒரு அனல்மூச்சு எழுந்தது.

இடது இதழோரம் நாவை பற்களுக்கிடையில் கடித்தவாறு அவள் நின்ற நிலை... “ஹப்பா... ஆண்டவா... இந்த குட்டச்சி இவ்வளவு ஹாட் பீசாசாசா...” வலக்கரத்தை தன் நெஞ்சில் வைத்து அழுத்திக் கொண்டான். அவளது அழகு எப்பொழுதுமே அவனை ஆட்டி வைக்கும், இன்று மொத்தமாக தலைகீழாக கவிழ்த்தது.

மனதின் அடியாழத்தில் புதைத்து வைத்திருந்த சில உண்மைகள்... உணர்வுகள் பீறிட்டு மேலெழ அவனால் அந்த உணர்வின் கனத்தை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

மூச்சுக்காற்றுக்கு அவனது நுரையீரல் தவிக்க, சட்டென மூச்சுவிடத் துவங்கினான். அதன் பிறகுதான் இவ்வளவு நேரமாக தான் மூச்சுவிட மறந்து நின்றதையே உணர்ந்தான்.

அந்த நொடியில் உணர்ந்து கொண்டான்... இந்த உலகில் எந்த பெண்ணையும்... ஏன் அது உலக அழகியாகவே இருந்தாலும் இவளைத் தவிர வேறு யாரையுமே மனைவியாக தன் மனம் ஏற்காது என்ற உண்மை அப்பட்டமாகப் புரிந்தது.

அப்படி வேறு பெண்ணை மணப்பதாக இருந்திருந்தால் எப்பொழுதோ மணந்திருப்போம் என்பதையும்... பார்த்த எல்லா பெண்களையும் தான் ஏன் தவித்து வந்தோம் என்பதையும் உணர்ந்தான். இதற்கு மேலே சிந்திக்க எதுவும் இல்லை என முடிவெடுத்தவன், சற்றும் தாமதிக்க விரும்பவில்லை.

அவளை நோக்கி அவன் செல்ல… அவ்வளவு நேரமாக பார்வையை சுழற்றிக் கொண்டிருந்தவள்… இவனைப் பார்த்தவுடன் முகம் மலர்ந்து, தன் தேடலை நிறுத்தினாள். அவள் செய்கையைப் பார்த்தவன், ‘என்னய்யா தேடினாள்?’ தன் இதயத்தை தடவிக் கொண்டான்.

கூடவே, ‘தீனா, கண்ட்ரோல்… கண்ட்ரோல்…’ தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். “இங்கதான் இருக்கீங்களா… பைக்கில் தானே வந்திருக்கீங்க… அவசரமா வீட்டுக்குப் போகணும்… சீக்கிரம் வாங்க…” அவன் பதிலை எதிர்பாராமல் பார்க்கிங் ஏரியாவை நோக்கி நடந்தாள்.

‘டேய் ஆண்டவா… ஏதோ முடிவு பண்ணிட்ட போல…’ வாய்விட்டு சன்னமாக முனகியவன் அவள் பின்னால் விரைந்தான்.

“என்ன? ஏதாவது சொன்னீங்களா?” அவள் கேட்க, அவன் மறுப்பாக தலை அசைத்தான்.

“சரி, உங்க வண்டி எங்கே…?” கேட்டவள் அவனை ஏறிட, “அதோ அங்கே…” கைநீட்டி வண்டி இருக்கும் இடத்தை சுட்டினான்.

“அவசரமா போகணும்னு சொல்லிகிட்டு இருக்கேன்… என்னை என்ன வேடிக்கை பாத்துட்டு இருக்கீங்க?” அவள் அவசரத்தில் இருக்கவே அவனது பார்வை மாறுபாட்டை எல்லாம் உணரும் நிலையில் இல்லை.

அப்படியே கண்டு கொண்டாலும் அதைப்பற்றி அவள் பெரிதாக கவலைப்படவும் போவதில்லை. அவன் பார்வைகளைப் பற்றி அவளுக்கு தெரியாதா என்ன?

“ஜனனி…” அவன் ஒரு மாதிரி ஆழமான குரலில் அழைக்கவே… அவ்வளவு நேரமாக டென்ஷனில் இருந்தவள் அந்த நிலையிலும் அவனது குரல் மாறுபாட்டை சட்டென உணர்ந்து கொண்டாள்.

“என்ன?” தாயின்மேல் இருந்த கோபத்தில் சலிப்பாக கேட்க வந்தவள்… சற்று தடுமாற்றமாகவே கேட்டாள். இத்தனை மாதங்களாக அவனுடனேயே இருந்து வேலை பார்க்கும் அவளுக்கு அவனைப்பற்றி தெரியாதா என்ன?

இத்தனை மாதங்களில் அவனது ஓரவிழிப் பார்வைகள்… அவனது உடனிருப்பு… கேலி, கிண்டல், அடாவடி மெல்லிய உரிமைகள் கூட அவளுக்குத் தெரியும். அப்படி இருக்கையில் இந்த குரல்… அவள் இதுவரை அறிந்திராதது எனவேதான் அவளால் சட்டென கோபம் கொள்ள முடியவில்லை.

இரண்டு நிமிடங்களுக்கு முன்னர், தான் இப்படி இலகுவாக உணர்வோம் என அவள் அறிந்திருக்கவில்லை. அவன் இந்த நேரம் வழக்கமான கேலியில் இறங்கியிருந்தால் அவனை விட்டுவிட்டு வேறு யாரிடமாவது உதவி கேட்டிருப்பாள்... ஆனால் இது...

அவள் அவனை ஏறிட... “நீ இன்னைக்கு ரொம்ப அழகா இருக்க...” அதே ஆழமான குரலில் உரைத்தவன்... தன் பைக்கை எடுத்துவரச் சென்றான்.

“வா... ஏறு...” அவன் விலகிச் சென்றதும் தெரியாமல்... பைக்கை எடுத்து வந்ததும் தெரியாமல் அவள் இருக்க... அவளைக் கலைத்தது அவன் குரல்.

“என்ன திடீர்னு...?” சில நாட்களாக அவன் தன் மன உணர்வுகளை வெளிப்படுத்துவது தெரிந்தாலும், சில நிமிட அமைதியான பயணத்தை அவளே கலைத்தாள்.

“வழக்கமா இருக்குறதை விட இன்னைக்கு ரொம்ப அழகா இருந்த சொன்னேன்...” தன் பைக் கண்ணாடியை அவளைப் பார்க்கும் வண்ணம் சரி செய்தவன் அதன் வழியே அவளைப் பார்த்தான்.

‘இல்லை... சும்மா...’ என அவன் தடுமாறினால் அவனிடம் மேற்கொண்டு கேட்கலாம்... நான் உண்மையைச் சொன்னேன் என சொல்லும் அவனிடம் என்ன சொல்லதாம்?

அவள் தன்னிடம் மேலே ஏதாவது கேட்பாளா என அவன் எதிர்பார்க்க... கண்ணாடி வழியே அவனைப் பார்த்தவள்... அவன் விழிகளில் எதையோ தேடினாள்.

முன்பு நூற்றில் ஒன்றாக இப்படி ஒரு சூழல் ஏற்பட்டால் சட்டென தன் பார்வையை மாற்றிக் கொள்ளும் அவன் இன்று தன் விழிகளைப் படிக்க அவளை அனுமதித்தான். அவன் பார்வை சொன்ன சேதியை அவளால் தாங்கிக் கொள்ள முடியாமல் போனது.

“என் அவசரம் புரியாமல்... ரோட்டைப் பாத்து வண்டியை ஓட்டுங்க...” இதயம் படபடக்க தன் பார்வையை கண்ணாடியில் இருந்து பிரித்துக் கொண்டாள்.

“என் கைதான் வண்டி ஓட்டுது... காது ஃப்ரீயாதான் இருக்கு...” அவன் சொல்ல... பிடிமானத்துக்காக அவன் தோளில் வைத்திருந்த கரம் மெல்லிய நடுக்கத்துக்கு உள்ளானது. எங்கே அதை அவன் கண்டு கொள்வானோ எனத் தோன்றவே... சற்று அழுத்தமாக கரத்தை பதித்துக் கொண்டாள்.

இன்னைக்கு இவருக்கு என்ன ஆச்சு? எண்ணமிட்டவளின் மனமும் மெல்லியதாக நடுங்கியது.

அதற்குமேல் அவர்கள் பேச வாய்ப்பு இல்லாமல் அவள் வீடு வர... வேகமாக இறங்கி வீட்டுக்குள் ஓடினாள். தாய் மறந்து வைத்துப் போன பரிசுப் பொருளை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் சுத்தமாக அற்றுப் போனது.

தாயின் அறைக்கு செல்ல வேண்டியவள்... அதை மறந்து, நேராக தன் அறைக்குச் சென்று படுக்கையில் அமர்ந்து கொண்டான். அவனது பார்வையும் பேச்சும் அவளை செயல்பட முடியாமல் என்னவோ செய்தது.

அவர் அதை சாதாரணமாக சொல்லவில்லை... அவளது மனம் அடித்துச் சொல்ல ஒருவித எதிர்பார்ப்பில் அவள் மனம் விம்மியது.

‘ஒருவேளை இது என் மன பிரம்மையாக இருக்குமோ?’ அவளால் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. அவன் கொஞ்சம் இல்லை ரொம்பவே விளையாட்டு பிள்ளைதான்... ஆனால் தன் மன உணர்வுகளோடு விளையாடுவான் என நம்ப முடியவில்லை.

இத்தனை மாதங்களில் அவன் ஒருமுறை கூட இப்படி தன்னிடம் உரையாடியதில்லை. தன்னிடம் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் அவ்வளவு கவனம் எடுப்பவன்... இன்று தடுமாற்றம் கொண்டு சொல்லிவிட்டான் எனவும் எண்ண முடியவில்லை.

தடுமாற்றத்தில் வார்த்தைகளை விடுபவனாக இருந்திருந்தால் அது எப்பொழுதோ நேர்ந்திருக்கும்... அவள் தன் நினைவில் மூழ்கி இருக்க... ஹாலில் இருந்தவனோ... அவளை எதிர்பார்த்து காத்திருந்தான்.

அவன் மனமும் ஒரு நிலையில் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தது. இதற்குமேல் ஒரு நாள் கூட காத்திருக்க முடியாது என்னும் நிலை. இன்றே

அவளிடம் தன் மனதில் இருப்பதை எல்லாம் சொல்லியே ஆக வேண்டும் என்ற எண்ணம்.

அவளுக்கும் தன்னை பிடிக்கும் என அவனுக்கு தெரியும். ஆனாலும் இத்தனை நாளாக, தன் நண்பனுக்காக மட்டுமே விலகி இருந்தான். இப்பொழுதும் அந்த காரணம் அப்படியேதான் இருக்கிறது. ஆனால் அவனால் சொல்லாமல் இருக்க முடியாது. தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டது போதும் எனத் தோன்றியது.

தன் எண்ணம் வலுப்பெற, அவசரம் என சொல்லிவிட்டு வந்தவள் எந்த ஒரு ஓசையும் காட்டாமல் இருக்கவே… “ஜனனி…” குரல் கொடுத்தான்.

அவனது அழைப்பை கேட்டாலும் எழுந்து செல்ல முடியாத நிலையில் இருந்தாள்.அவளது பதில்குரல் வராமல் போகவே இதற்குமேல் முடியாது என அவளது அறையை நோக்கிச் சென்றான்.

அவனுக்கு வேலை வைக்காமல் அறைக்கதவு திறந்தே இருக்க… மெதுவாக, தயக்கமாக அறைக்குள் நுழைந்தான். ஒரு பெண்ணின் அறைக்குள் அவள் அனுமதியின்றி செல்வது தவறு’ என புத்தி உரைத்தாலும், அதையெல்லாம் கேட்கும் நிலையில் அவன் இல்லை. அவன் அறைக்குள் வரவே படுக்கையில் இருந்து எழுந்து நின்றாள்.

இருவரின் பார்வையும் ஒன்றை ஒன்று கவ்விக் கொள்ள… ஒரு கனமான அமைதி அங்கே சூழ்ந்தது. யார் முதலில் பேசுவது என இருக்க… அந்த சூழலின் கனத்தை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

தன்னிடம் முதன் முதலில் காதலைச் சொன்னவன்… அதன் பிறகு முற்றிலும் விலகியிருக்க, அவள் அந்த காதலை ஏற்காமல் போனாலும்… அவன் வீசிச் சென்ற வார்த்தைகள் அவள் மனக் குளத்தை கலக்கியிருந்ததே. அதை அவன் அறியாமல் போனதேன் என எத்தனையோ நாள் கலங்கி இருக்கிறாள்.

எங்கே அவன் முன்னால் தன் மன உணர்வுகள் வெளிப்பட்டுவிடுமோ என அஞ்சியவள் சட்டென அங்கிருந்து விலகிச் செல்ல முயன்றாள்.

அவள் அவ்வாறு செய்யவே... சட்டென அவள் கரம் பற்றி அவளை தடுத்தவன்... “நான் காதலைச் சொன்னப்போ ஏன் முடியாதுன்னு சொன்ன?” அவன் கேட்க, விழி விரித்து அவனை வெறித்தவள்... தன் காதில் கேட்டதை நம்ப முடியாமல் திகைத்தாள்.

‘இவருக்கு எதுவும் மறக்கவில்லையா?’ அவளால் நம்ப முடியவில்லை. இத்தனை மாதங்களாக ஒரு பார்வையில் கூட பழையவற்றை நினைவு படுத்தியிராதவன்... அவன் மறந்தே போய்விட்டான் என அவள் எண்ணியிருக்கையில், இப்பொழுது இதை வெளிப்படுத்துகையில் அவள் என்ன செய்ய?

“இப்போ எதுக்கு இப்படி பாக்குற? நான் காதலை சொன்ன ஒரே பொண்ணு நீதான்... அதை அவ்வளவு சீக்கிரம் என்னால் மறக்க முடியாது. இப்போ சொல்லு... நான் காதலை சொன்னப்போ ஏன் நீ ஒத்துக்கலை?” அவன் அதே பிடியில் நின்றான்.

“எனக்கு அப்போது பன்னிரண்டு வயசு...” சற்று கோபமாக உரைத்தாள்.

“அதுக்கு?” அவன் நியாயத்தில் விழித்தாள்.

அவள் பதில் சொல்லும் முன்பே... “சரி இப்போ உன் பதிலைச் சொல். இப்போ வளந்துட்ட தானே...?” அவன் அதிரடியாக கேட்க பதில் அவள் தொண்டைக்குள் சிக்கிக் கொண்டது.

‘ஹையோ என்ன இது?’ தடுமாறிப் போனாள்.

அவனோ, பிடித்திருந்த அவள் கரத்தை விலக்காமல்... தன்னை நோக்கி இழுத்து, தன்னோடு அவளை சேர்த்துக் கொண்டான். அவன் பிடியில் இருந்து விலக வேண்டும் என அவள் மூளை உரைப்பதை அவளால் செயல்படுத்தவே முடியவில்லை.

“ம்ஹூம்... இதுக்கு மேல சத்தியமா முடியாது. நான் காதலை சொன்னது சொன்னதுதான்... என்னை கட்டிகிட்டு எனக்கு நீ வாழ்க்கை குடுத்தே ஆகணும். உன்னை பாத்ததில் இருந்து ஒரு ‘புல்’ அடிச்ச மாதிரி தலை கிறுகிறுத்து சும்மா கிண்ணுன்னு இருக்கு” அவளது இணக்கம் அவனை

மெல்லியதாக கிளர்ச்சியடையச் செய்ய, அவளது இடையில் இருந்த கரத்தின் அழுத்தத்தை இன்னும் அதிகரித்தான்.

அவளால் நேராக நிற்கவே முடியவில்லை. அவனது அந்த நெருக்கம், இடையில் தவழும் அவனது முரட்டுக் கரத்தின் திண்மை, கண்களுக்குள் ஊடுருவும் அந்த பார்வை, கால்கள் தள்ளாட அவன்மீதே அழுத்தமாக சாய்ந்து கொண்டாள்.

“ஜனனி... சாரி...” இது எதற்காக என அவள் யோசிக்கையிலையே... அவன் கரங்கள் அவள் இடையை இறுக்க... இதழ்களோ அவள் இதழ்களை அழுத்தமாக தீண்டியிருந்தது.

தீண்டல் மட்டுமா? கிடைக்கவே போவதில்லை என எண்ணியிருந்த ஒன்று கைகளுக்குள் என்ற எண்ணம் அவனை முற்றாக மாற்றியிருக்க, அவள் இதழ்கள் அதற்கான தண்டனையை அனுபவித்தது. தண்டனையா அவை, தண்டனை என்றால் அவளால் எப்படி இந்த அளவுக்கு உருக முடியுமாம்?

அவளது இதழ்களின் சிவப்பை முற்றாக மென்று முழுங்கியவன். அவள் இதழ்களில் முற்றாக மூழ்கிப் போனான். அவளை விட்டு பிரியும் எண்ணமே அவனுக்கு இல்லை.

அவளுக்கோ பேரதிர்ச்சி... இத்தனை நாட்களாக பார்வையில் கூட கண்ணியம் காத்தவன் இன்று தன்னை முற்றாக இதழ் தீண்ட... அவனது அணைப்பும் முத்தமும் அவளை சிதறச் செய்ய, அவள் இதை கொஞ்சமும் எதிர்பார்த்திருக்கவில்லை.

பிடிக்காதவன் என்றிருந்தால் நொடியில் அவனை உதறியிருப்பாள்... அவளது தேகமும் அவனை முற்றாக எதிர்த்திருக்கும். ஆனால் தன்னை தீண்டும் இவன் அவள் மனதுக்குள் வாசம் செய்பவன். அவன் தீண்டலை... மனம் தவறு என சுட்டினாலும்... அதில் மயங்கும் மனதையும், குழையும் தேகத்தையும் அவள் எப்படி அடக்க?

தன் உயிரையே குடிக்கும் அவன் வேகம்... இதழ்கள் வலியெடுத்தாலும் விலகிவிட முடியவில்லை. தன்னில் மூழ்கியிருக்கும் அவன் முகம்... ஒருவித ரசனையில், பரவசத்தில் திளைக்க அவனை எப்படி கலைக்கவாம்?

முதுகில் பிடிப்பின்றி அலையும் அவனது கரங்கள், அவள் பின்னந்தலையில் அடைக்கலமாகி, தன்னோடு இன்னும் இழுத்துக் கொள்ள, அவனது தாடையை தன் கரங்களால் இறுக பற்றிக் கொண்டாள்.

அவள் தேகம் மொத்தமும் வெம்மையாகிப் போன உணர்வு. உடலின் இரத்தவோட்டம் அனைத்தும் தாறுமாறாக பாய, அவனுக்குள் தொலையத் தவித்தது அவளது தேகம்.

அவனை விலக்கிவிட அவளுக்கு ஒரு நொடி கூட ஆகாது… ஆனால் சில நாட்களாக அவளிடம் அவன் யாசிக்கும் விஷயம், அவனாக நிறைவேற்றிக் கொள்கையில் அவன் ஆசையை பாதியில் கலைக்க முடியவில்லை. அவன் கன்னத்தில் இருந்த அவளது கரம் மென்மையாக வருட, அதுவே அவனுக்கு இன்னும் தைரியத்தை அளித்தது.

இத்தனை மாதங்களாக தன்மேல் அவனுக்கு இருக்கும் காதலை சொல்லவே மாட்டானோ என அவள் கொண்டிருந்த ஏக்கமும் வலியும் மாயமாய் மறைய… அவள் கண்களோ அவள் அனுமதியின்றி கலங்கியது. சட்டென கண்ணீர் கன்னத்தில் இறங்க… அவள் இதழ்களில் உப்பு சுவையை உணர்ந்தவன் சட்டென தெளிந்தான்.

அவள் சிறிதாக கண் கலங்கினாலே தாங்கிக் கொள்ளாதவன்… அவள் கண்ணீர் விட்டால்… துடித்துப் போனான்.

வேகமாக அவளை விட்டுப் பிரிய… அதே நேரம் அவளது அலைபேசி இசைக்கவே… வேகமாக அவனை விட்டு விலகி… குளியலறையில் புகுந்து கொண்டாள். அப்பொழுது தாயிடம் பேசும் மனநிலை இல்லை என்றாலும்… அவளுக்கு வேறு வழி இருக்கவில்லை.

வேகமாக அழைப்பை ஏற்றவள்… “மாம்… வந்துட்டே இருக்கேன்…” சொன்னவள்… அவர் என்னவென்று எதிர் கேள்வி கேட்கும் முன்பே அழைப்பை துண்டித்திருந்தாள்.

தன் படபடப்பை அடக்கவே அவளுக்கு சற்று நேரம் பிடித்தது. அங்கே இருந்த கண்ணாடியில் முகம் பார்க்க… கண்மை கலைந்து… உதட்டுச்சாயம்

கரைந்து... அவனது முரட்டுத்தனத்தால் கீழுதடு சற்று தடித்துப் போயிருந்தது.

வெளியே நின்றிருந்த அவனால் அவளது அழுகையை தாங்கிக் கொள்ள முடியவில்லை. “ஜனனி... ஜனனி... ரியலி ஐ’ம் சாரி... ப்ளீஸ் ஓபன் தி டோர்... ஐ’ம் எக்ஸ்ட்ரீம்லி சாரி... சாரி... சாரி...” அவன் விதம் விதமான அழைத்தும் அவள் கதவைத் திறக்காமல் போகவே விடாமல் மன்னிப்பை யாசித்தான்.

“இங்கே இருந்து போங்க...” அவள் கண்ணீர் குரலில் யாசிக்க... தன்னைத்தானே நொந்தவாறு நின்றிருந்தான்.

“நான் போய்டறேன்... ஆனா ப்ளீஸ் நீ அழாதே... அதை என்னால் தாங்கிக்க முடியலை” அவன் கெஞ்ச அதற்கு அவள் பதில் சொல்ல மறுத்தாள். அவள் வருத்தத்தை இன்னும் அதிகரிக்க மனமின்றி அமைதியாக வந்து வெளியே அமர்ந்து கொண்டான்.

சற்று நேரத்தில் தன்னை திருத்திக் கொண்டவள்... இதழ்களில் மெல்லியதாக உதட்டுச்சாயம் பூசிக் கொண்டாள். தாயின் அறைக்கு சென்று, பரிசுப் பொருளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். தன் முகத்தைப் பார்த்தால் இதழ் காயத்தை கண்டுகொள்வான் என்பதால் அவன் முகம் பார்க்க மறுத்தாள்.

அவள் தன் முகம் பார்க்க மறுக்கவே, “ஜனனி...” அவளை அழைக்க...

“கிளம்பலாம்... அம்மா போன் பண்ண ஆரம்பிச்சுட்டாங்க...” உரைத்தவள் வீட்டை பூட்ட... அதற்குமேலே அவளிடம் எதையும் அவனால் பேச முடியவில்லை.

## பகுதி – 19.

அபய்யின் திருமணம் நல்லபடியாக நடந்து முடிய, திருமண ஜோடியை அவர்கள் வீட்டில் விட்டு திரும்பும் வரைக்குமே தீனாவால் ஜனனியை தனியே சந்திக்க முடியவில்லை. அவன் பிடிவாதமாக அவளைச் சந்திக்க முயன்றிருந்தால் முடிந்திருக்கும்.

ஆனால், திருமண வீட்டில் மற்றவர் கவனம் சற்று தங்கள்மேல் திரும்பினாலும் அது நன்றாக இருக்காது என்பதால் பொறுமை காத்தான். பார்வையால் அவளைத் தொடரும் பணியை செவ்வனே செய்ய, அவனது பார்வைகள் தன்னை விடாது தொடர்வது தெரிந்தாலும் அதை அவள் கண்டுகொள்ளவே இல்லை.

மணமகனின் தங்கை என்பதால், மணமேடையிலேயே நிற்பதும், ஐயர் கேட்கும் பொருட்களை பம்பரமாக சுழன்று செய்து கொடுப்பதுமாக இருந்தவளை, அங்கே சென்று தொல்லை செய்யவும் முடியாமல், மன்னிப்பை வேண்டவும் முடியாமல் திணறிப் போனான்.

எப்பொழுது அவள் தனியாக கிடைப்பாள் என அவன் தருணம் பார்த்திருக்க, அந்த சந்தர்ப்பத்தை அவள் அவனுக்குத் தரவே இல்லை. அவளது கீழுதட்டுக் காயம் இன்னும் அப்படியே இருக்க, உதட்டு வீக்கமும் கொஞ்சமும் குறையவில்லை.

நிமிர்ந்து பார்த்து நடந்தால் அந்த காயத்தை மற்றவர்கள் கண்டுகொள்வார்கள் என்பதால், தரை பார்த்தே நடந்தாள். பெரியவர்கள் அனைவருமே கூட சற்று பரபரப்பில் இருந்ததால் அவளை ஊன்றி கவனிக்கும் நேரமும் அவர்களுக்கு இருக்கவில்லை.

இரவில் உறக்கம் வருகிறது என தப்பித்துக் கொண்டவள், மறுநாள் காலையில் மணமேடையிலேயே சுழல, விருந்தினர்களை வரவேற்க, பந்தியை கவனிக்க, மேற்பார்வையிட, மற்றவர்களது தேவையை கவனிக்க என பெரியவர்கள் பிஸியாக இருக்க அனைவரிடமிருந்தும் தப்பித்துக் கொண்டாள்.

ஆனால் அவளது தோழி நுஹாவிடமிருந்து அப்படி தப்பிக்க முடியவில்லை. உதட்டுக் காயமும், வீக்கமும் தெரியாமல் இருக்க, அடர் வர்ணத்தில் உதட்டுச் சாயம் தீற்றிக் கொண்டாலும், அதை நுஹாவின் கண்கள் கண்டுகொண்டது.

தாலிகட்டி முடிந்து, மணமக்களுக்கான விளையாட்டுக்கள் நடந்து கொண்டிருக்க, அங்கே செல்லப்போன ஜனனியை ஓரமாக தள்ளிக்கொண்டு வந்தாள் நுஹா.

“உதட்ல என்னடி காயம்? அதுவும் இப்படி கன்னிப் போகும் அளவுக்கு என்ன ஆச்சு?” அவள் கேட்க, அது எப்படி ஏற்பட்டது என்பதை அவளால் எப்படிச் சொல்ல முடியுமாம்?

‘ஹப்பா... சரியான முரடன், செய்யிற தப்பை ஆதாரம் இல்லாமல் செய்யத் தெரியாது?’ மனதுக்குள் அவனை செல்லமாக திட்டிக் கொண்டவள், தன் கீழுதட்டை வாய்க்குள் இழுத்து சப்பிக் கொண்டாள். அந்த சிறு காயத்தை நாவால் வருட, அந்த வலி கூட இனிமையாக இருந்தது.

அவள் தனக்குள் மூழ்கியிருக்க, “ஏய், நான் கேட்டுட்டே இருக்கேன், நீ என்ன இப்படி நிக்கற? வாயைத் தொறந்து சொல்லுடி” அவளை உலுக்கினாள்.

“அது... நைட் இருட்டுக்குள் பாத்ரூம் போகும்போது சுவத்தில் முட்டிகிட்டேன்” வாய்க்கு வந்த காரணத்தை சொல்லி சம்மாளிக்கப் பார்த்தாள்.

“முட்டிகிட்டாலும் நெத்தியில் தானடி பொடச்சுக்கும், இதென்ன உதட்டில்? ஏதோ பூச்சி கடிச்சதுன்னு சொன்னா கூட கொஞ்சம் ஒத்துக்கலாம், இது...? ஏய்... எந்த வெட்டுக்கிளி கடிச்சது?” தான் முதலில் சொன்னதைக் கேட்டு ஜனனி திருதிருக்கவே, எதையோ யூகித்துக் கொண்டவளாக சீண்டினாள்.

“நுஹா, அப்படியெல்லாம் எதுவும் இல்லை” அடித்துச் சொல்ல முயன்றாலும் குழையும் குரலை என்ன செய்ய?

“ஓ... அதனால்தான் தீனா மேடையவே சுத்தி வந்தாரா? இவ்வளவு இடம் கொடுத்துட்டு மனுஷனை தவிக்க விட்டால் அதுக்கு என்ன அர்த்தம்? ம்” அவளை இன்னும் சீண்ட, அவளுக்கு வெட்கமாகப் போயிற்று.

“நுஹா பிளீஸ்... என்னை எதுவும் கேக்காதே வா போகலாம்” அவளை இழுத்துக் கொண்டு சென்றுவிட்டாள். தீனாவும் பல வழிகளில் முயன்றும் ஜனனியின் முகத்தைக் கூட முழுதாகப் பார்க்க அவனால் முடியவில்லை. காலை கடந்து, மாலை மங்கி இரவும் வந்துவிட, தன் வீட்டுக்கு வந்தவனால் அங்கே இருக்கவே முடியவில்லை.

அவளது சாதாரண அமைதியையே அவனால் தாங்கிக்கொள்ள முடியாதபோது, அவளது கண்ணீரையும், பாராமுகத்தையும் எப்படி தாங்கிக்கொள்ள முடியும்? எப்படியாவது அவளைப் பார்த்தே ஆகவேண்டும் என்ற வேகம்.

படுக்கையில் இருந்து எழுந்தவன், தன் இரவு உடையைக் கூட மாற்றும் பொறுமையற்று, அந்த நினைப்பும் இல்லாமல் அப்படியே கிளம்பிவிட்டான். நேரம் நள்ளிரவைக் கடந்திருக்க, அவளது வீட்டில் உறவினர்கள் நிச்சயம் இருப்பார்கள் என்பதும் புரிந்தது.

இந்த நேரத்துக்கு நேராக சென்று அழைப்புமணியை அடித்து எழுப்பினால், யாராக இருந்தாலும் அது சரியான எண்ணத்தை தோற்றுவிக்காது என்பதால், அவர்கள் வீட்டின் பின்பக்கம் சென்றவன், மொட்டைமாடிப் படிக்கட்டில் ஏறி மாடிக்குச் சென்றான்.

தன் அலைபேசியை எடுத்தவன் அவளுக்கு அழைக்க, மூன்றாவது ரிங் போய் முடியும் முன்பாகவே அழைப்பை ஏற்றாள். அழைப்பை ஏற்றவள் அமைதியாகவே இருக்க, “ஜானு, இன்னும் ரெண்டு நிமிஷத்தில் நீ உங்க வீட்டு மொட்டை மாடிக்கு வரலன்னா, மூணாவது நிமிஷம் நான் உன் ரூமுக்குள்ளே இருப்பேன்” உரைத்தவன் அலைபேசியை பட்டென வைத்துவிட்டான்.

அப்பொழுதுதான் உறக்கத்தின் பிடிக்குள் நழுவிக் கொண்டிருந்த ஜனனிக்கு ஒரு நிமிடம் எதுவுமே புரியவில்லை. ‘அவர் ஏன் என்னை மொட்டை மாடிக்கு...’ எண்ணத் துவங்கியவள் அதன் அர்த்தம் புரிய, அடித்து பிடித்து எழுந்து அமர்ந்தாள்.

“காட்... அவர் இங்கே என்ன பண்றார்?” வாய்விட்டே கத்தியவள், தன் போர்வையை உதறிக்கொண்டு எழுந்து ஓடினாள். அவர்கள் வீட்டு மாடியில் அவளது அறை மட்டுமே உள்ளது என்பதால், விருந்தினர்கள் அனைவரும் கீழேயே உறங்கியிருந்தார்கள்.

அது அவளுக்கு வசதியாகப் போய்விட, வேகமாக எழுந்து மாடிக்கு விரைந்தாள். தண்ணீர் தொட்டியில் சாய்ந்தவாறு அவன் நின்றிருக்க, “தீனா, இந்த நேரம் இங்கே எதுக்கு வந்தீங்க? யாராவது பார்த்தால் வம்பா

போய்டும், முதல்ல கிளம்புங்க. எதுவா இருந்தாலும் பிறகு பேசிக்கலாம்" இதயம் திடும் திடுமென முரசு கொட்ட, குரலைத் தாழ்த்தி அவனிடம் படபடத்தாள்.

தான் சொன்னதற்கு அவனிடம் எதிர்வினை எதுவும் இல்லாது போகவே அவனை நிமிர்ந்து பார்க்க, கைகளை நெஞ்சுக்கு குறுக்காக கட்டிக் கொண்டவன், ஒரு காலை சுவற்றில் ஊன்றி, ஒற்றைக் காலில் நின்றவாறு அவளையே அசையாமல் பார்த்திருந்தான்.

"ஏன் அழுத?" அவள் சொன்னதற்கோ, கேட்டதற்கோ எந்த பதிலும் சொல்லாமல், வெகு நிதானமாக அவன் கேள்வி கேட்க, ஒரு நொடி விழித்தாள். தான் எப்பொழுது அழுதோம், எதற்காக அழுதோம் என்பதும் நினைவுக்கு வர, அவனை முறைத்து பார்த்தாள்.

"நீங்க பண்ண வேலைக்கு, அழாமல் சிரிப்பாங்களா?" அவன் ஏன் அதை நினைவு படுத்துகிறான் என அவஸ்தையாக இருந்தது.

"நான் பண்ணது தப்பு, உனக்கு பிடிக்கலன்னா என்னை பனிஷ் பண்ணியிருக்கலாமே. அதை விட்டு... அழுது... என் முகத்தைக் கூட பாக்காமல்... ஏன் பிடிக்கலையா?" நிச்சயம் அவள் பதில் என்னவாக இருக்கும் எனத் தெரிந்துகொள்ள அவன் மனம் தவித்தது.

"இதென்ன கேள்வி...?"

"நான் கேட்டதுக்கு பதில்... புடிச்சிருக்கா? புடிக்கலையா?".

"நீங்க கூப்பிட்ட உடனே இந்த அர்த்த ராத்திரியில் இங்கே வந்து நிக்கறேனே, இன்னுமா உங்களுக்குப் புரியலை?"

"நான் நேரடியாவே கேக்கறேன், ஐ லவ் யூ ஜனனி... பன்னிரண்டு வருஷம் பொறுமையா இருந்த என்னால், இதற்கு மேலே ஒரு பன்னிரண்டு நாள் கூட பொறுமையா இருக்க முடியாது. நீ இவ்வளவு தூரமா நிக்கிறதைக் கூட என்னால் தாங்கிக்க முடியலை.

"படுக்க முடியலை, தூங்க முடியலை, சாப்பிடப் பிடிக்கலை... அவ்வளவு ஏன் இப்படி கையைக் கட்டிக்கிட்டு நிக்கறது சுத்தமா புடிக்கலை" அவளை

விட்டு விலகி இருக்க முடியவில்லை என்ற அவனது உணர்வுகளை அவளிடம் கொட்டிக் கொண்டிருக்க, தடுமாறிப் போனாள்.

“தீனா என்ன இது?” கேட்டவள் அவன் தோளைத் தொட,

“பிளீஸ் ஜானு, கொஞ்சம் விலகியே நில்... இப்போ நான் என் கண்ட்ரோல்ல இல்லை” இமைகளை அழுத்தமாக மூடி, அந்த தண்ணீர் டேங்கில் பின்னந்தலையை சாய்த்துக் கொண்டான்.

“லவ் யூ டூ தீனா...” தன் காதலை யாசித்து நிற்பவனை ஏமாற்ற அவளால் முடியவில்லை. அவள் சொல்ல, பட்டென விழி திறந்தவனின் பார்வையில் வழிந்த காதலின் அளவில் அப்படியே கட்டுண்டு நின்றிருந்தாள். தன் பெண்மையை மதித்து அவன் விலகி நிற்கும் அந்த விதம் கொள்ளை கொள்ளையாய் பிடித்தது.

“இப்போ சொல்லு, ஏன் அழுத?” அதே கேள்வியை அவன் திரும்பக் கேட்க, அவள் என்னவென்று சொல்வதாம்?

“அதுக்கெல்லாம் பதில் சொல்ல முடியாது” அவள் முறுக்கிக் கொள்ள, அவளுக்கு தன்மேல் கோபமா? என அவள் கண்களை ஊடுருவினான்.

“கோபமெல்லாம் இல்லை... அப்படி என்ன முரட்டுத்தனம்? ஊமைக் காயம் கொடுக்கலாம், இதென்ன மத்தவங்களுக்குத் தெரியிற மாதிரி...” அவள் சொல்லிக் கொண்டிருக்க, அவன் கை உயர்ந்து தன் அருகே நின்றவளின் இதழ்களை பூப்போல் வருடியது.

அதில் அவளது பேச்சு தடைபட, “நீ இப்போ பெர்மிஷன் கொடு, காயத்துக்கு மருந்து போடறேன்” அவனது அந்த குரலில் கரைந்தே போனாள். அவளது பார்வை நிலம் நோக்க, அவனது இதழ்கள் அவள் இதழ்களைத் தீண்ட ஏங்கியது.

ஆனாலும் முயன்று தன்னை கட்டுப்படுத்திக் கொண்டவன், “இனிமேல் நீ சொன்னதை ஞாபகம் வச்சுக்கறேன்” அவன் சொல்ல, அவன் கரத்தை மெதுவாக விலக்கினாள்.

“போய் தூங்கு ஜானு...” தன் இரவு பேண்டுக்குள் கரத்தை நுழைத்துக் கொண்டான்.

“நீங்க...?” அவள் இழுக்க,

“ம்ஹும்... இன்னைக்கு என்னால் சுத்தமா தூங்க முடியும்னே தோணலை. எனக்கு உன்னோடவே இருக்கணும் போல இருக்கு. கொஞ்ச நேரம் இங்கே இருந்துட்டு பிறகு கிளம்பிப் போறேன், நீ போ...”.

“தனியா இருந்து என்ன பண்ணப் போறீங்க?” தயங்கி நின்றாள். அவளால் அவனை இப்படியே விட்டுச் செல்ல முடியவில்லை.

“ஆபீஸ்ல உன் பக்கத்து சீட்டில் கொஞ்ச நேரம் உக்காந்து இருப்பேனே, அப்படி... நீ இருக்குற இடத்தில் கொஞ்ச நேரம் இருக்கணும்” அவளையே பார்த்தவாறு சொல்ல, அவள் எப்படி உணர்ந்தாள் என்றே சொல்வதற்கு இல்லை.

நிச்சயம் அவனை அப்படியே அங்கே அவளால் தனியாக விட்டுச் செல்ல முடியாது என்பது மட்டும் அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. இப்பொழுது அவள் தன் அறைக்குச் சென்றால் மட்டும் நிம்மதியாக தூங்கி விட முடியுமா என்ன?

அவனை தவிக்க விட்டு விலகி நிற்பதும் கொடுமையாக இருக்கவே, “இப்போ நான் உங்களை கிஸ் பண்ணா, நிம்மதியா போய் தூங்குவீங்களா?” அவனது அந்த நிலையை உணர்ந்தும் உணராமல் நடிக்க அவளால் முடியவில்லை.

“அதை பண்ணிட்டு, இப்படி பண்ணிட்டோமேன்னு நீ ஃபீல் பண்ண மாட்டியா?” அவன் கேட்க, அவளது ஒரு நொடி மௌனமே அவளது மனநிலையை உணர்த்த, மென்மையாக புன்னகைத்துக் கொண்டான்.

“நீ வேணும்... ஆனா உன்னைக் கஷ்டப்படுத்திட்டு எதுவும் வேண்டாம்” அவன் உறுதியாகச் சொல்ல, பட்டென அப்படியே தரையில் அமர்ந்துவிட்டாள். இது எப்படியானக் காதல் என அவளுக்குப் புரியவில்லை.

அந்த நேரத்திலும் தனக்காக பார்க்கும் அவனது மனம், கண்கள் மெல்லியதாக கலங்கிப் போனது. “நீங்க இப்படியெல்லாம் பேசினா

எனக்கு அழுகை வரும்” அவள் சொல்ல, அவள் அருகே மண்டியிட்டு அமர்ந்து கொண்டான்.

“உன்னை ரொம்ப சந்தோஷமா வச்சுக்கணும்ன்னு தான் உன்னை விரும்பறேன். நானே உன்னை கண் கலங்க வைத்தால்... ம்ஹூம்... என்னால் உன் கண்ணீரைப் பாக்க முடியாது ஜானு” ஈரத்தில் பளபளக்கும் அவளது விழிகளைப் பார்த்தவன் வருத்தமாக உரைக்க, அதுவே அவள் கண்ணீரை இன்னும் அதிகரித்தது.

தன் அருகே அமர்ந்திருந்தவனை இழுத்து தன் மடியில் படுக்க வைக்க, அவள் இழுப்புக்குச் சென்றவன் அவள் செய்கையை நிச்சயம் எதிர்பார்க்கவே இல்லை. “ஜானு...” அவன் தயக்கமாக இழுக்க,

“இதுக்கு நான் கொஞ்சம் கூட ஃபீல் பண்ணவே மாட்டேன். ரொம்ப சந்தோஷம்தான் படுவேன். நீங்க கொஞ்ச நேரம் பேசாமல் படுங்க” சொன்னவள் அவன் சிகை கோத, அந்த இதத்தில், நிஜமாகவே சற்று நேரத்தில் அசந்து தூங்கிவிட்டான்.

தன் அலைபேசியில் நான்குமணிக்கு அலாரம் வைத்தவள், தானும் அப்படியே கண்ணயர்ந்தாள். ஒருவர் மற்றவரின் அருகாமையில் காமம் கடந்து காதலாக மட்டுமே இருந்தார்கள். அவள் வைத்த அலாரம் அடிக்கும் வரைக்கும் அவர்கள் கண் விழிக்கவே இல்லை.

அவளது அலார சத்தத்தில் முதலில் கண் விழித்தவன் தீனாதான். அலாரத்தை நிறுத்தியவன் நேரம் பார்க்க அதுவோ மணி நான்கைக் காட்டியது. அவள் மடியிலேயே அப்படியே தூங்கியிருப்பதை அப்பொழுதுதான் உணர்ந்து கொண்டான்.

ஒரு கை அவனது நெஞ்சிலும், மறுகை அவனது தலையிலுமாக தாங்கியிருக்க, தலையை ஒருபக்கமாக சாய்த்து அப்படியே உறங்கிப் போயிருந்தாள்.

‘ஹையோ அவளுக்கு கால் வலியெடுக்குமே...’ எண்ணியவன் சட்டென எழ, அவனது அசைவில் கண் விழித்தவள், அனிச்சையாக தன் கழுத்தை தடவிக் கொண்டவள், கால்களை அசைக்க, அதுவோ மரத்துப் போயிருந்தது.

“ஸ்…” கண் விழிக்காமலேயே சன்னமாக அவள் முனக, “ஜானு, ஆர் யூ ஓகே?” அவள் கன்னம் வருடினான்.

“ம்… ஆமா…” உரைத்தவள் எழுந்து நிற்க முயன்றாள். அவள் எழுந்து நிற்க முடியாமல் தள்ளாட, சட்டென அவள் கரத்தைப் பற்றி நேராக நிறுத்தினான்.

“உன்னால் நடக்க முடியுமா? இல்ல நான் தூக்கிட்டுப்போய் ரூமில் விடவா? கொஞ்ச நேரத்தில் என்னை எழுப்பி விடுறதை விட்டு, இப்போ பார்… தேங்க்ஸ் ஜானு… நிஜமாவே இப்படி அசந்து தூங்குவேன்னு நான் நினைச்சே பாக்கலை” அவன் உணர்ந்து உரைக்க, மெல்லியதாக புன்னகைத்தாள்.

“சரி, இப்போ வீட்டுக்குப் போய் நிம்மதியா தூங்குங்க. இன்னைக்கு ஆபீஸ் போக வேண்டாம்” அவள் சொல்ல அமைதியாக கேட்டுக் கொண்டான். அவளை வீட்டுக்குள் அனுப்பியவன் அவள் கதவை தாழ் போட்ட பிறகு தன் வீட்டுக்கு கிளம்பிச் சென்றான்.

அவன் வீட்டுக்குச் சென்ற நேரம் அவனது பெற்றவர்கள் இருவரும் விழித்திருப்பதைக் கண்டவன், சற்று திடுக்கிட்டான். “சாமிநாதா தூங்கல?” கேட்டவன் வீட்டுக்குள் வர,

“நைட் முழுக்க எங்கே போயிட்டு வர்ற? சொல்லாமல் போறது என்ன பழக்கம்?” அவனது தாய் கேட்க, ஆழமாக மூச்செடுத்தவன் ஒரு முடிவுக்கு வந்திருந்தான். அவர்களிடம் இன்று வரைக்கும் அவன் பொய் சொன்னதில்லை, எனவே இப்பொழுதும் அதற்கு முயலவில்லை.

“ஜனனியைப் போய் பாக்கப் போயிருந்தேன்” அவன் சொல்ல, அவன் கன்னத்தில் ஓங்கி அறிந்திருந்தார் அகிலாண்டம்.

“அகிலா… தோளுக்கு மேலே வளந்த பையனை கை நீட்டி அடிக்கிறியே” சாமிநாதன் அவரைத் தடுத்தார்.

“வளந்த பையன் மாதிரி அவன் நடந்துக்கலையே அது உங்களுக்குத் தெரியுதா? நமக்கு ஒரு பொண்ணு இருந்து, இப்படி ஒருத்தன் நைட்

அவளோட இருந்தான்னா அதை நீங்க ஒத்துப்பீங்களா?” ஆத்திரமாக கேட்க, அவரால் பதில் சொல்லவே முடியவில்லை.

‘என்னடா இது?’ என்பதுபோல் அவனைப் பார்க்க, தாய் அடித்ததற்கும் சரி, தந்தையின் கேள்விக்கும் அவன் பதிலைச் சொல்லவில்லை. ஏதோ ஒரு வேகத்தில், அந்த நொடியின் தாக்கத்தில் செய்துவிட்ட செயல், தவறு என இப்பொழுது அவனுக்கும் புரிந்தது.

“அவங்க அம்மா அப்பாவுக்கு இந்த விஷயம் தெரிய வந்தால், அவளைப் பற்றியும், உன்னைப் பற்றியும் அவங்க என்ன நினைப்பாங்க? எந்த தைரியத்தில் நீ அவளோட...”

“அம்மா, மொட்டை மாடியில்தான்...”

“வாயை மூடுடா...” ஹப்பா, அந்த இடமே வெப்பமாகிவிட்ட உணர்வு.

“அகிலா, கொஞ்சம் பொறுமையா இரு”.

“எப்படி பொறுமையா இருக்கச் சொல்றீங்க? இதுக்கு மேலே பொறுமையா எல்லாம் இருக்க முடியாது, இன்னைக்கு நாள் எப்படி இருக்குன்னு பாருங்க, இன்னைக்கே அவ வீட்டுக்கு நாம பொண்ணு பாக்கப் போறோம் அவ்வளவுதான்...” என் முடிவு இதுதான் எனச் சொல்லிவிட்டு எழுந்து சென்றுவிட்டார்.

அவர் செல்லவே, “என்ன தீனா இதெல்லாம்? நீ இப்படிப்பட்டவன் கிடையாதே, பிறகு ஏன்?” அவர் கேட்க, மௌனமாக தலை கவிழ்ந்தான்.

“நேத்து அவளை கொஞ்சம் அப்சட் பண்ணிட்டேன், அதான்...” தன்னிடம் அனைத்தையும் வெளிப்படையாக சொல்லும் மகன், தன் கண்களைக் கூட ஏறிட மறுத்து தடுமாற, அதற்குமேலே அவனிடம் எதையும் கேட்கவில்லை.

“உன் அம்மா ரொம்ப கோவமா இருக்கா” மனைவி சென்ற திக்கை அவர் பார்த்தவாறே சொல்ல, மையமாக தலை அசைத்தான்.

“எந்த அம்மாவும் நிச்சயம் கோவப்படும் விஷயத்தை தானே நான் செஞ்சு வச்சிருக்கேன்” அவன் உண்மையை ஒத்துக்கொள்ள,அவர் அதற்கு மேலே என்ன சொல்வதாம்?

“நீ செய்தது சரியே கிடையாது தீனா” ஒரு தந்தையாக அவனிடம் சொல்லவும் மறக்கவில்லை.

“உங்க பையன் தீனாவுக்கு அது நல்லாவே புரியுதுப்பா. ஆனா ஜனனியோட காதலனுக்கு அது சுத்தமா புரிய மாட்டேங்குதே” அவன் பெருமூச்சு விட, அவனை அசையாமல் பார்த்திருந்தார். அவனது அப்பா என்ற அழைப்பு அவருக்கு அவனது மனநிலையை வெளிச்சம் போட்டுக் காட்ட அவனை கூர்மையாக ஏறிட்டார்.

காதல் ஒரு மனிதனை எந்த அளவுக்கு ஆட்டி வைக்கிறது என தனக்குத் தானே சொல்லிக் கொண்டவர், “மூளை சொல்றதை மனசு எந்த நேரத்திலும் கேட்டாகணும் தீனா. அந்த கட்டுப்பாடு கூட இல்லாமல்...” சிறு கண்டிப்பாய் உரைக்க அவரை அவன் நிமிர்ந்தே பார்க்கவில்லை.

“போ... போய் உன் அம்மாவை சமாதானப்படுத்து” உரைத்தவர் எழுந்துகொள்ள, அவனும் மறுக்காமல் அவர் பின்னால் சென்றான்.

அவர்கள் அறைக்குள் செல்கையில், அகிலாண்டம் அவர்களுக்கு முதுகு காட்டி படுத்திருக்க, அவரை நெருங்கியவன், “அம்மா, ரொம்ப சாரிம்மா, நான் பண்ணது மன்னிக்கவே முடியாத தப்புதான், அதை நான் ஒத்துக்கறேன். எந்த சூழ்நிலையிலும் அவளை கைவிட மாட்டேன் என்ற அதீத நம்பிக்கையால் வந்த தைரியம் அது.

“என் அம்மா அப்பாவுக்கு என் நேசம் தெரியும், எப்படியும் அவளை கைபிடிப்பேன் என்ற தைரியத்தில் அப்படி ஒரு காரியம் பண்ணிட்டேன். இனிமேல் இப்படி நடக்கவே செய்யாது. என்னை நம்புங்கம்மா, நான் என் பிரண்ட்ஸ்சோட வெளியே போயிருந்தேன்னு உங்ககிட்டே பொய் சொல்லியிருக்கலாம்.

“ஆனா அப்படி நான் செய்யலை, ஏன்னா நான் உங்க பையன்ம்மா. எந்த சூழ்நிலையிலும் அவன் வரம்பு மீற மாட்டான், அவன் தப்பு செய்ய

மாட்டான்” அவன் சொல்ல, பட்டென அவன் பக்கம் திரும்பியவர் அவனை முறைத்தார்.

“ஆயிரம்தான் சொன்னாலும் நீ பண்ணதை என்னால் ஏத்துக்க முடியாது. நீ என்கிட்டே சொன்ன விளக்கத்தை அவளோட அம்மா அப்பாகிட்டே சொல்ல முடியுமா?” அவர் கேட்க, அவனது அமைதியே பதிலாகக் கிடைத்தது.

“அதான் நான் என் முடிவை சொல்லிட்டேனே, அடுத்த நல்ல நாளில் அவங்க வீட்டுக்கு நாம போறோம் அவ்வளவுதான்...” என் பேச்சுவார்த்தை முடிந்தது என்பதுபோல் மறுபடியும் படுத்துக் கொள்ள, அதற்குமேல் அவனால் எதுவும் சொல்ல முடியவில்லை.

அடுத்து வந்த இரண்டாம் நாளே நல்ல நாளாக இருக்க, ஜனனியின் வீட்டுக்கு குடும்ப சகிதமாக கிளம்பிவிட்டார்கள். தங்கள் வீட்டுக்கு எந்தவிதமான முன்னறிவிப்பும் இன்றி வந்து நின்ற அவர்களைப் பார்த்து திகைத்து நின்ற கலாவதி, அடுத்த நிமிடமே தெளிந்து அவர்களை வீட்டுக்குள் அழைத்தார்.

“வாங்க... உள்ளே வாங்க, ஏன் வெளியிலேயே நிக்கறீங்க?” அவர் அழைக்கவே, உள்ளே வந்தார்கள்.

“வணக்கம், நாங்க...” அகிலாண்டம் அவர்கள் யாரென சொல்லத் துவங்கினார்.

“ம்... எங்க பொண்ணு சொன்னா. நீங்க எப்போ வருவீங்கன்னு எதிர் பார்த்துட்டே இருந்தோம். நீங்க வீட்டுக்கு வந்ததில் எங்களுக்கு ரொம்ப சந்தோஷம்” அவருக்கு நிஜமாகவே அவ்வளவு சந்தோஷமாகத்தான் இருந்தது.

“எங்களுக்குமே சந்தோஷம்தான், ஆனா இப்படி சொல்லாமல் கொள்ளாமல் வந்ததுக்கு முதல்ல மன்னிப்பை கேட்டுக்கறோம்” எப்படியும் பெண் பார்க்கும் ஒரு நிகழ்வை திடுமென ஏற்பாடு செய்கையில் அதன் டென்ஷன் அவர்களுக்கும் இருக்கும் தானே.

“இதுக்கெல்லாம் மன்னிப்பு கேப்பாங்களா? நம்ம பசங்க சந்தோசம் தானே நமக்கு முக்கியம்” உரைத்தவரது பார்வை தீனாவை அளவிட்டது. முதல் பார்வையிலேயே அவர் முகத்தில் திருப்தியான புன்னகை ஒன்று உதயமானது.

“இவன் தீனா, எங்களோட ஒரே பையன், அவன் உங்க பொண்ணு மேலே பிரியம் வச்சுட்டான். சின்னவங்க ஆசை நியாயமானதா இருந்தால் அதை நடத்திக் கொடுப்பது தானே முறை, அதான் உங்க வீடு தேடி வந்துட்டோம், நீங்க என்ன சொல்றீங்க?” அகிலாண்டம் எந்தவிதமான தடுமாற்றமும் தயக்கமும் இல்லாமல் அவரிடம் கேட்க, கலாவதியால் மறுக்க முடியுமா என்ன?

“சொல்லப்போனால் நீங்க வீடுதேடி வந்ததில் எங்களுக்கு ரொம்ப சந்தோசம். எங்க பொண்ணு ரெண்டு மாசத்துக்கு முன்னாடியே தீனா பத்தி எங்ககிட்டே சொல்லிட்டா. அப்போவே மாப்பிள்ளையை கூட்டி வரச் சொல்லியிருந்தோம். தாமதம் ஆனாலும் நீங்க சரியான நேரத்துக்குதான் வந்திருக்கீங்க” கலாவதியும் தன் சம்மதத்தைச் சொல்ல, அங்கே மகிழ்ச்சி அலை பிரவாகமெடுத்தது.

“எங்க என் மருமகளைக் காணோம்?” அகிலாண்டம் கேட்கவே,

“இதோ, இப்போவே போய் கூட்டி வர்றேன்” எழுந்து சென்றவர் தன் மகளிடம் விஷயத்தைச் சொல்ல, அவர் சொன்னதை அவளால் நம்பவே முடியவில்லை. அவசரமாக குளித்து, புடவை கட்டி அவள் தயாராகி வர, தீனா அவளை இமை கொட்டாமல் ரசித்திருந்தான்.

அவனை நேருக்கு நேராக பார்க்காமலேயே அவன் தன்னை இமைக்காமல் பார்ப்பதை உணர்ந்து கொண்டாள். “ஆண்டவா, இதென்ன எல்லார் முன்னாடியும் இப்படிப் பாக்கறார்?’ அவளுக்கு தடுமாற்றமாக இருந்தது. பெரியவர்களின் முன்னால் வைத்து அவனை மறுப்பதற்கு என்றாலும் பார்க்க முடியவில்லை.

“இவதான் எங்க பொண்ணு ஜனனி...” தன் மகளை அருகே அமர்த்திக் கொள்ள, எங்கே அவர்கள் வீட்டுக்குப் போனதையும், அகிலாண்டம்

இதற்கு முன்பே தன்னை பார்த்திருப்பதையும் சொல்லி விடுவாரோ என ஒரு நொடி பயந்தே போனாள்.

ஆனால் அகிலாண்டம் அப்படிச் செய்வாரா என்ன? அவளை பிடிவாதமாக அழைத்து வரச் சொன்னதே அவர்தான். அப்படி இருக்கையில், அதை எப்படி அவர் செய்வாராம்?

“அம்சமா இருக்கா…” அகிலாண்டம் புகழ, ஜனனி அப்பொழுதுதான் நிம்மதியாக உணர்ந்தாள். கலாவதியின் முகத்தில் அப்படி ஒரு பெருமிதம் நிரம்பி வழிந்தது.

“நீங்க தப்பா நினைக்கலைன்னா, உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லணும்…” அவர் தயங்க, ஜனனியின் முகத்தில் அப்பட்டமாக ஒரு பயம் உதயமானது. எங்கே எதையாவது சொல்லி மறுத்து விடுவாரோ என பயந்து போனாள்.

“எதுவா இருந்தாலும் சொல்லுங்க” அகிலாண்டம் தைரியம் கொடுக்கவே,

“நீங்க அனுமதி கொடுத்தீங்கன்னா, எங்க அக்காவை நொடியில் வரச் சொல்லிடுவேன். நீங்களும் சொந்தக்காரங்களை எல்லாம் கூட்டி வராமல்தான் வந்திருக்கீங்க, ஆனாலும் எனக்கு என்னவோ எங்க அக்கா கூட இருந்தா கொஞ்சம் நல்லா இருக்கும்னு தோணுது” நிச்சயமாக தன் தாய் இப்படி கேட்பார் என்பதை ஜனனி எதிர்பார்க்கவே இல்லை.

அவரை ஆச்சரியமாக திரும்பிப் பார்த்தவள், பட்டென தலை கவிழ்ந்து கொண்டாள்.

“அட இதுக்கு ஏன் இவ்வளவு தயங்கறீங்க? எங்க சொந்தக் காரங்க எல்லாம் தூரத்தில் இருக்காங்க. அதனால்தான் அவங்களை எல்லாம் அழைச்சுட்டு வரவில்லை. அதுவும் இல்லாமல், எல்லாரும் கல்யாணத்துக்கு வரத்தான் விரும்புவாங்க.

“உங்களுக்காவது கூப்பிடும் தூரத்தில் சொந்தம் இருக்கே, தாராளமா கூப்பிடுங்க” அவர் அனுமதி வழங்கவே, வெளிப்படையாக பேசிய அகிலாண்டத்தை கலாவதிக்கு அவ்வளவு பிடித்தது.

“நீங்க பேசிட்டு இருங்க, இப்போ வர்றேன்…” தன் அலைபேசியை எடுத்துக்கொண்டு உள்ளே செல்ல, தீனாவிடம் கண்ணபிரான் பேசத் துவங்க, அவர்களோடு சாமிநாதனும் இணைந்து கொண்டார். ஜனனியிடம் அகிலாண்டம் பேச, அங்கே சில தயக்கங்கள் விடைபெற்றுச் சென்றது.

தீனாவின் பார்வை நொடிக்கொருமுறை தன்னவளைத் தீண்ட, அவன் பார்வையை உணர்ந்தும், மறந்தும் அவனைப் பார்க்க மறுத்தாள். ‘எல்லாரும் இருக்கும்போது என்ன இது?’ மனதுக்குள் மட்டுமே அவளால் புலம்ப முடிந்தது.

“உங்களை அபய் கூட நான் பார்த்திருக்கிறேன் தானே?” தன் சந்தேகத்தை அவனிடம் உறுதிபடுத்திக் கொள்ள கேட்டார்.

“ஆமா, அன்னைக்கு ஹோட்டலில் லஞ்ச் சாப்பிடும் பொழுது பார்த்தோம்” அவனும் அவருக்கு நினைவூட்டினான்.

“உங்களுக்கு எப்படி அவனைத் தெரியும்? வேலைக்குப் போய் பழக்கமா இல்ல…” தன் தாடையை தேய்த்துக் கொண்டார். தன் மகன் அவ்வளவு சீக்கிரம் சில உறவுகளை ஏற்றுக் கொள்ள மாட்டானே என அவருக்கு யோசனையாக இருந்தது.

“நாங்க ஸ்கூல் ப்ரண்ட்ஸ்… பதினொன்றாவது முதல், காலேஜ், பிஜி எல்லாம் சேர்ந்தேதான் படித்தோம். ஒரே இடத்திலேயே வேலையும் பார்க்கிறோம்”.

“அப்படின்னா உங்களுக்கு ஜனனியை முன்னாடியே தெரியும்னு சொல்லுங்க” ஓரளவுக்கு தன் மகளின் காதல் கதையை யூகித்து உணர்ந்து கொண்டார்.

“ம்… ஆமா… ஆனா வேலைக்கு வந்த பிறகுதான் அவளோட பேசி இருக்கிறேன்” ஓரளவுக்கு அது உண்மையும் கூட என்பதால் தயங்காமல் உரைத்தான்.

“ஓ… அபய்யிடம் உங்க விஷயத்தைப் பற்றி ஏற்கனவே பேசிட்டீங்களோ?” மனைவி வரும் பாதையை அவரது கண்கள் மெதுவாக பார்த்துக்

கொண்டது. இந்த உண்மை எல்லாம் தெரிய வரும் வேளையில், கலாவதியின் வெளிப்பாடுகள் என்னவாக இருக்கும் என அவருக்கு பயமாக இருந்தது.

“நான் அவன்கிட்டே பேசிய பொழுதெல்லாம் அவன் சொன்னது ஒரே விஷயம்தான், அது... உங்க வீட்டில் வந்து நேரடியா பேசச் சொன்னான். அதேபோல், அவனது பெயர் எங்கேயும் வெளிப்பட வேண்டாம்னு கேட்டுகிட்டான்.

“சோ... நாங்க நேரடியாக வந்ததாகவே இருக்கட்டும்” அவன் சொல்ல, தங்கள் வீட்டு விஷயம் அவனுக்கு முழுதாக தெரியும் என்பதை அவர் உணர்ந்து கொண்டார். கூடவே தெரிந்த விஷயத்தை வைத்து அவர்களை அவன் தவறாக நினைக்கவில்லை என்பதையும் அவர் புரிந்து கொண்டார்.

“நீங்க புரிஞ்சுகிட்டதில் எனக்கு ரொம்ப சந்தோஷம்” அவர் சொல்ல, அவரது கரத்தை மெதுவாக அழுத்தினான். அதே நேரம் கலாவதி அங்கே வர, அவர்களது பேச்சு அப்போதைக்கு தடை பட்டது.

“அவங்க இப்போ... நொடியில் வந்துடுவாங்க. அதுவரைக்கும் ஏதாவது காபி குடிக்கறீங்களா?” கொஞ்சம் பரபரப்பானார்.

“இல்ல, அவங்க வந்துடட்டும், நீங்களும் வந்து உக்காருங்க” அவர் அழைக்கவே தானும் அவர்களோடு அமர்ந்தார். அடுத்த பத்தாவது நிமிடம், பிரபாவதியும், அபய்யும் அங்கே வர, அவர்களோடு அவனது மனைவி மாதும்மையும் வந்தாள்.

அதைப் பார்த்தவர், வேகமாக எழுந்து வந்தார். “வாம்மா... உங்களை ஒரு நாள் விருந்துக்கு சேர்த்து அழைக்கலாம் என்று நினைத்தேன். இப்போ, இப்படி வர வேண்டியதா போச்சு” சொல்லப்போனால் அவர்கள் இருவரும் இன்று மாதும்மையின் வீட்டுக்கு செல்வதாகத்தான் இருந்தது.

அதற்குத்தான் அவர்கள் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். அந்த நேரம் கலாவதியின் அழைப்பு வரவே, நேராக இங்கே வந்துவிட்டார்கள். அவரது பேச்சுக்கு எந்த பதிலும் சொல்லாமல் அவள் அமைதியாக இருக்க, சூழ்நிலையை சம்மாளிக்க விரும்பினான்.

“அதில் என்ன இருக்கு சித்தி... அதான் இப்போ வந்துட்டோமே, விருந்தே ஆக்கிப் போடுங்க. இருந்து சாப்ட்டுட்டு போறோம்”.

“அதுக்கென்ன ஆக்கிட்டா போச்சு. முதல்ல உள்ளே வந்து மாப்பிள்ளை வீட்டுக் காரங்களை பார், வா... வாக்கா... நீயும் பேசு” அனைவரையும் உள்ளே அழைத்து வந்தார்.

நண்பர்கள் இருவரும் நேருக்கு நேராக பார்த்துக் கொண்டு மெல்லிய புன்னகை மட்டும் சிந்திக் கொண்டார்கள். “அபய், மாப்பிள்ளை தீனா, நம்ம ஜனனி கூடத்தான் வேலை பார்க்கறார். நீ அவரைப் பார்த்திருக்கிறாயா? உனக்குத் தெரியுமா? அவர் கேட்க, சட்டென அவனுக்கு பொய் சொல்ல வரவில்லை.

அவனது நிலையைப் பார்த்த தண்டபாணி, “கலா, முதல்ல அவங்க வந்த வேலையை பார்ப்போம். இந்த பேச்சு எல்லாம் நிதானமா பேசிக்கலாமே” அவரிடம் உரைக்க, அவனுக்கு பெரும் விடுதலை உணர்வே எழுந்தது.

பிரபாவதி தன் மகளின் அருகே வந்தவர், அவளை நெட்டி முறித்தார். ஆயிரம்தான் இருந்தாலும், தான் பத்து மாதங்கள் சுமந்து பெற்ற தன் மகளின் வாழ்வில் நடக்கும் ஒரு மிக்கியமான நிகழ்வில் மூன்றாம் மனுஷியாக வந்து நிற்பது அவருக்கு வருத்தமாகத்தான் இருந்தது.

ஆனாலும், அவளது சந்தோஷத்தில் தானும் கலந்துகொள்ளவே அவர் மனம் விரும்பியது. “சந்தோஷமா...?” அதை அவளிடம் கேட்கவும் செய்தார். அவள் மௌனமாக தலை அசைக்க, அவள் நெற்றியில் இதழ் ஒற்றி விலகினார்.

மகளின் மனதுக்குப் பிடித்த மணாளன் என்கையில், அவருக்குமே அவ்வளவு சந்தோசம். அதிலும் கலாவதி எந்த விதமான பிரச்சனையும் செய்யாமல், உற்சாகமாக அதை நடத்திக் கொடுக்க மனதுக்கு அப்படி ஒரு நிம்மதியாக இருந்தது.

அவர்களது குடும்பம், அவனது படிப்பு, வேலை, அவர்கள் தொழில் என அனைத்தும் அவர்களுக்கு திருப்தியாக, அந்த நிகழ்வு அடுத்த கட்டத்துக்கு நகர்ந்தது.

அகிலாண்டம் அவள் தலையில் பூவைத்து அந்த சம்பந்தத்தை உறுதி செய்ய, திருமணத்துக்கு முந்தினநாள் நிச்சயம் செய்யலாம் என முடிவாக தீனா அவளைப் பார்த்து கண்ணடித்தான். அந்த நிமிடம் அவர்கள் மனம் நிரம்பி வழிந்தது.

“வாழ்த்துக்கள்டா மச்சான்...” அபய் நண்பனை இறுக கட்டிக் கொள்ள, அவர்களுக்குள் அப்படி ஒரு சந்தோசம்.

பகுதி – 20.

ஜனனி பேருந்தில் ஏறிய மறு நிமிடமே, ஜெனிட்டா அவளை இறுக அணைத்து தன் வாழ்த்தை தெரிவிக்க, சிறு வெட்க புன்னகையோடு அதை ஏற்றுக் கொண்டாள். நேற்று நடந்த நிகழ்வின் நிழல் படங்களை அவர்களது வாட்ஸ்ஆப் குரூப்பில் அனுப்பியிருக்க, அவர்கள் அனைவருக்குமே விஷயம் தெரிய வந்திருந்தது.

அன்று தீனா பேருந்தில் வராமல் போகவே, அந்த கூட்டத்துக்கு மத்தியில் அவனை எப்படி எதிர்கொள்வது?’ என்ற அவளது தயக்கம் தேவையற்றதாகப் போயிருந்தது. ஆனாலும் அவனை கண்கள் தேடாமலும் இல்லை.

அவள் அலுவலகத்துக்கு வந்த சற்று நேரத்திலேயே அவனும் வந்துவிட, வழக்கமாக மற்றவர்களுக்கு முன்னால் அவளை நேருக்கு நேராக பார்க்க மறுப்பவன், அன்று அவளை அசையாமல் பார்த்திருக்க, “மச்சான், நாங்க எல்லாம் கூட இங்கேதான் இருக்கோம்” சபரி அவன் கரத்தை சுரண்ட, ஜனனிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

ஆனால் தீனாவோ, “யார் நீ?” என அசராமல் கேட்க, தன் நெஞ்சில் கை வைத்து அதிர்ந்தான் சபரி. அதையெல்லாம் தீனா கணக்கிலேயே கொள்ளவில்லை.

காலையில் டீ பிரேக்குக்கு அவர்கள் கேண்டீன் செல்ல, அவள் குடித்துவிட்டு வைத்திருந்த காபிக் கோப்பையை வெகு இயல்பாக அவன் எடுத்து குடிக்க, நண்பர்கள் முன்னால் எதுவும் சொல்ல முடியாமல் அமைதியானாள்.

‘நண்பர்கள் கவனித்துவிட்டார்களோ?’ அவளது பார்வை வேகமாக சுழல, ‘நாங்க எதையுமே பாக்கலையே’ என்னும் போலி பாவனையில், சிறு நமட்டு சிரிப்பில் அவர்கள் முகங்கள் புன்னகையில் விரிய, தீனாவை முறைக்க முயன்று தோற்றாள்.

தன் அருகே, வழக்கமான இடைவெளியை தவிர்த்து, நெருங்கி அமர்ந்திருந்த அவனிடம், “ஏன் இப்படிப் பண்றீங்க?” அடிக்குரலில் அவனைக் கடிந்து கொள்ள, சாதாரணமாக தோளைக் குலுக்கினான்.

அத்தோடு, “கல்யாணத்துக்கு இன்னும் ஒரு மாசம் கூட முழுசா இல்லை, அதுக்கு முன்னாடி நான் காதலை முழுசா அனுபவிக்கணும்னு நினைக்கறேன். நீயும் இதை என்ஜாய் பண்ணு.

“தாலி கட்டின பிறகு காட்டும் அன்பில் சின்ன கட்டாயம் இருக்கும், ஆனா இது அப்படி இல்லை. முழுசா காதல் மட்டுமே இருக்கும்...” மேஜைக்கு அடியில் அவள் கரத்தை அழுத்தமாக கோர்த்துக் கொள்ள, அவனது வார்த்தைகள் கொடுக்கும் உணர்வை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

“பொறாமைப்பட வைக்கிறாய்ங்களே...” குண்டன் சபரி சத்தமாக புலம்ப, அங்கிருந்த அனைவரும் ‘கொல்’லென சிரிக்க, அவன் கரத்தில் இருந்து பிடிவாதமாக தன் கரத்தை உருவிக் கொண்டாள்.

“தீனா பிளீஸ்...” மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என அவள் மனம் கொஞ்சமாய் தவித்தது. அவளது அந்த தயக்கத்தை அவனும் சரியாக புரிந்து கொண்டான்.

“ஓகே ரிலாக்ஸ்...” அவளைத் தேற்றியவன் அதன் பிறகு அவளைச் சீண்டும் வேலையைச் செய்யவில்லை. அது அவளுக்கு ஒரு பக்கம் நிம்மதியாக இருந்தாலும், அவனது விலகல் ஒரு பக்கம் கொஞ்சம் வலிக்கவும் செய்தது.

புது டீன் தேவேந்தர் அன்று அவளை அழைத்து முக்கியமான ஒரு வேலையைக் கொடுக்க, “மச்சான், உன் காட்டில் அடை மழை அடிக்கப் போகுது போல? சும்மாவே உன்னை கையில் பிடிக்க முடியாது, இதில் அவளுக்கு வேலை வேற வச்சு, உனக்கு லட்டு மாதிரி சான்ஸ்

கொடுக்கறானுங்க பாரேன்” காதர் உரைக்க, அனைவரின் எண்ணமும் அதுவாக இருந்தாலும், தீனாவிடம் எதையும் காட்டிக்கொள்ள முடியாது என்பதால் கிளம்பி விட்டார்கள்.

“அட போங்கடா பொறாமை புடிச்சவங்களா. வேலையை சரியா செய்யலன்னா அதை முடித்து கொடுக்கத்தான் சொல்வாங்க, அதைப்போய் பெருசா பேசிட்டு இருக்கீங்க. முதல்ல இங்கே இருந்து கிளம்புங்கடா. எனக்கு சந்தோஷம்தான்” முன்னதை நண்பர்களிடம் சத்தமாக உரைத்தவன், பின்னதை ஜனனிக்கு மட்டும் கேட்குமாறு உரைக்க, அவன் எதற்காக அப்படிச் சொல்கிறான் என்பது புரிய, இதயம் படபடத்தது.

தேவேந்தருக்கு எப்பொழுதுமே அவன் கொடுத்த வேலையை அன்றைக்கே செய்து முடித்தாக வேண்டும். இல்லையா, குறித்த நேரத்துக்குள் செய்து முடிக்கச் சொல்வான். அலுவலக நேரத்துக்குள் முடிக்க முடியவில்லை என்றால், ஓவர் டைம் பார்த்தாவது முடித்துக் கொடுக்கச் செய்வான்.

இன்று மாலைக்குள் தேவேந்தர் கொடுத்த வேலையை அவளால் முடிக்க முடியவில்லை என்றால், அவள் ஓவர்டைம் பார்க்க வேண்டி வரும் என்பதை மனதில் வைத்துக் கொண்டு அவன் சொல்ல, அப்படி நேர்ந்தால் தீனா அவளுடன் தேங்குவான் என்பதை எண்ணியே அவள் படபடத்தாள்.

மாலைக்குள் வேலையை முடித்தாக வேண்டும் என்ற டென்ஷனில் அவள் வேலை செய்ய, அதுவோ இழுத்துக் கொண்டே சென்றது. சாதாரணமாக அவள் வேலை செய்திருந்தால் கூட முடிந்திருக்குமோ என்னவோ, அவளது படபடப்பும், டென்ஷனும் வேலையில் பிரதிபலிக்க, சற்று தடுமாறிப் போனாள்.

மதிய உணவுக்குப் பிறகு அவள் தன்னை நிலைநிறுத்திக் கொண்டு வேலையில் இறங்க, முக்கால்வாசி வேலையை முடித்துவிட்டாள். இன்னும் இரண்டுமணி நேரம் கிடைத்தால் அந்த வேலை முடிந்துவிடும் என்ற நிலை.

அவள் எதையுமே சீரியசாக செய்கையில் தன் நுனி நாக்கை இடது இதழோரம் பற்களுக்கிடையில் கடித்தவாறு செய்யும் செயலைச் செய்தவாறு தன் மடிக்கணினியில் மூழ்கி இருக்க, அவள் அருகே அமர்ந்திருந்த தீனாவுக்கு பொறுமை பறிபோனது.

இன்னும் இரண்டு நாட்கள் மட்டுமே அவள் அலுவலகம் வருவாள் என்பதால், அந்த மூன்று நாட்களும் ஒரு காதலனாக நிழல்போல் அவளுடனே இருக்க அவன் மனம் பேராவல் கொண்டது. காலைமுதல் மாலைவரை அவளுடனே இருந்தாலும், தங்களைச் சுற்றிலும் அத்தனை பேர் இருக்கையில் சில கட்டுப்பாடுகள் இருக்கும்தானே.

அதுவே அலுவலகத்தில் யாரும் இல்லையென்றால், குறைந்தபட்சம் அவள் இதழ் தீண்டலையாவது பெற்றுவிட அவன் மனம் அலை பாய்ந்தது. ஆனால், ஜனனி வேலை செய்யும் வேகத்தைப் பார்த்தால், நிச்சயம் மாலைக்குள் வேலையை முடித்துவிடுவாள் எனத் தோன்றவே, ஏதாவது செய்தாக வேண்டும் என மண்டையைப் பிய்த்துக் கொண்டான்.

எப்பொழுதுமே அவளது மேனரிசம் அவனைத் தொல்லை செய்யும். சில நேரங்களில் சின்ன குழந்தைகளுக்கு செய்வதுபோல், அவள் கீழ்த் தாடையை தட்டி நாவை அவள் கடித்துகொள்ளச் செய்திருக்கிறான். சில நேரம் தன் விரலால் அவள் நாவை உள்ளே தள்ளி கூட விட்டிருக்கிறான்.

ஆனால் இன்று... அதையெல்லாம் செய்யும் நிலையில் இல்லை, மாறாக ஒரு காதலனாக, வருங்கால கணவனாக, ஒருவித உரிமையுணர்வு தோன்ற, அவள் அருகில் அமர்ந்திருந்தவன், சட்டென அவளது சுழல் நாற்காலியை திருப்பியவன், அவள் என்னவென்று உணரும் முன்பே, அவள் இதழ் நோக்கி குனிந்தவன், இமை சிமிட்டும் நேரத்துக்குள் அதைச் செய்திருந்தான்.

நொடிகளுக்குள் அவன் அந்த இடத்தை விட்டே விலகிச் சென்றிருக்க, தன் இதழும், நாவும் சொன்ன சங்கதி உண்மையா? பொய்யா? எனத் தெரியாமல் குழம்பிப் போனாள். அதே நேரம், நீ உணர்ந்தது பொய்யில்லை என அவள் நாவு எடுத்துரைக்க, அதற்குமேல் அவள் மூளை வேலை நிறுத்தமே செய்திருந்தது.

‘கடவுளே… ஒரு நொடியில் எப்படி? அம்மா…’ இதயம் படபடக்க, ‘யாராவது பார்த்திருப்பார்களோ? இவர் ஏன் இப்படியெல்லாம் செய்யறார்?’ அவன்மேல் கோபமும் கொள்ள முடியாமல், அவன் செய்கையை ரசிக்கும் மனதை அடக்கவும் வழி தெரியாமல் திணறிப் போனாள்.

அதற்குமேல் அவளால் வேலை செய்யவே முடியவில்லை. அதுவரை அடித்த புரோகிராம் கூட எரர் காட்ட, செய்வதறியாமல் குழம்பிப் போனாள். அனைவரும் அவளிடம் சொல்லிக்கொண்டு கிளம்பிவிட, தீனாவை வருகிறானா என்று கூட யாரும் கேட்கவில்லை.

“என்னை வேலை செய்ய விடாமல் பண்ணிட்டு…” தீனாவிடம் அவள் வாய்விட்டே புலம்ப, ஆர்ப்பாட்டமாக சிரித்தான்.

“கடவுளா கொடுக்கும் வாய்ப்பை எல்லாம் வீணாக்க கூடாது. பிறகு சாமிக் குத்தம் ஆயிடும்” அவன் சொன்ன தொனியில் அவளுக்கே சிரிப்பு வந்தது. ஆனாலும் அவன் முகம் பார்க்க ஒருவித நாணம் தடுக்க, அந்த அடாவடிக் காதலனை என்ன செய்வது எனத் தெரியாமல், தன் மடிக் கணினியை வெறித்தாள்.

அதில் இருக்கும் எழுத்துகளை என்னவென்று அவளிடம் கேட்டால், சத்தியமாக அவளால் இப்பொழுது சொல்லவே முடியாது. இத்தனைக்கும் தீனா இப்பொழுது அவளுக்கு முதுகு காட்டி அமர்ந்திருந்தான். அங்கே முழுவதுமே கேமரா கண்காணிப்பு இருக்கும் என்பதால், அத்துமீறி எதையும் செய்துவிட மாட்டான் என்ற நம்பிக்கை இருந்தாலும், சின்ன சீண்டல் செய்யும் அவனை என்ன செய்வதாம்?

மற்ற கேபின்களில் எல்லாம் விளக்குகள் அணைக்கப்பட்டு, ஜனனி, தீனா அமர்ந்திருந்த கேபினில் மட்டும் குழல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. இறுதியாக கிளம்பிய தேவேந்திரனும் அவர்களை ஒரு பார்வை பார்த்தானே தவிர, அவர்கள் அருகே வரவோ, எதையும் கேட்கவோ இல்லை.

தேவேந்திரனும் வீட்டுக்குச் சென்றுவிட, “தீனா, காலையில் சீக்கிரம் வந்து இதை முடிக்கறேன், இப்போ கிளம்பட்டுமா?” அவனுடனான தனிமை அவளை என்னவோ செய்யத் துவங்கவே தயக்கமாக கேட்டாள்.

“காலையில் நாலுமணிக்கு வந்தாத்தான் இதை பத்துமணிக்கு நீ முடிப்ப” அவன் சொல்ல, அது உண்மையும் கூட என்பதால் அமைதியானாள்.

“எனக்கு ஹெல்ப் பண்ணக் கூடாதா?” தன்னை வேலையும் செய்ய விடாமல், உதவியும் செய்யாமல் படுத்துகிறானே என்று இருந்தது.

“ஹெல்ப் பண்ணா நீ உடனே கிளம்பிடுவியே” அவன் அசராமல் உரைக்க, முறைக்க வேண்டி கூட அவன் முகம் பார்க்க அவளால் முடியவில்லை.

“நான் அப்போவே இதை முடிச்சிருப்பேன், நீங்கதான்...”

“நான்தான்... நானேதான்...”

“வேணும்னே பண்ணீங்க அதானே?”

“இல்லன்னு சொல்லவே மாட்டேன்” தன் சுழல் நாற்காலியில் ஆடியவாறே அசராமல் உரைத்தான்.

“லேட்டாகுது தீனா... ஹெல்ப் பண்ணுங்க” அவளால் நிச்சயம் அதைச் செய்ய முடியும். ஆனால் அவன் அருகாமையில் மூளை மொத்தமும் உறைந்து போயிருக்கவே அவனிடம் கேட்பதைத் தவிர அவளுக்கு வேறு வழியும் இருக்கவில்லை.

“தாராளமா ஹெல்ப் பண்றேன், ஆனா இப்போ இல்ல... ஒரு ரெண்டுமணிநேரம் கழிச்சு...” கண்களில் குறும்போடு உரைக்க, அவனிடம் கோபித்துக் கொண்டு தன் மடிக்கணினியின் பக்கம் திரும்பிக் கொண்டாள்.

அவன் பின்னால் நெருக்கமாக வந்து நிற்பது புரிய, “தீனா, சுத்தி கேமரா இருக்கு, தள்ளிப் போங்க” எதையாவது எக்குத்தப்பாக அவன் செய்து, அது ஏதும் சிக்கலில் முடிந்துவிடக் கூடாதே என அவளுக்கு பதட்டமாக இருந்தது.

“ஜானு, ஒரு கேமராவை கூட ஹேக் பண்ணத் தெரியலைன்னா நானெல்லாம் என்ன கம்பியூட்டர் இஞ்சினியர்?” அவளிடம் கேட்க, பட்டென அவன் பக்கம் திரும்பியவள் அவனை நம்ப முடியாத ஆச்சரியத்தில் ஏறிட்டாள்.

“உனக்கு ஏதாவது டவுட் இருந்தால், ரொட்டேடிங் கேமரா ஏதாவது மூவ் ஆகுதான்னு நீயே பார்” அவன் சொல்ல, அங்கே இருந்த அந்தவகை இரண்டு கேமராவும் சிறு அசைவும் இல்லாமல் இருக்கவே இன்னும் அதிகமாக அதிர்ந்து போனாள்.

“தீனா...” அவள் நம்ப முடியாத வியப்பில் அழைக்க,

“ஒரு சின்ன டீல்... அன்னைக்கு தர்றதா சொன்ன முத்தத்தை இப்போ கொடு, அடுத்த அரைமணி நேரத்தில் உன் ப்ரோஜெக்ட்டை நான் முடிச்சுக் கொடுக்கறேன்” அவளது ரோலிங் சேரின் ஆர்மில் கை ஊன்றியவன், அவள் முகத்துக்கு நேராக குனிந்து கேட்க, மெல்லியதாக வியர்த்தாள்.

“தீனா, கல்யாணத்துக்கு முன்னாடி இதெல்லாம் ரொம்ப தப்பு” அவள் மெதுவாக முனகினாள்.

அதே நேரம், “சார்... இன்னும் நீங்க இருக்கீங்களா? ஆபீஸை பூட்ட வேண்டி வந்தேன், நீங்க போக முன்னாடி ஒரு வார்த்தை சொல்லிட்டு போங்க சார்...” செக்கியூரிட்டி உரைக்கவே, வேகமாக அவளை விட்டு விலகி நின்றான்.

அவளுக்கோ பெரும் விடுதலை உணர்வு. “சரிண்ணே... நீங்க டின்னர் சாப்ட்டீங்களா? இல்லன்னா போய் சாப்ட்டு வாங்க, எங்களுக்கு முடிய இன்னும் ஒருமணி நேரமாவது ஆகும்” அவன் சொல்லவே அவரும் சென்று மறைந்தார்.

“ச்சே... ஏகப்பட்ட தடைகள். நீ லேட் பண்ணப் பண்ண, உனக்குதான் நஷ்டம்” அவன் சொல்ல, அவனை தள்ளிவிட்டு தன் இருக்கையில் இருந்து எழுந்து ஓய்வறைக்குச் சென்றாள்.

அவள் எங்கே செல்கிறாள் என்பது அவனுக்கும் புரிய, வேகமாக அவள் பின்னாலேயே சென்றவன், அவள் பெண்கள் ஓய்வறைக்குச் செல்லும் முன்னர் வழியிலேயே அவளை மடக்கிப் பிடித்து, சுவரில் சாய்த்தவன், தானும் நெருங்கி நின்றான்.

“விளையாடாதீங்க தீனா… டைம்தான் வேஸ்ட் ஆகுது” அவள் மெதுவாக முனக, அவள் இரு கன்னம் தாங்கியவன், பெருவிரலால் அவள் இதழை வருட, அவள் இதயம் தாளம் தப்பியது.

“நானும் அதேதான் சொல்றேன்… ரொம்ப நேரம் எடுத்துக்காதே…” தன் மூக்கால் அவள் மூக்கை உரசியவனது கரத்தில் ஒன்று, அவள் இடையில் தவழ, அவளது மூச்சுக்காற்று திணறி வெளியேறியது. அவன் இப்படியெல்லாம் நடந்துகொள்வான் என அவள் நேற்றுவரை எண்ணியது இல்லை.

ஆனால் இன்று, தான் நினைக்காததை எல்லாம் அவன் நடத்திக் காட்ட, அவளால் அதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. அவன் மூக்கோடு மூக்குரசுகையில் அவனது மீசைமுடி அவள் கன்னத்தில் கோலமிட, அவன் மூச்சுக்காற்றின் வெப்பம் அவளுக்குள் அனல் மூட்டியது.

“ஜானு, எனக்காவது பெர்மிஷன் கொடேன்…” இடையில் தவழ்ந்த அவன் கரம், அவளை தன்னோடு சேர்த்து அணைத்தது. அவனாக முத்தமிட்டால் கூட இப்படி உணர மாட்டாளோ என்னவோ, அவளிடம் அனுமதி வேண்டி நிற்கும் பாங்கு, மெல்லியதாக அவள்மேல் சாய, அவள் சுவரோடு இன்னும் அழுந்தினாள்.

அவளுக்கோ மனதுக்குள் பெரும் பிரளயம். அவனுடனான தனிமை, அந்த இதழ் தீண்டல் அத்தோடு முடியாது என்று அவளுக்குத் தோன்றியது. அதே நேரம் இவ்வளவு ஆசையாய் கேட்பவனை ஏமாற்றவும் மனம் வரவில்லை.

இப்பொழுது அவன் இதழ்கள் அவள் காதுமடலை முத்தமிட, அதில் பதியும் மெல்லிய ஈரமும், அழுத்தமும் அவள் கால்களை பலமிழக்கச் செய்தது. அவன் சட்டையை இறுக பற்றிக் கொண்டவள், “தீனா…”

மெல்லியதாக முனக, தன் இதழ்களால் அவள் இதழ்களை மெல்லியதாக உரசினான்.

அவன் அவ்வாறு செய்யவே, அவ்வளவு நேரமாக இறுக்கமாக மூடியிருந்த அவள் இதழ்கள் இரண்டும், அவனை வரவேற்க மெதுவாக திறந்து கொண்டது. அவளது அந்த செய்கை, ஒரு ஆண்மகனாய் அவனை கர்வமடையச் செய்ய, திறந்திருந்த அவள் இதழ்களை தன் விரலால் அழுத்தமாக வருட, அவள் இதயம் தாளம் தப்பியது.

அவன் இதழ்கள் அவள் இதழ்களை நெருங்கி வர, “வேண்டாம் தீனா, எனக்கு ரொம்ப பயமா இருக்கு... இது... இப்போ வேண்டாம்” அவன் இதழ் தீண்டலை சாதாரணமாக பெற்றுக்கொண்டு விலகிவிடும் நிலையில் எல்லாம் அவள் அப்பொழுது இல்லை. எனவேதான் பலவீனமாக முனகினாள்.

“பயமா? ஜானு... என்னைப் பாத்து பயப்படுறியா? இட் ஹொர்ட்ஸ் மீ” அவன் பட்டென அவளை விட்டு விலகி நின்றான்.

அவளுக்கு முன்னால் குறுக்கு நெடுக்காக நடந்தவன், “ஜானு... பொறுமையா இருக்கும் கட்டத்தை எல்லாம் தாண்டி நிக்கறேன் நான். நீ இன்னுமே... என் கண்ணைப் பாத்து சொல், உனக்கு ஒரு கஷ்ட்டத்தை என்னால் கொடுக்க முடியுமா?” தன் தலையை அழுத்தமாக கோதிக் கொண்டான்.

தனது வார்த்தைகள் அவனது மனதை காயப்படுத்திவிட்டது புரிய, “தீனா, நான் என் மனசைப் பத்திதான் சொன்னேன். உங்களைப்பற்றி இல்லை” அவன் முகம் பார்க்க முடியாமல், பட்டென திரும்பி சுவரைப் பிடித்துக் கொண்டாள்.

“அப்படின்னா...?” அவனுக்கு எதுவோ புரிவது போலவும் இருந்தது, புரியாதது போலவும் இருந்தது. இதழ்க்கடையில் மெல்லிய புன்னகை நெளிய, “பதில் சொல்லு...” அவளுக்கு அருகே சுவரில் சாய்ந்து கொண்டவன் அவள் முகத்தையே பார்த்திருந்தான்.

அவனுக்கு முகம் காட்டாமல் மறு பக்கம் முகத்தை திருப்பிக் கொண்டவள், “உங்களுக்கு எதுக்குமே நோ சொல்ற அளவுக்கு என் மனசில் இப்போ

தெம்பில்லை போதுமா...?” ஒரு மாதிரி வெடித்தவள், வேகமாக அங்கிருந்து அகல முயன்றாள்.

அதைப் பார்த்தவன், அவள் கரம் பற்றி தடுத்து, “அப்போ நான் கேக்கும்போது எனக்கு நோ சொல்ல மாட்டியே” அவன் யாசிக்க, அவன் கண்களை ஊடுருவியவள் மறுப்பாக தலை அசைத்தாள். அவள் அவ்வாறு செய்யவே, அவன் முகத்தில் ஒரு அழகான புன்னகை உதயமாக, பற்றியிருந்த அவளது புறங்கையில் முத்தமிட்டான்.

“சரி சீக்கிரம் வா போகலாம்...” அவளுக்கு ஓய்வறையைக் கை காட்டியவன், “நீ கொஞ்சம் ப்ரெஷ் ஆகிட்டு வா... நான் உன் வேலையை என்னன்னு பாக்கறேன்” அவளது இருக்கைக்குத் திரும்பியவன் அவள் விட்டு வைத்திருந்த வேலையைத் தொடர்ந்தான்.

தன்னை கொஞ்சம் திருத்திக் கொண்டவள், தன் இருக்கைக்கு திரும்பி வருகையில் அவளது வேலையை முடித்திருந்தான்.

## பகுதி – 21.

திருமணத்துக்கு இன்னும் சில நாட்களே இருக்க, ஜனனி தன் அலுவலகத்துக்கு விடுப்பு எடுத்துக் கொண்டாள்.

அன்று திருமணத்துக்கு வேண்டிய உடைகளை வாங்க வேண்டி அனைவரும் அந்த ஜவுளிக்கடையில் கூடியிருந்தார்கள். பெரியவர்கள் அனைவரும் உடை வாங்குவதில் மூழ்கியிருக்க, ஜனனியின் கண்கள் இரண்டும் தன்னவனையே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

முகூர்த்தப்புடவை, அவனது உடை, திருமண வரவேற்பு உடை என அவர்கள் அனைவரும் ஒவ்வொன்றாக தேர்ந்தெடுக்க, சிறியவர்களிடம் ஒப்புதல் கேட்டாலும், பெரியவர்களுக்கோ அவர்கள் ஒற்றை பிள்ளைகள் என்பதால் தங்கள் விருப்பத்துக்கு தேர்ந்தெடுக்க அதிகம் விரும்பவே, சிறியவர்களும் அவர்களது விருப்பத்துக்கு விட்டுவிட்டார்கள்.

“ஜனனி, இந்த கலர் ஓகேயா? இந்த டிசைன் எப்படி இருக்கு? உனக்கு பிடிச்சிருக்கா? ஜரிகை முழுக்க இருக்குற மாதிரி எடு, விலையைப் பற்றி

பாக்காதே” அவளை அமர்த்திவைத்து ஒவ்வொன்றாக கேட்க, அதில் அவளால் கலந்துகொள்ளவே முடியவில்லை.

தீனாவுக்கு அப்படியெல்லாம் எதுவும் இல்லைபோல, அந்த புளோரின் ஓரத்தில் போட்டிருந்த இருக்கையில், அபய்யுடன் சேர்ந்து அமர்ந்து எதையோ சந்தோஷமாக அளவளாவிக் கொண்டிருந்தான். சொல்லப்போனால் அவள் பக்கம் சிறு பார்வை கூட பார்க்காமல் அமர்ந்திருந்தான்.

வந்தவுடன் அவளிடம் பேசினான்தான், நலம் விசாரித்தான்தான்... ஆனாலும் அவனது குறும்பு பேச்சுக்கும், ஊடுருவும் பார்வைக்கும், செல்ல சீண்டலுக்கும் மனம் வெகுவாய் ஆசைப்பட்டது.

தீனாவைப் பார்த்து ஒரு வாரத்துக்குமேல் ஆகியிருந்தது. அன்று அலுவலகத்தில் வைத்து சற்று எல்லை மீறியிருந்தவன், அவளுக்கு பயமாக இருக்கிறது எனச் சொன்ன பிறகு முற்றாக மாறியிருந்தான். சொல்லப்போனால் அவனது வேகம் அவளுக்கு ஒருவித பயத்தை கொடுத்திருந்தது.

அதை அவனிடம் வெளிப்படுத்திய பிறகு அவளைவிட்டு முற்றாக விலகியிருந்தான். திருமண முடிவுக்கு முன்னர் அவளிடம் எப்படிப் பழகினானோ அதே நிலை, காலையில் ஒரு குறுந்தகவல், மாலை, இரவிலும் அதே போல் ஒரு செய்தி அவ்வளவே.

அவனது செல்ல சீண்டலிலும், காதலிலும் சில நாட்கள் நனைந்தவளுக்கு, அவனது இந்த விலகலையும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதிலும் அவளது தோழி ஒருத்தி இரண்டு நாட்களுக்கு முன்னர் காட்டிய அந்த வீடியோ வேறு அவளை அதிகம் தொல்லை செய்தது.

அவள், அவனது எந்த வேகத்தைப் பார்த்து பயந்தாளோ, அந்த பயத்துக்கு அவசியமே இல்லை என்பதுபோல் அதற்கு விடையாக அமைந்தது அந்த வீடியோ. ஜனனிக்கு திருமணம் என்பதை அறிந்த அவளது கல்லூரித் தோழி, அவளது அலைபேசிக்கு அழைத்தாள்.

சாதாரண நல விசாரிப்புகளுக்குப் பிறகு, அவளது தோழி தீனாவைப் பற்றி பேசவேண்டும் எனச் சொல்லவே, அவளது செய்கையை வித்தியாசமாகப்

பார்த்திருந்தாள். கூடவே ஏதாவது பிரச்சனையா எனக் கேட்க, “உன் வருங்கால கணவரைப் பற்றிய ஒரு விஷயம், ஹேய் நீ பயப்படுற மாதிரி எதுவும் இல்லை.

“சொல்லப்போனால் இப்படி ஒரு அண்டர்ஸ்டேண்டிங்கான கணவன் கிடைக்க நீ கொடுத்து வைத்திருக்கணும்னு சொல்லத்தான் வந்தேன். அவரை ஏற்கனவே காலேஜில் வைத்து பார்த்திருந்ததால், அந்த வீடியோவைப் பாத்த உடனே உனக்கு அனுப்ப தோணிச்சு.

“ஜஸ்ட் அந்த வீடியோவைப் பார்... பிறகு எனக்கு கால் பண்ணு” சொன்னவள் வாட்ஸ்ஆப்பில் ஒரு வீடியோ லிங்கை அனுப்பியவள் அலைபேசியை வைத்துவிட்டாள்.

தோழி அவ்வளவு சொன்ன பிறகு சற்று தைரியமாகவே வீடியோவைப் பார்த்தாள். அந்த வீடியோவின் துவக்கத்திலேயே, அது ஒரு சைக்காலஜி மாணவர்களின் ப்ராஜெக்ட் விஷயம் சம்பந்தமானது என கிளிப்பிங் ஓட, புருவம் நெரித்தாள்.

பீச் மணலில் நண்பர்களோடு பேசிக் கொண்டிருக்கும் தீனா பார்வைக்கு வர, அந்த மாணவர்களின் ஸெல்ப் இன்றோவுடன் அந்த வீடியோ துவங்கியது, ‘சார், இது ஒரு பெர்சனல் கொஸ்டின். பதில் சொல்ல விருப்பம் இல்லையென்றால் முடியாதுன்னு சொல்லிடலாம்’ அவர்கள் சொல்ல நிமிர்ந்து அமர்ந்தான்.

‘திருமணத்துக்கு முன்னர் ஒரு ஆணும் பெண்ணும் தவறு செய்வது சரியா?’ அவர்கள் கேட்க,

“நீங்களே தப்புன்னு சொல்லிட்டு, சரியான்னு கேட்டால்?” அவன் மடக்க, ஜனனி புருவம் நெரித்தாள்.

‘ரெண்டு பேரோட சம்மதத்தோடு நடந்தால்?’ அவர்கள் கேள்வியை மாற்றி கேட்க,

“எனக்கு அதில் உடன்பாடு இல்லை” மிகத் தெளிவாக உரைத்தான்.

‘ஒரு வேளை, நீங்க காதலிக்கும் பொண்ணே தானாக சம்மதித்தால்?’ அவனை எப்படியாவது மடக்க வேண்டும் என நினைத்தார்கள் போலும்.

“என்மேல் இருக்கும் நம்பிக்கையில் அவ இவ்வளவு தூரம் வர்றான்னா, அந்த நம்பிக்கைக்கு கைமாறா அவளை பாதுகாப்பதுதான் என் ஆண்மைக்கு அழகுன்னு நான் நினைக்கறேன்” பொட்டிலறைந்தாற்போல் அவன் பதில் சொல்ல, ஜனனி உறைந்து போய் அமர்ந்திருந்தாள்.

அவனது பதிலில் அங்கே சுற்றி இருந்தவர்கள் கை தட்ட, தன் தோளைக் குலுக்கியவன், அவர்களைப் பார்த்து தம்ப்ஸ் அப் காட்ட, அவன் தலையில் ஒரு கிரீடம் சூட்டப் பட்டது. அத்தோடு அந்த வீடியோ நிறைவு பெற்றிருக்க, சில நொடிகள் அவளால் தன் கண்கள் பார்த்ததையோ, காதால் கேட்டதையோ நம்ப முடியவில்லை.

தன்னிடம் அவ்வளவு குறும்பாக, தன் உணர்வுகளை கொட்டிக் கவிழ்ப்பவனாக நடந்து கொள்ளும் தீனாவுக்குள், இப்படி ஒரு பொறுப்பான மனிதன் இருக்கிறான் என்பதை அவள் எதிர்பார்க்கவே இல்லை.

அதை எண்ணியவாறு அவள் அமர்ந்திருக்க, “ஜனனி நான் கேட்டுட்டே இருக்கேன், உன் கவனம் எங்கே இருக்கு?” கலாவதி அவளைக் கலைக்க நனவுலகம் வந்தாள். அவர் கேட்டதுக்கு பதில் சொன்னவளுக்கு, அவர் என்ன கேட்டார் என்பதோ? அதற்கு அவள் என்ன பதில் சொன்னாள் என்பதோ சத்தியமாக நினைவில் பதியவே இல்லை.

வந்தது முதலே தங்கையையும், நண்பனையும் அபய் கவனித்துக் கொண்டுதான் இருந்தான். ஜனனியின் தொடர்ந்த பார்வைக்கும், தீனாவின் விலகலுக்கும் என்ன காரணமாக இருக்கும் என அவனுக்குப் புரியவே இல்லை.

இதுவே பழைய தீனாவாக இருந்திருந்தால், வந்ததுமுதல் தன் தங்கைக்கு அருகே அமர்ந்து எவ்வளவு சேட்டைகள் செய்திருப்பான் என்று அவனுக்குத் தெரியாதா என்ன?

“தீனா, இது நீதானா? எனக்கென்னவோ சந்தேகமா இருக்கே” அவன் தோளில் தட்டி சிரித்தான்.

“நீயெல்லாம் என்னை கிண்டல் பண்ற அளவுக்கு என் நிலைமை ஆயிடுச்சு பாரேன். லவ்வை சொல்லவே அவ்வளவு பயப்பட்ட ஆளு, நாலே

மாசத்தில் லவ் பண்ண பொண்ணை கல்யாணமே பண்ணிகிட்ட. என்னைப்பார், லவ்வை சொல்லி பன்னிரண்டு வருஷம் ஆகுது, இன்னும் இப்படி தொங்கிகிட்டு இருக்கேன்” பார்வையால் ஜனனியை வருடியவாறே சற்று அலுத்துக் கொண்டான்.

“ஏதாவது பிரச்சனையா மச்சான்?” கவலையானான்.

“என்னைப் பார்த்தால் உன் தங்கச்சிக்கு பயமா இருக்காம்...” கேலியாக சொல்ல முயன்றாலும், அதில் சிறு வலி இருந்ததை அபய் சட்டென இனம் கண்டு கொண்டான்.

“உன்னைப் பாத்தா அந்த வார்த்தையைச் சொன்னா?” அவனால் நம்ப முடியவில்லை. அவளது அண்ணனான அவனே, தன்னால் தங்கையை பார்க்க செல்ல முடியாத நாட்களில், தன் நண்பனை நம்பி அனுப்பி வைத்தவன் அவன்.

தீனா அவளிடம் காதலைச் சொன்ன விஷயத்தை அந்த வருடமே அவனிடம் சொல்லிவிட்டவன். அபய் அவனிடம் கோபம் கொண்ட பொழுது கூட, மிகவும் பொறுமையாக அவனைக் கையாண்டவன், அதன் பிறகு, அவள் பள்ளி முடித்து, கல்லூரி முடித்து, வேலைக்கு வரும் வரைக்கும் கூட பொறுமை காத்து விலகி நின்றவன்.

அப்படிப் பட்டவனது பொறுமையை உணராமல், பயம் கொள்கிறேன் எனச் சொன்னால், தீனா எந்த அளவு காயப்பட்டிருப்பான் என அவனால் உணர்ந்துகொள்ள முடிந்தது. ஒரு அண்ணனாக யோசிக்கும் அதே நேரம், தன் நண்பனின் மனதைப் பற்றியும் கவலைப் பட்டான்.

தீனா எவ்வளவு விளையாட்டாக இருந்தாலும், அவனது சீரியஸ்னஸ், பொறுப்புகள், என அனைத்தும் அவனுக்கு அத்துப்படி. இத்தனை வருடங்களாக அவனுடன் இருக்கிறான். அப்படி இருக்கையில், அவனைப்பற்றி இந்த அளவுக்கு கூட அவன் புரிந்து வைத்திருக்கவில்லை என்றால் எப்படி?

“அவ சின்னப் பொண்ணுடா... ஏதோ தெரியாமல் பேசியிருப்பா. நீ அவளை ஏதாவது பயம் காட்டியிருப்ப” அவனால் இருவரையும் விட்டுக் கொடுக்க முடியாதே.

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கையிலேயே அவர்கள் அருகே வந்த ஜனனி, “அண்ணா, அவங்களை எல்லாம் ஒரு பத்து நிமிஷம் உன்னால் சம்மாளிக்க முடியுமா?” வந்த வேகத்தில் படபடத்தாள். அவளும் எவ்வளவு நேரம்தான் தன்னை கட்டுப்படுத்திக்கொண்டு அமர்ந்திருக்க முடியும்?

“ஜனனி, இந்த நேரம் சான்சே இல்லை. எல்லாரும் உங்களையே எதிர்பார்க்கும் நேரம். எல்லாம் முடிஞ்சு கிளம்பும் நேரம் பாத்துக்கலாம், இப்போ நீ போ” அவள் எதற்காக அந்த கேள்வியை தன்னிடம் கேட்டாள் என்பது அவனுக்குப் புரியவே அதற்கு தகுந்தாற்போல் பதில் சொன்னான்.

சட்டென அவளது கண்கள் கலங்கிவிட, தீனாவைப் பார்த்தவள், “ஏன் இப்படிப் பண்றீங்க? என்மேல் உங்களுக்கு அப்படி என்ன கோவம்? எதிலுமே என்னால் சந்தோஷமா கலந்துக்கவே முடியலை. மனசெல்லாம்...” தன் அண்ணன் அங்கே இருக்கவே அதற்குமேலே வெளிப்படையாக அவளால் எதுவும் பேச முடியவில்லை.

“ஜனனி, இது பேசுற இடம் கிடையாது, முதல்ல அதைப் புரிஞ்சுக்கோ. எல்லாரும் உன்னையே பாக்கறாங்க. இப்போ நீ கண்ணைத் துடைச்சா கூட விசாரணை கமிஷன் வரை வச்சுடுவாங்க. நீ இப்போ ரெஸ்ட் ரூம் போயிட்டு வா. இப்படியே அவங்க கிட்டே போனான்னா, உன் நொம்மாவே உன்னை நோண்ட ஆரம்பிச்சுடுவாங்க” அவன் சொல்லவே, அதற்கு மேலே அங்கே தாமதிக்கவில்லை.

எப்படியோ ஒரு வழியாக துணி எடுத்து முடிக்கும் வரைக்கும் அவள் பொறுமை காக்க, தீனா அவள் அருகே சென்று அமர்ந்து கொண்டான். வழக்கம்போல் அவனது அருகாமை அவளை அமைதிப்படுத்த, அதன் பிறகு பெரிதாக அவள் கவலைப்படவில்லை.

ஒரு வழியாக அவர்கள் துணி வாங்கி முடிக்கவே, “தீனா நீ போய் காரை எடுத்துட்டு கடைக்கு முன்னாடி வா. ஜானு, நீ இந்த அமவுண்டுக்கு என்ன கிப்ட்னு பாத்து வாங்கு போ... இரு நானும் உன்னோடவே வர்றேன். நீங்க எல்லாம் கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிட்டு கீழே வாங்க.

“ஜவுளி எல்லாத்தையும் கடைப் பையன் கிட்டே கொடுத்து அனுப்புங்க, நீங்க எதையும் தூக்க வேண்டாம். தம்பி, இவங்களுக்கெல்லாம் ஜூஸ் கொண்டுவந்து கொடுப்பா” சொன்னவன் அவளை அழைத்துக் கொண்டு விரைந்தான்.

பாதி வழியில், “ஜானு, நீயும் அவனோட காரில் ஜாயின்ட் பண்ணிக்கோ, அதிகபட்சம் பத்தே நிமிஷம், அதுக்கு மேலே உங்களுக்கு டைம் இல்லை. எஸ்கலேட்டர் வேண்டாம், லிப்ட்ல கீழே போ” அவர்களுக்கு சற்று தனிமை கொடுத்து அனுப்பியவன், தன் வேலையைப் பார்க்கப் போனான்.

தீனா காரைக் கிளப்பிய நேரம், ஜனனியும் சரியாக அங்கே வர, அவன் அருகே ஏறி அமர்ந்தாள். அமர்ந்த வேகத்தில் அவனை சரமாரியாக குத்த, அனைத்தையும் பெற்றுக் கொண்டவாறே, “ஏய் ஜானு… இப்போ எதுக்கு குத்துற? வலிக்குது…” போலியாக அலறினான்.

“வலிக்குதா? நல்லா வலிக்கட்டும், எனக்கும் இப்படித்தான் வலிக்குது? என்னை நீங்க அவாய்ட் பண்ட்ரீங்கல்ல, இவ்வளவுதான் உங்க லவ்வா?”.

“ஜானு, நான் அப்படி இருந்தா பயமா இருக்குன்னு சொல்ற, இப்படி இருந்தால் அவாய்ட் பண்றேன்னு சொல்ற, இப்போ நான் என்னதான் பண்றது? நீயே சொல்…” அவள் கரத்தை அழுத்தமாக பற்றிக் கொண்டான்.

சட்டென அவன் குரலில் ஒரு நெகிழ்வும், பார்வையில் சிறு போதையும் ஏற, தன் பார்வையை வேகமாக திருப்பிக் கொண்டாள். “எனக்கு என் தீனாதான் வேணும்” மெல்லியதாக முனகினாள்.

“உன்னோட தீனாவா…?” இழுத்தவன், அவள் தாடையைப் பற்றி திருப்பி தன் முகம் பார்க்க வைக்க, தயங்கி அவன் கண்களை ஏறிட்டாள்.

“எப்படின்னு சொல்லிக் கொடு…” அவளைச் சீண்டினான்.

“இதுக்கு முன்னாடி நான்தான் சொல்லிக் கொடுத்தேனா?” பார்வையை அந்த காருக்குள் அலைபாயவிட, அவள் கன்னம் தாங்கிய கரத்தால் மெல்லியதாக வருடினான்.

அவன், அவள் இதழ்நோக்கிக் குனிய, விலகிக் கொள்ளாமல், அவனை வரவேற்க தயாரானாள். நூலளவு இடைவெளியில் தன் நெருக்கத்தை நிறுத்தியவன், தன் மூக்கால் அவள் மூக்கை உரசினான். அவள் தன் இமைகளை அழுத்தமாக மூடிக் கொள்ள,

“ஜானு… நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன், உன்னை கஷ்டப்படுத்தி எனக்கு எதுவும் வேண்டாம். எல்லாம் நல்லபடியா முடிந்து, அதுக்குப் பிறகு, நீ நோ சொல்லக் கூடாது அவ்வளவுதான்… சொல்லு…” உரைத்தவன் தன் இதழால் அவள் இதழை மெல்லியதாக உரச, அவள் மூச்சுக்காற்று வெப்பத்தில் திணறியது.

இவ்வளவு நெருக்கத்தில், மூச்சுவிடுவதே சிரமமாக இருக்கையில், அவள் எப்படி பதில் சொல்வதாம்? “ஜானு, கேட்டதுக்கு பதில் சொல்லு, உன் மனசு கஷ்டப்படாமல், உரிமையோட, உணர்வும் உயிர்ப்புமா… நீ சம்மதம் சொன்னால் போதும்… நைட் வரைக்கும் கூட என்னால் வெயிட் பண்ண முடியாது” அவனது இதழ்கள் இன்னுமே பட்டும் படாமல் அவளைத் தீண்டிக் கொண்டே இருக்க, இதற்கு அவன் முத்தமிட்டால் கூட பரவாயில்லை என அவள் நெஞ்சம் விம்மியது.

“பதில் சொல்லு…” அவன் இன்னும் சீண்ட, “ம்…” மெதுவாக முனகினாள். அவனுக்கு அதுவே போதுமானதாக இருக்க, அவள் நெற்றியில் முட்டி அவன் விலகி அமர்ந்தான்.

அவள் கொஞ்சம் இயல்பாக, “இப்போ இந்த தீனா எப்படி இருக்கட்டும்?” அவளைப் பார்த்து இமைகளை சிமிட்ட, அவன் முகத்தை ஏறிட முடியாமல் வெளியே தன் பார்வையை திருப்பிக் கொண்டாள். அவனது சிரிப்புச் சத்தம் அவளைத் தீண்ட. அப்பொழுதும் அவன் பக்கம் திரும்பவே இல்லை.

அதன் பிறகு காரைக் கிளப்பிக்கொண்டு சென்று பெரியவர்களையும் அழைத்துச் சென்று மாலை சிற்றுண்டி, உண்ட பிறகு அவரவர் வீட்டுக்குப் பிரிந்து சென்றார்கள். திருமணத்துக்கு சரியாக ஒரு வாரம் மட்டுமே இருக்க, திருமண பத்திரிக்கையை இருவருமாக சேர்ந்து அலுவலக தோழமைகள், கல்லூரி நண்பர்கள் என அனைவருக்கும் வைத்தார்கள்.

“தீனா பேச்சுலட் பார்ட்டி என்னைக்கு?” சபரி அவனிடம் கேட்க, தீனா தன்னவளின் முகம் பார்த்தான்.

அவள் விழிகளை உருட்டவே, “நீங்க நாளை பிக்ஸ் பண்ணுங்க, எல்லாம் ரெடி பண்ணிடலாம்” அவர்களுக்கு பதில் கொடுத்தவன், அவளை அழைத்துக்கொண்டு கிளம்பினான்.

வண்டியில் செல்லும் வேளையில், “யாரோ நான் சொன்னா குடிக்கவே மாட்டேன்னு சொன்னாங்க” மெல்லியதாக குறைபட, கண்ணாடியில் வழியே அவளைப் பார்த்தவன், “குடிக்க மாட்டேன்னு சொன்னா சொன்னதைச் செய்வேன். அதுக்குன்னு அவங்களை நான் தடுக்க முடியுமா?” அவளிடம் திருப்பிக் கேட்க, அவன் முதுகில் மெல்லியதாக சாய்ந்து கொண்டாள்.

அவளது வீட்டில் அவளை இறக்கி விட்டவன், “இன்னையோட சரி, இனிமேல் உன்னைப் பாக்குறது கஷ்டம்தான். சோ... வாழ்த்துக்கள் ஜானு. இந்த சடங்கு, சம்பர்தாயம், நல்லநேரம், நல்ல நாள்... ஆண்டவா என்னால் சுத்தமா முடியலை” அவன் வாய்விட்டே புலம்ப, அவள் சத்தமாக சிரித்துவிட்டாள்.

“என் கஷ்டம் உனக்கு சிரிப்பா இருக்கா? அதுசரி ரொம்ப நாளா உன்கிட்டே கேக்கணும்னு நினைச்சேன்... உங்களுக்கெல்லாம் அப்படி எதுவும்...” அவன் பேசத் துவங்கவே வேகமாக அவன் வாயை அடைத்தாள்.

“நீங்க முதல்ல கிளம்புங்க” அவனை அனுப்பி வைத்தவளின் இதழ்களில் மெல்லிய புன்னகை. கூடவே மனதுக்குள் இனம் புரியாத ஒரு பயம், அது எதனால் வந்தது, ஏன் வந்தது என அவளுக்குப் புரியவே இல்லை. இந்த திருமணம் முடிவான நாள் துவங்கி அந்த பயம் அவளை ஆட்கொண்டு இருக்கிறது.

சில நேரங்களில் அதை தவிர்க்க நினைத்தாலும் அது அவளால் முடியவே இல்லை. இப்பொழுதும் அந்த பயம் தோன்ற, முயன்று அதில் இருந்து வெளியே வந்தாள். அதற்கு அவளது பெற்றவர்களும் ஒரு காரணமாக இருந்தார்கள்.

நாட்கள் வேகமாக நகர. திருமண நாளும் புலர்ந்தது. திருமண நாள் காலையில் அனைவரும் பரபரப்பாக இயங்க, தீனாவும், ஜனனியும் ஒரு உற்சாக மனநிலையில் ஒருவித எதிர்பார்ப்போடு காத்திருந்தார்கள். ஜனனியின் மனதுக்குள் திடுமென அந்த பயம் தலைதூக்க, முயன்று தன்னை திருப்பினாள்.

நேற்றைய நிச்சதார்த்தத்தின் பொழுதும், வரவேற்பின் பொழுதும் தீனாவின் அடவடியையும் குறும்பையும் அவனது எல்லை மீறிய உரிமை பேச்சுக்களையும் எண்ணிப் பார்த்தவளுக்கு இந்த நேரம் கூட தேகம் சிலிர்த்துக் கொண்டது.

‘சரியான கள்ளன்…’ மனதுக்குள் அவனை கொஞ்சிக் கொண்டாள். பேச்சிலர் பார்ட்டி கொடுத்தாலும், அதில் அவன் குடிக்காதது மனதுக்கு பெரும் சந்தோஷத்தை அளித்தது.

ஐயர் மணப்பெண்ணை அழைக்கவே, மணமேடைக்குச் சென்று அவன் அருகே அமர்ந்து… அவன் கையால் பொன்தாலி வாங்கிக் கொள்ள… உள்ளம் முழுவதும் ஒரே பரவசம்.

அவனுக்கும் அப்படித்தான் இருந்திருக்கும் போல… அவள் நெற்றி வகிட்டில் குங்குமம் வைத்தவன், அவள் நெற்றியில் அளுத்தமாக முத்தம் ஒன்றை அங்கேயே பதிக்க சிலிர்த்துப் போனாள். அவன் செய்கையைப் பார்த்த நண்பர்கள் கூக்குரலிட, ஜனனிக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

“தேங்க்ஸ் பொண்டாட்டி… வாழ்த்துக்கள் பொண்டாட்டி…” அவள் காதுக்குள் முனக, மேடையில் அவனது குறும்பை எப்படி சம்மாளிக்க என்று தெரியாமல் திணறிப் போனாள்.

நண்பர்கள் அனைவரும் “ஓ…’வென கூச்சலிட… “தீனா…” செல்லமாக சிணுங்கிக் கொண்டாள்.

“ஜஸ்ட் என்ஜாய் திஸ்… இது மட்டும் இல்லை, இனிமேல்தான் உனக்கு இருக்கு…” அவள் காதுக்குள் கிசுகிசுக்க சிவந்து போனாள்.

பெரியவர்களிடம் ஆசீர்வாதம் வாங்குகையில், தன் பெற்றவளின் காலில் முதலில் விழுவதா? இல்லையென்றால் கலாவதியின் காலிலா? என அவள் தடுமாற, “ஜனனி, அம்மா காலில் முதல்ல விழுந்து ஆசீர்வாதம்

வாங்கு” பிரபாவதி அப்பொழுதும் தன் உரிமையை தங்கைக்கு விட்டுக் கொடுக்க, அபய் அதை விரும்பவில்லை என்றாலும் தன் தங்கைக்காக பொறுமை காத்தான்.

அனைத்தும் நல்லபடியாக முடியவே, குலதெய்வ கோவிலுக்குச் செல்லவேண்டும் என அகிலாண்டம் உரைக்கவே, தீனா திடுக்கிட்டான். அந்த குலதெய்வ கோவில் சென்னையை விட்டு அதிக தூரத்தில் இருக்கவே அவனால் தன் இளமையின் வேகத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

அனைத்தும் முடிந்து அவர்களை அவளது வீட்டுக்கு முதலில் அழைத்துச் செல்லவே, அவர்களுக்கான முதல் தனிமைக்காக காத்திருந்தான். அது உடனடியாக கிடைக்காமல் போகவே, “ஜானு, சாயங்காலம் குலதெய்வ கோவிலுக்குப் போகணுமாம்...” அவன் இழுக்க, அவன் முகம் பார்த்தாள். அவன் கண்களில் வழிந்த ஏக்கமும், எதிர்பார்ப்பும் அவளை எதுவோ செய்ய, “ஹையோ தீனா என்ன இது? சின்னப் பிள்ளை மாதிரி...” அவன் கரத்தை கோர்த்துக் கொண்டாள்.

“ரொம்ப மூட்ஆப் பண்றாங்க ஜானு, உனக்கே என் நிலை புரியலன்னா...” அதென்னவோ அவன் எதிர்பார்த்து ஏங்கிய ஒரு விஷயம் நடக்காமல் போய்விடுமோ என்ற எண்ணம் அவனை இன்னும் அதிகம் தவிக்கச் செய்வது அவளுக்கு நன்றாகவே புரிந்தது.

“கிணத்து தண்ணியை வெள்ளமா கொண்டு போய்டும்? ஜஸ்ட் ஒரு நாள்...” அவள் அவனை சமாதானம் செய்ய முயல, சட்டென அவள் அருகே இருந்து எழுந்து சென்றுவிட்டான். இது என்ன பெரிய விஷயமா என அவள் நினைக்கவில்லைதான்.

ஆனால் இருக்கும் சூழ்நிலையில், அவளால் மட்டும் என்ன செய்துவிட முடியுமாம்? அவனது ஆசையும் தேவையும் புரிந்தாலும், வீடு முழுக்க சொந்த பந்தங்களை வைத்துக் கொண்டு அவனது ஆசைக்கு எப்படி அவளால் இணங்க முடியும்?

தனது இனம் புரியாத பயத்துக்கு காரணம் கிடைப்பதுபோல் தோன்றியது. எப்படியாவது அவனை சமாதானம் செய்யலாம் என அவள் நினைக்க,

அவனுக்கு சாதகமான சூழலும், அவளால் அவனது ஆசைக்கு இணங்கவே முடியாத சூழ்நிலையிலும் அவள் சிக்க வேண்டி வந்தது.

பகுதி – 22.

தீனா தன் அருகில் இருந்து எழுந்து சென்றுவிடவே அவளால் உடனடியாக அவனைத் தேடிச் செல்ல முடியவில்லை. சுற்றிலும் தோழியர், உறவுகளின் இருப்பு என நேரம் கடக்க, அவளுக்கு தவிப்பாக இருந்தது.

பொதுவாகவே யார் கோபித்துக் கொண்டாலும், அவன் அதிகம் பாதிக்கப்படுவான் என்பது அவளுக்குத் தெரியும். அவளது சிலநொடி மௌனங்களைக் கூட தாங்கிக் கொள்ள முடியாதவனால், இப்போதைய நிலையில் அவளை வெறுக்க முடியுமா என்ன?

நிச்சயம் தான் அவனைத் தேடிச் செல்ல வேண்டும் என அவன் அதிகம் எதிர்பார்ப்பான் என்பது புரிய, அவன் எங்கே என பார்வையாலேயே துழாவினாள். அவன் தனது நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்தாலும், பார்வைகள் அவளை அவ்வப்பொழுது தீண்டிச் சென்றது.

திருமண வரவேற்பும் முந்தின நாளே முடிந்துவிட, பெரிதாக சொந்தங்கள் இல்லை என்றாலும், நெருங்கிய உறவுகள், மாலை அவர்கள் கோவிலுக்கு கிளம்பிச் செல்கையில் தங்கள் வீடுகளுக்கு கிளம்பிச் செல்வதாக இருக்கவே, சற்று திணறிப் போனாள்.

அந்த நேரம் அவளது அண்ணி மாதும்மை அருகில் வரவே, “அண்ணி, அவங்க ரெஸ்ட் எடுக்கணும்னு சொன்னாங்க, கொஞ்சம் அண்ணாகிட்டே சொல்லுங்களேன்” அவள் உதவியை நாட, மாதும்மையின் முகம் போன போக்கில் சோர்ந்து போனாள்.

ஏற்கனவே அபய்யும், மாதும்மையும் ஒற்றுமையாக மனமொத்து இன்னும் வாழத் துவங்கவில்லை என்பது அவளுக்கும் நன்றாகவே தெரியும். ஆனாலும், அவனிடம் ஒரு வார்த்தை பேசுவதற்கு கூட அவள் இவ்வளவு தயங்குவாள் என்று ஜனனி எதிபார்க்கவே இல்லை.

“நீங்க போங்க அண்ணி, நானே அண்ணாகிட்டே சொல்லிக்கறேன்” அவள் அங்கிருந்து விலக முயல, வேகமாக அவளைத் தடுத்தாள்.

“இல்ல, நானே அவங்க கிட்டே சொல்றேன்” அவள் வேகமாக உரைக்கவே ஜனனி அவளை அழுத்தமாக ஏறிட, அந்த பார்வையை உணர்ந்தாலும் அவள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

காலையில் சீக்கிரமாகவே எழுந்துவிட்டதால் சொந்தங்கள் எல்லாம் ஓய்வெடுக்கச் செல்ல, அபய் தீனாவை அழைத்து வந்தவன், “ஜனனி, நான் இவனை உன்னோட ரூம்ல விடறேன், நீயும் ரெஸ்ட் எடுக்கறதா இருந்தா எடு...” நண்பனின் முகத்தைப் பார்த்தே அவர்களுக்குள் ஏதோ சிறிய மனக்கசப்பு என்பதை உணர்ந்து கொண்டவன், அவளுக்கு ஆதரவாக உரைத்தான்.

அதைக் கேட்டவாறே வந்த கலாவதி, “நீங்க போங்க, அவ இப்போ வருவா” அவர்களை அனுப்பியவர், “ஜனனி, உன் மாமியார் உன்கிட்டே தனியா பேசணுமாம், எங்க ரூம்ல இருக்காங்க, போய் என்னன்னு கேள்” அவர் சொல்லவே அவளது புருவம் முடிச்சிட்டது.

கொஞ்ச நாட்களாக அவளைத் தொல்லை செய்யும் பயமும் அவளை ஆட்கொள்ள, ‘எதுவோ நடக்கப் போகிறது’ அவளது மனம் அடித்துச் சொன்னது. ‘ஒரு வேளை இந்த தருணத்தை எண்ணித்தான் என் மனம் அலைபாய்ந்ததோ?’ தனக்குள் எண்ணிக் கொண்டாள்.

அவரைத் தேடிச் செல்லவே, அவளை அழைத்து தன் அருகே அமர்த்திக் கொண்டவர், அவள் கரத்தை மென்மையாக பற்றிக் கொண்டார். “என்னம்மா இந்த நேரம் கூப்ட்டிருக்கேனே, என்னவா இருக்கும்னு இருக்கா?” அவளிடம் தன்மையாக கேட்க, மென்மையாக தலை அசைத்தாள்.

“எனக்கு உன்கிட்டே ஒரு யாசகம் கேக்கணும்...” அவர் சொல்ல திடுக்கிட்டாள்.

“அத்த...”.

“தீனா எங்களைப்பற்றி உன்கிட்டே சொல்லியிருக்கானா?” அவர் கேட்க, அவர் எதைப்பற்றி கேட்கிறார் என அவளுக்கு சுத்தமாகப் புரியவில்லை.

“ஓ... அப்போ சொன்னதில்லை...” ஒரு பெருமூச்சை வெளியேற்றியவர், “நாங்க அவனைப் பெற்ற அப்பா அம்மா கிடையாது. அவனோட சித்தப்பாவும் சித்தியும்” அவர் நிறுத்த, அவளால் தன் காதால் கேட்டவற்றை நம்பவே முடியவில்லை.

“அவனோட பத்தாவது வயசில் அவனைப் பெத்தவங்க ஒரு விபத்தில் இறந்துவிட, வாரிசு இல்லாத நாங்க அவனை லீகலா தத்தெடுத்துகிட்டோம். அவங்க அம்மா அப்பாவோட விபத்துக்குப் பிறகு, தீனா கோவிலுக்கே வர மாட்டான், சாமி கும்பிட மாட்டான். அவனுக்கு தெய்வத்தின் மேலே கோபம்.

“நீயும் அவனை கோவிலுக்கு அழைத்திருந்தால் அங்கே வந்திருக்க மாட்டானே?” அவர் கேட்க, எத்தனையோ முறை அவள் கோவிலுக்கு அழைத்தும் அவன் வராததை இப்பொழுது நினைத்துக் கொண்டாள். நண்பர்களோடு செல்கையில் கூட, கோவிலுக்கு வெளியே நிற்பானே தவிர, உள்ளே வர மாட்டான்.

ஒரு அளவுக்கு மேலே நண்பர்களும் அவனை வர்ப்புறுத்துவது இல்லை. அப்படியே அழுத்தம் கொடுத்தாலும் அவனது கோபத்துக்கு ஆளாக முடியாது என்பதால் விலகியே நிற்பார்கள்.

“எங்களுக்கு திருமணம் முடிந்து இத்தனை வருஷமா வாரிசு இல்லை. எத்தனையோ விதமான மருத்துவம், எல்லாவற்றின் முடிவும் ஒன்றுதான், எங்களுக்கு எந்த குறையும் இல்லை’ ஆனா என் மனசுக்குள் ஒரு பெரிய குறை, அது என்னன்னா...

“எங்க கல்யாணம் நடந்து முடிஞ்ச உடனே, என் மாமியாரும் என்னை அழைத்து இதே மாதிரி பேசினாங்க, அது என்னன்னா, குலதெய்வ கோவில்ல பொங்க வைக்க முன்னாடி நாங்க சேரக் கூடாதுன்னு சொன்னாங்க.

“அப்போல்லாம் இப்போ இருக்க மாதிரி உடனே வண்டி புடிச்சு போக முடியாது. கல்யாண சந்தடி அடங்கவே ஒரு வாரமாகும், அந்த ஒரு வாரம்

ஆம்பளைங்க கை சும்மா இருக்குமா என்ன? கட்டுன புருஷன் கூப்பிட்டு இந்த பெண் ஜென்மங்களால் போகாமல் இருக்க முடியுமா?

“தப்பு நடந்துடுச்சு… ஒரு வேளை அந்த தப்பால்தான் எங்களுக்கு வாரிசே உருவாகவில்லையோ என்று எனக்கு ஒரே கவலை. அது இப்போ இல்லை என்றாலும், எனக்கு பேரப்பிள்ளையை கொஞ்சும் பாக்கியமாவது வேணும்.

“என் பிள்ளைகிட்டே சொல்லலாம்ன்னா, அவன் தெய்வ காரியம் என்றாலே அதை மீறிட்டுதான் மறு வேலை பார்ப்பான். இன்னைக்கு ஒரு நாள் மட்டும்தான். அதுவும் குலதெய்வ கோவிலுக்கு போயிட்டு வர எப்படியும் நடு ராத்திரி தாண்டிடும், ஒரு அரை நாள் மட்டும்…

“எங்கே நான் பட்ட கஷ்டத்தை எல்லாம் நீயும் படக் கூடாதே என்ற என்னோட பயம்தான் இதுக்கெல்லாம் காரணம். நான் சொல்றது உனக்குப் புரியுதா?” அவர் அவளது இரு கரங்களையும் பற்றிக் கொள்ள, அவளுக்கு பதில் சொல்லவே முடியவில்லை.

“என் மாமியார் என்கிட்டே கேட்டது ஒரு வாரம். நான் உன்னிடம் கேட்பது ஒரே ஒரு நாள்…” தன் வலக்கரத்தை அவள் முன்னால் நீட்ட, அவர் கேட்கும் வாக்கை அவளால் எப்படி கொடுக்காமல் இருக்க முடியும்? சில விஷயங்கள் நமக்கு தெரிய வராமல் இருக்கும் வரைக்கும்தான் நிம்மதி.

அதுவே தெரிய வந்துவிட்டால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்? சாகும் நாள் தெரிந்த பிறகு, வாழும் ஒவ்வொரு நாளும் மரணம் தானே, அப்படி ஒரு நிலையில் நின்றிருந்தாள்.

தன் அறையில், தனக்காக காத்திருக்கும் கணவனை நினைக்கையில் நெஞ்சம் பலமாக அடித்துக் கொண்டது. அகிலாண்டம் இரவைப் பற்றி பேசுகிறார், அவளுக்கோ இந்த பகல் பொழுதைக் கடத்துவது எப்படி என தவிப்பாக இருந்தது.

‘அங்கே போகாமலே இருந்துவிடுவோமா?’ அவள் நினைக்க, அதுமட்டும் தன்னால் முடியவே முடியாது என்று தோன்றியது. அது நியாயமாகவும்

அவளுக்குத் தோன்றவில்லை. அவனிடம் சரியான காரணத்தையாவது சொல்லிவிட முடிவெடுத்தாள்.

பட்டுப்புடவை சரசரக தன் அறைக்குள் நுழைந்தவள், மாலையில் கோவிலுக்குச் செல்ல வேண்டி இருப்பதால் அவனை ஓய்வெடுக்கச் சொல்ல நினைத்தாள். ஆனால் அவன் ஓய்வெடுக்கும் மனநிலையில் எல்லாம் இல்லை என்பது அவனைப் பார்த்த உடனேயே அவளுக்குத் தெளிவாகவே தெரிந்தது.

அவள் அறைக்குள் நுழைந்த உடனேயே அவளைப் பார்த்த அவன் பார்வையில் வழிந்த அந்த காதல், தேடல்... நொடிகளுக்குள்ளாகவே அவளை சுனாமியாக சுழற்றிப் போட்டது.

கூடவே அவனது தேவை எதுவெனவும் புரிய, இப்பொழுது அதற்கு உடன்பட முடியாது என்பதும் சேர்த்தே புரிய என்ன செய்து அவனைத் தடுப்பது என்றும் தெரியவில்லை. வீட்டில் உறவினர்களின் கூட்டம் நிறைந்திருக்க, அதையெல்லாம் ஒரு பொருட்டாகவே அவன் கருதவில்லை.

மணமேடையிலேயே அத்தனைபேர் முன்னிலையில் தன் முன்நெற்றியில் முத்தமிட்டவன், அவர்களுக்கான தனிமையில் சும்மாவா இருப்பான்? எத்தனையோ நாள் அவளிடம் வாய்விட்டே அவன் கேட்ட விஷயம், ‘உன் கழுத்தில் தாலி கட்டின மறு நிமிஷமே நீ எனக்கு முழுசா வேணும், அதில் எல்லாம் என்னால் காத்திருக்கவே முடியாது’ மிகவும் தெளிவாக, ஆசையாக அவன் கேட்டது. அதை தருகிறேன் என அவள் வாக்களித்த விஷயமும் கூட.

ஆனால், அன்றைய சூழ்நிலைக்கும், இன்றைய சூழ்நிலைக்கும் இருக்கும் மிகப்பெரும் வித்தியாசம்... இந்த விஷயத்தை அவளது அத்தை முன்னரே சொல்லியிருக்கக் கூடாதா? தாலிகட்டி முடித்த பிறகா சொல்ல வேண்டும்? அவளுக்கு வேதனையாக இருந்தது.

அப்படி முன்பே சொல்லியிருந்தால், நிச்சயம் அவனிடம் பேசி அவள் சம்மதிக்க வைத்திருப்பாள். இறுதி நொடியில் அவள் என்ன சொல்லி அவனைத் தடுப்பதாம்? அதுவும் தன்னை முழுதாக தெரிந்துகொள்ள

பேராசையில் இருப்பவனை அவளது எந்த வார்த்தைகள் கட்டுப் படுத்துமாம்?

முதலில் அவனைத் தடுக்க வேண்டும் என நினைத்தாலே அவளுக்கு உயிர்வரை வலித்தது. பட்டுவேஷ்ட்டி காலைத் தடுக்க, மெதுவாக நடந்து வந்தவன் அவளது படுக்கையில் அமர்ந்து கொண்டான். பார்வை மொத்தமும் அவளது அழகை அள்ளிப் பருக, இத்தனை நாட்கள் கட்டிக் காத்த கண்ணியம் காற்றில் பறந்திருந்தது.

'இவள் என்னவள், எனக்கே எனக்கானவள்...' அந்த எண்ணமே அவனது ஆண்மையை முறுக்கேறச் செய்ய, அவனால் சில நிமிட தாமதங்களைக் கூட தாங்க முடியவில்லை.

"ஜானு, பிளீஸ் க்ளோஸ் தி டோர்..." அவன் குரலில் ஒருவித அவசரம் ஒலித்தது.

எப்படியும் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு இருவரும் தனித்திருக்க முடியாது என்பது புரிய, தயக்க நடையாக சென்றவள், கதவின் அருகே சென்றுவிட்டு, "நீங்க ரெஸ்ட் எடுங்க, நான் கீழே..." அவனை எப்படியாவது தவிர்த்துவிட முடியாதா என அவள் நெஞ்சம் தவித்தது.

அந்தக் கதவை மூடிய அடுத்த நொடியே என்ன நடக்குமென்று அவளுக்குத் தெரியாதா என்ன? புயல் வேகத்தில் தன்னை ஆக்கிரமிக்கக் காத்திருக்கும் அவனிடம், தனது எந்த சமாதானமும், சாக்குப்போக்கும் எடுபடவே செய்யாது என்பது அவளுக்குத் தெளிவாகத் தெரியுமே.

"ஜானு, பிளீஸ்... நான் ஏற்கனவே உன்கிட்டே சொல்லியிருக்கேன். இப்போ நீ குளோஸ் பண்ணலன்னா, நான் எழுந்து வரவேண்டி இருக்கும்..." நான் யாரைப் பற்றியும், எதைப் பற்றியும் கவலைப்பட தயாராக இல்லை என அவனது குரல் உணர்த்த, வேறு வழியின்றி கதவைத் தாழ் போட்டாள்.

அடுத்த நொடி, அவளை முதுகோடு வளைத்த அவனது இரும்புக் கரம், அவளை இறுக்க, அவன் இதழ்களோ சூடாக அவள் பின்னங்கழுத்தில் புதைந்தது. அவனது மீசையின் குறுகுறுப்பு தேகம் முழுவதும் சிலிர்ப்பை

ஏற்படுத்த, கரங்கள் இரண்டும் பேரார்வத்துடன் அவளைத் தீண்டத் துவங்கியது.

“தீனா… ஒரு நிமிஷம்… நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்க” நிச்சயம் அவன் கேட்கவே போவதில்லை எனத் தெரிந்தாலும், முயன்று பார்த்தாள்.

“கண்டிப்பா கேக்கறேன், ஆனா இப்போ இல்ல… லெட் மீ பினிஷ் திஸ்” அவளை தன் பக்கம் திருப்பியவன், அவள் இதழ்களை தயக்கமே இல்லாமல் கவ்விக் கொண்டான். ஒரு முத்தத்தை இவ்வளவு ரசித்து செய்ய முடியுமா? ஒற்றை முத்தத்தில் உயிர் உருக வைக்க முடியுமா? அவன் நடத்திக் காட்டினான்.

இதற்கு முன்னரும் அவளை முத்தமிட்டிருக்கிறான், அதில் ஒரு அவசரம் இருந்தது, வேகம் இருந்தது, மெல்லிய பதட்டம் இருந்தது. ஆனால் இதில்… அவையெல்லாம் எதுவும் இல்லாமல், ஆழ்ந்து அனுபவித்து, அவள் கீழுதட்டை மென்மையாக தனக்குள் உள்வாங்கி சுவைக்க, இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டாள்.

அவனைத் தடுக்க வேண்டும், தேக்க வேண்டும் என புத்தி கதறினாலும், காதல் கொண்ட மனம், அவனது தேடலுக்கு ஒத்துழைத்து கொஞ்சியது. அவள் கன்னம், தாடை என அவன் இதழ்கள் கவ்வி சுவைக்க, தன்னை வஞ்சனையே இல்லாமல் கொஞ்சும் அவனை ரசிக்காமல் அவளால் எப்படி இருக்க முடியும்?

“ஜானு… ம்ஹூம்… என்னால் இவ்வளவு பொறுமையா எல்லாம் முடியாது” அவள் காதுமடலை பற்களால் மெல்லியதாக கடித்து முனக, அவன் சிகை கோதியவள், அவனுடன் ஒட்டிக் கொண்டாள். தனக்காக தன்னிடம் இப்படி கெஞ்சிக் கொண்டிருப்பவனுக்கு அவள் எப்படி மறுக்க?

ஆனால் மறுத்தே ஆக வேண்டிய கட்டாய நிலையில் அவள் இருப்பதை புத்தி இடித்துரைக்க, அவனை விட்டு விலக முயன்றாள். அவள் தன்னை விட்டு விலக முயலவே அவளை இன்னும் அழுத்தமாக தன்னோடு சேர்த்தணைக்க, தனது விலகல் கூட அவனுக்கு பிடிக்கவில்லை என்கையில், மற்றது? நினைக்கவே அவளுக்கு நெஞ்சம் நடுங்கியது.

அவன் கரங்கள் இரண்டும் இப்பொழுது பிடித்த பரிசுப்பொருளை பிரித்துப் பார்க்கும் குழந்தையின் மனநிலையில் முன்னேற, பரிசுப்பொருளை அவன் கரத்தில் மொத்தமாக கொடுத்துவிட்டு அதைப் பிரித்துப் பார்க்காதே எனச் சொன்னால் அவன் விடுவானா என்ன?

“தீனா, அம்பதாயிரம் செலவுபண்ணி வாங்கின பட்டுப் புடவை, கிழிச்சுடாதீங்க?” அவள் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, “அதுக்குதான் முயற்சி பண்ணிட்டு இருக்கேன்” உரைத்தவனது கரத்தில் அவள் புடவை அடைக்கலமாகி இருக்க, அவனை இழுத்து அணைத்துக் கொண்டாள்.

மெல்லிய சிரிப்போடு அவள் வெட்கத்தை ரசித்தவன், அவளுடன் கட்டிலில் சரிய, அவன் இதழ்கள் அவள் கழுத்து வளைவில் தஞ்சம் புக, அவன் தேடலுக்கு தன்னை மீறி ஒத்துழைத்தாள். அவன் கரங்கள் ஊர்ந்த இடங்களை அவன் இதழ்கள் அழுத்தமாக நலம் விசாரிக்க, அவனைத் தடுக்க முடியாமல் சோர்ந்து போனாள்.

ஐந்தாயிரம் செலவு செய்த பட்டு ஜேக்கட் அவன் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் விட்டுக் கொடுக்கையில் மற்றவை எல்லாம் எம்மாத்திரமாம்? தன் தடைகள் மொத்தமும் அவன் நொடியில் கடக்க, அவன் வேகத்தில் மிரண்டு போனாள்.

“ஜானு, நீ ரொம்ப அழகா இருக்க” அவன் இதழ்கள் அவள் வெற்று தேகத்தில் ஊர்ந்து, அவன் முழு போதையில் பிதற்ற, “தீனா, இது இப்போ வேண்டாம்...” பலகீனமான அவள் மறுப்பை அவன் கண்டுகொள்ளவே இல்லை. அவனது பல்த்தடம் அவள் நெஞ்சில் பதிய, அது கொடுத்த வலியும் எரிச்சலும் கூட அவளுக்கு சுகமாய் இருந்தது.

பத்துநாள் பசித்திருந்தவனுக்கு முன்னால் விருந்து பரிமாறப் பட்டால்... கிள்ளியா சாப்பிடுவான்? அள்ளி விழுங்குவானே... சில நொடிகள் உணவின் ருசி கூட தெரியாதே... அப்படி ஒரு நிலை அவனுக்கு.

“ஸ்...” அவள் வலி தாளாமல் மெல்லியதாக முனக, அந்த நிலையிலும் அவளை சமாதானம் செய்ய அவனது இதழ்கள் களத்தில் இறங்க, சிலிர்த்துப் போனாள்.

அணை உடைத்து வரும் காட்டாற்று வெள்ளத்தை கரங்களால் தடுக்க முடியுமா என்ன? அப்படி ஒரு பலகீனமான போராட்டம் அவளிடம். அவனை முழுதாக தடுக்க வேண்டும் என மனமும், உணர்வுகளும் போராடினால் தானே அவனைத் தடுக்க முடியும்?

இங்கே அவனோடு சேர்ந்து கரைந்து காணாமல் போய்விடத் தவிக்கையில் அவனை எப்படித் தடுக்க? அவன் இதழ்களின் வெம்மை, கரங்களின் அத்துமீறல், மீசை ரோமத்தின் குறுகுறுப்பு, அப்பப்பா... அவனது ஆளுகையில் அடங்கிக் கொண்டிருந்தாள்.

அவனைத் தடுக்க முயலுகையில், அவன் முகம் பார்க்கையில் எல்லாம், அதீத ஆர்வத்தில் தன்னிடம் மூழ்கிக் கிடப்பவனை என்ன வார்த்தை சொல்லி தடுக்கவாம்? அப்படியும் முயன்று, “தீனா, நைட் வரைக்கும் கொஞ்சம் வெயிட் பண்ணுங்களேன். நான் எங்கே போயிடப் போறேனாம்?” அவன் உச்சந்தலையில் இதழ் பதித்து முனகினாள்.

“இல்ல, கோவிலில் இருந்து வரவே லேட் ஆயிடும், நீ ரொம்ப டயட் ஆகிடுவ. உன்னை அப்போ என்னால் தொல்லை செய்ய முடியாது” தன் வேகத்தில் கவனமானாலும், அவளுக்கு பதில் கொடுக்க மறுக்கவில்லை.

இப்படி தனக்காக பார்ப்பவனை தடுக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு ஆளாகி விட்டோமே என வெதும்பினாள். இதற்கு மீறினால் தானே அவனுக்கு உடன்பட்டுவிடுவோம் என்ற பயம் மனதைக் கவ்வியது. ஏற்கனவே அரைகிணறு தாண்டிய நிலை அவளுக்கு.

“நான் சொல்றதைக் கேளுங்க...” அவன் கன்னம் பற்றி தன்னிடமிருந்து அவனை முயன்று பிரித்து அவன் முகம் பார்க்க, அதில் தெரிந்த ஆர்வம், ஏக்கம், அவளால் அடுத்த வார்த்தை பேசவே முடியவில்லை.

அவன் நெற்றியில் மெல்லியதாக இதழ் ஒற்ற, பளீரென அவளைப் பார்த்து புன்னகைத்தவன், மீண்டும் விட்ட இடத்தில் இருந்து தொடர, அவன் உணர்வுகளில் தீப்பற்றிக் கொண்ட உணர்வு. காட்டுத்தீயென அவன் உணர்வுகள் அவளை உருக வைக்க, சில நொடிகள் அவன் தேவைக்கு விட்டுவிட்டாள்.

சற்று நேரத்தில் அவனது உணர்வுகள் அடுத்த கட்டத்துக்கு அவனைத் தூண்ட, முழுதாக அவளை கொள்ளையிட முயன்ற நொடி, இது கூடவே கூடாது எனத் தோன்ற, பெரும் முயற்சி செய்து தன்மீது இருந்து அவனை விலக்கியவள், பட்டென எழுந்து அமர்ந்து கொண்டாள்.

அதைப் பார்த்தவனது முகத்தில் அப்பட்டமாக ஒரு ஏமாற்றம் கவிழ, “சாரி ஜானு, ரொம்ப பயந்துட்டியா? இல்லம்மா… இதில் பயப்பட எதுவும் இல்லை” அவளது கலைந்திருந்த கூந்தலை சரி செய்தவன், அவளைத் தேற்ற முயன்றான்.

இந்த நிலையிலும் தனக்காக பார்க்கும் அவனது தேவையை தீர்க்க முடியாத தன் நிலையை அடியோடு வெறுத்தாள். அவளது உணர்வுகளும் அவனுடன் முழுதாகக் கலந்துவிடு என கதறிக் கொண்டுதானே இருக்கிறது. அவனால் தூண்டப்படும் தனக்கே இப்படி என்றால், அவன் நிலை என்னவாக இருக்கும் என அவளுக்குத் தெரியாதா என்ன?

‘ஹையோ ஆண்டவா, நான் இப்போ என்ன செய்வேன்? எனக்கு ஏன் இப்படி ஒரு சோதனை?’ என்ன சொல்லியும் அவனைத் தேக்க முடியாது என்பது அவளுக்குத் தெரிந்து போனது. அவனை கட்டுப்படுத்தும் வார்த்தைகள் எதுவும் தன்னிடம் இல்லை என்றே தோன்றியது.

‘எதைச் சொன்னால் இவராகவே என்னை விட்டு விலகுவார்?’ மூளை வேகமாக சிந்திக்க, அந்த எண்ணம் பளிச்சிட்டது. அவளை சமாதானம் செய்து கொண்டிருந்த அவனது இதழ்கள் அவள் கன்னத்தில் ஆழமாகப் பதிந்தது.

‘உண்மையை’ச் சொன்னால் நிச்சயம் அதை ஒரு பொருட்டாகவே கருத மாட்டான் என்பது அவளுக்குப் புரிந்து போனது.

அவளுக்கோ சட்டென கண்கள் இரண்டும் கலங்கிவிட, கண்ணீர் கன்னத்தில் இறங்க, அந்த உப்பு சுவையை உணர, “ஜானு, அழறியா? ஏன்?” அவன் உணர்வுகள் சட்டென வடிந்துபோனது.

“நான் அவ்வளவு சொல்லியும்… ஜானு பிளீஸ்…” அதென்னவோ அவனால் இப்பொழுது அவளை விட்டு விலக முடியும் என்றே தோன்றவில்லை.

என்ன நேர்ந்தாலும் அவள் தனக்கு முழுதாக வேண்டும் என அவன் உணர்வுகள் கதறிக் கொண்டிருந்தது.

“எனக்கு பயமா இருக்கு தீனா?” எந்த வார்த்தை அவனைக் காயப்படுத்தும் என அவளுக்குத் தெரியுமோ, அதே வார்த்தையை இப்பொழுது தெரிந்தே சொன்னாள்.

“இல்லம்மா… உன்னை நான் கஷ்டப்படுத்துவேனா? ஜானு இங்கே பார். என் நிலைமையை கொஞ்சம் யோசியேன். நான் அவ்வளவு சொல்லியும் நீ இப்படி பண்றது எனக்கு கஷ்டமா இருக்கும்மா” அவள் கன்னம் தாங்கி தன் முகம் காண வைக்க முயல, அவளோ பிடிவாதமாக அதை மறுத்தாள், தவிர்த்தாள்.

அவன் கண்களைப் பார்த்தால், என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை என அவனை அனுமதித்துவிடுவோம் என்ற பயம் அவளை தொற்றிக்கொள்ள, தன் கால்களை இறுக கட்டிக்கொண்டு அதில் முகம் புதைத்தாள்.

அவள் தன் காலில் முகம் புதைத்துக் கொள்ளவே, “என்னன்னு சொன்னாத்தானே தெரியும் ஜானு? அந்த வார்த்தை என்னை ரொம்ப காயப்படுத்தும்னு நான் சொல்லியிருக்கேன், அப்படியும் நீ சொல்றன்னா? வேண்டாம் ஜானு.

“நான் அவ்வளவு கெஞ்சிக் கேட்டும் இதை நீ அவாய்ட் பண்றன்னா… இல்ல எனக்கு உண்மை என்னன்னு தெரிஞ்சாகணும். யார் என்ன சொன்னாங்க? உனக்கு நான் முக்கியமா? இல்ல அவங்களா?” அவன் குரலில் கோபமும், ஏமாற்றமும் வருத்தமும் அப்பட்டமாக போட்டி போட்டது.

பயத்தில் நடந்து கொள்பவளின் செய்கை எப்படி இருக்கும் என அவனுக்குத் தெரியாதா என்ன?

“இல்ல ஜானு, என்னால் முடியாது… கண்டிப்பா இது உனக்கு பிடிக்காமல் இல்லை, அது எனக்கு நல்லாவே தெரியும்” அவன் அவள் முகத்தை ஊன்றிப் பார்க்க, அவனது தொடுகை அவளுக்குப் பிடிக்காமல் போகுமா என்ன? அவனது ஆசைக்குக் குறையாமல், அவளுக்கும் ஆசை இருக்கிறது தானே, அப்படி இருக்கையில்…

அவள் இன்னும் தன் முகத்தை அவனுக்குக் காட்டாமல் திருப்பிக் கொள்ள, “இதில் நீ சங்கடப்பட எதுவும் இல்லை ஜானு. என்னோட தொடுகையை நீ வெறுத்தாதான் நான் பயப்படணும், இது எனக்கு சந்தோஷமான விஷயம்தான். நீ அதுக்காக தயவு செய்து வேதனைப் பட்டுடாதே, என்னால் அதையெல்லாம் பாக்குற சக்தி இல்லை.

“இப்போ சொல்லு, எனக்கு உண்மை தெரிஞ்சாகணும். அந்த உண்மை என்னை கன்வின்ஸ் பண்ணா மட்டும்தான் நான் உன்னை விட்டு விலகுவேன், இட்ஸ் எ ப்ராமிஸ்” தன்னவளைப் பற்றிய உறுதியான நம்பிக்கை அவனை அப்படி பேசத் தூண்டியது.

“அப்படி உங்களுக்கு இப்போ ‘இது’நடந்தே ஆகணுமா? எனக்கு இப்போ வேண்டாம்” அப்படியாவது அவன் மறுக்க வேண்டுமே என்று இருந்தது.

“இல்ல, உன் கண்ணு பொய் சொல்லுது... அது மட்டும் இல்லை, இவ்வளவு நேரமா நாம ரொம்ப இயல்பா இருக்கோம் ஜானு, அது உனக்குப் புரியுதா?” அவன் கேட்க, அப்பொழுதுதான் அவள் அதைக் கவனித்தாள். ‘இது எப்படி?’ பதறி அவள் தன்னை சரி செய்ய முயல, அவளைப் பிடிவாதமாக தடுத்தான்.

தான் சொல்லப்போகும் உண்மையில் நிச்சயம் அவன் கன்வின்ஸ் ஆக மாட்டான் என்பது அவளுக்கு உறுதியாகத் தெரிந்தது. மற்றவர்களுக்காக என்று ஒரு விபூதி, குங்குமம் கூட வைத்துக் கொள்ள மறுப்பவனிடம், இவ்வளவு பெரிய தெய்வ காரியத்தைச் சொன்னால் நம்புவானா என்ன?

“நான் உன்கிட்டதான் கேட்டுட்டு இருக்கேன் ஜானு” முதல் முறையாக அவளிடம் கோபம் காட்டினான்.

அவள் ஒரு முடிவுக்கு வந்தவளாக, ஆழமாக மூச்செடுத்தவள், “ஆமா, எனக்கு நிஜமாவே பயமாதான் இருக்கு, இந்த நிமிஷம் என்னை நீங்க முழுசா தெரிஞ்சுகிட்ட பிறகு, உங்களுக்கு என்மேல் இருக்கும் இந்த ஈர்ப்பு, ஆசை, பாசம் எல்லாம் காணாமல் போய்டுமோன்னு எனக்கு பயமா இருக்கு” மனதை கல்லாக அல்ல, இரும்பாக்கிக் கொண்டு அந்த வார்த்தைகளை அவனிடம் உச்சரித்தாள்.

அதை விட்டால் அவளிடம் வேறு வழியே இல்லை. ஆனால் அதைச் சொல்லும் முன்பாகவே நெஞ்சுக்கூடு உலர்ந்து, இதயம் கசக்கிப் பிழியும் வலியை உணர்கிறாளே. இதை எப்படித் தடுக்கவாம்? உண்மை தெரிந்து போலியாக உரைக்கும் அவளுக்கே இப்படி இருக்கிறது என்றால், உண்மை தெரியாமல் தன் வார்த்தைகளை மட்டுமே கேட்கும் அவனுக்கு எப்படி வலிக்கும்?

அவனுக்கு வலிக்குமே என அதை அவனிடம் சொல்லாமல் இருக்கவும் முடியவில்லையே... கண்கள் அதன்போக்கில் கண்ணீர் வடிக்க, அவன் முகம் பார்க்க முடியாமல், மீண்டும் உரைத்தாள்.

“ஒரு விஷயம் தெரியாமல் இருக்குற வரைக்கும்தான் அதுமேல் ஆசை இருக்கும், தெரிஞ்சுட்டா, இவ்வளவு தானான்னு சப்புன்னு போய்டும், அதே மாதிரி... நானும் உங்களுக்கு...”.

“ஜஸ்ட் ஷட்அப் ஜானு... போதும், நிறுத்துறியா? இதுக்கு மேலே ஒரு வார்த்தை கூட பேசிடாதே” அந்த அறை அதிர கத்தியவன், அவள் படுக்கையில் இருந்து இறங்கி, தூரமாக விலகி நின்றான். அதுவே சொன்னது, அவன் தன்னை விட்டு மனதளவிலும் விலகிச் சென்று விட்டான் என, அதை அவளால் சகிக்க முடியவில்லை.

“என்ன சொன்ன? ஒரு முறை உன்னை தெரிஞ்சுகிட்டா, இவ்வளவு தானான்னு விலகிப் போய்டுவேன்’னா சொன்ன? என்னோட பன்னிரண்டு வருஷ காத்திருப்பு, காதல், பொறுமை இதையெல்லாம் நீ இதுக்கு மேலே கேவலப்படுத்தவே முடியாது ஜானு”.

“உன்னை விட்டு விலகி நிக்கிறதுதான் எனக்கு கஷ்டமா இருக்குன்னும் சொன்ன பிறகு... இல்ல... என்னோட உணர்வுகளை நீ புரிஞ்சுக்க முயற்சி செய்தால் நான் சொல்வதில் அர்த்தம் இருக்கு, அதை புரிஞ்ஜிக்கவே போறதில்லைன்னு நீ முடிவெடுத்த பிறகு...

“நான் சொல்லப்போகும் வார்த்தைகள் எல்லாம் ஜஸ்ட் ஒரு ஒலியாகத்தான் உனக்குத் தெரியுமே தவிர, என் வலியாக உனக்குத் தெரியப் போவதில்லை. அப்படி இருக்கும்போது இந்த வார்த்தைகளை உன்னிடம் சொல்வதைத் தவிர முட்டாள்த்தனம் வேறு எதுவும் இருக்கப்

போவதில்லை” அவ்வளவு வேதனையாக உரைத்தவன், அப்படியே குளியலறைக்குச் சென்று ஒரு குளியல் போட்டான்.

தன் மொத்த காதலும் அந்த நொடி செத்துப் போனதாகத் தோன்றியது. தன்னைத் தவிர்க்க வேண்டும் எனச் சொல்லியிருந்தாலும், இந்த வார்த்தைகளை அவள் எப்படிச் சொல்லலாம் என அவ்வளவு வேதனையாக இருந்தது.

அவள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் தன் நடு இதயத்தை குறிவைத்து அம்பால் தாக்கி, அதில் இருந்து சொட்டு சொட்டாக குருதி வழிவது போன்ற வலியை உணர்ந்தான். கண்ணீர் அவன் கன்னத்தில் இறங்க, அந்த சுடுநீரை கூட அவன் உணரவே இல்லை. அதை உணரும் நிலையிலும் அவன் இல்லை.

தன்னை மீறி கண்ணீர் விட்டு அவன் கதற, அவன் அழுகுரலைக் கேட்டவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அவன் குளிக்கச் செல்லவே, ஒரு நைட்டியை எடுத்து அணிந்தவள் அவனுக்காக காத்திருக்க, அவனது அழு குரல் அவளைத் தீண்டவே, குளியலறை அருகே ஓடிப் போனாள்.

“தீனா...” அவள் அவனை அழைத்தவாறு கதவைத் தட்ட, உள்ளே தாழிடப்படாத கதவு பட்டென திறந்து கொண்டது. அவள் உள்ளே பாய, அவனோ, சுவரில் தன் கரத்தை ஆனமட்டும் ஓங்கி குத்தியவன், ஷவருக்கு அடியில் தொப்பலாக நனைந்து நின்றிருந்தான்.

“தீனா என்ன பண்றீங்க? உங்களுக்கு என்மேல் தானே கோபம் என்னை என்ன வேண்ணா செய்ங்க, உங்களை ஏன் தண்டிச்சுக்கறீங்க” அவனுடன் ஷவரில் நனைந்தவாறே அவன் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

“உன்மேல் என்னால் கோபப்பட முடியுமா? இது வலி... ஆசையா கல்யாணம் பண்ணிகிட்டது இதுக்குத்தானா? இங்கே ரொம்ப வலிக்குது ஜானு. என்னைப் பார்த்து உன்னால் எப்படி அந்த வார்த்தையை சொல்ல முடிந்தது” அவன் தன் நெஞ்சை தொட்டுக் காட்ட, அவன் நெஞ்சிலே போய் விழுந்து கதறினாள்.

“இல்ல, உன் கண்ணில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வரக் கூடாது. அப்படி வந்தா, இந்த நிமிஷமே நான் என்னை அழிச்சுப்பேன்” அவளை தன்னைவிட்டு பிடிவாதமாக விலக்கி நிறுத்த அப்படியே விக்கித்துப் போனாள்.

“தீனா…?” தீனமாக அழைக்க,

“ஆமா, உன் தீனாதான் சொல்றேன். உன்னை ரொம்ப சந்தோஷமா வச்சுக்கணும்னு கல்யாணம் பண்ணிகிட்டேன். இப்போ நான் உன்னை தொடக் கூடாதுன்னு நீதான் சொன்ன, அதை என்னால் தாங்கிக்க முடியலை, ரொம்ப எதிர்பார்த்துட்டேனா, அந்த ஏமாற்றம், வலி அதான்…

“சாமிநாதன் எனக்கு அழச் சொல்லித்தான் வளத்தார். ஆம்பளைப்பிள்ளை அழக் கூடாதுன்னு ஒரு நாள் கூட சொன்னதில்லை. கண்ணீர், கவலை எல்லாம் எல்லாருக்கும் பொதுன்னு சொல்லி வளர்த்ததால் இந்த அழுகை எனக்கு பழகிய ஒன்றுதான்.

“ஆனா இங்கே நீ எதிர்பார்த்தது, கேட்டது நடந்துச்சு தானே. அப்போ நீ சந்தோஷமாத்தான் இருக்கணும். மறுபடியும் சொல்றேன், எந்த சூழ்நிலையிலும் உன் கண்ணில் இருந்து கண்ணீர் வரவே கூடாது. இப்போ நீ வெளியே போ…” பிடிவாதமாக அவளை வெளியே அனுப்பியவன், குளித்து உடை மாற்றினான்.

அவன் வெளியே வர எடுத்துக் கொண்ட அவ்வளவு நேரமும் வெளியே, வாசலில் கிடந்த அந்த ‘மேட்’டின் மீது அவள் அசையாமல் நின்றிருந்தாள். அவனது ஏமாற்றம், வலி அவளை பித்துபிடிக்கச் செய்தது. கதவைத் திறந்தவன், வாசலில் நின்றிருந்த அவளை ஒரு நொடி அசையாமல் பார்த்திருந்தான்.

“நீயும் குளிச்சுடு, நான் தொட்ட தீட்டெல்லாம் கரைஞ்சுடும்” அவன் சொல்ல, முட்டிய கண்ணீரை அப்படியே உள்ளிழுத்துக் கொண்டாள்.

அவள் தன் கண்ணீரை அடக்க முயல, அது அவனைப் பலமாகத் தாக்கியது. ‘இப்படி அவளை கண் கலங்க வைக்கவா திருமணம் செய்து கொண்டாய்?’ அவனது மனசாட்சி அவனைக் குத்திக் கிழிக்க, ஏமாந்த அவனது மனம் சமாதானமடைய மறுத்தது.

பகுதி – 23.

தீனாவின் குடும்பம், ஜனனியின் குடும்பம் மொத்தமும் ஒரு வேனிலும், மற்ற சொந்தங்கள் எல்லாம் மேலும் இரு வேனிலுமாக அவர்களது குலதெய்வக் கோவிலுக்குச் செல்ல, அந்த வேனுக்குள் தன் மனைவியின் அருகே அமராமல், தீனா, தன் நண்பன் அபய்யின் அருகே சென்று அமர்ந்து கொண்டான்.

அவனது அந்த செய்கையைப் பார்த்த அனைவருமே புருவம் உயர்த்த, அதையெல்லாம் அவன் கொஞ்சம் கூட கண்டுகொள்ளவே இல்லை.

“டேய் தீனா என்ன இது? ஒழுங்கு மரியாதையா போய் ஜனனி பக்கத்தில் உக்கார். காலையில் நீங்க சமாதானம் ஆக வேண்டித்தானே அவ்வளவு செய்தேன். இன்னும் இப்படி முறுக்கிகிட்டே உக்காந்திருந்தால் எப்படி? முதல்ல போ” மற்றவர்களுக்கு கேட்காத வகையில் அவனைக் கிளப்ப முயன்றான்.

“ஏன் எனக்கு மட்டும்தான் இப்போ கல்யாணம் ஆச்சா? நீயும் இன்னும் புது மாப்பிள்ளை தானே, நீ மட்டும் ஏன் உன் மனைவி கிட்டே உக்காராமல் இங்கே வந்து உக்காந்து இருக்கியாம்? நீயும் அவ கிட்டே போய் உக்கார வேண்டியது தானே” அவ்வளவு சூடாக பதில் கொடுக்க, அப்படியே வாயடைத்துப் போனான்.

அவன் தன் காதல் மனைவியை திரும்பிப் பார்க்க, அவனது பார்வை தன் பக்கம் திரும்புகிறது எனத் தெரிந்த உடனேயே, மாதும்மை தன் பார்வையை மட்டுமல்ல, முகத்தையே வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். அதைப் பார்த்தவன் ஒரு பெருமூச்சு ஒன்றை வெளியேற்றினான்.

“என்னடா, இன்னும் பெருமூச்சுதான் விட்டுட்டு இருக்கறியா? உனக்கே இப்படி என்னும்போது, எனக்கு மட்டும் அட்வைஸ் அப்படியே கிழியுது” அடிக்குரலில் கர்ஜித்தான்.

“என் கல்யாணமும், உன் கல்யாணமும் ஒண்ணாடா?” அதிர்ந்து போனான்.

“ரெண்டுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. நம்ம ரெண்டுபெருதும் ஒன்சைட் லவ் தான். என்ன காதலிச்சவளையே கட்டிகிட்டேன்னு வெளியே வேண்ணா பீத்திக்கலாம். உள்ளுக்குள் அவங்க கால்ல போட்டிருக்க செருப்பா கூட நம்மளை மதிக்கலை என்பது நம்ம மனசாட்சிக்கு தெரியும் தானே” யாரிடமும் பகிர முடியாத தன் வலியை நண்பனிடம் பகிர்ந்தான்.

கூடவே, “தயவு செய்து நான் சொல்றதை எல்லாம் உன் நண்பனா நினைச்சு மட்டும் கேட்டுக்கோ. உன் தங்கச்சிக்கு அண்ணனா என்கிட்டே எதையும் கேட்டுக்காதே புரியுதா?” குரலில் அவ்வளவு அழுத்தம் கொடுக்க, முன்பே தன் நண்பனைப் பற்றி தெரியும் என்பதால் பெரிதாக அவன் அலட்டிக் கொள்ளவில்லை.

“டேய், நாம ரெண்டுபேரும் மட்டும் பேசும்போது நாம எப்பொழுதும் நண்பர்கள் தான்டா. நீயே ஏன் குழப்பிக்கற?” அவனைத் தேற்றினாலும் தங்கையின்மேல் கோபமாக வந்தது. ஆனால் தன் கோபத்தைக் காட்ட சரியான தருணம் இதுவல்ல என்பது புரிய தன்னையே அடக்கிக் கொண்டான்.

கோவிலுக்குச் சென்று பொங்கல் வைத்து, சாமிக்குப் படைத்து முதல் பொங்கலை அவனிடம் கொண்டுவந்து கொடுக்க, அதை மறுக்காமல் பெற்றுக் கொண்டான். ஆனாலும் அவள் முகம் பார்க்கவே இல்லை.

அவள் அங்கிருந்து நகர்ந்து செல்லவே, ‘உன் தங்கச்சியை கட்டிக் கொண்டதற்கு இந்த பொங்கல் தான் மிச்சம்’ வாயை மீறி வழியத் துடித்த வார்த்தைகளை, அந்த பொங்கலை வாய்க்குள் தள்ளி அமிழ்த்திக் கொண்டான்.

அவன் வார்த்தையாக உரைக்கவில்லை என்றாலும், அவன் முகம் சொன்ன, வெளியிட்ட வார்த்தைகளை அபய் சரியாகவே மொழி பெயர்த்துக் கொண்டான். ஒரு வழியாக அவர்கள் கோவிலில் இரவு உணவை முடித்துவிட்டுக் கிளம்பவே இரவு ஒன்பது மணியைக் கடந்து விட்டது.

சொந்தங்கள் எல்லாம் அங்கிருந்தே தங்கள் வீட்டுக்கு கிளம்பி விடுவதாக சொல்ல, மற்றவர்களை அழைத்துக் கொண்டு சென்னைக்குத் திரும்பினார்கள். சென்னை வந்து சேர அதிகாலை மூன்று மணியாகி இருந்தது.

ஜனனியின் பெற்றவர்களும், அபய்யும் கூட விடை பெற்றுச் செல்ல, தீனா வேகமாக தங்கள் அறைக்குச் சென்று மறைந்தான்.

“அம்மாடி, நீ கீழேயே குளிச்சுட்டு ட்ரெஸ் மாத்திட்டு மேலே போ” அகிலாண்டம் உரைக்க, தன் பொங்கிய கண்ணீரை அவருக்கு காட்டாமல் மறைத்தாள்.

‘இப்பொழுது அலங்காரம் செய்துகொண்டு சென்று என்ன செய்யவாம்?’ மனம் வேதனையாக எண்ணிக் கொண்டது.

“அகிலாண்டம் அவளை விடு, அவ என்ன சின்னக் குழந்தையா? அவங்க வாழ்க்கையை அவங்க பாத்துக்கட்டும்” சாமிநாதன் உரைக்க, பெரும் விடுதலை உணர்வோடு அவரை நோக்கினாள்.

“நீ போம்மா…” சாமிநாதன் உரைக்க,

“காலையில் அவசரமா எல்லாம் கீழே வர வேண்டாம். நிதானமாக வந்தால் போதும்” அகிலாண்டமும் தன் பதிலுக்கு அவளிடம் சொல்ல, இருவரிடமும் விடை பெற்றுக் கொண்டு மேலே வர, படிகளில் ஏறினாள். கால்கள் அந்த படியிலிருந்து நகரவே மறுத்தது எனலாம்.

எந்த முகத்தோடு அவன் முன்னால் சென்று நிற்பதாம்? அந்த நேரத்தில் அவனுடன் தனித்திருக்க முடியும் என்றே தோன்றவில்லை. அவனது தவிப்புக்களையும், கோபங்களையும் எப்படி அவளால் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியுமாம்?

மேலே படியில் அப்படியே அவள் அமர்ந்துவிட்டாள். எழுந்து அவனது அறைக்குச் செல்லும் தைரியம் அவளிடம் சுத்தமாக இருக்கவில்லை. கீழே யாரோ நடமாடும் ஓசை கேட்கவே சட்டென அங்கிருந்து எழுந்து அறைக்குச் சென்றாள்.

அவள் அறைக்குள் வரவும், ஒரு போர்வை, தலையணையோடு தீனா அறையிலிருந்து வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது. அதற்குள்ளாகவே அவன் குளித்திருக்க, அவனது முகத்தையே தவிப்பாக பார்த்திருந்தாள்.

“நான் மேலே மல்லிகைப் பந்தலில் போய் படுத்துக்கறேன். நீ இங்கேயே தூங்கு. கதவைத் தாழ் போடாதே” அவள் முகம் பாராமல் உரைத்துவிட்டு, நொடியில் அங்கிருந்து அகன்றுவிட்டான். அவள்தான் கல்லாக சமைந்து நின்றிருந்தாள்.

அவன் முகம் பார்ப்பது எப்படி என அவள் யோசித்திருக்க, அதையும் அவனே யோசித்து செயல்படுத்திய விதம்? தனக்கு தனிமையும், நிம்மதியும் கொடுத்து அவன் விலகிச் சென்றிருக்க, அவனுக்கு கொஞ்சமாவது நிம்மதி கிடைக்குமா என ஏங்கிப் போனாள்.

எவ்வளவு நேரம்தான் வாசலிலேயே நிற்க முடியும்? அறைக்குள் மெதுவாக நுழைந்தவள் கதவை லேசாக சாற்றி வைத்தாள். அறையின் வெளிச்சம் வெளியே விழுந்து, பெரியவர்களை கவலை கொள்ளச் செய்ய வேண்டாமே என செய்தாள்.

அதன் பிறகு எதையுமே செய்ய அவளால் முடியவில்லை. படுக்கையில் வந்து தொப்பென அமர்ந்தவள், முகத்தை தன் கரங்களால் மூடிக் கொண்டாள். தான் வடிக்கும் கண்ணீர் எதற்கும் தீர்வாக அமையாது என்று தெரிந்தும் மனம் அதையே நாடியது.

‘எழுந்து அவரிடம் சென்று விடுவோமா? அவர் இந்த நேரம் எப்படி தவிக்கிறாரோ?’ சற்று நேரத்துக்கு முன்னர், அவன் முகம் பார்க்கவே முடியாது என எண்ணியவள், இப்பொழுது அவன் அருகே இருக்க பெரிதும் விரும்பினாள்.

அமர்ந்த வாக்கிலேயே, உடை கூட மாற்ற மனமின்றி அப்படியே படுக்கையில் பின்னால் சாய்ந்து படுத்துக் கொண்டாள். சுழலும் மின்விசிறியையே அவளது பார்வை வெறித்தது. எவ்வளவு நேரமோ தெரியாது, அவளையும் மீறி அவளது கண்கள் மூடிக் கொண்டது.

காலையில் அவள் கண் விழிக்கையில், போர்வையின் கதகதப்புக்குள் சுருண்டிருக்க, மெல்லிய குளிரும், அறைக்குள் நுழைந்திருந்த மெல்லிய வெளிச்சமும் அவளைக் கொஞ்சம் கலைத்தது.

‘இதெப்படி என் மேல்...?’ எண்ணியவள் போர்வையை கொஞ்சமாக விலக்கிப் பார்க்க, அவளுக்கு முதுகு காட்டி படுத்திருந்தான் தீனா.

‘இவர் எப்பொழுது வந்தார்? இவர்தான் என்னைத் தூக்கி நேராக படுக்க வைத்தாரா? இருந்த களைப்பில் அது கூட தெரியாமல் இருந்திருக்கின்றேனே’ தனக்குள் எண்ணியவள், நேரம் என்னவாக இருக்கும் என அறிந்துகொள்ள பார்வையைச் சுழற்றினாள்.

அவளது தலைக்கு பக்கத்தில் அவளது அலைபேசி இருக்க, அதில் நேரம் பார்க்க, அதுவோ பதினொன்று ஆக இன்னும் பத்து நிமிடங்களே இருக்கிறது என அவளை பயமுறுத்தியது.

‘ஆண்டவா இவ்வளவு நேரமா தூங்கிட்டேன்?’ எண்ணியவள், தீனாவின் உறக்கம் கலைந்துவிடாதவாறு மெதுவாக எழுந்து குளிக்கச் சென்றாள். குளித்து முடித்து உடை மாற்றி அவள் கீழே வர, நேரம் பதினொன்று முப்பதைக் காட்டியது.

‘அவங்க லேட்டா வரச் சொன்னாலும் இப்படியா இவ்வளவு லேட்டாவா வருவ?’ தன்னையே கடிந்தவாறு வந்தாள்.

அவளைப் பார்த்த உடனேயே, “வாம்மா... முதல்ல பூஜை ரூமில் விளக்கு ஏற்றிடு. இன்னும் மணி பன்னிரண்டு அடிக்கலை” அவர் உரைக்கவே, கொஞ்சம் குறுகுறுப்புடனே பூஜையறையில் விளக்கேற்றிவிட்டு வந்தாள்.

“இந்தாம்மா காபி குடி. நீ குடிச்சுட்டு பிறகு அவனுக்கு எடுத்துட்டு போய் கொடு. ரெண்டுபேரும் சேர்ந்து வந்து டிபன் சாப்பிடுங்க” அவர் சொல்ல, அவரிடம் எதையும் அவளால் மறுத்து பேச முடியவில்லை.

அவர் சொன்னவாறே காபி கப்புடன் மாடியேறிச் சென்றவள், ஒரு நொடி அவனை எப்படி எழுப்புவது எனத் தெரியாமல் தடுமாறிப் போனாள். ஆனாலும் நேரமாவதை உணர்ந்து, அவனது தோள் தொட்டு

உலுக்கியவள், “தீனா… தீனா எழுந்து காபி குடிங்க…” அவள் குரல் கொடுக்க, பட்டென விழி திறந்து கொண்டான்.

எழுந்து அமர்ந்தவன், அவள் கரத்தில் இருந்து காபியை வாங்கிக் கொள்ள, ‘இருக்கவா? போகவா?’ எனத் தெரியாமல் தடுமாறி நின்றிருந்தாள்.

அதைப் பார்த்தவன், “இனிமேல் அம்மா எனக்கு காபி கொடுத்து அனுப்பினால், நான் கீழே வந்தே குடிச்சுக்கறேன்னு சொல்லிடு” டம்ப்ளரை வாங்கி அங்கிருந்த டீபாவின்மேல் வைத்துவிட்டு, குளியலறைக்குள் சென்று புகுந்து கொண்டான்.

அவன் வெளியே வரும் வரைக்குமே அங்கிருந்து அவள் நகரவே இல்லை. குளித்துவிட்டு வந்தவன், உடை மாற்றிவிட்டு கீழே இறங்கிச் செல்ல, அவன் வைத்துவிட்டுச் சென்றிருந்த காபிக் கப்பை தூக்கிக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தாள்.

இருவரும் ஒரு வார்த்தை கூட பேசிக் கொள்ளாமல் உணவருந்த, அவர்களை தாய் வீட்டுக்கு விருந்துக்கு அழைக்க வந்தான் அபய்.

அவனைப் பார்த்தவன், “வாடா… என்ன காலையிலேயே உன் தூக்கத்தையும் கெடுத்து இங்கே அனுப்பி வச்சுட்டாங்களா? வா, வந்து சாப்பிடு” அவனை அழைக்க, ஜனனி தன் அண்ணனை ஓடி வந்து கட்டிக் கொண்டு வரவேற்றாள்.

பெரியவர்களும் அவனை சாப்பிட அழைக்க, “இப்போதான் நான் சாப்ட்டுட்டு வர்றேன். இவங்களை விருந்துக்கு அழைச்சுட்டு போகத்தான் வந்தேன். எப்போ வர்றீங்கன்னு சொன்னால், வண்டி எடுத்துட்டு வர வசதியா இருக்கும்” நண்பர்கள் என்றாலும் அனைத்தையும் முறையாக செய்ய வேண்டியது அவர்களது கடமை ஆயிற்றே,

“விருந்து எங்கேடா? பெரிய மாமியார் வீடா? இல்ல சின்ன மாமியார் வீடா?” அவனை வம்புக்கு இழுத்தான்.

“இந்த லந்து தானே வேண்டாம் என்பது. கலா சித்தி வீட்டுக்குத்தான் போறீங்க. ஆனா அம்மா அங்கே இருப்பாங்க. அங்கே முடிச்சுட்டு இன்னொரு நாள் எங்க வீட்டுக்கு வாங்க”.

“யாருக்குடா கிடைக்கும் இப்படி இரண்டு மாமியார் வீடு? எனக்கு கண்ணுக்குத் தெரியாம எங்கேயோ மச்சம் இருக்குடா” அவன் சொல்ல அனைவருமே சிரித்தார்கள்.

“எங்கேயோ இல்லடா... உனக்கு உடம்பு முழுக்கவே மச்சம்தான்”.

“என்னடா... நான் கருப்பா இருக்கேன்னு மறைமுகமா சொல்லிக் காட்டறியா?” அவன் போலியாக எகிற,

“மறைமுகமாவா? அடேய்... நேரடியாவேத்தாண்டாசொல்றேன்” அவன் சொல்ல, ஜனனிக்கு அப்படி ஒரு கோபம் வந்தது.

“அவர் ஒண்ணும் கருப்பு இல்லை” அவள் இடைபுக, அங்கே இருந்த இலகு சூழல் கலையப் பார்த்தது.

“ஆமா ஆமா... கருப்பு இல்லை, காக்கா கலர்...” அவன் மீண்டும் சொல்ல, எங்கே அகிலாண்டம் அவனை தவறாக எண்ணிக் கொள்வாரோ என்று அவளுக்கு கவலையாகிப் போனது.

அவள் மீண்டும் எதையோ சொல்லத் துவங்கும் முன்னர், “அட விடும்மா... இவனுங்க எல்லாம் நாயே, பேயே, குரங்குன்னு சொல்லிக்கிட்டு சண்டை போட்டுக்கற நாளில் இருந்து பாத்துட்டு வர்றேன். நம்மளை டென்ஷன் பண்ணி விட்டுட்டு அவங்க ஒண்ணு கூடிப்பாங்க. சோ... நீ இதையெல்லாம் கண்டுக்காதே” அவளைத் தடுத்தார்.

“அத்த... அவளை இன்னும் கொஞ்சம் கதற விடலாம்னு பார்த்தேன், இப்படி கெடுத்துட்டீங்களே” அவன் குறைபட, அவன் முதுகிலேயே ஒன்று போட்டார்.

“ஐயா கல்யாணத்துக்குப் பிறகு ரொம்ப பிஸி ஆயிட்டீங்க போல? இந்தப் பக்கம் வந்தே ஒரு மாசமாகுது?” அவன் காதைப் பிடித்து முறுக்கினார்.

“ஹையோ அத்த... ஃபிரண்டு வீட்டுக்கு எப்போ வேண்ணா வரலாம். மச்சான் வீட்டுக்கு அப்படியெல்லாம் வர முடியாதே அதான்...” அவன் ராகமிழுத்து உரைக்க,

“அம்மா… இப்போ என் சார்பா அவன் முதுகிலேயே நாலு வைங்க” தீனா உணவை முடித்துக் கொண்டான்.

அவன் செல்லவே, “நாளைக்கு மதியான சாப்பாட்டுக்கு அங்கே வந்துடுவாங்கப்பா. வேண்ணா ரெண்டு நாள் இருந்துட்டே வரட்டுமே இப்போ என்ன?” அகிலாண்டம் கேட்க, அவனுக்கு அப்படி ஒரு நிம்மதி. மகனுக்கு திருமணம் முடிந்த உடனேயே மாமியாராக மாறாமல், இன்னும் தாயாகவே இருக்கும் அவரைக் கண்டு வியந்தான்.

“சரி அத்த… அப்போ அதையே வீட்டில் சொல்லிடுறேன். மச்சான்… தங்கச்சியை கூட்டிகிட்டு நாளைக்கு விருந்துக்கு வாங்க. நீங்க கிளம்பி ரெடியா இருங்க, நானே வந்து அழைச்சுட்டு போறேன்” அவனிடமும் முறைப்படி அறிவித்தான்.

“சரிதான் விடுடா… நீ வான்னு சொன்னால் வந்துட்டுப் போறேன், சும்மா நீட்டி முழக்கற? சரி வா… கொஞ்சம் வெளியே போயிட்டு வரலாம். அம்மா நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வர்றேன்” நண்பனுடன் கிளம்பத் தயார் ஆனான்.

“டேய், இவளை தனியா விட்டுட்டு வெளியே போறேங்கற?”.

“அவளை எங்கே தனியா விட்டுட்டு போறேன். அதான் நீங்க ரெண்டுபேரும் இருக்கீங்களே. ஏன் சாமிநாதா, எனக்கு கல்யாணம் முடிஞ்ச உடனே, நீங்க ஹனிமூன் போகணும்னு ஏதாவது பிளான் பண்ணி வச்சிருந்தீங்களா என்ன?

“என்கிட்டே சொல்லவே இல்ல… அப்படிச் சொல்லியிருந்தால் அதுக்கு ஏற்ற மாதிரி நான் பிளான் பண்ணியிருப்பேனா இல்லையா?” அவன் இமை சிமிட்டி உரைக்க, அவரோ வெடித்து சிரித்தார்.

அதைப் பார்த்த அகிலாண்டம், “பேரன் பேத்தி பாக்குற வயசாச்சு. இன்னும் அவன் கூட சேர்ந்துகிட்டு பகடிக்கு கூட்டு சேருவதே இந்த கிழவருக்கு வேலையா போச்சு. நீங்க கொடுக்குற இடம்தான் அவன் இப்படியெல்லாம் பேசறான்.

“விவஸ்தை கெட்ட மனுஷன்... டேய் நீ அங்கேயே நில்லு... கரண்டியைக் காய வச்சு அந்த வாய் மேலேயே சூடு இழுக்கறேன். என்ன பேச்சு இது?” போலியாக அங்கே எதையோ தேடுவதுபோல் அவர் துழாவ, நண்பனை இழுத்துக் கொண்டு ஓடியே போனான்.

அவர்கள் இருவரும் செல்லவே, “நீ ஒண்ணும் தப்பா நினைக்காதம்மா. அவன் கொஞ்சம் குறும்புக்காரன் அவ்வளவுதான்” எங்கே ஜனனி தவறாக நினைத்துக் கொள்வாளோ என கவலை கொண்டார்.

“எனக்கு தெரியும் அத்தை... நீங்க கவலைப் படாதீங்க” அவரைத் தேற்றினாள். அவளது யோசனையோ தன்னவனைச் சுற்றியே வந்தது. இதுவே சாதாரணமாக தாங்கள் இருந்திருந்தால் அவன் வெளியே செல்ல என்ன, அபய் வந்ததற்கே ஏதாவது சொல்லியிருப்பான்.

ஆனால் இப்பொழுதோ, ஏதோ சாக்கிட்டு அவன் வெளியே சென்ற விதம் அவளை சோர்ந்து போகச் செய்தது. அவனை எப்படி சமாதானம் செய்வது என்றும் அவளுக்குத் தெரியவில்லை.

அதே நேரம் தன்னுடன் வண்டியில் வரும் தீனாவைப் பற்றித்தான் அபய்யும் யோசித்துக் கொண்டிருந்தான். அவர்களுக்குள் எதுவோ சரியில்லை என்ற சந்தேகம் அவனுக்கும் இருக்கிறதுதான். ஆனால், அவனது சொந்த விஷயத்தை ஒரு அளவுக்கு மேலே நண்பனாக இருந்தாலும் தலையிடுவது முறை இல்லையே.

“எங்கேடா போக?” அமைதியாக வந்த நண்பனைக் கலைத்தான்.

“ஏதாவது மால்... மூவி போகலாம்” அவன் சொல்ல, அதற்கு மேலே அவனிடம் எதையும் கேட்கவில்லை.

இருவருமாக மாலுக்குச் சென்று ஒரு திரைப்படம் பார்த்து முடிக்கையில் மூன்று மணி நேரங்களுக்கு மேல் கடந்திருந்தது. “லஞ்ச் சாப்ட்டுட்டு போகலாமா? உனக்குப் பசிக்கும்னு நான் யோசிக்கவே இல்லைடா” சங்கடமாக உரைத்தான்.

தன் மனதின் புழுக்கத்தை மறக்க வேண்டி, அவனைப் பயன்படுத்துகிறோமோ என்று இருந்தது. “டேய், நீ ஏதாவது வேலை

வைத்திருந்தாயா? நான் அதை கெடுத்துட்டேனா? உன்கிட்டே ஒரு வார்த்தை கூட கேக்காமல் ப்ரோகிராம் பண்ணிட்டேன்”.

“அட விடுடா… வீட்டில் சும்மா உக்காந்து இருப்பதற்கு இது எவ்வளவோ பரவாயில்லை. அதே மாதிரி, எனக்கு இப்போ பசிக்கலை. நீயும் வீட்டில் போயே சாப்பிடும். இல்லன்னா அத்தை பேசுற பேச்சு தாங்க முடியாது” அவன் உரைக்கவே, மறுக்காமல் அவனுடன் கிளம்பிவிட்டான்.

மதிய உணவை மாலையில் உண்டு முடிக்க, அனைவரும் ஒன்றாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். மனைவியின் அருகே தயங்காமல் அமர்ந்தவன், அவளது கரத்தை தன் கரங்களுக்குள் பொதிந்து கொண்டான்.

அவனது செய்கைக்கான காரணத்தை அவளால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிந்தது. அவன் வீட்டுக்கு வந்த உடனேயே, அகிலாண்டம் அவனை பிடி பிடியென பிடித்துவிட்டார்.

“ஆசைப்பட்டு கல்யாணம் பண்ணிகிட்டவன் மாதிரியா இருக்கற நீ? இதுக்கு முன்னால்தான் ப்ரண்ட்ஸ், கூட்டம், பார்ட்டி, கொண்டாட்டம்ன்னு சுத்திகிட்டு இருந்த. இப்போ உனக்குன்னு ஒருத்தி வந்து வீட்டில் காத்துகிட்டு இருக்கா.

“அவளைக் கொஞ்சம் கூட நினைத்துப் பார்க்காமல், நீ பாட்டுக்கு வெளியே சுத்திட்டு வந்தால் என்ன அர்த்தம்? அந்த பொண்ணு எவ்வளவு நேரம்தான் வாசலுக்கும், வீட்டுக்கும் நடந்துட்டு இருப்பா? நாங்க எல்லாம் அவளோட இருந்தாலும், நீ அவளோட இருக்குற மாதிரி வருமா?” அவர் கேட்க அவனால் பதில் சொல்லவே முடியவில்லை.

அவனும் என்ன பிடித்தா இப்படியெல்லாம் செய்கிறான்? அவளை அருகே வைத்துக் கொண்டு, பேசாமல் இருக்கச் சொன்னால் அவனால் மட்டும் முடியுமா என்ன? அதை அவரிடம் வெளிப்படுத்தாமல் அமைதி காத்தான். அவரது மனதை அமைதி படுத்தவே அவன் இப்படிச் செய்வதும், நடந்து கொள்வதும் அவளுக்குப் புரிந்தது.

அதன் பிறகு இரவு உணவின் பொழுதும் சரி, அனைவரும் சற்று நேரம் அமர்ந்து தொலைகாட்சி பார்க்கையிலும் அவள் அருகிலேயே

அமர்ந்திருந்தான். ஆனால் சற்று நேரத்தில் அவன் தனது பெற்றவர்களின் அறைக்கு எழுந்து செல்ல, 'ஏன்?' என்பதுபோல் பார்த்திருந்தாள்.

வாசலுக்கு நேராக இருந்த மேசைமேலே இருந்த ஒரு பாக்ஸில் இருந்த ஒரு மருந்து பட்டையை எடுத்தவன், அதைக் கையில் வைத்தவாறு சில நிமிடங்கள் நின்றிருந்தான். அதைப் பார்த்தவள், 'எதற்காக இப்படி நிற்கிறார்?' எண்ணிக் கொண்டாள்.

அவள் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே ஒரு மாத்திரையைப் பிரித்து அவன் போட்டுக் கொள்ள, 'இப்போ எதற்காக மாத்திரை சாப்பிடுகிறார்? அது என்ன மாத்திரை?' டிவியின் பக்கம் பார்வை இருந்தாலும், ஒரு கண் அவன் மீதே இருந்தது.

மாத்திரையை விழுங்கியவன் அவள் அருகே வந்து அமர, "அகிலாண்டம், மாத்திரை போட மறந்துட்டேன், கொஞ்சம் எடுத்துட்டு வா" சாமிநாதன் மனைவியை ஏவ, அவர் எழுந்து சென்று, சற்று நேரத்துக்கு முன்னர் தீனா மாத்திரையை எடுத்து சாப்பிட்ட பாக்ஸில் இருந்து மாத்திரைகளை எடுத்தார்.

"என்னங்க... மதியம் தூக்க மாத்திரை போட்டீங்களா என்ன? இதில் ஒரே ஒரு மாத்திரைதான் இருந்தது, அதைக் காணோம்" அகிலாண்டம் குரல் கொடுக்க, ஜனனியின் பார்வை சட்டென தீனாவை ஏறிட்டது.

அவள் பார்வை தன் பக்கம் பாயவே, சட்டென பார்வையை திருப்பிக் கொண்டான். 'அப்படியென்றால் இவர் எழுந்து சென்று தூக்க மாத்திரையா போட்டுக் கொண்டார்?' தனக்குள் கேட்டுக் கொண்டவளுக்கு அதற்கு மேல் அங்கே இருக்க முடியவில்லை.

சட்டென எழுந்து அவள் அறைக்கு விரைய, அவள் பின்னாலேயே அவனும் விரைந்தான். அவள் படுக்கையில் குப்புற விழுந்து அழுகையில் குலுங்க, தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

அவள் அழுவது தாங்காமல், "இப்போ எதுக்கு அழற? இன்னைக்காவது தூங்க வேண்டும் என்பதால் தான் ஒரே ஒரு மாத்திரை போட்டேன். மற்றபடி எதுவும் இல்லை" அவன் சொல்ல, அந்த வார்த்தைகள் அவளுக்குள் இறங்கி சிதைத்துக் கொண்டிருந்தது.

பகுதி – 24.

திருமணம் முடிந்து அதற்குள்ளாக ஒரு மாதம் மின்னலென ஓடி மறைந்திருக்க, அலுவலகத்தில் தன் மடிக்கணினியின் முன்னர் அமர்ந்திருந்த தீனாவின் முகம் வழக்கம்போல் வெகு இயல்பாகவே இருந்தது.

நொடிக்கொருமுறை தன் முதுகுக்குப் பின்னால் அமர்ந்திருந்த அவனை ஓரவிழிப் பார்வையாக கவனித்துக் கொண்டே இருந்தாள் ஜனனி. இந்த ஒரு மாதத்துக்குள் எத்தனையோ விதமான விமர்சனங்கள், அழுத்தங்கள், மனக்கசப்புக்கள் என அனைத்தையும் கடந்து வந்துவிட்டார்கள்.

அனைத்தையும் தீனா அசால்ட்டாக கையாண்ட விதம், பிரமித்துப் போனாள். கூடவே எதையும் விளையாட்டாக எடுத்துக் கொள்ளும் அவனுக்கு, தான் எவ்வளவு சீரியசான விஷயம் என்பதை அவள் முழுதாக அறிந்த நாட்கள்.

அவள் சொல்லும் எதையும் அவன் விளையாட்டாக எடுப்பதில்லை என்பதை கண்கூடாக கண்ட நாட்கள். ஆனால் அதை எண்ணி அவளால் சந்தோஷப்பட முடியவில்லையே. அவர்கள் உறவை அடுத்த கட்டத்துக்கு நகர்த்த அவள் எவ்வளவோ முயன்றுவிட்டாள்.

அவனது அந்த ஒற்றை கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை. “தீனா, எல்லாத்தையும் மறந்துட்டு நாம புதுசா ஆரம்பிக்கலாமே” ஒரு நாள் மெதுவாக அவள் பேச்சைத் துவங்க, அவனது நிதானமான பார்வை அவளது அடிமனதை சில்லிடச் செய்தது.

இத்தனை நாட்களாக அவள்மீது கொண்ட காதலில் ஒரு சதவீதம் கூட அவன் குறை வைக்கவில்லை. அவளை வார்த்தைகளால் வதைக்கவில்லை, துன்புறுத்தவில்லை, தன் ஏமாற்றத்தை, வலியை அவளிடம் வெளிப்படுத்திக் கொள்ளவும் இல்லை.

“இப்போ மட்டும் உன்னை முழுசா தெரிஞ்சுகிட்ட பிறகு நான் மாறிட மாட்டேன்னு என்ன கேரண்டி ஜனனி?” அவனது அந்த நிதானமான கேள்விக்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை. உன்னை அந்த நாள்

தடுத்து நிறுத்த மட்டுமே அப்படிச் சொன்னேன் என்ற உண்மையைச் சொல்ல அவளுக்கு அச்சமாக இருந்தது.

‘என்னை விட என் தாயின் பேச்சு உனக்கு பெரிதாகப் போய்விட்டதா?’ என அவன் கேட்டால் அவள் என்ன பதில் சொல்வதாம்? அவள் அமைதியாக அவனைப் பார்க்க,

“நீ அப்படி கேட்ட பிறகு, ஒரு வேளை அப்படியும் ஆயிடுமோன்னு எனக்கே மனசுக்குள் பயம் வர ஆரம்பிச்சுடுச்சு. ஏன்னா... அந்த அளவுக்கு உன்னை முழுசா தெரிஞ்சுக்கணும் என்ற ஆசையும் வேகமும் எனக்குள்ளே கொட்டிக் கிடந்தது.

“ஆனா இப்போ... சரி இப்போவாவது உண்மை என்னன்னு சொல். என்னோட மொத்த உணர்வுகளையும் நீ குப்பை மாதிரி தூக்கிப் போடும் அளவுக்கு எது உன்னை செய்யத் தூண்டியது?” அவள் அருகே நெருங்கி வந்து வினவ, அவளுக்கு நாவை அசைக்க கூட முடியவில்லை.

அந்த கேள்விகளை அவன் கோபமாகக் கேட்டிருந்தால் கூட கொஞ்சம் சாதாரணமாக உணர்ந்திருப்பாள். ஆனால், அவன் குரலில் தொனித்த அந்த வலி, அதை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. ‘ஓ’வென கதற எழுந்த உணர்வை அடக்கவே அவள் மிகுந்த சிரமப் பட்டாள்.

அவனை தாவி இறுக அணைத்துக் கொண்டு, அவன் பரந்த நெஞ்சில் முகம் புதைக்க, அவளை அணைக்கத் துடித்த கரத்தை நேராக தொங்கப்போட்டுக் கொண்டு அசையாமல் நின்றிருந்தான்.

கூடவே, “என்னை விட்டு எப்பவும் ரெண்டு அடி தள்ளியே நில் ஜனனி” அவன் இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டு உரைக்க, அதற்குமேல் அவன் உணர்வுகளைக் கொல்ல மனமின்றி வேகமாக விலகிக் கொண்டாள்.

“தீனா...” தவிப்பாய் அழைக்க, வேகமாக அங்கிருந்து அகன்றிருந்தான்.

அதைவிட அவர்களை தேனிலவுப் பயணத்துக்குச் போகச் சொல்லவே, பெரியவர்களின் திருப்திக்காக என்று கூட அதைச் செய்ய மறுத்தான். அதற்கு அவன் சொன்ன காரணம்தான் வெகு சிறப்பே.

“என் உயிர் நண்பன் அபய் போகாத தேனிலவுக்கு நானும் போகவில்லை” வெகு உறுதியாக மறுக்க, அவன் சொன்ன காரணத்தை பெரியவர்கள் யாருமே ஒத்துக் கொள்ளவே இல்லை.

“தீனா, அவன் வாழ்க்கை வேற, உன் வாழ்க்கை வேற, அவனுக்காக நீ ஏன் உன் சந்தோஷத்தை விட்டுக் கொடுக்கணும்?” அகிலாண்டம்தான் ஆற்றாமையாகப் புலம்பினார்.

“ஹனிமூன் போனாதான் நான் சந்தோஷமா இருப்பேனா என்ன? இப்போவே நான் சந்தோஷமாத்தான் இருக்கேன். காதலிச்ச பொண்ணையே கட்டிக்கிறதை விட பெரிய சந்தோசம் வேற என்ன இருக்கு?” அவரிடம் கேட்டு, அவரது வாயடைக்கச் செய்துவிட்டான்.

ஆனால் அவன் சொன்ன காரணத்தையோ மறுப்பையோ ஏற்றுக் கொள்ளாத ஒரு ஆள் உண்டு என்றால் அது அபய் மட்டுமே. அவனைத் தனியாக பிடித்தவன், தனக்கு உண்மையான காரணம் தெரிந்தே ஆகவேண்டும் என உரைக்க, தன் நண்பனிடம் மறைக்க அவனால் முடியவில்லை.

சொல்லப்போனால் அபய்யின் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் நடக்கும் நிகழ்வுகள் அனைத்தும் தீனாவுக்குத் தெரியும் என்கையில், தன் வாழ்க்கையை அவனிடம் திறந்து காட்டுவதில் அவன் தயக்கம் காட்டவில்லை.

“மாதும்மைக்கு என்ன பிரச்சனை, ஏன் அவ உன்னோட சேர மாட்டேங்கறா என்ற காரணமாவது உனக்குத் தெரியும். ஆனா, அப்படி ஒரு காரணம் கூடத் தெரியாமல் நான் நிக்கறேன் அபய்” அவன் சொல்ல, அபய் திடுக்கிட்டான்.

“என்னடா சொல்ற? ஜனனியா? உன்னை அவாய்ட் பண்றாளா?” அவனால் நம்ப முடியவில்லை. இருவரும் ஒருவருக்கொருவர் எந்த அளவுக்கு நேசித்தார்கள் என்பது அவனுக்குத் தெரியுமே. அவனும் மாதும்மையும் என்றால் கூட, அவளுக்கு அவன்மேல் சிறு பிடிப்பும் கூட கிடையாது.

அது முழுதாக தெரிந்தும் பிடிவாதமாக அவளைத் திருமணம் செய்து கொண்டான். எனவே அவர்களது வாழ்க்கை இப்படி அடுத்த கட்டத்துக்கு நகராதது இயற்கை, ஆனால் இவர்கள்?

“இந்தப் பொண்ணுங்க மனசை புரிஞ்சுக்கவே முடியல மச்சான். அவ்வளவு எதிர்பார்ப்போட இருந்தப்போ எதுவும் முடியாதுன்னு சொல்லிட்டு, இப்போ எதுவுமே இல்லன்னு சொன்னால்... கேக்குற நான் கேனையனா இல்ல...” கொந்தளிக்கும் தன் கோபத்தை அப்படியே கட்டுப்படுத்திக் கொண்டான்.

அபய்க்கு தன்கையின்மேல் கட்டுக்கடங்காமல் கோபம் பெருகியது. மனமொத்து நேசித்து, அத்தனை வருடங்கள் காத்திருந்து, அவனை முழுதாக புரிந்துகொண்டு மணந்துகொண்டாள் என நினைத்தால், அதைப் பொய்யாக்கிவிட்டு இதென்ன?’ என அவனுக்கு கவலையாகப் போயிற்று.

அன்றைக்கே தங்கையை தனியாக சந்தித்தவன் அவளை வார்த்தையால் வெளுத்து வாங்கிவிட்டான். கணவனிடம் உண்மையை சொல்ல முடியாத அவளால், தன் அண்ணனிடம் மட்டும் சொல்லிவிட முடியுமா என்ன? அழுகையையே பதிலாக்க,

“இந்த பொண்ணுங்க எல்லாம் பொண்டாட்டியா மாறின உடனே ஏன் இப்படி மாறிப் போய்டறீங்கன்னு எனக்குப் புரியவே இல்லை. உன்கிட்டே இருந்து இதை நான் எதிர்பார்க்கவே இல்லை ஜனனி. அவன் இவ்வளவு வெக்ஸ் ஆகி இன்னைக்குதான் நான் பாக்கறேன், அதுக்கு காரணம் நீன்னு தெரியும்போது, போ ஜனனி...

“என் வாழ்க்கையை நானே அப்படி தேர்ந்தெடுத்தேன், அது முழுக்க முழுக்க என்னோட முடிவு. ஆனா இது... இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போகலை, அவன்கிட்டே பேசு” அவளது பதிலை எதிர்பாராமல் சென்றுவிட்டான்.

அவன் ஜனனியிடம் கோபம் கொண்டான் என்பதை அறிந்த தீனாவுக்கு அவ்வளவு ஆத்திரம். அவனைத் தேடி அவனது அலுவலகத்துக்கே சென்றவன், “என் பொண்டாட்டியை திட்றதுக்கு நீ யார்? நானே என் பொண்டாட்டியை திட்டலை, எதுவும் சொல்லலை, நீ எப்படி அவளைப்

பேசலாம்? இன்னொரு முறை நீ இப்படி செஞ்சன்னு எனக்குத் தெரிஞ்சது என்ன செய்வேன்னே எனக்குத் தெரியாது" தீனா அவனிடம் கோபம் கொள்ள, அதை புன்னகையோடே ஏற்றான்.

அதைக் கேள்விப்பட்ட ஜனனிக்கு இன்னும் அதிக தவிப்பாக இருந்தது. தனது அந்த உணர்வுகளை அவனுடன் பகிர்ந்துகொள்ளக் கூட அவளால் முடியவில்லை. அவளை தாய் வீட்டுக்கு அழைத்துச் செல்வதிலோ, வெளியே அழைத்துச் செல்வதிலோ, நண்பர்களோடான சந்திப்புக்கள், கொண்டாட்டம் எதிலும் தங்கள் பிளவை அவன் வெளிப்படுத்திக் கொள்ளவே இல்லை.

அவனது அந்த செய்கையே அவர்களது மனக் கசப்பை மற்றவர்களிடம் இருந்து மறைத்தது. அவனிடம் அவள் மிஸ் செய்த ஒரு விஷயம் உண்டென்றால், அது அவனது ஜானு என்ற அழைப்பு... கூடவே அவனது பிரத்தியேகப் பார்வை, அவளிடம் தானாகவே எதையாவது வாய் ஓயாமல் பேசும் பேச்சுக்கள் இவற்றை அதிகம் மிஸ் செய்தாள்.

அவளாகப் பேசினால் அவன் பதில் கொடுக்க மறுப்பதில்லை. ஆனால் முதல் பேச்சை அவனாகத் துவங்கவும் இல்லை என்பது அவளை அதிகம் பாதித்தது. ஒற்றை படுக்கையில் தங்கள் படுக்கையை பகிர்ந்து கொண்டாலும், அவள் பக்கம் கூட திரும்ப மறுக்கும் அவன் செய்கை, அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை.

அனைத்தையும் விட, தினமும் அலுவலகத்தில் அவள் அருகே அமைதியாக வந்து சில நொடிகள் அமர்ந்திருப்பானே, அது... அவளுக்கு கொடுக்கும் ஆறுதலின் அளவு இன்னதென்று அவன் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

ஆனால், இப்பொழுதெல்லாம் அவளைவிட்டு அமைதியாக அவன் கடந்துவிட, நாட்கள் அவளை சதிராடத் துவங்கியது. அந்த ஆறுதலை அவனிடம் வாய்விட்டு கேட்கவும் அவளால் முடியவில்லை. அவள் அனைத்தையும் எண்ணியவாறு அமர்ந்திருக்க, அங்கே வந்த ஜெனிட்டா அவள் தோளைப் பிடித்து உலுக்கினாள்.

நினைவுகளில் இருந்து கலைந்தவள், அவள் பக்கம் திரும்பினாள். "என்ன ஜெனி?".

“கேண்டீன் போற டைம்ப்பா... என்ன அப்படியே உக்காந்து இருக்கீங்க?” அவள் கேட்ட பிறகுதான், நேரம் போனதையே அறிந்தாள்.

வழக்கமான நண்பர்களின் கொட்டம் அப்பொழுதும் நடந்தேற, சபரியைப் போட்டு தீனாவும் காதரும் போட்டு மொத்திக் கொண்டிருக்க, அதைப் பார்த்த நுஹா, “காதர்... அவனைப் போட்டு எதுக்கு இப்படி அடிக்கறீங்க விடுங்க” அவர்களைத் தடுத்தாள்.

“நாங்க எதுக்கு அடிக்கறோம்னு சொன்னா, நீங்களே இவனை மொத்துவீங்க” சொன்னவன் மீண்டும் சபரியைக் குத்தினான்.

“டேய் போதும்டா... தெரியாமல் சொன்னதுக்கு இந்தப் பாடா?” அலறிக் கொண்டிருந்தான்.

“என்னது தெரியாம சொன்னியா? உன்ன...” மீண்டும் அவனை அடிக்கப் பாய, தீனா அவனைத் தடுத்தான்.

“அட போதும்டா மாப்ள, இதுக்கு மேலே அடிச்சா அவன் தாங்க மாட்டான்” சொன்னவனுக்கு சிரிப்பை அடக்குவது பெரும் பாடாக இருந்தது.

அவன் சிரிப்பதையே ஜனனி இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்க, “புருஷனை இப்படி சைட் அடிக்கணுமா?” ஜெனிட்டா அவள் தோளில் இடிக்க, தன் பார்வையை அப்பொழுதும் அவள் திருப்பிக் கொள்ளவே இல்லை.

தீனா இப்படி மனது விட்டு சிரிப்பதைப் பார்த்தாலே அவள் அடிமனதுக்குள் ஒருவித பாரம் அழுத்தும். தன் கவலைகளை எல்லாம் அவன் அந்த சிரிப்பின் பின்னால் மறைக்க முயல்வதை முழுதாக உணர்ந்தவள் ஆயிற்றே.

“தீனா, இப்படி சிரிக்கிற அளவுக்கும், அவன் அடிக்கிற அளவுக்கும் சபரி என்ன செய்தான்? எங்களுக்கும் கொஞ்சம் சொல்லுங்களேன்” அவள் கேட்கவே முயன்று தன் சிரிப்பை கட்டுப்படுத்திக் கொண்டான்.

“இதை நான் சொல்றதை விட, அனுபவப்பட்ட நம்ம காதர் சொல்றதுதான் சரியா இருக்கும். நீயே சொல்லுடா” நண்பனைப் பிடித்து தன் அருகில் அமர்த்திக் கொண்டான்.

சபரியை முறைத்தவாறே தீனாவின் அருகில் அமர, சபரி தன் முதுகையும், கையையும் தடவியவாறே முகத்தை பாவமாக வைத்துக்கொண்டு சற்று தள்ளி அமர்ந்து கொண்டான்.

“இல்லப்பா… ரெண்டு நாளைக்கு முன்னாடி அவுட்டிங் போயிருந்தோம். திடீர்ன்னு பாத்தா, அங்கே பாருங்கடா மட்டன், மட்டன்னு கத்துறான். சரி இவன்தான் சரியான தீனிப் பண்டாரமாச்சே, எங்கேயோ மட்டன் கடையை பாத்துட்டான் போலன்னு வண்டியை நிறுத்திட்டு பாத்தா, அங்கே கடையவே காணோம்.

“என்னடா மட்டன்னு சொன்ன, இங்கே கடையவே காணோம்னு கேட்டா, ஏண்டா இப்படி கூட்டமா இவ்வளவு மட்டன் நிக்கிறது உங்க கண்ணுக்குத் தெரியலையான்னு கேக்கறான். ஒரு நிமிஷம் குழம்பிப் போய்,

“மறுபடியும் எங்கேடான்னு கேட்டா… அங்கே கூட்டமா கொஞ்சம் ஆடு மேஞ்சுகிட்டு இருந்ததைக் காட்டி, இதுதாண்டா மட்டன்னு சொல்றான்” அவன் சொல்லி முடிக்கவே, அந்த இடமே சிரிப்பில் அதிர்ந்தது.

காதர் அதைக் கண்டுகொள்ளாமல், “டேய் இதுக்குப் பேர் அதுவாடா?ன்னு கேட்டா… சண்டே எல்லாம், வீட்டில் மட்டன்னு தானேடா சொல்வோம்ன்னு எதிர் கேள்வி கேக்கறான், எங்களுக்கு எப்படி இருக்கும்?

“அதுக்குப் பேர் அது இல்லைன்னு சொன்னா, இல்லவே இல்லைன்னு சாதிக்கறான். இவனை என்ன செய்யலாம்” சபரியை முறைக்க, அவன் முகத்தை பரிதாபமாக வைத்துக் கொண்டான்.

“அப்போ அதுக்குப் பேர் அது இல்லையா?” அவன் அப்பாவியாக கேட்க, ஹையோ… அங்கே சிரிப்பு அடங்க மறுத்தது.

ஒரு வழியாக சிரித்து முடித்து, கொஞ்சம் தெளிந்த ஜெனிட்டா, “ரெண்டு நாளுக்கு முன்னாடி நடந்ததுக்கு இன்னைக்கு அவரைப் போட்டு இப்படி அடிக்கணுமா?” சபரிக்காக பரிதாபப் பட்டாள்.

“இந்த நாயை அதுக்கு மட்டும் அடிக்கலை, இப்போ அவன் சொன்னதுக்கு வேண்டிதான் அடிச்சோம்” காதர் அவனை கொலைவெறியில் முறைத்தான்.

“இப்போ என்ன?” அவள் சுவாரசியமானாள்.

“இல்ல... நாலு நாளா ஒரே வயித்துவலி, குடல்ல புண்ணா இருக்குமோன்னு பேசிகிட்டு இருந்தா, ‘ஏண்டா மச்சான், குடல்ன்னா ‘போட்டி’ தானேன்னு கேக்கறான். ஆத்திரம் வருமா இல்லையா?” காதர் முடிக்க, அனைவருமே விழுந்து புரண்டு சிரிக்கத் துவங்கினர்.

அந்த சிரிப்பு அடங்கவே சில பல நிமிடங்கள் தேவைப் பட்டது. தீனா சிரித்தவாறே ஜனனியின் பக்கம் பார்த்தவன், அப்பொழுதுதான் அவளது பார்வையை கண்டு கொண்டான். இதுவே மற்ற நேரமாக இருந்திருந்தால் கொஞ்சம் கூடத் தயங்காமல் எழுந்து சென்று அவளை இறுக அணைத்திருப்பான்.

ஆனால் இப்பொழுது அதைச் செய்ய முடியாமல் அவளது வார்த்தைகள் அவனைத் தடுக்கக், அந்த இயலாமை அவனுக்கு பெரும் வலியைக் கொடுத்தது. ‘இப்படி பாத்தே மனுஷனை சாவடிக்கறாளே’ மனதுக்குள் எண்ணியவன் சட்டென அங்கிருந்து அகன்றுவிட்டான்.

அவளை வார்த்தைகளால் காயப்படுத்திவிடக் கூடாது அனா அவன் அதிக கவனமெடுத்தாலும், அவனும் ஊனும், உயிரும், உணர்வும் கொண்ட மனிதன் ஆயிற்றே. ஏமாற்றம் கொடுத்த வலியை இல்லையென மறுப்பது அவனுக்கு கடினமாகவே இருந்தது.

அவளது பார்வைகள் விடுக்கும் அழைப்பு, அதில் வெளிப்படும் காதல், அவள் மனதின் வலி, அதை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவளுடன் சந்தோஷமாக குடும்பம் நடத்தவேண்டும், நான்கு குழந்தைகள் பெற்றுக்கொள்ள வேண்டும், அவளைப் பூப்போல் தாங்க வேண்டும் என

அவன் எண்ணியிருந்ததற்கு மாறாக நேரும் இந்த நிகழ்வுகள், அதை அவனால் சகிக்க முடியவில்லை.

அலுவலகத்தை விட்டு வெளியே வந்தவனின் மனம் பொருமியது. 'எத்தனைமுறை கேட்டுவிட்டேன், அவள் உண்மையைச் சொன்னால்தான் என்ன?' அவனுக்கு அதுவே பெரும் கோபமாக இருந்தது.

மறுநாள் அலுவலகம் வழக்கம்போல் இயங்க, ஜெனிட்டா அன்றைய காபி பிரேக்கில் தனது திருமண அழைப்பிதழை அவர்கள் அனைவரிடமும் கொடுத்தாள்.

"ஹேய் ஜெனி, சொல்லவே இல்லை... இதெப்போ நடந்தது? வாழ்த்துக்கள்" ஜனனி சட்டென எழுந்து தோழியை இறுக அணைத்துக் கொண்டாள்.

"எனக்குதான் மாப்பிள்ளை பாத்துட்டு இருக்காங்கன்னு உனக்குத் தெரியுமே. செட் ஆயிடுச்சு, இதற்கு மேலே தள்ளிப் போட வேண்டாம்னு எல்லாரும் முடிவு பண்ணிட்டாங்க, சோ உடனே கல்யாணம். ஆனா கல்யாணம் இங்கே இல்லை. பெங்களூரில்...

"நீங்க எல்லாரும் பெங்களூருக்கு வர வேண்டிய ட்ரான்ஸ்போர்ட், போர்டிங் எல்லாமே நாங்க பாத்துக்கறோம். சோ... எந்த சாக்குபோக்கும் சொல்லக் கூடாது..." அவள் சொல்ல, அங்கே சந்தோஷத்துக்கு குறைவிருக்கவில்லை.

"என்னப்பா இது... கல்யாணத்தை ஏன் பெங்களூரில் வைத்து இருக்கீங்க?" நிவேதாதான் கேட்டாள்.

"அவரோட பெத்தவங்களோட பூர்வீகம் பெங்களூர் தான். அவரோட சொந்தங்கள் எல்லாரும் அங்கே இருப்பதால், கல்யாணத்தை அங்கே வைக்கணும்னு சொல்லிட்டாங்க".

"ஆனா நீங்க அதுக்காக எல்லாம் கவலைப் படாதீங்க. இங்கே நம்ம தீனா மட்டும்தான் ஃபேமிலி மேன்... அவருக்கு மட்டும் தனி ரூம் ஏற்பாடு பண்றேன்... மத்தவங்களுக்கு எல்லாம் ஒண்ணாவே ரூம் போட்டுடவா?"

அவள் கேட்க அனைவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

“ஜெனிட்டா, ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணிக்க வேண்டாம். பாய்ஸ்க்கு எல்லாம் ஒரு ரூம், லேடிஸ்க்கு எல்லாம் ஒரு ரூம் தட்ஸ் எனஃப்” அவன் சொல்ல, ஜனனி அவனை சட்டென ஏறிட்டு அழுத்தமாகப் பார்த்தாள்.

ஆனால் அவன் அதைப் பற்றியெல்லாம் கொஞ்சம் கூட கண்டுகொள்ளவில்லை. “ஜனனி கண்டிப்பா வருவா. நுஹாவும், நிவேதாவும், மாதும்மையும் வர்றாங்களான்னு கேட்டுக்கோ.

“வேண்ணா மாதும்மை வர்றதை அபய் கிட்டே கேட்டு கன்பாம் பண்றேன். இல்லன்னாலும் பிரச்சனை இல்லை, ஜனனியே அவ அண்ணிகிட்டே பேசுவா” அவன் சொல்ல, ‘மாதும்மை வருவாளா?’ என்றுதான் அனைவரும் யோசித்தார்கள்.

பொதுவாக எங்கே என்றாலும், சிறு பார்ட்டி, கெட்டுகதர்என்றாலும் வரவே மாட்டாள். அப்படி இருக்கையில் எந்த நம்பிக்கையில் அவன் சொல்கிறான் என்றே அவர்களுக்குப் புரியவில்லை.

“அண்ணி இந்த முறை கண்டிப்பா வருவாங்கன்னுதான் நினைக்கறேன். ஜெனிட்டா நீ ஒரு கார்ட் மட்டும் அவங்ககிட்டே கொடுத்துடு”.

“கார்ட்தானே, கண்டிப்பா கொடுக்கறேன் அதெல்லாம் ஒரு மேட்டரா? ஆனா…” அவள் தயங்க,

“ம்ச்… அதான் நாங்க சொல்றோம் தானே… நீ கொடு. நான் கூட வேண்ணா வர்றேன்” அவள் சொல்ல, மாதும்மை தன்னிடம் எப்படி ரியாக்ட் செய்வாளோ என்றுதான் அவளுக்கு இருந்தது.

காபி டைம் முடிந்து அனைவரும் கேபினுக்கு திரும்ப, “நிவேதா, முன்னெல்லாம் அடங்க மாட்டாமல் அவ்வளவு வம்பு பண்ணுவ, இப்போ என்ன சைலண்டா இருக்க?” அவளிடம் கேட்டாள்.

“அட நீங்க வேற… அதான் மொத்த பல்ப்பையும் ஒவ்வொரு முறையும் எனக்கே கொடுத்தால் நானும் என்னதான் பண்றது?” அவள் சோகமாக கேட்க, தோழிகள் அனைவரும் சிரித்துக் கொண்டார்கள்.

“சிரிக்காதீங்கையா...” அவள் அதற்கும் சிணுங்கினாள்.

“நீ தேவையில்லாத இடத்தில் டெஸ்ட் வைத்தால் அதற்கு அவர் என்ன செய்வார்? அதெல்லாம் விடு... நீ எப்பொழுதும் போல இரு” அவளை இயல்பாக்கினார்கள்.

அவளும் நுஹாவும் தங்கள் இடத்துக்குத் திரும்ப, ஜெனிட்டாவும், ஜனனியும் மாதும்மையைத் தேடி வந்தார்கள். அவர்கள் தனக்கு அருகே வரவே, கேள்வியாக அவர்களை நோக்கினாள்.

“மாதும்மை... வர்ற பதினைந்தாம் தேதி எனக்கு கல்யாணம். கண்டிப்பா நீங்க வரணும்” அவளிடம் பத்திரிக்கையை நீட்ட, தன் இருக்கையில் இருந்து எழுந்து அதை வாங்கிக் கொண்டாள்.

“கங்கிராட்ஸ்... என்னால் முடிந்தால் கண்டிப்பா வர்றேன்” அவளிடம் புன்னகைத்தாள்.

“முடிந்தால் இல்லை, ஜனனியும் தீனாவும் வர்றாங்க. நீங்களும் அவங்களோட வந்தால் நான் ரொம்ப சந்தோஷப் படுவேன்” அவள் மீண்டும் அழைக்கவே, அவள் ஜனனியைப் பார்த்தாள்.

“அண்ணா கண்டிப்பா வருவாங்க. அதான் நீங்களும் வருவீங்கன்னு சொல்லிட்டேன்” எங்கே கோபப்படுவாளோ என சற்று தயங்கினாள். ஆனால், முன்னர் இருந்த மாதும்மை இப்பொழுது இல்லை என்பதால் நிச்சயம் அவள் வருவாள் என்றே நம்பினாள்.

“ஜனனி சொல்லிட்டாளா? அப்போ நான் கண்டிப்பா வர்றேன்” மாதும்மை புன்னகைக்க, அவளை உலகின் எட்டாவதுஅதிசயத்தைப் பார்ப்பதுபோல் பார்த்தாள்.

அதைப் பார்த்த ஜனனி, அவளது விலாவில் இடித்து அவளைக் கலைக்க, “தேங்க்ஸ்...” உரைத்தவள் அங்கிருந்து அகன்றாள்.

அடுத்து வந்த நாட்கள் எல்லாம், சில நேரம் தீனாவும், ஜெனிட்டாவும் கூடிப் பேச, அவர்கள் அப்படி என்ன பேசுகிறார்கள் எனத் தெரியாமல் குழம்பிப் போனாள். ஒரு வேளை பழைய அவன் மீண்டும் அவளிடம் எதுவும் தொல்லை செய்கிறானோ என எண்ணினாள்.

ஜெனிட்டாவின் விஷயத்தை திருமணத்துக்குப் பிறகு அவளிடம் தீனா உரைத்திருந்ததால் அவளுக்கு அதைப்பற்றி தெரியும். ஆனால் அதை தோழியிடம் கேட்டு சங்கடப்படுத்த அவள் விரும்பவில்லை. அவர்கள் பேசுவதற்கான காரணம் அடுத்த நாளே அவளுக்குத் தெரிய வந்தது.

அன்று அலுவலகத்துக்கு ஒரு லேடி டெய்லர் வர, நுஹா, மாதும்மை, ஜனனி, நிவேதா என நால்வருக்கும் அளவுகள் எடுக்கப் பட்டது. 'இது எதற்கு?' என அவர்கள் கேட்டதற்கு, உடைக்கு என மட்டுமே சொல்லப் பட்டது.

ஒரு வழியாக திருமணத்துக்கு அனைவரும் கிளம்பிச் சென்றார்கள். ஆண்கள் அனைவரும் ஒன்றாக கொண்டாடித் தீர்த்தார்கள் என்றே சொல்லலாம். பெண்களும் ஒன்றாக இருக்கும் அந்த நேரத்தை பாழ் படுத்திக் கொள்ள விரும்பவில்லை.

நுஹாவின் அப்பா தன் மகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்ததால், அவளால் எங்கும் எப்பொழுதும் செல்ல முடிந்தது. அவளது தாய் தடுத்தாலும், திருமணம் முடியும் வரைக்கும், அவள் சுதந்திரமாக இருந்துவிட்டுச் செல்லட்டும் எனச் சொல்லி தடுத்து விடுவார்.

எனவே அவள் தன் வாழ்க்கையை ஆழ்ந்து அனுபவித்தாள். அதே நேரம் பெற்றவர் கொடுத்த சுதந்திரத்தை எந்த நேரத்திலும் அவள் தவறாக பயன்படுத்திவிடக் கூடாது என்பதிலும் உறுதியாக இருந்தாள். அது இந்த ட்ரிப்பில் ஆட்டம் காணும் என அவள் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

அவர்களுக்கு கொடுத்திருந்த தகவல் படி, திருமண நாள் அன்று காலையில் பெங்களூர் சென்று சேர்ந்தவர்கள், அன்று மாலையே திருமணத்தை முடித்துவிட்டு, மறுநாள் மதியம் அறையை காலி செய்ய வேண்டும் என்பதே.

திருமணம் அன்று மாலையில்தான் என்பதால், அன்று காலை முழுவதும் ஊர் சுற்றிப் பார்க்க முடிவெடுத்தார்கள். மைசூரில் இருக்கும் பிருந்தாவன் கார்டன் செல்ல, அங்கே வைத்து நுஹாவை நெருங்கிய காதர், "நுஹா, உன்கிட்டே கொஞ்சம் தனியா பேசணும்" அவன் சொல்ல, புருவம் நெரித்தாள்.

ஆனாலும் அவன் அழைக்கவே மறுக்காமல் சென்றாள். சற்று தூரம் சென்றவன், தன் ஜெர்க்கினுக்குள் மறைத்து வைத்திருந்த சிகப்பு ரோஜா பொக்கேயை எடுத்தவன், அவளுக்கு முன்பாக நீட்டினான். அவள் சற்று அதிர்ந்து பார்க்கையிலேயே, "வில் யூ மேரி மீ...?" அவளிடம் காதலைச் சொல்லாமல் திருமணத்துக்கு கேட்க, முழுதாக அதிர்ந்து போனாள்.

"யா அல்லா... காதர் என்ன இது?".

"இன்ஷா அல்லா... நான் கேட்டதுக்கு மட்டும் பதில் சொல்".

"இது நான் எடுக்க வேண்டிய முடிவில்லை காதர். என் வாப்பா எடுக்க வேண்டிய முடிவு".

"அதை நான் பாத்துக்கறேன். உனக்கு என்னை கல்யாணம் பண்ணிக்க சம்மதமான்னு மட்டும் சொல். உன்னைப் பற்றி தெரிந்துதான் என் காதலைச் சொல்லாமல், திருமணத்துக்கு கேட்கின்றேன்" எதிர்பார்ப்பை சுமந்து நிற்கும் அவன் முகத்தைப் பார்த்து தடுமாறிப் போனாள்.

ஆனாலும் தன் மூச்சை இழுத்து நிதானத்துக்கு வந்தவள், "என் வாப்பா சம்மதித்தால் எனக்கும் சம்மதம்" சொல்லிவிட்டு அதற்குமேல் அங்கே நிற்காமல் அகன்றுவிட்டாள். கைகள் இரண்டும் சில்லிட்டுப் போனது. ஓடிபோய் ஜனனியின் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

"நுஹா, என்ன இது? கை ஏன் இப்படி ஐஸ் கட்டி மாதிரி இருக்கு? காதர் ப்ரப்போஸ் பண்ணிட்டானா?" அவளிடம் கேட்க, 'உனக்கு எப்படித் தெரியும்?' என்பதுபோல் அவளைப் பார்த்தாள்.

"நெஞ்சு அப்படியே படபடன்னு அடிச்சுக்குது. கை காலெல்லாம் நடுங்குது. ஏன் இப்படிப் பண்ணான்னே தெரியலை" நிஜமாகவே நடுங்கிக் கொண்டுதான் இருந்தாள்.

"இதுக்கு ஏன் இவ்வளவு பயந்து சாகற? பிடிச்சிருக்குன்னா ஓகே சொல்லு, இல்லன்னா இல்லைன்னு சொல்லிட்டுப் போக வேண்டியது தானே. நீ என்ன சொன்ன?" அவள் கரத்தை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

"எனக்கு அதெல்லாம் தெரியாது. என் வாப்பா கிட்டே பேச சொல்லிட்டேன்" அவள் சொல்ல, அவள் பதிலில் சிரித்துக்

கொண்டார்கள். பிடிக்கவில்லை என்றால் அதை நொடியில் தெரிவித்திருப்பாள்.

பிடித்திருப்பதால் தானே பெற்றவரின் சம்மதத்தை எதிர்பார்க்கிறாள். அந்த பாயிண்டை எண்ணித்தான் அவனும் நிம்மதியாக உணர்ந்தான். முதலில் எங்கே அவள் தன்னை தவிர்த்து விடுவாளோ என பயந்தான். ஆனால், தன் தந்தைக்கு சம்மதம் என்றால், தனக்கு சம்மதம் என அவள் சொன்ன பிறகு அவ்வளவு சந்தோஷமாக உணர்ந்தான்.

## பகுதி – 25.

தீனாவுக்கும் தன்னவளோடு மட்டுமாக சுற்றிப் பார்க்க கொள்ளை விருப்பம் இருந்தாலும் முயன்று தன்னை கட்டுப்படுத்திக் கொண்டான். ஆனாலும் அவளோடு தனிமையில் சில செல்பிக்கள் எடுத்துக் கொண்டான். நண்பர்களின் அலைபேசியும் அவர்கள் இருவரையும் நிழல்படம் எடுக்க மறக்கவில்லை.

ஒரு வழியாக அவர்கள் சரியான நேரத்துக்கு கிளம்பி அறைக்குத் திரும்பியவர்கள், ஜெனிட்டாவின் திருமணத்துக்கு கிளம்ப முயல, அந்த நேரம் அவர்களது அறைக்கதவு தட்டப் பட்டது.

‘யாரது...?’ கேட்ட நிவேதா கதவைத் திறக்க, அங்கே முகம் மறைக்கும் அளவுக்கு கையில் ஏந்திய பைகளோடு நின்றிருந்தான் தீனா.

“என்ன இது? இப்படி?” கேட்டவள் அவன் கரங்களில் இருந்த பையில் இரண்டை எடுத்துக் கொண்டாள்.

“உங்க எல்லாருக்கும் ஒரு சர்ப்ரைஸ்... நாலு பேரும் இந்த டிரெஸ்ஸை போட்டுட்டு ரெடி ஆகுங்க. நாங்களும் ரெடி ஆகறோம்” சொன்னவன் அங்கிருந்து கிளம்பி விட்டான்.

நால்வரும் பெரும் ஆர்வமாக அந்த பார்சல்களை பிரித்தார்கள். அவரவர் பெயர் எழுதி இருந்த பைகளை எடுத்து அவற்றைபிரித்துப் பார்க்க, லைட் பிங்க் வர்ண முழு ஃப்ராக் உடைகளைப் பார்த்து, அதன் அழகில் ஒரு நொடி அப்படியே அசந்து நின்றுவிட்டார்கள்.

நுஹாவுக்கு தலையில் அணிந்துகொள்ள அதே வர்ண சிறிய துணியும் இருக்க, பேச்சற்று நின்றிருந்தனர்.

“ஆ... ஆ... நான் நம்ம நாலு பேருக்கும் ஒரே மாதிரி சேரி எடுக்கறாங்கன்னு நினைத்தால், இப்படி ஒரு லாங் கவுனை எதிர் பாக்கவே இல்லை. ஹையோ என்ன ஒரு கொள்ளை அழகு... எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு” அவளது உற்சாக கூச்சல் அந்த அறையையே நிறைத்தது.

“ஏய் எரும, ஏண்டி இப்படி கத்தித் தொலையிற? பக்கத்து ரூமில் இருக்கறவங்க எல்லாம் என்ன நினைப்பாங்க?” ஜனனி அவளை அடக்கினாள்.

“என்னால் சந்தோஷத்தை கண்ட்ரோல் பண்ணிக்கவே முடியலை அதான்” அவள் சொல்ல, அனைவரும் சிரித்துக் கொண்டார்கள்.

அனைவரும் கிளம்ப, நான்கு வான்லோக தேவதைகளாகவே அவர்கள் காட்சி அளித்தார்கள். அதற்கேற்ற மேக்கப் போட ஒரு பெண்மணியும் வந்து உதவி செய்ய, அப்படியே அள்ளிக்கொண்டு போனது.

தீனா கிளம்பிவிட்டு அவர்களை அலைபேசியில் அழைக்கவே, நால்வரும் ஒன்றாக கிளம்பி கீழே வந்தார்கள். கீழே லாபியில் இருந்த ஆண்கள் அனைவருமே பெண்களைப் பார்த்து ஒரு நொடி அசந்து போனார்கள்.

அதிலும் தீனா, அபய்யின் நிலையை கேட்கவே வேண்டாம். அதே நேரம் ஆண்கள் அனைவருமே ஒரே போல் கிரே கலர் கோட் சூட்டில் இருக்க, கழுத்தில் அமர்ந்திருந்த ரெட் ‘பௌ’ இன்னும் அவர்களுக்கு வசீகரத்தைக் கொடுத்தது.

சில பல நிமிடங்கள் தங்கள் இணைகள் ஒருவர் ஒருவரை ரசிக்க, புதிதாக அதில் இணைந்திருந்தான் காதர். அவனது பார்வை நுஹாவை விடுத்து இங்கே அங்கே அசையவே இல்லை. அதைப் பார்த்த சுதிர், “கூட்டத்தில் இன்னொரு பைத்தியம் சேர்ந்துடுச்சுடா” அவன் சொன்னதைக் கூட அவன் கவனிக்கவில்லை.

நுஹாவுக்கோ அவனை நிமிர்ந்து கூட பார்க்க முடியவில்லை. ‘அல்லா… இவர் எதுக்கு இப்படி பாக்கறார்? மத்தவங்க என்ன நினைப்பாங்க?” அவனை முறைப்பதற்கு என்றால் கூட, அவனை நிமிர்ந்து பார்க்க வேண்டுமே என்பதற்காக அதைச் செய்யாமல் நின்றிருந்தாள்.

“அடேய்… இன்னைக்கு கல்யாணத்துக்குப் போறோமா? இல்ல நீங்க இங்கேயே மறுபடியும் கல்யாணம் பண்ணிக்கப் போறீங்களா? சோதிக்காதீங்கடா?” குண்டன் சபரி சத்தமாக புலம்ப அதன் பிறகே அனைவரும் கலைந்தார்கள்.

திருமணம் நடைபெற இருந்த சர்ச்சுக்கு அருகிலேயே அவர்களது ஹோட்டல் அறை என்பதால், அடுத்த ஐந்தாவது நிமிடம் அவர்கள் அங்கே இருந்தார்கள். அவர்கள் அங்கே சென்று சேர்கையில், அந்த இடமே பெரும் பரபரப்பில் இருந்தது.

அதைப் பார்த்தவுடனே, ‘யாருக்கு என்னவோ?’ என்றுதான் பயந்து போய் சர்ச்சுக்குள் சென்றார்கள்.

அங்கே இருந்த ஜெனிட்டாவின் தந்தையைப் பார்த்தவன், வேகமாக அவர் அருகே செல்ல, அவரோ வியர்வை வழியும் முகத்தோடு, பெரும் படபடப்பில் யாரிடமோ அலைபேசியில் பேசிக் கொண்டிருந்தார்.

அவர் அதைப் பேசி முடிக்கும் வரைக்கும் பொறுமையாக இருந்தவன், “என்ன சார் ஏதாவது பிரச்சனையா?”.

“என்னப்பா சொல்லட்டும், பியூட்டி பார்லர் போயிருக்கும் என்னோட பொண்ணு, அங்கேயே ட்ராபிக்கில் சிக்கிட்டா. இங்கே இருந்து யாராவது போய் கூப்பிடலாம் என்றால், அதுக்கு வாய்ப்பே இல்லை. அங்கே கிளியர் ஆக எப்படியும் ஒருமணி நேரமாவது ஆகுமாம். அதான் டென்ஷனா இருக்கு.

“என்ன செய்ய, ஏது செய்யன்னு எதுவுமே புரியலை. மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வேற வர்ற நேரமாச்சு. அவங்க வர்றப்போ, அவ இங்கே இல்லன்னா எப்படி? எப்படி சம்மாளிக்கப் போறேன்னு தெரியலை, அதான்…” கையைப் பிசைந்தார்.

“சார், ஒரு பைக் மட்டும் எனக்கு கிடைக்குமா?” அவன் கேட்க, இருந்த டென்ஷனிலும் அவன் கேட்டதை செய்து கொடுத்தார்.

“மாப்பிள்ளை வீட்டுக் காரங்க வர முன்னாடி கண்டிப்பா வந்துடுவேன்” நண்பர்களிடமும் விஷயத்தைச் சொன்னவன், உடனடியாக கிளம்பிவிட்டான்.

அவள் லொக்கேஷன் ஷேர் செய்ய, நடை பாதையில் எல்லாம் வண்டியை ஓட்டிச் சென்று பதினைந்தே நிமிடங்களில் அவள் முன்னால் நின்றான்.

“தீனா, என்ன இது? நான் எப்படி இதில் வர?” முழு வெள்ளை உடையில் சம்மனசு போல் நின்ற அவளை ஒரு நொடி பார்த்தவன், “வேற வழியே இல்லை, ஏறு?” அவளை அவசரப்படுத்த, தலையில் இருந்த ‘வெயிலை’ கைகளில் சுருட்டிக் கொண்டவள், உடையையும் முயன்ற அளவுக்கு கைகளில் அள்ளிக் கொண்டு அவன் பின்னால் அமர்ந்தாள்.

அவன் வண்டியை புயல் வேகத்தில் செலுத்த, எத்தனையோ கைபேசிகள் அவர்கள் இருவரையும் படம் பிடிக்கத் துவங்கியது. அதைப்பற்றியெல்லாம் அவன் கவலைப் படவே இல்லை.

ட்ராபிக் போலீஸ் கூட அவர்களைப் பார்த்துவிட்டு பின்தொடர, வண்டியை நிறுத்திவிட்டு அவன் நிலைமையை விளக்கவே, அவரும் உடன் வந்து அவனுக்கு உதவினார். சரியாக மணமகனின் வாகனம் உள்ளே நுழைவதற்கு இரண்டு நிமிடங்களுக்கு முன்னர் அவளை அழைத்து வந்து விட்டான்.

அவர்களைப் பார்த்த பிறகுதான் அங்கே இருந்தவர்களுக்கு மூச்சே வந்தது. “ஹப்பா வந்துட்டியா? இப்போதான் எங்களுக்கு நிம்மதி. ரொம்ப தேங்க்ஸ் தம்பி” அவனை அனைவருமே பாராட்டினார்கள். அவனது சமயோசிதமான யோசனையால் மட்டுமே ஜெனிட்டா சரியான நேரத்துக்கு அங்கே வந்து சேர்ந்தாள்.

“மச்சான்... சூப்பர் டா... சாதிச்சுட்ட” நண்பர்கள் அவனை கட்டிக் கொண்டார்கள்.

“டேய் விடுங்கடா ஒரே வியர்வை...” தன் மேல் கோட்டை கழட்டியவன், கழுத்து ‘பௌ’வையும் உருவி கரத்தில் எடுத்துக் கொண்டான்.

“மாப்பிள்ளை வீட்டுக்காரங்க எல்லாம் வந்துட்டாங்க, வாங்க போகலாம்” அனைவரும் செல்ல, தேவாலையத்துக்கு பக்கவாட்டில் நின்ற அவன் அருகே விரைந்த ஜனனி, அவன் நெற்றியில் அரும்பியிருந்த வியர்வையை தன் கைக்குட்டையால் ஒற்றி எடுத்தாள்.

அவளைத் தடுத்தவன், “நீ அவ பக்கத்தில் இருப்பதைத்தான் அவ விரும்புவா, நீ போ... நான் இரண்டு நிமிடம் கழித்து வர்றேன்” அவன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே காதர் சிறிய தண்ணீர் பாட்டிலோடு அவன் அருகே வந்தான்.

காதர் வரவே, அவள் தேவாலயத்துக்குள் சென்று மறைந்தாள். அடுத்த ஒரு மணி நேரத்தில் அனைத்து சடங்குகளும், வார்த்தைப்பாடுகளும் முடிய, தேவாலைய வளாகத்தில் இருந்த மண்டபத்திலேயே விருந்துக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

புப்ஃபே முறையில் விருந்து இருக்க, தங்கள் தோழியோடு சற்று நேரம் நின்றிருந்தவர்கள், ஒன்றாக புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். தீனாவும் ஜனனியும், அபய்யும் மாதும்மையும் அருகருகே நிற்க, நுஹாவின் பின்னால் வந்து நின்றான் காதர்.

அவள் படபடத்துப் போக, லேசாக திரும்பி அவனைப் பார்த்தாள். “விருப்பம் இல்லையென்றால் போய் விடுகிறேன்” அவன் சொல்ல, எதுவும் சொல்லாமல் திரும்பிக் கொண்டாள்.

அந்த அழகிய தருணம் புகைப்படமாக, அவர்கள் அனைவரைப் பற்றிய பேச்சும் அங்கே இல்லாமல் இல்லை. அதன் பிறகு உறவுகளுக்கு வழி விட்டு அவர்கள் அனைவரும் விலகிச் செல்ல, தேவாலயத்தை சுற்றி இருந்த மரத்தடியில் போடப் பட்டிருந்த சிமெண்ட் இருக்கைகளில் சென்று அமர்ந்து கொண்டார்கள்.

அப்படி ஒரு அரட்டைக் கச்சேரி நடந்தது. அனைத்திலும் முழுதாக கலந்து கொண்டாலும், தீனாவின் பார்வை தன்னவளை அவ்வப்பொழுது தழுவி மீண்டது. அந்த அழகு அவனைக் கொல்லாமல் கொன்று கொண்டிருந்தது.

சும்மாவே அவள்மேல் பித்தாக இருப்பவன், அவளது இந்த உடையும், அலங்காரமும், அவனால் தன்னைக் கட்டுப்படுத்துவதே பெரும் பாடாக இருந்தது. நேரம் பத்து மணியை நெருங்கவே, இரவு உணவை முடித்துவிடலாம் என அனைவரும் கிளம்பினார்கள்.

அவர்கள் செல்லவே, தீனா அப்படியே பின்தங்கி நின்றுவிட்டான். அவன் வராததைப் பார்த்த ஜனனி, தானும் அங்கேயே இருக்க, "நீ போய் சாப்பிடு, நான் வர்றேன்..." அவளை அனுப்பிவிட முயன்றான்.

சரியாக அந்த நேரம், ஆலயத்தைச் சுற்றிலும் ஒளிர்ந்து கொண்டிருந்த அலங்கார விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட, அவர்கள் இருந்த இடத்தைச் சுற்றிலும் மெல்லிய இருள் கவிழ்ந்தது.

அடுத்த நொடி என்ன நடந்தது என அவள் யோசிக்கும் முன்பாகவே, அவன் கரங்களுக்குள் இருந்தாள். "என்னை ரொம்ப சோதிக்கிற?" புலம்பியவன், அடுத்த நொடி அவள் இதழ்களைத் தேடி கவ்விக் கொண்டான்.

எதிர்ப்பற்ற மௌனத்தில் அவன் கரங்களுக்குள் இசைந்து நின்றிருந்தாள். முதல்நாள் முத்தமிடுகையில் இருந்த அதே வேகம் அவனிடம். ஆனால் அன்று அவளிடம் இருந்த தயக்கம் இன்று இல்லையே. அவன் சட்டைக் காலரை கொத்தாக பற்றிக் கொண்டு அவன் இதழ் தீண்டலில் கரைந்தாள்.

அவன் நெஞ்சோடு ஒட்டிக் கொண்டு, ஒரு கரம் அவன் முதுகில் அலைய, மற்றொரு கரமோ அவன் சிகைக்குள் நுழைந்து அலைந்தது. அவளது ஒத்துழைப்பு அவனை இன்னும் தீண்ட, தூண்ட, அவள் இதழ்களுக்குள் தொலைந்து காணாமல் போய்க்கொண்டிருந்தான்.

அவளிடம் இருந்து விடுபட முடியாமல் போராட, மூச்சுக்காற்றின் தேவை இருவரையும் பிரியச் செய்தது. "தீனா..." அவள் எதையோ சொல்ல முயல, "வா போகலாம்..." உரைத்தவன் முன்னால் நடந்துவிட்டான்.

அதே நேரம், காதர் நுஹாவிடம் ஒரு செல்ஃபிக்கு வேண்டி கெஞ்சிக் கொண்டிருந்தான். "ஒரே ஒரு போட்டோ நுஹா... பிளீஸ்... என் போன்ல கூட வேண்டாம், உன்னோட போன்ல எடுக்கலாம். இந்த ட்ரெஸ்,

வாய்ப்பு இனிமேல் அமையுமான்னு தெரியலை” கையில் அலைபேசியோடு கெஞ்சிக் கொண்டிருந்தான்.

“பிளீஸ் காதர், அதெல்லாம் வேண்டாம்... எல்லாம் நிக்காவுக்கு பிறகு பாத்துக்கலாம்” அவனிடம் உறுதியாக மறுத்துக் கொண்டிருந்தாள்.

“ஒண்ணே ஒண்ணு... யார்கிட்டேயும் காட்ட மாட்டேன். எனக்காக...” கையில் உணவுத் தட்டோடு அவள் பின்னால் உலாவிக் கொண்டிருந்தான்.

அவனது கெஞ்சல் அவளுக்கு தவிப்பாக இருந்தாலும், அவளால் அதற்கு ஒத்துக் கொள்ளவே முடியவில்லை. ஒரு அளவுக்கு மேலே அவளை தொல்லை செய்யாமல் நாசூக்காக விலகிக் கொண்டான். அவன் விலகிச் செல்ல, இன்னும் அதிகம் தடுமாறிப் போனாள்.

‘நல்லா இருந்த என் மனசை கலைத்து விட்டாரே’ அவளுக்கு வேதனையாக இருந்தது. இந்த திருமணம் எப்படி சரியாக வரும் என அவளுக்குத் தெரியவே இல்லை. அவன் அதை எப்படி சாதிப்பான் என்பதும் புரியவில்லை.

சென்னைக்கு திரும்பி, வேலையில் மூழ்கிய பிறகு, அவன் கண்டுகொள்ளாமல் நடக்க, அவளுக்கு குழப்பமாக இருந்தது. ‘ஒரு வேளை அந்த நேர நினைப்பில் சொல்லிவிட்டு, இப்பொழுது மாறிவிட்டாரோ?’ என அவள் நினைக்க, அதற்கான பதில் அடுத்த ஒரு வாரத்தில் அவளுக்கு கிடைத்தது.

அன்று அவளது வீட்டில் அவளை பெண் பார்க்க வருவதாகச் சொல்லி, அவளை விடுப்பு எடுக்கச் சொல்ல, மனதைத் தேற்றிக் கொண்டு அதற்கு சம்மதித்தாள். மாப்பிள்ளை வீட்டினர் மட்டுமே வந்திருக்க, மாப்பிள்ளை பிறகு வருவதாகச் சொன்னார்கள்.

பெரியவர்களே பேசி முடிவெடுத்து, ஆறு மாதங்களுக்குப் பிறகு அவர்களுக்குத் திருமணம் என உரைக்க, மனதை வெறுமையாக்கிக் கொள்ள முயன்றாள். அவர்கள் கிளம்பும் முன்னர், அவளை அழைத்த மாப்பிள்ளையின் தாய் ஒரு புகைப்படத்தைக் கொடுக்க, நடுங்கும் கரங்களால் பெற்றுக் கொண்டாள்.

“இது என் பையனோட போட்டோ, ஒரு முறை பாத்துட்டு உனக்கு பிடிச்சிருக்கான்னு சொல்லிட்டன்னா, நான் அவன்கிட்டே சொல்லிடுவேன்” அவர் அங்கேயே நிற்க, வேறு வழியின்றி அந்த புகைப்படத்தைப் பார்த்தாள்.

பார்த்தவள் அப்படியே உறைந்து போனாள். அந்த புகைப்படத்தில் வசீகரமாக புன்னகைத்துக் கொண்டிருந்தான் காதர். அவள், திகைப்பும், மகிழ்ச்சியுமாக அவரை ஏறிட, “என்ன என் பையனை பிடிச்சிருக்கா?” அவர் கேட்க, கண்கள் கலங்க, தன் வாப்பாவை ஏறிட,

“கேக்கறாங்கல்ல பதில் சொல்...” அவர் சொல்லவே, “என் வாப்பாவுக்கு சம்மதம் என்றால் எனக்கு முழு சம்மதமே. ஆனா... எனக்கு மாப்பிள்ளையையும் பிடிச்சிருக்கு” தன் தந்தையையும், அதே நேரம் தன் மகனையும் விட்டுக் கொடுக்காமல் பேசிய அவளை அவருக்கு அவ்வளவு பிடித்தது.

மறுநாள் அவள் அலுவலகத்துக்கு வந்த பொழுது, அனைவரையும் எப்படி எதிர்கொள்ள எனத் தெரியாமல் அவள் திணற, அவள் பயந்தது போலவே அனைவரும் அவர்களை ஓட்டித் தள்ளி விட்டார்கள். ஒரு வழியாக அனைவரையும் அவர்கள் சமாளிக்க, அதற்கு தீனாவும் உதவி செய்தான்.

அனைவரும் தங்கள் இடத்துக்குச் செல்ல, அவளது அலைபேசிக்கு ஒரு வாட்ஸ்ஆப் புகைப்படம் ஒன்றை காதர் அனுப்பி வைத்தான். அவள் அதை என்னவென்று பார்க்க, ஜெனிட்டாவின் திருமணத்தில், மேடையில் அவர்கள் எடுத்த குரூப் போட்டோவில் இருந்து அவர்கள் இருவர் மட்டும் இருந்ததை க்ராப் செய்து அனுப்பியிருந்தான்.

அந்த புகைப்படத்தில் அவள் முகத்தில் வழிந்த வெட்கமும், தடுமாற்றமும், அவன் முகத்தில் தெரிந்த பெருமிதமும், காதலும் அவ்வளவு கச்சிதமாக இருந்தது. கல்யாணக் கனவில் அவர்கள் மிதக்கத் துவங்கினார்கள்.

அதற்குள்ளாகவே அடுத்த மாதமும் கடக்க, குடும்பத்தில் இரண்டு திருமணங்கள் நடந்தும், இருவரில் யாருமே ஒரு சந்தோஷ விஷயத்தைச் சொல்லவில்லை என்பது பெரியவர்களுக்கு பெரும் மனக் குறையாக இருந்தது.

அதுவும் கலாவதியும், அகிலாண்டமும் அலைபேசியில் பேசிக்கொள்ளும் சந்தர்ப்பம் வாய்த்தால், அவர்களது பேச்சு தங்களது பேரப்பிள்ளையின் வருகையைப் பற்றியதாக மட்டுமே இருந்தது. பிள்ளைச்செல்வத்தை இழந்த அவர்களுக்கு, பேரப்பிள்ளையின் வருகையை பேராவலாக எதிர்பார்த்தார்கள்.

முதல் மாதமே ஜனனி வீட்டுவிலக்காக ஆகிவிட்டாள் என அறிந்து இருவரும் சற்று சோர்ந்து போனார்கள். ஆனாலும் இன்னும் ஒரு மாதம் பார்க்கலாம் என அவர்கள் முடிவெடுத்திருக்க, அடுத்த மாதமும் ஜனனி வீட்டுவிலக்காக அகிலாண்டத்துக்கு பெரும் வருத்தமாகப் போயிற்று.

சாதாரணமாக அந்த இரண்டு மாதம் மட்டுமல்ல, இரண்டு வருடம் என்றால் கூட அவர்கள் காத்திருப்பார்கள். ஆனால், தங்களுக்கு கிடைக்காத பாக்கியம், பிறந்த குழந்தையை தொட்டு தழுவ முடியாத ஏக்கம், அதை தங்கள் பேரக்குழந்தையிடம் தீர்த்துக்கொள்ள நினைத்தார்கள்.

எனவே அந்த இரண்டு மாத இடைவெளி கூட அவர்களுக்குப் பெரிதாகத் தாக்கியது. அன்று ஞாயிற்றுக்கிழமை காலையில், ஜனனி கிச்சனில் வேலையாக இருக்கவே, அவளைத் தேடி வந்த அகிலாண்டம் அவளின் முகம் பார்ப்பதும், வேலையைத் தொடர்வதுமாக இருக்கவே, சில நொடிகள் பார்த்தவள் அவர் பக்கம் திரும்பினாள்.

“என்ன அத்த… என்னவோ கேக்க வர்றீங்க, அதைக் கேக்காமல் தயங்கறீங்க, என்னன்னு சொல்லுங்க” அவருக்கு அப்படியென்ன தயக்கம் என அவளுக்குப் புரியவில்லை.

வெளியே ஹாலில் சாமிநாதனும், தீனாவும் அமர்ந்து எதையோ பேசிக் கொண்டிருந்தார்கள். ஞாயிற்றுக்கிழமை என்பதால் காலைநேர பரபரப்பின்றி சற்று பொறுமையாகவே வேலைகள் நடந்து கொண்டிருந்தது.

“அம்மாடி, நான் கேக்கறேன்னு தப்பா நினைச்சுக்காதே, விரதம் எதுவும் தடை ஆகிடலையே…?” அவர் கேட்க, ஏற்கனவே அந்த நாளை எண்ணி

பெரும் வேதனையில் இருந்தவளுக்கு, அவர் இவ்வாறு கேட்கவே சட்டென கண்கள் கலங்கிப் போனது.

அவருக்கு அதைக் காட்டாமல் மறைத்தவள், “அப்படியெல்லாம் எதுவும் இல்ல அத்த...” அதை உரைக்கும் முன்பே குரல் கரகரத்துப் போனது.

“உன்னை கஷ்டப்படுத்தணும்னு நான் இதைக் கேக்கலம்மா, ஒரு பிஞ்சு பாதம் நம் வீட்டில் தடம் பதிக்க வேண்டும் என்ற ஆசையில்தான் இதைக் கேக்கறேன்” அவளிடம் இதைப்பற்றி பேசுவது அவருக்குமே வருத்தமாகத்தான் இருக்கிறது என்பதை அவரது தயக்கமான வார்த்தைகளே எடுத்துக் கூற, பெரியவரை வருத்தப்பட வைப்பது பிடிக்காமல் வேகமாக அவர் பக்கம் திரும்பினாள்.

திரும்பிப் பார்த்தவள் அப்படியே உறைந்து போனாள். அகிலாண்டத்தின் முதுகுக்குப் பின்னால் உக்கிர மூர்த்தியாக நின்று கொண்டிருந்தான் தீனா.

## பகுதி – 26.

அகிலாண்டமும், ஜனனியும் பேசுவதைக் கேட்ட தீனாவுக்கு தன் காதுகளை நம்ப முடியவில்லை. தனது இத்தனை மாத தவிப்புக்கும், நிம்மதியின்மைக்கும், திருமணம் முடிந்த பிறகான பிரம்மச்சரியத்துக்கும் முழு முதல் காரணம் அகிலாண்டம் மட்டுமே என்பதை கிரகிக்கவே அவனுக்கு சில நிமிடங்கள் தேவைப்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களாக ஜனனியிடம் கேட்டும், அவள் எதுவும் வாயைத் திறக்காமல் போயிருக்க, எதேச்சையாக உண்மை தெரியவே அவனுக்கு எப்படி செயல்பட என்றே தெரியவில்லை. ஆனால் சட்டென மனம் முழுவதும் ஒருவித கோபம் பரவியது.

அதை பெரியவர்கள் முன்னால் அதைக் காட்ட மனமின்றி அவளை உக்கிரமாக முறைத்தவன், வேகமாக விடுவிடுவென்று தங்கள் அறைக்குச் சென்று மறைந்தான். அறைக்குச் சென்றவனுக்கு கோபம் அடங்க மறுத்தது.

‘தன் ஆசையை விட, எதிர்பார்ப்பை விட, தனக்கு எதுவும் செய்யாத தெய்வத்தின்மேல் அப்படியென்ன நம்பிக்கை?’ மனதுக்குள் பொருமினான்.

என்றைக்கு அவனைப் பெற்ற தாயும் தகப்பனும் இந்த மண்ணுலகை விட்டுப் பிரிந்தார்களோ, அவன் தனிமரமாக அனாதையாக நின்றானோ அன்றே தெய்வ நம்பிக்கையை மூட்டை கட்டி வைத்துவிட்டான். அவனது தாய் இருந்த வரைக்கும், ஒரு நாள் கிழமை, வெள்ளிக்கிழமை விரதம் என எதையும் தவற விட்டதில்லை.

அப்படியிருக்கையில் அந்த தெய்வம் அவரது வேண்டுதல் எதையும் கேட்காமல், பாதி வாழ்நாளிலேயே அவரை அழைத்துக்கொள்ள அந்த தெய்வத்தை அவன் அதற்குமேலே நம்பத் தயாராக இருக்கவில்லை. அகிலாண்டமும், சாமிநாதனும் அவன் வாழ்க்கைக்குள் வந்த பிறகு கூட தெய்வத்தை அவனால் ஏற்க முடியவில்லை.

அவனது பெற்றவர்கள் இறந்த பிறகு, இன்று வரைக்கும் தெய்வத்தை தேடி அவன் கோவிலுக்குப் போனதில்லை. விபூதி, குங்குமம் வைக்கச் சொன்னால் கூட பிடிவாதமாக மறுத்து விடுவான்.

திருமணமான அன்று கூட குலதெய்வ கோவிலுக்குப் போயாக வேண்டும் எனச் சொன்னபொழுது அவனுக்கு முழுதாக விருப்பமில்லை என்றாலும், பெரியவர்களுக்காக என்று மட்டுமே ஒத்துக் கொண்டான். அப்படி இருக்கையில், ஜனனி செய்தது?

அதுவும் அவன் அவ்வளவு தூரம் கேட்ட பிறகும், அவனது தாய்க்கென அவனை அவள் தவிர்த்ததை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவன் அறைக்குள் அடைபட்ட புலியென நடைபயில, கிச்சனுக்குள் இருந்த ஜனனியால் அதற்குமேல் அங்கே இருக்க முடியவில்லை.

தன் அத்தையைத் தவிர்த்து அங்கிருந்து செல்லவும் முடியாமல், அங்கே இருக்கவும் முடியாமல் செய்யும் கைவேலை தவறியது. அதைப் பார்த்த அகிலாண்டம் என்ன நினைத்தாரோ, “ஜனனி, நீ போம்மா, நான் அதை இறக்கிடறேன்” அவர் சொல்லவே அப்படி ஒரு நன்றி உணர்வோடு அங்கிருந்து விலகி ஓடினாள்.

அறைக்குள் நுழையவே கால்கள் பின்னியது. அதற்காக அவளால் செல்லாமல் இருக்கவும் முடியவில்லை. இத்தனை நாட்களாக அவனிடம் உண்மையைச் சொல்ல முடியாமல் தவித்தவளுக்கு, அவனுக்கு உண்மை தெரிய வந்ததில் ஒரு பக்கம் நிம்மதியே.

ஆனால் தெரிந்த உண்மையால் அவன் எந்த மனநிலையில் இருக்கிறானோ என்பதை நினைக்கவே நெஞ்சம் நடுங்கியது. ஏனென்றால் அவனது நாத்திக கொள்கை அவளுக்கும் தெரியுமே. அவனை எப்படி சமாதானப் படுத்தப் போகிறோம் என்பதும் அவளுக்குப் புரியவில்லை.

மெதுவாக அறைக்குள் அடியெடுத்து வைத்து நுழையவே, “அந்த கதவை லாக் பண்ணு” அவனது குரலில் இருந்தே, அவன் தன் கோபத்தை அடக்கப் போராடுவது அவளுக்குத் தெளிவாகப் புரிந்தது. ஆனாலும் அவன் சொன்னதை மறுக்காமல் செய்தாள்.

அவள் முன்னால் வந்து நின்றவன், கரங்களை தன் நெஞ்சுக்கு குறுக்காக கட்டிக் கொண்டான். “தென்... இப்போ சொல்லு...” அவன் கேட்க, அவளால் பதில் சொல்லவே முடியவில்லை.

அவன் நிதானமாக அசையாமல் அவளைப் பார்த்துக் கொண்டே இருக்கவே, அவ்வளவு கோபத்திலும் தன்னை காயப்படுத்திவிடக் கூடாது என்பதில் அவன் கவனமெடுக்க, அவன்மேல் காதல் பெருகியது. அதே நேரம் அவனது அந்த விலகல் அவளை அதிகம் அலைகழித்தது.

“தீனா, பெரியவங்க அவங்க, அவங்க நம்பிக்கைக்கு வேண்டி...” அவள் சொல்ல, இடக்கையை உயர்த்தி அவள் பேச்சை நிறுத்தியவன், சுடும் விழிகளால் அவளை வெறித்தான்.

“நம்மை தண்டிக்கும் அந்த சிலைக்குப் பெயர் சாமியா?” அவன் கோபமாக கத்த, அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

“என்னங்க...” அவனை மறுத்துப் பேச முயன்றாள்.

“எங்க அம்மாவும் அந்த சிலையை விழுந்து விழுந்து கும்பிட்டாங்க. பெருசா அவங்களுக்கு என்ன கிடைத்தது? சாவைத் தவிர?” அவனால் கோபத்தை கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை.

அவனது கோபத்தைப் பார்த்தவளுக்கு அவனை தடுத்து பதில் சொல்லவும் முடியவில்லை. “அப்போ அன்னைக்கு அந்த கோவிலுக்கு வர்றேன்னு சொன்னதுதான் நான் செய்த தப்பா? அப்படி வரமாட்டேன் என்று சொல்லியிருந்தால் எனக்கு எல்லாம் சரியாக நடந்திருக்கும் தானே?” ஆத்திரம், ஆத்திரம், தான் ஏமாந்த வலி, அதை அவன் கொட்டிக் கவிழ்த்தான்.

“தீனா, ஜஸ்ட் ஒரு நாள்… அந்த ஒரு நாளைத் தவிர்த்தால் இந்த ஜென்மம் முழுவதுமே நமக்காக இருக்கும்போது…”.

அவளை முடிக்க விடாமல் இடை புகுந்தவன், “ஓ… அப்போ ஆசைப்பட்ட நான் பைத்தியக்காரன், நீங்க எல்லாம் புத்திசாலிங்க அதானே. என்ன சொன்ன? ஒரு நாளா? அந்த நாளுக்காக நான் பன்னிரண்டு வருஷம் காத்திருந்தது உனக்குப் புரியவே இல்லையா? எஸ் எனக்கு அது பெருசுதான்… இதுக்கு நீ என்ன பதில் சொல்லப் போற?” அவன் கேட்க, இதற்கு அவள் என்ன பதில் சொல்வதாம்?

அவள் அமைதியாக இருக்க, “நான் கேட்டப்போ ஏன் பதில் சொல்லலை? ஏன் உண்மையை சொல்லலை?”.

“உண்மையைச் சொல்லியிருந்தால் நீங்க விலகி நின்னுருப்பீங்களா?” இதைக் கேட்கையில் அவளால் அவன் கண்களை ஏறிட முடியவில்லை.

“இல்ல…” அவன் தெளிவாக உரைக்க சோர்ந்து போனாள்.

“சரி, இந்த ரெண்டு மாசமா கேட்டேனே, அப்போ கூட உன்னால் பதில் சொல்ல முடியலல்ல, ஏன்?” அவன் அடுத்ததாக கேட்க,

“உங்க கோபத்தை என்னால் தாங்கிக்க முடியாது தீனா. அத்தைகிட்டே நீங்க போய் சண்டை போட்டீங்கன்னா அவங்க என்ன நினைப்பாங்க? பெரியவங்க மனசு இன்னும் கஷ்டப்படும்” அவள் குரல் தடுமாற, அவன் வாய்விட்டு சிரிக்கத் துவங்கினான்.

அவன் எதற்காக சிரிக்கிறான் எனப் புரியாமல் அவள் பார்க்கவே, “இப்போ மட்டும் என்ன சும்மா இருக்கப் போறேனா? அந்த சாமிநாதனை என்ன செய்யறேன் பார். ஆனாலும் உன்கிட்டே நான் இதை எதிர்பாக்கலை ஜனனி.

“என் காதலை, ஆசையை, பாசத்தை எல்லாம் காலால் எட்டி உதைச்சு தள்ளிட்டல்ல? இங்கே வலிக்குது...” அவன் இதயத்தை சுட்டிக் காட்ட, ஓடிப்போய் அவன் நெஞ்சில் விழுந்து அவனை இறுக கட்டிக் கொண்டாள்.

“கல்யாணம் ஆனா சந்தோஷமா இருப்பேன்னு நினைச்சேன். ஆனா இவ்வளவு வலிக்கும்னு சத்தியமா எதிர்பாக்கலை” அவளை அணைக்காமல் கரத்தை அழுத்தமாக இரவு பேண்ட்டுக்குள் திணித்துக் கொண்டான்.

“சாரி, சாரி... சாரி தீனா... உங்க மனசு எனக்குப் புரியாமல் இல்லை” அவள் புலம்ப, அவள் இதழ்களோ அவன் நெஞ்சில் அழுத்தமாகப் புதைந்தது. சில நொடிகள் அதில் திளைத்திருந்தவன்,

“பொய், இது அப்பட்டமான பொய் அப்படி என் மனசு புரிஞ்சிருந்தா நீ அப்படி செய்திருக்கவே மாட்ட” அவன் உறுதியாக உரைத்தான். அவளை தன்னிடமிருந்து பிரித்து நிறுத்தினான். அவள் கண்கள் கலக்கத்தைக் காட்டவே அதையும் அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

“சாமிநாதா... சாமிநாதா...” அறைக்குள்ளிருந்தே கத்தியவன், அறைக்கதவை படாரெனத் திறந்துகொண்டு, படிகளில் கடகடவென இறங்க, அவன் போட்ட சத்தத்தில் பெரியவர்கள் இருவரும் என்னவோ ஏதோ வென வேகமாக வந்தார்கள்.

ஜனனியும் அவன் பின்னால் ஓடிவர, “சாமிநாதா, இந்த ஜென்மத்தில் உங்களுக்கு புள்ளையே பொறக்காது. இந்த கன்னிப்பையன் சாபம் உங்களை சும்மா விடாது சொல்லிட்டேன்” அவர் தோளைப் பற்றி உலுக்கியவன், தாயையும் கோபமாக முறைத்துவிட்டு தன் பைக் சாவியை எடுத்துக் கொண்டு அங்கிருந்து கோபமாக அங்கிருந்து விரைந்தான்.

அவன் கோபமாகச் செல்வதை தாங்க முடியாத ஜனனி, எப்படியாவது அவனைத் தடுத்துவிட வேண்டி அவன் பின்னால் ஓட, தன் கேடிஎம் பைக்கை உதைத்து கிளப்பியவன் விருட்டென வேகம் பிடிக்க, அவள் இதயம் ஒரு நொடி நின்று துடித்தது.

‘ஹையோ இதென்ன இவ்வளவு வேகம்’ அவள் நெஞ்சம் பதறியது.

“என்னடி இது… புதுசா சாபம் எல்லாம் விட்டுட்டுப் போறான்? அப்படி என்னதான் பண்ணித் தொலைச்ச? அவனை அவன் போக்கில் விடுன்னு உன்கிட்டே சொல்லியிருக்கேனா இல்லையா?” மகன் இவ்வளவு கோபம் கொள்கிறான் என்றால், அதற்கு நிச்சயம் தன் மனைவிதான் காரணம் என்பது அவரது எண்ணம்.

“நான் எதுவும் செய்யலங்க” அவர் மலங்க விழிக்க, இருவரின் பார்வையும் ஜனனியின் பக்கம் திரும்பியது.

அவர்களுக்கு அந்த நேரம் பதில் சொல்ல முடியாமல், கோபமாகச் சென்ற கணவனையும் தடுக்க முடியாமல் கண்கள் கலங்க வீட்டுக்குள் வந்தவள், பேசாமல் தங்கள் அறைக்குத் திரும்பிவிட்டாள்.

அவள் தங்கள் படுக்கையில் குப்புற விழுந்து அழ, தன் முட்டிவலியையும் பொருட்படுத்தாமல் அவர்கள் அறைக்கு வந்த அகிலாண்டம் அவள் முதுகை மெதுவாக வருடினார். அதில் தன் கண்ணீரை பட்டென நிறுத்தியவள் வேகமாக எழுந்து அமர்ந்தாள்.

“என்னம்மா… தீனாவுக்கு ஏன் இவ்வளவு கோபம்? உங்களுக்குள் எதுவும் சண்டையா? அவன் சொல்லிட்டுப் போறதைப் பார்த்தால்… நாங்க ஏதாவது செஞ்சுட்டோமா?” தீனாவுக்கு இவ்வளவு கோபம் வந்து அவர் பார்த்ததே இல்லை என்பதால் குழப்பமாகவே கேட்டார்.

“அப்படியெல்லாம் எதுவும் இல்லை அத்த…” பெரியவளிடம் எப்படி அவளால் உண்மையைச் சொல்ல முடியும்? அதிலும் அவன் உபயோகித்துச் சென்ற ‘கன்னிப்பையன்’ என்ற வார்த்தையை இவர்கள் கவனித்திருந்தால், அதற்கு என்ன விளக்கம் கொடுப்பது என்று வேறு அவளுக்குத் தெரியவே இல்லை.

“இல்லம்மா... என்னவோ கன்னிப்பையன்னு சொல்லிட்டுப் போறான். அப்போ உங்களுக்குள்...” பெரியவளின் முகத்தில் அப்பட்டமாக ஒரு கவலை மேகம் கவிழ, ஜனனிக்கு தலை சுற்றிப் போனது.

“ஏம்மா... நீங்க ரெண்டுபேரும் சந்தோஷமா இல்லையா? தனியா இருக்கணும்னு விரும்பறீங்களா? இங்கே, இந்த வீட்டில், எங்களோட சேர்ந்து, உன்னால்... இருக்க...” அதைக் கேட்டு முடிக்கக் கூட அவரால் முடியவில்லை.

தங்கள் வாழ்வின் ஆதாரம் அவன் என வாழ்ந்துவிட்டவருக்கு, ஜனனி தனியாக இருக்க விரும்புகிறாளோ, அதனால் அவனுடன் இணக்கமாக இல்லையோ என்ற கவலை திடுமென எழவே அவ்வாறு கேட்டார். மற்றபடி அவர்கள் சந்தோஷத்துக்கு எந்த குறையும் அவர் வைப்பதாகத் தோன்றவில்லை.

அந்த குலதெய்வ கோவில் விஷயத்துக்காக அவன் இவ்வளவு கோபப்படுவான் என அவரால் எண்ண முடியவில்லை. அவர்கள் கோவிலில் இருந்து வரும்பொழுதே அதிகாலை மூன்றுமணியை கடந்திருந்தது.

அவர்களுக்கு தனிமை கொடுத்து அவர்கள் விலகிச் சென்றிருக்க, அது பெரிய விஷயமாக இருக்கும் என அவர் நினைக்கவே இல்லை. அதைவிட, பகல் வேளையில் தன்மகன் செய்த செயல் அவருக்குத் தெரியாதே.

“ஹையோ அத்த... என்ன வார்த்தை சொல்லிட்டீங்க? நீங்க அப்படி நினைக்கிற அளவுக்கு நான் உங்ககிட்டே நடந்துகிட்டேனா? நீங்களும் எனக்கு இன்னொரு அம்மாதான். இது... வேற...” அவளால் நடந்தவற்றை இவரிடமும் விவரிக்க முடியாதே.

“அம்மாடி... இல்லம்மா... தீனா இவ்வளவு கோபப்பட்டு பாத்ததே இல்லையா அதான்... சரி விடும்மா, நீ அழாதே... கொஞ்ச நேரத்தில் அவனே சரி ஆயிடுவான்” அவர் சொல்ல, அவன் அப்படியெல்லாம் சரி ஆவான் என்ற நம்பிக்கை அவளுக்கு சுத்தமாக இல்லை.

“எந்திரிச்சு வந்து சாப்பிடு வா… அவங்க அப்பாகிட்டே சொல்லி அவனுக்கு போன் போடலாம்” அவளை அழைத்துச் சென்று பிடிவாதமாக இட்லியை ஊட்டி விட்டார்.

“ஏய் அகிலாண்டம், நீதான் அவனை ஏதாச்சும் சொல்லியிருப்ப, நல்லா யோசி” சாமிநாதன் மறுபடியும் அதையே சொல்ல, கணவனை கோபமாக முறைத்தார்.

“ஆமா, உங்க புள்ளை மூஞ்சியை இழுத்து வச்சுகிட்டாலே நான்தான் காரணம்னு சாமியாடுவீங்களே. என்னை சத்தம்போடுறதை விட்டு, முதல்ல அவனுக்கு போனைப் போடுங்க. சும்மாவே பசி தாங்க மாட்டான். இப்போ கோவமா வேற போயிருக்கான், கண்டிப்பா பசிக்கும்” அவர் சொல்லவே, மனைவியை முறைத்தவாறே தன் அலைபேசியை எடுக்க அறைக்குச் சென்றார்.

பைக்கில் புயல் வேகத்தில் பயணித்த தீனா, அவர்கள் தெருவைக் கடந்த அடுத்த திருப்பத்திலேயே தன் சமநிலை தவறி பைக்கோடு உருண்டிருந்தான். பைக் சற்று தன் கரத்தில் தடுமாறிய உடனேயே அதில் இருந்து விடுபட்டிருக்க, சென்ற வேகத்தில் பல அடி தூரங்கள் சிராய்த்துக் கொண்டே சென்று, ரோட் போஸ்டில் தலை மோதவிருந்து இறுதி நொடியில் சுதாரித்து தன் கரத்தை வைத்து தடுக்கவே எசகு பிசகாக பல அடிகள் வாங்கியிருந்தான்.

கைகளில் சிராய்ப்பும், வலது தோள்பட்டை மூட்டு விலகி இடது கையில் முழங்கை இடித்து என சில நொடிகளுக்குள் அனைத்தும் நடந்து முடிந்திருந்தது. அது ஞாயிற்றுக்கிழமை என்பதாலும், அவன் மெயின் சாலைக்குச் செல்லவில்லை என்பதாலும் வாகனங்கள் எதுவும் அவன்மேல் மோதியிருகவில்லை.

“ஸ்… ஆ…” தோள்பட்டை மூட்டு விலகி உயிர் போகும் வலியை உணர்ந்தவன், சில நொடிகள் அசையக் கூட முடியாமல் படுத்திருந்தான். அந்த ஏரியா அவனுடையது என்பதால், அந்த நேரத்துக்கு கிரிக்கெட் பிராக்டிஸ் செல்ல வந்த இரு இளைஞர்கள் அவனைப் பார்த்துவிட்டு அவன் அருகே விரைந்தார்கள்.

“தீனா சார்...” அவன் அருகே ஓடியவர்கள் தங்களிடம் இருந்த தண்ணீரை அவன் முகத்தில் தெளித்து, அவனுக்கு கொஞ்சம் குடிக்கக் கொடுக்கவே, முயன்று குடித்தவன், வலியில் முனகினான்.

“அதர்வா சார் வீட்ல போய் சொல்லு ஓடு...” ஒருவன் மற்றவனை விரட்ட,

“இல்ல, வேண்டாம்... பயந்துடுவாங்க. என் ஃப்ரண்ட்ஸ்க்கு மட்டும் கொஞ்சம் சொல்லிடுங்க, முடிஞ்சா பக்கத்தில் இருக்கும் ஹாஸ்பிட்டல்க்கு என்னை கூட்டிப் போங்க...” தன் அலைபேசியை அவன் கையில் கொடுத்தவன், வலியில் புழுவாய் துடித்தான்.

“ சார் பைக்ல எப்படி?” அவர்கள் தயங்க,

“இல்ல... என்னால் முடியும். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் இங்கே இருந்து போகணும்...” கை கால்கள் நடுங்க, முயன்று மற்றவன் கை தாங்க எழுந்தவன், அவர்கள் பைக்கில் ஏறிக் கொண்டான்.

அதர்வா என அழைக்கப் பட்டவன், தீனா சொன்ன எண்ணுக்கு அழைத்து காதரிடம் பேசிவிட்டு, தீனாவின் பைக்கை எடுத்துக் கொண்டு அருகில் இருக்கும் மருத்துவமனைக்குச் சென்றார்கள்.

மருத்துவர்கள் வந்து பார்த்து, அவனைப் பரிசோதிக்கவே, அவனது தோள் மூட்டு விலகியிருக்க, முதல் வேலையாக ஆர்த்தோ மருத்துவரை அழைத்து, அடுத்த அரைமணி நேரத்தில் அந்த மூட்டை சரியான இடத்தில் பொருத்த, அவனது அலறல் சத்தத்தில் அந்த மருத்துவமனையே அதிர்ந்தது.

“தீனா, ஈஸி... ஈஸி... அவ்வளவுதான்... முடிஞ்சது” அவர் சொல்ல, அதற்கே தீனா மயக்கத்துக்குச் சென்றிருந்தான். முதல் வேலையாக அது முடிய, அடுத்ததாக அவனது கை காயத்துக்கு ட்ரெஸிங் துவங்கியது.

அந்த நேரம் அவனது நண்பர்கள் மூவரும் வர, அவர்கள் வரவே, தீனாவை மருத்துவமனைக்கு அழைத்து வந்த இருவரும், தீனாவின் பைக் கீ, பர்ஸ், மொபைல் என அனைத்தையும் ஒப்படைத்துவிட்டு அவர்கள் கிளம்பிவிட்டார்கள்.

“எப்படிடா ஆயிருக்கும்? அவன் அவ்வளவு வேகமா எல்லாம் ஓட்ட மாட்டானே. சண்டேயும் அதுவுமா இவ்வளவு சீக்கிரம் எங்கே கிளம்பினானாம்? எப்படி இருக்கான்னு வேற தெரியலையே. முதல்ல செல்லை எல்லாம் ஆப் பண்ணுங்கடா.

“இவன் வீட்டில் இருந்து போன் வந்தால் என்ன சொல்லி சம்மாளிக்கிறதுன்னு தெரியலை. அதுவும் அம்மா போன் பண்ணா, நாம பொய் கூட சொல்ல முடியாது” மூவரும் முடிவெடுத்து அனைத்து அலைபேசியையும் அணைத்து வைத்தார்கள்.

தீனாவின் நிலை என்னவெனத் தெரியாமல், மருத்துவரின் வரவுக்காக பதைப்புடன் காத்திருந்தனர். அவர்களை அதிக நேரம் காத்திருக்க வைக்காமல், அடுத்த அரைமணி நேரத்தில் மருத்துவர் வரவே, தீனாவுக்கு ‘எதுவும் இல்லை’ எனத் தெரிந்த பிறகுதான் அவர்களால் நிம்மதியாக மூச்சுவிடவே முடிந்தது.

அதர்வாவும் அவனது நண்பனும், தீனா சுயமாக பேசி, தங்களுடன் பைக்கில்தான் வந்தான் எனச் சொல்லியிருந்தாலும், எந்த அளவுக்கு அடி பட்டிருக்கிறது என மருத்துவர் சொல்லாமல் தெரியாதே. அவர் வந்து, தீனாவின் உடல்நிலையைப் பற்றி விளக்க, அப்படி ஒரு நிம்மதி.

ஆனாலும் அவன் சுய நினைவுக்கு வராமல், அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. முதலிலேயே தீனா தன் வீட்டுக்குத் தகவல் சொல்ல வேண்டாம் என சொல்லியிருப்பது தெரியவே, அவர்களும் தீனா கண் விழிக்கும் வரைக்கும் காத்திருக்க முடிவெடுத்தார்கள்.

ஒரு பக்கம் அவனது வீட்டில் இருப்பவர்களுக்கு தகவல் தெரிவிக்காமல் இருப்பதுவும் தவறென அவர்களுக்குப் புரியவே செய்தது. தீனா மயக்கத்தில் இருக்கையில், தேவையற்று அவர்களை அழைத்து வந்து, காத்திருக்க வைப்பதிலும் அவர்களுக்கு உடன்பாடு இல்லை.

தீனாவே பேசினால் நன்றாக இருக்கும் என நினைத்து, அவன் கண் விழிக்க காத்திருந்தார்கள்.

அதே நேரம், காலை உணவை முடித்த சாமிநாதன், தன் அலைபேசியை எடுத்து அவனுக்கு அழைத்தார். ஆனால் அதுவோ அணைத்து வைக்கப்

பட்டிருப்பதாகச் சொல்லவே, சரி, கொஞ்ச நேரம் கழித்து முயற்சி செய்யலாம் என விட்டுவிட்டார்.

இதற்கு இடையில் ஜனனியும் அழைத்துப் பார்க்க அதே தகவலே வர அவள் முகம் கவலையைப் பிரதிபலித்தது. மேலும் இரண்டு மணி நேரங்கள் கடந்தும் அதே நிலையே நீடிக்க, முதல் முறையாக சற்று பயமாக உணர்ந்தாள்.

அதைப் பெரியவர்களிடம் வெளிப்படுத்தும் மனமற்று, அவனது நண்பன் காதருக்கு அழைக்க, அவனது அலைபேசி மட்டுமல்லாது, சபரி, சுதிர் என அனைவரின் அலைபேசியும் அவ்வாறே இருக்கவே வெலவெலத்துப் போனாள்.

மனதுக்குள் ஒரு பயப்பந்து சுழல, அது தொண்டைக்குழிக்குள் சிக்கிக் கொண்டது. அதற்குமேல் நொடியும் தாமதிக்காமல் வேகமாக தனது அண்ணன் அபய்க்கு அழைத்தாள். ஞாயிற்றுக்கிழமையும் அதுவுமாக காலையிலேயே அவள் அழைக்கவே, குழப்பமான மனநிலையோடு அழைப்பை ஏற்றான்.

சொல்லப்போனால் அவன் தயங்கக் காரணமே, சில நாட்களாக அவளிடம் அவன் சரியாகப் பேசுவது இல்லை. என்று தீனாவுடன் அவளது வாழ்வு சரியாக இருக்கிறதோ அன்று அவளுடன் பேசுவதாகச் சொல்லியிருந்தான்.

ஆனாலும் தன்னை அழைக்கும் தங்கையிடம் அவனால் பேசாமல் இருக்க முடியுமா என்ன? அவன் அழைப்பை ஏற்றவுடன், ஜனனி விம்மியழ, அவனுக்கு முதலில் எதுவும் புரியவே இல்லை.

“அண்ணே, அவரைக் காணோம்… அவரோட போன் வேற சுவிட்ச்ஆஃப்ன்னு வருது. அவரோட ப்ரண்ட்ஸ் நம்பரும் ஆஃப்ல இருக்கு. எனக்கு என்ன செய்யன்னே தெரியலை. எனக்கு அவரோட இப்பவே பேசியாகணும், எனக்கு அவர் வேணும்… அவர் மட்டும் இல்லைன்னா நான் என்ன செய்வேன்னே தெரியாது” ஆவேசமாக கத்தினாள்.

“ஏய் லூசு, எதுன்னாலும் நல்லதாவே யோசிக்கத் தெரியாதா? அவன் ப்ரண்ட்ஸ் கூட சேர்ந்து எங்கேயாவது வெளியே போயிருப்பான். அதைப்

போய் பெருசா எடுத்துகிட்டு” அனைவரின் எண்ணும் அணைத்து வைக்கப் பட்டிருக்கவே, அவனுக்கும் மனதுக்குள் சிறு நெருடல் எழுந்தாலும், தங்கையிடம் அதை வெளிக்காட்ட அவன் விரும்பவில்லை.

“இல்ல... என் உள்மனசு என்னவோ சொல்லுது. எல்லாரும் சேர்ந்து இப்படி செய்யவே மாட்டாங்க. அவங்களையெல்லாம் பற்றி எனக்கு நல்லாவே தெரியும்” பிடிவாதமாக உரைக்க, அவன் தனது மற்றொரு அலைபேசியில் இருந்து தீனாவின் எண்ணுக்கு அழைக்கத் துவங்கி இருந்தான்.

“நீ போனை வை, நான் என்னன்னு பாத்துட்டு வர்றேன்” அலைபேசியை வைத்துவிட்டு, அவனும் தீனாவின் நண்பர்களுக்கு முயன்றுவிட்டு, என்ன செய்வது எனத் தெரியாமல் சில நிமிடங்கள் அமர்ந்திருந்தான்.

அதே நேரம், காதர் “டேய் மச்சான், பேசாமல் அபய்க்கு சொல்லிட்டா என்ன? அவன் என்ன செய்யணும்னு ஒரு முடிவெடுப்பான்” அவன் சொல்லவே, அப்பொழுதும் அலைபேசியை ஆன் செய்யும் தைரியமின்றி, ரிசப்ஷனுக்கு சென்று அங்கே இருந்த தொலைபேசி வழியாக அவனுக்கு தொடர்பு கொண்டார்கள்.

தன் அலைபேசி இசைத்த அடுத்த நொடியே அபய் அலைபேசியை எடுக்க, விஷயத்தை கேள்விப்பட்டு உடனடியாக மருத்துவமனைக்கு கிளம்பிவிட்டான். அவனுக்குமே தீனா கண்விழிக்கும் முன்பாக விஷயத்தை ஜனனியிடம் சொல்லும் தைரியம் இருக்கவில்லை.

தீனாவுக்கு வலி தெரியாமல் இருக்க ஊசி போட்டிருக்கவே, அவன் கண்விழிக்க மாலைவரை ஆகும் என மருத்துவர்கள் சொல்லிவிட்டார்கள். மாலைவரை தன் தங்கையை எப்படி சம்மாளிப்பது என்பதுதான் அபய்யின் பெரும் கவலையாக இருந்தது.

மாலைவரை அவளை சம்மாளிக்க முடியாது எனத் தெரியவே, அவளிடம் விஷயத்தை சொல்லிவிடலாம் என முடிவெடுத்தவன், அவளது வீட்டுக்கு கிளம்பிச் சென்றான்.

## பகுதி – 27.

தீனாவைப் பற்றிய எந்த தகவலும் தெரியாமல் அவர்கள் அனைவரும் தவித்துப் போய் அமர்ந்திருக்க, அந்த நேரம் அங்கே வந்தான் அபய். அவனைப் பார்த்தவுடனேயே அவன் முகமே சரியில்லை என்பதை நொடியில் உணர்ந்து கொண்டாள்.

“அண்ணே… என்ன ஆச்சு? ஏன் ஒரு மாதிரி இருக்க? அவரை எங்கே? அவருக்கு என்ன ஆச்சு? இப்போ சொல்லப் போறியா இல்லையா?” அவளது எந்த கேள்விக்கும் அவனிடம் பதில் இல்லாமல் போகவே அவனைப் பிடித்து உலுக்கினாள்.

அதைப் பார்த்த சாமிநாதன் மனைவியிடம் கண்ணைக் காட்டியவர், ஜனனியை சற்று அமைதிபடுத்த சொல்லிவிட்டு, அபயின் பக்கம் கவனத்தை திருப்பினார். “தம்பி, தீனாவைப் பற்றி ஏதாவது தகவல் தெரிஞ்சதா? காலையில் இருந்து தவிச்சுப்போய் கிடக்கோம். உனக்குத் தெரிஞ்சா கொஞ்சம் சொல்லுப்பா.

“இந்த பயலுகளும் போனை ஆஃப் பண்ணி வச்சிருக்குறதுதான் மனசுக்கு நெருடலா இருக்கு. எதுவா இருந்தாலும்…” சாமிநாதனால் பேசவே முடியவில்லை.

“ஹையோ மாமா, அவனுக்கு ஒண்ணும் இல்லை, ஒரு சின்ன அடி அவ்வளவுதான்…” வார்த்தைகளை தேர்ந்தெடுத்து உரைத்தான். விபத்து எனச் சொன்னால், அங்கே இருக்கும் அப்போதைய சூழல் எப்படி உரு மாறும் எனத் தெரிந்ததாலேயே அவ்வாறு உரைத்தான்.

“என்ன அவருக்கு அடி பட்டுடுச்சா? எப்படி? எங்கே வச்சு? இப்போ எங்கே இருக்காங்க? எனக்கு உடனே அவரைப் பாத்தாகணும். உன்னால் எப்படி இவ்வளவு அமைதியா இருக்க முடியுது?” ஜனனி ஒரு பக்கம் கத்தினாள் என்றால்,

“என்னப்பா சொல்ற? அவனுக்கு என்ன ஆச்சு? நீ பாத்தியா?” அகிலாண்டம் வேகமாக அவன் முன்னால் வந்தார்.

“நான் இவ்வளவு நிதானமா இருக்குறதில் இருந்தே அவனுக்கு பெருசா எதுவும் இல்லைன்னு நீங்க புரிஞ்சுக்க வேண்டாமா? இப்போ மயக்கத்தில்

இருக்கான், அதனால்தான் அவனை போனில் கூட பேச வைக்க முடியலை.

அவன் கண் விழித்திருந்தால் இந்தப் பிரச்சனையே வந்திருக்காது. உங்களை எல்லாம் எப்படி சம்மாளிக்கன்னு தெரியாமல்தான் மத்தவங்களும் போனை ஆஃப்பண்ணியே வச்சிருக்காங்க" அவர்களது பயம் அளவுக்கதிகமாக இருக்கவே சற்று குரல் உயர்த்தி கத்தினான்.

"அவருக்கு ஒண்ணுன்னா என்கிட்டே தானே அவங்க முதல்ல சொல்லியிருக்கணும்" கண்ணீர் கன்னத்தில் வழிய புலம்பியவள், "எனக்கு உடனே அவரைப் பாக்கணும். என்னை கூட்டி போ..." அவன் தோளில் சாய்ந்து குலுங்கி அழுதாள்.

"கண்டிப்பா கூட்டிப் போறேன், ஆனா இப்போ இல்லை" தீனா மயக்கத்தில் இருக்கையில், தேவையில்லாமல் அவளை மருத்துவமனையில் காத்திருக்க வைக்க வேண்டாமே என அவன் எண்ணினான்.

அதைக் கேட்ட அகிலாண்டாமோ, "என்னப்பா பேசுற நீ? கட்டுன பொண்டாட்டி அவ, அவனை முழுசா கண்ணால் பாக்காமல் அவ மனசு என்ன பாடு படும்னு உனக்குப் புரியலையா? அவனைப் பாத்துட்டு, பிறகு வேண்ணா அவ வீட்டுக்கு வரட்டும்.

"அவளைச் சொல்றியே... இங்கே இவரைப் பார்... அவருக்கு அவரோட புள்ளைன்னா உயிர். இங்கே இருந்து வருத்தப் படுறதுக்கு, அவனைக் கண்ணால் பாத்துட்டா நாங்க நிம்மதியா இருப்போம். பேசிட்டு இருக்காமல் முதல்ல கிளம்பலாம்" அகிலாண்டமும் தன்னை தைரியமாக காட்டிக்கொள்ள முயல்வது அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது.

அவர் சொன்ன பிறகுதான், அவளது பக்கத்திலும் தான் யோசித்திருக்க வேண்டும் என்பதே புரிந்தது. தன் தவறு புரியவே, அவர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு உடனடியாக கிளம்பிவிட்டான். மருத்துவமனைக்குள் அவர்கள் அனைவரும் வரவே, அங்கே இருந்த தீனாவின் நண்பர்கள் விழித்தார்கள்.

“என்னடா இவன்... போனவன் விஷயத்தை சொல்லிட்டு வருவான்னு பாத்தால், எல்லாரையும் கையோட அழைச்சுட்டு வர்றான். இப்போ இவங்களை எல்லாம் எப்படி சம்மாளிக்கிறது?” தங்களுக்குள் கேட்டுக் கொண்டவர்கள், அவர்களை நெருங்கினர்.

அகிலாண்டம் அவர்களைப் பார்த்த பார்வையில் கோபம் இருந்தது என்றால், ஜனனி பார்த்த பார்வையில் பெரும் வருத்தமும் வேதனையும் நிழலாட, அவள் தன் அழுகையை கட்டுப்படுத்துவது தெளிவாகப் புரிந்தது.

“ஜனனி, தீனாவுக்கு எதுவும் இல்லை. அவன் நல்லாத்தான் இருக்கான்...” அவர்கள் முன்வர,

“நீங்க எல்லாம் பேசாதீங்கடா. அவனுக்கு இப்படின்னு தெரிஞ்ச உடனே எங்களுக்கு தகவல் சொல்லாமல், போனை ஆஃப் பண்ணி வச்சுட்டு... கல்நெஞ்சக் காரங்களா இருந்துட்டீங்களேடா” அகிலாண்டம் புலம்ப, அவர்கள் ஒருவர் மற்றவரைப் பார்த்துக் கொண்டார்கள்.

“அத்த... நீங்க முதல்ல உள்ளே போங்க... டேய்... அழைச்சுட்டு போங்கடா” பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தவன், மருத்துவரைக் காண விரைந்தான். தீனாவை அவர்கள் நேரில் பார்த்தாலும், மருத்துவர் ஒரு வார்த்தை சொன்னால்தான் நிம்மதியாக உணர்வார்கள் என்பது அவனுக்குத் தெரியாதா என்ன?

பாதி ஓட்டமும் நடையுமாக ஜனனியும், அகிலாண்டமும் அவர்களைப் பின்தொடர, சாமிநாதன் அபயுடன் சென்றார். காதர், தீனா இருக்கும் ஐசியூவை அவர்களிடம் காட்ட, தவிக்கும் இதயத்தோடு அந்த கண்ணாடி கதவு வழியாக உள்ளே பார்த்தாள்.

சட்டென பார்க்கையில் காயங்கள் எதுவும் தெரியவில்லை என்றாலும், தலைமுதல் கால்வரை அவளது பார்வை அவனை வருட, அவன் கையில் இருந்த சிராய்ப்பும், வலக்கையை சுற்றி தோள் வழியாகப் போட்டிருந்த கட்டும் தெரிய, கண்ணீரோ கன்னத்தில் கடகடவென இறங்கியது.

“அம்மாடி என்ன? அடி ரொம்ப பலமா?” அகிலாண்டம் அவள் முதுகின் பின்னால் குரல் கொடுக்கவே, சற்று விலகி வழி விட, அவரும் தன்

மகனைப் பார்த்தார். ஜனனி அங்கே இருந்த இருக்கையில் அமர்ந்து, கரத்தில் முகம் புதைத்து அழ, நண்பர்கள் அனைவரும் ஒருவர் மற்றவரைப் பார்த்துக் கொண்டார்கள்.

அவர்களுக்கு ஆறுதல் சொல்லக் கூட வார்த்தைகள் வர மறுத்தது. அவனுக்கு பெரிய அடி எதுவும் இல்லை எனச் சொன்ன பிறகும், விடாமல் அழும் அவளை என்ன செய்வது என்றும் அவர்களுக்குத் தெரியவில்லை.

“ஜனனி, நீ இவ்வளவு அழற அளவுக்கு எதுவும் இல்லை... ஜஸ்ட் சின்ன அடிதான், ஒரு வாரத்தில் காயமெல்லாம் ஆறிடும்” சபரி அவளிடம் சொல்ல, அவள் பட்டென நிமிர்ந்து பார்த்த பார்வையின் பொருள் அவனுக்கு சத்தியமாகத் தெரியவில்லை.

அதற்குள்ளாக அபய் மருத்துவரை அங்கே அழைத்துவர, “டாக்டர், இவங்கதான் தீனாவோட மனைவி, அம்மா. அவனுக்கு ஒண்ணும் இல்லன்னு நீங்களே கொஞ்சம் சொல்லுங்க” அவன் குரல் கேட்கவே, ஜனனி தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள்.

“மிஸ்ஸஸ் தீனா, நாளைக்கு மார்னிங் பேஷண்டை நீங்க வீட்டுக்கு அழைச்சுட்டு போய்டலாம். தோள்ப்பட்டை மூட்டு விலகியிருந்தது. அதை சரியான இடத்தில் பொருத்தியாச்சு. அந்த வலி மட்டும் ஒரு ரெண்டு நாள் இருக்கும். அதுக்கு மாத்திரை எழுதிக் கொடுத்திருக்கோம், அதை கண்டினியூ பண்ணுங்க. மற்றபடி அவர் பெர்பெக்ட்லி ஆல்ரைட்” அவர் சொன்னாலும் அவள் முகம் மட்டும் தெளியவே இல்லை.

“டாக்டர், எனக்கு அவரைப் போய் பாக்கணும்” அவள் கெஞ்ச,

“இன்னும் கொஞ்ச நேரத்தில் ரூமுக்கு மாத்திடுவாங்க, நீங்க தாராளமா அவர் கூடவே இருக்கலாம். இப்போ அவரை தொல்லை செய்ய வேண்டாம்” அவர் சொல்லிச் செல்ல, அடுத்த அரைமணி நேரத்தில் அவனை அறைக்கு மாற்றினார்கள். படுக்கைக்கு அருகில் ஒரு இருக்கையை எடுத்துப் போட்டு அமர்ந்தவள் அதன் பிறகு அவன் கண் விழிக்கும் வரைக்கும் அந்த இடத்தை விட்டு அசையவே இல்லை.

அனைவரும் அவளை மதிய உணவு உண்ண அழைத்த பொழுதும் சரி, வீட்டுக்கு போய்விட்டு வரச் சொன்னபொழுதும் சரி, அந்த இடத்தை

விட்டு அசைய மறுத்தாள். அகிலாண்டமும், சாமிநாதனும் கூட அங்கேயே அமர்ந்து கொண்டார்கள்.

சாமிநாதன் மருந்து, மாத்திரைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டும் கொஞ்சம் உணவு உண்டவர், மீண்டுமாக வந்து அமர்ந்து கொண்டார். நண்பர்கள் அனைவரும் கூட வீட்டுக்குச் செல்லாமல் காத்திருக்க, அவர்களை எல்லாம் அதிகம் சோதிக்காமல் மருத்துவர் சொன்ன நேரத்துக்கு தீனா இமை திறந்தான்.

அவனிடம் சற்று அசைவு தெரியவும், அவனது படுக்கையைச் சுற்றி அனைவரும் சூழ்ந்தார்கள். தீனா, முயன்று இமை திறக்க, தன்னைச் சுற்றிலும் நின்ற அனைவரையும் பார்வையால் தழுவினான். நண்பர்கள், அபய், பெற்றவர்கள், இறுதியாக ஜனனியின் மீது பார்வையை நிலைக்க விட்டான்.

அவள் அழுது, அழுது முகமே வீங்கிப்போய் இருக்க, அவள் பக்கம் கை நீட்டியவன், மறுப்பாக தலை அசைத்தான். அவனது கரத்தை அவள் கெட்டியாக பற்றிக் கொள்ள, கண்களோ கலங்கிப் போனது. அவன் அழாதே எனச் சொன்னாலும் அவளால் அப்படி இருக்க முடியுமா என்ன?

“என்னடா மச்சான் இப்படி பயம் காட்டிட்ட?” நண்பர்கள் புலம்பினாலும் அவர்கள் முகங்களில் ஒரு நிம்மதி பூத்தது.

தீனா படுக்கையில் இருந்து எழ முயல, அடிபட்ட வலக்கை பக்கம் தாங்கவே, “ஸ்… அம்மா…” சன்னமாக முனகினான்.

“ஹையோ என்னங்க… இப்போ எதுக்கு எழுந்துக்கறீங்க? பேசாமல் படுங்க” அவன் இடக்கரத்தை அழுத்தமாக பற்றி படுக்க வைத்தாள். மருத்துவர் வந்து பரிசோதித்துச் செல்ல, நண்பர்களும் விடைபெற்றுச் சென்றார்கள்.

அவர்கள் அனைவரும் செல்லவே, படுக்கையில் அப்படியே படுத்துக் கொண்டவன், “ஜானு, எனக்கு ஊசி எதுவும் போட்டுடலை தானே” அவன் வலியில் சற்று முகம் சுழிக்க, பொங்கிய கண்ணீரை தனக்குள் இழுத்துக் கொண்டாள்.

“இல்ல... ஊசி எல்லாம் போடலை...” அவனை சமாதானப் படுத்த முயன்றாள்.

“ஜானு, எனக்கு இந்த இடம், ஹாஸ்பிடல் எல்லாம் பிடிக்கலை. நாம வீட்டுக்குப் போகலாம். உடனே போகலாம்” அவனது தேகம் மெல்லியதாக நடுங்கிக் கொண்டிருந்தது.

“என்னங்க, நாளைக்கே நாம வீட்டுக்கு போய்டலாம்... நீங்க கொஞ்சம் நிதானமா இருங்க. உங்களுக்கு ஒண்ணும் இல்லை, நான் உங்க கூடவே இருக்கறேன் தானே” அவனது மற்ற கரத்தை அழுத்தமாக பற்றிக் கொண்டாள்.

செவிலியை அழைத்து அவன் கரத்தில் மாட்டியிருந்த வெயின் பிளாண்டை எடுக்கச் சொன்னவள், அவன் அருகிலேயே அமர்ந்து கொண்டாள். திடுமென அவனுக்கு ஒரு சந்தேகம் தோன்ற, அவளிடம் அந்த சந்தேகத்தைக் கேட்க, அப்படியே திகைத்துப் போனாள்.

“ஹையோ... அப்படியெல்லாம் எதுவும் இல்லை” அவன் வாயை அடைத்தாள்.

“இல்ல, என்கிட்டே உண்மையைச் சொல்லிடு. டாக்டர் உன்கிட்டே அப்படி ஏதாவது சொன்னாரா? என்கிட்டே மறைக்கிறாயா?”.

“வேண்ணா இப்போ டாக்டர் வருவார் அவர் கிட்டேயே கேட்டுக் கோங்க” அவள் சொல்ல, அப்படியே அமைதியானான். ஆனாலும், அவனை பரிசோதிக்க வந்த மருத்துவரிடமே அவன் கேட்க, அவரோ வாய்விட்டே சிரித்துவிட்டார்.

“மிஸ்டர் தீனா... நீங்க நூறு சதவீதம் குடும்ப வாழ்க்கைக்கு தகுதியாகத்தான் இருக்கீங்க போதுமா?” அவர் சொல்ல அதன் பிறகே நிம்மதியானான். ஜனனியோ அவனைப் பார்த்து முறைக்கவும் மறக்கவில்லை.

ஒரு வழியாக மறுநாள் அவனை டிச்சார்ஜ் செய்து, வீட்டுக்கு அவனை அழைத்துச் சென்றார்கள். தீனாவும், ஜனனியும் பார்வையால் ஆயிரம்

வார்த்தைகள் பேசிக் கொண்டாலும், இருவரும் வாய் வார்த்தையாக எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

தீனாவுக்கு விபத்தின் இறுதி நொடி நினைவுக்கு வந்து தொல்லை செய்தது. தான் இறுதி நொடி சுதாரிக்காமல் போயிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்ற நினைப்பே மனதை நடுங்கச் செய்ய, ஜனனிக்கோ, அவனது விபத்தையே ஜீரணிக்க முடியவில்லை.

தன்மேல் கோபம் கொண்டு, தான் செய்த செயலால் தூண்டப்பட்டு வெளியே சென்று அவன் விபத்தில் சிக்கியிருக்க, அதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இத்தோடு போனதால் ஆயிற்று, இதுவே வேறு விதமாகப் போயிருந்தால்... அந்த நினைப்பே அவள் நெஞ்சை நடுங்கச் செய்தது.

அந்த விபத்தைப் பற்றி பேசினாலே, அவனிடமே வெடித்து அழுதுவிடுவோம் என்பதால், சாதாரண பேச்சுக்களை கூட அவளால் பேச முடியவில்லை. ஆனால், வேலைக்கு கூட செல்லாமல் அடுத்த இரண்டு நாட்களும் அவனுடனேயே இருந்தாள்.

அவனுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் அவளே செய்தாள். ஆனால் அவனிடம் மனம் விட்டு பேச முடியாதது பெரும் பாரமாக மனதை அழுத்தியது. தீனாவும் அவளிடம் எப்பொழுது, எப்படி பேசுவது எனத் தெரியாமல் தவித்துப் போய்தான் இருந்தான்.

இரண்டு நாட்கள் கடந்து, மூன்றாம் நாள் மாலையில் அவனைக் குளிக்க வைத்துக் கொண்டிருந்தாள் ஜனனி. அவன் மறுத்தும் அவள் கேட்கவில்லை. கடந்த மூன்று நாட்களாகவே தன்னைவிட்டு இமைப்பொழுதும் நீங்க மறுக்கும் அவள் செய்கையை அவனும் உணர்ந்து கொண்டுதானே இருக்கிறான்.

தன்னை முழுதாக இழந்து விட இருந்தோமே என்ற அவளது மனதின் பயத்தை அவன் தெளிவாக உணர்ந்திருந்ததால், அவளை கண் பார்வையிலேயே வைத்திருந்தான். இப்பொழுதும் கூட, அவனது தலையில் நீரை ஊற்றியவள், எங்கே அவனது கரத்துக்கு வலிக்குமோ என்பதுபோல் மெதுவாக அவன் வலக்கரத்தை நீவினாள்.

அதைச் செய்கையிலே அவளது கண்கள் கலங்கிப் போக, அது அவனது தோளில் பட்டுத் தெறித்தது. அதைப் பார்த்த தீனாவுக்கு அவளை எப்படி சமாதானம் செய்வது என்றே தெரியவில்லை.

“ஜானு, போதும் அழுதது. நானும் மூணு நாளா பாக்கறேன், இப்படி விடாமல் அழுதா உடம்பு என்னத்துக்கு ஆகும்? உன் தீனா, உன் பக்கத்தில்தான் இருக்கான். இதுதான் நிஜம்… புரிஞ்சுக்கோ” அவளிடம் பேசாமல் அவளது வருத்தம் தீராது என்பதால் பேச முடிவெடுத்தான்.

“ஏன் தீனா இப்படிப் பண்ணீங்க? அவ்வளவு கோபமா போய்… இதுக்கு என்னை நாலு அடி அடிச்சிருக்கலாமே. உங்களுக்கு ஏதாவது ஒண்ணு ஆகியிருந்தால், என்னை நீங்க உயிரோடவே பாத்திருக்க முடியாது” அவன் சின்ன ஸ்டூலில் அமர்ந்திருக்க, அப்படியே அவன் அருகே மண்டியிட்டவள், அவனை இறுக தழுவிக் கொண்டாள்.

அவள் கன்னங்கள் இரண்டையும் கைகளில் தாங்கிக் கொண்டவன், “நான் வேணும்னு இப்படி செய்திருப்பேன்னு நீ நினைக்கறியா ஜானு. அந்த ரோட்டு ஓரத்தில் இருந்த மணல்ல டயர் ஸ்லிப் ஆகி, போன வேகத்தில் என்னால் கட்டுப்படுத்த முடியாமல் போய்டுச்சு.

“ஆனாலும் அந்த போஸ்ட்தூண்ல என் தலை மோதப் போனப்போ என் நினைவுக்கு வந்தது உன் முகம்தான். கடைசி நிமிஷம் சுதாரிச்சு, என் தோளை அதில் மோதவிடாமல் போயிருந்தால்…” அவன் சொல்ல, வேகமாக அவன் வாயை தன் கரத்தால் மூடினாள்.

“உங்க கூட சேர்ந்து வாழணும்னு எனக்கு மட்டும் ஆசை இல்லையா? நான் வேணும்னு உங்களை தவிர்த்த மாதிரி எதுக்கு என்மேல் உங்களுக்கு அவ்வளவு கோபம்? உங்களுக்கு இருக்கும் ஆசையில் பாதியாவது எனக்கு இருக்காதா என்ன?” அவள் ஆதங்கமாக கேட்க, அவனால் பழைய கோபத்தைக் காட்ட முடியவில்லை.

தனது கோபத்தால் நேரவிருந்த அகோரம் அவன் கண்முன் விரிய, அவன் கண்களும் லேசாக கலங்கியது. “சாரி ஜானு… அதென்னவோ நீ முழுசா என் பக்கம் மட்டுமே இருந்திருக்க வேண்டும் என்ற கோபம், என்னை விட மத்தவங்க பெருசா போயிட்டாங்களான்னு ஆதங்கம் அவ்வளவுதான்.

“மற்றபடி உன்னை விட்டு போகவெல்லாம் என்னால் முடியாது. உன்னோட நூறு வருஷம் நான் சந்தோஷமா வாழணும்னு ஆசைப் படறேன்” இப்பொழுது அவளை இறுக அணைத்திருந்தான். அவனது அணைப்பில் சில பல நிமிடங்கள் கட்டுண்டு இருந்தவள், அவன் முகம் பார்த்தாள்.

அவன் என்னவென பார்வையால் வினவ, “தீனா, நான் சொல்லப் போறதை எந்த அளவுக்கு நீங்க புரிஞ்சுப்பீங்கன்னு தெரியலை. ஆனா, அந்த நேரம் என் மனசுக்குள் நான் என்ன நினைச்சேன்னு உங்ககிட்டே சொன்னால்தான் உங்களுக்குப் புரியும்.

“ஒரு விஷயம் உங்களுக்குத் தெரியும், உங்க வீட்ல நீங்களும், என் வீட்டில் நானும் அவங்க பெத்த பிள்ளைங்க கிடையாது. அப்படி இருக்கும்போது ரெண்டு வீட்டுப் பெரியவங்களுக்கும், அவங்களோட சொந்த பேரப் பிள்ளையை பாக்கணும்னு ஆசைப் படுவதை, எதிர்பார்ப்பதை நாம நிறைவேத்தியே ஆகணும்னு தோணுச்சு.

“அவங்களுக்கு பேரப்பிள்ளையை கொடுப்பதை விட, என் தீனாவோட உயிரை என் கருவறைக்குள் நான் தாங்கியே ஆகணும்னு ஒரு ஆசை. எங்கே அந்த விரதம் இருக்காமல் போனால், என்னால் என் குட்டி தீனாவையோ, ஒரு குட்டி ஜனனியையோ பாக்கவே முடியாமல் போயிடுமோ என்ற என்னோட பயம்,

“அப்படி ஒண்ணு நம்ம வாழ்க்கையில் நடந்துடவே கூடாது என்ற என்னோட எதிர்பார்ப்பு, அதனால் மட்டும்தான் நான் அன்னைக்கு உங்களை விட்டு விலக முடிவு செய்தேன். அதைச் செய்ய நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன்னு ஏன் உங்களுக்குப் புரியாமல் போச்சு?” அவன் நெஞ்சில் மெதுவாக குத்த, அவளைத் தடுக்கக் கூடத் தோன்றாமல் அப்படியே பார்த்திருந்தான்.

“எனக்கு ஒரு குட்டி தீனா வேணும்... அதுவும் உடனே வேணும்...” அவள் மெல்லிய கதறலாக அவன் நெஞ்சில் விழுந்து குமுற, அவளை சேர்த்து அணைத்துக் கொண்டான்.

“சரி பெத்துக்கலாம்... பத்தே மாசத்தில் பெத்துக்கலாம்” அவள் காதுக்குள் உரைக்க, அவன் சொன்ன தோரணையில் அவளுக்கு சிரிப்பு எட்டிப் பார்த்தது.

“தீனா...” மெல்லியதாக அவள் சிணுங்க,

“தலையில் தண்ணி ஊத்திட்டு இப்படியே உக்காந்திருந்தால் எப்படி? இப்போ நான் குளிக்கிறதா இல்லையா?” அவன் கேட்க, அப்பொழுதுதான் தாங்கள் இருக்கும் இடமே அவள் நினைவுக்கு வந்தது.

“சாரி தீனா... சாரி...” அவன் தலைமேல் நீர் ஊற்ற, அவளது உடையும் நனையத் துவங்கியது. அதைபற்றியெல்லாம் அவள் கவலையே படவில்லை.

“உன் ட்ரெஸ் எல்லாம் ஈரமாகிடுச்சு. நானே குளிச்சுக்கறேன்னு சொன்னாலும் கேக்காமல், பேசாமல் நீயும் என்னோட சேர்ந்தே குளிச்சுடு” அவன் சொல்ல, “ம்ஹூம்... முதல்ல நீங்க குளிங்க, பிறகு நான் குளிச்சுக்கறேன்” அவள் சொல்ல, அதற்குமேல் அவளைச் சீண்டாமல் விட்டுவிட்டான்.

மனம் விட்டுப் பேசியதால் இருவரின் மனமும் இலகுவாக இருந்தது. குளித்து வெளியேறியவன் உடை மாற்ற, அவள் குளிக்கத் துவங்கினாள். ஜனனி குளித்து முடித்து வெளியே வருகையில் தீனா நல்ல ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

இரவு உணவுக்கு கூட அவன் எழாமல் போகவே, அவனது உறக்கத்தைக் கலைக்க மனமில்லாமல், அவனுக்கான உணவை ஹாட் பாக்ஸில் எடுத்து வந்தவள், அங்கே இருந்த மேஜைமேல் வைத்துவிட்டு, அவன் அருகே அமைதியாகப் படுத்துக் கொண்டாள்.

அவன் எழுகையில் தானும் எழ வேண்டும் என்ற நினைப்போடே தூங்க, அவளால் ஆழ்ந்து உறங்க முடியவில்லை. உறக்கமும் அற்ற, விழிப்பும் அற்ற நிலையில் சஞ்சரித்தவள், ஒரு கட்டத்தில் தன்னை மீறி கண்ணயர்ந்து விட்டாள்.

அவள் ஆழ்ந்து உறங்கத் துவங்கிய நேரம் கண்விழித்த தீனா, அப்பொழுதுதான் நல்ல பசியை உணர்ந்தான். நிச்சயம் தனக்காக ஜனனி உணவை எடுத்து வந்திருப்பாள் என்பது புரியவே, தன் பார்வையை சுழற்ற, அவள் கொண்டு வந்து வைத்துச் சென்றிருந்த உணவு பார்வையில் பட்டது.

எழுந்து சென்று உணவருந்தியவன், அதற்குமேலே உறக்கம் பிடிக்காமல், ஜனனியின் உறக்கத்தையும் கலைக்க மனமற்று, சில பல நிமிடங்கள் அவள் முகத்தையே ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். மாலையில் மனம் விட்டு பேசிவிட்டதாலோ என்னவோ, அவன் உணர்வுகள் அவளைக் கேட்டது.

ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் அவளது தூக்கத்தைக் கெடுக்க விரும்பாமல், எழுந்து மாடிக்குச் சென்றுவிட்டான்.

ஜனனி, நள்ளிரவில் புரண்டு படுக்கையில் தீனா கண்விழித்து விட்டானா என அவள் பார்க்க, அவன் படுத்திருந்த இடம் வெறுமையாக இருக்க, ஹாட்பாக்ஸ் அங்கே இல்லாமல் இருக்கவே, அவன் உணவை உண்டிருப்பதை உணர்ந்து கொண்டாள்.

‘சாப்ட்டுட்டு இவர் எங்கே போனார்?’ எண்ணியவள் மாடியில் இருந்து கீழே எட்டிப் பார்க்க, கீழே விளக்கு போட்டிருக்கும் அறிகுறியே தெரியவில்லை. அப்பொழுதுதான் மாடி செல்லும் கதவு திறந்திருப்பதைப் பார்த்தவள், தானும் மாடிக்கு விரைந்தாள்.

அங்கே நிலாவை ரசித்தவாறு தீனா நிற்பதைப் பார்த்தவள், வேகமாக அவன் அருகே சென்றாள். “தீனா, என்ன இங்கே வந்து நின்னுட்டு இருக்கீங்க?” கேட்டவள் அவனை நெருங்கி நின்றாள்.

“இப்போதான் சாப்ட்டேன், உடனே படுத்தால் ஜீரணமாகாதே, சோ… கொஞ்ச நேரம் இங்கே நிக்கலாம்னு வந்தேன்” தன் அருகே நின்றவளின் கரத்தைப் பிடித்து இன்னும் தனக்கு நெருக்கமாக இழுத்துக் கொண்டான்.

அவனது இழுப்புக்குச் சென்றவள், “என்னை எழுப்பியிருக்கலாமே?” கேட்டவள் அவன் இடது தோளில் சாய்ந்து கொண்டாள்.

“நீ நல்லா தூங்கிட்டு இருந்த, எழுப்ப மனசு வரலை” உரைத்தவன் அவள் உச்சந்தலையில் இதழ் பதிக்க, அவன் தோள் வளைவிலேயே அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

“கை வலி இருக்கா?” அவன் வலக்கரத்தின் தோளை முழுதாக வருடினாள்.

“இந்த கேள்விக்கு பதில் சொல்லி சொல்லி அலுத்துப் போயிட்டேன். வலியெல்லாம் இப்போ இல்லம்மா…” தன்னவள் தனக்காக வருத்தப்படுவது அவனுக்கு ஒரு பக்கம் வருத்தமாக இருந்தாலும், மறு பக்கம் பூரிப்பாக உணர்ந்தான்.

அந்த ஏகாந்த இரவு, தனிமை, தன்னவள்… அவன் தேகம் மெல்லியதாக சூடேறியது. இடக்கையால் அவள் இடை வளைத்தவன், அவள் நெற்றி, மூக்கு, கன்னம், தாடை என இதழ் பதிக்க, இமைகளை மூடிக் கொண்டவள் அவன் கழுத்தைச் சுற்றி தன் கரத்தை கோர்த்துக் கொண்டு, அவன் இதழ் தீண்டலை அனுபவித்தாள்.

அவள் இதழ்களில் மெல்லியதாக முத்தமிட்டு விலக, அவன் முகம் நோக்கி இருந்தவள் தன் முகத்தை திருப்பிக்கொள்ளவே இல்லை. அவன் மீண்டும் மீண்டும் முத்தமிட்டுக் கொண்டே இருக்க, அவன் டிஷர்ட் காலரை அழுத்தமாக பற்றிக் கொண்டாள்.

“தீனா…” அவன் இதழின் தீண்டல் அவளை உருக வைக்க, மெதுவாக முனகினாள். ஆனால் அவனைத் தடுக்கவெல்லாம் சிறிதும் முயலவில்லை. ‘எனக்கு சம்மதம்’ என்பதை தன் அமைதியால் அவனுக்கு உணர்த்திக் கொண்டிருந்தாள்.

தன் இடப்பக்க தோளில் சாய்ந்திருந்தவளை, தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்தவன், இப்பொழுது அவள் இதழ்களை மொத்தமாக சுவைக்க, அவனுக்கு தன் இதழ்களை விட்டுக் கொடுத்துவிட்டு அவன் நெஞ்சோடு இன்னும் அழுத்தமாக ஒட்டிக் கொண்டாள்.

மாடியில் வீசிய வாடைக் காற்றுக்கு அவன் இதழ்களின் கதகதப்பு வெம்மை சேர்த்தது. அவள் மென்மையாக முனகி அவன் செய்கைக்கு ஆதரவளிக்க, அவள் இதழ்களுக்குள் மூழ்கிப் போனான். முதலில் மென்மையாக துவங்கிய அவனது அணைப்பும், இதழ் தீண்டலும்

இறுதியில் சற்று இறுக்கமாக அவன் வேகத்துக்கு ஈடுகொடுக்க முயன்றாள்.

அவன் வேகம் சற்று தணிய, “தீனா, நாம மொட்டை மாடியில் நிக்கறோம்” பார்வையை அந்த இருளுக்குள் சுழற்றியவாறே உரைக்க, அவள் இடையை இன்னும் அழுத்தமாக பற்றி தன்னோடு இணைத்தவன், “நாம இருட்டுக்குள் தான் நிக்கறோம்.

“அத்தோட இந்த நேரத்துக்கு நாம இங்கே நின்னு ஓப்பன் கிஸ் அடிப்போம்னு எல்லாம் யாரும் காத்துட்டு இருக்க மாட்டாங்க” கிசுகிசுப்பாக முனகியவன், அவள் கழுத்து வளைவில் வாசம் பிடிக்க, அந்த அவனது மீசையின் குறுகுறுப்பிலும், தாடையின் அழுத்தமான உரசலிலும் பனிச்சாரலில் நனையும் சிலிர்ப்பு அவளுக்குள்.

“ஜானு… ஐ கான்ட் வெயிட் எனி மோர்…” உரைத்தவன் அவளை கரங்களில் ஏந்த முயல,

“தீனா, கை… வேண்டாம்…” அவளது மறுப்பை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

“இதுக்காகவே நான் உன்னை கீழே விடறதாவே இல்லை” பிடிவாதமாக அவளை தூக்கிக் கொண்டான்.

அவளை கரங்களில் அள்ளிக் கொண்டவன், அவர்கள் மொட்டைமாடியின் ஓரத்தில் படர்ந்திருந்த மல்லிகைப் பந்தலை நோக்கிச் செல்ல, அவன் கரங்களில் தோய்ந்திருந்தவள், மெதுவாக விழி திறந்து பார்த்தாள்.

அவன் வந்து நின்ற இடத்தைப் பார்த்தவள், “தீனா, இங்கே…” அவள் முகத்தில் மெல்லிய மறுப்பைக் கண்டவன், “இந்த மல்லிகைப்பந்தலின் மறைவு, வாசனை… எனக்கு ரொம்ப புடிச்ச இடம். நீ வர முன்னாடி பாதி நாள் இங்கேதான் இருப்பேன்.

“இங்கே நிலாவின் ஒளி கூட உள்ளே நுழையாது ஜானு. ட்ரஸ்ட் மீ” அந்த ஒற்றைக் கட்டிலில் அவளை விட்டவன், தானும் அவளுடன் சரிய, அவனை தன்னோடு இறுக்கிக் கொண்டாள், அவளது பயத்தை உணர்ந்தவன்,

“உனக்கு இந்த இடம் பிடிக்கலைன்னா நாம கீழே போய்டலாம்...” அவன் தனக்காகப் பார்ப்பது பிடிக்க, மறுப்பாக தலை அசைத்தாள்.

தன் முத்தப் பயணத்தை தொடர்ந்தவன், தன் தடைகளைக் கடக்க முயல, “ம்ஹூம்...” மெல்லியதாக மறுத்தாள். அதைப் பார்த்தவன், அங்கே இருந்த போர்வையை இருவருக்குமாக போர்த்திக் கொண்டான். தன்னவளுக்குள் கொஞ்சம் கொஞ்சமாக மூழ்க, அவனது அந்த அக்கறை பிடிக்க, தன் தயக்கம் விலகி அவனுடன் ஒன்றிப் போனாள்.

இத்தனை வருட காதலையும், இத்தனை மாத பிரிவையும் ஒற்றை உறவில் அவன் ஈடுகட்ட முயல, அவன் முயற்சியைப் புரிந்தவளுக்கு அவனுக்கு ஈடுகொடுப்பது பெரும் சவாலாகவே இருந்தது. அவன் இதழ்கள் தூரிகையாக மாற, அவள் தேகம் புத்தகமானது.

அவனது இறுதி நெருக்கம் தகிக்க, அவனை இறுக அணைத்துக் கொண்டவள், அவன் முகம் முழுக்க தன் முத்திரையைப் பதித்தாள். “ஆர் யூ ஓகே?” அவள் காதுக்குள் முனக, அவன் தோளில் குத்தியவள், அவன் இதழ்களைக் கடித்து தண்டிக்கவும் மறக்கவில்லை.

“ஸ்... ஜானு...” சற்று அலறியவன், தனக்குத் தெரிந்த விதத்தில் அவளை தண்டிக்க, அதில் சுகமாகவே திளைத்து, மூழ்கினாள். அவன் களைத்து விலகி, அவளை தன்னோடு இழுத்து அணைத்துக் கொண்டான்.

## பகுதி - 28.

இருவரும் களைப்பில் விழி மூட அந்த ஏகாந்தம் அவர்களைத் தாலாட்டியது. அடுத்து வந்த ஒரு வாரம் அவன் விடுப்பு எடுக்க, ஜனனியும் தனது விடுப்பைத் தொடர்ந்தாள். அந்த ஒரு வாரம் அவர்களது உறவை இன்னும் நெருக்கமாக்க, அதைப் பாராமல் பார்த்த பெரியவர்களுக்கு அவ்வளவு நிம்மதி.

அதே நேரம், தீனாவுக்கு குணமானால் ஒன்பது வாரங்கள் தங்களது குலதெய்வ கோவிலுக்கு வந்து விளகேற்றுவதாக அகிலாண்டம் வேண்டுதல் வைத்திருப்பதாக உரைக்க, தீனாவும் ஜனனியும் ஒருவர் மற்றவரைப் பார்த்துக் கொண்டார்கள்.

“அது சக்தி வாய்ந்த அம்மன் ஜனனி. நீயும் உனக்கு ஏதாவது வேண்டுதல் இருந்தால் செய்” அவளையும் அழைக்க, மனதுக்குள் நிஜமாகவே அலறினாள்.

ஒரு நல்ல நாளில் விரதம் துவங்க வேண்டும் என அவர் உரைக்க, “அத்த, அவருக்கு பூரணமா குணமான பிறகு அந்த வேண்டுதலை நிறைவேற்றலாம், இப்போதைக்கு வேண்டாம்” என ஜனனி தள்ளிப் போட, அவளை முறைத்தான்.

அகிலாண்டத்துக்கு ஜனனியை தன்னுடன் விரதத்தில் இணைத்துக் கொள்வதில் விருப்பம் இருப்பதுபோல் இருக்கவே, அவளால் முற்றாக மறுக்க முடியவில்லை. அதென்னவோ தன் தாயிடம் வளைந்து கொடுத்து பழகியவளுக்கு இங்கேயும் அந்த குணம் கை கொடுத்தது.

அதைவிட, தன்னவனுக்கு தாய்க்கு தாயாக இருந்து பாராட்டி, சீராட்டிய அவரை அவளால் வெறுக்க முடியுமா என்ன? இந்த காலத்தில் பெற்ற பிள்ளைகளிடம் கூட சில தாய்மார் சுயநலமாக நடந்து கொள்கையில், தான் பெறாத மகனை அவர் இவ்வளவு சீராட்டுகையில், அவருக்காக கொஞ்சம் விட்டுக்கொடுத்து செல்வது அவளுக்கு சுலபமாகவே இருந்தது.

‘பிளீஸ்…’ அவள் கண்களால் அவனிடம் கெஞ்ச, போலியாக முறுக்கிக் கொண்டான். இப்பொழுதெல்லாம் அவனது கோபம் எவ்வளவு தூரம் செல்லும் என்பதை அறிந்தவளுக்கு, அதை சரி செய்யும் வித்தையும் சேர்ந்தே தெரிந்திருந்தது.

அதைவிட, அவனுக்கு சரியானால், அருகே இருந்த அம்மன் கோவிலில் மண் சோறு சாப்பிடுவதாக அவள் வேண்டுதல் வைத்திருக்க, பிடிவாதமாக அவளுடன் சேர்ந்து அவனும் மண் சோறு உண்டான். அதைப் பார்த்த அங்கிருந்த பெண்கள் திகைத்துப் போனார்கள்.

அவனோ, “இவ எனக்காகத் தானே மண் சோறு சாப்பிடுறா, அப்போ அதில் நானும் கலந்து கொள்வது தானே முறை” அவன் நியாயம் கேட்க அவன் நியாயத்தில் வாயடைத்துப் போயினர்.

அடுத்து வந்த நாட்களில் வாழ்க்கை இயல்புக்குத் திரும்ப, தான் தேனிலவு பயணத்துக்குச் செல்லாதது தீனாவுக்கு பெரும் குறையாகவே இருந்தது.

விபத்து நடந்தபொழுது பத்து நாட்கள் விடுப்பு எடுத்துவிட்டதால், அலுவலகத்திலும் உடனடியாக விடுப்பு எடுக்க முடியாத சூழல். எனவே அந்த பயணத்தை தள்ளிப் போட்டார்கள்.

“ஜானு... என்ன ஆனாலும் சரி, இந்த வீக் எண்டு போயே ஆகணும்” அவன் சொல்ல, அவன் கன்னம் பற்றிக்கொண்டு சிரித்தாள்.

“நம்ம வீட்டுக்குள் ஐயாவுக்கு என்ன குறையாம்? ஹனிமூன் போகாதது எல்லாம் பெரிய விஷயமா?” அவன் மடியில் அமர்ந்து கொண்டாள்.

“அதெல்லாம் எனக்குத் தெரியாது... கல்யாணம் ஆனா ஹனிமூன் போயே ஆகணும். எனக்கு உன்னோட போகணும்” அவன் பிடியிலேயே நிற்க, அவனுக்கு விட்டுக் கொடுத்தாள்.

அவள் சம்மதிக்கவே, அவனது சந்தோஷத்தைப் பார்த்தவளுக்கு அவ்வளவு ஆச்சரியமாக இருந்தது. அவனது சந்தோஷத்துக்காகவே எதையும் செய்ய அவள் தயாராக இருந்தாள். அதுவும் அவள் சம்மதம் சொன்ன உடனேயே வெளியூர் செல்ல டிக்கட் போட்டது முதல், அந்த வார இறுதி நாளை அவன் பெரும் ஆவலாக எதிர்பார்க்க, “தீனா, அட்டகாசம் பண்றீங்க. அத்தையும் மாமாவும் சிரிக்கறாங்க” சுகமாய் சலித்துக் கொண்டாள்.

தீனாவுக்கு அந்த வெள்ளிக்கிழமை காலையே மிகவும் அழகாக விடிந்தாற்போல் இருந்தது. எப்பொழுதுமே வெள்ளிக்கிழமை என்பது அவனுக்கு பெரும் உற்சாகத்தை அள்ளித் தெளிக்கும். இன்று ஒரு படி மேலாகவே இருக்க, உடனடியாக தன்னவளைக் காண உள்ளம் தவித்தது.

அவன் எழுந்து காலைக் கடன்களை செய்யப் போக முயல, “டேய், மச்சான்... வாழ்த்துக்கள்டா...” அபய், தன் நண்பனை தாவி அணைத்துக் கொள்ள, விழித்தான்.

“என்னடா மச்சான்? காலங்காத்தால வந்து சம்பந்தமே இல்லாமல் வாழ்த்திக்கிட்டு இருக்க?” புரியாமல் கேட்டான்.

“இதை நான் சொல்லக் கூடாது. நீ முகத்தைக் கழுவிட்டு கீழே வா” அவன் முதுகில் கை வைத்து பாத்ரூம் பக்கம் தள்ளி விட்டான்.

அவன் வெளியே வரவே, அவனை அழைத்துக் கொண்டு கீழே செல்ல, அங்கே, பத்மாவதி, கலாவதி, தண்டாயுதபாணி, தன் பெற்றவர்கள் என அனைவரும் அங்கே குழுமியிருக்க, அனைவரின் முகத்திலும் இருந்த சந்தோஷமும், உற்சாகமும் அவனையும் கொஞ்சம் தொற்றிக் கொண்டது.

“எல்லாரும் வாங்க... என்ன விசேஷம்? ஜானு எங்கே? என்னடா? நீயாவது சொல்லு” தன் நண்பனின் பக்கம் திரும்பினான்.

“மாப்ள... எங்க எல்லாருக்கும் ரொம்ப சந்தோஷம்” தண்டாயுதபாணி அவனை அணைத்து விடுவிக்க, பார்வையைச் சுழற்றியவனது கண்களில் ஜனனி விழுந்தாள். அவள் முகத்தில் தெரிந்த பரவசமும், சிறு தடுமாற்றமும் அவனுக்கு எதையோ உணர்த்த, அவனுக்குள் குப்பென ஒரு சந்தோசம் ஊற்றெடுத்தது.

“டேய் படவா... எங்களை எல்லாம் பாட்டி தாத்தாவாக்கிட்ட. எங்களுக்கு சந்தோஷத்தில் தலைகால் புரியலை. வாயைத் தொற?” சொன்ன அகிலாண்டம் அவன் வாயில் கேசரியைத் திணிக்க, அந்த இனிப்பு அவன் அடி மனது வரைக்கும் தித்தித்தது.

அவனது பார்வை ஜனனியின் கண்களை சந்திக்க, அவன் என்ன சொல்வானோ?’ என்ற சிறு பயத்தை அங்கே பார்த்தவனுக்கு அவளிடம் விளையாடிப் பார்க்கத் தோன்றியது.

“நோ... இதை நான் ஒத்துக்கவே மாட்டேன். நான் இன்னும் ஹனிமூனே போகலை” அவன் குரலுயர்த்திக் கத்த, அவன் இப்படிப் பேசுவான் என்பதை அங்கே இருந்த யாருமே எதிர்பார்க்கவே இல்லை. அந்த இடமே ஒரு நொடி உறைந்து போக, அடுத்த நொடி, அவனைப் பெற்றவர்கள் தலையில் அடித்துக்கொள்ள, மற்றவர்களோ என்ன சொல்வது எனத் தெரியாமல் தங்களுக்குள் மெல்லியதாக புன்னகைத்துக் கொண்டார்கள்.

“அடச்சீ... வாயை மூடுடா” அபய் அவனை இழுத்துக்கொண்டு வெளியேற, ஜனனியின் பார்வை தவிப்பாய் அவனைப் பின்தொடர்ந்தது.

“டேய் இந்தமாதிரி நேரத்தில் எங்கேயும் அவளை அலைக்க முடியாது. அதனால் டிக்கெட்டை முதல்ல கேன்சல் பண்ணு” அகிலாண்டம் உரைக்க,

தீனா அவரை முறைத்தவாறே நண்பனோடு சென்றான். அதைப் பார்த்த ஜனனிக்கு மனதுக்குள் மெல்லிய படபடப்பு.

அன்று முழுவதுமே அந்த வீடே விழாக்கோலம் பூண்ட உணர்வில் திணற, ஜனனியின் பார்வை அவனையே தொடர்ந்தது. மதிய உணவை முடித்த பிறகு அனைவரும் தங்கள் வீட்டுக்கு கிளம்பினார்கள். செல்லும் முன்னர், ஜனனியை தங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்ல கலாவதி முயல, தீனா பதில் சொல்லும் முன்பாகவே, ஜனனி பிடிவாதமாக மறுத்தாள்.

அனைவரும் சென்ற பிறகு, மதிய ஓய்வுக்கு தங்கள் அறைக்குள் அவள் சிறு பயமாய் நுழைய, அடுத்த நிமிடம் அவளைப் பின்னோடு சேர்த்து அணைத்திருந்தான் தீனா.

“ஜானு... ஜானு...” அழைத்தவன் அவளை முத்தத்தில் குளிப்பாட்ட,

“தீனா...” அவன் செய்கையை நம்ப முடியாமல் அழைத்தாள்.

“காலையில் இருந்து பத்துபேருக்கு நடுவிலேயே இருக்க ம்...? நான் எப்படி உன்னைக் கொஞ்சறதாம்? அதென்ன கொஞ்ச நாள் கையைக் காலை வச்சுட்டு சும்மா இருன்னு சொல்றாங்க? அதெல்லாம் முடியாது ஆமா” அவளிடம் கோபமாக பேசுவதுபோல், கொஞ்சிக் குழைந்தவனது கரம் அவளது வெற்றிடையில் அழுத்தமாகப் பதிய, அவன் கரத்தின்மேல் தன் கரத்தை வைத்துக் கொண்டவள் அவன் முகத்தையே பார்த்திருந்தாள்.

“என்ன ஜானு?” அவள் மூக்கோடு மூக்குரசினான்.

“கோபம் இல்லையே...” அவனது கரத்தின் வருடலை ரசித்தவாறே மெல்லியதாக வினவினாள்.

“எதுக்கு கோபம்?”.

“அதான்... ஹனிமூன் போக முடியாமல் போச்சே” அவள் குரலில் நிஜமான வருத்தம் தொனிக்க, அவள் கன்னம் தாங்கி, அவள் இதழ்களை தன் இதழ்களால் அழுத்தமாக பற்றிக் கொண்டான்.

அவன் இதழ்களை ஆசையாக வரவேற்றுக் கொண்டாள். அவளும் தன் சந்தோஷத்தை, மகிழ்ச்சியை அவனை முத்தமிடுவதில் வெளிப்படுத்த,

யார் கொடுத்தது, யார் எடுத்தது எனத் தெரியாமல் அந்த முத்தத்தில் மூழ்கிப் போனார்கள்.

பேச்சற்ற செய்கை… தங்களது நேசத்தை, சந்தோஷத்தை ஒருவர் மற்றவருக்கு உணர்த்திவிடும் வேகம். மூச்சுக்காற்றுக்கு இருவரும் ஒரு நொடி விலக, அவள் வேகமாக மூச்சுக்காற்றை வாய் திறந்து உள்ளிழுத்துக் கொள்ள, “ஹனிமூன் போனால்தான் ஆச்சா என்ன?” அவன் இமை சிமிட்ட, மீண்டுமாக இருவரின் இதழ்களும் முட்டிக் கொண்டன.

இருவரும் தங்கள் மகிழ்ச்சியை தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்திக் கொண்டாட, அந்த உறவு அதிகம் தித்தித்தது. தங்கள் தேவை தீர்ந்து ஓய்வெடுக்க, அவன் நெஞ்சில் தலை சாய்த்து படுத்திருந்தவள், தன் முகம் தூக்கி அவனைப் பார்த்தாள்.

அவன் பார்வையாலேயே என்னவென்று கேட்க, “கோபம் இல்லன்னா கீழே ஏன் அப்படிச் சொன்னீங்க? நான் எவ்வளவு பயந்துட்டேன் தெரியுமா? உங்களுக்கு நம்ம குழந்தை வந்ததில் சந்தோஷம் இல்லையோன்னு…” அவள் இழுக்க, வேகமாக அவள் வாயை அடைத்தான்.

“என் பொண்டாட்டிக்கு உடனே குழந்தை வேணும்னு கேட்டா. சோ அதுக்கு தீவிரமா ஏற்பாடு செய்யலாமேன்னு நான் பிளான் போட்டா, அந்த பிளான் எல்லாம் வேஸ்ட்டா போச்சா, அதான்…” அவள் தலையை வருடி உரைக்க, அவன் நெஞ்சில் போலியாக குத்தினாள்.

“அதுக்கு அப்படித்தான் பயம் காட்டுவாங்களா?”.

“இந்த சந்தோஷமான விஷயத்தை நீ மட்டும் தனியா சொல்லாமல், ஊரையே கூட்டி வச்சு சொன்னா? அதான்…” அவனது அந்த உரிமை கோபம் அவளுக்கும் பிடித்துதான் இருந்தது.

“நான் வேணும்னு செய்யலை, கீழே போன உடனே அத்தை டீ போட்டு கொடுத்தாங்களா, அதைக் குடிச்ச உடனேயே வாந்தி பண்ணிட்டேன். அதைப் பாத்துட்டு, ‘நாள் தள்ளிப் போயிருக்கா?’ன்னு கேட்டாங்க.

எனக்கே அந்த விஷயம் அப்போதான் ஞாபகத்துக்கு வந்துதா, ஆமான்னு சொன்ன உடனே ஒரே ஆர்ப்பாட்டம்.

அடுத்த நிமிஷம், மம்மிக்கும், அம்மாவுக்கும் அவங்களே கால் பண்ண, அந்த சந்தோஷத்தை எல்லாம் கெடுக்க மனசு வரலை. சாரி...”.

“ஜானு, இப்போ என்கிட்டே உதைதான் வாங்கப் போற. உன்னை இந்த அளவுக்கு அவங்க எல்லாம் கொண்டாடுவதைப் பாக்கும்போது, எனக்கே கொஞ்சம் பொறாமையா இருக்கு. அடுத்த பத்து மாசமும், உன்னை சீராட்டுறேன்னு, என்னை பட்டினி போட்டுடுவாங்களோன்னுதான் பயமா இருக்கு” அவன் சொல்ல, அவன் நெஞ்சில் அப்படியே படுத்துக் கொண்டாள்.

“ஏய் நான் ஃபீலிங்கில் சொல்லிக்கிட்டு இருக்கேன், நீ பதில் பேச மாட்டேங்கற?” அவள் அமைதியாக இருக்கவே அவளைச் சீண்டினான்.

“உங்க காரியத்தை சாதிச்சுக்க உங்களுக்குத்தான் தெரியணும், அதுக்கெல்லாம் என்னால் எதுவும் செய்ய முடியாது” அவனுக்கு கோபமே இல்லை எனத் தெரியவே, அவனுடன் வார்த்தையாடினாள். கூடவே குலுங்கிச் சிரிக்க, அவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

“அம்மா வீட்ல ரெண்டு மாசம், மம்மி வீட்டில் ரெண்டு மாசம், இங்கே மாமியார் கூட ரெண்டு மாசம், ஏழாம் மாசமே வளைகாப்பு முடிஞ்ச உடனே அம்மா வீட்டுக்குப் போயிட்டு, பிறகு நம்ம ஜூனியரோட தான் வீட்டுக்கு வருவ.

“பரவாயில்லை விடு, நானும் உன்னோட சேர்ந்து மாப்பிள்ளை உபசாரமும் வாங்கிக்கறேன். நடுவில் கொஞ்சம் என்னையும் நீ கவனித்தால் போதும்” அவன் சொல்ல, வாய் பிளந்தாள்.

“இதையெல்லாம் அவாய்ட் பண்ணவே முடியாது தீனா” அவள் புலம்ப,

“எதுக்கு அவாய்ட் பண்ணனும்? என்ஜாய் பண்ணு. அவங்களோட சந்தோஷத்தை எல்லாம் பாத்து அப்படியே வாயடைச்சுப் போயிட்டேன். அதுவும் சாமிநாதன் கூட வந்து என்னை கட்டி புடிச்சுகிட்டப்போ எப்படி

இருந்தது தெரியுமா?" கேட்டவன் அவள் இதழ்களில் மெல்லியதாக முத்தமிட,

"முத்தம் கொடுக்க உங்களுக்கு ஏதாவது ஒரு சாக்கு வேணுமா?" மெல்லியதாக சிரித்தவளின் முகத்தில் அப்பொழுதே ஒரு பூரிப்பு.

அடுத்து வந்த மாதங்களில் பிரபாவதி, கலாவதி, அகிலாண்டம் என மூன்று தாய்மாரும் அவளை உள்ளங்கையில் வைத்து தாங்கினாலும், மசக்கையின் உபாதையை அவள் மட்டும்தானே தாங்கியாக வேண்டும். வாந்தி, மயக்கம், சோர்வு, படபடப்பு என அடுத்த மூன்று மாதங்கள் அவள் துன்பப்பட, அவளை விட, அவளை கவனிக்கும் மருத்துவர்தான் ஒரு வழி ஆகிவிட்டார்.

"என்னை விட்டுடுங்களேன்" என அவரை கெஞ்ச வைக்கும் அளவுக்கு அவ்வளவு கேள்விகள். அவள் வாந்தி எடுத்தால், சோர்வாக படுத்தால், உண்ண பிடிக்கவில்லை எனச் சொன்னால், அனைத்துக்கும் அவரை படுத்தி வைத்தார்கள்.

பிரபாவதி கூட எவ்வளவோ சொல்லிப் பார்த்து சோர்ந்து போய்விட்டார். கலாவதியும், அகிலாண்டமும் இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்ய, அதையே சாக்காக வைத்து பிரபாவதியின் வீட்டில் அவளைக் கூட்டிபோய் விட்டுவிட்டான் தீனா.

அதில் மற்றவர்களுக்கு வருத்தம் இருந்தாலும், தாங்கள் காணப்போகும் பேரப் பிள்ளைக்காக அமைதி காத்தார்கள். ஒரு வழியாக அவளுக்கு மசக்கை முடிந்து, கொஞ்சம் உண்ணத் துவங்க,அடுத்தகட்ட ஆர்ப்பாட்டம் துவங்கியது.

சில நேரங்களில் அவர்களது அன்புத்தொல்லை அதிகமானாலும், அதையெல்லாம் பொறுமையாகவே ஏற்றுக் கொண்டாள். அதற்கு தீனாவும் துணையிருந்தான். அவளது பெற்றவர் வீட்டுக்கு நான் செல்ல மாட்டேன், தங்க மாட்டேன் என எந்தவிதமான பிடிவாதமும் அவனிடம் இல்லை.

அவளது மசக்கை வாந்தியின் பொழுதெல்லாம் யார் உடன் இருந்தாலும், அவளை தாங்கிக் கொள்வதில் தானும் உடன் இருந்தான். அவள் சோர்ந்து

படுக்கையில் அவளுக்கு தோள் கொடுத்தான். ‘எனக்கு கஷ்டமா இருக்கு’ அவனிடம் புலம்புகையில் அமைதியாக கேட்டிருப்பான்.

சொல்லப்போனால் முன்னர் தந்தையின் தொழிலை பார்க்க வர மாட்டேன் எனச் சொன்னவன், இப்பொழுது அவள் நினைத்த நேரத்தில் அவளுக்கு அருகில் இருக்க வேண்டும் என்பதற்காக வேலையை விட்டுவிட்டு, தந்தையுடன் சேர்ந்து தொழிலை கவனித்தான்.

அவளுடன் சேர்ந்தே உண்டான், அவளை கொஞ்சி கெஞ்சி கொஞ்சமாக சாப்பிட வைப்பான். அவளது மணி வயிறு கொஞ்சம் கொஞ்சமாக வளர அதன் வளர்ச்சியை நாளும் உடன் இருந்து கவனித்தான். இடை இடையே கணவனாக அவளைத் தீண்டவும் மறக்கவில்லை.

நாட்கள் மாதங்களைக் கடக்க, அவளது பிரசவ நாளும் நெருங்கியது. கலாவதியின் வீட்டில் அவள் இருக்கையில் பிரசவ வலி எடுக்க, தண்டபாணி உடனடியாக அனைவருக்கும் தகவல் கொடுத்துவிட்டு, ஜனனியை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தார்.

அவர் சென்று சேர்கையில் தீனாவும் அங்கே வர, அவளுடன் தானும் பிரசவ அறைக்குள் துணையிருந்தான். அவள் வலியில் துடிக்க, அவன் கண்கள் கலங்கி அழுதே விட்டான். அதைப் பார்த்தவள், “நீங்க வெளியில் இருங்க” அவனிடம் சொல்ல பிடிவாதமாக மறுத்தான்.

வெளியே பெரியவர்கள் அனைவரும் கையைப் பிசைந்தவாறு காத்திருக்க, அடுத்த அரைமணி நேரத்தில் ஒரு இளவரசனை ஈன்றாள் ஜனனி. குழந்தை பிறந்த வலியில் அவள் சிறு மயக்கத்துக்குச் செல்ல, அவள் நெற்றியில் ஈரமாய் இதழ் ஒற்றினான்.

குழந்தையை குளிப்பாட்டி அவன் கரத்தில் கொடுக்க, நடுங்கும் கரங்களால் ஆசையாக குழந்தையை அள்ளிக் கொண்டான். அவன் குழந்தையோடு வெளியே வர, செவிலியின் மூலமாக என்ன குழந்தை என அறிந்த பெரியவர்கள், உடனே அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

குழந்தையை முதலாவதாக தன் தாயிடம் நீட்ட, அகிலாண்டத்துக்கு அப்படி ஒரு சந்தோஷம். அனைவரும் ஒருவர் மாற்றி ஒருவர் குழந்தையைக் கொஞ்ச, அந்த குட்டி இளவரசனை மற்றவர் கரத்தில்

கொடுக்க யாருக்கும் மனமே இல்லை. சற்று நேரத்தில் தாயைத் தேடி சிணுங்கினான்.

ஜனனியை அதற்குள்ளாக அவர்கள் அறைக்கு மாற்றியிருக்க, குழந்தையோடு அறைக்கு விரைந்தார்கள். அவள் கண்விழிக்க காத்திருக்க, அந்த பொறுமை எல்லாம் குழந்தையிடம் இருக்கவில்லை. அவனது மெல்லிய சிணுங்கல் சிறு அழுகைக்குப் போக, அந்த சத்தத்தில் ஜனனி கண் விழித்தாள்.

குழந்தையை அவர்களிடமிருந்து வாங்கிய செவிலி, அனைவரையும் வெளியே அனுப்பிவிட்டு குழந்தைக்கு எப்படி பசியாற்ற வேண்டும் என சொல்லிக் கொடுக்க, குழந்தைக்கு பசியாற்றியவள் அந்த பிஞ்சு குழந்தையின் காலை மெதுவாக வருடிக் கொடுத்தாள்.

அவனோ கூச்சத்தில் கால் விரல்களை அசைக்க, அதில் முத்தமிட்டவள், குழந்தை உறங்கத் துவங்கவே, தன் முதல் குழந்தையான கணவனைத் தேடினாள். அவளது நினைப்பை உணர்ந்தவன் போன்று அவன் உள்ளே வர, அவனை தன் அருகே அழைத்தவள் தன் படுக்கையில் அவனை அமரச் சொன்னாள்.

அவன் தன் அருகே அமரவே, அவன் கன்னத்தில் மெல்லியதாக முத்தமிட்டவள், “வாழ்த்துக்கள்…” அவள் உரைக்க, அவள் தோளைச் சுற்றி கை போட்டு மெல்லியதாக அணைத்துக் கொண்டான்.

“ரொம்ப வலிச்சதா?” அவளிடம் கேட்க,

“ஒரு பொண்ணோட பிரசவ வலியெல்லாம், அவளோட குழந்தையை பாக்குற வரைக்கும்தான் ஞாபகம் இருக்கும்” அவனிடம் சொல்ல, அவள் நெற்றியில் முட்டினான்.

“தூங்கிட்டானா? இங்கே கொடு…” அவள் கையில் இருந்து லாவகமாக குழந்தையை வாங்கியவன், பெரியவர்களை அழைக்கவே அனைவரும் உள்ளே வந்தார்கள். பிரபாவதி அவன் கரத்தில் இருந்து குழந்தையை வாங்கி தொட்டிலில் படுக்க வைக்க, தீனாவின் முகத்தில் சட்டென ஒரு தீவிரம் குடி கொண்டது.

அதைப் பார்த்த அபய், “என்னடா மச்சான் ட்ரீட் எப்போ? சரி சந்தோஷமா இருக்க வேண்டிய நேரத்தில் எதுக்கு மூஞ்சியை இப்படி வச்சிருக்க?” அவன் கேட்கவே பெரியவர்கள் அனைவரும் அவன் முகம் பார்த்தார்கள்.

“நான் இன்னும் ஹனிமூனே போகலை, அந்த வருத்தம் இங்கே யாருக்காச்சும் இருக்கா?” அவன் கேட்க, என்னவோ ஏதோ என அவனை கவனித்துக் கொண்டிருந்தவர்கள், அவன் சொன்ன பதிலில் தங்கள் தலையிலேயே அடித்துக் கொண்டு விலக, அபய் அவனை போலியாக மொத்தினான்.

அதைப் பார்த்தவர்கள், “இன்னும் நல்லா நாலு போடுப்பா அந்த பயலை” அகிலாண்டம் உரைக்க, ஜனனியோ இதழ்களில் உறைந்த புன்னகையோடு அவனைப் பார்த்திருந்தாள்.

பிரபாவதியோ, “அதான் குழந்தை பொறந்துடுச்சே, இவனை நாங்க பாத்துக்கறோம், நீங்க தாராளமா போயிட்டு வாங்க” உரைக்க, இப்பொழுது வெட்கப்படுவது தீனாவின் முறையானது.

சற்று நேரத்தில் அனைவரும் வீட்டுக்குச் செல்ல, பிரபாவதி மட்டும் அங்கே இருந்தார். குழந்தை தூங்கிக் கொண்டிருக்கவே, அவர் கணவன் மனைவிக்கு தனிமை கொடுத்து விலகிச் செல்ல, தன் கணவனை அருகே அழைத்த ஜனனி, அவனை அருகே அமர்த்திக் கொண்டாள்.

“உங்களுக்கு ஹனிமூன் போயே ஆகணுமா? இன்னும் ஒரு மூணு மாசம் பொறுத்துக்கோங்க, பிறகு குழந்தையை பெரியவங்க கிட்டே கொடுத்துட்டு நாம மட்டும் போகலாம் சரியா?” அவனை சமாதானப்படுத்தும் குரலில் உரைக்க, அவளைப் பார்த்து புன்னகைத்தான்.

“என்னைப்பற்றி உனக்குத் தெரியாதா? சும்மா அவங்களை கலாட்டா பண்ணலாமேன்னுதான். நீ என் வாழ்க்கையில் வந்ததே எனக்குப் பெரிய சந்தோசம். இப்போ நமக்கே நமக்குன்னு ஒரு குட்டி இளவரசன்... இதைவிட வேற என்ன வேணும்?”.

“எனக்கு உங்களைப்பற்றி தெரியாதா?” அவன் தோள் சாய்ந்தாள். அவர்கள் எதிர்காலம் அவர்களை எதிர்கொள்ள காத்துக் கொண்டிருந்தது.

பலரின் எதிர்பார்ப்பை, ஏக்கத்தை தீர்க்க வந்த குழந்தையோ, பெற்றவர்களின் தனிமையை கெடுக்காமல் நிம்மதியான நித்திரையில் இருந்தான்.

நன்றி.

இன்பா அலோசியஸ்